தென்கிழக்காசிய வரலாறு

(முதல் பாகம்)

டாக்டர் ச. நாகராஜன், எம். ஏ., பிஎச். டி.,

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—847

தென்கிழக்காசிய வரலாறு

(கி.பி. 1800 முதல் 1965 வரை)

(முதல் பாகம்)

(மேல் பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

டாக்டர் ச. நாகராஜன், எம்.ஏ., பிஎச்.டி.,

விரிவுரையாளர்,

வரலாற்றுத்துறை,

சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1979
Number of Copies—1000

T. N. T. B. S. (C.P.) No. 847

© Government of Tamilnadu

HISTORY OF SOUTH EAST ASIA-I
(FROM 1800—1965 A.D.)

DR. S. NAGARAJAN

Price Rs. 12·60

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by:
T. KRISHNA PRESS,
94, Pulianthope High Road,
Madras-600 012

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப்பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **தென்கிழக்காசிய வரலாறு** (கி.பி. 1800 முதல் 1965 வரை—முதல் பாகம்) என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் **847**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **882** நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக !

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

பக்கம்

1. அறிமுகம் ... 1

1. தென்கிழக்காசியா—பொதுநோக்கு ... 1
2. பர்மா ... 7
3. மலேசியா ... 12
4. சிங்கப்பூர் ... 17
5. இந்தோனேசியா ... 19
6. தாய்லாந்து ... 25
7. வியட்நாம் ... 30
8. லாவோஸ் ... 34
9. கம்போடியா ... 38
10. பிலிப்பைன்ஸ் ... 41
11. கி.பி. 1800ஆம் ஆண்டு வரை தென்கிழக்காசிய அரசியல் வரலாறு ... 46
12. நிறைவுரை ... 58

2. பர்மா ... 60

1. பர்மாவின் உள்நாட்டு அமைப்பும் நிருவாகமும் 60
2. போதவ்பாயா—பர்மாவும், ஆங்கிலேயர்களும் 77
3. முதல் பர்மிய-ஆங்கிலேயப் போர், 1824–1826 84
4. இரண்டாவது பர்மிய—ஆங்கிலேயப் போர் ... 91
5. மிண்டன் மின்னும் ஆங்கிலேயர்களும் ... 104
6. மூன்றும் பர்மிய-ஆங்கிலேயப் போர் ... 112
7. மன்னர் தீபாவும் பிரான்சும் ... 115
8. ஆங்கிலேயர்களின் நேர்மையற்ற நடத்தை ... 118
9. ஆங்கிலேய வணிகர்களின் பேராசை ... 122
10. முடியாட்சியின் முடிவும், உரிமையின் அழிவும் 126
11. ஆங்கிலேய நிருவாகம் ... 128
12. பர்மிய நாட்டுரிமை இயக்கம் ... 142
13. பர்மாவில் ஜப்பானிய ஆட்சி ... 169
14. சுதந்திர பர்மா ... 175

பக்கம்

3. மலேயா, சிங்கப்பூர் ... 185

1. ஆங்கிலேயர்களும் பினாங்கும் ... 185
2. ராபல்சும் சிங்கப்பூரும் ... 189
3. சயாம், மலேயா நாடுகள், மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள், கி.பி. 1817—1863 ... 197
4. சரவாக் ... 210
5. சிங்கப்பூர், கி.பி. 1823—1870 ... 215
6. பல் இனச் சமுதாயத்தின் தோற்றம் ... 221
7. மலேய் நாடுகளில் ஆங்கிலேயர்களின் தலையீடு 228
8. பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநர் ஆட்சி கி.பி. 1874-1895 ... 235
9. பேரக் ... 236
10. பாகாங் ... 239
11. ஆங்கிலேய வடபோர்னியோ கம்பெனி ... 241
12. ஆட்சியை வலுப்படுத்தும் திட்டங்களும் முயற்சிகளும் ... 243
13. மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி ... 249
14. சிங்கப்பூர்க் குடியேற்ற நாடு, கி.பி. 1870-1941 253
15. இரு போர்களுக்கு இடையே மைய ஆட்சி அமைப்பும், நாட்டாட்சி உரிமைகளும் ... 259
16. ஜப்பானியப் படையெடுப்பும், ஆட்சியும் ... 285
17. மலேயா—போருக்குப்பின் ... 287
18. நெருக்கடி நிலைப் பிரகடனம் ... 294
19. சுதந்திரக் கொடி ... 302
20. சுதந்திர மலேயா ... 307
21. சிங்கப்பூர் குடியேற்ற நாட்டு நிலையிலிருந்து தனி யுரிமையுடைய நகர அரசாக மாறுதல் 313
22. மலேயாவின் அயல்நாட்டுக் கொள்கை ... 320
23. மலேயா, சிங்கப்பூரில் வாழும் இந்தியர்கள் ... 334

நிலப்படங்கள் ... 351

1. அறிமுகம்

1. தென்கிழக்காசியா—பொதுநோக்கு

பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, புருணை (Brunei), பிலிப்பைன்ஸ், வியட்நாம், லாவோஸ் (Laos), கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளையே தென்கிழக்கு ஆசிய நாடுகள் என நாம் குறிப்பிடுகிறோம். இரண்டாம் உலகப் போரின் போதுதான் 'தென்கிழக்கு ஆசியா' என்ற சொல் பயன்படுத்தப் பட்டது. முதன் முதலாக, ஜப்பானியப் படையெடுப்பின்போது இலங்கையிலே தாங்கள் நிறுவிய பாசறையை ஆங்கிலேயர்கள் 'தென்கிழக்கு ஆசிய ஆணைப் படையகம்' (Southeast Asia Command) என அழைத்தார்கள். இரண்டாம் உலகப்போருக்கு முன் தென்கிழக்கு ஆசியாவைப் பொதுவாகத் 'தூரக் கிழக்கு' (Far East) என்றும், 'மிகப்பேர் இந்தியா' (Greater India) என்றும், 'சிறிய சீனு' (Little China) எனவும் அழைத்தார்கள்.

தென்கிழக்காசியாவை மேற்கிலும் வடக்கிலும் மலைச் சங்கிலித் தடையரண்கள் இந்தியாவிலிருந்தும், சீனுவிலிருந்தும் பிரிக்கின்றன. தெற்கிலும், கிழக்கிலும்கூடத் தண்ணீர் வழிமறிப்புகள் (இந்துமாக் கடலும், பசிபிக் பெருங் கடலும்) அமைந்துள்ளன. தென் கிழக்கில் இத் தீவுக் கூட்டங்கள் மெழுகைப்போல் தேய்ந்து தேய்ந்து உருகி, நுனிநோக்கிச் சிறுத்து ஆஸ்திரலேசியா (Australasia), தென்மேற்குப் பசிபிக்குக்குள் செல்கின்றன. பண்டைக்கால மண்ணியல் அமைப்பு ஆராய்ச்சியின்படி நியூ கினி (New Guinea) ஆஸ்திரேலியாக் கண்டத்துடன் இணைக்கப் பட்டிருந்தது; கிழக்கு இந்தோனேசியாவைச் சேர்ந்த சிறு தீவுக் கூட்டங்களும், பிலிப்பைன்சும் புடைபெயர்வுப் பருவமண்டலமாக அமைந்திருந்தன; பெரிய இந்தோனேசியத் தீவுகள் ஆசிய நிலத்திரள்களுடன் ஒருசேரக் கலந்திருந்தன.

இன்றைய தென்கிழக்காசியாவின் பரப்பெல்லை அளவில் பெரிதாகத்தான் இருக்கிறது. இதனுடைய வீச்செல்லை (latitude) கிழக்கிலிருந்து மேற்குவரை 3,000 மைல்கள்; தீர்க்காம்சரேகை அல்லது நிரைகோடு (longitude) வடக்கிலிருந்து தெற்குவரை

2000 மைல்கள். மொத்த நிலப்பரப்பு 1·7 மில்லியன் சதுர மைல்கள். தற்சமயம் ஏறத்தாழ 275 மில்லியன் மக்களுக்குமேல் இப் பகுதி களில் வாழ்கிருர்கள்; அமெரிக்கக் குடியரசு, அல்லது உருசியா அல்லது இலத்தின் அமெரிக்காவைவிட இதன் மக்கள் தொகை மிகுதியாகவுள்ளது.

சீனுவின் தெற்கேயுள்ள வியட்நாமின் மேற்கு எல்லேகளில் லாவோசும், கம்போடியாவும் ஒடுங்கிக்கிடக்கின்றன. லாவோஸ், கம்போடியாவிற்கு வடக்கே தாய்லாந்து உள்ளது. வடக்குத் திசையின் மிகத்தொலேவில் புர்மா இருக்கிறது. பர்மாவிற்குத் தெற்கே மலேயாத் தீபகற்பம் பரவியிருக்கிறது. மலேயாவிற்குத் தெற்கே இந்தோனேசியத் தீவுகள் சிதறிக்கிடக்கின்றன. 35 மைல் அகலமுள்ள மலாக்காக் கடல் வடக்கு இந்தோனேசியாவை மலேயாத் தீபகற்பத்திலிருந்து பிரிக்கிறது. இந்தோனேசியாவின் வடக்கில் பிலிப்பைன்ஸ் தீவுகள் தூவப்பட்டிருக்கின்றன.

நடுவாசிய நிலமேடுகளில் உருவாகி உயர்ந்த தலேநிலப்பரப்பு மலேச் சங்கிலிகள் மடிப்பு அவிழ்ந்து படிப்படியாக மலர்ந்து வளர்ச்சியுற்று வடக்கு-தெற்கு வடிவமைதியாக மாறி, கரையோர எல்லேக்கோடுகளில் விரல்களே மடித்து விரித்துப் பரந்திருக்கின்றன. அடர்த்தியான காடுகள் தடை வேலிகளா யிருப்பதாலும், சாலேகள் குறைவாயிருப்பதாலும் இந்நில இடைத்தடுக்குகளேத் தாண்டிச் செல்வது எளிதன்று. ஆனல், பொதுவாக வடக்கு-தெற்காகத் தவழ்ந்து, குழைந்து செல்லும் நான்கு ஆறுகள், பயணம் செய்வதைத் தொல்லேயில்லாதவாறு எளிமையாக்குகின்றன. செவ்வாறு (Red River) வட வியட்நாம் வழியாக ஓடுகிறது. திபெத்திலே பிறந்து வளர்ந்து எழுந்துவரும் மேகாங் ஆறு (Mekong River) வளேவு நெளிவுப் போக்குடன் லாவோஸ், தாய் லாந்து, கம்போடியா, தென் வியட்நாம் ஆகியவற்றின் வழியாக அல்லது எல்லேப்புறத்தில் ஓடுகிறது. சவோ பிரியா (Chao Phraya) அல்லது சியாமிய மொழியிலே ஆறு எனப் பொருள்படும் மேனும் தாய்லாந்திலிருக்கிறது. மத்திய பர்மாவிற்கு ஐராவதியாறு மிகுந்த நீரைப் பாய்ச்சுகிறது. கடலேக் கட்டி அணேக்க ஆர்வத் துடன் நெருங்கும் இடத்தில் இவ் வாறுகள் பரந்து வருகின்றன; தலேநிலப்பரப்பிலுள்ள மிகவும் வளமான கழிமுகப்பகுதிகளில் (deltas) ஊறித் தோய்வுறுகின்றன. பிலிப்பைன்சிலும், நீரால் சூழப்பட்ட இந்தோனேசியாவிலும் மிகப்பெரிய ஆறுகள் கிடையா.

தென்கிழக்காசியாவில் மழை மிகுதியாகப் பொழிகிறது. ஆண்டிற்குச் சராசரி 80 அங்குல மழை பெய்கிறது. நில நடுக் கோட்டை அணேத்திருக்கும் சுற்றுப் பகுதிகளில் வறட்சிக் காலமே

கிடையாது. மாறுபாடில்லாத ஈரக் கசிவுடன் தட்பவெப்ப நிலை உள்ளது. பிப்ரவரி முதல் மே வரை வெப்பமிக்க கோடைக்காலம் ஆகும்; ஜூன் முதல் செப்டம்பர் வரை மழைப் பொழிவு மிகுதியாக உள்ள காலம்; அக்டோபர் முதல் சனவரி வரை குளிர்காலம் இருக்கும். பிலிப்பைன்ஸ் நாட்டில், சிறப்பாக லூஜானிலும் (Luzon), விசயாசிலும் (Visayas) வலிமை மிக்க சூறுவளி (Hurricanes or Typhoons) வீசும்.

பழங்காலத்தில் மக்கட் சமுதாயம் தோன்றியபோது சீனர்கள், ஆஸ்திரேலியர்களைத் தவிர, தென்கிழக்காசிய மக்கள்தாம் முதன் முதலாக, ஏசு கிறித்து தோன்றுவதற்குப் பத்து லட்சம் ஆண்டு களுக்கு முன் உலகத்தில் தோன்றினுர்கள் என நம்பப்படுகிறது. இதற்குச் சான்ருகச் சீனு, ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் ஜாவாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி. மு. 20,000-ல் மண்ணியல் பனியூழிக்காலம் (Ice Age) முடியும் தறுவாயில் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மலேய—பாலினீசிய நிலப் பகுதியிலுள்ள குற்றுருவ நீகிரோ இனத்தவரின் (Negritos) முன்னேர்களும், மலேய் மலேச்சாதியினரின் முன்னேர்களும் தென் கிழக்காசியாவிற்கு வந்தார்கள் எனக் கருதப்படுகிறது. பின் கி மு. 2500-ல் தொடங்கி வடக்கிலிருந்து இன்றைய பிலிப்பீனியர்கள், இந்தோனேசியர்கள், மலேயர்கள், வியட் நாமியர்கள், சியாமியர்கள், பர்மியர்களின் மலேய் வகையின முன்னேர்கள் தென்கிழக்காசியாவிற்கு வந்து குடியேறியதாக நம்பப்படுகிறது. இக் குடிபெயர் குழு அலைபோல அடுக்கடுக்காகப் பல நூற்றுண்டுகள் வந்துகொண்டிருந்தன. இன்றைய சீனப் பகுதிகளிலிருந்து இவர்கள் வந்ததாகக் கருதப்படுகிறது.

வரலாற்றை நோக்கினுல், தென்கிழக்காசிய மக்கள் மலேய் இனத்தவராயிருந்த போதிலும், இவர்களிடையே பல்வேறு தனிமுறைப் பேச்சு மொழிகள் தோன்றியுள்ளமை புலனுகும். இவைகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கலாம். ஏசு கிறித்து பிறந்த காலத்தில் மேற்குச் சீனுவிலிருந்து தோன்றிய திபெத்தோ-பர்மன் (Tibeto-Burman) மொழி பர்மாவின் நடுப் பகுதியிலும், வட பகுதியிலும் உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்கில் பேசப்பட்டது. பர்மாவின் தென் பகுதியில் இருக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்கிலும், சவோ பிரியா, கீழை மேகாங் ஆகிய இடங் களில் உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்கிலும் மாண்-கெம்மர் (Mon-Khemer) மொழி பேசப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவில் வாழ்ந்து வந்த மலேய் இனத்தாரைத் தவிர, வியட்நாமின் நடுப்பகுதியி லுள்ள சாம்ஸ் (Chams) தீவு மக்களும் மலேசிய (Malaysian)

மொழியைப் பேசினார்கள்; வட வியட்நாமில் அன்னமிய மொழி (Annamese) பேசப்பட்டது. சீனர், இந்தியர், அரேபியர் ஆகிய வர்களின் கலாசாரங்களுடன் தொடர்புகொண்ட பிறகுதான் இம் மொழிகளின் கையெழுத்துப் படிவங்கள் (scripts) உருவாகின.

ஆனால், சீன, இந்தியப் பண்பாடுகள் தென்கிழக்கு ஆசியாவில் பரவும் முன்பே தென்கிழக்காசியப் பண்பாடுகள் உருவாகியிருந்தன. இவை பின்வருவன எனச் சீடஸ் (Coedes) என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்: (1) நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மை, முக்கியமாக நெற்பயிர் பயிரிடுதல்; (2) உழவுத் தொழில் செய்ய எருது, எருமை போன்ற கால்நடைகளைப் பயன்படுத்துதல்; (3) உலோகங்களைப் பயன் படுத்தும் நுண்ணறிவு; (4) கப்பல் ஓட்டுவதற்கும், கடற்பயணம் செய்வதற்கும் உரிய திறமை; (5) சமுதாயத்தில் மகளிர்க்கு உயர்படி அளித்தல்—தாய்வழி மூலம் சொத்துரிமை; (6) ஆன்ம வாதச் சார்பான வழிபாடுகள் (அதாவது, உயிரிலாப் பொருள் களிலும், இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிரியக்கம் காண்கிற மனப் பான்மை); (7) மலையுச்சியில் கோவில் அமைத்தல்; (8) இறந்த வர்களைச் சாடியில் வைத்துப் புதைத்தல்; புதைத்த இடத்தில் கல்மேடை கட்டுதல் (Dolmens—வரலாற்றுக்கு முந்திய காலக் கல்லறைப் படிவம்). பின் கூறப்படுவனவற்றையும் இவைகளோடு சேர்த்து இணைக்கலாம் எனக் குரோம் (Krom) என்ற வரலாற்றாசிரி யர் கூறுகிறார்: 1. வயாங் (Wayang) என அழைக்கப்படுகிற கூத்தாட்டுப் பொம்மைச் செயல் காட்சி நிகழ்ச்சி; 2. கம்மேலன் (Gammelan) என அழைக்கப்படுகிற இசை நயப்புடைய இசைக் கருவிகள்; 3. பத்திக்கு (Batik) என அழைக்கப்படும் முறை மூலம் துணியில் சாயம் போட வேண்டியிராத பகுதிகளுக்கு மெழுகு பூசி, எஞ்சிய பகுதிகளில் வண்ணப்படங்களை அச்சிடும் திறமை.

பண்டைக் காலத்திலிருந்தே இந்தியப் பண்பாடுகள் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவத் தொடங்கின. இன்று தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பின்பற்றும் முதன்மையான சமயங்களில், கிறித்தவ சமயத்தைத் தவிர, மற்ற எல்லாச் சமயங்களும் (சிறப்பாக இந்து சமயம், புத்த மதம், இஸ்லாம்) இந்தியா மூலம்தான் வந்தன. இந்தியாவிலுள்ள குஜராத் (Gujarat) பகுதியிலிருந்த வணிகர்கள் மூலம் இஸ்லாம் சமயம் இந்தோனேசியாவிற்கு வந்த தாகக் கருதப்படுகிறது. மேலும் தென்கிழக்காசிய நாடுகளின் முடியாட்சி அரசியல் தத்துவம் இந்து, புத்த சமயச் சடங்குகளைத் தழுவியிருந்தது. சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கும் பண்டைய

காலத்தில் இந்நாடுகளில் ஓங்கியிருந்தது எனக் கூறலாம். உதாரணமாக, பூனன் (Funan) நாட்டுப் பண்டைய கல்வெட்டுகள் சம்ஸ்கிருத மொழியில் பொறித்து வைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். பல்லவர் காலத்து எழுத்துப் படிவங்களையும் இக் கல்வெட்டுகளில் காணலாம் எனப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். மேலும் இந்து தர்ம சாஸ்திர விதிமுறைகள் கூடச் சிறப்பாக மனு தர்ம சாஸ்திர விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

ஆகையால் இந்து சமயத் தத்துவங்கள், சடங்குகள், மொழி, இராமாயணம், மகாபாரதம் ஆகிய புராண இலக்கியங்கள், சாதிப் பிரிவுப் பண்பாடுகள் உட்பட மற்றப் பண்பாடுகள் முதலியவை தென்கிழக்காசிய நாடுகளில் செழித்தோங்கி இருந்தன. பூனன் (Funan), ஸ்ரீ விஜயா (Sri Vijaya), மச்சபாகிட் (Majapahit) முதலிய புகழ் ஓங்கிய தென்கிழக்காசியப் பேரரசுகளெல்லாம் இந்தியப் பண்பாடுகளைத் தழுவியவையே. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டு வரையில்தான் இந்து, புத்த சமயங்கள் அரசியல் செல்வாக்குடன் தழைத்தோங்கியிருந்தன.

இன்று இந்து சமயப் பண்பாடுகளைப் பின்பற்றும் ஒரே பகுதி பாலித் தீவு (Bali Island) மட்டும்தான். 2,095 சதுர மைல்கள் அடங்கிய பாலித்தீவு இந்தோனேசியாவில் இருக்கிறது. இத்தீவில் 3 மில்லியன் இந்துக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவிலுள்ள சாதி அமைப்பைப் போலப் பாலித்தீவிலும் இந்துசமய சாதி அமைப்பு இருக்கிறது. 90 விழுக்காடு பாலினீயர்கள் சூத்திர சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். பெரும்பான்மையான பாலினீயர்கள் சிவபெருமானை வழிபடுகிறார்கள். பாலினீய அந்தணர்கள் பலர் வேதங்களை நன்கு கற்றறிந்தவர்கள். அண்மைக்காலம் வரை சதி (Sati) அல்லது உடன்கட்டை ஏறுதல் பாலித்தீவில் இருந்தது. இந்துக் கோவில்களையும் அதிகவளவில் நாம் பாலித்தீவில் காணலாம். இக் கோவில்களில் மிகவும் புகழ்வாய்ந்த கோவில் பெசாகீ கோவில் (Pura Besakih) ஆகும். மஹாதேவர் (Mahadewa) கடவுளை இக் கோவிலில் வழிபடுகிறார்கள். பாலினீயர்கள் கொண்டாடும் தும்பெக் லண்டப் (Tumpek Landep) பண்டிகையின் போது (நாம் ஆயுத பூஜை பண்டிகையின்போது கொண்டாடுவதைப்போல) ஆயுதங்களுக்குப் பூஜை செய்கிறார்கள். சரஸ்வதி பூஜையையும் பாலினீயர்கள் கொண்டாடுகிறார்கள். சரஸ்வதி பூஜையன்று எவரும் படிக்கவோ, எழுதவோ கூடாது. சுகியன் பாலி (Sugian Bali) என்ற பண்டிகையின் போது பாலினீயர்கள் பசுவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள், பசு புனிதமானது;

கடவுட்கொத்தது என்ற பாலினீயர்களின் நம்பிக்கை, நமது தமிழ் நாட்டின் மாட்டுப் பொங்கல் பண்டிகையை ஒத்து இருக்கிறது எனக் கூறலாம். அண்மைக்காலம் வரை பர்மா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் அரச அரண்மனைச் சடங்குகளில் அந்தணர்கள் முக்கியப் பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

பெரும்பான்மையான தென்கிழக்காசிய நாட்டு மக்கள் இஸ்லாம், புத்த மதம், கிறித்தவ மதம் ஆகியவைகளைப் பின்பற்றினாலும், அவர்களிடையே இன்றுகூட இராமாயணமும் மகாபாரதமும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. கி.பி. 1971ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜகார்த்தாவில் (Jakarata) முதல் அனைத்துலக இராமாயண விழாக் கொண்டாடப்பட்டது. ஏறத்தாழ எல்லாத் தென்கிழக்காசிய நாடுகளும் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொண்டன. தென்கிழக்காசிய நாடுகளின் இராமாயணம், வால்மீகி இராமாயணக் கதையை தழுவியிருந்தபோதிலும் அவர்கள் பல புதுக்கதைகளையும் தங்கள் நாட்டுப் பண்பாடுகளையும் இடையிடையே புகுத்தி இருக்கிறார்கள். இராமாயணம், மகாபாரதம் முதலிய வரலாறுகள் தங்கள் நாடுகளிலேயே நடந்ததாகத் தென்கிழக்காசிய மக்கள் கருதுகிறார்கள். இந்தோனேசியாவில் மட்டும் ஏறத்தாழ 200 இராமாயண இலக்கியங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பத்தாண்டுகளுக்கு முன் பிலிப்பைன்ஸ் தீவுகளில்கூட ஓர் இராமாயண இலக்கியம் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளின் இராமாயண இலக்கியங்களில் இஸ்லாம் சமயக் கருத்துகளையும் நாம் காணலாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு சம்ஸ்கிருத மொழிக் கல்வெட்டு கம்போடியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இராமாயண மகாபாரத இலக்கியங்களைத் திருடுபவர்கள் அழிந்துபோவார்கள் என இக் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. தாய்லாந்து நாட்டு அரசர்களை இராமர் அவதாரம் எனத் தாய் மக்கள் கருதிவந்தார்கள். இராமாயணத்தில் கூறியிருக்கும் அயோத்தி நகரத்தின் பெயர் பண்டைய தாய்லாந்து நாட்டின் தலைநகரமான ஆயூத்தியாவிற்கு (Ayuthia) அளிக்கப்பட்டது. தாய்லாந்து நாட்டின் இன்றைய தலைநகரமான பாங்காக்கில் (Bangkok) உள்ள புத்தர் கோவில்களிலும், கம்போடியாவிலுள்ள ஐந்தாவது ஜயவர்மன் கட்டிய தா-கியோ (Ta-Keo) கோவிலிலும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் மன்னர் இரண்டாவது ஜயவர்மன் கட்டிய அங்க்கோர் வாட் கோவிலிலும் (Angkor Vat), கம்போடியா அரசர் அரண்மனையிலும், இந்தோனேசியாவில் பத்தாம் நூற்றாண்டில் கட்டிய பிரம்பானன் (Prambanan) கோவிலிலும், பதினான்காம் நூற்றாண்டில் கட்டிய பனதாரன் (Panataran) கோவிலிலும், போரோபுதூர் (Borobodur) புத்தர் கோவிலிலும்,

லாவோசிலுள்ள வாட் மய் (Vat Mai), வாட் பாகே (Vat Pake) முதலிய கோவில்களிலும் இராமாயணக் கதைகளைச் சித்திரிக்கும் சிற்பங்களையும் ஓவியங்களையும் நாம் இன்றுகூடக் காணலாம். இராமாயணக் கதைகளைச் சித்திரிக்கும் நடனங்களும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும் இன்றுகூட இந் நாடுகளில் நடத்தப் படுகின்றன.

ஆகையால், தென்கிழக்காசியாவில் இந்து சமயம் மறைந்த போதிலும், இந்துப் பண்பாடுகள் மறையவில்லை. காரணம் புத்த மதம், இந்து சமயம் போல் இந் நாடுகளில் மறையவில்லை. கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, வியட்நாம், அராகன் உட்படப் பர்மா ஆகிய நாடுகளில் இன்றுகூட மக்கள் புத்த சமயத்தைத்தான் தழுவிப் பின்பற்றுகிறார்கள். இந் நாடுகளில் வழிபடும் புத்த சமயம் தெரவேதா புத்த சமயம் (Theraveda Buddhism) ஆகும். தெரவேதா புத்த சமயமும், ஹீனயான புத்த சமயமும் (Hinayana Buddhism) ஒன்றே. ஜாவா நடுப் பகுதியில் உள்ள போரோபுதூர் புத்தர் கோவில் தென்கிழக்காசி யாவில் புகழ் ஓங்கியிருக்கும் கோவிலாகும். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் சைலேந்திர மன்னர்களால் (Sailendra dynasty) இக் கோவில் கட்டப்பட்டது என நம்பப்படுகிறது.

2. பர்மா

பர்மியர்கள், திபெத்திய மக்களின் இனப்பிரிவைச் சார்ந்தவர்கள். அயல் நாட்டினர் பர்மாவில் குடியேறியிருப்பதால் பர்மாவில் பலவகை இனப்பிரிவினர் தத்தம் மொழிகளைப் பேசிக் கொண்டும் கலாசாரத்தைப் பின்பற்றிக் கொண்டும் வாழ்கிறார்கள். பர்மாவில் வாழும் 27·6 மில்லியன் மக்களில் 60 விழுக்காடுதான் பர்மியர்.

ஆங்கிலேயர்கள் 63 ஆண்டுகள் பர்மாவில் ஆட்சி புரிந்த போது, ஆந்திரர்களும் தமிழர்களும் அங்குவந்து குடியேறினார்கள். ஏனென்றால் பர்மாவில் நிலங்கள் அதிகமாயிருந்தன. ஆனால் நிலங்களில் வேலை செய்யக் கூலியாள்கள் மிகுதியாக இல்லை. கி. பி. 1960ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி பர்மாவில் மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் 7 விழுக்காடு இருந்தார்கள். பொதுவாக, இந்தியர்கள் கழிமுகப் பகுதியில் (delta lands) குடியேறியிருக்கிறார்கள். இங்கு நிலங்களில் பணிசெய்து பிழைக் கிறார்கள். பர்மாவின் நகர்ப்பகுதிகளிலும்கூட இந்தியக் கூலி களையும், இந்தியச் சில்லறை வணிகர்களையும் (retail-traders)

நாம் காணலாம். கி.பி. 1960-ல் தொழிலகங்களும், வாணிபமும் நாட்டுடைமையாக்கப்பட்ட போது மிகுந்த அளவில் இந்தியர்கள் பர்மாவிலிருந்து வெளியேறி இந்தியாவிற்குத் திரும்பி வந்தார்கள்.

பர்மாவில் வாழும் சிறுபான்மைக் குழுவினர்களுக்குள் (minorities) மிகுதியாக இருக்கும் சிறுபான்மைப் பகுதியினர் காரேன்கள் (Karanes). இவர்கள் பர்மாவில் வாழும் மக்கள் தொகையில் 11 விழுக்காட்டினர். தென் ஷான் மேட்டு நிலத்திலும் (Shan Upland), காவ்துளியிலும் (Kawthule), ஐராவதிக் கழிமுகப் பகுதியிலும் காரேன் இனப்பிரிவைச் சார்ந்தவர்கள் மிகுதியாக வாழ்கிருர்கள். தாய்லாந்திலுள்ள தாய் (Thai) மக்களின் இனப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஷான் (Shans) இனப்பிரிவினர்கள் ஆவார்கள். பர்மாவில் இருக்கும் மக்கள் தொகையில் இவர்கள் 8½ விழுக்காடு இருக்கிருர்கள். இவர்கள் ஷான் நகரத்திலேயே வாழ்கிருர்கள். ஐராவதி, சிண்ட்வின் (Chindwin) பள்ளத்தாக்கு களிலும் ஷான் இனப்பிரிவைச் சேர்ந்தவர்களைக் காணலாம். கசின்ஸ் (Kachins) இனப்பிரிவினர்கள் கசின்ஸ் நாட்டுப் பகுதி யிலும், ஷான் நாட்டு வட பகுதிகளிலும் வாழ்கிருர்கள். பர்மாவின் மக்கள் தொகையில் இவர்கள் 3 விழுக்காடு (700,000) இருக்கிருர்கள்.

புள்ளி விவரப்படி 120 தனிவேருன மரபினக் குழுக்கள் 126 மொழிகளைப் பேசிக்கொண்டு பர்மாவில் வாழ்கின்றன. பர்மிய மொழியே மக்களின் பொது மொழியாக்கப்பட்டுள்ளது. அரசியல், வாணிபம் ஆகியவை பற்றிய நடவடிக்கைகளிலும், கல்லூரிகளிலும் ஆங்கில மொழியையும் பயன்படுத்துகிருர்கள்.

இந்தியாவையும் பாகிஸ்தானையும்போல் பர்மாவில் மக்கள் திரள் திரளாகக் கூடி வாழவில்லை. பர்மாவின் 261,789 சதுர மைல்களில் 27·6 மில்லியன் மக்கள் வாழ்கிருர்கள். பொதுவாக ஐராவதிக் கழிமுகப் பகுதிகளிலும், சிட்டாங் ஆறுகள் (Sittang Rivers) அருகிலும், வடக்குத் தென்னசெரிம் (Tennasserim) கரையோரங்களிலும் மக்கள் மிகுதியாக வாழ்கிருர்கள். இவ்விடங் களில்கூட மக்கள் தொகை அடர்த்தி (density) 1 சதுர மைலுக்கு 250 பேர்கள்தாம். மலைப்பகுதிகளிலும், ஐராவதிப் பள்ளப்பகுதி நில ஓரத்தில் இருக்கும் சிகரப்புற எல்லைகளிலும் மக்கள் மிகுதியாக வாழ்வதில்லை. இவ்விடங்களில்தாம் பெரும்பாலான 10·8 மில்லி யன் பர்மியர்கள் அல்லாத மக்கள் குடியேறியிருக்கிருர்கள்.

இரங்கூனில் 1·8 மில்லியன் மக்கள் வாழ்கிருர்கள். இரங்கூன் நகரத்திற்கு அடுத்தபடியாக உள்ள பெரிய நகரம் மாண்டலே

(Mandalay) என்பதாகும். இங்கு இரங்கூன் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதிதான் வாழ்கிறார்கள். பர்மாவின் மூன்றாவது பெரிய நகரம் மௌல்மயின் (Maulmein); இரங்கூன் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதிதான் இங்கு வாழ்கிறார்கள். இரங்கூன் துறைமுகம் மூலம்தான் பர்மாவின் 85 விழுக்காடு அயல் நாட்டு வாணிபம் நடக்கிறது. பர்மாவின் சிறந்த தொழில் துறைகளில் அரிசி ஆலைத் தொழில்களும், நெசவுத் தொழில் துறைகளும் இரங்கூனில் இருக்கின்றன. பர்மாவில் இருக்கும் ஒரே இரும்பு ஆலை இரங்கூனில்தானிருக்கிறது.

உலக நிலப்படத்தில் பர்மாவின் தோற்றம் ஒரு காற்றாடி போலிருக்கிறது; இக்காற்றாடியின் தலையுச்சி கிழக்குத் திபெத்தைத் தொடுகிறது. வால் பாகம் தென்னாசெரிம் கடற்கரையோரம் நீண்டு செல்கிறது. இமாலய மலையிலிருந்து கரடுமுரடான மலைத் தொடர்கள் வரிசை வரிசையாகத் தெற்கு நோக்கிச் சென்று பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கின்றன. இம்மலைத் தொடர்கள் தென் கிழக்குத் திசையில் அராகன் கடற்கரைக்கு (Araken Coast) இணையாக ஓடுகின்றன. கரடுமுரடான மலைத்தொடர்களை வட கிழக்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதிகளிலும் பார்க்கலாம். ஷான் நாடு முழுவதும் 3,000 அடிகளுக்கு மேல் ஏற்றச் சரிவுகளும் உள்ளார்ந்த பிளவுகளுமுடைய நிலமேடு (Plateau) ஆகும். ஷான் மேட்டு நிலத்தின் (Shan Upland) வடபகுதி வழியாகச் செல்லும் பெருஞ்சாலை பர்மாவையும், சீனாவிலுள்ள யூனான் மாநிலத்தையும் இணைக்கிறது.

இம் மலைத் தொடர்களின் நடுவில் ஐராவதிப் பள்ளத்தாக்காலும், சிண்ட்வின், சிட்டாங் ஆறுகளாலும் உருவாக்கப்பட்ட நடுப்பள்ளப் பகுதி நிலம் இருக்கிறது. இதனுடைய வடக்கிலுள்ள பள்ளப்பகுதி வறட்சி மிகுந்த பகுதியாகும். இதனுடைய தெற்குப் பள்ளப்பகுதி நிலத்தைக் கழிமுகப் பகுதி என அழைக்கிறார்கள். இங்கு ஐராவதியும், சிட்டாங் ஆற்றின் கிளைகளும் ஒன்றோடொன்று கூடி 12,000 சதுர மைல்களில் பரவியிருக்கும் வண்டலான சம வெளியை உருவாக்கியிருக்கின்றன. இப் பகுதியைப் பர்மாவின் அரிசிக் கிண்ணம் (Rice bowl) என்று அழைக்கிறார்கள். அராகன், தென்னாசெரிம் ஆகிய பகுதிகளின் கரையோரங்களில் குறுகிய சமவெளிகளிருப்பதால் வேளாண்மை செய்வதற்கான நிலங்கள் கிடைக்கின்றன.

பர்மாவின் பொருளாதார நிலையும், நாகரிகமும் அந் நாட்டிலுள்ள ஆறுகள் மூலம்தான் வளர்ச்சியடைந்தன. சீனா, இந்தியா,

பர்மா ஆகிய நாடுகள கூடும் கரடுமுரடான 19,000 அடி உயர மலைகளிலிருந்துதான் ஐராவதியாறு பிறந்து ஓடிவருகிறது. ஐராவதி ஆற்றின் இரு பிறப்பிடங்களான என்மய் (Nmai), மாலி (Mali) ஆகிய ஆறுகள் தெற்கு நோக்கிப் பாய்ந்து செல்கின்றன. அந்தமான் கடலிலிருந்து 150 மைல் தொலைவில் உள்ள இடங்களில் ஐராவதியாறு செல் கிளைகளாக மாறிச் சமதளக் கழிமுக நிலங்களின் வழியாக விரைவாக ஓடிக் கடலில் கலக்கிறது. இதனுடைய தலைநிலக் கழிமுகத்தின் கிழக்கில் இரங்கூன் இருக்கிறது. 22 மைல் நீளமுள்ள டுவான்டே கால்வாய் (Twante Chanel) மூலம் இரங்கூன் ஐராவதியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

மாண்டலேவின் தென்மேற்கில், 60 மைல் தொலைவிற்கு அப்பால், தன் தலைக்கிளையான சிண்ட்வின் ஆற்றோடு ஐராவதி கூடுகிறது. மழைக்காலங்களில் சிண்ட்வின் ஆற்றிலிருந்து 380 மைல் தொலைவிலுள்ள இந்தியாவிற்கு அருகிலுள்ள ஓமலீனுக்குச் (Homalin) செல்லலாம்.

பர்மாவிலுள்ள பெரிய ஆறுகளுக்குள் மிக நீண்ட ஆறு சால்வீன் (Salween). இவ்வாறு கிழக்குத் திபெத்தில் உள்ள மலை முடிச்சுகளிலிருந்து கிளம்பி, 1,750 மைல் பாய்ந்து ஓடி மௌல்மயினில் உள்ள கடலில் விழுகிறது. சால்வின் ஆற்றில் தேவையான அளவு செயல் திறமுள்ள நீர்மின் ஆற்றல் (potential hydro-electric power) இருக்கிறது.

சிட்டாங் ஆறு (Sittang River) ஐராவதியின் முந்திய காலத்தைச் சேர்ந்த ஒரு வாய்க்கால் வழியாக ஓடி இரங்கூனின் வடகிழக்கிலிருந்து 60 மைல் தொலைவில் உள்ள மார்டபன் வளைகுடாவில் (Gulf of Martaban) விழுகிறது. அண்மையில் உள்ள இடங்களுக்குத்தாம் இதன் வழியாகப் பயணம் செய்யலாம்.

வங்காள விரிகுடாவின் வடகிழக்குக் கரையோரம் பர்மா இருப்பதால் இங்கே இந்துமாக் கடற் பருவமுறைக் காற்று மே மாதத்திலிருந்து அக்டோபர் வரை வீசுகிறது. ஆகையால், பர்மாவில் அதிக மழை பொழிகிறது. இப்பருவமுறைக்காற்று வீசும் காலத்தில் உதாரணமாகச் சிட்வியில் (Sittwe) 197 அங்குலம் மழை பெய்கிறது. அக்டோபர் நடுவிலிருந்து மே இடைக்காலம் வரை காற்று வடக்கிலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் வீசுவதால் சிட்வியில் 6 அங்குல மழைதான் பெய்கிறது. ஐராவதிக் கழிமுகத்தில் ஆண்டிற்கு 125 அங்குலம் மழை பொழிகிறது. மாக்வேயைச் (Magwe) சுற்றியிருக்கும் வறட்சிப் பகுதிகளில் 21 அங்குலம் மழைதான் பெய்கிறது. வட திசையை நோக்கிச் செல்லச் செல்ல

மழை மிகுந்துகொண்டே போகிறது. உதாரணமாக மிட்கியினுவில் (Myitkyina) 80 அங்குலம் மழை பொழிகிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன் பர்மாவில் வேளாண்மை விளை பொருள்களின் மிகுதியே இருந்ததில்லை. ஆனால் கி. பி. 1940ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு 3 மில்லியன் டன் (ஒரு டன் 2,240 கல் எடை கொண்ட பார எடையலகு) அரிசியை வெளிநாடுகளில் விற்கத் தொடங்கியது. இவ் வரிசியில் 95 விழுக்காடு கழிமுகப் பகுதியில் கிடைத்தது. கழிமுகப் பகுதியில் ஆண்டிற்கு 80 அங்குல மழை பொழிகிறது. மேலும் நெற்பயிர் வளரும் காலத்தில் இங்கு அதிக மழை பொழிகிறது. நெல் மிகுதியாக வளருவதால் நூற்றுக் கணக்கான அரிசி ஆலைத் தொழில்களைப் பர்மாவின் ஆற்றோரங் களில் நாம் காணலாம். 1956-ல் அரசு சணல் பயிரிடுவதற்கு முயற்சி எடுத்தது. ஆனாலும் 1970-ல் 70,000 ஏக்கர் நிலங்களில் தாம் சணல் பயிரிடப்பட்டிருந்தது.

நெல் விளைவதற்காக ஆய்வறிவு சார்ந்த முறைகளைப் பர்மாவில் பயன்படுத்துவதில்லை. நல்வள உரமும் (fertilizer) அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை. அமெரிக்காவில் ஓர் ஏக்கருக்கு 4,300 பவுண்டு நெல் விளைகிறது; ஜப்பானில் 7,000 பவுண்டு; ஆனால் பர்மாவில் 1,300 பவுண்டுதான்.

மத்திய ஐராவதி தாழ்ந்த சிண்ட்வின் பள்ளத்தாக்கு, சிட்டாங் பள்ளத்தாக்கின் வடபகுதி ஆகியவை பர்மாவின் வறட்சிப் பகுதி யில் இருக்கின்றன. பர்மாவில் வாழும் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதி இந்த வறட்சிப் பகுதியில் வாழ்கிறார்கள் பர்மாவில் இருக்கும் விளைச்சல் நிலங்களில் மூன்றில் ஒரு பகுதி இங்கு இருக்கிறது. ஆண்டிற்கு 40 அங்குலம் மழை இங்குப் பொழிகிறது. வறட்சிப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான நெல் இங்கு வளருவதில்லை. நெல்லைத் தவிரப் புகையிலை, பருத்தி, மக்காச் சோளம், தினை, எள், வேர்க்கடலை, மிளகாய், பயறு வகைகள், காய்கறிகள் ஆகியவை இப் பகுதியில் விளைகின்றன.

அரிசிக்கு அடுத்த நிலையில் பர்மாவில் மிகுதியாகப் பயன் படுத்தப்படும் உணவுப் பொருள் மீன். ஆண்டிற்கு 85 மில்லியன் பவுண்டு மீன்களைப் பிடிக்கிறார்கள். பர்மாவில் நிறையக் காடுகள் உள்ளன. 1940ஆம் ஆண்டுவரை உலகத்திலே மிகுதியாகத் தேக்குமரம் விளைந்த இடம் பர்மா. அராகன் யோமாவிலும், பெகு யோமாவிலும் (Pegu Yoma), ஷான்மேட்டு நிலங்களிலும் மரங்கள் மிகுதியாக வளர்கின்றன.

பர்மாவில் 50 வகையான தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. 1940-ல் 40 விழுக்காடு வெளிநாட்டுச் செலாவணி தாதுப் பொருள்கள் மூலம் கிடைத்தது. மிக அதிகமாகக் கிடைக்கும் தாதுப் பொருள்கள் பெட்ரோலியம், வெள்ளீயம், காரீயம், டங்ஸ்டன் (tungsten), சிவப்புக்கல், நீலக்கல் (sapphires), பச்சை மணிக்கல், பொன் முதலியன ஆகும். சிண்ட்வின், ஐராவதி ஆகிய ஆறுகளின் கரையோரங்களில் பொன் கிடைக்கிறது. மோகோகிற்கே (Mogok) அருகில் சிவப்புக்கல், நீலக்கல், செந்நிற ஒண்மணிக்கல் (garnet), கடல் வண்ணக்கல் (acqua-marine) ஆகியவை கிடைக்கின்றன.

பெட்ரோலியம் மிகுதியாகக் கிடைக்கும் இடங்கள் சாவுக் (Chauk), யநாங் யாவுங் (Yenang Yaung), மியிங்யன் (Myingyan) முதலியன. 1970-ல் 810,000 டன் பெட்ரோலியம் பர்மாவில் கிடைத்தது. ஷான் நகரம், காயா நகரம் (Kayah State), காவ்துளி (Kawthule), தென்னுசெரிம் ஆகிய இடங்களில் வெள்ளீயமும் டங்ஸ்டனும் கிடைக்கின்றன.

லாஷியோவின் (Lashio) வடமேற்குத் திசையிலிருக்கும் பாவ்தின் சுரங்கத்தில் (Bawdin Mines) வெள்ளீயமும், ஈயமும் கிடைக்கின்றன. நிலக்கரி அவ்வளவாகப் பர்மாவில் கிடைப்பதில்லை. ஷான் மேட்டு நிலங்களில் இரும்பு கிடைக்கிறது.

3. மலேசியா

ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்த மலேயாத் தீபகற்பத்தையும், சுமத்திராவிலிருந்து மொலுக்கஸ் (Moluccas) வரை பரந்து விரிந்துகிடக்கும் தீவுப் பிரிவுகளையும் மலேசியா என்று அழைப்பது வழக்கம். இன்று மலேயாத் தீபகற்பத்தின் தெற்குப் பகுதிகளையும் (சிங்கப்பூரைத் தவிர), முன்பு ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த சரவாக் (Sarawak), சபா (Sabah) ஆகிய நாடுகளையும் மலேசியா அல்லது மலேயக் கூட்டரசு (Federation of Malaysia) என்று அழைக்கிறார்கள்.

வடக்கு மலேசியாவில் இரு பகுதிகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று மேற்கு மலேசியா, மற்றொன்று கிழக்கு மலேசியா. இவ்விரண்டு பகுதிகளையும் தென் சீனக் கடல் (South China Sea) பிரிக்கின்றன. இவ்விரண்டு பகுதிகளுக்குள்ள தொலைவு 400 மைல்கள். இவ்விரண்டு பகுதிகளும் 128,400 சதுர மைல்கள்

உள்ளன. மேற்கு மலேசியா மட்டும் 50,800 சதுர மைல்கள்; இதுவே இவ்விரண்டு பகுதிகளில் சிறிய பகுதி. குன்றுகளும் வண்டலான பள்ளப்பகுதிகளும், மேட்டு நிலங்களும் உள்ள நாடே வடக்கு மலேசியா. மேற்கு மலேசியாவின் மேட்டு நிலங்கள் டகன் மலையில் (Tahan Mountain 7,186 அடி) உச்ச நிலை அடைகின்றன. கிழக்கு மலேசியாவின் மேட்டு நிலங்கள் கின பாலுவில் (Kinabalu 13,455 அடி) உச்ச நிலை அடைகின்றன. தென் கிழக்கு ஆசியாவில் உள்ள மிக உயரமான சிகரம் கினபாலு மலையில்தான் உள்ளது. மேற்கு மலேசியாவின் பெரும்பாலான பகுதிகள் 3,000 அடிகளுக்குக் கீழிருக்கின்றன. இம் மேட்டு நிலங்கள் வழியாகப் பயணம் செய்வது கடினம்.

நில நடுக்கோட்டுக்கருகில் இருப்பதாலும், தாழ்வான ஏற்றக் கோண மேடுகள் உள்ளதாலும், கடல் சார்ந்திருப்பதாலும் மலேசியாவில் மிக்க மழை பொழிகிறது; வெப்ப நிலையும் மிகுதியாயிருக்கிறது. சாதாரணமாகத் தட்ப வெப்ப நிலை 70° F-லிருந்து 90°F. வறண்டுபோன பகுதிகளில்கூட ஆண்டிற்கு 65 அங்குலம் மழை பொழிகிறது. பெரும்பாலான பள்ளப்பகுதிகளில் ஆண்டிற்கு 100 அங்குலம் மழை பெய்கிறது. ஏப்ரல்-மே, அக்டோபர்-நவம்பர் ஆகிய மாதங்களில் மிக மிகுதியாக மழை பெய்கிறது. ஆண்டு முழுவதும் நீர் நயப்பு (humidity) மிகுதியாயிருக்கிறது. மலேசியாவில் நான்கில் மூன்று பகுதி காடு, புதர்மரப் பரப்பு, இயற்கைப் பெருவளம் ஆகியவை அடங்கியது.

ஏனைய ஆசிய நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கையைவிட மலேசியாவிலுள்ள மக்களின் வாழ்க்கை உயர்ந்து செல்வ வள முள்ளதாயிருக்கிறது. 1970ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி மலேசியாவில் 11 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இதில் மலேய் மக்கள் 45 விழுக்காடும், சீனர்கள் 35 விழுக்காடும், இந்தியர் பாகிஸ்தானியர் 9 விழுக்காடும் உள்ளனர். மலேசியாவின் மக்கள் தொகை மிகுதியாக வளருவதால் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் 1970-ல் உள்ள மக்கள் தொகையைப்போல் இரண்டு மடங்கு உயரும்.

மிகுதியான மலேய் மக்கள் வாழும் இடம் மேற்கு மலேசியா. அவர்களில் பெரும்பான்மையோர் நாட்டுப்புறங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோரும் தங்களை நாட்டுப் பழங்குடி மக்கள் (indigenous) எனக் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களில் பெரும்பான்மையோர் இந்தோனேசியாவிலிருந்து மலேசியாவிற்கு வந்த குடிமக்களின் வழியினரே. மலேய் மக்கள் சன்னி

(Sunni) முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய நாட்டு மொழி மலேய் மொழி. அரசாங்க அலுவலில் உள்ள மலேய் மக்களைத் தவிர மற்ற மலேய் மக்கள் ஊதியம் பெறும் நோக்கத்துடன் வேறு ஒருவரிடமும் பணிபுரியப் போவதில்லை. பொதுவாக, அவர்கள் தங்களுடைய வழிவழியாய் வந்த கிராமத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் மீனவர்களாகவும், நெல், தேங்காய் போன்ற பொருள்களை விளைவிக்கும் விவசாயிகளாகவும் இருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாகச் சீனாவிற்கும் மலேசியாவிற்கும் தொடர்பிருக்கிறது. அண்மை வரை மிகுதியான சீனர்கள் மலேசியாவிற்கு வந்து குடியேறவில்லை. மலேசியாவிற்கு வந்த சீனர்களில் பெரும்பாலோர் கன்டோனீஸ் (Cantonese) மொழி பேசும் தென் சீனாவிலிருந்து வந்தவர்கள். அவர்கள் கன்பூசியன் (Confucianism) நெறியைப் பின்தொடருபவர்கள். அவர்களில் பெரும்பாலோர் வாணிபத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். வெள்ளீயம், ஆக்கத் தொழில் முதலிய தொழில் துறையில் வேலை செய்யும் தொழிலாளிகளில் பெரும்பான்மையோர் சீனர்கள். இரப்பர், அன்னாசித் தோட்டங்களிலும் சீனர்களை மிகுதியாகக் காணலாம். பெரும்பான்மையான சீனர்கள் மலேசியா நகரங்களில் வாழ்கிறார்கள். சீனர்கள் தங்கள் கலாசாரத்தை மறக்கவில்லை; மலேய் மக்களுடன் மிகுதியாக நெருங்கிப் பழகுவதில்லை.

மலேசியாவில் வாழும் மற்றொரு சிறுபான்மைக் குழுவினர் தென் இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் ஆவர். சீனர்களைப் போல் இவர்களும் தனித்து வாழ்கிறார்கள்; ஆனால் சீனர்களைப் போலச் செல்வந்தர்கள் இல்லை; தொழிலாளர்களாகப் பணிபுரிபவர்களே அதிகம்.

கிழக்கு மலேசியாவில் மலேய் மக்கள் 13 விழுக்காடே இருக்கிறார்கள். சீனர்கள் 30 விழுக்காடு இருக்கிறார்கள். இங்கு மிகுந்த அளவில் இபான் (Iban) அல்லது கடல் டயாக் மக்கள் (Sea Dayak) குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் சரவாக் நாட்டின் கரையோரங்களிலும் ஆற்றோரங்களிலும் வாழ்கிறார்கள்.

சரவாக்கில் வாழும் மற்றொரு பழங்குடி மக்கள் மெலாநௌ (Melanau). இவர்கள் மலேய் மக்களின் கலாசாரத்திற்கு அடிமையானவர்கள். இஸ்லாம் சமயத்தைத் தழுவினவர்கள். சபாவில் (Sabah) இருக்கும் மிகப் பழங்குடி மக்கள் கடாஜான் (Kadazan). இவர்கள் நெற்பயிர் பயிரிடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்

களுக்கு அடுத்ததாகப் பெரும்பான்மை பெற்றிருப்பவர்கள் கடலோரங்களில் வாழும் ஆடுமாடு மேய்க்கும் பாஜௌ (Bajau) ஆவார்கள். நாகரிக முதிர்ச்சியற்ற காலத்திற்குரிய பழம் பாணியான முருட் (Murut) என்ற மக்களும் சபாவில் வாழ்கிருர்கள்.

மலேய் நாட்டின் நாட்டுமொழி மலேய் மொழி. இம் மொழி மூலமே மக்களுக்குக் கல்வி அளிக்கப்படுகிறது. பள்ளிகளில் ஆங்கில மொழியும் கற்றுத்தரப்படுகிறது. சீனர்கள் இதை எதிர்க்கிருர்கள். ஏனென்ருல் சீனர்களின் குழந்தைகள் மலேய், ஆங்கிலம், சீன மொழி ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. சீனர்களே நடத்தும் பள்ளிகளும் மலேசியாவில் உள்ளன.

மலேய் மக்களின் சிறந்த தொழில் வேளாண்மை. மலேய் மக்களின் மொத்தத் தொழிலாளிகளில் பாதித் தொழிலாளிகளுக்கு மேல் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிருர்கள். ஆனுல், நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதிதான் வேளாண்மையிலிருந்து வருகிறது. ஏற்றுமதியாகும் வேளாண்மைப் பொருள்களான இரப்பர், எண்ணெய் கசியும் விதைகளையுடைய பனையினமரம் ஆகியவைதாம் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன.

உலகத்திலே உற்பத்தியாகும் இயற்கை இரப்பரிலே (natural rubber) 40 விழுக்காடு மலேசியாவிலிருந்து வருகிறது. மலேசியாவில் உள்ள விளைச்சல் நிலங்களில் மூன்றில் இரண்டு பங்கு இரப்பர் பயிரிடுவதற்காக ஒதுக்கப்படுள்ளது. மலேசியாவில் 4·5 மில்லியன் இரப்பர்த் தோட்டங்கள் உள்ளன.

ஜோஹூரிலும் (Johore), செலங்கரிலும் (Selangor), பேரக்கிலும் (Perak) பனையின மரங்கள் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. அண்மையில் பனையின மரங்களின் மூலம் எண்ணெய் உற்பத்தி மிகுந்திருக்கிறது.

ஆனுல் கொப்பரை, தேங்காய் எண்ணெய் ஆகிய தொழில் துறையில் மிகுதியான வளர்ச்சி இல்லை. இரப்பருக்குப்பின் மிகுதியாக உற்பத்தியாகும் தொழில் சார்ந்த விளைபொருள் தேங்காய். மேற்கு மலேசியாவின் மேற்குக் கரை ஓரங்களில்தாம் தென்னை மரங்களை மிகுதியாகக் காணலாம். இவைகளில் பெரும்பாலும் சிறுதிற நில உடைமையாளர்களிடம் உள்ளன. எண்ணெய், கொப்பரை ஆகியவற்றில் பெரும்பகுதி மலேசியாவிலே செலவாகிறது.

அன்னுசிப் பழத் தோட்டங்கள் பெரும்பாலும் மேற்கு ஜோஹூரில் உள்ளன. இவை சீனர்களிடம் இருக்கின்றன. தேயிலை மிகுதியாக வளரும் இடம் பாஹங் (Pahang); இதைத் தவிரப் புகையிலை, மிளகு முதலிய பொருள்களும் மலேசியாவில் பயிரிடப்படுகின்றன. நாட்டில் உள்ள வண்டலான பள்ளப் பகுதிகளில், சிறப்பாக வடமேற்குக் கடலோரச் சமவெளிகளிலும், மேற்கு மலேசியாவில் உள்ள கேலன்தன் (Kelanten) கழிமுகப் பகுதியிலும் நெல் விளைகிறது. கிழக்கு மலேசியாவில், சிறப்பாகத் தெற்குச் சரவாக்கில் 20 விழுக்காடு நெல் விளைகிறது. நெல் விளைச்சல் நிலம் மலேய் சிறுதிற நில உடைமையாளர்களிடமிருக்கிறது. ஆனால் சீனர்கள்தாம் ஆலைத் தொழிலகங்களுக்கும் வாணிக இடங்களுக்கும் நெல்லை அனுப்புகிறார்கள். இன்றுகூட மலேசியா அரிசியை இறக்குமதி செய்கிறது. தாய்லாந்து, பர்மா ஆகியவைபோல் இரண்டு மடங்கு நெற்பயிர் உற்பத்திக்காக மலேசியா செலவழிக்கிறது. ஏழிலைக் (மரவள்ளி) கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, சவ்வரிசி, கரும்பு, மக்காச்சோளம், நிலக்கடலை வகைகள், காய்கறிகள், பழங்கள், நறுமணப் பொருள்கள் மலேசியாவில் விளைகின்றன.

மேற்கு மலேசியாவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள துறைமுகங்களிலும், சபாவிலும் மீன்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. மரவியாபாரத்தின் மூலமும் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கிறது. உலகத்தில் கிடைக்கும் டிப்டெரோ கார்ப்ஸ் (Diptero Carps) என்ற மர வகையில் 25 விழுக்காடு மலேசியாவில் கிடைக்கிறது.

பல நூற்றாண்டுகளாக மலேயத் தீபகற்பத்தில் வெள்ளீயம், தகரக்குவளை ஆகியவற்றின் சுரங்க வேலைகளுக்காகச் சீன, ஐரோப்பியக் குத்தகையாளர்களும் (entrepreneurs), சீன, இந்தியத் தொழிலாளர்களும் வந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மிகுந்த அளவில் வெள்ளீயச் சுரங்க வேலைக்காகச் சீனர்கள் மலேயாவிற்கு வந்தனர். பெரும்பான்மையான வெள்ளீயச் சுரங்கங்கள் சீனர்களிடமிருக்கின்றன. உலகத்திலே கிடைக்கும் வெள்ளீயத்திலே 40 விழுக்காடு மேற்கு மலேசியாவில் கிடைக்கிறது. இதில் பாதிக்கு மேல் உலகத்திலே மிகப் பெரிய சுரங்கமான கின்தா பள்ளத்தாக்கில் (Kinta Valley) கிடைக்கிறது.

இரும்பு மிகுதியாகக் கிடைக்கும் இடங்கள் தெரன்கானு (Trengganau), கேலன்தான், பேரக், பாஹங் ஆகியவை ஆகும்.

மலேசியாவில் கிடைக்கும் இரும்பு முழுவதும் ஏறத்தாழ ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஜப்பான்தான் மலேசியாவிலிருந்து இரும்பை மிகுதியாக வாங்குகிறது. ஜோஹூரிலும், சரவாக்கிலும் பாக்ஸைட் (Bauxite : அலுமினியம் அகப்படும் இடத்தில் கிடைக்கும் மண் வகை) மிகுதியாகக் கிடைக்கிறது. பெட்ரோலியம் (பாறை எண்ணெய்) கிழக்கு மலேசியாவில் கிடைக்கிறது. தங்கமும் நிலக்கரியும் கூட மலேசியாவில் கிடைக்கின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வேளாண்மைப் பொருள்களையும், வாணிபத்தையுமே தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்காக மலேசியா நம்பியிருக்கிறது. ஆக்கத் தொழில்களின் மிகப் பெரிய இடம் கோலாலம்பூரிலிருந்து (Kuala Lumpur) ஸ்வெட்டன்ஹேம் (Swettanham) துறைமுகம் வரை பரவியிருக்கிற கிளாங்குப் பள்ளத்தாக்கு (Klang Valley) ஆகும். கி.பி. 1970 ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி ஏற்றுமதி மூலம் வரும் வருமானக் குறிப்புப் பின்வருமாறு : 45 விழுக்காடு இரப்பரும், 23 விழுக்காடு வெள்ளீயமும், உணவுப் பொருள்களும், புகையிலையும், கொப்பரையும், தேங்காய் எண்ணெயும், புல்லின மர எண்ணெயும் (Palm-oil), கரு மூலப் பகுதிகளும் (Kernel) ஏற்றுமதி செய்யப் படுகின்றன. அரிசியும், ஏனைய உணவு வகைப் பொருள்களும், துணிமணிகளும், மெஷின்களும் (இயந்திரத் தொகுதிகளும்), ஊர்திகளும், எரிபொருள்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. சிங்கப்பூர், ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் மிகுந்த அளவில் மலேசியா வாணிகம் செய்கிறது.

4. சிங்கப்பூர்

சிங்கப்பூரின் பண்டைய பெயர் சிங்கபுரி (Singapura); சிங்கபுரி என்றால் சிங்க நகரம் (Lion City) எனப் பொருள். சுமத்திராவில் பிறந்த ஸ்ரீ விஜயப் பேரரசின் ஓர் இளவரசர் இப் பெயரைச் சூட்டினார். சண்டை போட்ட அரசர்களுக்குள் கிடைத்த வெற்றியும் தோல்வியும், பண்டைய சிங்கபுரியின் செல்வாக்கின் வளர்ச்சியையும் தேய்வையும் தீர்மானித்தன; ஆனால் செல்வம் கொழித்திருந்த மலாக்காவுடன் இதனால் போட்டியிட முடியவில்லை. இன்றைய சிங்கப்பூரின் வரலாறு கி.பி. 1819, பிப்ரவரி 6 ஆம் நாளிலிருந்து தொடங்குகிறது. ஆங்கிலேயர் ராபல்ஸ் (Raffles) தாம் இதைத் தோற்றுவித்தார்; நிகழ்வுப் பொருத்தமாக இச்சிங்க நகரத்தைத் தோற்றுவித்த பிரிட்டன் நாட்டுச் சின்னமும் (தற்செயலாக) சிங்கம் தான். கி.பி. 1963 செப்டம்பர் 16 ஆம் நாள் சிங்கப்பூர் புதிதாக உருவாகிய மலேசியாவுடன் இணைந்தது;

ஆனால் கருத்து வேறுபாடுகளிருந்ததால் 1965 ஆகஸ்டு 9 ஆம் நாள் மலேசியாவை விட்டுப் பிரிந்து உடனடியாக முழுமையான உரிமைபெற்ற நாடாக மாறியது.

நிலநடுக் கோட்டுக்கு வடக்கே 75 மைல் தொலைவிலுள்ள மலேயாத் தீபகற்பத்தின் எல்லையிலுள்ள சிங்கப்பூர், உலகத்திலுள்ள மிகச் சிறிய நாடுகளில் ஒன்றாகும். இதன் நிலப்பரப்பு 225 சதுர மைல்கள். நன்கு வளர்ச்சியடையாத 8 விழுக்காட்டுப் பகுதியில் 62 மிகச்சிறிய தீவுகள் உள்ளன. பொதுவாக இதன் நிலப்பகுதி தாழ் மட்டத்திலிருக்கிறது. இத்தீவின் மிக உயரமான மலை புகிட்திமா (Bukit Timan) 581 அடிகள் கொண்டது. இத்தீவின் நடுவில் பளிச்சென்று தென்படுவது மூன்று பெரிய தண்ணீர்த் திரள் பகுதிகள் (water bodies).

இத்தீவை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) மேற்குப் பகுதி : நடு உயிரூழி முதற் பிரிவிற்குரிய வண்டலாகப் படிந்திருக்கும் நிலக் கருப்பாறை அடுக்குப் படிவம் (Triassic sedimentary Strata), (2) மட்டு அளவுடைய மிக்க ஆழத்திலிருந்து எழும்பிய தீப்பாறைக் கருங்கல் திரள் கற்கள் (batholithic granite) வலிந்து புகுந்து இந்நில அடுக்குப் படிவத்தின் எல்லையாக நிற்கின்றன. இவைதாம் தெளிவாகத் தெரிகிற நடுப்பகுதியில் அமைந்திருக்கின்றன. (3) கிழக்குப் பகுதி மண்ணியல் அமைப்புப்படி இளமையான பகுதியாகும். இது ஓர் உயர்நிலைப்பட்ட கடலில் வளர்ந்த மேட்டு நிலம்; அரை குறையாக ஒன்றுக்கப்பட்டு நீரில் மிதந்துவரும் பொருள் வகைகளால் இம்மேட்டு நிலம் அமைக்கப்பட்டிருக்கிறது; இன்று இது சிற்றாறுகளால் மிக்க விசையுடன் தாக்கப்பட்டுச் செதுக்கப்பட்டிருக்கிறது. மிக்க மாற்றங்கள் அல்லாத இந்த இயற்கைக் காட்சி பல்வேறு தாழ்ந்த குன்றுகளால் அணி செய்யப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரில் நிலநடுக் கோட்டைச் சார்ந்த தட்பவெப்ப நிலை இருப்பதால் சலிப்பூட்டுகிற, மிக வெப்பமான, ஈரக்கசிவான தட்ப வெப்ப நிலையைக் காணலாம். ஆண்டிற்குச் சராசரி 95·7 அங்குலம் மழை பொழிகிறது.

சிங்கப்பூரின் மதிப்பு அதன் நில வளத்தையும், தாதுப் பொருள்களையும் சார்ந்ததன்று. ஆனால், ஆசியாக் கண்டத்திலே இது இருக்கும் இடம்தான் இதற்குச் சிறப்பை அளிக்கிறது; மேலும் இத்தீவிலே ஓர் இயற்கையான ஆழமிக்க துறைமுகம் இருக்கிறது. சிங்கப்பூரைக் கட்டுப்படுத்தி ஆட்சி செலுத்துகின்றவர் மலாக்காக்

கடற்காலேயும், இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையேயுள்ள வாணிபச் செல்வழியையும் ஆட்சி செலுத்தலாம்.

சிங்கப்பூரின் மற்ருெரு சிறப்புமிக்க உடைமை அதன் மக்களே. இதன் 2·1 மில்லியன் மக்களில் பெரும்பான்மையோர் சீனர்கள். இவர்கள் கடுமையாக உழைப்பவர்கள்; மன உறுதிப் பண்புள்ளவர்கள்; மன விரிதிறமும் மீட்டெழுச்சியுமுடையவர்கள் (resilience). சிங்கப்பூர் பல் இனக் குழுக்கள் அடங்கிய சமுதாயம் உடையது. 1970 ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி சீனர்கள் 76·2 விழுக்காடும், மலேய் இனத்தார் 15 விழுக்காடும், இந்தியர், பாகிஸ்தானியர் 7 விழுக்காடும், மற்றவர்கள் 1·8 விழுக்காடும் உள்ளனர். அதிகாரப் பூர்வமாக நாட்டின் மொழிகளாக மலேய், சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. எம் மொழியின் மூலமாகவும் கல்வி பயிலலாம்; ஒரே வகையான கல்வி அமைப்பே தான் இந்நான்கு மொழிப் பள்ளிகளிலும் உள்ளது. சிங்கப்பூர் நகரைச் சார்ந்த நிலப்பரப்பு 50 சதுர மைல்கள். இதில் 3·2 சதுர மைல்களில் முதன் முதலாக வளர்ச்சி செய்யப்பட்ட, மட்டுமீறி நெருக்கமிக்க நடு நகரப் பகுதி அமைந்திருக்கிறது. சிங்கப்பூரின் நாட்டுப்புறப் பகுதிகள் 175 சதுர மைல்கள் தாம். சிங்கப்பூர் வளர்ச்சியடைந்த நாடாலுைம் 2,50,000 சேரிவாசிகளும், அதை விட மிகுதியான குந்துபவர்களும் (squetters : உரிமையின்றிப் பொது நிலத்தில் தங்குபவர்கள்) நாட்டை அசுத்தப்படுத்து கிருர்கள்.

அயல்நாட்டு மூலதனம் கொண்ட தொழிற்சாலேகள் பின் வருவன : பெட்ரோலியம், அதைச் சார்ந்த பொருள்கள், மின்மம் சார்ந்த பிரிவுகள் (electronics), கப்பல் கட்டும் தொழில், உணவுப் பொருள்கள், மதுபானம், குடிநீர்மம் (beverages) ஆகியவை ஆகும். சிங்கப்பூரில் மூலதனம் போட்ட அயல்நாடுகள் படிவரிசையில் பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு, ஜப்பான் ஆகியவை. சிங்கப்பூருடன் மிக்க வாணிபம் செய்யும் நாடுகள் படிவரிசையில் மலேசியா, ஜப்பான், பிரிட்டன், சீனு முதலியன ஆகும். கப்பற் சரக்கேற்ற எடையளவில் (Shipping Tonnage) இன்று சிங்கப்பூர் உலக மேடையில் மூன்ருவது இடத்தைக் கைப்பற்ற முன் வந்திருக்கிறது.

5. இந்தோனேசியா

தென்கிழக்காசிய நாடுகளுக்குள் மிகுதியான நிலப்பரப்பையும் மக்கள் தொகையையுமுள்ள நாடு இந்தோனேசியா. 7,36,000

சதுர மைல்களடங்கிய நிலப்பரப்புள்ள இந்நாடு தாய்லாந்து, பர்மா ஆகியவற்றை விட மூன்று மடங்கு பெரியது. இன்று இதன் மக்கள் தொகை 130 மில்லியன்.

3,000 தீவுகளடங்கிய இந்நாடு சுமத்திராவின் வடமேற்குப் பகுதியிலிருந்து மேற்கு இரியனின் தென் கிழக்குக் கோடிவரை 3,300 மைல்கள் தொலைவு பரவியிருக்கிறது.

செழிப்புள்ள இந்தோனேசிய நிலங்கள் எரிமலை மண்டலப் பகுதிகளில் இருக்கின்றன. இம் மண்டலப் பகுதிகளுக்கு வெளியே இருக்கும் போர்னியோ அல்லது காலிமன்தான் (Borneo or Kalimantan) இந்தோனேசியாவிலே வளமற்ற பகுதி.

நில நடுக்கோட்டின் மையத்திலிருப்பதாலும், ஆசியா, ஆஸ்திரேலியாக் கண்டங்கள் ஆகியவற்றின் இடையிலே அமைந்திருப்பதாலும், பல்வேறு வகைப்பட்ட மேடுகளும், தடைகாப்பின்மையும் இருப்பதாலும் இந்தோனேசியா பல் வகைப்பட்ட தட்பவெப்ப நிலையுள்ள நாடாக விளங்குகிறது. பெரும்பான்மையான தீவுகளில் மலைகள் அல்லது மேட்டு நிலங்கள் பல ஆயிரம் அடிகள் உயர்ந்திருக்கின்றன; பல மேட்டு நில உழவு சார்ந்த குடியிருப்புத் தொகுதிகளும், புகலிடங்களும் அருகிலுள்ள பள்ளப்பகுதி நிலங்களை விட மிகுந்த அளவு குளிர் வானிலை உடையனவாக இருக்கின்றன. அக்டோபரிலிருந்து மார்ச்சு மாதம் வரை நீடிக்கும் மேற்குப் பருவக்காற்று தென் கிழக்குத் திசையிலிருந்து வீசி, நில நடுக் கோட்டுக்குக் குறுக்காக ஊசலாட்டம் செய்து, வளைந்து சென்று மேற்கு நோக்கிப் பாய்ந்து செல்லும் காற்ருய் மாறி இந்துப் பெருங்கடலிலிருந்து வீசுகிறது. இதன் விளைவால் பெரும்பான்மையான இந்தோனேசியத் தீவுகள் மிகுதியாக மழைப் பொழிவு பெறுகின்றன. ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரை நீடிக்கும் கிழக்குப் பருவக்காற்று ஆஸ்திரேலியாவிலிருந்து பாய்ந்து வரும் தெற்கு நோக்கிய அல்லது தென் கிழக்கு நோக்கிய நீர்ப்பசையற்ற வறண்ட காற்று ஆகும். பெரும்பான்மையான தென் இந்தோனேசியப் பகுதிகளுக்கு இதனுல் சிறிதளவு நீர் நயப்பே (moisture) கிடைக்கிறது.

மேற்கிலும், வடக்கிலும் உள்ள மிகப்பெரிய தீவுகளிலும் சுமத்திராவிலும், போர்னியோவிலும், செலிபெஸ் அல்லது சுலவேசியிலும் (Celebes or Sulawesi), மேற்கு ஜாவாவின் பல பகுதிகளிலும், மத்திய, வடக்கு மலுக்குத் தீவுகளிலும் (Maluku islands), பல மேற்கு இரியன் பகுதிகளிலும் வெப்ப மண்டல

மழைக் காட்டுத் தட்ப வெப்ப நிலையிருப்பதால் (Tropical rain-forest climate) ஆண்டிற்கு 80 அங்குல மழைப் பொழிவும், ஈர நயப்பூட்டும் கடுமைமிக்க தட்ப வெப்ப நிலையும் இருக்கின்றன. இப் பகுதிகளில் நீர்ப்பாசனத்திற்காகவும், வீடு, தொழிற்சாலை ஆகியவற்றின் உபயோகத்திற்காகவும், ஆற்றுப் போக்குவரத்துக் காகவும், நீர் மின் ஆற்றலுக்காகவும் (nydro-electric power) மிகுந்த அளவில் தண்ணீர் கிடைக்கிறது. கிழக்கு ஜாவா, தென் கிழக்குத் தீவுகள், தென்மேற்கு இரியன் (irian) ஆகிய பகுதி களில் மழை குறைவான பருவகாலங்களே மிகுதி.

இந்தோனேசியாவில் உள்ள மக்களில் 85 விழுக்காட்டினர் முஸ்லிம்கள். ஆனால் இந்து மதம், புத்தமதம், ஆன்மவாதம் ஆகியவை சார்பான கோட்பாடுகளின் தொடர்பினால் இஸ்லாமியப் பழக்கங்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. கிறித்தவர்கள் ஏறத் தாழ 8 விழுக்காடு உள்ளனர்; பொதுவாக வட சுமத்திராவிலும், மத்திய வட செலிபெஸ்ஸிலும், மேற்கு இரியன் உட்படப் பல்வேறு கிழக்குப் பகுதிகளிலும் இவர்கள் வாழ்கின்றனர். பாலித் தீவிலும், லொம்பாக் தீவிலும் இந்துக்கள் வாழ்கிறார்கள். 3·5 மில்லியன் சீனர்கள் கன்பூசியஸ் நெறியை அல்லது முன்னோர்களை வழிபடும் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள்.

1949ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தபிறகு 'இந்தோ னேசிய மொழி' அல்லது 'பஹாசா இந்தோனேசியா' (Bahasa Indo-nesia) நாட்டு மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிழக்குச் சுமத்திராவிலும், கடற்கரைப் பகுதிகளிலும், பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியான மலேய் மொழியிலிருந்து, தேசிய இயக் கத்தின் போது உருவாகிய மொழியே 'பஹாசா இந்தோனேசியா'. பள்ளிகளில் நான்காம் வகுப்பிலிருந்து இம் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றில் வேறுபாடுடைய இந்தோனேசியாவை இம் மொழி இணைக்க முயல்கிறது.

பெரும்பான்மையான இந்தோனேசியர்கள் மலேய் இனத் தினர் ஆவர். ஆனால், மேற்கு இரியனின் பாபுவன் மக்கள் (Papuvan people) மலேய் இனத்தைச் சாராதவர். சிதறிக் கிடக்கும் காட்டுப் பகுதி மக்கள் குற்றுருவ நீகிரோ இனத்தவர் (Negritos); பலர் பழங்குடித் தென் இந்திய வேடர் வகையினர் (Veddvid Stocks).

மூன்று நாகரிக இனத்தார்கள் நடுப்பகுதியான ஜாவா-மதுரா (Java-Madura) தீவுகளில் வாழ்கிறார்கள். சுன்தனீய முஸ்லிம்கள்

(Sundanese Muslims) மேற்கு மேட்டு நிலப் பகுதிகளிலும், மதுரா மக்கள் (Madurese) மதுராவிலும் கிழக்கு ஜாவாவிலும் வாழ்கிறார்கள். இம் மூன்று வகையினரில் பெரும்பான்மையோர் ஜாவாநீசியர்கள் (Javanese). ஜாவா முழுவதும் இவர்கள் பரவியிருந்தாலும், மத்திய கிழக்கு ஜாவாவில் இவர்களுக்குப் பெரும்பான்மையிருக்கிறது.

சுமத்திரா

வடமேற்குச் சுமத்திராச் சமவெளிகளில், முதன்முதலாக இந்தோனேசியாவில் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொண்ட அச்செனியர்கள் (Atzehnese) வாழ்கிறார்கள். இதன் அருகிலுள்ள மேட்டு நில உட்பகுதிகளில் கஜோ மக்கள் (Gago) வாழ்கிறார்கள். டோபா ஏரியைச் (Danau Toha-Danau ஏரி) சுற்றியுள்ள இடங்களில் பல்வகை படாக் மக்கள் (Bataks) வாழ்கிறார்கள். பெரும்பான்மையான படாக் மக்கள் கிறித்தவர்கள். ஆனால் மாண்டைலிங் படாக் வகுப்பினர் (Mandailing) முஸ்லிம்கள். மேற்கு-நடுப் பகுதிச் சுமத்திராவில் தீவிர இஸ்லாம் சமயப் பற்றுடைய மினங்க பாவு இனத்தார்கள் (Minangkabau) வாழ்கிறார்கள். புகழ் பெற்ற பல இந்தோனேசிய அரசியல் தலைவர்கள் மினங்க பாவு இனத்தைச் சேர்ந்தவர்கள். சுமத்திராவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலும், அதன் அருகேயுள்ள தீவுகளிலும் மலேய் இனத்தார்கள் வாழ்கிறார்கள்; சுமத்திராவில் வாழும் மக்களுக்குள் பெரும்பான்மையோர் இவர்களே. இலாம்புங் மக்கள் (Lampung People) தெற்கில் 1964-ல் அமைக்கப்பட்ட ஒரு மாகாணத்தில் வாழ்கிறார்கள். ஆனால் இன்று ஜாவா, மதுரா, பாலி (Bali island) ஆகிய தீவுகளிலிருந்து வந்து இங்குக் குடியேறிய மக்களுக்கே பெரும்பான்மையிருக்கிறது. சுமத்திராவில் வாழும் இந்தோனேசியாவைச் சாராத அயல்நாட்டுக் குடியேற்ற இனத்தினர் 7,00,000 சீனர்கள்; தவிர ஜாவாவிலிருந்து வந்து குடியேறிய 1·5 மில்லியன் மக்களும் வாழ்கிறார்கள். மேலும் 35,000 இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும், சில ஆயிர அராபியர்களும், பலநூறு மேலை நாட்டவர்களும், பண்ணைகளிலும், சுரங்கங்களிலும், நகரப் பகுதிகளிலும் பணிபுரிகிறார்கள்.

போர்னியோவின் கடற்கரைப் பகுதிகளில் மலேய் மக்கள் வாழ்கிறார்கள்; தென் கிழக்கிலே பன்ஜாரி மக்கள் (Bandgarese) வாழ்கிறார்கள். போர்னியோ உட்பகுதிகளில் மக்கள் தொகை குறைவு. பெரும்பான்மையோர் டயாக் இனத்தவர்கள் (Dayaks).

400,000 சீனர்களும் போர்னியோவில் வாழ்கிறார்கள்; ஜாவா விலிருந்தும் மிகுந்த அளவில் மக்கள் வந்து இங்குக் குடியேறு கிறார்கள்.

செலிபெஸ்ஸின் தென் மேற்குப் பகுதிகளில் மகசாரியர் புகிஸ் (Makasarese-Bugis) முஸ்லிம்களும், செலிபெஸ்ஸின் நடுப்பகுதி யில் தோரத்ஜா (Toradga) மக்களும், தென் கிழக்கில் மினஹாசன் (Minahassen) இனத்தார்களும் வாழ்கிறார்கள். பெரும்பான்மை யான மினஹாசன் இனத்தார்கள் கிறித்தவர்கள்; படைப்பகுதி உட்பட அரசாங்கத் துறைகளில் இவர்கள் நெடுங்காலமாகப் பணி புரிந்து வருகிறார்கள்.

கிழக்கு இந்தோனேசியாவிலுள்ள பாலி, இலொம்பாக் (Lombok) தீவுகளில் இந்து மதத்தைப் பின்பற்றும் இரண்டு மில்லி யன் பாலினீசிய மக்கள் (Balinese) வாழ்கிறார்கள். இந்தோனேசி யாவின் கிழக்குத் திசையில் செல்லச் செல்லப் பல்வேறு மொழிகள், சமயங்கள், பண்பாடுகள் ஆகியவற்றைப் பின்பற்றும் இந்தோ னேசியர்களைக் காணலாம்.

சரிசமம் இல்லாத நிலையில் இந்தோனேசிய மக்கள் தொகை பரவியிருக்கிறது. இந்தோனேசியாவின் மொத்த நிலப்பரப்பில் 7 விழுக்காடு நிலப்பரப்புள்ள ஜாவாவிலும்-மதுராவிலும் இந்தோ னேசியாவின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் (81 மில்லியன் இந்தோனேசியர்கள்) வாழ்கிறார்கள். இந்தோனேசியத் தலைநகரமான ஜகார்த்தாவில் (Jakarta) 5 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள்.

நிருவாகத்திற்கு இன்று இந்தோனேசியா 26 மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 18 விழுக்காட்டு மக்கள் நகரப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.

65 விழுக்காட்டு மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்டிருக்கிறார்கள். நாட்டு வருமானத்தில் பாதிக்குமேல் வேளாண் மைத் துறைமூலம் கிடைக்கிறது; பெட்ரோலியத்தைத் தவிர, 70 விழுக்காடு ஏற்றுமதி வருமானம் இதன்மூலம் கிடைக்கிறது. பொதுவாக, ஜாவாவில் அரிசி விளைச்சல் போதிய அளவு இல்லாத தால், மற்ற இந்தோனேசியத் தீவுகள், பர்மா, தாய்லாந்து, அமெரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. பயிரிடும் தொழிலில் மிகக் குறைவான அளவில் தான் இயந்திரக் கருவிகள் (mechanisation) பயன்படுத்தப்படு

கின்றன. சுமத்திராவிலும் போர்னியோவிலும் இயற்கை இரப்பரும், சுமத்திராவில் மிளகும், சுமத்திரா மலைப்பகுதிகளிலும் ஜாவாவிலும் காப்பியும், செலிபெஸ்ஸிலும் கிழக்குத் தீவுகளிலும் கொப்பரையும் ஏற்றுமதிக்காக மிகுந்த அளவில் உற்பத்தி செய்யப் படுகின்றன.

ஜாவாவில் மிகுந்த அளவில் இயற்கை இரப்பரும், தேயிலையும், கரும்பும், புகையிலையும் (leaf tobacco), கொயினாவிற்காகச் சிங்கோனாப் பட்டையும் (Chinchona bark) உற்பத்தி செய்யப் படுகின்றன. மேலும் மற்றத் தீவுகளிலும் சிகரெட்டிற்கான புகை யிலையும், இயற்கை இரப்பரும், தேயிலையும், புல்லின மர எண்ணை யும், கூலத்தினுள் இருக்கும் அரிசியும், கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பும் (Kerrels) மற்றும் கெட்டியான, உறுதியான நார்ப் பொருள்களும் (hard fibres) கிடைக்கின்றன. சுமத்திராவில்தான் இன்று மிகுந்த பண்ணைகளும் (estates) தோப்புகளும் இருக் கின்றன.

தேவைக்குமேல் கால் நடைகள் மதுரா, பாலி, கீழைச் சுன்டாப் பகுதிகளில் உள்ள (Nusa Tenggara) சும்பாவா (Sumbawa), மற்றும் சும்பா (Sumba) ஆகிய இடங்களில் இருக்கின்றன. இவ் விடங்களிலிருந்துதான் மற்ற இந்தோனேசியப் பகுதிகளுக்குக் கால்நடைகள் அனுப்பப்படுகின்றன.

இந்தோனேசியாவிலிருக்கும் மரக்கட்டைகள் பாதிக்குமேல் ஜாவாவில்தான் கிடைக்கின்றன. ஆனால் நாட்டின் நான்கில் மூன்றுபங்குக் காட்டுப் பகுதிகள் சுமத்திரா, போர்னியோ, மேற்கு இரியன் ஆகிய இடங்களில் இருக்கின்றன.

இந்தோனேசியாவிலுள்ள முதன்மையான கனிப்பொருள்கள் பின்வருவன : பெட்ரோலியம், வெள்ளீயம், நிக்கல், அலுமினி யம் அகப்படும் இடத்தில் உள்ள மண்வகை (bauxite) ஆகியவை ஆகும். இந்தோனேசியாவில் மொத்தம் 40 மில்லியன் டன் பெட் ரோலியம் கிடைக்கிறது; மொத்த உலக உற்பத்தியில் இது 1·7 விழுக்காடுதான். ஆனால் ஆசியாவின் தெற்கிலும், தென் கிழக் கிலும் (சீனாவைத் தவிர) உற்பத்தியாகும் பெட்ரோலியத்திலே இந்தோனேசியாவில்தான் பாதிக்குமேல் கிடைக்கிறது.

தென் கிழக்குச் சுமத்திராத் தீவுகளான பங்கா (Bangka), பெலிடுங் (Belitung or Billiton), சிங்கெப் (Singkep) ஆகிய இடங்களில் மொத்த உலக வெள்ளீய உற்பத்தியில் 10 விழுக்காடு கிடைக்கிறது. இந்தோனேசியாவில் கிடைக்கும் அலுமினியம்

கிடைக்கும் இடத்தில் உள்ள மண்வகை (bauxite) முழுவதும் சிங்கப்பூருக்கு அருகேயுள்ள தெற்குப் பகுதியான பின்டன் தீவில் (Bintan island) கிடைக்கிறது; ஆண்டிற்கு 9,12,000 டன்களுக்கு மேலாகக் கிடைக்கும் இம் மண்வகையில் பெரும்பாலும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவை தவிர மேலும் பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, வைரம், மற்றும் மங்கனம் (Manganese) முதலிய கனிப் பொருள்களும் கிடைக்கின்றன.

6. தாய்லாந்து

1932ஆம் ஆண்டுவரை தாய்லாந்து நாடு சியாம் (Siam) என அழைக்கப்பட்டது. நாம் வரலாற்றைத் தொடங்கும் காலத்தில் கடற்பயணம் சிறப்பைப் பெற்றிருந்தது; சிறந்த உலக வாணிபத் துறைமுகங்கள் தாய்லாந்தில் இல்லை. தென்கிழக்காசியாவிலுள்ள பழகிப்போன வழிகளுக்கு அப்பால் தாய்லாந்து இருந்ததே இதற்குக் காரணம். பொதுவாக, சிங்கப்பூர், சைகான் (Saigon) ஜகார்த்தா (Jakarta), படாவியா (Batavia), பினங்கு (Pinang), இரங்கூன் ஆகிய இவை தாம் செல்வாக்குள்ள தென்கிழக்காசியாவின் துறைமுகங்களாக விளங்கின. ஆனால், உலக விமானப் போக்குவரத்து வளர்ந்தவுடன் தாய்லாந்தின் தலைநகரம் பாங்காக் (Bangkok) சிறப்படைந்தது. பாங்காக்கின் மற்றொரு பெயர் குருங்தெப் (Krung Thep). மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா விமான வழி இணைப்பு வழியாக பாங்காக் இன்று விளங்குகிறது.

மக்கள்

தாய்லாந்து மக்கள் தங்களைத் 'தாய்' (Thai) என அழைத்துக்கொள்கிறார்கள். 'தாய்' என்றால் கட்டற்ற, கட்டுப்பாட்டு வரம்புகளற்ற, அயலாட்சிக்குட்படாத, விடுதலைபெற்ற, அடிமைப் படாத, தன்னுரிமையுடைய, மக்களுரிமையுடைய (free) எனப் பொருள்படும் இப்பெயர் மொழி-இனச் சுட்டுப் பெயராகவும் பயன்படுத்தப்பட்டுத் தாய்லாந்து மக்களைத்தவிர மற்ற லாவோஸில் மேகாங் பள்ளத்தாக்கில் வாழும் முக்கிய மக்கள் குழாமையும், பர்மா ஷான் பகுதியில் உள்ள மக்களையும், சீனாவில் உள்ள மாகாணங்களான யூனானில் வாழும் லூ (Lu), குவாங்சியிலுள்ள (Kwangsi) நுங் (Nung), குவாங்துங்கில் உள்ள (Kwangtung) துங் (Tung) போன்ற அரைகுறை நாகரிகமுள்ள இனக்குழுக்களையும், வட வடக்கு வியட்நாமில் உள்ள நுங் மக்களையும் (Nung), கரு நிறமும், செந் நிறமும், வெண்ணிறமும் உடைய

தாய்களையும், மற்றும் இந்தியாவிலுள்ள அஸ்ஸாம் மக்களையும் கூடக் குறிப்பிடுகிறது. இன்று குருங் தெப் தாய் மொழியில் புத்த சமயம், இந்து சமயம் ஆகியவற்றின் தொடர்பினால் மிகுந்த அளவு சம்ஸ்கிருத பாலிமொழிச் சொற்களை நாம் காணலாம். இராம்காம் ஹயங்கு உருவாக்கிய இன்றைய தாய் மொழியின் எழுத்துத் தொகுதி (Thai script) இந்தியத் தேவநாகரி (Devanagiri) மாண் (Mon), கெம்மர் (Khemer) எழுத்துத் தொகுதிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டது.

ஏறத்தாழ 85 விழுக்காடு தாய்ப் பண்பாடுகளைப் பின்பற்றும் தாய்லாந்து மக்களில் சிறந்த தாயல்லாத பல இனப் பிரிவினர் களும் வாழ்கிறார்கள்; மிகுந்த அளவு உள்ளவர்கள் சீனர்கள்; சிறப்பாக பாங்காக்கிலும், மற்றத் தாய்லாந்து நகரங்களிலும் மாவட்டங்களிலும் வாணிபம் செய்துகொண்டு இவர்கள் வாழ் கிறார்கள். மற்றத் தென் கிழக்காசிய நாடுகளிலுள்ள சீனர்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் தாய்லாந்துச் சீனர்கள் மிகுந்த அளவில் தாய் மக்களுடன் ஒரு சேரக் கலந்து வாழ்கிறார்கள் எனக் கூறலாம். தெற்குக் கோடியிலுள்ள நான்கு அல்லது ஐந்து பட்டணங்களில் மலேய் மொழி பேசும் முஸ்லிம்கள் சிறுபான்மைக் குழுவினர் களாக வாழ்கிறார்கள்; ஆனால் இப் பட்டணங்களில் மட்டும் அவர் களுக்குத்தாம் பெரும்பான்மை இருக்கிறது. கம்போடியா எல்லை யருகே இருக்கும் தெற்கு மாகாணங்களில் பல ஆயிரம் கெம்மர் (Khemers) இனத்தவர்கள் வாழ்கிறார்கள்.

மேற்கிலுள்ள பர்மா எல்லை மலைப்பகுதிகளில் காரேன்கள் (Karens) வாழ்கிறார்கள்; வடக்கே மியோ (Meo), யாவோ (Yao), குமு (Khmu), லாவா (Lawa), லாஹு (Lahu), லிசு (Lisu), அகா (Akha) மற்றும் பலர் இடையிடையே பரவலாகக் கலந்து வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் நாகரிக எல்லைக்கு அப்பாற்பட்டு, மொழி எழுத்துத் தொகுதி இல்லாமல் தாய்மொழி அல்லாத மொழிகளைப் பேசுகிறார்கள்; இவர்களில் பெரும்பான்மை யோர் ஆன்மவாதிகள் (Lanimists). 1950 ஆம் ஆண்டில் 40,000-க்கு மேற்பட்ட வியட்நாமியர்களும் அகதிகளாகத் தாய் லாந்திற்கு வந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் மேகாங் ஆற்றின் ஓரங்களில் வாழ்கிறார்கள்.

ஏற்கெனவே கூறியபடி தாய்லாந்தில் 1·4 மில்லியன் முஸ்லிம் களும், சில கிறித்தவர்களும், ஆன்மவாதிக் கோட்பாடுகளைப் பின்பற்றும் மலைச்சாதியினர்களும், புத்தசமயம் தழுவாத சில சீனர்களும் வாழ்கிறார்கள். மற்றப்படி எல்லாத் தாய்மக்களும்,

புத்தசமய இணைப்பால் ஒருங்கே கலந்து வாழ்கிறார்கள். நம் நாட்டில் பரவலாகக் கோவில்களைக் காண்பதுபோலத் தாய்லாந்தில் புத்தத் துறவி மடமான 'வாட்'டைக் (Wat) காணலாம்.

1970 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி தாய்லாந்தின் மொத்த மக்கள் தொகை 35·9 மில்லியன். ஆண்டுக்கு 3·3 விழுக்காடு நாட்டின் மக்கள் தொகை வளருகிறது. பெரும்பான்மையோர் நாட்டுப்புறங்களில் வாழ்கிறார்கள்; பல நூறுமக்கள் கொண்ட பல்வேறு கிராமங்களில் 78 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையை மேற்கொண்டு வாழ்கிறார்கள். தாய்லாந்தின் மிகப்பெரிய நகரம் பாங்காக்; 1970-ல் இங்கு 3·4 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 50,000-லிருந்து 100,000 வரை மக்கள் தொகையுள்ள பல்வேறு பட்டணங்களும் வளர்ந்திருக்கின்றன; இவைகளில் மிகப் பெரிய பட்டணங்கள் சியாங்மை (Chiang Mai, 87,000 மக்கள்), நாகோன் ராட்சசீமா (Nakhon Ratchasima, Khorat 79,000 மக்கள்).

தாய்லாந்தில் மக்கள் நெருக்கடி மிகுதியாக உள்ள பகுதி சாவோபிரியாப் பள்ளத்தாக்கு. தென் கிழக்கிலுள்ள முன் (Mun), சி (Chi) பள்ளத்தாக்குகள், சியாங் மை-லாம்புன் (Chiang Mai-Lampang) லாம்பங் (Lampang), சியாங் ரை (Chiang Rai), பிரே (Phrae) போன்ற வட பகுதியைச் சுற்றியுள்ள பள்ளத்தாக்குகள் ஆகியவை வேளாண்மைக்குத் தக்கனவாக உள்ளன. வேளாண்மைக்கு ஏற்றனவாக இருக்கும் நாகோன் சி தம்மராட் (Nakhon Si Thammarat), பாத்தாலுங் (Patthalung), சிங்கோரா (Singora), சோங்கிலா (Songkhla) ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், தெற்கு நோக்கிச் செல்லும் கழிமுகப் பகுதிகளிலும், மலேசியாவின் எல்லை அருகேயுள்ள தெற்குக் கரையிலுள்ள திரளான சமவெளிகளிலும் மக்கள் நெருக்கடி மிகுதியாகவுள்ளது.

தாய்லாந்திலுள்ள சிறந்த பகுதிகள்

(1) நடுச் சமவெளிகள் (Central Plains): இடைவிடாது, திரளான சமதளச் சமவெளிப் பள்ளத்தாக்குகள் உள்ள சாவோபிரியாவும், அதன் அண்டையிலுள்ள சிற்றாறுகளும்.

(2) தென்கிழக்குப் பகுதி: பொதுவாக 652 அடி கீழேயுள்ள தாழ்வான நிலமேடுகள்; மேகாங் ஆறுதான் இதன் வடிகலமாய்ப் பயன்படுகிறது. இடைவிடாது பரவியிருக்கும் மேட்டு நிலங்களும், மலைகளும் இப்பகுதியை மற்றத் தாய்லாந்துப் பகுதிகளிலிருந்து

பிரிக்கிறது. சில சமயம் இப்பகுதிகளைக் கோரட் நிலமேடுகள் (Khorat Plateau) என அழைக்கிறார்கள்.

(3) வடக்குப் பகுதி : 8,200 அடி உயரமுள்ள மலைகளுடைய இப்பகுதி சமதளப் பள்ளத்தாக்குகளால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(4) மலேயாத் தீபகற்பம் : இப்பகுதி கிராப் பூசந்தியி லிருந்து (Kra Isthmus) மலேசியா எல்லைவரை பரவியிருக்கிறது. தவிர, தாய்லாந்திற்கும் பர்மாவிற்கும் இடையேயுள்ள நீளமான சில இடங்களில் பரந்தகன்ற வடக்கும் தெற்கும் ஆக நோக்கிச் செல்லும் மலைச் சங்கிலிப் பிணைப்புகள் தெற்கு நோக்கிச் சென்று கிராப் பூசந்திவரை பரவியிருக்கின்றன. கிராப் பூசந்தி எல்லையில் சாவோ பிரியாப் பள்ளத்தாக்கு இருக்கிறது; மேலும் தெற்குத் தாய்லாந்து வளைகுடா ஓரத்தின் அருகே பரவியிருக்கும் படியடுக்குத் தளமேடுகளும் உருண்டோடுகிற சமவெளிகளும் இதன் அருகே இருக்கின்றன. மற்றொரு தனிப்பகுதி நடுச் சம வெளியின் தென்கிழக்கிலிருந்து கம்போடியா எல்லைவரை பரவி யிருக்கிறது.

ஏறத்தாழ எல்லாத் தாய்லாந்துப் பகுதிகளும் நிலவுலக வெப்பமண்டலப் பகுதியைச் சார்ந்த ஈரமான வறண்ட பருவக் காற்று மண்டலத்தில் (Wet Dry Monsoon Belt) இருக்கின்றன. கிராப் பூசந்திக்கு அப்பாற்பட்ட தெற்கிலும், கம்போடியாவிற்கு அருகே உள்ள வளைகுடாப் பகுதி ஓரமாகச் செல்லும் தென் கிழக்கிலும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் 2·4 அங்குலம் மழை பெய்கிறது. மற்றப் பகுதிகள் வறண்ட குளிர்காலப் பகுதி களாக (dry winter) இருக்கின்றன. இன்னல் தவிர்ப்புதவி, மண் இசைவளிக்கும் எல்லாத் தாய்லாந்துப் பகுதிகளிலும் மே மாதத்தி லிருந்து அக்டோபர் வரை நீடிக்கும் மழை நிலைக்காலத்தில் நெற் பயிருக்குத் தேவையான அளவு மழை பொழிகிறது. மேடான பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் ஆண்டு முழுவதும் தட்ப வெப்ப நிலை குறை வெப்பமான (warm) நிலையிலிருந்து மிகு வெப்பமான (hot) நிலையுடையதாக இருக்கிறது மிகு வெப்பமான காலத்தில், ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தட்பவெப்பநிலை 80°F; மிகக்குறை வெப்பமான காலத்தில் (டிசம்பர் அல்லது ஜனவரி) தட்பவெப்பநிலை 75·2°F.

தாய்லாந்தின் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண் மையே. 78 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருக் கிறார்கள். வேளாண்மையின் மூலம் 31 விழுக்காடு முழு மொத்த மான தாயகத்துக்குரிய விளைபொருள்கள் கிடைக்கின்றன. மொத்த

ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பில் 71 விழுக்காடு வேளாண்மை மூலம் கிடைக்கும் விளைபொருள்களின் விற்பனையிலிருந்து வருகிறது. வேளாண்மை என்றால் தாய்லாந்து முழுவதும் அரிசியைத்தான் சுட்டிக் காண்பிக்கிறது எனக் கூறலாம். அமெரிக்கக் குடியரசுடன் போட்டியிட்டுக்கொண்டு அரிசி ஏற்றுமதியில் தாய்லாந்து முதலிடம் பெற்றிருக்கிறது. உயர்ந்த ரக அரிசி தாய்லாந்தில் கிடைக்கிறது.

இரப்பரும் மக்காச் சோளமும், சணலும், மரச் சீனியும் தாய்லாந்தில் கிடைக்கின்றன. இவைகளில் பெரும்பான்மை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மற்றச் சிறந்த விளைபொருள்கள் பழம், தேங்காய், கரும்பு, புகையிலை, இலவம் பஞ்சு, பருத்தி, அவரையினம் முதலியன.

கனிப் பொருள்களும் தாய்லாந்தில் போதிய அளவில் கிடைக்கின்றன. வெள்ளீய உற்பத்தியில் உலகத்தில் மூன்றாவது படியைத் தாய்லாந்து பெற்றிருக்கிறது. மற்றக் கனிப்பொருள்கள் பொருளாதார வளர்ச்சிக்காக மிகுந்த அளவில் பயன்படுவதில்லை; இவை நீலமணிகள், கெம்புக் கற்கள், ஓரளவு இரும்புத்தாதுப் பொருள்கள் ஆகியவை ஆகும்.

தொழிற்சாலைப் பொருளாதார அமைப்பு இன்றும் குழந்தைப் பருவத்தைத்தான் எட்டிப் பிடித்திருக்கிறது. அண்மையில் இதை வளர்க்கக் கடுமையாக முயற்சியெடுக்கப்பட்டிருக்கிறது. பூகெட் (Phuket) வெள்ளீய உலோகம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஒன்றுதான் ஏற்றுமதி செய்ய உதவுகிறது. மற்ற எல்லாத் தொழிற்சாலைகளும் தாயக அங்காடிகளுக்குத்தாம் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. இவை பின்வருவன : சிமெண்டு, டயர்களும் மற்ற இரப்பர் ஆக்கப் பொருள்களும், பருத்தி, பட்டாடைகள், சணல், பேப்பர், உணவுப் பண்டங்கள், தெளிவாக்கப்பட்ட பெட்ரோலியம், கார்களை ஒழுங்கூட்டி அமைத்தல் (automobile assembly), உலோகத் தொழிற்கலை இயலுக்குரிய இயந்திரத் தொழிற்சாலைகள் ஆகியவை. இவை மிகுந்த அளவில் பாங்காக்கில் உள்ளன. இவைகளில் தாயக மக்களுடன் கூடி ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளும் மூலதனம் இட்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டியல் புகை வண்டிப் பொறுப்பினைத் தாய்லாந்து உருவாக்கியது. 1940 ஆம் ஆண்டுகளுக்குள் தாய்லாந்தின் புகைவண்டி வழிகள் வடக்கிலும், வடகிழக்கிலும், கம்போடியா வரையிலும், தெற்கிலே மலேயாத்

தீபகற்பத்தின் ஓரமாகவும் அமைக்கப்பட்டன. 1959 ஆம் ஆண்டில் பாங்காக்கிலிருந்து நாகோன் ராட்சசீமா வரை, தென் கிழக்குப் பகுதியைத் தலைநகரத்துடன் இணைக்கும் நோக்கத்துடன் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.

நடுச்சமவெளியிலுள்ள மரக்கலஞ் செல்லத்தக்க நீர்வழிகள் தாம் வாணிபத்திற்குத் தாய்லாந்தின் வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து பயன்படுத்தப்படுகின்றன. இவைகளில் 684 மைல்கள் நீளமுள்ள நீர்வழிப் பகுதிகள் கோடைக் காலத்திலும், 1,240 மைல்கள் மழைக்காலத்திலும் பயன்படுத்தப்படுகின்றன.

தாய்லாந்தின் இறக்குமதிப் பொருள்கள்

இயந்திரக் கருவிகள், ஊர்திகள், எரிபொருள்கள், மசகு பொருள்கள் (lubricants) துணிமணிகள், காலுறை-புதைமிதிகள் (foot-wear) ஆகியவை தாய்லாந்தின் இறக்குமதிப் பொருள்களாகும். பொதுவாக, இவை ஜப்பானிலிருந்தும், அமெரிக்கக் குடியரசிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன; மேற்கு ஜெர்மனியிலிருந்தும், பிரிட்டிஷ் கூட்டரசிலிருந்தும் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

7. வியட்நாம்

1954 ஆம் ஆண்டில் தெற்கு, வடக்குச் சுயேச்சை நாடுகளாகப் பிரிக்கப்பட்ட வியட்நாம், இடைவிடாமல் மனம் தளராமல் வியட்நாம் கம்யூனிஸ்டு கட்சிகள் கடுமையாகச் செய்த போரினால் 1974 ஆம் ஆண்டில் மீண்டும் இணைக்கப்பட்டு, இன்று ஒரே நாடாகக் கம்யூனிஸ்டு ஆட்சியின் கீழ் இயங்கி வருகிறது. வட வியட்நாமின் மொத்த நிலப்பரப்பு 63,344 சதுர மைல்கள்; தென் வியட்நாமின் மொத்த நிலப்பரப்பு 66,263 சதுர மைல்கள் ஆகும். வட வியட்நாமின் மொத்த மக்கள் தொகை 22·1 மில்லியன்; தென் வியட்நாமின் மொத்த மக்கள் தொகை 18·4 மில்லியன் ஆகும்.

வடக்கு, தெற்கு வியட்நாமிலுள்ள மக்கள் தொகையில் 85 விழுக்காடு வியட்நாமிய இனத்தார்கள் உள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் பள்ளப்பகுதி நாட்டுப்புறங்களிலே வாழ்கிறார்கள். தென் வியட்நாமில் மிகுதியாக உள்ள சிறுபான்மை இனத்தார் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள சீனர்கள். வியட்நாம் நாட்டின் உட்பகுதி மலைகளில் மற்ற வியட்நாமியர்களுடன் கலக்காத மலைச் சாதியினர்கள் வாழ்கிறார்கள். தெற்கில் சைகன் அன்னமிடிக்குழு

(Chaine Annamitique) மேட்டு நிலங்களிலும், மேகாங் கழி முகத்திலிருந்து 17 ஆவது இணைத்தொலைவுக் கோடுவரையிலும் (17th Parallel) பியன் ஹோவாவிலிருந்து (Bien Hoa) ஹியூ (Hue) வரையிலும் பரவி இவர்கள் வாழ்கிறார்கள். இன்று இவர்கள் தோற்றத்தில் இந்தோனேசியர்களை ஒத்திருக்கிறார்கள்; கலப்புத் திருமணங்கள் மூலம் மங்கோலிய இனத்தவரின் தோற்றங்களையும் இவர்கள் பெற்றிருக்கிறார்கள். வட வியட்நாம் மலைச்சாதியினரை மூன்று மொழியினராகப் பிரிக்கலாம் : (1) தாய்-காடைப்பிரிவினர் (Thai-Kadai); (2) சீன-திபெத்தியப் பிரிவினர் (Sino-Tibetan); (3) ஆஸ்திரோ ஆசியர்கள் (Austroasiatic). இரண்டு தன்னாட்சி யுரிமையுடைய பகுதிகளில் இவர்கள் வாழ்கிறார்கள். (1) லாவோஸ், சீன மலைகளிலுள்ள ஹாங் ஆற்றின் (Hong River) தெற்கிலும், மேற்கிலும் இருக்கும் தேபக் பகுதி (Tay Bac) ; (2) சீன நாட்டின் எல்லையிலுள்ள மலைகளின் அருகேயுள்ள ஹாங் ஆற்றின் தென் கிழக்கிலுள்ள வியட்பக் (Viet-Bac) பகுதி.

தெற்கு, வடக்கு வியட்நாமிலுள்ள பெரும்பான்மையான வியட்நாமியர்கள் வேளாண்மையிலும், மீன் பிடிக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். வியட்நாம் முழுவதும் பரவி வாழும் இவ் வியட்நாமியர்கள் ஒரே மொழியைப் பேசுகிறார்கள். கன்பூசியஸ், தாவ் ஆகியோரின் நெறிக்கோட்பாடுகளைத் (Confucianism and Taoism) தழுவிய சீனாவிலிருந்து வந்த, புத்த சமயத்தை வழி வழியாகப் பின்பற்றி வருகிறார்கள்.

இந்துப் பெருங் கடலிலிருந்து வீசும் பருவமுறைக் காற்றின் போதுதான் வியட்நாமில் மிக்க மழை பொழிகிறது. சைகான் போன்ற தென் பள்ளப் பகுதிகளில் ஆண்டுச் சராசரி மழையளவு 80 அங்குலங்கள் ஆகும்; இவைகளில் பெரும்பான்மையான அளவு ஏப்ரல் முதல் அக்டோபர் வரை பொழிகிறது; குளிர்காலம் ஓரளவு ஈரப்பசையற்றது. வியட்நாமின் சராசரித் தட்பவெப்ப நிலை 80°F முதல் 86°F வரை ஊசலாடுகிறது. வியட்நாமில் உறைபனி கிடையாது.

வட பள்ளப் பகுதிகள், ஹநாயைச் சுற்றியுள்ள பகுதிகள் பருவக்காற்றுத் தட்பவெப்ப நிலையுள்ள பகுதிகளாக இருக்கின்றன. ஆனாலும், ஈரக்கசிவுள்ள ஏறத்தாழ வெப்பமண்டல அணிமையிட மாகவும், வெப்பமுள்ள கோடைக்காலமாகவும் இருக்கின்றன. ஹநாயில் ஜனவரியில் சராசரித் தட்பவெப்ப நிலை 63°F; ஜூலை யில் சராசரித் தட்பவெப்ப நிலை 85°F; இங்கு ஓராண்டில் 72

அங்குல மழை பெய்கிறது; குளிர்காலத்தில் ஈரப் பசையற்ற காலம் கிடையாது; உறைபனி கிடையாது. உள்ளூர் மேட்டுப் பகுதிகளிலும் மிக்க அளவு மழை பெய்கிறது; ஈரப்பசையற்ற குளிர் காலம் உள்ள பகுதிகளாகவும் இருக்கின்றன; இவ்விடங்களில் கீழைப் பள்ளப் பகுதிகளில் உள்ளதைவிடத் தட்பவெப்ப நிலை ஓரளவு குறைந்ததாக இருக்கிறது.

அன்னமின் (Annam) கடற்கரைச் சமவெளிப் பகுதிகளில் குளிர்காலத்தில் தென்கிழக்குப் பருவக்காற்றும், கோடைக் காலத்தில் தென்கிழக்குத் தடக்காற்றும் (South east trade wind) வீசுகின்றன. இதன் பயனாக ஆண்டு முழுவதும் சமமாக மழைப் பொழிவு பரவியிருக்கிறது; கோடைக்கால இறுதியிலும், இலையுதிர் காலத்தின் தொடக்கத்திலும்தான் மிக்க அளவில் மழை பெய்கிறது. அன்னம் கடற்கரைப் பகுதிகளில் தட்பவெப்ப நிலை 60°F, 75°F ஆகியவற்றிற்கு இடையே இருக்கிறது.

வாழ்வுத் தேவையை நிரப்பும், பெரும்பான்மையான தாயகத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் வேளாண்மையே வியட்நாமின் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைந்திருக்கிறது. வியட்நாமின் முக்கிய விளைபொருள் அரிசி ஆகும்; 80 விழுக்காடு பயிரிடும் நிலங்கள் நெல் விளைச்சலுக்காகத்தான் பயன்படுத்தப் படுகின்றன; பெரும்பான்மையான கூலியாள்கள் இதற்காகத்தான் பயன்படுத்தப்படுகிறார்கள். ஹாங் ஆற்றின் கழிமுகத்திலும், மேகாங் ஆற்றின் கழிமுகத்திலும், அன்னமின் கடற்கரைப் பள்ளப் பகுதிகளிலும், உள்ளூர் மேட்டு நிலச் சரிவுகளிலும் அரிசி மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. அரிசியும், மீனுமே முக்கியமான உணவுப் பொருள்கள்.

வட வியட்நாம் மிக்க மலைத் தொடர்களும் குன்றுகளும் உள்ள நாடு. நாட்டின் பாதிப்பகுதி காடுகளால் தழுவப்பட்டிருக்கிறது. ஹாங் என்றால் சிவப்பு நிறம் என்று பொருள். ஹாங் ஆறு உண்மையிலே செந்நிறமுடைய ஆறு; ஏறத்தாழத் தக்காளிச் சாற்றின் நிறமுடையதாக இருக்கிறது. ஹாங் ஆற்றிலிருந்தும் அதன் உப ஆறுகளிலிருந்தும் வரும் வண்டல் மண்களால் உருவாக்கப்பட்ட டொங்கின் பள்ளப் பகுதிகள் சமதள நிலங்களுடைய பகுதிகள் ஆகும். கடல் மட்டத்திலிருந்து சில அடிகளே மேலான கழிமுகப் பகுதிதான் கீழைப் பள்ளப் பகுதிகளுக்குள்ளே இருக்கும் செழிப்பான பாகம்; இவை எல்லாம் பயிரிடப்படக் கூடிய நிலங்கள்.

வடவியட்நாமின் பெரும்பான்மையான மக்கள் பயிரிடுபவர்களாய் டொங்கின் பள்ளப்பகுதிகளில் வாழ்கிறார்கள். பயிரிடப்படும் நிலங்களில் 80 விழுக்காட்டு நிலங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. தவிரக் கரும்பும், பருத்தியும், தேயிலையும், சோளவகைகளும், சர்க்கரைவள்ளிக்கிழங்கும், பல்வேறு காய்கறிகளும் பயிரிடப் படுகின்றன.

தென்கிழக்காசியாவிலே மிகச் செல்வாக்குள்ள கனிப் பொருள்கள் உள்ள நாடு வடவியட்நாம். இது தொழிற்சாலைகள் நிறுவி வளர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கின்றது. உதாரணமாக, வடக்கேயுள்ள குயாங் யென் (Quang yen) ஹான் கய் (Han gai) ஆகிய பகுதிகளில் உயர்ந்த நிலக்கரிகள் கிடைக்கின்றன. தவிர, தாய் என்குயினில் (Thai Nguyen) இரும்புத் தாதுப்பொருள்களும் கெய்பாவுத் தீவில் (Cai Bau) வெள்ளீயமும் இரும்புக் குருமரு ஈருயிரகையும் (Chromite) கிடைக்கின்றன. சிறப்பாக லாவோ கெய்யில் (Lao cai) எரியகி (Phos phates) கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. தவிர சிறிதளவு பொன், வெள்ளி, நிக்கல், டங்ஸ்டன், ஈயம், மங்கனம், துத்தநாகம், அஞ்சனக்கல் (Antimong), அலுமினியம் அகப்படும் இடத்தில் உள்ள மண்வகை (Bauxite), வெண்ணிற உலோகவகை (Colclt), விண்மம் (Uranium) ஆகியவை கிடைக்கின்றன. ஓர் இரும்பு எஃகுத் தொழிற்சாலை தாய் என்குயனிலுள்ளது (Thai nghyen) 1965ஆம் ஆண்டில் வடவியட்நாமில் 1,200 தொழிற்சாலைகள் இருந்தன.

வடவியட்நாமை விடத் தென்வியட்நாம் தேவைக்கு மேலாக அரிசி உற்பத்தி செய்ததால், இது ஒரு செல்வாக்குள்ள நாடாகக் கருதப்பட்டுவந்தது. ஆனால், வியட்நாம்போரினால் ஏற்பட்ட அழிவினால் 1960 ஆம் ஆண்டில் தென்வியட்நாம் அரிசி இறக்குமதி செய்து கொண்டிருந்தது. மேகாங் ஆற்றிலுள்ள பெரிய செழிப்புள்ள கழிமுகப் பகுதிகளிலும், சைகானைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மொத்தப் பயிரிடும் நிலங்களில் பத்தில் ஒன்பது பங்குப் பகுதிகளில் நெல் பயிரிடப்படுகிறது.

தென்வியட்நாமில் அரிசிக்கு அடுத்ததாக மிகுதியாக விளையும் பொருள் இரப்பர்; 80 விழுக்காட்டு இரப்பர் ஏற்றுமதி செய்யப் படுகிறது. மற்ற விளைபொருள்கள் தேயிலை, புகையிலை, காப்பி, மரவகைகள், இலவங்கப்பட்டை, புழுக்கூட்டிலிருந்து எடுத்த மேனியாக உருளையிற் சுற்றப்பட்ட பட்டு (raw silk), காய்கறி வகைகள், கரும்பு, வேர்க்கடலை, சோளம், கொப்பரை முதலியன ஆகும். தென்வியட்நாமில் கனிப்பொருள்கள் மிகுதியாகக் கிடையா. தா நங்கிற்கு (Da Nang) அருகே ஒரு சிறிய நிலக்கரிச்

சுரங்கம் உள்ளது. பெரும்பான்மையான ஆக்கத்தொழில் தொழிற்சாலைகள் சைகான், சோலோன் (Cholon) ஆகிய பகுதிகளில் இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் முக்கியமானவை உணவுப் பொருள்கள் பதனஞ் செய்யும் தொழிற்சாலைகள், பருத்தி ஆடைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் காகிதம், மரப்பொருள், இரப்பர் டயர்கள், புகையிலை, சிமெண்டு, கண்ணாடி, பானை வகைகள், கோணிப்பைகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகும்.

8. லாவோஸ்

அண்மையிலே லாவோசும் ஒரு போர்க்களமாய் விளங்கியதால் அது தென்கிழக்காசியாவில் வியட்நாமிற்கு அருகே இருக்கிறது எனப் பலருக்குத் தெரியவந்தது; ஆனால் மிகுசிலரே அந்நாட்டில் யார் வாழ்கிறார்கள்? அந்நாட்டு மக்கள் எம்முறைகளைப் பயன் படுத்தித் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துகிறார்கள்? அந்நாடு எவ்வகையான நாடு என்ற விவரங்களை அறிவார்கள்.

கி.பி. 1949ஆம் ஆண்டில் பெயரளவில் லாவோசிற்குப் பிரெஞ்சு ஆட்சியிடமிருந்து விடுதலை கிடைத்தது. கி.பி. 1954ஆம் ஆண்டில் முழுமையான உரிமை அடைந்தது.

திபெத்தில் பிறந்து மாபெரும் ஆறாக உருவாகி, 2,600 மைல்கள் தூரம் ஓடிச்சென்று சைகானின் (Saigon) தெற்கேயுள்ள தென் சீனக்கடலுடன் (Soutchina Sea) கலக்கும் மேகாங் ஆற்றின் நாடே லாவோஸ். தென்கிழக்கு முனையைத்தவிர, இந்நாடு முழுவதும் நீள்வட்டப் பள்ளத்தாக்கில் பொருந்தியிருக்கிறது. ஏறத்தாழ வளர்ச்சியடைந்த எல்லாப் பகுதிகளும் மேகாங் ஆற்றின் அருகேதான் இருக்கின்றன.

பெரும்பாலும் வண்டலான லாவோசின் பள்ளப்பகுதி நிலங்கள் மேகாங், அதன் முக்கியக் கிளையாறுகள் ஆகியவற்றின் அருகிலும் தெற்கிலே பரந்து பாக்சே (Pakse), சம்பாஸக் (Champassak), சவன்னகெட் (Savannaknet), தாக்கஹெக் (Thakhek), பாக்சன் (Paksane) ஆகியவற்றின் அருகிலும் இருக்கின்றன. தலைநகரம் வியன்சின்னைச் சுற்றி, என்கும்மின் (Ngum) கீழை இடையரு நீள் எல்லைவழியாகச் செல்லும் முக்கிய மான ஒரு பகுதியாக இருக்கிறது. இதன் வடக்கே ஓர் ஆழ்தடப் பள்ளத்தாக்கு வழியாக மேகாங் ஆறு ஓடுகிறது.

லாவோசின் மலைகள் இச்சமவெளிகளைச் சுற்றித் திடீரென்று எழும்புகின்றன. இம்மலைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை (1) நீளச்சுருள் மடிப்புள்ள மலைத்தொடர்கள், (2) கார்ச்டிக் மலை அடுக்குகள் (Karstic ranges), (3) எரிமலைப் பாறையினாலான வழிந்தோடும் நிலமேடுகள் (Basaltic outflow plateaus) ஆகும். 18^0 வடக்குத் தெற்கில் முக்கியமான சுருள்மடிப்புள்ள மலைத் தொடர்கள் வடமேற்கு—தென்கிழக்காக உள்ளன. சில பெரிய இடைவெளிகளைத் தவிர இவை லாவோஸ்—வியட்நாம் எல்லை வழியாக இடையீடின்றி இருக்கின்றன. வடக்கில் இவை குழம்பிய போக்கில் குறுக்கு நெடுக்காக உள்ளன. மிக்க அளவில் தென் கிழக்கு—தென்மேற்கில் இவைகளை நோக்கலாம். வலிமை வாய்ந்த மலைச்சாதியர்களைத் தவிர மற்றவர்கள் வந்து குடியேறுவதை இக்கரடுமுரடான திணை நிலங்கள் தடைசெய்கின்றன. கார்ச்டிக் மலைத்தொடர்கள் மேகாங்கிற்கு இணையாக ஓடித் தென்கிழக்குத் திசையிலே அலைபாய்ந்து வியட்நாமிற்குள் செல்கிறது. சாம்பல் வண்ண ஆடை அணிந்த இம்மலைத் தொடர்கள் செங்குத்தான பாறைகள் அடங்கியனவாகவும், சமதளப் பள்ளத்தாக்குகள் உள்ளனவாகவும், தேவைப்பொருள்கள் அமைக்கப்படாதன வாகவும் இருப்பதால் மக்கள்வந்து குடியேறுவதைத் தடுக்கின்றன.

தெற்கிலுள்ள போலோவென்ஸ் மேட்டு நிலங்களும் (Bolovens Plateau) கிழக்கில் இதைவிடச் சிறியனவாக உள்ள மேட்டு நிலங்களும் நெருக்கமாக வரிசைப்படுத்தப் பெற்ற எரிமலைப் பாறையினாலான கசிவுகளினால் பக்கவலிமை பெறுகின்றன. இம்மேட்டு நிலங்களின் உச்சியில் (மிக்க உயரம் 4,800 அடிகள்) உள்ளமைவு சமதளமாய் அல்லது உருண்டோடுகின்றதாயிருப் பதாலும், இதோடு செழிப்புள்ள எரிமலைக்குரிய மண்ணும், போதிய அளவு மழைப் பொழிவும், போதிய தட்பவெப்ப நிலையும் ஒருசேரக் கலக்கப்பட்டிருப்பதாலும் பலவகை வேளாண்மைக்கு ஏற்ற சூழ்நிலையோடு அமைந்திருக்கிறது.

லாவோசின் தட்ப வெப்பம் எல்லாப் பகுதிகளிலும் வெப்ப மண்டலப் பகுதிக்கே உரியதாக இருக்கிறது. நன்கு வரையறைப் பட்ட பருவகாலங்களைப் பார்க்கலாம்: (1) மழைநிலை [மே அல்லது ஜூனிலிருந்து அக்டோபர்வரை]; (2) குளிர் காலம் [நவம்பரி லிருந்து பிப்ரவரி வரை]; (3) கோடைக்காலம் [மார்ச்சிலிருந்து மே வரை]. நாடுமுழுவதும் அரிசி உற்பத்திக்குத் தேவையான அளவு மழைப் பொழிவு இருக்கிறது. கோடைக்காலத்தில் தலை நகரம் வியன்சியனில் தட்பவெப்பம் பலவாரங்கள் 100^0Fயைத் தொடுகிறது. ஆனால், ஜனவரிமாதத்தில் 40^0F ஆகக் குறைகிறது.

லாவோஸ் பூமிக்கடியில் எவ்வகையான கனிப்பொருள்கள் இருக்கின்றன என இதுவரை சரியாகத் தெரியவில்லை. வெள்ளீயம் தோண்டி எடுக்கப்படுகிறது. 1969ஆம் ஆண்டில் 1,262 டன் வெள்ளீயம் கிடைத்தது. கனிக்கற்கள் (Gypsum: மருத்துவர்கள் பயன்படுத்தும் கட்டுக்கரைக்குரிய மூலக்கனிப் பொருள் வகை), உப்பு, சுண்ணும்புக் கற்பாறை வகை (Limestone: ஆகியவை தோண்டியெடுக்கப்படுகின்றன. அண்மையில் இரும்புத் தாதுப் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிறுபான்மையினருக்கே மின்சாரவசதி அளிக்கப்பட்டிருக்கிறது. வியன்சியன் என்னும் இடத்திலுள்ள என்கும் ஆற்றின் (Ngum River) மேல் ஓர் அணைக்கட்டும், நீர்மின் ஆற்றலால் இயக்கப் படுகிற தொழிற்சாலையும் (Hydroclectric plant) கி. பி. 1973ஆம் ஆண்டில் கட்டப்பட்டன.

அரிசிதான் லாவோசின் பொருளாதார அமைப்பு எனக் கூறலாம். அன்றுட உணவுக்கு மீன்களும், அரிசியும்தான் இன்றி யமையாதவை. அரிசி ஆலைத்தொழிற்சாலைதான் நாட்டின் முதன்மையான சிறப்பான தொழிற்சாலை. வேளாளர்களும், அவர்கள் குடும்பங்களும் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 80 முதல் 85 விழுக்காடாகும். இதில் 60 விழுக்காட்டு மக்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை உபயோகிக்கிருர் கள். லாவோசின் சூழ்நிலையில் அது அரிசியை ஏற்றுமதி செய்ய வேண்டும். ஆனுல் அரிசி இறக்குமதி செய்கிறது.

சர்க்கரைவள்ளிக்கிழங்கும், மக்காச்சோளமும், கரடு முர டான வடமேட்டு நிலங்களில் பயிரிடப்படுகின்றன. இங்கு வாழும் மியோ (Meo), யாவோ (Yao) இனத்தார்களுக்கு இவை தாம் அன்றுட உணவு. அரிசி அவ்வளவு தேவையில்லை. காய் கறிகள், வாழை, அன்னுசி, மாம்பழம் போன்ற சில பழவகைகள், காப்பிச்செடி, புகையிலை, பருத்திச்செடி, ஏலக்காய் முதலியன பயிரிடப்படுகின்றன.

இக்கால முறையில் அமைக்கப்பட்ட தொழிற்சாலை ஒன்றுகூட லாவோசிடம் கிடையாது. ஏற்றுமதி செய்ய ஒரு பொருளும் அங் குக் கிடையாது. ஏற்றுமதியாகும் பொருள்களின் படிவரிசை பின வருமாறு: வெள்ளீயம், காடுகளில் கிடைக்கும் பொருள்கள், காப்பி. கி. பி. 1969ஆம் ஆண்டில் ஏற்றுமதி மூலம் மொத்தம் 2 மில்லியன் டாலர்கள்தாம் கிடைத்தன. லாவோசின் ஏற்றுமதிப் பொருள்களை வாங்கும் முதன்மையான நாடுகள் மலேசியா, சிங்கப்பூர் ஆகியன.

தவிரத் தாய்லாந்து, ஆங்காங்கு, பிரான்சு, தென்வியட்நாம் முதலிய நாடுகளும் லாவோசின் ஏற்றுமதிப் பொருள்களை வாங்குகின்றன.

லாவோசின் சிறப்பான இறக்குமதிப் பொருள்கள் பெட்ரோலியம் உட்படக் கனிப்பொருள்கள், ஆடைகள், இயந்திரங்கள், ஊர்திகள் பதனஞ்செய்யப்பட்ட உணவுவகைகள் போன்ற ஆக்கத்தொழில் பொருள்கள், வேதியியலில் பயன்படுத்தப்படும் பொருள்கள் (Chemicals), உலோகங்கள், அதைச்சார்ந்த பொருள்கள், இறைச்சி, காய்கறிகள் முதலியனவாம். பொதுவாக உணவுப் பொருள்கள் தாய்லாந்திலிருந்தும் பெட்ரோலியம் இந்தோனேசியாவிலிருந்தும், ஆக்கத்தொழில் பொருள்கள் அமெரிக்கக் குடியரசு, ஜப்பான், பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

உலகத்திலே இன்றைய போக்குவரத்து வசதிகள் அல்லாத சில நாடுகளில் லாவோசையும் சேர்க்கவேண்டும். புகை வண்டி வழிகள் அல்லாத நாடு லாவோஸ். மேகாங் ஆறுமூலம் ஆற்றுப் போக்கு வரத்துகள் செல்வதைக் காணலாம். மற்றப்படி எருதுகள் இழுக்கும் வண்டிகள், ஜீப் (Jeep) அல்லது லாரிகள், யானைகள் முதலியன போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

கி. பி. 1971ஆம் ஆண்டில் ஏறத்தாழ 3 மில்லியன் மக்கள் லாவோசில் வாழ்கிறார்கள் எனக் கூறப்படுகிறது; இவர்களில் 1·2 மில்லியன் மக்கள் நாட்டுப்புறங்களில் வாழ்கிறார்கள். இவர்களில் 20 விழுக்காட்டு மக்கள் படித்தவர்கள். கி. பி. 1969ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி நகரங்களில் வாழும் மக்கள் தொகை பின்வருமாறு : வியன்சியன் 1,32,000; லுவாங்பிரபாங் (Luang Prabong) 23,000; சவன்னகெட் (Savannakhet) 36,000; பக்சே (Pakse) 35,000 ஆகும். இந்நகரங்களெல்லாம் மாநில அரசுகளின் தலைநகரங்கள். இவை மிதமான வாணிப இடங்கள் என்று கூறலாம். ஆனால் இவை தொழிற்சாலைகள் அற்றவை.

மேகாங் வழியாகச் செல்லும் பள்ளப்பகுதி நிலங்களில் லாவோப் (Lao) பிரிவினர்களும், தாய்ப் பிரிவினர்களும் (Thai groups) சேர்ந்து மொத்தமாக 2 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இரண்டாவது முதன்மைப் பிரிவினர்கள் கா (Kha) அல்லது அடிமைகள் என அழைக்கப்படுகிறார்கள். இம்மேட்டு நிலமக்களின் மொத்த மக்கள் தொகை 3,80,000. மூன்றாவது முக்கியப் பிரிவினர்கள் மியோ, யாவோ (Yao) ஆகியவர்கள்.

பொதுவாக 3,600 அடிக்குமேலேயுள்ள மலை உச்சிகளிலும், உயர்வான சரிவு நிலப்பகுதிகளிலும் இவர்கள் வாழ்கிறார்கள்.

லாவோஸ் நகரப்பகுதிகளில் பொதுவாகச் சீன வணிகர்களையும் சீன அரிசி ஆக்கத் தொழிற்சாலைகளின் முதலாளிகளையும் பார்க்கலாம். சீனர்களின் மொத்த மக்கள் தொகை 60,000. 30,000 வியட்நாமியர்களும் லாவோசில் வாழ்கிறார்கள்.

பொதுவாக லாவோஸ் மக்களின் முழுக்கவனத்தையும் ஈர்ப்பன புத்தசமய வாட்கள் (Wats).

9. கம்போடியா

ஒழுங்குமுறை யில்லாத ஏந்து தட்டுப் (Saucer) போல வடிவம் கொண்ட 70,000 சதுர மைல்களுடைய கம்போடியா அடர்ந்த காட்டுப் பகுதிகளையும், வடக்கிலும், தென்மேற்கிலும், கிழக்கிலும், மலைப்பகுதிகளையும் கொண்ட நாடாக இருக்கிறது. இப் பகுதிகளில் பல்வேறு நாகரிகத் தொடக்க காலச் சமுதாயங்கள் சிதறலாகப் பரவியிருக்கின்றன. தென் கிழக்கில் பெரிதளவான மேகாங் ஆறு தென்திசை வழியாக லாவோசைத் தாண்டி ஓடிக் கம்போடியாவின் கிழக்குப் பகுதி வழியாகச் சென்று, பெரிய தொன்லீசாப் ஏரி (Tonle Sap Lake) உட்பட நடுப்பள்ளப் பகுதி நிலத்தில் வடிந்து, தென் கிழக்கு வழியாகத் தாவிப் பாய்ந்து தென் வியட்நாமிற்குள் நுழைந்து, தென்சீனக் கடலைத் தாண்டிச் செல்கிறது. 'கம்போடியாவின் ஏந்து தட்டின்' நான்கில் மூன்று பகுதியில் நடுப் பள்ளப் பகுதிகளே அமைந்திருக்கின்றன. மேடான ஆற்றங்கரைதான் மிக உயர் நிலையிலுள்ளது. மேகாங் ஆறும், தொன்லீசாப் ஏரியும் வெள்ளப் பெருக்குடன் ஓடும் மழைக்காலத்தில் வளமார்ந்த புதிய வண்டல்கள் வடிக்கப்பட்டு நிலையாகச் சமவெளியில் தங்குவதால் வேளாண்மைக்குரிய நிலங்களுக்குப் புத்துணர்ச்சியூட்டுகின்றன; இதனால் மேலும் மிக்க அளவில் மீன்கள் கிடைக்கின்றன. ஏரி, ஆறு, அல்லது கால்வாய் மூலமும் பெரும்பான்மையான பள்ளப் பகுதிகளில் நீரோடைப் போக்குவரத்து மூலமும் எளிதில் செல்ல முடிகிறது.

மரம் அருகிய வெப்ப மண்டலச் சமதளப் புல்வெளியைச் சார்ந்ததாகவும் (Tropical Savanna Climate), கோடைக் காலத்தில் மழை பொழிவதாகவும், குளிர் காலத்தில் நீர்ப்பசையற்ற தாகவும் கம்போடியா இருப்பதால் பொதுவாகத் தட்பவெப்பநிலை 75°F முதல் 85°F வரை ஊசலாடுகிறது. ஆனால் தென்மேற்கு, கிழக்கு மலைச்சங்கிலிப் பிணைப்புகளும், வியட்நாமின் மேட்டு நிலங்

களும், தாய்லாந்து வளைகுடாவிலிருந்தும், தென்சீனக் கடலிலிருந்தும் வீசும் நீர் நயப்புள்ள காற்றைத் தடுத்துவிடுவதால் நடுப் பள்ளப் பகுதிகளில் குறைந்த அளவில்தான் மழை பெய்கிறது.

காடுகள் கம்போடியாவின் பாதிப் பகுதிகளை நிரப்பியிருக்கின்றன. இன்று கம்போடியாவிலுள்ள 44 மில்லியன் நிலங்களில் 6·5 மில்லியன் ஏக்கர் நிலங்கள்தாம் பயிரிடப் பயன்படுத்தப் படுகின்றன.

கம்போடியாவில் 7 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள்; ஆண்டிற்கு 2·2 விழுக்காடு வீதம் மக்கள் தொகை மிகுகின்றது. கிராமங்களில் மரக்கலஞ் செல்லத்தக்க நீர்வழிகளின் அருகில் பெரும்பான்மையானமக்கள் வாழ்கிறார்கள். பொதுவாக மக்கள் குடியேறியிருக்கும் இடங்கள் கிராடியிலிருந்து (Kratiu) மேகாங் ஆற்றுச் சமவெளிவரை; தொன்லீசாப், பசாக் ஆறுகளின் (Bassac rivers) சமவெளிகள்; தாய்லாந்து வளைகுடா வழியாக அமைந்திருக்கும் பள்ளப் பகுதிகள் ஆகியவை. இக்குடியேற்றப் பகுதிகளைச் சம்கர் கிராமங்கள் (Chamkar Villages) என அழைக்கிறார்கள். பெரும்பாலான மாநிலத் தலைநகரங்களில் ஆற்றங்கரைகளைக் காணலாம். வடக்கிலிருந்து வரும் மேகாங் ஆறும், வடமேற்கிலிருந்து பாய்ந்துவரும் தொன்லீசாப் ஆறும் கூடும் இடத்தில் கம்போடியாவின் தலைநகரமான நாம்பென் (Phnom Penn) அமைந்திருக்கிறது. இவ்விரு ஆறுகளும் கூடுமுன் பிரிந்து நீரோட்டத் திசையில் இணையாக ஓடிக் கிழக்கு மேகாங் ஆறாகவும், மேற்கு பசாக் ஆறாகவும் மாறிச் செல்கின்றன.

தலைநகரம் நாம்பென்னில்தான் மக்கள் நெருக்கடி மிகுதியாக இருக்கிறது. கம்போடிய நகரங்களில் 13 விழுக்காட்டுக்குக் குறைவான மக்கள்தாம் வாழ்கிறார்கள். இவர்களில் 7,00,000 மக்கள், அதாவது நான்கில் மூன்று பங்கினர் நாம்பென்னைச் சுற்றியுள்ள 18 சதுர மைல்களில் வாழ்கிறார்கள் எனக் கி. பி. 1970ஆம் ஆண்டின் புள்ளி விவரம் கூறுகிறது. இந்தோ-சீனப் போரினால் கம்போடியாவிற்குள் நுழையும் அகதிகள் மிகுந்ததால் நாம்பென்னின் மக்கள் தொகை ஒரு மில்லியனுக்கு மேல் உயர்ந்தது. முன்பு சிகனௌக் வில்லி (Sihanouk Villee) என அழைக்கப்பட்ட கொம்போங்சேமின் (Kompong Som) மக்கள் தொகை 40,000 என்றும், பட்டம்பாங்கின் (Battambang) மக்கள் தொகை 46,000 என்றும், கம்பொங் சாமின் (Kampang Cham) மக்கள் தொகை 33,000 என்றும், புர்சட்டின் (Purset) மக்கள் தொகை 16,000 என்றும், கொம்போங் சாநங்கின் (Kompong Chhnang) மக்கள்

தொகை 16,000 என்றும், கம்போட்டின் (Kampot) மக்கள் தொகை 15,000 என்றும் குறிக்கப்பெற்றுள்ளன.

கம்போடிய மக்களில் 85 விழுக்காடு கெம்மர்கள் (Khemers). இவர்கள் தெரவேதா புத்த சமயத்தைப் (Theraveda Buddhism) பின்பற்றுகிறார்கள். அண்மைக் காலத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி வருவதற்குமுன் இதுவே அரசாங்கச் சமயமாக விளங்கியது. ஒவ்வொரு பத்துக் கம்போடியா மக்களில் 9 பேர் கெம்மர் (Khemer) மொழியைப் பேசுகிறார்கள். பெரும்பான்மையாக இருக்கும் சிறு பான்மையுடைய இனக் குழுவினர்கள் 425,000 சீனர்களும், 300,000-லிருந்து 400,000 வரையுள்ள வியட்நாமியர்களும் ஆவார்கள். கம்போடியாவில் குடியேறியிருக்கிற பெரும்பான்மை யான வியட்நாமியர்கள் கத்தோலிக்க சமயக் கிறித்தவர்கள். மிகுந்த அளவில் நாம்பென்னிலும், கம்போடியா நகரங்களிலும் சீனர்கள் வாழ்கிறார்கள். பட்டம்பாங் மாகாணத்தில் பல ஆயிரம் சீன இனக் குடியானவர்கள் வாழ்கிறார்கள் கம்போட்டிலும், தென் கிழக்குப் பட்டினங்களிலும் கூட இவர்கள் வாழ்கிறார்கள். கம்போடி யர்களுடன் ஒரு சேரக் கலக்கப் பெரும்பான்மையான சீனர்கள் முயலுகிறார்கள். இவர்கள் கம்போடியா மொழியில் தேர்ச்சி பெற் றிருக்கிறார்கள்; கெம்மர்களின் புத்த சமயத்தைப் பின்பற்றுகிறார்கள்; கம்போடியர்களுடன் திருமணம் செய்துகொள்கிறார்கள். தலைநகரம் நாம்பென்னின் மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதி சீனர்கள்; மற்றொரு பகுதி கம்போடியர்கள்; இறுதிப் பகுதியினர் வியட்நாமியர் கள். கம்போடியாவின் தென்கிழக்கு மாகாணங்களில் பல்வேறு நாகரிகமற்ற 40,000 மக்கள் அடங்கிய இனக்குழுக்களையும் காணலாம். இவர்களைக் 'கெம்மர் லோயு' (Khemer Loeu) எனக் கம்போடிய அதிகாரிகள் அழைக்கிறார்கள். 'கெம்மர் லோயு' என்றால் 'மேட்டுநிலக் கம்போடியர்கள்' எனப் பொருள்.

வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் கம்போடியர் 70 விழுக் காட்டினராவர். அரிசி, மக்காச்சோளம், சோயா மொச்சை, பருத்திச்செடி, புகையிலை, கரும்பு முதலியவைதாம் கம்போடியா வில் சிறப்பாகப் பயிரிடப்படும் பொருள்கள். இன்று ஆண்டிற்கு 3·25 மில்லியன் டன்கள் அரிசி உற்பத்தி செய்யப்படுகின்றது. இதில் பத்தில் ஒரு பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இயற்கை இரப்பரும் பயிரிடப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் 10,000 டன் இரப்பர் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது; ஆனால் வியட்நாம் போரின்போது அமெரிக்கா, தென்வியட்நாம் ஆகிய நாடுகளின் விமானப்படைத் தாக்குதலினால் இவைகளில் பெரும்பான்மையான பகுதி அழிந்தது. தவிரக் காப்பியும், தேயிலையும், சிறுமிளகும்

பயிரிடப்படுகின்றன. அண்மையில் கம்யூனிஸ்டு ஆட்சி வருமுன் பெரும்பான்மையான கம்போடியர்கள் தங்கள் நிலங்களின் சொந்தக்காரர்களாயிருந்தார்கள்; பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் சைக்கிளைச் சொந்தமாக வைத்திருக்கிறார்கள்.

கம்போடியாவின் முக்கிய உணவுப் பொருள்கள் அரிசி, மீன் முதலியன. ஒவ்வோராண்டும் 1,60,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. பெரும்பான்மையான உழவர்கள் மீன் பிடிக்கும் தொழிலையும் செய்கிறார்கள்.

ஓர் ஆண்டிற்கு 3,85,000 கனசதுர வடிவான மரக்கட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன; இவற்றில் மூன்றில் இரண்டு பகுதிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

10. பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் உருவாகியதைப்பற்றி ஒரு பழங்காலப் புராணப் பிலிப்பைன்ஸ் கதையிருக்கிறது. ஒரு காலத்தில் தண்ணீரும் ஆகாயமும், ஒரு பறவையும்தாம் இருந்தன. பறந்து சோர்வடைந்த பறவை, இளைப்பாறுவதற்கு ஓர் இடத்தைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் கடலுக்கும் ஆகாயத்திற்கும் இடையே சண்டை மூட்டியது. சினமுள்ள கடல் அலைகடலை உயரத் தூக்கி ஆகாயத்தைத் தாக்கியது. இதனால் சினமடைந்த ஆகாயம் கடலை அடக்கும் நோக்கத்துடன் பெரும் மலைகளைச் தூக்கி எறிந்தது. இம்மலைகளே உலகத்தில் முதன் முதலில் தோன்றிய நிலப்பகுதிகள். இம்மலைகள்தாம் உலகத்தில் முதலில் தோன்றிய நிலப்பகுதியான பிலிப்பைன்ஸ் நாடு. இவ்விடத்தில் அப்பறவை இறுதியாக இறங்கி இளைப்பாறியது.

(7,000 தீவுகளுக்குமேல் அடங்கியுள்ள நாடு பிலிப்பைன்ஸ். இதில் 740 தீவுகளில் மக்கள் வாழ்கின்றனர். இத்தீவுகள் மொத்தம் 115,600 சதுர மைல்கள் கொண்ட நிலப்பரப்பு உடையன ஆகும். பெரிய தீவுகள் எரிமலைப் பகுதிகளாக இருக்கின்றன. மொத்தம் 65 விழுக்காடு மலைகளும், மேட்டு நிலங்களுமே உள்ளன.)

பிலிப்பைன்ஸ் தீவுகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:

(1) லூஜானும் (Luzon), அதைச் சுற்றியுள்ள தீவுகளும்

(2) பாலவன் (Palawan), மிண்டோரா (Mindow) என்று அழைக்கப்படும் பிலிப்பைன்ஸின் நடுப்பகுதி உட்பட உள்ள விசயாஸ் (Visayas) பகுதி

(3) மிண்டானோ (Mindano), சுலு (Sulu) உட்பட உள்ள தெற்கு பிலிப்பைன்ஸ். நாட்டின் மொத்த நிலப்பகுதியில் 37 விழுக்காடு லூஜானிலும், 29 விழுக்காடு விசயாஸிலும், 34 விழுக் காடு மிண்டானோவிலும் இருக்கின்றன.

நில உலக வெப்ப மண்டலப் பகுதியாக இருப்பதாலும், தீவுக் கூட்டத்தின் இயல்புடையதாக இருப்பதாலும் (archipelagic character), பொதுவாக, வெதுவெதுப்பான, வேறுபாடற்ற தட்ப வெப்ப நிலையைக் காணலாம். ஆண்டு முழுவதும் மழைப்பொழிவு தேவையான அளவு பரவியிருக்கிறது; 100°F மேலுள்ள தட்ப வெப்ப நிலை அரிது; ஆண்டில் சராசரியாக 100 அங்குலம் மழை பெய்கிறது. தென்மேற்குப் பருவக் காற்று வீசும் காலத்தில் பிலிப் பைன்ஸ் முழுவதிலும் தேவையான அளவு நீர் நயப்பு இருக்கிறது. குளிர்காலத்தில் தென்கிழக்குப் பருவக்காற்று வீசும் காலத்தில்கூட கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலும், பெரும்பான்மையான தெற்குத் தீவுகளிலும் மிகுதியாகப் மழைப்பொழிவிருக்கிறது.

பொதுவாகச் செழிப்பான நிலப்பகுதிகளடங்கிய நாடு பிலிப் பைன்ஸ். மிக்க வளமுள்ள பகுதிகள் லூஜானின் மத்திய சம வெளிப் பகுதிகள், காகயன் பள்ளத்தாக்கு (Cagayan Valley), மேற்கு நீக்ரோஸ் (Western Negrus) முதலியன.

25,000 ஆண்டுகளுக்குமுன் இன்றைய மலேயபாலினீசிய (Malayo-Polynesian) நிலப்பகுதியிலுள்ள குற்றுருவ நீகிரோ இனத்தவர்களின் (Negritos) முன்னோர்கள் லூஜானின் (Luzon) மேட்டுப் பகுதிகளிலும், மற்றப் பெரிய தீவுகளிலும் வாழ்ந்து வந் தார்கள் என நம்பப்படுகிறது. முதன் முதலாகக் கிழக்குச் சீனப் பகுதிகளிலிருந்தும், பார்மோசாவிலிருந்தும் (Formosa) தான் முதன் முதலாக 4,000 ஆண்டுகளுக்குமுன் அயல் நாட்டினர் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு வந்து குடியேறியதாக நம்பப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் மீண்டும் அதிகவளவில் சீனர் கள் வந்தார்கள். கி.மு. 300–200 ஆம் ஆண்டுகளில் மலேய் மக்கள் (இந்தோனேசியர்கள்) பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு வந்து குடியேறினர். இவர்களே பழங்காலப் பிலிப்பீனியர்கள் எனக் கருதப்படுகின்றனர். பல தனி முறைக்கூட்டுக் குழுக்களை அமைத்து (Separate communities) இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இக் கூட்டுக்குழுக்களைப் பாரன்கேக்கள் (Parangays) என அழைத் தார்கள். பாரன்கே, அவர்கள் பயன்படுத்திய நாகரிகமில்லாத வீடுகளின் பெயர். ஒவ்வொரு பாரன்கேயிலும், பதினாறும் நூற் றூண்டில் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு வந்தபோது, 50 முதல் 100 குடும்பங்கள் வரை இருந்தன. சமுதாயத்தில்

மூன்று பிரிவினர்கள் இருந்தார்கள். அவர்கள் அடிமை அல்லது பண்ணையாள் (Serf), விடுதலையளிக்கப்பட்ட அடிமை (freeman), உயர்குடி மகன் (noble) என்போர் ஆவார்கள்.

பிலிப்பீனியர்கள் மலேய் இனத்தார்கள் என்றாலும் பல்வேறு மொழிகளைப் பேசி வந்தார்கள். இன்று ஆங்கிலம் இடையீட்டுப் பொதுமொழியாக (lingua franca) பயன்படுத்தப்படுகிறது; 40 விழுக்காட்டு மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். ஒரு பொதுமொழியை உருவாக்கும் நோக்கத்துடன் தகலோக் (Tagalog) மொழிக்கு அரசாங்கம் ஆதரவு அளித்து, பள்ளிகளில் இம்மொழி மூலம் கல்வி போதிக்க ஊக்கமளித்திருக்கிறது. இன்று நாட்டில் பாதி மக்களுக்குமேல் இம்மொழியைப் புரிந்துகொள்கிறார்கள். அரசியல் சட்டப்பட்டி ஸ்பானிய மொழி (spanish) மூன்றாவது இடையீட்டுப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் பிலிப்பைன்ஸ் தீவுகளில் 75 மொழிகளும், பல்வேறு உள்ளூர்ப் பேச்சுவழக்கு வகைகளும் (local dialects) இருக்கின்றன. 75 விழுக்காடு பிலிப்பீனியர்கள் படித்தவர்கள்.

பண்டைக் காலத்தில் பெரும்பான்மையான பிலிப்பீனியர்கள் ஆன்மவாதிகள். புத்தரின் செப்புச் சிலைகளும், சிவனின் உருவங்களும் தெற்கு, மத்திய பிலிப்பைன்ஸ் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தெற்குப் பகுதிகளில் 50,000 முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களை மோரோஸ் (Moros) என ஸ்பானியர்கள் அழைத்தார்கள். இஸ்லாம் வடக்கே பரவிவரும் காலத்தில்தான் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குக் குடியேறிக் கத்தோலிக்க சமயத்தைப் (cathalicism) பரப்பினார்கள்.

இன்று பிலிப்பைன்ஸ் தீவுகளில் 5 விழுக்காடு முஸ்லிம் பிலிப்பீனியர்கள் வாழ்கிறார்கள்; பொதுவாகச் சுலூஸிலும் (Sulus), மீண்டானோவின் ஒரு பகுதியிலும் இவர்கள் வாழ்கிறார்கள். 84 விழுக்காடு பிலிப்பீனியர்கள் கிறித்தவ ரோமன் கத்தோலிக்கச் சமயத்தினர் (Roman Catholics). தவிர, 5 விழுக்காடு பிலிப்பைன்ஸ் உரிமைக் கிறித்தவத் திருக்கோயில் சமயத்தினரும் (Independent Church of the Philippines) வாழ்கிறார்கள்; மேலும் 3 விழுக்காடு கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினர்களும் (Protestants), 3 விழுக்காடு மற்றச் சமயங்களை அதாவது பொதுவாகப் புறச் சமயத்தைப் (Payan) பின்பற்றுபவர்களும் உள்ளார்கள்.

பல நூற்றாண்டு காலமாகக் கலப்புத் திருமணங்கள் ஏற்பட்டதால் 99 விழுக்காடு பிலிப்பீனியர்கள் தவிட்டு நிறமுடைய (brown

skin) மலேய் இனத்தார்களாக மாறியிருக்கிறார்கள். ஆனால், வட லூஜானிலுள்ள இப்புகாவோ (Ifugao) மலைச்சாதியினரும், மிண்டானேவின் (Mindanav) உட்பகுதிகளில் உள்ள புகித்நன்களும் (Bukidnons) மற்றும்பல சிறுபான்மைக் குழுவினர்களும் பிலிப்பீனியர்கள் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டு வாழ்கிறார்கள். தவிர, சீன, ஐரோப்பியர் ஆகிய சிறுபான்மைக் குழுவினர்களும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் வாழ்கிறார்கள். பொதுவாக, மொத்த வாணிபங்களிலும், சிறுசிறு வாணிபங்களிலும், வங்கிகளிலும், போக்குவரத்து அமைப்புகளிலும், இவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஸ்பானியர்களுக்கும் பிலிப்பீனியர்களுக்கும் ஏற்பட்ட கலப்புத் திருமணங்களின் மூலம் பிறந்த பல்லாயிர மெஸ்திஜோஸ்களும் (Mestizos) பிலிப்பைன்ஸ் தீவுகளில் பரவியிருக்கிறார்கள். அமெரிக்கர்களுக்கும் பிலிப்பீனியர்களுக்கும் ஏற்பட்ட கலப்புத் திருமணங்கள் மூலம் பிறந்த பல பிலிப்பீனியர்களையும் நாம் காணலாம். இவ்வகையாக ஐரோப்பியர்களுடன் ஏற்பட்ட கலப்புத் திருமணங்களின் மூலம் பிறந்த பிலிப்பீனியர்கள், பொதுவாகச் செல்வர்களாக இருக்கிறார்கள்.

57 விழுக்காடு பிலிப்பீனியர்கள் வேளாண்மையைப் பின்பற்றுகிறார்கள் ; ஏற்றுமதி வருமானத்தில் நான்கில் மூன்று பங்கு வேளாண்மை உற்பத்திப் பொருள்கள்மூலம் கிடைக்கிறது. பண்ணைகளின் சராசரி அளவு 8·5 ஏக்கர்கள் ஆகும்; ஆனால் பண்ணைகளில் பாதிக்குமேல் 5 ஏக்கர்களுக்குக் குறைவாம். அரிசியும் சோளமும் தான் முக்கிய விளைபொருள்கள். நாட்டின் 40 விழுக்காடுகொண்ட நிலங்களில் நெல் பயிரிடப்படுகிறது. நான்கில் மூன்று பங்கு அரிசி தான் மக்களின் அன்றாட உணவு ஆகும். அரிசி மிகுதியாக விளையும் பகுதிகள் லூஜானின் மத்தியச் சமவெளி, பானே சமவெளி (Panay plain), பிகோல் இடம் (Bicol region), காகயன் பள்ளத்தாக்கின் ஒரு பகுதி (Cagayan Valley) முதலியன ஆகும். ஆனால் 1968-69 ஆம் ஆண்டுகளில்தாம் அரிசி உற்பத்தியில் பிலிப்பைன்ஸ் தன்னிறைவு அடைந்தது. அரிசியை மிகுந்த அளவில் பிலிப்பைன்ஸ் ஏற்றுமதி செய்வதில்லை.

அய்ந்நூறு ஆண்டுகளுக்குமுன் அறிமுகப்படுத்தப்பட்ட சோள வகைகள் நாட்டின் 15 விழுக்காடு நிலங்களில் பயிரிடப்படுகின்றன. அரிசிக்கு அடுத்துச் சோளத்திற்குத்தான் முதன்மை அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பயிர் சிறப்பாக விளையும் பகுதிகள் செபு (sebu), கிழக்கு நீக்ரோஸ் (Eastern negros), மிண்டானே (Mindano) லூஜானின் வண்டலான காகயன் பள்ளத்தாக்கின் நடுப்பகுதிகள் ஆகியவை ஆகும்.

அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சர்க்கரை ஒரு சிறந்த இடம் பெற்றிருக்கிறது. இன்று ஆண்டிற்கு 2 மில்லியன் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நீக்ரோஸ் தீவின் மொத்த வருமானத்தில் 65 விழுக்காடு சர்க்கரை மூலம்தான் கிடைக்கிறது. லூஜானின் நடுப்பகுதியிலும் கரும்பு மிகுந்த அளவில் பயிரிடப்படு கிறது.

தேங்காய் வாணிபத்தின் மூலம் ஆண்டுதோறும் அயல்நாட்டு நாணய மாற்றில் (foreign exchange) 40 விழுக்காடு வருமானம் கிடைக்கிறது. மொத்த உலகக் கொப்பரை ஏற்றுமதியில் பிலிப் பைன்ஸ் மட்டும் 60 விழுக்காடு ஏற்றுமதி செய்கிறது ; மிகுந்த அளவு ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்கக் குடியரசுக்கும் அனுப்பப்படுகிறது. பொதுவாகத் தென்னை வளரும் பகுதிகள் லூஜானின் நடுப்பகுதி, தென்கிழக்கு லூஜான், மிண்டானோ ஆகிய இடங்கள் ஆகும்.

ஏறத்தாழ எல்லா மாநிலங்களிலும் புகையிலை பயிரிடப்பட்ட போதிலும் மிகச்சிறப்பாக மத்திய வடகிழக்கு லூஜானிலுள்ள காகயன் பள்ளத்தாக்கிலும், வடமேற்கு லூஜானின் இலோகோஸ் கடற்கரைப் பகுதிகளிலும் (locos coast), மத்திய சமவெளியின் வடபகுதிகளிலும் பயிரிடப்படுகிறது.

சிறப்பாகப் பெட்ரோலியம், வெள்ளீயம் உட்பட கனிப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கும் தென்கிழக்காசிய நாடுகள் இந்தோனேசியாவும், மலேசியாவுமே ஆகும். பிலிப்பைன்ஸிலும் கனிப்பொருள்கள் ஓரளவு கிடைக்கின்றன. பொன், இரும்புத் தாதுப்பொருள்கள், சிறிதளவு பாதரசம், வெள்ளி, ஈயம் மங்கனம், முறிவெள்ளி (molylidenum), துத்தநாகம் முதலியவை கிடைக் கின்றன. தவிர, சுண்ணும்புக் கற்பாறைவகை, சலவைக்கல், மணல், சரளைக்கல், மலைக்கருங்காரைகள், கந்தகம், கனிக்கல், கல்நார்கள் முதலியனவும் கிடைக்கின்றன.

சிலி (chile), உருசியா, அமெரிக்கக்குடியரசு ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் பிலிப்பைன்ஸில் செம்பு உற்பத்தி குறைவுதான். பெரும்பான்மையான அளவில் செம்பு கிடைக்கும் இடங்கள் செபு வின் நடுப்பகுதி, தென்மேற்கு நீக்ரோஸ், சாமரின் நடுப்பகுதி (central samar), தென்கிழக்கு மிண்டானோ, லூஜானிலுள்ள ஜாம்பேல்ஸ் மலைப்பகுதிகள் (Zambales mountains), தென்கிழக்கு லூஜானிலுள்ள ராபு ராபு தீவு (Rabu Rabu island) ஆகியன ஆகும்.

உலகப் பொன் உற்பத்தியில் பிலிப்பைன்ஸ் எட்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. பொன் கிடைக்கும் சிறந்த இடம் பாகியோ கனிப்பொருள் மாவட்டமாகும் (Baguio Mineral District).

மேற்கு லூஜானிலுள்ள ஜாம்பேல்ஸ் பகுதியில் இரும்புக்குரும ஈருயிரகை (chromite) மிகுந்த அளவு கிடைக்கிறது. சிறப்பாக இது அமெரிக்கக் குடியரசுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

போதிய அளவில் தொழிற்சாலைகளும் வளர்ந்து வருகின்றன. பல சிறிய ஆலைகளும், ஓர் இரும்புத் தொழிற்சாலையும், பாரக் கட்டை, உந்து வண்டி (Trucks), பஸ், பயன்பாட்டுப் பொறி வண்டி (Jeepneys) ஆகியவற்றின் நடுப்பகுதிகளையும், இரும்புக் குழாய்களையும், அலுவலக இரும்புத் தட்டு முட்டுப்பொருள்களையும் (Furniture) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இவற்றில் மிகுந்த அளவில் 4·3 மில்லியன் மக்கள் உள்ள மணிலா நகரத்தில் இருக்கின்றன. செபு, தாவாவூ (Davao), இலிகன் (Iligan), மிண்டானோ வடகரைப்பகுதிகள் ஆகிய இடங்களிலும் தற்பொழுது தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முடிவில், தென்கிழக்காசிய நாடுகளுக்குள் பெரும்பான்மையான மக்கள் குறித்தவர்களாக இருக்கும் நாடு, எல்லாக் கல்விப் படிகளிலும் ஆங்கிலம் மூலம் பயிற்சியளிக்கும் நாடு, ஐரோப்பியப் பண்பாடுகளை மிகையளவில் பின்பற்றும் நாடு பிலிப்பைன்ஸ் நாடு ஒன்றுதான். இந்நாட்டின் பண்பாடுகளைக் கிழக்காசியப் பண்பாடுகள் என்றோ, தென்கிழக்காசியப் பண்பாடுகள் என்றோ, மேல் நாட்டு—கீழைநாட்டுப் பண்பாடுகள் நயமாக இணைக்கப்பட்ட பண்பாடுகள் என்றோ நிச்சயமாகக் கூற முடியாது. ஆசியக் கருப்பையில் அச்சுவார்ப்புருவில் சில மேலைநாட்டுப் பண்பாடுகளுடன் வளர்ந்து வரும் நாடு என்றே தயக்கத்துடன் கூறலாம்.

கி. பி. 1800 ஆம் ஆண்டு வரை தென்கிழக்காசிய அரசியல் வரலாறு

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் நில இயல், சமூக சமய, பொருளாதார அமைப்புச் செய்திகளை மேலே படித்தோம். இந்நாடுகளின் அரசியல் செய்திகளைப் பற்றியும் நாம் சிறிது அறிந்து கொள்ளவேண்டும். இந்நூலில் வரையப்போகும் வரலாற்றிலே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சிறப்பான பங்கு எடுத்துக்கொண்ட நாடுகள் ஐரோப்பிய நாடுகள் ஆகும். ஐரோப்பிய நாடுகள் தென் கிழக்கு ஆசியாவிலே பல புதுமாற்றங்களை உருவாக்கின.

முதன் முதலாக தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வந்து குடியேறிய ஐரோப்பிய நாடு போர்ச்சுகல் நாடாகும். கி. பி. 1511 ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்கள் மலாக்காவைக் (Malacca) கைப்பற்றினர்கள். போர்ச்சுகீசியர்கள் குடியேறிய பிறகுதான் மேலைநாட்டினர்களின் (Western Nations) செல்வாக்குப் படிப் படியாகத் தென்கிழக்கு ஆசியாவில் ஓங்கத்தொடங்கியது. ஆனாலும், போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கு ஓங்கவில்லை. கி. பி. 1641ஆம் ஆண்டு வரைதான் போர்ச்சுகீசியர்களிடம் மலாக்கா இருந்தது. பிறகு இவர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் கைப்பற்றி ஞர்கள். ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், ஸ்பானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர்கள் பதினெட்டாம் நூற்றுண்டுக்கு முன் தென்கிழக்கு ஆசியாவிலே தோன்றியபோதிலும், நாம் வரலாற்றைக் கி. பி. 1800ஆம் ஆண்டு தொடங்கும் காலத்தில் ஸ்பானியர்கள் மட்டுமே பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். கி. பி. 1800ஆம் ஆண்டுக்கு முன்பே இந்தோனேசியாவிலிருந்த ஜாவாத்தீவை டச்சுக்காரர்கள் கைப் பற்றியிருந்த போதிலும், அவர்களால் ஏனைய இந்தோனேசிய தீவுகளைச் சிறப்பாக வடசுமத்திராவையும் பாலித்தீவையும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்ககாலம்வரை கைப்பற்ற முடிய வில்லை. கி. பி. 1786 ஆம் ஆண்டில் மலேசியாவில் இருக்கும் பினங்கில் (Penang) ஆங்கிலேயர்கள் தங்கள் படையகத்தை அமைத்தார்கள். மற்றத் தென்கிழக்கு ஆசிய நாடுகள் கி.பி. 1800 ஆம் ஆண்டிலே உரிமையோடு இயங்கிவந்தன. கி. பி. 1800 ஆம் ஆண்டு வரை நடந்த இந்த நாடுகளின் வரலாற்றைச் சிறிது விவரமாக அறிவது நல்லது.

பர்மா

பதினெட்டாம் நூற்றுண்டின் இடையில் ஒற்றுமையின்மை யினுல் பர்மாவிலே கலகச் சூழ்நிலை ஏற்பட்டது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பர்மிய இனப்பிரிவினர்களிடையே கடுமை யான போட்டி ஏற்பட்டுப் போர் நடந்தது. சிறப்பாகப் பர்மன் களுக்கும் மாண்களுக்குமிடையே (Mons)தான் கடுமையான போர் நடந்தது. மோக்சோபோம்யோவின் (Moksobomyo) தலைவர் கி.பி. 1753ஆம் ஆண்டில் இறுதியாக மாண்களை முறியடித்து அலங்பாயா (Alaungpaya) என்ற பட்டப் பெயருடன் அவாவில் (Ava) முடிசூட்டிக்கொண்டு பர்மாவின் பேரரசரானுர். அலங்பாயா வம்சத்தினர்கள்தாம் கி. பி. 1800ஆம் ஆண்டில் நாம் வரலாறு தொடங்கும் காலத்தில் பர்மாவை ஆண்டு வந்தார்கள்.

பதினாறும் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்தே போர்ச்சுகீசிய வணிகர்கள் பர்மாவிற்கு வரத்தொடங்கினார்கள். இன்றைய இரங்கூனிற்கு அருகேயுள்ள சிரியம் (Syriam) என்ற இடத்தில் பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலே சிறு வாணிபம் செய்வதற்குரிய ஓர் இடத்தைப் போர்ச்சுகீசியர்கள் நிறுவினார்கள். ஆனால், கி.பி. 1613ஆம் ஆண்டில் வழக்கப்படி மாண்களோடு போர்புரிந்து கொண்டிருந்தபோது பர்மன்கள் இப் போர்ச்சுகீசிய வாணிப இடங்களை அழித்தார்கள். இதன் பிறகு ஏறத்தாழ 200 ஆண்டுகள் வரை வெளிநாடுகளுடன் வாணிபம் செய்யவோ தொடர்பு கொள்ளவோ பர்மியர்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் உலகத்தின் மையம் பர்மாதான்.

ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே பர்மாவிலிருந்து சென்று ஏனைய நாடுகளைக் கைப்பற்ற முனைந்ததால் பிரிட்டிஷ் இந்தியாவுடன் தொடர்பு கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டது. மன்னர் போதப்பாயா (Bodawpaya கி. பி. 1782-1819) கி.பி. 1784ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லையிலுள்ள அராகனைக் (Arakan) கைப்பற்றியதால் அராகன் மக்கள் பிரிட்டிஷ் இந்தியச் சிட்டகாங் பகுதிகளுக்குள் ஓடி ஒளிந்தார்கள். இவர்களைத் துரத்திக்கொண்டு பர்மியப் படைவீரர்கள் சிட்டகாங்கிற்குள் சென்றார்கள். இவ்வாறு பல முறை நடந்ததால் பர்மியர் ஆங்கிலேயர் இடையே மனக்கசப்பு வளர்ந்தது. நாம் கி.பி. 1800 ஆம் ஆண்டில் பர்மிய வரலாற்றைத் தொடங்கும்போது இவ்வாறான சூழ்நிலைதான் உருவாகியிருந்தது.

மலேசியா

பார்ப்பதற்குச் சிறியதாக இருந்தாலும் உலக நடவடிக்கைகளில் மலேசியா சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் தீவு முதலிய புறப்பகுதிகள் நீங்கலான ஆசிய நிலப்பரப்பிற்கும், தென்கிழக்குத் திசைகளிலுள்ள தீவுகளுக்கும் இடையே இது ஓர் இணைப்புச் சங்கிலியாக இருந்தது. பிற்காலத்தில் இது நாகரிகமடைந்துள்ள நாடுகளின் இல்லமாகத் திகழ்ந்தது. உதாரணமாக, கி. பி. எட்டாம் நூற்றாண்டில் புகழ் வாய்ந்திருந்த ஸ்ரீ விஜய வல்லரசும் (Sri Vijaya Empire), பதினான்காவது நூற்றாண்டில் புகழ் ஓங்கியிருந்த மச்சபகுத் பேரரசும் (Majapakit Emp,re) மலேயாவில் பரவியிருந்தன. பதினான்காவது நூற்றாண்டிற்குப் பிறகு மலேயா நாட்டின் மக்கள் இஸ்லாம் சமயத்தைத் தழுவினர். மலேயாவிலிருந்து மற்றத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இஸ்லாம் பரவலாயிற்று. ஐரோப்பியர்கள் தென்கிழக்கு

ஆசியாவில் வந்து குடியேறி ஆட்சி புரிந்த காலங்களில் மலேயா ஒரு சிறந்த வாணிக இடமாய்த் திகழ்ந்தது.

நறுமணப்பொருள்கள் தீவுகளின் (Spice islands) செல்வத்தை நாடி முதன் முதலாகக் கி. பி. 1511ஆம் ஆண்டில் வந்த ஐரோப்பியர் போர்ச்சுகீசியர்கள் ஆவர். இவர்கள் முதலில் மலாக்காத் துறைமுகத்தைக் கைப்பற்றினார்கள். ஆனால் கி. பி. 1641ஆம் ஆண்டில் சிறந்த வாணிகத்திற்குரிய இதனை டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியர்களிடமிருந்து கைப்பற்றினார்கள். இவர்கள் ஆட்சியின்போது மலாக்காவின் செல்வநிலை மங்கியது.

போர்ச்சுகீசியர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் பிறகு வந்த ஐரோப்பியர் ஆங்கிலேயர் ஆவர். கி.பி. 1786ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் பினாங்கைக் (Penang) கைப்பற்றினார்கள். கேதா (Kedah), கேலன்தான் (Kelantan), தெரன்கானு (Trengganu) ஆகிய பகுதிகள் சியாம் (Siam) ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டிருந்தன. கி. பி. 1800ஆம் ஆண்டில் செலங்கர் (Selangor), பாஹாங் (Pahang), ஜோஹூர் (Johore), ரியவ் (Riau), பேரக் (Perak) போன்ற மற்ற மலேசிய நாட்டுப் பகுதிகள் பல சுல்தான்களின் ஆட்சியின்கீழ் உரிமையோடு இயங்கி வந்தன.

இந்தோனேசியா

ஐரோப்பியர்கள் இந்தோனேசியாவிற்குள் நுழைந்தபோது இது பிரிக்கப்பட்டுப் பல உள்ளூர்ச் சுல்தான்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. டச்சு வணிகர்கள் இந்தோனேசியாவிற்குள் நுழையும் முன்பே ஆங்கிலேயர், ஸ்பானியர், போர்ச்சுகீசியர் ஆகியோர்களுக்கு வாணிப இடங்கள் இங்கு இருந்தன. கி. பி. 1596ஆம் ஆண்டில் நான்கு டச்சுக் கப்பல்கள் நறுமணப்பொருள்கள் தீவுகளுடனும் (Spice islands), மேற்கு ஜாவாவிலுள்ள பன்தாமுடனும் (Bantam) வாணிபம் செய்தன. கி. பி. 1602ஆம் ஆண்டில் ஆலந்து அரசர் அனுமதியுடன் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி (Dutch East India Company) நிறுவப்பட்டது.

கி. பி. 1605ஆம் ஆண்டில் பன்தாமிலும், அம்பாய்னாவிலும் (Amboina), பன்தாவிலும் (Banda), மற்றும் ஐந்து சிறிய மொலுக்காத் தீவுகளிலும் (Molucca islands) டச்சு வாணிப இடங்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 1682ஆம் ஆண்டிற்குள் ஜாவாவிலுள்ள ஆங்கிலேயர்களின் செல்வாக்கை டச்சுக்காரர்கள் ஒழித்தார்கள். பின்வாங்கிய ஆங்கிலேயர்கள் மேற்குச் சுமத்திராவிலிருக்கும் பென்கூலனில் (Bencoolen) தங்கி வாணிபம் செய்யத்

தொடங்கினர்கள்; இங்கு இவர்கள் கி.பி. 1685 முதல் 1824 வரை தங்கி வாழ்ந்தார்கள். கி.பி. 1641ஆம் ஆண்டில் மலாக்காவை (Malacca) டச்சுக்காரர்கள் கைப்பற்றியவுடன் போர்ச்சுகீசியச் செல்வாக்கும் தென்கிழக்காசியாவில் மங்கத்தொடங்கியது.

இந்தோனேசியர்களிடையே இருந்த பகைமை, ஆற்றல் வாய்ந்த கப்பற்படையை உபயோகித்தல், உள்ளூர்ச் சுல்தான்கள் தங்கள் ஆட்சியை இழக்கும்படியான உடன்படிக்கைகள் செய்து கொள்ளுதல், கையூட்டு, ஊழல், அரசியல் தந்திரம், படைவலிமை முறைகளைப் பயன்படுத்துதல், கைப்பொம்மை அரசுகளை அமைத்தல், தங்களுக்கு உரிமையில்லாத இந்தோனேசியத் தீவுகளிலுள்ள நறுமணப் பொருள்களை அழித்தல் போன்ற பல்வேறு முறைகளைக் கையாண்டுதான் இந்தோனேசியத் தீவுகளிலுள்ள அரசுகளை டச்சுக்காரர்கள் கைப்பற்றத் தொடங்கினர்கள். டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளுக்கு மையமாக மேற்குஜாவாவிலுள்ள ஜாகத்திரா (Jacatra) அமைக்கப்பட்டது; கி.பி. 1619ஆம் ஆண்டில் கைப்பற்றிய டச்சு வணிகர்கள் இதற்குப் படாவியா (Batavia) என்னும் பெயரைச் சூட்டினர்கள். ஆலந்து மாநிலத்தின் பண்டைய உரோமர் (Romans) பெயர் படாவியா.

வாணிபச் செல்வாக்கும் பேராசையும் வளரத்தொடங்கியவுடன் மேலும் பல பகுதிகளை டச்சுக்கம்பெனி கைப்பற்ற விரும்பியது. கி.பி. 1752ஆம் ஆண்டில் மேற்குஜாவாவையும், கி.பி. 1755ஆம் ஆண்டில் மதரத்தைத் (Meterem) தோற்கடித்து ஜாவாவின் நடுப்பகுதியையும், கி.பி. 1772ஆம் ஆண்டில் கிழக்கு ஜாவாவையும் டச்சுக்கம்பெனி கைப்பற்றியது.

ஜாவாவில் தன் ஆட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஏற்றுமதிக்குப் பயன்படும் பொருள்களை மட்டும் டச்சுக்கம்பெனி பயிரிடச் செய்தது. ஆகையால் காப்பி, இண்டிகோ, மிளகு முதலியவற்றின் விளைச்சல்களுக்குமட்டும்தான் முதலிடம் அளிக்கப் பட்டது. டச்சுக்கம்பெனி இந்தோனேசியர்களிடமிருந்து நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கத் தொடங்கியது. இவ்வாறு குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலங்கள் பல பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டு டச்சு மேற்பார்வையாளர்களின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. குறிப்பிட்ட தொகைக்குத் தங்களுக்கு வேலையாள்களையும், விளைச்சல் பொருள்களையும் அளிக்குமாறு உள்ளூர்ச் சுல்தான்களை டச்சு மேற்பார்வையாளர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஒரு குறிப்பிட்ட அளவு காப்பி, இண்டிகோ, மிளகு ஆகிய

ஏற்றுமதிப் பொருள்களையும், மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருள்களையும் வரியாக அளிக்கவேண்டும் என்று கட்டளை யிடப்பட்டது.

இத்தீவுகளில் தலைமை ஆளுநர் ஒருவரிடம் டச்சுக் கம்பெனியின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. ஒரு நாடாளு மன்றமும் (State Council), ஓர் ஆளும் வகுப்பும் (Bureaucracy) இவருக்கு உதவிபுரிந்தன. உள்நாட்டமைப்பைச் சார்ந்த பல்வேறு அரசுகளிலும், மாநிலங்களிலும் (Provinces), தீவுகளிலும் கம் பெனியின் பிரதிநிதிகளாக டச்சு ஆளுநர்கள் இயங்கினார்கள். உள்ளூர்க் கைப்பொம்மை அரசர்கள், சுல்தான்கள், பகர ஆளுநர்கள் (Regents), மாவட்டத்தலைவர்கள், ஊர்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்த்தலைவர்கள் ஆகியோர் ஆளுநர்களின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டார்கள். மறைமுக ஆட்சி அமைப்பு மூலம் சில சிறப்புமிக்க டச்சுக்காரர்கள் உள்ளூர் அரசர் களின் மேல் தங்கள் ஆட்சித் தலைமையைப் பயன்படுத்தினார்கள்; உள்ளூர் அரசர்கள் இந்தோனேசியப் பொதுமக்கள்மேல் ஆட்சித் தலைமையைச் செலுத்தினார்கள். டச்சுத்தலைவர்கள் சமுதாயக் கீழ்ப்படிகளிலிருந்து வந்தார்கள்; குறைந்த ஊதியத்திற்குப் பணிபுரிந்தார்கள். நிலையாக ஜாவாவில் குடியேறும் நோக்கம் இல்லாததால் தங்கள் குடும்பங்களை ஜாவாவிற்கு அழைத்து வரவில்லை. ஆகையால், இந்தோனேசியர்களை மணம் புரிந்து கொண்டார்கள்; இக்கலப்புத் திருமணத்தில் பிறந்தவர்களுக்கு யூரேசியர்கள் (Eurasians) எனப் பெயரிடப்பட்டது.

சீனர்களும் மிகுந்த அளவில் ஜாவாவிற்கு வந்தார்கள். கி.பி. 1720ஆம் ஆண்டில் 1,00,000 சீனர்கள் ஜாவாவில் குடியேறி யிருந்தார்கள்; இதில் ஐந்தில் நான்கு பங்கினர் படாவியாவில் வாழ்ந்தார்கள். இவர்கள் சிறுவாணிபம் செய்துவந்தார்கள். இந்தோனேசியாவில் பல இனச்சமுதாயம் ஓரளவு தோன்றியதால் பன்முகப்பட்ட நீதிமுறை நிலவிவந்தது. இந்தோனேசியர்களுக்கு அடாட் (Adat) அல்லது தாயகச் சட்டமுறை மூலமாகவும், சீனர்களுக்குச் சீனத்தலைவர்களால் விளக்கப்பட்ட சட்டமுறை மூலமாகவும், ஐரோப்பியர்கள், யூரேசியர்கள் ஆகியவர்களுக்கு ஐரோப்பியச் சட்டமுறை மூலமாகவும் நீதிவழங்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே, அதாவது கி.பி. 1800ஆம் ஆண்டில் இந்தோனேசிய வரலாற்றை நாம் தொடங்குமுன், நெப்போலியனின் ஐரோப்பியப் போர்களின் போது இந்தோனேசியாவிலிருந்த டச்சுக்கம்பெனியின் இறுதிக்

காலம் நெருங்கியது. பிரெஞ்சுக்காரர்களுடன் இணைந்து டச்சுக் காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தார்கள். ஏற்றுமதி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருள்களின் விலை ஐரோப்பாவிலே குறைந்தது; ஆகையால் டச்சுக்கம்பெனிக்குக்கிடைத்த இலாபம் குறைந்தது. இந்நிலையைத் தடுத்து வேறுவிதமாகச் சீரமைக்கும்பணி டச்சுக் கம்பெனியால் முடியவில்லை. ஆகையால் கி.பி. 1796ஆம் ஆண்டில் தவணைப்பங்கை (Dividents) கம்பெனி தாற்காலிகமாக நிறுத்தியது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியே நொறுங்கியது. பிரெஞ்சுப் புரட்சியின்போது நெதர் லாந்தைக் (The Netherlands or Holland) கைப்பற்றிய பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆட்சியினரிடம் டச்சுக்கம்பெனியின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

தாய்லாந்து

தென்கிழக்கு ஆசிய வரலாற்றிலே ஒருவகையில் தாய்லாந்து முதன்மை பெற்றிருக்கிறது. மற்றத் தென்கிழக்காசிய நாடு களைப்போல, தாய்லாந்து மேற்கு நாடுகளின் (Western Nation) குடியேற்றப் பகுதியாக இருந்ததில்லை. எப்பொழுதும் தாய்லாந்து ஓர் உரிமையுடைய நாடாகத்தான் விளங்கியது. இயேசுநாதர் இவ்வுலகை ஆண்டதாகக் கருதப்படும் காலத்திலே (First millenium of the Christian Era) தாய் மக்கள் (Thai peoples) தெற்கு வழியாய் நுழைந்து, தற்பொழுது தென்மேற்குச் சீனாவின் பகுதியான யூனான் மாகாணம் (Yunnan province) மூலம் பரவி லாவோஸ் (Laus), மேற்குத் தாய்லாந்து (Northern Thailand), இன்று பர்மாவின் ஓர் உறுப்பான ஷான் நாடு (Shan state), அஸ்ஸாமில் உள்ள பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கின் மேல் பகுதிகள் முதலிய இடங்களில் சிறிய உரிமையுடைய அரசுகளை அமைத்தார் கள். இன்றைய மற்றத் தாய்லாந்து நாட்டின் பகுதிகள் இன்றைய கம்போடிய மக்களின் முன்னோர்களான கெம்மர்கள், மாண்கள் (Mons) ஆகிய சுமத்திர அரசுகளின், சிறப்பாக ஸ்ரீ விஜயப் பேரரசு ஆட்சிகளின்கீழ் மாறிமாறி வந்தவைகளே ஆகும். பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், இன்று உள்ள தாய்லாந்தின் அடிப்படை அமைக்கப்பட்டு மலேயாத் தீபகற்பம் வரையும், கிழக்கில் மேகாங் ஆறுவரையும், மேற்கில் பர்மா விலிருந்து பிரிக்கும் மலைப் பகுதிகள்வரையும் பரவியிருந்தது. இக்காலத்திலிருந்து தாய் மக்கள் இடைவிடாமல் ஒரு தாயகத்தில் இருந்து, சாவோபிரியா ஆற்றின் பள்ளத்தாக்கை உள் மையப் பகுதியாக வைத்துக்கொண்டு ஆட்சி செலுத்தி வரும் நாட்டைத் தான் சியாம் அல்லது தாய்லாந்தென அழைக்கிறோம்.

இன்றைய தாய்லாந்து வளர்ந்துவரும் காலத்தில் முதன் முதலாகச் சுகோதாய் (Sukhothai) தலைநகரமாகத் தேர்ந்தெடுக் கப்பட்டது. இதை ஆண்டு வந்த சிறந்த அரசரான இராம் காம் ஹயங்குதான் (Ram Kamhaeng கி.பி. 1275-1317) தாய் மொழி யின் (Thai Language) எழுத்துத் தொகுதியின் முதல் எழுத்தைப் புதியதாக உருவாக்கினார்; நாட்டின் நிருவாக அமைப்பையும் உண்டாக்கினார். கி. பி. 1350ஆம் ஆண்டில் சி அயுத்தயா (Si Ayutthaya) தலைநகரமாக அமைக்கப்பட்டது. அக் காலத்தில்தான் சியாம் ஐரோப்பியர்களின் கவனத்தைக் கவர்ந் தது. தொடக்கத்தில் கி.பி. 1516ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர் களும், பிரெஞ்சுக்காரர்களும், பின்பு ஸ்பானியர்களும், டச்சுக்காரர் களும், ஆங்கிலேயர்களும், ஜப்பானியர்களும்கூடத் தங்கள் வாணிப இடங்களைத் தாய்லாந்தில் அமைத்ததால் மேற்கு நாடு களுடன் தொடர்பு தொடங்கப்பட்டது. பதினாறு, பதினெட்டு ஆகிய நூற்றாண்டுகளில் பர்மாவுடன் தீர்ப்புச் செய்யமுடியாத பலபோர்கள் புரிந்துகொண்டிருக்கும் காலத்தில் பர்மியப் படைவீரர் கள் சியாமுள் நுழைந்து கி.பி. 1767ஆம் ஆண்டில் தலைநகரமான சி அயுத்தயா முழுவதையும் அழித்தார்கள். ஆனாலும் பர்மியப் படைவீரர்கள் சியாமை விட்டுத் துரத்தப்பட்டார்கள். தலைநகர மான சி அயுத்தயா அழிந்ததால், கி.பி. 1782ஆம் ஆண்டில், நாம் தாய்லாந்து வரலாற்றை விரிவாகத் தொடங்கும் 18 ஆண்டு களுக்கு முன்புதான், இப்பொழுதைய தலைநகரமான பாங்காக் (Bangkok) அல்லது குருங் தெப் (Krung Thep) கட்டப்பட்டது. குருங் தெப் என்றால் தேவதைகளின் நாடு (City of Angels) எனப் பொருள்படும். கி.பி. 1782ஆம் ஆண்டு மன்னர் முதலாவது இராமா சக்ரீவம்சத்தின் (Chakri dynasty) ஆட்சியை நிறுவினார். சக்ரீ வம்சத்தின் ஒன்பது அரசர்கள் தாம் சியாமை மானிய நிலம் (Feudalism) சார்ந்த சமூகப் பொருளாதார இடைநிலைக் காலப் பாணியைப் பார்த்துப் பின்பற்றிய அமைப்பை மாற்றிப் புது நாகரிக உறுப்புகள் அடங்கிய நாடாகத் தாய்லாந்தை மாற்றினார்கள். இவ்வரலாற்றைத்தான் நாம் விவரமாகப் படிக்கப் போகிறோம்.

வியட்நாம்

அண்மைக் காலம் வரை தெற்கு, வடக்கு வியட்நாம்களாகப் பிரிந்திருந்த இந்நாடு பதினெட்டாம் நூற்றாண்டில் பிளவுபட் டிருந்தது. வடக்கிலுள்ள டொங்கிங்கைக் (Tonking) கைப் பொம்மை லீ சந்ததிகள் (Le dynasty) மூலம் திரின் குடும்பத்தினர் (Trinn family) ஆட்சி புரிந்து வந்தார்கள். அன்னாம் (Annam), கொச்சின்-சீனா (Cochin-China) முதலிய பகுதிகள் என்குயன் (Nguyen) குடும்பத்தினரின் ஆட்சியின்கீழிருந்தன.

கி.பி. 1773ஆம் ஆண்டில் தேய்சன் மாவட்டத்தைச் (Tayson district) சேர்ந்த மூன்று விவசாயக் குடும்பச் சகோதரர் கள் மக்கள் ஆதரவுடன் என்குயன் ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்து சைகானையும் (Saigon) வடக்கே சென்று ஹியூவையும் (Hue), டொங்கிங்கிலுள்ள ஹநாயையும் (Hanoi) கைப்பற்றினர் கள். கி.பி. 1788ஆம் ஆண்டிற்குள் இம்மூன்று பகுதிகளும் இவர்கள் ஆட்சியின் கீழ் வந்தன. வலிவிழந்த என்குயன் குடும்பத்தினர், வெற்றியில்லாமல், கொரில்லாப் போர் புரிந்து வந்தார்கள். கைப்பற்றிய மூன்று பகுதிகளும் இம்மூன்று சகோதரர் களிடையே பிரிக்கப்பட்டன. வடக்கிலுள்ள டொங்கிஸ் வான்-ஹியூவின் (Van-Hue) ஆட்சியின் கீழும், நடுவியட்நாம் வான்-என் ஹக் (Van N hac) ஆட்சியின் கீழும், தெற்கிலுள்ள கொச்சின்-சீனு வான்-லூ (Van-Lu) ஆட்சியின் கீழும் அமைக்கப் பட்டன.

பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர்கள் வியட்நாமுடன் பதினாறும் நூற்றாண்டிலிருந்து தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களிடையே வியட்நாமைக் கைப்பற்றும் எண்ணம் படிப்படியாக வளரத் தொடங்கியது. ஆட்சியைக் கைப்பற்றியவுடன் தேய்சன் சகோதரர்கள் வியட்நாம் அரச குடும்பத்தினரையெல்லாம் படு கொலை செய்தார்கள். ஆனால் என்குயன் அரசரின் மருமான் இளவரசர் என்குயன் அண் (Prince Nguyen Ann) மட்டும் தப்பி மறைந்து, தொடக்கத்தில் சியாம் உதவியுடனும், பிறகு பிரெஞ்சு உதவியுடனும் ஆட்சியை மீண்டும் கைப்பற்றப் பலமுறை முயற்சியெடுத்துத் தோல்வியடைந்தார். ஆனாலும், இறுதியாக கி.பி. 1789ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரெஞ்சுப் படை உதவி யுடன் சைகானையும், கொச்சின் சீனாவையும் என்குயன் அண் கைப்பற்றினர். கி. பி. 1792ஆம் ஆண்டில் என்குயன் அண் ஹியூவைத் தாக்கினர்; கி.பி. 1801ஆம் ஆண்டு ஜூன் மாதம் தான் அவரால் இதைக் கைப்பற்ற முடிந்தது. கி.பி. 1802ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹநாயைக் கைப்பற்றினர். ஹநாய் மேல் படையெடுத்துக்கொண்டிருக்கும்போதே பேரரசர் ஜியா-லாங் (Gia-Long) என்ற பட்டப் பெயருடன் முடிசூட்டிக்கொண்டார். வியட்நாம் வரலாற்றைத் தொடர்ந்து விரிவாக அடுத்த அத்தியா யங்களில் படிப்போம்.

லாவோஸ்

அடிக்கடி செய்தித்தாள்கள் வெளியிட்டதைப் போல லாவோஸ் புதியதாக உருவாக்கப்பட்ட நாடன்று. எழுத்து மூலமாகத் தெரிவிக்கப்பட்ட சான்றுகளை நோக்கினால் லாவோஸின்

வரலாற்றைப் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து நாம் அறியலாம். இச்சமயத்தில் லுவாங் பிரபாங்கைச் (Luang Prabang) சுற்றியோ, சிலசமயம் வியன்சியனேச் (Vientiane) சுற்றியோ மேலேமேகாங் பள்ளத்தாக்கில் வாழ்ந்துவந்த மக்களே ஒரு சிற்றரசு ஆட்சிபுரிந்து வந்தது. இதற்குப் பிறகு பல நூற்றாண்டு காலம் இந்நாடு பிரிக்கப் பட்டு மேற்கு தெற்கிலிருந்து தாய் அரசுகளாலும் (Thai Kingdom), கிழக்கிலிருந்து வியட்நாம் அரசுகளாலும் அச்சுறுத்தப் பட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலே லாவோஸ் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதியாக மாறிய வரை ஒன்று அல்லது பல உரிமைபெற்ற லாவோஸ் பகுதிகள் தென்கிழக்காசிய வரலாற்றில் மிதந்து செல்லும் மின்மினிப் பூச்சிகள் போல் தெரிந்தன. ஆனாலும் இந்தச் சிறிய உரிமைபெற்ற சட்டைப்பை வடிவுள்ள இடங்கள், பிரெஞ்சு, வியட்நாம், சியாம் ஆகியவற்றின் இடையே அகப்பட்டுக்கொண்டு தவித்ததைத் தவிர, வேறுவகையில் தென்கிழக்காசிய வரலாற்றை ஓங்கவோ துன்புறவோ செய்யவில்லை; ஆகையால் இந்நாட்டைப் பற்றித் தனிப்பட்ட முறையில் இந்நூலில் எழுதவில்லை. வியட்நாம், தாய்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் குடியேற்ற முயற்சிகள் வரலாற்றுடன் இணைக்கப்பட்டுத்தான் லாவோஸின் வரலாறு வரையப் பட்டிருக்கிறது.

கம்போடியா

மேகாங் ஆற்றின் நடுப்பகுதியின் அருகேயும், தொன்லீசாப் ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கெம்மர் பேரரசு (Khemer Empire) முதன் முதலாக உருவாகியது. கி.பி. 802ஆம் ஆண்டிலே இந்நாடு, தன் அண்டையிலிருந்த இன்றைய தென் வியட்நாம் பகுதிகளான பூனன் (Funan), சம்பா (Champa), இன்றைய லாவோஸ்நாடு இருக்கும் மேலேமேகாங் ஆற்றின் அருகே இருக்கும் பகுதிகள், இன்றைய தாய்லாந்தின் பகுதியான மாண் நாடு முதலியவற்றை விடச் செல்வாக்குள்ள நாடாகத் திகழ்ந்தது. இப்பேரரசு கி.பி. 802ஆம் ஆண்டு முதல் கி.பி. 1431ஆம் ஆண்டு வரை நீடித்தது. இக்காலத்தில்தான் உலகப் புகழ்பெற்ற அங்கோர் வாட் (Angkor wat), அங்கோர் தோம் (Angkor Thom) கோவில்கள் கட்டப்பட்டன. மேற்கிலிருந்து தாய்மக்கள் (Thais) தாக்கியதால் பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் இப்பேரரசு வலிமை இழக்கத் தொடங்கியது; பதினேழாம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து அன்னமியர்கள் (Annamese: அதாவது வியட்நாமியர்கள்) தாக்கத் தொடங்கினார்கள். அன்றும், தாய்த் தாக்குதலிலிருந்து தன் உரிமையைப்

பாதுகாக்கக் கி.பி. 1863ஆம் ஆண்டு வரை தத்தளித்து, இறுதியில் உரிமையை இழந்து, பிரெஞ்சுக்காரர்களிடம் சரணடைந்தது. நாம் வரலாறு தொடங்கும் நூற்றாண்டிலே சியாம், வியட்நாம், பிரான்ஸ் ஆகிய நாடுகளிடையே கம்போடியா சிக்கிக்கொண்டு அவதிப்படுவதை இந்தோ-சீனு, சியாம் ஆகியவற்றின் வரலாற்றிலே எடுத்துரைத்திருப்பதனுலும், மற்றப்படி வேறு வகையாகக் கம்போடியா தென்கிழக்காசிய வரலாற்றைப் பாதிக்காததாலும், தனிப்பட்ட முறையில் அதன் வரலாற்றை வரையவில்லை. (கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகளையே இந்தோ-சீனு என்று அழைக்கிறேம்.)

பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் நாட்டின் வரலாற்றிலே ஏற்பட்ட முதல் சிறப்பான திருப்பம் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டை நாடிவந்த வரலாறுதான். டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவின் மேல் மட்டும் கவனம் செலுத்தியதுபோல ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின்மேல் மட்டும்தான் கவனம் செலுத்திஞர்கள். ஐரோப்பாவிலிருந்து வந்த மற்ற ஐரோப்பியர்கள் கிழக்குத்திசை வழியாகத் தென்கிழக்காசியாவிற்கு வந்தார்கள்; ஆனுல் ஸ்பானியர்கள் மட்டும் மேற்குத் திசையிலிருந்து வந்தார்கள். தென்கிழக்காசியக் குடியேற்றப் பகுதிகளில் ஆட்சிபுரிந்த நாடுகளில் மிகுந்த ஆண்டுகள் ஆட்சி புரிந்ததும், விரைவாகத் தன் குடியேற்ற நாட்டை வலுப்படுத்தியதும், முதன் முதலாக தென்கிழக்காசியாவை விட்டு வெளியேறிய ஐரோப்பிய நாடும் ஸ்பெயின் நாடுதான். கி.பி. 1519ஆம் ஆண்டில் மகெல்லன் (Magellan) தலைமையில் முதன் முதலாக ஸ்பெயின் பிலிப்பைன்ஸ் தீவுகளின் மேல் படையெடுத்து வந்தது. மேலும் நான்கு முறைகள் கி.பி. 1525, 1526, 1527, 1542 ஆகிய ஆண்டுகளிலும் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் மேல் படையெடுத்து வந்தார்கள். கடைசிப் படையெடுப்பின் போதுதான் ஸ்பானியர்களுக்குப் பிலிப்பைன்ஸில் குடியேறும் நோக்கம் தோன்றியது. ஆனுல் வெற்றியடையாத ஸ்பானியப் படைத்தலைவர் வில்லாலோபோஸ் (Villalobos), தம் நாட்டின் பட்டத்து இளவரசரைச் சிறப்பிக்கும் நோக்கத்துடன் லேய்டி தீவுக்கு (Leyte island) பெலிபிஞ (Felipina) என்ற பெயரைச் சூட்டினுர். பட்டத்து இளவரசர் பெலிபிஞ இரண்டாவது பிலிப் (Phillip II) என்ற பட்டப் பெயருடன் ஸ்பெயினில் முடிசூட்டிக்கொண்டார். ஆகையால்தான் இத்தீவுக் கூட்டங்களுக்குப் பிலிப்பைன்ஸ் என்ற பெயர் வந்தது. கி.பி. 1570-1580ஆம் ஆண்டுகளில் பிலிப்பைன்ஸ் தீவுகளைப் கைப்பற்றுவதில் ஸ்பெயின் வெற்றியுடைந்தது.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஆட்சி புரிந்து வந்த ஸ்பானியர்கள் கி.பி. 1821ஆம் ஆண்டுவரை ஸ்பெயின் நாட்டு மன்னருக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை; மெக்ஸிகோவிலிருந்த (Mexico) ஸ்பானியர் பிரதிநிதிக்குத்தான் (Viceroy) பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். நிலப்பண்ணை முறையைச் சார்ந்த அமைப்பை (feudal structure) பிலிப்பைன்ஸில் ஸ்பானியர்கள் உருவாக்கினார்கள். பிலிப்பைன்ஸ் குடியேற்றத்தின் உயர்படியில் இருந்தவர் தலைமை ஆளுநர் (Governor-General). இவருக்கு ஆலோசனையளிக்க ஓர் உயர் ஆலோசனை மன்றமும், நீதிமன்றமும் (Supreme Council and Court audiencia) அமைக்கப்பட்டன. மேயர்கள் (alcaldes mayores), கோரிஜிடோர்கள் (Corregidores) முதலியவர்கள் நீதிபதிகளாகவும், வரி திரட்டும் அலுவலர்களாகவும், கட்டட மேற்பார்வையாளர்களாகவும், நில மேற்பார்வையாளர்களாகவும் மாநிலங்களில் பணிபுரிந்து வந்தார்கள். இவர்கள் ஆட்சியின்கீழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் அதிகாரிகள் சிறு பதவிகளை ஏற்றுக்கொண்டு பணிபுரிந்து வந்தார்கள். அரசியல் அமைப்பைப் போலவே சமய அமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது. கி.பி. 1600ஆம் ஆண்டில் 400 கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் அச்சமயத்தைப் பரப்பிக்கொண்டிருந்தார்கள்.

பிலிப்பைன்ஸின் பொருளாதார அமைப்பும் மையப்படுத்தப் பட்டது. மிகப்பெரிய கிறித்தவத் திருக்கோயில் நிலப்பண்ணைகளும், தனியார்கள் நிலப்பண்ணைகளும் அமைக்கப்பட்டன. நிலவுடைமையாளர்கள் (encomendores) தங்கள் பண்ணையில் பணிபுரிந்த 500 முதல் 1,000 குடும்பங்களின்மேல் ஆட்சி புரிந்து வந்தார்கள். ஸ்பானியர்கள் தங்கள் குடும்பங்களை அழைத்து வராததால் மிக்க அளவில் கலப்புத் திருமணங்கள் நடந்தன. ஸ்பானியர்கள் நீதிமுறையும், நிருவாக முறையும், கிறித்தவத் திருக்கோயில் அமைப்பு முறையும், ஸ்பானிய மொழியுமே (Spanish) பிலிப்பைன்ஸில் பின்பற்றப்பட்டன. ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டில்கூட அதிகாரிகள், சமயத்துறவிகள், படைவீரர்கள் முதலியோர் உட்பட 5,000 ஸ்பானியர்களுக்குமேல் பிலிப்பைன்ஸில் குடியேறி ஆட்சி புரியவில்லை. ஆகையால் தென்கிழக்காசியாவில் பிலிப்பைன்ஸ் தீவுகள் மட்டுமே கிறித்தவ சமய, ஐரோப்பியப் பண்பு முறைகளை மிகுந்த அளவில் தழுவிப் பின்பற்றி வந்தன.

தனியார் சொத்துரிமைக் கொள்கையைப் பிலிப்பைன்ஸில் ஸ்பானியர்கள்தாம் அறிமுகப்படுத்தினர். பல நூற்றாண்டுகள் ஸ்பானியர்களுக்கும், மெக்ஸிகோ வணிகர்களுக்குமிடையே,

பண்டைய ஸ்பானிய நாட்டுப் போர்க்கப்பல் உதவியுடன், மிகுந்த அளவில் வாணிபம் நடந்தது (Galleon Trade). கி.பி. 1837ஆம் ஆண்டுவரை பிலிப்பைன்ஸ் தீவுகளின் வாணிபம் ஸ்பானியர்களின் தனி உரிமையிலிருந்தது.

ஸ்பானியர்கள் ஆட்சியின்போது அயல்நாட்டுப் படையெடுப்பின் அச்சம் இல்லாமல் பிலிப்பைன்ஸ் வாழ்ந்து வந்தது. பிலிப்பைன்ஸிலிருந்த ஸ்பானியர்களும் தங்கள் ஆட்சியைப் பரப்ப முயலவில்லை. நாம் வரலாற்றை விவரமாகத் தொடங்கும் காலத்தில் இவ்வாறான சூழ்நிலையில்தான் பிலிப்பைன்ஸ் நாட்டு வரலாற்றைச் சந்திக்கிறோம்.

12. நிறைவுரை

கி.பி. 1800ஆம் ஆண்டிலே நாம் தென்கிழக்காசியாவின் வரலாற்றைத் தொடங்கிய போதிலும், இவ்வாண்டிலே சிறப்பான நிகழ்ச்சி எதுவும் உருவாகவில்லை. ஆனாலும், ஏறத்தாழக் கி.பி. 1800ஆம் ஆண்டை அடுத்த ஆண்டுகளில் சில சிறந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டதால் தென்கிழக்காசிய வரலாற்றிலே வருங்காலத்தில் சில திருப்பங்களை உண்டாக்கின. பர்மா ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாமல் இருந்தபோதிலும், கி.பி. 1784ஆம் ஆண்டிலே பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லை அருகே இருந்த அராகன் பகுதியைக் கைப்பற்றியதால் சில நிகழ்ச்சிகள் சங்கிலிபோல் பிணைந்து தொடர்ந்து நடந்து இறுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே பர்மா உரிமை இழக்கும்படி நேர்ந்தது.

கி.பி. 1801-1802ஆம் ஆண்டுகளில் ஜியா லாங் (Gia Long) பேரரசரின் முயற்சியினால் பிரிந்திருந்த வியட்நாம் பகுதிகள் மீண்டும் இணைக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே, வியட்நாம் உட்பட இந்தோ-சீனப் பகுதிகளை வருங்காலத்தில் ஆட்சிபுரியப்போகும் பிரெஞ்சுக்காரர்களின் நிழல்கள் இந்தோ-சீனப் பகுதிகளில் படமெடுத்து ஆடத் தொடங்கின.

1786ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் பினங்கைக் கைப்பற்றியது ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சிக்குப்பின் மலேசியாவில் படிப்படியாக ஆங்கிலேயர்களின் செல்வாக்கு ஓங்கியதால் இறுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆங்கிலேயர்கள் மலேசியா நாடு முழுவதையும் கைப்பற்றினார்கள்.

இன்று புகழ் ஓங்கியிருக்கும் சிங்கப்பூர் முதன் முதலாகக் கி.பி. 1819ஆம் ஆண்டில்தான் ஆங்கிலேயரான ராபல்ஸ் (Raffles) என்பவர் முயற்சியின் மூலம் உருவாக்கப்பட்டது

இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலத்தின் தொடக்கம்வரை தாய்லாந்தில் சர்வாதிகாரத்தோடு ஆட்சிபுரிந்துவந்த சக்ரீவம்சத்தினரின் ஆட்சி முதன் முதலாகக் கி.பி. 1782ஆம் ஆண்டில்தான் தொடங்கியது.

டச்சுக் கம்பெனியின் ஆட்சி இறுதியாகத் தொடக்கப்பட்டு, நெதர்லாந்தைக் கைப்பற்றிய பிரெஞ்சுப் பேரரசரின் ஆட்சியின் கீழ் ஜாவா வந்ததே கி.பி. 1800ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உருவாகிய சிறப்பான நிகழ்ச்சியாகும்.

கி.பி. 1800ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஒருவிதச் சிறப்பான மாற்றமும் உருவாகவில்லை. ஒருவித ஆபத்தும் இல்லாமல் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார்கள்.

கம்போடியா, லாவோஸ் வரலாறுகளிலும் கி.பி. 1800ஆம் ஆண்டிலோ, அதனையடுத்திருக்கும் ஆண்டுகளிலோ, சிறப்பான செய்திகள் எதுவும் ஏற்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைக்காலத்திற்குப் பின்தான் இந்நாடுகளின் வரலாறுகளிலே சில சிறப்பான திருப்பங்கள் ஏற்பட்டன.

2. பர்மா

1. பர்மாவின் உள்நாட்டு அமைப்பும் நிருவாகமும்

கி.பி. 1885ஆம் ஆண்டு நவம்பர் வரை முடியாட்சியின் கீழிருந்ததால் பர்மாவின் அரசியல் அமைப்பை ஆராய்ந்து காண்பது இன்றியமையாதது. வழிவழி மரபின்படி மன்னர் அரைத் தெய்வ (Semi-divine) நிலையுடையவர். அரசமாளிகை உலகின் மையமும் கடவுளின் உறைவிடமும் ஆகும். இதைச் சூழ்ந்துதான் சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியவை சுற்றி வட்டமிடுகின்றன. தன்னடக்கமும் தெள்ளறிவும் வளருவதற்காகத் தம் அவையில் பல நன்னடத்தையுள்ள முதிர்ந்த அந்தணர்களைத் தமக்கு அறநெறியையும் (Dharma) பணிவு நலத்தையும் அறிவுறுத்த மன்னர் உறுதுணையாகக் கொள்ளுவர். பர்மாவிற்கு அரசநீதி இந்தியாவிலிருந்து வந்ததால் பர்மிய மன்னர் மனுவின் (Manu) மரபினர் எனக் கருதப்படுகிறர்.

அந்தணர்கள் மன்னரின் சிறந்த ஆலோசகர்களாகப் பணி புரிந்து வந்ததால் பர்மாவில் இறையாட்சி அல்லது புரோகிதர் ஆட்சி (Theocracy) நிலவி வந்ததென நினைக்கக்கூடாது. சமய நிறுவனங்கள் அரசியல் விவகாரங்களில் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கவில்லை. அந்தணர்கள் தங்களுடைய பதவியில் நீடித்திருக்க, மன்னருடைய ஆதரவைத்தான் நம்பியிருந்தார்கள். பதின்மூன்ருவது நூற்ருண்டில் தெரவேதா புத்தமதம் ஓங்கியவுடன் பர்மாவில் இந்துமதச் சாதி வேறுபாடுகளின் மேலிருந்த நம்பிக்கை ஒழிந்தது. மன்னர்பதவியைச் சடங்குகள் மூலம் உண்மையாக்கி உறுதிப்படுத்தவே அந்தணர்கள் பயன்படுத்தப்பட்டனர். கி.பி. 1885ஆம் ஆண்டில் முடியாட்சி ஒழிக்கப்பட்ட காலம் வரை இச்சடங்குகளை அந்தணர்கள் செய்துகொண்டு வந்தார்கள். முக்கியமாக முடிசூட்டுவிழாவிலும் அரசக் குடும்பத் திருமணங்களிலும் அரசர் பேட்டி அளிக்கும் சமயங்களிலும் (royal audiences) அந்தணர்கள் சிறப்பாகப் பங்கெடுத்துக்கொண்டார்கள். பதினெட்டாவது நூற்ருண்டில் மணிப்பூரிலிருந்தும் காசியிலிருந்தும் (Benares) அந்தணர்கள் வரவழைக்கப்பட்டார்கள்.

பர்மிய அவையிலிருந்த வெண்ணிறக் குடையை அரசரும் பட்டத்தரசியுமே பயன்படுத்தலாம். இவ்வகையான ஒரு குடையை வேறு யாராவது பயன்படுத்துவது அரசக் குற்றமாகும். பட்டத்தரசியார் ஒருவர் மட்டுந்தாம் மன்னரிடம் உரையாடத் தொடங்குமுன் கீழே விழுந்து வணங்காமல் உரையாடலாம்.

அரசமாளிகை உலகத்தின் மையம் என்ற நம்பிக்கை இருந்த தால், அந்தண ஆலோசகர்களோடும், சோதிடர்களோடும், நிமித்திகர்களோடும், கணியர்களோடும் ஆலோசனை செய்த பிறகு தான் ஒரு தூய இடத்தில் அரசமாளிகை கட்டப்பட்டது. இவ்வுலக மையத்தின்மேல் அமைக்கப்பட்ட அரசமாளிகையில் மன்னர் வாழ்வதால்தான், அவர் தெய்வ நிலையைப் பெறுகிறார். நான்கு என்னும் எண் சிறந்த குறியானதால் தலைநகரைச் சுற்றி நான்கு சுவர்களும், அரசருக்கு நான்கு முதன்மையான அரசியர்களும் நான்கு முதல் அமைச்சர்களும், நான்கு அரசப் பேரவை ஆலோச கர்களும் இருக்க வேண்டும் என்று நடைமுறையில் கொள்ளப் பட்டது.

அரசமாளிகை உலகத்தின் மையம்,கடவுளின் இருப்பிடமென்ற நம்பிக்கை வேரூன்றியிருந்ததால், அவ்வரசமாளிகை இருந்த தலைநகரைப் பாதுகாக்க வேண்டியது மன்னரின் மிகச் சிறந்த அரசியல் பொறுப்பாகும். தலைநகரத்தை யாராவது ஓர் எதிரி இளவரசர் அல்லது வேறொரு போலி கைப்பற்றினால்கூட மன்னரை அரசியல் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒப்பாகக் கருதப்பட்டது. முடிசூட்டு விழா முடிந்தவுடன், சடங்குகளுடன் மன்னர் தலை நகரத்தைச் சுற்றி வர வேண்டும்; இச் செய்கை அவருக்குப் பேரரசின் மேல் உள்ள அதிகாரத்தைப் புலப்படுத்தும் அடையாள மாகக் கருதப்பட்டது. மன்னர் மாளிகை கடவுளின் கோவிலுக் கொத்த தூய இடமாதலால் அம்மாளிகையில் நுழைய வருபவர்கள் எல்லோரும், தூபிமுனையை (Spire) நெருங்கும்போது தங்கள் ஊர்திகளிலிருந்து இறங்க வேண்டும்; கைக்குடைகளைத் (Parasol) தாழ்த்த வேண்டும். குறியிட்ட இடைவெளிகளில் (இடங்களில்) அச்சத்தோடும் பற்றோடும் தலைவணங்க வேண்டும்; இறுதியில் உண்மையாகவே மாளிகையினுள் நுழையும்போது மிதியடிகளைக் கழற்றிவிட வேண்டும். இச்சடங்குகளை அரசாங்கச் செய்திபற்றி மன்னரைக் காணவரும் ஆங்கிலேய அதிகாரிகள் வெறுத்தார்கள்; தங்களுக்கு இழிவும் அவமானமும் தருவதாகக் கருதினார்கள். ஆங்கிலேயர்கள் முடியாட்சியின் கீழிருந்த போதிலும் பர்மிய முடியாட்சிச் சடங்குகள் வேறு முறையில் அமைந்திருந்த போதி லும், புரிந்துகொள்ள முயலாதது, அவர்களுடைய ஆணவத்தை

யும் அகங்காரத்தையும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளிலுள்ள மக்களின் மேலுள்ள அவர்களின் அவமதிப்பையும்தான் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், இச்சடங்குகள்பற்றிப் பர்மியர்கள் ஒற்றுமை இணக்கம் செய்ய எதிர்பார்த்தது முற்றிலும் தவறு. ஏனென்றால் பர்மிய அரசியல், சமய நடவடிக்கைகளெல்லாம் மன்னரின் அரசுரிமை அதிகாரத்துடன் இணைக்கப்பட்டிருந்தன.

மன்னருடைய சிறந்த கடமை மக்களைப் பாதுகாக்க வேண்டியது. அதிலும் மிகச் சிறந்தது புத்தசமயத்தைப் பாதுகாத்துச் செழித்தோங்கச் செய்ய வேண்டியதாகும் மன்னர் இக் கடமையைச் செய்ததால்தான் பர்மாவில் வாழ்ந்த பர்மிய இனத்தவர்களான பர்மன்கள், மாண்கள், அராகனியர்கள் முதலியவர்கள் மன்னரை ஆதரித்தார்கள். புத்தமதம்தான் பிரிந்திருக்கும் பர்மிய இனத்தாரை இணைத்துப் பர்மா ஒரே நாடு என்ற எண்ணத்தை உருவாக்கி வளர்த்தது. அரசப் பதவியை நாடுபவர்கள் எல்லோரும் தங்களால் புத்த சமயத்தை வளர்க்க முடியுமென்று பறைசாற்றி மக்கள் ஆதரவைத் தேடத் தவறவில்லை.

ஆங்கிலேயர்கள், பர்மாவில் ஆட்சி புரிந்தபோது இப்பர்மிய மனப்பான்மையைப் புரிந்துகொள்ளாததால் புத்த மதத்தை வளர்க்க முயலவில்லை. கி.பி. 1830ஆம் ஆண்டில் அராகன், தென்னுசெரிம் ஆகிய இடங்களில் அடிக்கடி கலகங்கள் ஏற்பட்டதற்குக் காரணம் பொருளாதாரம், நிர்வாகம் ஆகியவை மட்டுமல்ல; தங்களை ஆட்சி புரிபவர்கள் புத்தமதத்தைப் பாதுகாக்கவோ, வளர்க்கவோ முயற்சி எடுக்கவில்லை என்ற மனக் கசப்பும் காரணம் ஆகும். கி.பி. 1852ஆம் ஆண்டில் கீழைப் பர்மாவையும், கி.பி. 1885ஆம் ஆண்டில் பர்மா முழுவதையும் கைப்பற்றியவுடன், ஆங்கிலேயர்களுக்கெதிராக ஏற்பட்ட கலகங்களை முன்நின்று நடத்தியவர்கள் சில சமயக் குருக்கள் ஆவார்கள். தாங்களே புத்தசமயத்தின் பாதுகாவலர்கள் ஆகையால் இச்சமயத்தைப் பாதுகாப்பதற்காக முடியாட்சியை மீண்டும் அமைக்க வேண்டும் என்று பறைசாற்றித்தான் மக்களின் ஆதரவை நாடினார்கள். பர்மிய தேசிய இயக்கத்தின்போதுகூடக் கி.பி. 1930–31ஆம் ஆண்டுகளில் சாயாசான் (Saya San) என்பவர், ஆங்கிலேய ஆட்சியை ஒழித்து மீண்டும் புத்தசமயத்தைத் தழுவிய மன்னர் அவையை அமைக்க வேண்டும் என்று கலகம் செய்தார். ஆனால் வெற்றி கிட்டவில்லை. புத்தமதத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது என்ற பேரொலி எழுப்பி, அரசியல்வாதிகள் மக்கள் ஆதரவைத் தேடுவது பர்மிய அரசியலில் நிலையான இடம்பெற்ற செய்தியாகும்.

மன்னர் குடும்பங்களைத்தவிர வழிவழியாகத் தொடர்கிற பிரபுக்கள் அல்லது பெருமக்கள் பர்மாவில் இருந்ததில்லை. ஆனால், அரசக் குடும்பத்தினர்களை மரபுரிமையாக வருகிற பெருமக்கள் என அழைக்கலாம். பொதுநலத்துறைகளில் இருந்த தலைசிறந்த பதவிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. மியோசா (Myosa) முறை மூலம் இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. 'மியோசா' என்றால் 'பட்டணத்தை உண்பவர்' (eater of the town) அல்லது இளவரசு படிநிலையுடைய நிலமானியம் பெற்றவர் எனப்பொருள். இம்முறைப்படி அவர்கள் தம் அதிகாரத்தின் கீழிருந்த பட்டணங் களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் வரும் வருமானத்தைத் தங்கள் ஊதியமாக எடுத்துக்கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு அதிகாரம் கிடையாது; மன்னர் அவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தால்தான் உண்டு. மன்னருக்கும் பட்டத்தரசிக்கும் அடுத்தபடியாக மதிப்புப்படியிலிருப்பவர் இள வரசர் (Crown prince). பர்மிய மொழியில் இவரை ஐன்சிமின் (Einshemin) என அழைப்பார்கள். அதிகாரிகள் அடங்கிய ஒரு தனி அவை இவருக்கு உண்டு. இவருக்கு ஒரு மெய்க்காப்புப் படை (body guard) உண்டு. அரசியல் நிருவாகத்தில் இவர் சிறப்பாகப் பங்குகொண்டார். இவருக்கு அடுத்தபடியாக அரசியல் சிறப்புப்படியிலிருப்பவர்கள் அரசரின் உடன்பிறந்தோர். இவர் களும் அரசாங்கத்தில் சிறந்த பங்குகொண்டார்கள். அடுத்து மற்ற இளவரசர்களும், உயர்நிலைப் படியிலிருக்கும் பொறுப்புள்ளவர் களும் சிறப்பிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு 'மியோசா' அளிக்கப்பட்டது.

முடியரசுக்கு இருந்த பெருஞ் சிறப்பும், புகழும் அரசு அதிகாரி கள்மூலம் எதிரடிக்கப்பட்டதால் அவர்கள் செல்லும்போது பொதுமக்கள் முட்டிப்போட்டு அமர்ந்து, அவர்களைச் சிறப்பிக்க வேண்டும். ஒரு பர்மியக் குடிக்குக் கிடைக்கும் மிகப் பெரிய சிறப்பு மன்னரின் முதல் அடிமை (King's first slave) ஆவது. உயர்படியிலிருந்த மன்னரிடம் தொண்டு செய்யும் அதிகாரி களுக்கு 'உன்' (Wun) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. 'உன்' என்றால் சுமை (பொறுப்பு—burden) அல்லது சுமைதாங்கி (burden bearer) எனப் பொருள். 'பொதுநலத்துறை ஊழியர்' (Public servant) என்று அழைப்பவர்களுக்கு ஒப்பாக இவர்களைக் கருதலாம். கருநிலை கோட்பாட்டுப்படி (Theary) மன்னரின் பொன்னடிகளின் சுமையைத் தங்கள் தலைமேல் தாங்கிக்கொள்வது இவர்களுக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய சலுகை ஆகும். குற்ற வியல்புடைய சட்டங்களை, மன்னர் அளித்த அதிகாரத்தின்பேரில் இவர்கள் செயல்படுத்தலாம்.

அரசமாளிகையின் பொறுப்பு 'அட்வின்வுன்ஸ்' (Atwin-wuns) என்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. 'அட்வின் வுன்ஸ்' என்றால் 'உட்புறச் சுமைதாங்கிகள்' (interior burden—bearers) எனப் பொருள். பொதுவாக இவ்வதிகாரிகள் மொத்தம் நான்கு முதல் எட்டுப்பேர்கள்வரை இருந்தார்கள். அரசக் குடும்பத்தினர்தாம் 'அட்வின்வுன்'களாகப் பணியாற்ற முடியும். அரசருக்கு அருகே இருந்து பணிபுரிந்து வந்ததால் இவர்களுக்கு மன்னரிடம் மிக்க செல்வாக்கு இருந்தது. பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே இவர்கள் அரசரின் தனிப்பட்ட ஆய்வுரையாளர்களாகவும் (Privy Councillors) பணியாற்றினார்கள். ஆனால் சிறப்பதிகாரப் படியில் 'லுட்தாவு'வை (Hlutdow)விடக் கீழ்ப் படியிலிருந்தார்கள்.

'லுட்தாவு' (Hlutdaw) என்பது மன்னரின் சட்டத்தை நிறைவேற்றுகிற அல்லது செயலாட்சி செய்கிற பேரவை (The Executive Council) ஆகும். இதன் உறுப்பினர்களாக நான்கு 'உன்ங்யீ'கள் (Wungyis) நியமிக்கப்பட்டார்கள். 'உன்ங்யீகள்' என்றால் 'பெரும் சுமைதாங்கிகள்' (Great burden bearers) எனப் பொருள். மத்திய அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பு இவர்களுக்கு அளிக்கப்பட்டது.

செயலாட்சி செய்கிற பேரவைக்குள் கட்டுப்பாடில்லாமல் விவாதங்கள் நடக்கும். 'உன்ங்யீ'களின் பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் எல்லாத் தீர்மானங்கள் மேலும் எல்லா 'உன்ங்யீ'களுக்கும் பொறுப்புண்டு. தீர்மானங்களைச் செயல்படுத்தும் முன் மன்னரின் உடன்பாட்டைப் பெறவேண்டும். 'லுட்தாவு'வின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல் மாற்றியமைப்பது பர்மிய அரசர்களின் வரலாற்றிலே மிக அரிது. ஆனால் தம்மை எதிர்த்தால் 'உன்ங்யீ'களைப் பதவியிலிருந்து நீக்கவும் சிறைப்படுத்தவும் மன்னருக்கு உரிமையுண்டு. அரச ஆணைகள் எல்லாம் 'லுட்தாவு'வின் பெயரிலேதான் வெளியிடப்பட்டன.

அரசாங்க நிருவாகம் பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படவில்லை. பொதுவாக இராணுவம், ஆறுகள், அயல்நாட்டு உறவு, சட்டம், வரி, படைக்கலச்சாலை அரங்கம் (Military Ordinance) முதலியவற்றின் பொறுப்புகளை 'உன்ங்யீ'கள் பிரித்துக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் சிறந்த தீர்மானங்கள் எல்லாவற்றையும் கலந்து 'லுட்தாவு' மூலம் இறுதி முடிவெடுத்தார்கள். நடைமுறையில் 'லுட்தாவு'வின் பொதுநலக் கருவூலத்தின் (Public treasury) திருவாகத்தில் மன்னர் தலையிடுவதில்லை.

'லுட்தாவு' நீதிமன்றமாகவும் செயல் புரிந்தது. குற்றவியல்புடைய வழக்குகள்பற்றி நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக 'லுட்தாவு'விடம் மேல் முறையீடு செய்யலாம். குற்ற இயல்புடைய வழக்குகள்பற்றி நீதிபதிகள் நேர்மையில்லாமல் திறமையில்லாமல் பணிபுரிந்தார்களென முறையிட்டால்'லுட்தாவு' அந்நீதிபதிகளைத் தண்டிக்கலாம்; அந்நீதிபதிகளின் தீர்ப்புகளை மாற்றி அமைக்கலாம்.

மாகாணங்களின் அரசாங்கம் தலைநகரத்தில் தங்கி ஆட்சி புரியும் நான்கு 'மயோவுன்'களிடம் (Myowuns) ஒப்படைக்கப் பட்டது. 'மயோவுன்' என்றால் ஆளுநர் எனப் பொருள். படைத்துறையைச் சார்ந்தனவும் சாராதனவும் ஆகியவை பற்றி, ஆளுநர்களிடம் மிகுந்த அதிகாரங்கள் இருந்தன. நிர்வாகம் நீதி ஆகியவைபற்றிக் கவனிப்பதற்காக 'லுட்தாவு'வைப் போல 'மயோயான்' (Myoyon) என்ற பொது நீதிமன்றம் மாகாணங்களில் இருந்தது. இறப்பு, அடிமை, உறுப்பறுப்பு முதலிய தண்டனைகளைக்கூட 'மயோயான்' அளிக்கலாம். அபராதத்தைச் செலுத்தத் தவறிய கொள்ளைக்காரர்கள் கன்னத்தில் வெடிமருந்துக் குறிகள் இடப்படும். அவர்கள் நெஞ்சிலும் மார்பிலும் அவர்கள் குற்றவாளிகளென்று அறிவிக்கும் பலவிதக் குறிகள் இடப்படும். சிலருக்குக் குடிமை உரிமைகள் மறுக்கப்படும். குற்றம் சாட்டப்பட்டவர்களையும் தயக்கத்துடன் சாட்சியளிப்பவர்களையும் துன்புறுத்தலாம்.

சிறந்த அயல்நாட்டு அதிகாரிகள் வந்தால் தங்கி உபசரிப்பதற்கென்று சிறப்பான தனி இடங்கள் தலைநகரத்தில் ஒதுக்கப் படவில்லை. பொதுவாக அயல்நாட்டு உறவுபற்றிய கடிதப் போக்குவரத்துகள், அயல்நாட்டு அதிகாரிகளைத் தலைநகரத்திற்கு அழைத்து வருவது போன்றவை எல்லைப்பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்த 'மயோவுன்'களின் பொறுப்பாகும். உதாரணமாகக் கி.பி. 1794ஆம் ஆண்டிலும், 1802ஆம் ஆண்டிலும் ஆங்கிலேயர் மைக்கேல் செய்ம்ஸ் (Michael Symes) பர்மாவிற்கு வந்தபோது பெகுவின் 'மயோவுன்' அவருக்கு உபசாரம் செய்து தலைநகரத்திற்கு அழைத்துவந்தார். முதல் பர்மியர்-ஆங்கிலேயர் போருக்குப் பின் இப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 'உன்ங்யீ' என்னும் தகுதியோடு ஒரு பர்மிய அதிகாரி இரங்கூனில் நியமிக்கப்பட்டார். ஒற்றுமை உடன்படிக்கை செயல்படுத்துவதற்கு உரிய பேச்சுகளை இவர் நடத்தினர்.

'மயோவுன்'களின் அதிகாரத்தின்கீழே 'அகுன்வுன்'களும் (Akunwuns), 'சிட்கெஸ்'களும் (Sitkes) பணிபுரிந்தார்கள். 'அகுன்வுன்'கள் என்றால் வரிவாங்கும் அதிகாரிகள் (Tax-Collectors)

மேற்பார்வையாளர்கள் அல்லது கண்காணி எனப்பொருள்; 'சிட்கெஸ்'கள் என்றால் காவல்படைத்துறை அதிகாரிகள். மத்திய அரசாங்கக் கட்டளைகளை 'மயோவுன்'கள் நிறைவேற்ற இவர்கள் உதவி புரிந்தார்கள்.

இதற்கடுத்த படிகளில் இருந்த நிருவாகிகள் 'மயோதுக்யி'கள் (Myothugyis). 'மயோதுக்யி'கள் என்றால் நகரத்தலைவர்கள்(Town Chiefs). நகரப்பக்கங்களிலிருந்த சிற்றூர்களும் மாவட்டங்களும் இவர்களது நிருவாகப் பொறுப்பின்கீழ் வந்தன; பொதுவாக மக்களால் சிறப்பிக்கப்படும் உயர் அதிகாரிகளாக இவர்கள் விளங்கினார்கள். தம்வாழ்நாள் முழுவதும் ஒருவர் 'மயோதுக்யி' பதவியை ஏற்கும் உரிமையுண்டு. தலைமுறை தலைமுறையாக வரும் இப் பதவி ஒரு குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மக்கள் வழக்குகள் முழுவதையும் கவனிக்கவேண்டியது அவர்களின் பொறுப்பு. மக்களுக்கும் அரசருக்கும் இடையே இணைப்புவழியாக இவர்கள் இருந்தார்கள். போரின்போது தம் படையையே 'மயோதுக்யி' பயன்படுத்தலாம். கி.பி. 1800ஆம் ஆண்டில் கீழைப் பர்மாவில் ஒழுங்கு முறைகெட்டுத் தாறுமாறான சமயம், மன்னரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'மயோதுக்யி'கள் இல்லை ஆகையால் கீழைப் பர்மாவில் 'தைக்துக்யி' (Taikthugyi) அல்லது பிரதேசத் தலைவர்கள் (regional headmen) அமர்த்தப்பட்டார்கள். சிற்றூர் மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்தாலும் 'மயோவுன்'னும் 'லுட் தாவு'வும் இவர்களை ஒப்புக்கொண்டதால் இவர்களால் தொல்லையின்றி அதிகாரம் செலுத்த முடிந்தது. கி.பி. 1852ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கீழைப் பர்மாவைக் கைப்பற்றியபோது ஒவ்வொரு மாகாணத்திலும் மூன்றிலிருந்து ஏழுக்குள் 'தைக்துக்யி'கள் பதவியிலிருந்தார்கள். பொதுவாக 'மயோதுக்யி'களோ அவர்களின் உறவினர்களோ வரி செலுத்துவதில்லை.

பர்மியப்படை : பொதுவாக பர்மாவின் தலைநகரத்தில் பன்னிரண்டு காலாட்படை வகுப்பணிகளும், துணைப்படை சிறப்புமுறை படைத்தொகுதிகளும் இருந்தனவாக நம்பப்பட்டது. ஆனால், பர்மாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் தலைநகரத்தின் படைவலிமை இதைவிடக் குறைவு எனக் கருதினார்கள். மன்னர் தீபாவுவின் ஆட்சிக்குப் (1878-1885) பல ஆண்டுகளுக்கு முன்பே பர்மியப் படை வலிமையிழந்தது. ஆங்கிலேயர்கள் பர்மாவின் அருகே ஆட்சிபுரிந்து வந்ததால் பர்மியப்படை போர் செய்து நாடுகளைக் கைப்பற்றும் துணிவை இழந்து செயல்படாமல் தூங்கிவந்ததே இதற்குச் சிறந்த காரணம். அரசத் தொண்டுபுரியத் தக்கநிலை (Royal-Service Status) பெற்றவர்களை 'அக்முதான்' (Ahmudan)

என அழைத்தார்கள். 'மயோதுக்யீ'யின் படைவகுப்பணியிடம் தம் பற்றுறுதியை அளித்த 'அக்முதான்' குடும்பங்களிலிருந்து நாட்டின் நிலைப்படைவீரர்கள் (Professional Standing army) ஒன்றாகக் குவிக்கப்பட்டார்கள். காலாட்படை, பீரங்கிப்படை, குதிரைப்படை, வில்லாட்படை, படகோட்டிப்படை, யானைப்படை முதலியவற்றில் இவர்கள் பணிபுரிந்தார்கள். யாதொரு போர்ப் படை வகுப்பணியும் கீழைப் பர்மாவிலிருந்து தோன்றவில்லை. இரங்கூனில் கைப்பற்றப்பட்ட போர்த்துகீசிய–பிரெஞ்சு-கிறித்தவ பரம்பரையினர்களின் குடும்பங்களிலிருந்துதான் பொதுவாகப் பெரும்பான்மையான அரசர் பீரங்கிப் படையினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். கி. பி. 1800ஆம் ஆண்டுக்குள் சமயம் தவிர ஏனையவற்றில் இவர்களை முழுப் பர்மியர்கள் என்றே அழைக் லாம். பல ஷான் மணிப்பூரிக் குதிரை வீரர்கள் குதிரைப் படையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். ஆனால் கனமான துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு நடமாடும் யானைப்படைப் போர்வீரர்களெல்லாம் பர்மிய இனத்தார்களே.

'அக்முதான்'களின் தகுதிநிலைக்கேற்றவாறு அரசரின் நிலங் கள் வழங்கப்பட்டன. கி.பி. 1826ஆம் ஆண்டுக்குப்பின் மிகுந்த 'அக்முதான்' படைவகுப்பினர்கள் மன்னருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் நழுவிக்கொண்டனர். இதனாலும் பர்மியப்படை வலிமையிழந்தது. ஆங்கிலேயர்களால் இறுதியில் தோற்கடிக்கப்பட்டு நாடிழந்த மன்னர் தீபாவுவின் சிறப்புப் படை அணிவகுப்புக் காட்சியைப் பின்வருமாறு சிவேயோ (Shwayyoe) வருணிக்கிறார் :

'யானைமேல் அமர்ந்திருக்கும் படைத்தலைவர்களுக்குப் பக்க அணியாகத் தனிப்பட்ட காவலர்களும் குடைதூக்கிச் செல்பவர் களும் இருந்தார்கள். பீரங்கிப்படை வீரர்களால் பீரங்கி கொண்டு சுடமுடியாது. வெற்றிலை மென்றுகொண்டும் சளசளவென்று பேசிக் கொண்டும் காலாட்படை வீரர்கள் படையின் நீளணியைக் கலைத்துப் பார்வையாளர்களுடன் உரையாடிக் கொண்டிருந் தார்கள். வழங்க முன்வந்த சுருட்டுகளையும் அவைகளைப் பற்ற வைக்கும் குச்சிகளையும் பேரவாவுடன் பறித்துக்கொண்டார்கள். பிறகு நழுவிக் கீழே விழுவதைப் போலிருந்த தங்கள் சீருடைகளை குறுநடை ஓட்டத்துடன் பிடிக்க முயன்றுகொண்டிருந்தார்கள்.

நிலைப் போர்ப்படையைத் தவிர 'அதி' போர்ப்படை வீரர் களும் (athi conscript) இருந்தார்கள். 'அதி' என்றால் அரசுத் தொண்டு புரியத்தக்க நிலைபெறாத படைவீரர்கள் எனப் பொருள்.

இவர்கள் மாவட்டங்களில் 'மயோதுக்யீ'களின் தலைமையில் பணி புரிந்தார்கள். 'மயோதுக்யீ'களுக்குத் தண்டுத் தலைவர் (Sergeant) தகுதிநிலை அளிக்கப்பட்டிருந்தது. 'மயோதுக்யீ'க்கு அடுத்த படியாக உயர்படிகளிலிருந்த படைத்துறை அதிகாரிகள் 'தாத்மஸ்' (Thatmus) அல்லது அணுக்க முதன்மையர் (Lieutenants); இவர்களின்கீழ் நூறு படைவீரர்களிருந்தார்கள். அடுத்த உயர்படியிலிருந்த அதிகாரிகள் 'தாத்மஸ் தெனுட்சயிஸ்' (Thenat sayes) அல்லது படைப்பிரிவுத் தளபதிகள் (Captains). இவர்களின் கீழே 250 படைவீரர்களிருந்தார்கள். பல படைப்பகுதி முதல்வர்கள் (Colonels) அரசியல் முறையில் செய்த நியமனங்கள். இவர்களுக்கு யானைமேல் சவாரி செய்யவும், பொன் குடைகளை எடுத்துச் செல்லவும் உடன்துணைவர்களை (retainers) அழைத்துச் செல்லவும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது. படைப்பகுதி முதல்வர்களை 'லுட்தாவு'தான் நியமனம் செய்தார். மேம்பட்ட படைப் பெருந் தலைவர் அல்லது 'தெனுட்வுன்' (Thenat wun) பதவி நான்கு 'உன்ங்யீ'களுக்குள் ஒரு 'உன்ங்யீ'க்குக்குத் தான் அளிக்கப் பட்டது.

இனப் பிரிவுகள் : பர்மாவில் ஏழுவகை இனப்பிரிவினர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்குள் பெரும்பான்மையுள்ள இனத்தார்கள் பர்மன்கள்.

பர்மன்கள் (Burmans) : பெரும்பான்மையான பர்மன்கள் மேலைப் பர்மாவிலுள்ள ஐராவதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்தார்கள். ஆகையால், இவ்விடத்தையே நாட்டின் மையமாகப் பர்மன்கள் அமைத்தார்கள்.

ஷான்கள் (Shans) : ஷான் இனத்தார்கள் மேல் ஐராவதி நதிப் படுகைகளிலும் மேலைப் பர்மாவின் மத்தியப் பள்ளத் தாக்கிற்குக் கிழக்கேயுள்ள பீடபூமிப் பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள். பதினாறும் நூற்றாண்டின் இடையிலே தொங்கூ மரபினர் (Toungoo dynasty) ஆட்சிக்கு வருமுன் பல நூற்றாண்டுகள் ஷான் அரசர்கள் மேலைப் பர்மாவை ஆண்டு வந்தார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்த ஷான் இளவரசர்கள் (Sawbwa : Shan Princes) பர்மாவிற்குக் கப்பம் செலுத்தி வந்தனர். பதிலாக ஷான் உள்நாட்டு விவகாரங்களில் பர்மிய மன்னர்கள் தலையிடாமல் இருந்தார்கள். கி.பி. 1885ஆம் ஆண்டில் பர்மாவை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியவுடன் இதே தகுநிலை ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ்த் தொடர்ந்து செயல்பட்டது. பர்மாவிலுள்ள சிறுபான்மை இனத்தார்களுக்குள் மிகப் பெரும்பான்மையான அளவிலிருந்தவர்கள் ஷான் இனத்தார்கள்.

மாண்கள் அல்லது தலேங்ஸ் (Mons or Talaings) : ஷான்களுக்கு அடுத்தபடியாகப் பர்மாவில் வாழ்ந்த பெரும்பான்மையான சிறுபான்மை இனத்தார்கள் மாண்கள். வடக்குத் தென்னசெரிம் கடற்கரைப் பகுதிகளும் சீமைச் சிட்டாங் (Sittang) ஐராவதிப் பள்ளத்தாக்கிலும் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பர்மன்களும், இவர்களும் ஒருவரை ஒருவர் எதிரிகளாகக் கருதிக்கொண்டே வாழ்ந்து வந்தார்கள். ஒரு காலத்தில் பெகுமாகாணம் மாண்களின் தலைநகரமாக விளங்கியது. கி.பி. 1824ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் இக் கீழைப் பர்மாப் பகுதிகளுக்கு வந்தபின் கழிமுகப் பகுதிகளில் வாழ்ந்த தலேன்ஸ் மக்கள் கி.பி. 1824–1825ஆம் ஆண்டுகளில் நடந்த போரின்போது ஆங்கிலேயர்களுக்கு உதவினார்கள். ஆனால், போர் முடிந்தபின் பர்மிய அரசாங்கம் இவர்களைத் துன்புறுத்தியதால் 10,000 மாண்களுக்கு மேற்பட்டவர்கள் தென்னசெரிம் பகுதிகளுக்கு ஓடிச் சென்றார்கள்.

அராகன் இனத்தார்கள் : இவர்கள் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்தார்கள். அராகன் அரசு பல நூற்றாண்டுகள் உரிமையோடு இயங்கி வந்தது. கி.பி. 1784ஆம் ஆண்டில் அராகன் பகுதியைப் பர்மா கைப்பற்றியது.

காரேன்கள் : பர்மன்களுக்கும் காரேன்களுக்கும் மொழியிலும் பண்பாட்டிலும் வேறுபாடு இருந்தது. காரேன் இனத்தார்களுள் மூன்று மொழிப் பிரிவினர் இருந்தனர். எஸ்காவ்ஸ் அல்லது பர்மியக் காரேன்கள் (Sqaws or Burmese Karens) பெரும்பான்மையாக ஐராவதிக் கழிமுகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்ந்தார்கள். இரண்டாவது பிரிவினரான பிஓங் அல்லது தலேங்காரேன்கள் (Pwos or Talaing Karens) பாஸைன் (Bassein), தாடோன் (Thaton), மவுல்மயின் (Moulmein) ஆகியவற்றைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். எஸ்காவ் இனப் பிரிவினர், பீவிகாரேன்கள் (Bew karens) சிட்டாங்கிற்கும் கீழைச் சால்வின் ஆறுகளுக்கும் இடையே உள்ள கரடுமுரடான மலைப்பகுதிகளில் வாழ்ந்தார்கள். அரசியலிலே பர்மாவின் வரலாற்றிலே இவர்கள் சிறந்த பங்குகொள்ளவில்லை. இவர்கள் ஒரு நாட்டுப்புற இனத்தினர்கள். தங்களுடைய வழிவழி மரபுப் பண்புகளையே பின்பற்றிய காரேன்கள் பர்மிய அரசர்களின் பொது நலத் துறைகளில்கூடப் பணிபுரியவில்லை. பர்மன்களுடனும் மாண்களுடனும் இவர்கள் கலந்து பழகவில்லை. ஏறத்தாழ எல்லாக் காரேன்களுக்கும் படிப்பெழுத்துத் தெரியாமல் இருந்தது. இவர்களை மலைப்பகுதிகளிலுள்ள 'வெறிகொண்ட கால்நடைகள்' எனப்

பர்மன்கள் இழிவாகக் கூறினார்கள். ஆங்கிலேய ஆட்சியின்போது இவர்களின் நாகரிகமற்ற நிலை மாறத் தொடங்கியது.

சின்கள் (Chins) : வடமேற்குப் பர்மாவின் மலைப்பகுதிகளில் வாழ்ந்த காட்டுமிராண்டி இனத்தார்கள் இவர்கள்.

கசின்கள் (Kachins) அல்லது ஜிங்பாவு (Jingpaw) : நாகரிகமற்ற இவ்வினக் குழுவினர் மேலைப்பர்மாவில் உள்ள மலைப் பகுதிகளில் வாழ்ந்துவந்தார்கள். சிறுபான்மை இனத்தார்களுக்குள் பர்மியர்களின் அதிகாரத்தை மிகக்கடுமையாக எதிர்த்த இனப் பிரிவினர் கசின்கள். பொதுவாகக் கொள்ளையடித்து மற்றவர்களை அச்சுறுத்தி இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

சமூக அமைப்பு : இஸ்லாம் சமயம் மலேய் சமூக அமைப்பை உருவாக்கியதுபோல் புத்தமதம் பர்மியச் சமூக அமைப்பை உருவாக்கியது. ஹீனயான புத்தமதம் பர்மியர்களின் ஒவ்வொரு சமூக அரசியல் நடவடிக்கையையும் விதிமுறைகளுடன் வரையறுத்தது. மக்களால் மிகவும் மதிக்கப்பட்டது சங்கா (Sangha) அல்லது துறவிமடம். இத்துறவிமடங்கள் 'மயோதுக்யீ' அமைப்பு ஆகியவற்றின் மூலம்தான் பர்மியச் சமுதாயத்தில் கூட்டொருமைப்பாடு மலர்ந்தது.

அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய முறைகளைப் புத்தமதம் அளித்தது. துறவிகள் மக்களின் நன்மதிப்பையும் மரியாதையையும் பெரிதளவில் பெற்றிருந்தார்கள். துறவிகளுக்குப் பிச்சை அளித்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. கல்வி, இலக்கியம், படிப்பு ஆகியவை யாவும் துறவிகளிடமே இருந்தன. பொதுவாக எல்லாப் பர்மியச் சிறுவர்களும் மூன்று ஆண்டுகள் மதகுருப் பயிற்சி பெறவேண்டும். ஆனால், மடத்துறவியாக வாழ்க்கை முழுவதும் இருப்பது ஒருவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. மிகச்சிறந்த மடத் துறவிகளை அரசியல் நடத்துவதற்கு மன்னர் பயன்படுத்திக் கொண்டார். மன்னர் மின்டன் மடத்தைவிட்டு வெளியேறியவுடன் நேராக அரசர் பதவியேற்றார்.

மடத்துறவிகளின் ஆதரவை எல்லாப் பர்மிய மன்னர்களும் நாடினார்கள். அதே சமயத்தில் அரசரால் நியமிக்கப்பட்ட புத்த சங்கத்தின் தலைவர்கள் (Thathanabaing) மூலம் மன்னர் சங்கத்தைக் கட்டுப்படுத்தினர். பொதுவாகப் புகழ் பெற்ற பொங்யீகளில் (Pongyis) அதாவது மிகச் சிறப்பு வாய்ந்த புத்த சமயக்குரு ஒருவரைத் ததனபெய்ங்காக (Thathanabaing) மன்னர்

நியமித்தார். ஆனால் நியமிக்கும் மன்னர், பதவியிலிருக்கும் வரைதான் இவர்களும் பதவியில் இருக்க முடியும்.

பொருளாதார அமைப்பு : பர்மாவின் தலைநகரங்கள் பொதுவாக உட்பகுதிக்குள் அமைக்கப்பட்டதால் கடல் வாணிபத்தின் சிறப்பினைப் பர்மிய மன்னர்கள் அறியவில்லை. ஆகையால் பர்மாவில் வாழ்க்கைப்படி அளக்கும் (subsistence economy) பொருளாதார அமைப்புத்தா னிருந்தது. கழிமுகப் பகுதிகளை அரிசி அளிக்கும் அட்சய பாத்திரம் எனக் கூறலாம். மலைப்பகுதிகளில் மிகுந்த அளவில் தேக்கு மரங்கள் கிடைத்தன. வறண்ட பகுதிகளிலிருந்து பருத்தி, எண்ணெய், கோதுமை, பார்லி, கம்பு முதலியன கிடைத்தன. கெம்புக்கல் மற்றச் சிறப்பு மிக்க மணிக் கற்கள் வடக்கிலிருந்து வந்தன. ஆனால் இவை அரசரின் தனி உரிமையிலிருந்தன. பொன்னும், வெள்ளியும் அரசரின் தனி உரிமைகள்.

பர்மாவின் பொருளாதார நடவடிக்கையின் மையமாகத் தலைநகரம் விளங்கியது. நாட்டின் செலாவணி வெள்ளி. இதைப் பர்மியர்கள் டிகல் (Tical) என அழைத்தார்கள். கி.பி. 1830ஆம் ஆண்டில் ஒரு டிகல் மதராஸிலிருந்த ஒரு ரூபாய்க்கு ஈடாகக் கருதப்பட்டது. கடன் 4 விழுக்காடு வட்டிக்கு அளிக்கப்பட்டது.

மன்னரின் வருமானங்கள் : தந்தம், வெள்ளி, மணிக்கல், அம்பர் (amber), நீலம்—மாணிக்கம் ஆகிய மணிக்கற்கள் முதலியன அரசருக்கே உரியவை. மாகாணங்களிலிருந்த ஆளுநர்கள் மொத்த வருமானத்திலிருந்து 60 விழுக்காட்டிலிருந்து 30 விழுக் காடு வரை ஆண்டுதோறும் மன்னருக்கு அனுப்பினார்கள். தவிர, ஷான் அரசர்கள் கப்பம் செலுத்தினார்கள்; பொதுவாகக் குதிரை களும், வெள்ளியும் கப்பமாகச் செலுத்தினார்கள். கி.பி. 1800 ஆம் ஆண்டில் இறக்குமதிப் பொருள்களின் மீது மன்னர் 10 விழுக்காடு வரி விதித்தார். ஏற்றுமதியாகும் பொருள்களின் மீது 5 விழுக்காடு வரி விதிக்கப்பட்டது. ஆறுகளில் செல்லும் படகுகளின்மீது விதிக்கப்பட்ட வரியும் மன்னருக்கு அளிக்கப்பட்டது. விழாக்கள் கொண்டாடும்போது அரசரால் பதிவு செய்யப்பட்ட செல்வந் தர்கள் மன்னருக்குப் பரிசளிக்க வேண்டும். பொதுவாக ஓராண்டின் விளைச்சல்களில் 10 அல்லது 15 விழுக்காடு வரியாகச் செலுத்தப்பட வேண்டும். பழமரங்கள், மீன் பிடித்தல், மரம் வெட்டுதல், இடை யீட்டான் பணிகள், சிறு படகுகள், மரப்பிசின் முதலியவற்றின் மீதும் மன்னர் வரி விதித்தார்.

முடிவுப் பகுதி :

கி.பி. 1795–1796 ஆம் ஆண்டுகளில் பர்மாவிற்கு வந்த மைக்கேல் செய்ம்ஸ் பர்மியர்களைப்பற்றிக் கூறுகிறார் :

'மற்றக் கீழ்த்திசை நாடுகளைப்போல் பர்மியர்களும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் நாகரிக மக்களுக்குரிய பண்புகளும், நன்கு பயிற்சி பெற்ற அறிகுறிகளும் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. அவர்களின் சட்டங்களில் தெள்ளறிவும், அற நிலைகளும் அடங்கியிருக்கின்றன. பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகளைவிட இவர்களின் காவல்துறை ஒழுங்குணர்வு நிறைந்ததாய் இருக்கிறது; இயல்பாகவே, அந்நியர்களுக்கு விருந்தோம்புதல் செய்தார்கள்; அவர்கள் நடத்தையில் ஆண்மையுடைய நேர்மையை நோக்கலாம். நவ நாகரிகப் பொய் புரட்டுகளை இவர்களிடம் காண்பது அரிது; ஒருவருடைய படிநிலைக்குத் தகுந்தவாறு சிறப்பளிப்பதில் இவர்கள் தவறு செய்வதில்லை. கல்வியறிவு பரவலாக இருக்கிறது. மெக்கானிக்குகள், ஏர் உழவர்கள், தண்ணீர் விற்பனை செய்பவர்களுக்கும்கூட எழுதப்படிக்கத் தெரிகிறது. மற்ற நாடுகளின் பண்பு, பழக்க வழக்கங்களுடன் உறவு ஏற்பட்டால், இவர்களின் நிலப்பண்ணை உரிமை அமைப்பு வலிமையிழக்கும். உள்நாட்டுக் கலகத்தைத் தூண்டிவிடாமலிருந்தால் அல்லது அயல்நாட்டாட்சியைப் பர்மாவில் திணிக்காமலிருந்தால் பர்மியர்கள் வளமுடைய அறிவுறுத்தும் வழியில் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை'.

கி.பி. 1835–1836ஆம் ஆண்டுகளில் பர்மாவிற்கு வந்த ஓர் அமெரிக்கச் சமயப் பரப்பாளர் கூறுகிறார் : 'தன்னடக்கம் எங்கும் இருக்கிறது. மது, சாராயம், அபினி போன்றவைகளைப் பயன்படுத்துவதற்குக் கண்டிப்பாகத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. பொது மக்களும், இப் பழக்கவழக்கங்களை வெறுப்புடன் நோக்கினார்கள். நான் பர்மாவில் வாழ்ந்த காலம் முழுவதும் அடக்கமற்ற, நடைநயமற்ற, வன்முறையைப் பர்மிய நடத்தையில் காணவில்லை. எப்பொழுதும் வயதானவர்கள் மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள். அமைதி வாய்ந்த நடத்தையும் தன்னடக்கமும் எல்லாப் பர்மிய இனத்தார்களிடமும் இயல்பாகவே இருந்தன. ஆண்கள் சினமடைவது அரிது; அவர்களுக்குள் சண்டைபோடுவது இன்னும் அரிது. பொதுவாகத் திருட்டும் சிறிதளவே இருந்தது. இக் குற்றங்களை இழிவான சிலரே செய்தார்கள். மக்களுக்கு அரசாங்கப் பாதுகாப்புக் குறைந்திருந்த போதிலும், குற்றம் புரியும் செயல்கள் பொதுவாக நிலவியிருக்கவில்லை என்பது வியப்பை அளிக்கிறது.

பொதுவாக எல்லாப் பர்மியர்களும் பொய் பேசுகிருர்கள். மற்றவர்கள் கூறுவதை இவர்கள் நம்புவதில்லை. ஆகையால் எல்லா நடவடிக்கைகளும், குறுஞ் சூழ்ச்சியுடன் மிகுந்த வாக்குவாதத்திற்குப் பிறகு செயல்படுத்தப்படுகின்றன பொய் கூறுவதைக் கண்டித்த சமயம்கூட வெட்கப்படுவதில்லை. இவ்வகையான வெறுப்பூட்டுகின்ற அளவு இறுமாப்புடைய மக்களை (மன்னரிலிருந்து, சிறிய அதிகாரிவரை) நான் பார்த்ததில்லை. ஒருவருடைய படிநிலைக்குத் தகுந்தவாறு சிறப்பும் மரியாதையும் அளிப்பதில் பர்மியர்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கிருர்கள்'.

'மேலே கூறிய குணங்களைத் தவிரப் பொதுவாகப் பர்மியர்களிடம் பேராசைக் குணமில்லாதிருந்தது; சமய நடவடிக்கைகளில் பொறுக்கும் தன்மையைக் காண முடிந்தது. கலகங்கள் ஏற்பட்ட காலங்களைத் தவிர, பொதுவாகப் பர்மியக் கிராம மக்கள் கட்டுப்பாட்டுடனும், சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்தும் நடந்தனர். செல்வத்தைவிட ஒருவருடைய சமுதாயப் படிநிலைக்குத்தான் மிகுந்த மதிப்பளிக்கப்பட்டது. தன்மதிப்பையும், தன் மரியாதையையும், நியாயமற்ற முறையில் தங்கள் உரிமையையும், கட்டுப்படுத்தக் கூடாதென்ற மனப்பான்மை பர்மியர்களிடம் வலுத்திருந்தது. துடுக்குத்தனத்திற்குப் புகழ்ச்சி கிடைத்ததால் கொள்ளையடிக்கும் தன்மை சிறப்பாகக் கலகங்கள் ஏற்படும்போது வெளிப்பட்டது. உயர்ந்த அதிகார இருக்கையில் இருந்த பர்மியர்கள் பொதுவாக ஆணவமும் ஆடம்பரமும் உள்ளவர்களாய் இருந்தார்கள்; அதிகாரம் அச்சமூட்டியது; ஆட்சி புரிந்த 'மியோசாக்' களும் (Myosas), மயோவுன்களும் தங்கள் அதிகாரங்களைத் தகாத வகைளில் செலுத்தியதால் மக்கள் அரசாங்கத்தை வெறுத்தார்கள். பொதுவாக நெருப்பு, தண்ணீர், திருடர்கள், தீயகுணமுள்ள மனிதர்கள், அரசாங்கம் ஆகிய ஐந்தும் பல உயிர்களைக் கொள்ளை கொள்ளும் நோய்களைப் போல ஒதுக்கி, விலக்கி வைத்து எட்டியிருக்க வேண்டுமென மக்கள் கூறினுர்கள். பல கோடி மக்கள் அடங்கிய நாட்டைப்பற்றி இவ்வாறு பொதுவாகக் கூறுவது முற்றிலும் உண்மையாக இராதென நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனுலும், இவ்வகையான கருத்துகள் மூலம் பத்தொன்பதாவது நூற்றுண்டிலிருந்த பர்மியர்களைப்பற்றி நாம் ஓரளவு புரிந்து கொள்ளலாம் என்று கூறினுல் மிகையாகாது.

ஆங்கிலேயர்கள், பர்மாவை ஆட்சி புரிவதற்கு முன்பு பர்மிய அரசியல் அமைப்பில் பலவகையான குறைகளிருந்தன. அரசாங்க நிருவாக அமைப்பிலும், அவை இயங்கிய முறைகளிலும் சிறப்பாகத் தலைநகரத்திற்கு வெளியே மிகப் பழையனவாக இருந்தன,

மன்னரின் தனித்தன்மை ஆட்சியும் மன்னர் பதவிக்காக ஏற்பட்ட நிலையான குழப்பங்களும் நாட்டுப்புறப் பகுதிகளில்கூட நிலையில்லாத சூழ்நிலையை உருவாக்கின. தலைநகரத்திற்கும், நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் உள்ள போக்குவரத்து வசதிகள் மிகவும் இழிந்த நிலையிலிருந்தன. மியோசா நிலமானிய அமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தியது; தலைமுறை தலைமுறையாக வரும் உள்ளூர்த் தலைவர்களிடம்தாம், மக்கள் நம்பிக்கையையும், பற்றையும் காட்டினுர்கள்; இவையெல்லாம் முழு வளர்ச்சியடையாத அரசியல் அமைப்புத் தன்மையைக் காட்டுவன ஆகும். மேலும் பர்மாவிலுள்ள பல்வேறு இனத்தார்களுக்குள் மிகுந்த வேற்றுமை இருந்ததால் இவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரே குடி உரிமையுடைய அமைப்பை உருவாக்க முடியவில்லை. பர்மிய மொழியைக் கற்றறிந்த ஆண்கள் எங்கும் பரவியிருந்ததாலும், புத்த சமயப் பற்றின் மூலம் வளர்ந்த நன்னடத்தையாலும், 'மன்னர் இறைவனுக்கு ஒப்பாவார்' என்ற அரசப்பற்று எல்லா மக்களிடையே நிலவியிருந்ததாலும், மன்னர் புத்த சமயத்தை ஆதரித்துப் பராமரித்ததாலும் நாட்டை ஒன்றுபடுத்தும் உணர்ச்சிகள் வளர்ந்தன. ஆனுல், ஆங்கிலேய ஆட்சி பர்மாவிற்கு வந்தவுடன் இவ்வழிவழி மரபு நாட்டு உணர்ச்சிகள் வன்மையிழந்தன.

மன்னர் போதவ் பாயா (1784–1824)

மன்னர் போதவ்பாயாவின் சியாம் அராகன் போர்களினுல் (1783, 1786, 1794, 1798) அஞ்சிய அராகன், மாண், காரேன் ஆகிய இடங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு ஓடி ஒளிந்தார்கள். முன்பு உழுது பயிரிடப்பட்ட கீழைப் பர்மா, அராகன் ஆகிய பகுதிகளின் நிலங்கள் காடுகளாய் மாறின. நகரங்களும், மாகாணங்களும் மக்களில்லாத வெற்றிடங்களாக ஆயின. அமைதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக மன்னர் போதவ்பாயா ஒரு பாலைவனத்தை உருவாக்கினுர் எனக் கூறலாம்.

மேலும், நிருவாகப் பொறுப்புகளைத் தம்முடைய முதல் இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் மன்னர் போதவ்பாயா புறக்கணித்தார். அவருடைய மத வெறி உணர்ச்சி இதற்கு ஒரு சிறந்த காரணம். வெறி கொண்டு புத்த விகாரங்களைக் கட்டுவதில் கடுமையாக ஈடுபட்டார். சிறப்பாக மின்கூனில் (Mingun) அவர் 500 அடியுள்ள தூபிமுனை கட்ட முயன்றுர். மன்னர் மிகுந்த வரியாகப் பணத்தை மக்களிடம் இருந்து பறித்ததாலும், கொடுங்கோல் ஆட்சி செய்ததாலும் மேலைப் பர்மா வளமற்ற நாடாய்த் தோற்றமளிக்கிறதெனக் கி.பி. 1802ஆம் ஆண்டில் பர்மாவிற்கு வந்த

மைக்கேல் செய்ம்ஸ் கூறினர். மன்னர் தம் பொறுப்புகளைப் புறக்கணித்ததால், சட்டத்தை மீறி மக்கள் நடந்தார்கள்.

பாக்யிதாவு (1819-1837)

பாக்யிதாவு ஆட்சிக்கு வந்த பிறகு போதவ்பாயாவின் புத்த விகாரத் திட்டங்களை விட்டொழித்தார். மக்கள் மூன்று ஆண்டுகள் வரி செலுத்த வேண்டாமென்ற சட்டத்தை வெளியிட்டார். தலைநகரை மீண்டும் அவாவிற்கே (Ava) மாற்றினர்.

முதல் பர்மியர்-ஆங்கிலேயர் போரில் மாண்களும், காரேன்களும் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்ததால் பல மாண், காரேன் நாட்டுப்புறப் பகுதிகளைப் பாக்யிதாவு அழித்தார். கி.பி. 1826-1827 ஆம் ஆண்டுகளில் பாக்யிதாவுவின் நடவடிக்கையால் கீழைப் பர்மா முழுவதும் சிலகாலம் பஞ்சம் நிலவியது; ஆகையால் இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. பல ஆண்டுகள் இரங்கூனிலிருந்து ஹென்ஜாடா (Henzada) வரை வாழ்ந்த சிற்றூர் மக்கள் எல்லோரும் மிக இழிந்த ஏழ்மை நிலையிலிருக்க வேண்டியதாயிருந்தது. கி.பி. 1830 ஆம் ஆண்டில் பிரோமில் மக்களிடமிருந்து பறித்த பணத்தில் நான்கில் ஒரு பங்கை அரசு அதிகாரிகள் எடுத்துக்கொண்டார்கள். நெருக்கடி நிலையின்போது இச்சூழ்நிலை மேலும் இழிநிலையுற்றது. அதிகாரிகள் மக்களைப் பயமுறுத்தி இலஞ்சமும், அபராதமும் வாங்கினர்கள்.

பாக்யிதாவுவின் கடைசிக்காலத்தில் இளவரசர் தாரவாதிக்கும், மென்தாக்யீயிக்கும் உள்நாட்டுச் சண்டை மூண்டபோது, பர்மா முழுவதும் கொள்ளைக் கூட்டங்களால் ஏற்படும் அட்டூழியங்களைப் பற்றிய அச்சம் நிலவியது. கி.பி. 1836-37 ஆம் ஆண்டுகளில் இச்சூழ்நிலையைக் காவலர்களால் அடக்கி ஒடுக்க முடியவில்லை. ஆறு செல்லும் வழிகளெல்லாம் கொள்ளையர்கள் பதுங்கித் தாக்கியதால் மக்கள் வேலிபோட்ட கிராமங்களில் அடைபட்டு நெருக்கமாய் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டு வாழ்ந்தார்களென ஓர் அயல்நாட்டார் குறிப்பிடுகிருர்.

மிண்டன்மின் (1852-1878)

பர்மாவை ஆண்ட மன்னர்களுக்குள், ஒரு சிறந்த மன்னர் மிண்டன்மின். பத்தொன்பதாவது நூற்றுண்டில் ஆட்சிபுரிந்த பர்மிய மன்னர்களுள் இவர் ஒருவர்தாம் பர்மாவை முன்னேற்ற வழியில் செலுத்த முயன்றுர். அயல்நாடுகளுக்குத் தூதுக் குழுக்களை அனுப்பி, பின்பு அவர்கள் ஆலோசனையைக் கேட்டுப்

பல நிருவாகச் சீர்திருத்தங்களைச் செய்தார். நாட்டிலுள்ள நில மானிய அமைப்பைக் கலைத்து மத்திய அரசாங்கத்தை வலுப் படுத்த வேண்டுமென்பதே அவரின் முக்கிய நோக்கம்.

ஆங்கிலேயர்கள் கீழைப் பர்மாவைக் கைப்பற்றியதால் இனி மேல் அப்பகுதியை மியோசா திட்டத்திற்குப் பயன்படுத்த முடியாது. ஆகையால் கி. பி. 1861ஆம் ஆண்டில் மன்னர் மிண்டன்மின் மியோசா அமைப்பையே கலைத்தார். அரசக் குடும் பத்தினருக்கும் அரசியல் அதிகாரிகளுக்கும் இனிமேல் கிராமங்கள், மாவட்டங்களிலிருந்து நிலமானிய ஊதியமும் வருமானத்திலிருந்து உதவிப் பணமும் அளிக்கப்படும். ஊதியம் அளிப்பதற்காகத் தாத்தமேதா வருமான வரி (Thathameda income tax) மேலைப் பர்மா முழுவதும் மாண்டலேயைத் தவிர விதிக்கப்பட்டது. தாத்தமேதா என்றால் வேளாண்மையைத் தவிர மற்ற வருமானங் கள்மேல் மேலைப் பர்மாவில் விதிக்கப்பட்ட வரி எனப் பொருள். ஒவ்வொரு குடும்பமும் மூன்று டிகல்கள் (ticals) கொடுக்க வேண் டும் என முடிவு செய்யப்பட்டது. நாட்டின் மொத்த வருமானத் தில் மூன்றில் இரண்டு பங்கு இவ்வரி மூலம் கிடைத்தது. 1885ஆம் ஆண்டில் இதுவே குடும்பத்திற்குப் பத்து டிகல்களாக (tical) உயர்ந்தது. முதல் இருபது ஆண்டுகள் இம்முறை நன்முறையில் செயல்படுத்தப்பட்டது. ஊதியம் அளிப்பதற்காக மற்ற வரு மானங்களும் பயன்படுத்தப்பட்டன: (1) அரசர் தனி உரிமையி லிருந்த மணிக்கல் மரம், பெட்ரோல், சுங்கவரி மூலம் கிடைக்கும் வருமானம்; (2) அரசர் நிலங்களிலிருந்து கிடைத்த வாடகைகள் (3) ஷான் அரசர்கள் செலுத்திய கப்பம். ஆனால் இவ்வருமானத் தைப் புதுத் தலைநகரமான மாண்டலேவைக் கட்டுவதற்கும் அதனுள் ஒரு புத்த விகாரத்தைக் கட்டுவதற்கும் பயன்படுத்திய தால் மன்னரின் புதிய திட்டத்திற்குத் தடைகள் வந்தன. மிண்டனுக்குப் பின் வந்த மன்னரின் ஆட்சியின்போது தாத்த மேதா வரித் திட்டம் சீர்குலைந்தது.

மன்னர் மிண்டன் மற்றொரு திட்டத்தின் மூலம் நிர்வாக அமைப்பைச் சீர்ப்படுத்த முயன்றார். புதியதாகப் பத்துக் 'காயய்ங் வுன்' (Kayaingwun) நியமிக்கப்பட்டார்கள். 'காயய்ங்வுன்'கள் என்றால் ஆணையர்கள் அல்லது மாவட்ட மேற்பார்வையாளர்கள் எனப் பொருள். மாவட்ட 'மயோவுன்'கள் இவர்களின் மேற்பார்வை யின்கீழ் வந்தார்கள். ஒவ்வொரு மயோவுன் நீதிமன்றத்தையும், இவர்கள் ஓர் ஆண்டில் மூன்று முறை பார்வையிட வேண்டும். நிர்வாக விவகாரங்களைப் பற்றி மாதம் இருமுறை 'லுட்தாவு'க்குச் செய்தி அனுப்பவேண்டும். இவர்களுக்கு நீதி வழங்கும் கடமைகளை

அளிக்கவில்லை என்றாலும், 'மயோவுன்'கள் குற்றவாளிகள்பற்றி எடுக்கப்பட்ட தீர்ப்புகளை இவர்கள் மறு ஆய்வு செய்யலாம். தண்டனை மிகக் கடுமை என இவர்கள் நினைத்தால் அவ் வழக்கு களை 'லுட்தாவு'விடம் ஒப்படைக்கலாம்.

கி.பி. 1861ஆம் ஆண்டில் மிண்டன்மின் உலோகப் பணத்தை அறிமுகப்படுத்தினார். முதல் முறையாக நாணயத்தை உருவாக்கு வதற்காக நாணயக் கம்பட்டக் கூடம் (mint) பர்மாவில் அமைக்கப் பட்டது; தொழிற்சாலைகளை அவர் நிறுவினார். ஆனால் வெற்றியடைய வில்லை. மேலைநாட்டு முறைகளைப் பயன்படுத்தி நிலக்கரிச் சுரங்கம், இரும்புச் சுரங்கம் ஆகியவற்றை வளர்க்க ஊக்கமளித்தார். இப் புதுமுறை மக்கள் புரிந்துகொள்ள அரிதாக இருந்ததால், சிறிதளவு வெற்றியே கிடைத்தது. ஐராவதியின் மூலம் ஆங்கிலேயப் பர்மா வுடன் வாணிகத் தொடர்புகொள்ள ஊக்கமளித்தார்; இதற்காகப் பல நதி நீராவிக் கப்பல்களை விலை கொடுத்து வாங்கினார். கீழைப் பர்மாவுடன் வாணிகத் தொடர்புகொள்ள ஊக்கமளித்த போதிலும், நதி வாணிகச் செல்வழிகளில் நியமிக்கப்பட்ட சுங்கவரிகளை நீக்க மறுத்தார். நாட்டின் வருமானத்திற்கு இவ்வரிகள் தேவையாய் இருந்தன.

மிண்டன் புத்தசமயத்தில் மிக்க பற்றுடையவராயிருந்ததாலும் துறவியாய்ப் பல ஆண்டுகள் வாழ்ந்ததாலும், அச்சமயத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார். புதுத் தலைநகரமான மாண்டலே ஒரு புத்தமதக் கல்வி மையமாக மாறியது. பல புத்த விகாரங் கள், மாண்டலேயில் கட்டப்பட்டன. பாலித் திரு நூல்களிலிருந்து (Pali Scriptures) தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட் பகுதிகள் இவ் விகாரங்களில் பொறிக்கப்பட்டன. 1871ஆம் ஆண்டில் மாண்ட லேயில் ஐந்தாவது புத்த சங்க மாநாடு (Fifth Great Buddhist Council) ஒன்றைத் தொடங்கி வைத்தார். ஆங்கிலேயர்கள் அனுமதியுடன் இரங்கூனிலுள்ள சிவிதாகன் புத்த விகாரத்தில் (Shwe Dagon Pagon) பொன்குடை நுனிமுனை அமைத்தார். அவர் கட்டிய சிறந்த புத்த விகாரம் மாண்டலேயிலுள்ள அடுமாசி விகாரம் (Atumashi Pagoda); இரண்டாம் உலகப் போரில் இது அழிக்கப்பட்டது.

2. போதவ்பாயா—பர்மாவும் ஆங்கிலேயர்களும்

பத்தொன்பதாவது நூற்றாண்டில் பர்மியர் வரலாற்றிலே நடந்த சிறப்பு நிகழ்ச்சி கி.பி. 1886ஆம் ஆண்டிலே ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கைப்பற்றியதே ஆகும்.

ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கைப்பற்றுவதற்காகப் பர்மியர்களுடன் கி.பி. 1824ஆம் ஆண்டிலே மூன்று முறை போர் புரிய வேண்டியிருந்தது. இதன் விளைவால் (1) ஆங்கிலேயர்களின் ஆட்சி இந்தியாவிலிருந்து பர்மா வரை பரவியது. (2) பர்மிய அரசர் அலங்பாயாவால் (Alaungpaya) கி.பி. 175ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கொன்பாங் மரபினரின் (Konbaung dynasty) ஆட்சி முடிவடைந்தது. (3) ஆகையால் பர்மாவில் முடியாட்சி முறை குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியுடன் தொடர்புகொண்டதாலும் அராகன் (Arakan) எல்லைபற்றி ஆங்கிலேயர்களுடன் சச்சரவு மூண்டதாலும் இறுதியில் பர்மா தன் உரிமையையே இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

1784ஆம் ஆண்டில் மன்னர் போதவ்பாயா (Bodawpaya) அராகன் (Arakan) நாட்டைக் கைப்பற்றினர். இதனால் பர்மாவின் எல்லைப்பகுதி பிரிட்டிஷ் இந்தியாவைத் தொட்டது. அராகன் நாட்டைக் கைப்பற்றியதால் பர்மாவின் வரலாற்றில் சங்கிலிபோல் பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து உருவாகத் தொடங்கின. இதைப் பர்மிய மன்னரால் தடுக்கவோ ஒடுக்கவோ முடியவில்லை. பர்மியர்களின் வல்லாட்சியை எதிர்த்துக் கலகம் செய்ய அராகன் மக்கள் எப்பொழுதும் தயாராக இருந்தார்கள். ஆனால் அராகன் மக்களிடையே கட்டுப்பாடும் சிறந்த தலைவர்களும் இல்லாதிருந்தால் அவர்களின் கலகங்கள் தோல்வியடைந்தன. ஒவ்வொரு முறையும் அராகன் மக்களைப் பர்மாவின் அரசப் பிரதிநிதி (Viceroy) அடக்கியபோது ஆயிரக்கணக்கான அராகன் அகதிகள் சிட்டகாங்கிற்குள் (Chittagong) ஓடி ஒளிந்துகொண்டார்கள். ஆகையால் இவர்களைத் துரத்திச்செல்லும் பர்மியப்படை வீரர்கள் பிரிட்டிஷ் இந்திய எல்லைப் பகுதிகளுக்குள் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தொடக்கத்தில் பிரிட்டிஷ் வங்காளப் (British Bengal) பகுதியிலிருந்து பர்மாவிற்கு எவ்வித ஆபத்தும் வரவில்லை. காரணம் ஆங்கிலேயர்களும் அராகன் கலகங்களை வரவேற்கவில்லை. கி.பி. 1787ஆம் ஆண்டில் சிட்டகாங்கிற்குள் நுழைந்த பர்மியர்களின் படை ஒழுக்கத்துடன் நடந்துகொண்டது. அராகன் கலகக்காரர்களைச் சிட்டகாங்கை விட்டு வெளியேற்ற உதவி புரிவதாக ஆங்கிலேயர்கள் வாக்குறுதி கொடுத்ததால் பர்மியப்படை அராகனை விட்டு வெளியேறியது. மேலும் இச்சமயத்தில் சியாமை எதிர்த்துப் பர்மாவின் எல்லைப் பகுதிகளை மிகுதியாக்கத்தான் போதவ்பாயா முயன்றுகொண்டிருந்தார். ஆகையால் இந்தியாவின்

அருகிலிருக்கும் பர்மாவின் எல்லைப் பகுதிகளை மிகுதியாக்க அவர் மும்முரமாக ஈடுபடாததால் பிரிட்டிஷ் அரசாங்கம் அஞ்சவோ கவலைப்படவோ இல்லை. பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடைக் காலத்தில்தான் பர்மியர்களின் ஒரே தலைமை இந்தியாவின் எல்லையை நோக்கிச் சென்றது. அச்சூழ்நிலையில்தான் பர்மா விடமிருந்து பிரிட்டிஷ் பகுதிகளுக்குவரும் ஆபத்தை ஆங்கிலேயர் கள் உணர்ந்தார்கள்.

1794, 1798 ஆகிய ஆண்டுகளிலே அராகன் மக்கள் கலகம் செய்தபோது பர்மா அடக்கி ஆட்சி புரிந்ததால் மிகுதியான அளவில் அராகன் மக்கள் அதனை விட்டு இந்திய எல்லைப் பகுதிகளுக்குள் சென்றனர். இவ்வாறு சூழ்நிலை உருவாவதை ஆங்கிலேயர்கள் விரும்பவில்லை. ஆகையால் இதைப் பற்றிப் பர்மாவுடன் உரையாடல் நடத்தி ஓர் ஒப்பந்தம் நடத்த எர்ச்கின் (Colenel Erskine) அனுப்பப்பட்டபோது மூன்று அராகன் கலகத்தலைவர்களைப் பர்மாவிடம் ஒப்புவிக்கவேண்டும் எனப் பர்மா அவரிடம் விண்ணப்பித்தது. மேலும் இச்சமயத்தில் பர்மாவில் பிரெஞ்சுச் செல்வாக்கு வளரத் தொடங்கியது. ஆகையால் 1795ஆம் ஆண்டிலே தலைமை ஆளுநர் சர் ஜான் ஷோர் (Governor-General Sir John Shore) மைக்கேல் செய்ம்ஸ் (Michael Symes) என்பவரைப் பர்மாவுடன் பேச்சு நடத்துவதற்காக அனுப்பினர். மன்னர் போதவ்பாயாவுடன் பின்வரும் செய்திகள் பற்றி அவர் உரையாடல் நடத்தினர்

(1) அராகன் எல்லைக் குழப்பத்தைத் தீர்த்து ஒரு முடிவு எடுப்பது. (2) பர்மாவுடன் இருந்த ஆங்கிலேயர்கள் வாணிபத் திற்குச் சில சலுகைகள் கேட்பது. (3) ஆங்கிலேயர்களின் வாணிபத்தை மேற்பார்வை யிடுவதற்காக ஓர் ஆங்கிலேயப் பிரதி நிதியை (British Resident) இரங்கூனில் நிறுத்துவது. (4) பர்மியர்களின் துறைமுகங்களை இனிமேலும் பிரெஞ்சுக்காரர்கள் பயன்படுத்தத் தடை விதிப்பது.

போதவ்பாயாவின் பதில் பின்வருமாறு: (1) இனிமேல் பர்மியர்களின் அரசாங்கம் முறையிடும் போதெல்லாம் அராகன் அகதிகளைப் பர்மாவிடம் ஒப்புவித்தால்தான் பிரிட்டனுடன் அதன் எல்லைபற்றி ஒரு நிலையான உடன்படிக்கை ஏற்படுத்த முடியும். (2) இரங்கூனில் பிரிட்டிஷ் பிரதிநிதியை நியமிக்கலாம். (3) பர்மாவின் துறைமுகங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

ஆகையால் ஆங்கிலேயர்கள் முறையிட்டபடி இத்துறை முகங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் பயன்படுத்தாமல் மூட முடியாது.

1796 அக்டோபர் மாதம் காக்ஸ் (Cox) பிரிட்டனின் பிரதிநிதியாகப் பணிபுரிவதற்காக இரங்கூனுக்கு வந்தார். தம்மிடம் அரசப் பற்றோடும் நம்பிக்கையோடும் நடந்துகொண்டால்தான் காக்ஸுக்கு 'உன்ங்யீ' பதவி அளிக்கப்படும் என மன்னர் கூறினார். இதனால் காக்ஸுக்கும் மன்னருக்கும் தகராறு ஏற்பட்டது. மன்னர் காக்ஸைக் கைது செய்யுமாறு கட்டளையிட்டார். காக்ஸ் ஓர் ஆங்கிலேயப் போர்க் கப்பலைப் பர்மாவிற்கு அனுப்புமாறு வங்காள அரசாங்கத்திற்குச் செய்தி அனுப்பினார். வங்காள அரசு போர்க் கப்பலை அனுப்பாமல் சாதாரணக் கப்பலைப் பர்மாவிற்கு அனுப்பியது. ஆனால், அதற்குள் பர்மாவின் சூழ்நிலை அபிவிருத்தியடைந்திருந்தது. ஆகையால், இக்கப்பலில் காக்ஸ் சிரமமில்லாமல் 1798 ஏப்பிரலில் இந்தியாவிற்குத் திரும்பிச் சென்றார்.

அராகன் எல்லைத் தகராறுபற்றிப் பர்மாவுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தாவிட்டால் பர்மா நிச்சயமாக வங்காளத்தின் மேல் படையெடுக்கும் எனப் புதிய தலைமை ஆளுநரான கோமான் வெல்லெஸ்லியிடம் (Lord Wellesley) காக்ஸ் எச்சரிக்கை செய்தார். அஸ்ஸாமின்மேல் படையெடுக்கப் போதவ்பாயா தயாராகிக் கொண்டிருக்கிறார் எனவும் எச்சரிக்கை செய்தார். காக்ஸ் கூறிய செய்திகளை வெல்லெஸ்லி நம்பிய போதிலும் மைசூர்ப் போரிலும் பிரெஞ்சு எதிர்ப்பிலும் இச்சமயத்தில் இந்தியா மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் வெல்லெஸ்லியால் உடனடியாகப் பர்மாவின் செய்திபற்றி நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

1798ஆம் ஆண்டில் மீண்டும் கலகத்தை அடக்கியபோது மிகுந்த அளவில் சிட்டகாங்கிற்குள் கலகக்காரர்களைத் துரத்தி வந்த பர்மியப்படை வீரர்கள் சிட்டகாங்கிற்குள் நுழைந்தார்கள். அராகன் அகதிகளைச் சிட்டகாங்கை விட்டு வெளியேற்றுமாறு அராகன் அரசப் பிரதிநிதி வெல்வெஸ்லியிடம் முறையிட்டார். இச்சூழ்நிலையைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட வில்லியம் பிரான்கிலின் (William Francklin) கி.பி. 1801ஆம் ஆண்டு ஜூலையில் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு ஆலோசனை அளித்தார்: (1) அராகன் தலைவர்களை ஆங்கிலேயர் வங்காளத்திற்குள் அனுப்பவேண்டும். (2) பர்மாவுடன் ஒரு துணைப்படை ஒப்பந்தம் (Subsidiary Alliance) அமைக்க வேண்டும். [பர்மாவை இந்திய நாடுகளை நடத்துவதுபோல நடத்தலாம் எனப் பிரான்கிலின் நினைத்தது தவறு.]

கி.பி. 1802ஆம் ஆண்டில் மீண்டும் அராகன் எல்லைத் தகராறு ஏற்பட்டது. அராகன் அகதிகளைச் சிட்டகாங்கை விட்டு வெளி யேற்ற வேண்டும் என்றும் அப்படி வெளியேற்றத் தவறினால் பர்மா சிட்டகாங்கின்மேல் படையெடுக்கும் என்றும் அராகன் அரசப் பிரதிநிதி வெல்லெஸ்லியிடம் கூறினர். வெல்லெஸ்லி இந்தியா விற்கு வரும் ஆபத்தை உணர்ந்து எல்லைப் படைகளை வலிவு படுத்தினர். மேலும் மீண்டும் ஒப்பந்தப் பேச்சு நடத்துவதற்காக மைக்கேல் செய்ம்சைப் பர்மாவிற்கு அனுப்பினர். பின்வரும் செய்திகள் பற்றிய உரையாடல் நடந்தது :

(1) இந்தியாவின்மேல் பர்மா படையெடுக்கலாம் என அரசப் பிரதிநிதி எச்சரிக்கை செய்ததைப்பற்றித் தெளிவாக்கும்படிக் கூறுதல்.

(2) ஆங்கிலேயர்களால் ஏன் அகதிகளை வெளியேற்ற முடிய வில்லை எனக் காரணங்களுடன் எடுத்துரைப்பது.

(3) கி.பி. 1801ஆம் ஆண்டில் பிரான்கிலின் கூறியபடி ஒரு துணைப்படை ஒப்பந்தம் ஏற்பாடு செய்யப் பிரிட்டன் விரும்புவதாக உரைப்பது.

கி.பி. 1802 மே மாதம் செய்ம்ஸ் பர்மாவிற்குவந்தார். மகிழ்ச் சியில்லாத சூழ்நிலையை அவருக்குப் பர்மியர்கள் உருவாக்கினார்கள். ஆனல், செய்ம்ஸ் பொறுமையுடன் நடந்துகொண்டார். இறுதி யாக மன்னர் அவரைச் சந்தித்தார்; உளங்கனிந்த வரவேற்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. பிரிட்டனை எச்சரிக்கும்படி அரசப் பிரதிநிதியிடம் தாம் கூறவில்லை எனப் பர்மிய உன்ங்யீகள் (Wungyis) உறுதியிட்டுக் கூறினார்கள். அகதிகளைப் பர்மாவிடம் ஒப்படைக்கும்படி இனிமேல் பர்மா கட்டாயப்படுத்தாது என வாக் குறுதி அளிக்கப்பட்டது. ஆனல் குற்றவாளிகளாகக் கருதப்படுபவர் களைச் சிட்டகாங் அரசாங்கம் பர்மாவிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கூறப்பட்டது. மீண்டும் இரங்கூனில் பிரிட்டிஷ் பிரதிநிதியை நியமிக்கலாமென மன்னர் அனுமதி அளித்தார்.

கி.பி. 1803ஆம் ஆண்டில் மே மாதம் ஜான் கானிங் (Lt. John Conning) பிரதிநிதியாகப் பணியாற்ற அனுப்பப்பட்டார். இம் முறை மூலம்தான் பர்மாவுடன் நட்பை வலுப்படுத்த முடியும் எனப் பிரிட்டிஷ் அரசாங்கம் நினைத்தது. ஆனல், பர்மியர்கள் வேறு வகையாக நினைத்தார்கள். ஆங்கிலக் கம்பெனி இயக்குநர் களிடமிருந்து (Company Director) கட்டளைபெறும் தலைமை ஆளுநரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியைத் தங்களுக்கு ஒப்பாக

நடத்துவதனால் தங்களுடைய பெருமைக்குக் குறைவு வரும் எனப் பர்மியர்கள் நினைத்தார்கள். இங்கிலாந்து அரசரால் நியமிக்கப் பட்ட பிரதிநிதிக்குத்தான் ஒத்த சிறப்புக் கொடுக்க வேண்டும் எனப் பர்மா நினைத்தது. ஆகையால் வழிவழி மரபில் வளர்ந்த பர்மிய அதிகாரிகள் பிரிட்டிஷ் பிரதிநிதியைச் சமயம்வரும் போதெல்லாம் அவமானப்படுத்தினார்கள். இதனால் ஆங்கிலேயர் கள், பர்மியர்கள் ஆகியோர்களின் உறவு குறையத் தொடங்கியது. இவ்வாறான சூழ்நிலையில் பணிபுரியக் கானிங்கால் முடியவில்லை. ஆகையால் இரங்கூனில் பிரதிநிதியை நியமிக்கும் எண்ணத்தைப் பிரிட்டன் கைவிட்டது.

அராகன் எல்லையில் படைத்துறைச் சுற்றுக் காவல் உலா (Patrol) ஆங்கிலேயர்களால் வலுப்படுத்தப்பட்டதால் அராகன் எல்லை அமைதியாகவிருந்தது. கி.பி. 1802ஆம் ஆண்டில் செய்ம் சுக்குக் (Syems) கொடுத்த வாக்குறுதியையும் பர்மியர்கள் காப்பாற்றினார்கள். பர்மாவில் பிரெஞ்சுச் செல்வாக்குப் புறக் கணிக்கத்தக்க அளவில்தான் இருக்கிறது என்றும், ஆகையால் பர்மாவிலுள்ள பிரெஞ்சுச் செல்வாக்கைப்பற்றி அஞ்ச வேண்டிய தில்லை என்றும் செய்ம்சும், கானிங்கும் கூறினார்கள். இதனால் ஆங்கிலேயர்களின் மனநிறைவின்மை குறைந்தது.

ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் சண்டை மூண்டதால் கி.பி. 1809ஆம் ஆண்டில் கானிங் மீண்டும் பர்மாவிற்கு வந்தார். பிரிட்டிஷ் பிரெஞ்சுக் கொள்கையைப்பற்றி மன்னர் போதவ்பாயிடம் விளக்கிக் கூறினார். சிட்டகாங்கையும், கிழக்கு வங்காளத்தையும் கைப்பற்றும் நோக்கம் போதாவ்பாயிடம் உள்ளது எனக் கானிங் பர்மாவிலிருந்து திரும்பியவுடன் தலைமை ஆளுநரிடம் எச்சரிக்கை செய்தார். ஆனால் அராகன் எல்லையில் அமைதி நிலவியதால் தலைமை ஆளுநர் இவ்வெச்சரிக்கையைப் புறக்கணித்தார்.

ஆனால், கி.பி. 1811ஆம் ஆண்டில் நடந்த ஒரு நிகழ்ச்சி இவ்வமைதியைக் குலைத்தது. சிட்டகாங்கைத் தளமாக வைத்துக் கொண்டு சின்பியான் (Chin Byan) என்ற அராகன் தலைவர் ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு அதன் மேல் படை யெடுத்தார். அதனுடைய தலைநகரமான மோருஹாங்கைக் (Mrohaung) கைப்பற்றினார். அதன் அரசராய்த் தம்மை ஏற்றுக்கொண்டு ஆதரித்தால்தான் பிரிட்டனின் மேலாதிக்க உரிமையை ஒப்புக்கொள்வதாக ஆங்கிலேயர்களுக்கு விரைவாகச் செய்தி அனுப்பினார், ஆனால், சின்பியானின் உரிமைச் சலுகையை

உடனடியாக ஆங்கிலேயர்கள் மறுத்துவிட்டார்கள். சின்பியான் கலகத்திற்கும் பிரிட்டனுக்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது. என மன்னர் போதவ்பாயாவிடம் ஆங்கிலேயர்கள் அனுப்பிய கானிங் உறுதியிட்டுக் கூறினர். ஆனல் சின்பியாவிற்குப் பிரிட்டன் உதவியளித்தது எனப் பர்மியர்கள் நம்பினர்கள்.

அராகன் எல்லையிலிருந்து சிட்டகாங்கிற்குள் அதன் அகதிகள் நுழையாமல் ஆங்கிலேயர்கள் பாதுகாக்கவேண்டும் என கானிங் கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில் அராகன் அரசப் பிரதிநிதியின் படைகளால் துரத்தியடிக்கப்பட்ட சின்பியானும், அவர் படைவீரர்களும் சிட்டகாங்கிற்குள் நுழைந்து ஓடி ஒளிந்து கொண்டார்கள். எவ்வளவு முயற்சி எடுத்த போதிலும் சிட்ட காங்கின் அடர்த்தியான காட்டுப் பகுதிகளுக்குள் ஒளிந்துகொண்ட சின்பியானை ஆங்கிலேயர்களால் கைப்பற்ற முடியவில்லை. வங்காளத்திற்கும், பர்மாவிற்கும் உள்ள நட்பு நலிவடையத் தொடங்கியது. கி.பி. 1815 ஜனவரி மாதம் சின்பியான் இறந்தவுடன் தான் உட்புயல் அமைதி நிலைமை சீரடையத்தொடங்கியது. சின் பியான் நிகழ்ச்சியால் பர்மாவும் பிரிட்டிஷ் இந்தியாவும் போர் புரியும் வாய்ப்பு மிகுந்தது. சின்பியானை ஆங்கிலேயர்களால் அடக்க முடியாததாலும், தங்கள் எல்லைப் பகுதிகளைச் சரியாகக் கண்காணிக்க முடியாததாலும் ஆங்கிலேயப் படைமீது பர்மாவிற் கிருந்த மதிப்பு மிகவும் குறைந்தது.

இச்சூழ்நிலையே முதல் பர்மியர்கள் ஆங்கிலேயர்கள் போருக்கு சிறந்த காரணமாகத் திகழ்ந்தது. இதனல் முக்கியமாகக் கி.பி. 1812ஆம் ஆண்டிலிருந்து இவ்விருநாடுகளிடையே இருந்த அரசியல் தொடர்பு தடைப்பட்டது. மேலும் மணிப்பூர், அஸ்ஸாம், ஓரளவில் கச்சார் (Cachar) ஆகியவற்றின் அரசியல் நடவடிக்கை களில் பர்மா கடுமையாகத் தலையிட முற்பட்டதால் இச்சூழ்நிலை மேலும் குறையத் தொடங்கியது. பர்மாவை ஆதரிக்கும் அரசர் களைப் பதவியில் அமர்த்தும் நோக்கத்துடன் கிபி 1816–1819ஆம் ஆண்டுகளில் மன்னர் போதவ்பாயா பர்மியப்படைவீரர்களை மணிப்பூருக்கும், அஸ்ஸாமுக்கும் அனுப்பினர். ஆனல், பர்மியப் படைவீரர்கள் ஒவ்வொரு முறையும் திரும்பியவுடன் பர்மியர்களால் நியமிக்கப்பட்ட அரசர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்காகக் கலகம் ஏற்படுத்தப்பட்டது. முன்னுள் அரசர்கள் அகதிகளாக வந்து குடியேறி வங்காள அரசாங்கத்தை உதவிசெய்யும்படி வற்புறுத்தத் தொடங்கினர்கள்.

போதவ்பாயா இறந்தவுடன் கி.பி. 819ஆம் ஆண்டிலிருந்து அவருடைய பேரரான பாக்யிதாவு (Bagyidaw) அரசபதவி யேற்ருர். பாக்யிதாவின் முடிசூட்டு விழாவில் மணிப்பூர் மன்னர் கலந்துகொள்ளவில்லை. தூதுவர்கள்மூலம் கப்பமும் செலுத்த வில்லை. பதிலாக ஆங்கிலேயர்களுக்கு மனமகிழ்ச்சி கொடுக்கும் நோக்கத்துடன் மணிப்பூர் மன்னர் பர்மாவுடன் இருந்த அரசியல் தொடர்பைத் துண்டித்துவிட்டார். ஆகையால் பாக்யிதாவு மணிப்பூர் அரசரைத் தண்டிக்கும் நோக்கத்துடன் பர்மியப்படை வீரர்களை மணிப்பூருக்கு அனுப்பினர். மணிப்பூர் மன்னர் கச்சாருக்குத் (Cachar) தப்பி ஓடினர். தம்நாட்டை மீட்டுக் கொடுக்குமாறு கச்சார் மன்னர் ஆங்கிலேயர்களிடமும் பர்மா விடமும் முறையிட்டார். கச்சாரும் அதன் அருகேயிருக்கும் ஜைன்தியாவும் (Jaintia) பிரிட்டிஷ் இந்தியாவின் காப்பாட்சியின் கீழ் (Protectrorates) கொண்டுவரப்பட்டிருக்கிறதென ஆங்கிலேய அரசாங்கம் அறிவித்தது. சட்டப்படி இது செல்லாது எனப் பர்மா அரசாங்கம் அறிவித்ததோடல்லாமல் கலகக்கார அகதிகளையும் பர்மியப் படைவீரர்கள் துரத்தினர்கள்.

3. முதல் பர்மிய—ஆங்கிலேயப்போர் (1824—1826)

இதனுல் அராகனிலும் சண்டை மூண்டது. நாப் நதியைத் (Naaf river) தன் நாட்டின் எல்லையாகப் பர்மா கருதியது. வேட்டை யாடும் சில ஆங்கிலேயர்கள் நாப் நதியைக் கடந்து வந்தபோது பர்மா அரசாங்கம் அவர்களைக் கைது செய்தது. எல்லை வரையறுப் பதற்காக இரு ஆங்கிலேய அதிகாரிகள் நாப் நதியைக் கடந்த போது அவர்களையும் பர்மா அரசாங்கம் கைது செய்தது. பிறகு கி.பி. 1824ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பர்மா கச்சார்மேல் படை யெடுத்தது. கி.பி. 1824 பிப்ரவரி மாதம் சாபுரித் தீவிலும் (Shahpuri-island) போர் மூண்டது. இத்தீவுபற்றி ஏற்பட்ட சச்சரவிலும், பர்மாவின் படை முதல்வரான மகாபண்டுலாவின் (Commander-in-Chief Maha Bandula) திறமையைப் பார்த்துப் பொருமை ஏற்பட்டதாலும்தான் முதல் பர்மிய ஆங்கிலேயப் போர் தொடங்கியது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பே மகாபண்டுலா அஸ்ஸாமைக் கைப்பற்றினர்.

இச்சூழ்நிலை உருவாகியதால் தலைமை ஆளுநர் கோமான் ஆம்ஹெர்ச்ட் (Lord Amherst) பர்மாவுடன் போர் தொடங்கப் பட்டதாக மன்னர் பாக்யிதாவுக்குச் செய்தி அனுப்பினர். ஆனல் பர்மா அரசாங்கம் கவலைப்படவில்லை; மகாபண்டுலாவின்

திறமையின்மேல் மிக்க நம்பிக்கை வைத்திருந்தது. ஆங்கிலேயர்கள் படை வலிவில்லாமல் இருக்கிறுர்களெனப் பர்மா அரசாங்கம் திண்ணமாக நம்பியது; மேற்குத் திசையிலிருந்துதான் ஆங்கிலேயர்கள் பர்மாவைத் தாக்குவார்களென எண்ணியது. ஆகையால், அஸ்ஸாமைத் தலைமைப் படைத்தளமாக வைத்துக்கொண்டு இருதிசையில் ஒன்று, அஸ்ஸாம் மணிப்பூரிலிருந்து கச்சார் வழியாக அஸ்ஸாமிலும், இரண்டாவது அராகன் வழியாகப் பர்மியர் படைகளைச் செலுத்தி வங்காளத்திலும் இவ்விரு படைகளையும் சந்திக்கச் செய்து கல்கத்தாவைத் தாக்கவேண்டும் என்பதே மகாபண்டுலாவின் போர்த்திட்டம்.

நாப் நதியைக் கடந்து பண்டுலாவின் படை முன்னேறத் தொடங்கியது. இதைத் தடுக்க வந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் முறியடிக்கப்பட்டனர். இராம யுத்தத்தில் (battle of Rama) ஆங்கிலேய இந்தியா தோல்வியடைந்தது. ஆனுல் கி.பி. 1824 மே மாதம் எதிர்பாராத வகையில் ஆங்கிலேயப் போர்க்கப்பல்கள் இரங்கூனுக்குள் நுழைந்ததால் கச்சார் வழியாகப் படையெடுத்து விரைவாகச் செல்லும் பர்மியப் படையின் விரைவு குறைக்கப்பட்டது. இரங்கூன் ஆங்கிலேயப்படை வீரர்களிடம் அடிபணியாமலிருப்பதற்காக மகாபண்டுலா இரங்கூனை நோக்கி விரைந்தார்.

தலைநகரம் அடிபணிந்தால் பர்மாவிற்கே மிகுந்த அவமானமும் ஆபத்தும் ஏற்படும். தலைநகரிலுள்ள அரசமாளிகை ‘பிரபஞ்சத்தின் மையம், கடவுளின் உறைவிடம். இதைக் கைப்பற்றினுல் நாட்டரசைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒப்பாகும்’ எனப் பர்மியர்கள் கருதினுர்கள்.

தந்திரத்துடன் ஆங்கிலேயர்களின் திட்டம் வகுக்கப்பட்டது. தெற்கிலிருந்து பர்மாவின் தலைநகரத்தைத் தாக்கினுல் பல்வேறு நோக்கங்கள் நிறைவேறும்.

(அ) வங்காளத்தின்மேல் படையெடுத்துச் செல்லும் பர்மியப் படைவீரர்களின் கவனத்தை மாற்றிச் செலுத்தலாம். இதனுல் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கலாம்.

(ஆ) பதிலாகப் பர்மாவிற்குள் போரின் கவனத்தை முழுவதும் செலுத்தலாம்.

(இ) மாண் (Mons), காரேன் இனத்தார்கள் அளிக்கும் ஆற்றுப் படகுகளின் உதவியுடன் ஐராவதி நதியைக்கடந்து அமரபுராவை (Amarapura) நோக்கிச் சென்ருல் வெற்றிகிடைக்கும் வாய்ப்பு மிகும்,

சர் ஆர்ஸிபால்டு கேம்ப்பெல்லின் (Sir Archibald Campbell) தலைமையில் 11,000 திறமைவாய்ந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் அந்தமான் தீவுகளில் திரட்டப்பட்டு மறைவாக வைக்கப் பட்டிருந்தார்கள். திட்டப்படி ஆங்கிலேயக் கப்பற்படை பர்மாவின் மேல் படையெடுத்தது.

ஆங்கிலேயப் படைவீரர்களின் போர்த்திறமை சார்ந்த படையெடுப்பு பர்மியர்களுக்கு ஆச்சரியமளித்தது. பர்மியர்களின் எதிர்ப்பில்லாமல் மே 10ஆம் நாள் இரங்கூன் கைப்பற்றப்பட்டது. பர்மியர்கள் இரங்கூனைவிட்டு வெளியேறினார்கள்; வெறுமை யாக்கப்பட்ட இரங்கூன்தான் ஆங்கிலேயர்களிடம் விடப்பட்டது. சுவிட்கான் புத்தவிகாரத்தைப் (Shewedagon Pagoda) படைக் காவலரண் செய்து ஆங்கிலேயர்கள் வலுப்படுத்தினர்.

இந் நிகழ்ச்சி ஆங்கிலேயர்கள் தம் திட்டத்தைச் செயல்படுத்து வது போலிருந்தது. மகாபண்டுலாவின் படை இரங்கூனை நோக்கித் திரும்பிவந்தபோது பண்டுலாவிடம் 30,000 படைவீரர்கள் இருந்தார்கள். இதில் 15,000 படைவீரர்களிடமே காலாட்படை வீரர்களின் துப்பாக்கி (Musket) இருந்தது. ஆங்கிலேயர்களிடம் 10,000 படைவீரர்கள்தாம் இருந்தார்கள். இவர்களில் 5,000 படைவீரர்களிடம் புதுமைப் பாங்கான காலாட்படை வீரர்களின் துப்பாக்கியிருந்தது. 1824 டிசம்பர் முதல் நாள் போர்மூண்டவுடன் டானுபியூவிற்குப் (Danubyu) பின்வாங்கப் பண்டுலா உத்திர விட்டார். பண்டுலாவிடம் எஞ்சியது 7,000 போர்வீரர்களே. ஆங்கிலேயப் படைவீரர்கள் பாதிக்குமேல் நோயால் பீடிக்கப் பட்டிருந்தனர்.

பண்டுலா இரங்கூனை நோக்கி வருகிறார் எனக் கேள்விப்பட்ட அமரபுரா மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். பண்டுலாவை தோற்கடிக்க யாராலும் முடியாது என்ற பெருமிதமே இம்மகிழ்ச்சிக் குக் காரணம். மழைக்காலம் முடிந்தவுடன் ஆங்கிலேயப் படைவீரர் கள் ஐராவதி நதியை நோக்கிச் சென்றனர். பர்மியப் படைவீரர்கள் நிலைகுலைந்து தோல்வி அடைந்தனர். மேலும் பர்மிய மக்களின் நம்பிக்கைத் தெய்வமான பண்டுலா கி.பி. 1825 ஏப்ரல் முதல் நாள் டான்பியூவில் போர்க்களத்தில் கொலைசெய்யப்பட்டார். மனக்கசப் புற்ற பர்மியர்கள் மற்றொரு படையைத்திரட்ட முயன்றனர்; ஆனால் ஆங்கிலேயப் படைவீரர்கள் வெற்றியுடன் முன்னேறிச் செல்வதைத் தடுக்க முடியவில்லை. ஆங்கிலேயர்கள் பிரோமைக் (Prome) கைப்பற்றினார்கள். அடுத்த மழைக்காலம் முடிவதற்காக காத்துக்கொண்டிருந்தார்கள். பிரோமை மீண்டும் கைப்பற்ற வேண்டும் எனப் பர்மியர்கள் எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

ஆகையால் உடன்பாட்டொப்பந்தம் செய்யும் நோக்கத்துடன் பர்மா அரசாங்கம் ஒரு தூதுக்குழுவை ஆங்கிலேயர்களிடம் அனுப்பியது. ஆனால், ஆங்கிலேயப் படைத்தலைவர்களின் கோரிக்கை கனிவற்றதாய் வெறுப்பூட்டுவதாயிருந்ததால் பர்மியர் கள் உடன்பாட்டுப் பேச்சினை நிறுத்தினார்கள்.

கல்கத்தாவிலிருந்துவந்த ஓர் ஆற்று நீராவிக்கப்பல் (River Steamer) உதவியுடன் ஆங்கிலேயப் படைவீரர்கள் அமரபுராவை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அவா (Ava) விற்கு 50 மைல்கள் அருகே உள்ள யான்டபோ (Yandabo) கிராமத்தை ஆங்கிலேயப் படைவீரர்கள் அடைந்தார்கள். தலைநகரத்திலுள்ள தூயமன்னர் மாளிகையைப் பிரிட்டிஷ் படைவீரர்கள் தாக்குமுன் ஒரு சமரச உடன்படிக்கை செய்யப் பர்மியர்கள் முயன்றார்கள். ஆகையால் ஆங்கிலேயர்கள் கேட்டவற்றை யெல்லாம் அளிக்க வேண்டிய கட்டாயம் பர்மாவிற்கேற்பட்டது. இதன்விளைவால் யாண்டபோ கிராமத்தில் கி.பி. 1826 பிப்ரவரி 24ஆம் நாள் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது.

யாண்டபோ உடன்படிக்கை (1826 பிப்ரவரி 24)

(1) அராகன், தென்னசெரிம் (Tennaserim), அஸ்ஸாம், ஆகிய பகுதிகளைப் பர்மாவின் மன்னர் ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

(2) மணிப்பூர், கச்சார் (Cachar), ஜைன்தியா ஆகிய பகுதிகள் பிரிட்டிஷ்-இந்தியாவைச் சேர்ந்த பகுதிகள் ஆகும் எனப் பர்மா ஒப்புக்கொண்டது.

(3) பர்மா போரைத் தொடங்கியதால் பிரிட்டிஷ் போர்ச் செலவுக்காகப் பத்துமில்லியன் ரூபாய்கள் இழப்பீட்டுத் தண்டத் தொகையாக (Indemnity) நான்கு தவணையில் அளிக்கவேண்டும். முதல் தவணையை உடனடியாகச் செலுத்தவேண்டும். இரண்டாவது தவணையை நூறுநாட்களுக்குள் செலுத்தவேண்டும். இத் தவணைப் பணம் செலுத்தும்வரை ஆங்கிலேயப் படைவீரர்கள் இரங்கூனைவிட்டு வெளியேற மாட்டார்கள். எஞ்சிய இழப்பீட்டுத் தண்டத் தொகையை ஆண்டிற்கு ஒரு முறையாக இரண்டு ஆண்டுகளுக்குள் செலுத்தவேண்டும்.

(4) பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதி இரங்கூனில் நியமிக்கப் படுவார்; பர்மாவின் தலைமைத்தூதர் (Ambassador) கல்கத்தா விற்கு வந்து பதவியேற்பார்.

(5) ஒரு வாணிப ஒப்பந்தத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(6) சியாமின்மேல் வலிந்து சென்று படையெடுப்பதைப் பர்மா நிறுத்தவேண்டும்.

இவ்வுடன்படிக்கை நேர்மையற்றதாகவும், ஓரகமானதாகவும் இருந்தது. மிகவும் மட்டு மீறிய கண்டிப்பு வாய்ந்த இரக்கமற்ற துன்பம் தருகிற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உதாரணமாக இழப்பீட்டுத் தண்டத்தொகை பர்மாவின் செலாவணியில் மொத்தம் நூறு இலட்சம் கியாட் (Kyat) ஆங்கிலேயர்களின் போரிழப்பு மிகுந்தது என்றாலும் இத்தண்டத் தொகையின் கொடுமையைப் பர்மிய மக்களின் வாழ்க்கை நிலேயோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் அறியமுடியும். 1826ல் மேலிடப் பர்மாவில் (Upper Burma) வசித்துவந்த ஒரு கிராமவாசியின் சராசரி மாதவருமானம் ஒரே கியாட்தான் (Kyat).

மொத்தத்தில் பழைமையிலே ஊறிவளர்ந்த பாக்யிதாவுக்கு இவ்வுடன்படிக்கை தன்மதிப்பு அளிக்கவில்லே. அரசரையும், நாட்டையும் வேண்டுமென்றே தாழ்வுபடுத்தி மதிப்பிழக்கும்படிச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தக் கட்டுப் பாடுகளே ஆங்கிலேயர்கள் விதித்தார்கள் எனப் பர்மியர்கள் பொருமினுர்கள். கடவுளுக்கு ஒப்பாகத் தம்மைக் கருதும் பாக்யிதாவு இதை ஓர் அவமானமாகக் கருதினுர். வழிவழி மரபிலே வளர்ந்துவரும் பர்மாவிற்கு இவ்வுடன்படிக்கை ஒரு விழிப்புணர்ச்சியளித்தது எனவும் கூறலாம்.

யாண்டபோ உடன்படிக்கையின் சிறப்பு

ஆங்கிலேயர்களின் வெற்றி பர்மியர்களின் நாட்டிற்கே ஓர் இழுக்காய் மாறியது. இத்தோல்விக்குப் பிறகு பர்மா தன்படை வலிமையை மீண்டும் பெறவில்லே. ஆகையால், இத்தோல்வி பர்மாவின் படைக்கு ஒரு சவுக்கடியன்று; ஏறத்தாழ ஒரு சாவுமணி என்றே கூறலாம். கி.பி. 1826ஆம் ஆண்டுக்குமுன் அண்டை நாடுகள் பர்மாவைப்பார்த்து நடுக்கமும் பேரச்சமும் அடைந்தன. அச்சூழ்நிலேயில் பர்மாவில் ஒரு திறமையான, ஆற்றல்வாய்ந்த ஆனுல் முழுத்தலேமையுள்ள அரசாங்கம் இருந்தது. அரசர் பதவி பற்றிச் சண்டை மூண்டகாலங்களில்கூடப் பர்மிய அரசியல் அமைப்புக்கு இழப்பு முளேக்கவில்லே; தன்னிறைவுடைய பொருளாதாரச் சூழ்நிலேயிருந்தது. புத்தமதத் தத்துவங்களேப் பின்பற்றிய அதன் சமூகச் சமய வாழ்க்கை அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், மேலே கூறிய பர்மிய வழிவழி மரபு வழக்கங்கள் யாண்டபோ உடன்படிக்கைக்குப்பின் மாறவேண்டியதாயின.

படிப்படியாகப் பர்மா தன் அரசியல் உரிமையை இழந்தது. பொதுவாகப் பர்மியப் பொருளாதாரத்தில் ஆங்கிலேயர்களின் தலையீடு வளரத் தொடங்கியது. ஆங்கிலேயப் பண்பாடுகள் பர்மாவின் சமூக அமைப்பினுள் கொடியாகப் படரத் தொடங்கின. கிறித்தவ சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. மிகுந்த மாறுதல் களால் இறுதியில் அடைக்கலம் புகுந்து ஆங்கிலேயர்களின் முழுத்தலைமையின்கீழ் 1886ஆம் ஆண்டிலிருந்து 1942 வரை பர்மா இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது; கொன்பாங் மரபினரின் ஆட்சிக்கும், ஏன் முடியாட்சிக்கும் நிலையாக அழிவேற் பட்டது; பர்மா தன் முன்னுள் படைவலிமையின் வெறும் நிழலாக மாறி வலிவில்லாமல் இருந்தது.

யாண்டபோ உடன்படிக்கையின்படி கி.பி. 1826 செப்டம்பரில் ஜான் கிராபோர்டு பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதியாக அமரபுராவிற்கு வந்தார். பர்மியர்கள் அவருடைய நடவடிக்கைகளுக்குப் பல தடைகள் போட்டனர். பர்மாவின் தூதுவ நிலையத்தைக் கல்கத் தாவில் அமைக்காமல் ஏதாவது ஒரு போலிக்காரணம் கூறி ஒத்தி போட்டுக் கொண்டே வந்தனர். ஒரு தலைமை ஆளுநருடன் சரிசமமான அரசியல் தொடர்புகொள்வது பர்மியர்களுக்கு மிகுந்த அவமானம் எனப் பர்மிய அரசாங்கம் கருதியது.

பர்மியர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என ஆங்கிலேயர்கள் நினைத்த பாடத்தை அப்பர்மியர்கள் பயில மறுத்தனர். இத் தோல்வியினால் பர்மியர்கள் தங்கள் வழிவழி மரபு பண்பாடுகளை விட்டுவிட்டு ஆங்கிலேயப் பண்பாடுகளைப் பின்பற்றத் தொடங்கு வார்கள் என ஆங்கிலேயர்கள் மிக்க நம்பிக்கையுடன் இருந் தார்கள். ஆனால், உண்மையில் இதற்கு மாறுபட்டே நடந்தது. தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் ஏற்பட்ட இழுக்கைப் பர்மியர் களால் மறக்க முடியவில்லை. தூதுவ அரசியல் தொடர்பு ஏற்பட்ட வுடன் பர்மியர்களின் எதிர்ப்பு மனப்பான்மையை மாற்றிவிட முடியும் என ஆங்கிலேயர்கள் நம்பினார்கள். ஆனால் இத்தூதுவ அரசியல் தொடர்பைத் தகர்த்தெறியும் நோக்கத்துடன்தான் பர்மியர்கள் தொடர்ந்து நடந்துகொண்டார்கள். இறுமாப்புடனும், வெறுப்புணர்ச்சியுடனும் பர்மியர்கள் ஆங்கிலேயர்களுடன் பழகி னார்கள். இதன் விளைவால்தான் கிராபோர்டுவின் தூதுக்குழு கி.பி. 1826-ல் தோல்வியடைந்தது; இது ஆங்கிலேயர்களுக்கு மிக மனக்கசப்பை உண்டாக்கியது. கி.பி. 1830 வரை வங்காள

அரசாங்கம் மீண்டும் ஓர் அரசப் பிரதிநிதியைப் பர்மாவிற்கு அனுப்பவில்லை.

யாண்டபோ உடன்படிக்கைக்குப் பின் பர்மாவுடன் மீண்டும் அமைதியான உறவை அமைக்கலாம் என ஆங்கிலேயர்கள் நினைத்தார்கள்; ஆனல் பர்மாவின் அராகனும், தென்னுசெரிமும் ஆங்கிலேயர்களிடம் இருந்ததால் இவ்வெண்ணம் நிறைவேறுவதற்குத் தடையாயிருந்தன. பர்மாவின் பகுதிகளை வலுக்கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டுமென்பது ஆங்கிலேயர்களின் நோக்கமன்று; ஆனல் அராகன், தென்னுசெரிமிலிருந்த சூழ்நிலை இந்நாடுகளைக் கைப்பற்ற ஆங்கிலேயர்களைத் தூண்டியது என ஹால் (Hall) எனும் வரலாற்றுசிரியர் கூறுகிருர். பர்மா நாட்டுப்பகுதிகளில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியதால், நட்பார்வத்தை வளர்க்க முடியவில்லை.

ஆங்கிலேயர்கள் பர்மாவிற்குள் ஓர் அடி வைத்தவுடன் சங்கிலி போல் இணைந்த பல நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கின; இதன் விளைவால் ஆங்கிலேயர்கள் மற்ருேர் அடியையும் பர்மாவிற்குள் வைக்க வேண்டிய சூழ்நிலையேற்பட்டது. கி.பி. 1852ஆம் ஆண்டுப் போருக்குப்பின் பெகுவையும் (Pegu) ஆங்கிலேயர்கள் கைப்பற்றினுர்கள். (இதைப் பற்றிப் பின்னுல் விவரமாகத் தெரிவிக்கப்படும்). பர்மாவின் பகுதிகளைப் படிப்படியாகக் கி.பி. 1826ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலிருந்து இழக்க நேரிட்டதால் 1886ஆம் ஆண்டிற்குள் பர்மா முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் வந்தது.

கி.பி. 1826ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி மற்ற நாட்டுப் பகுதிகளுக்குள் தன் ஆட்சியின் செல்வாக்கைப் பரப்பவோ, தலையிடவோ பர்மாவிற்கு உரிமை கொடுக்கப்படவில்லை. சியாமைத் தூண்டிச் சினமூட்டுவதையும், அஸ்ஸாமிலும் மணிப்பூரிலும் தலையிடுவதையும் பர்மா நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பர்மாவின் நாட்டுப் பரப்புப் பகுதி ஏற்கெனவே கூறியபடி சுருங்கியது. ஆகையால், தங்களுடைய வெறுப்பையும் மாண்கள் (Mons), காரேன் (Karens) ஆகிய இனத்தார்கள்மேல் பர்மா வெளியிடத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1826-ல் பின் வாங்கியவுடன் இவ்வினத்தார்கள் தங்களையே நம்பி வாழவேண்டிய சூழ்நிலையேற்பட்டது. 1825, 1826 ஆகிய ஆண்டுகளில் பர்மாவிற்கேற்பட்ட இழப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு கீழைப் பர்மாவில் மாண்களும் (Mons), காரேன்களும் (Karens) கலகங்கள் செய்தார்கள். ஆனல் முதல் பர்மிய-ஆங்கிலேயப் போர் முடிந்தவுடன் பர்மிய அரசாங்கம் இக் கலகக்காரர்களை அடக்கி ஒழித்தது. மாண்கள்

வாழ்ந்த நகரங்கள் சூறையாடப்பட்டன; அவர்களின் இனத் தலைவர்கள் பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர்; மாண் இனத்தாரின் மொழிக்கு விலக்காணையிடப்பட்டது.

ஆனால் அராகன், தென்னுசெரிமில் நடந்துவந்த ஆங்கிலேய ஆட்சியினால் சில நன்மைகளும் விளைந்தன. அராகனில் அரிசி முதலிய பொருள்களின் உற்பத்தி பெரிதும் மிகுந்தது. பொதுநிலைக் கணிப்பீட்டின்படியான வாழ்க்கைச் செலவு (cost of living) மிகக் குறைவு; உணவுப் பொருள்களும் மிக்க அளவில் கிடைத்தன. அக்யாப் (Akyab) துறைமுகத்திற்கு வாணிபக் கப்பல்கள் வரத் தொடங்கின. இவ்வாணிப நடவடிக்கையாலும், அரிசி உற்பத்தி மிகுந்ததாலும் பயிரிடுவோர்கள் உள்ளூரிலிருந்து வெளியே செல்லத் தொடங்கினர்கள். தாய்நாட்டு மக்களுக்கு வேலைகளும் கிடைத்தன. 1852ஆம் ஆண்டுக்குள் உலக அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒரு சிறந்த நாடாக அராகன் விளங்கியது. ஆங்கிலேயர்கள் ஆட்சியின் கீழிருந்த தென்னுசெரிம் பகுதியிலும் அரிசி விளைச்சல் மிகுந்தது. இதைவிடச் சிறந்தது தென்னுசெரிமிற்குக் கிடைத்த அரசியல் பாதுகாப்புச் சூழ்நிலையே (Political Security). இனிமேலும் இதைக் கைப்பற்றப் பர்மாவும், சியாமும் போட்டியிடும் நிலைமையில் இல்லை. ஆகையால், மக்கள் ஓரளவு அமைதியுடன் வாழ்ந்தார்கள். மௌல்மெயின் (Moulmein) துறைமுகம் கப்பல் கட்டும் மையவிடமாக மாறியது.

4. இரண்டாவது பர்மிய-ஆங்கிலேயப் போர்

யாண்டபோ உடன்படிக்கை ஏற்பட்டதிலிருந்து கி.பி. 1851ஆம் ஆண்டுவரை நடந்த சிறந்த நிகழ்ச்சிகள்: (1) பர்மியர்கள் ஆங்கிலேய அரசியல் தலைவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டிய சூழ்நிலை உருவாகுதல்; (2) படிப்படியாகப் பர்மிய—ஆங்கிலேய உறவு மோசமான நிலையை அடைதல்; (3) இருதிறத்தினரின் நடவடிக்கைகளும் இரண்டாவது போர் மூண்டதற்குக் காரணமாய் விளங்கின; (4) ஆனால் முதல் போரும், யாண்டபோ உடன்படிக்கையும் இரண்டாம் போரின் சிறந்த காரணமாகக் கருதப்படுகின்றன. ஆங்கிலேய அதிகாரிகள் பற்றிய பர்மிய மனப்பான்மையும் இரண்டாம் போர் மூண்டதற்குச் சிறந்த காரணமாய் விளங்கியது எனக் கூறலாம்.

பர்மிய அவைத் தலைவர்கள் ஆங்கிலேயத் தூதர்களை அரசியல் உறவில் தங்களுக்கு ஒப்பாகக் கருதி நடத்தாததனல் ஆங்கிலேய அதிகாரிகளின் சினத்தையும், மனக்கசப்பையும் உருவாக்கினர்கள்,

பர்மியர்களின் செருக்கும் ஆங்கிலேயர்களின் தன்மானத்திற்கும் இடையே மூண்ட இம் மனக்கசப்பே பர்மிய—ஆங்கிலேயர்களின் தொடர்பு வருந்தத்தக்க நிலையில் இருந்ததற்குக் காரணம். இருபதாம் நூற்றுண்டுவரை, 1830ஆம் ஆண்டில் ஹென்ரி பர்னி (Henry Burney) அரசப் பிரதிநிதியாக (Resident) இருந்த காலத்தையும் 1860ஆம் ஆண்டில் மின்டன் மின் (Mindon Min) ஆட்சி புரிந்த சமயத்தையும் தவிர, மேலே எடுத்துரைத்த மனப்பான்மை பர்மிய—ஆங்கிலேயர்களின் நட்புறவு முதிராமல் இருந்ததற்குக் காரணமாய்த் திகழ்ந்தது. யாண்டபோ உடன் படிக்கையின் மூலம் ஆங்கிலேயர்களுக்கு அளித்த உரிமைகளைப் பர்மியர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தார்கள்; ஐரோப்பியர்களுடன் தொடர்பு கொள்ளவே பர்மியர்கள் விரும்பவில்லை. ஆனல், இதற்கு எதிராக ஆங்கிலேயர்கள் கி.பி. 1826ஆம் ஆண்டு உடன்படிக்கையைப் பர்மியர்கள் ஏற்றுக்கொள்ளும்படிச் செயல் புரியவேண்டும் என அக்கறை காட்டினர்கள். ஆங்கிலேயத் தூதர்களைப் பர்மிய அவை ஒப்புக்கொள்ளவேண்டும் என ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கட்டாயப்படுத்தி வலியுறுத்தியதால் பர்மிய—ஆங்கிலேயர்களின் உறவு மோசமான நிலையை அடைந்தது.

இம்மாதிரியான மனக்கசப்புடைய நட்புறவுச் சூழ்நிலை உருவாகியதால் சிறு தகராறுகள்கூட மிகைப்படுத்தப்பட்டன. இரு திறத்தவரும் கூருணர்வுடையவர்களாகவும், தொட்டாற் சிணுங்கியின் மனப்பான்மை உடையவர்களாகவும் இருந்ததால் மற்றவருடைய செய்கையை விரைவில் தவருக உணர்ந்தனர். ஆகையால் மனக்குறைவு அளிப்பதற்கும், பூசல் விளைவிப்பதற்கும் காரணங்கள் மிகுந்த அளவில் இருந்தன. உதாரணமாக, காபவ் பள்ளத்தாக்குச் (Kabauv valley) சிற்றெல்லைச் சச்சரவும், பர்மா—பிரிட்டிஷ் இந்தியா இடையேயிருந்த மனிதப் போக்குவரவில்லாத பகுதிகள்பற்றி ஏற்பட்ட தப்பர்த்தங்களும் மிகைப்படுத்தப்பட்டன. அதிகாரிகளின் குறுகிய மனப்பான்மையும், கீழ்த்தரமான நடத்தையும் இச் சூழ்நிலையைத் தூண்டிவிட்டு மேலும் இழிநிலை அடையும்படிச் செய்தன.

தாரவாதி (Tharawaddy), பேகன் மின் (Pagan Min) ஆகிய அரசர்களின் கொடுங்கோல் ஆட்சியினுல் ஆங்கிலேய அதிகாரிகளும், வணிகர்களும் மன நிறைவற்ற மனப்பான்மையடைந்தார்கள். இவர்கள் ஆட்சியினுல் பர்மிய மக்கள் கொடுமைப் படுத்தப்பட்டார்கள்; ஆங்கிலேயர்கள் எரிச்சலூட்டப்பட்டார்கள். மத்திய அரசாங்கத்தின் ஆட்சி வன்மையிழந்தது; உள்நாட்டு அரசுகள் மிகுந்த உரிமையோடு இயங்கின. தங்கள் வரம்புக்கு

மிஞ்சி அரசியல் தலைவர்கள் நடந்து கொண்டார்கள். பொறுப்புள்ள சில அதிகாரிகளினால் அவையிலும், அரசாங்கத்துறையிலும் நிரம்பி வழிந்த கையூட்டையும் ஊழலையும் ஒழிக்க முடியவில்லை. தார வாதியின், பேகன் மின்னின் ஒன்றுவிட்ட உடன்பிறந்தவர்களுக் குப் பித்துப் பிடித்தது. இவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் பர்மிய—ஆங்கிலேய உறவு போர் மூளும் சூழ்நிலையை அடைந்தது.

முதல் போரினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து பொதுவாகப் பர்மாவும் சிறப்பாக இறுமாப்புடைய பர்மிய அவையும் எளிதில் மீளவில்லை. ஆங்கிலேயர்களுக்கு உதவி புரிந்ததால் மாண் (Mons) இனத்தாரையும், காரேன் (Karens) இனத்தாரையும் பொறுப்பு மிகுந்த மன்னர் பாக்யிதாவு பெரிதும் துன்புறுத்தினர். கீழைப் பர்மாவில் (Lower Burma) பர்மியர்களின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கத்துடன் கலகக்காரர்களின் உறைவிடமான பெகு (Pegu) பர்மியர்களால் தாக்கப்பட்டது. 1826–27 ஆகிய ஆண்டுகளில் உள்நாட்டுக் கலகத்தால் மக்கள் மிகவும் துன்பத்திற் குள்ளானார்கள். விளைபொருள்கள் அழிந்ததால் பஞ்சம் வந்தது. உரிமையோடு திரிந்துவந்த புலிகள் மூலம் தங்களுக்கும் தங்கள் விலங்குகளுக்கும் உயிராபத்து வருமோ என ஏர் உழவர்கள் பயந்த தாகக் கூறப்படுகிறது. இழப்பீட்டுத் தண்டத் தொகையைக் கொடுப்பதற்காக அடக்கப்பட்ட மாண் இனத்தார்களும், காரேன் இனத்தார்களும் மிகுந்தவளவில் தூக்கிலிடப்பட்டார்கள். பயத் தால் நடுங்கிய மாண் இனத்தார்கள் அண்டை நாடுகளான சியாமிற்கும், ஆங்கிலேய மாவட்டமான ஆம்ஹெர்ச்டிற்கும் (Amherst) ஓடி ஒளிந்தார்கள். காரேன் இனத்தார்கள் காடுகளுக் குள் ஓடி ஒளிந்தார்கள்.

கீழைப் பர்மாவில் பர்மியர்களின் அடக்குமுறை ஆட்சி வலிமையடைந்து கொண்டிருக்கும் பொழுது மேலைப் பர்மாவில் விரைவாக நடந்த சில நிகழ்ச்சிகளால் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் நட்பிடையே பிணக்கும் உண்டாயிற்று. பாக்யிதாவு இறுதி ஆட்சிக்காலத்திலும் தாரவாதி ஆட்சிக் காலத்திலிருந்து பேகன்மின் ஆட்சிக்காலம் வரையிலும் பர்மிய—ஆங்கிலேய உறவில் எதிர்ப்புணர்ச்சிகள் மிகுந்தன.

கிராபோர்டு வாணிப உடன்படிக்கை (Crowford Commercial Treaty - 1826)

கி.பி. 1826 செப்டம்பர் மாதம் வாணிப உடன்படிக்கை ஒப்பந்தப் பேச்சு நடத்துவதற்காக ஜான்கிராபோர்டை (John

crowford) தலைமை ஆளுநர் பர்மாவிற்கு அனுப்பினர். ஆங்கிலேயப் படை பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்டதால் கட்டுப்பாடுகள் இட்டுப் பேச அவரால் முடியவில்லை. இரங்கூனிலிருந்து அரிசியையும், வெள்ளியத்தையும் பர்மா ஏற்றுமதி செய்யவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டதைப் பர்மா ஏற்றுக்கொள்ள மறுத்தது. இச்சமயத்தில் மிகுதியாக அரிசி பர்மாவிடம் கிடையாது; இழப்பீட்டுத் தண்டத் தொகையைப் பர்மா அளித்துக் கொண்டுவருவதால் ஏற்றுமதி செய்ய வெள்ளியும் பர்மாவிடம் இல்லை.

கிராபோர்டு திறமையில்லாது பேசும் அரசியல் தரகர்; திமிரான ; துடுக்குத்தனமிக்க இயல்பு உடையவர்; ஆணவப் போக்குடன் சர்வாதிகாரி போல உரையாடல் நடத்தினர் எனப் பர்மியர்கள் கருதினர்கள். ஆகையால் அவருடைய நோக்கங்களெல்லாம் நிறைவேறவில்லை.

கிராபோர்டு வாணிப உடன்படிக்கையின் அம்சங்கள் பின்வருமாறு :—

(1) இவ்விருநாடுகளின் மக்களும், வணிகர்களும் கட்டுப்பாடில்லாமல் உரிமையோடு நடமாடி வாணிபம் செய்யலாம்.

(2) ஒவ்வொரு பொருளின் சரக்கெடையளவு எடுத்து ஒரு குறிப்பிட்ட சுங்கவரி ஏற்படுத்த வேண்டும்.

(3) துன்புறும் நிலையிலுள்ள, ஆங்கிலேயக் கப்பல்களுக்கு உதவி புரியவேண்டும்; பதிலாக எல்லாச் சுங்க வரிகளையும் ஆங்கிலேயர்கள் தவறாமல் செலுத்துவார்கள்.

அரசியல் தூதுவ உறவு அமைக்க வேண்டும் எனக் கிராபோர்டு கேட்கவில்லை. பர்மா கல்கத்தாவிற்கு அரசியல் தூதரை அனுப்ப மறுக்கிறது எனக் கிராபோர்டு இந்தியாவிற்குத் திரும்பியவுடன் கூறினர். இதனல் ஆங்கிலேயர்கள் மனச்சோர்வடைந்தார்கள். ஆகையால் இச் சமயத்தில் ஒரு நிலையான அரசப்பிரதிநிதியைப் பர்மாவிற்கு அனுப்புவது தவறு எனக் கிராபோர்டு எடுத்துரைத்தார்.

மணிப்பூரில் சிண்ட்வின் ஆறு (Chindwin river) வரையிலும் தன்எல்லையைப் பிரிட்டன் பரப்பியது. இதனல் உடன்படிக்கையின் படிப் பர்மா தனக்குக் கொடுத்த பகுதிகளுக்குமேல் மிகுந்த பகுதியைப் பிரிட்டன் கைப்பற்றிக் கொண்டது. தென்னுசெரிமில் மக்கள்

கலகம் செய்தனர்; இதை அடக்கியதோடல்லாமல் ஆங்கிலேயர்கள் மார்ட்டபன் (Martaban) துறைமுகத்தையே எரித்துவிட்டார்கள்.

மன்னர் பாக்யிதாவு கல்கத்தாவிற்கு நிலையாகத் தூதரை அனுப்ப மறுத்தபோதிலும் ஒரு தூதுக்குழுவை மௌல்மெயினுக்கும் (Moulmein) கல்கத்தாவிற்கும் அனுப்பினர். இதன் நோக்கம்:—

(1) எஞ்சியிருந்த இழப்பீட்டுத் தண்டத் தொகையை நீக்குமாறு ஆங்கிலேயர்களிடம் முறையிடுவது.

(2) பர்மா, மணிப்பூர் ஆகியவற்றின் எல்லையைப் பர்மாவிற்குச் சாதகமாக அமைத்துக் கொள்ள அனுமதி கேட்டது.

(3) கபாவ் பள்ளத்தாக்கு (Kabaw valley) பர்மாவிற்குத் தான் உரியது எனக்கூறித் தனதாக்கிக் கொள்வது.

(4) தென்னசெரிமை மீண்டும் பர்மாவிற்கு ஒப்படைக்கும்படி விண்ணப்பம் செய்வது.

இழைப்பீட்டுத் தண்டத் தொகையை அளித்துத்தான் ஆக வேண்டும் என ஆங்கிலேயர்கள் கட்டாயப்படுத்தினர்கள். ஆனல் கி.பி. 1833ல் கபாவ் பள்ளத்தாக்கு மீண்டும் பர்மாவிடமே ஒப்படைக்கப்பட்டது.

புதிய தலைமை ஆளுநரான வில்லியம் பென்டிங் (William Bentink) முற்போக்குக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர். 'தோல்வியினல் நம்முடைய எதிரிகள் கோபமாக இருக்கிருர்கள். நாம் அவர்களுடைய நட்புறவை மனமார நாடுகிறேம் என அவர்களுக்கு நம்பிக்கையளித்து அவர்களுடைய மனக்கசப்பையும், கோபத்தையும் படிப்படியாகக் குறைக்க வேண்டும்' எனப் பென்டிங் கூறினர். இவ்வெண்ணத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றும் புதிய கமிஷனர்களை அராகனிலும், தென்னசெரிமிலும் நியமித்தார். பர்மியர்களின் வழி மரபு சமூகப் பழக்க வழங்கங்களையும், நீதி நிருவாக முறைகளையும் இவர்கள் பண்போடு காத்துப் பேண முயன்ருர்கள்.

கபாவ் பள்ளத்தாக்கு வழக்கைத் தீர்க்கும் நோக்கத்துடன் 1930-ல் ஹென்ரி பர்னி தலைநகரமான அவாவில் (Ava) அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவருடைய இனிமையான இயல்பும் நடத்தையும் மன்னர் பாக்யிதாவுவை மிகவும் கவர்ந்தன. ஆகையினல் பர்மியர்களின் அவை அவரிடம் முழு நம்பிக்கை வைத்திருந்தது. அவருடைய முயற்சியால் மணிப்பூரின் எல்லை

மீண்டும் வரையறுக்கப்பபட்டது (redemarcated). பர்மியர்களிட மிருந்து முறையின்றிக் கைப்பற்றப்பட்ட பகுதி மீண்டும் கொடுக்கப் பட்டது. தங்கள் நன்றி உணர்ச்சியைத் தெரிவிக்கும் பொருட்டுப் பர்னியைக் கீழ்ப்படியிலுள்ள அமைச்சராக (Junior Minister) மன்னர் நியமித்தார்; அரசப் பேரவையின் (Privy Council) உறுப்பினராகவும் ஆக்கினர். ஆகையால் அரசியல் செய்திகள் பற்றி உரையாடல் நடக்கும் போதெல்லாம் பர்னி பங்கெடுத்துக் கொண்டார். இழப்பீட்டுத் தண்டத்தொகையின் இறுதித் தவணை யைப் பர்மியர்களால் சிலகாலம் கொடுக்க முடியவில்லை. இத் தொகையைச் செலுத்தாவிட்டால் தென்னசெரிம் சியாமிற்கு அளிக்கப்படும் எனப் பர்னி பயமுறுத்தினர். தென்னசெரிமைத் தாங்கள் மீண்டும் பெறலாம் என்ற மனப்பான்மையுடன் கி.பி. 1832 நவம்பர் மாதம் இழப்பீட்டுத் தண்டத் தொகையின் இறுதித் தவணையைப் பர்மியர்கள் கொடுத்தார்கள்.

பர்னி-பாக்யிதாவின் நேசமனப்பான்மையால் பர்மா-பிரிட்டிஷ் இந்தியாவின் இடையே இருந்த மனக்கசப்பு மெதுவாக மறையும் என்ற நம்பிக்கை உருவாகிக் கொண்டிருந்தது. ஆனல் இச்சமயத் தில் ஆங்கிலேயர்களால் தமக்கேற்பட்ட அவமானத்தை மறக்க முடியாமல் வருந்திக்கொண்டிருந்த மன்னர் பாக்யிதாவுக்குப் பித்துப் (Insanity) பிடித்தது. இந்நோய் முற்றியவுடன் பர்னியுடன் இருந்த தொடர்பு முறிந்தது; ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத் துடன் முதல் இராணியாரும் (Chief-queen) அவருடைய உடன் பிறந்தவரான மென்தாக்யீயும் (Mentagyi) அரசமாளிகையினுள் சூழ்ச்சி செய்யத் தொடங்கினர்கள். ஆனல் இதை எதிர்த்துப் பாக்யிதாவின் உடன் பிறந்தவரான இளவரசர் தாரவாதி 1837ல் கலகம் செய்தார். ஆகையால் தாரவாதியைச் சிறைப்படுத்துமாறு மென்தாக்யீ 1837ல் கட்டளையிட்டார். ஆனல் தாரவாதி தப்பி ஓடி ஒளிந்து கொண்டார். தாரவாதி பர்னியின் நெருங்கிய நண்பர்; ஆங்கிலேயர்களை ஆதரிக்கும் மனப்பான்மையுடையவராகக் கருதப்பட்டார். ஆகையால் முதல் இராணியார் அவர் மூலம் தாரவாதியோடு உடன்பாடு செய்துகொள்ள முயன்றர். பர்னி தாரவாதியை மன்னராக்கினர். இது பர்னியின் எண்ணப்படியே நடந்தது எனவும் கூறலாம். ஏனென்றல், இராணியும் அவரு டைய உடன் பிறந்தவரும் ஆட்சி புரிவதைவிடத் தாரவாதி அரசராகி ஆட்சி புரிவதையே பர்னியும் விரும்பினர்.

தாரவாதி மன்னரானவுடன் பர்னிக்குத் தாம் அளித்த வாக்குறுதியைப் புறக்கணித்தார். முதல் இராணியையும், மெனிதாக்யீயையும் தூக்கிலிட்டார். பாக்யிதாவு சிறைக்காவலில்

வைக்கப்பட்டார். ஆனால் அவருக்கு சொந்தச் செலவுக்கெனக் குறிப்பிட்டதொகை (Privy Purse) அளிக்கப்பட்டது. அவா (Ava) விலிருந்து அரசமாளிகையினர் தமக்கெதிராகச் சதி செய்யலாம் என அஞ்சி அவாவிலிருந்து அமரபுராவிற்கு மாற்றினர்.

மிகுந்த விலை கொடுத்து ஆங்கிலேய வணிகர்களிடமிருந்து போர்க் கருவிகளை அவர் வாங்கினர். தாரவாதி ஆங்கிலேயர்களுக் கெதிராகப் போர்புரியத் திட்டமிடுவதாக ஆங்கிலேய வணிகர் கள் பர்னியிடம் தெரிவித்தார்கள். சினவெறியேறிய பர்னி, போர்க் கருவிகளைத் தாரவாதி வாங்கக்கூடாது எனக் கட்டளை யிட்டார்; சியாம் கென்துங்கைத் (Kentung) தாக்குவதைத் தடுப்ப தற்காகத்தாம் போர்க்கருவிகள் வாங்குவதாகத் தாரவாதி பதிலளித் தார். இத்தகைய செய்கைமூலம் தாரவாதி யாண்டபோ உடன் படிக்கையை மீறி நடப்பதாகப் பர்னி குற்றம் சாட்டினர். தங்களுடைய நேசநாடுகள் பர்மாவைத் தாக்குவதைப் பிரிட்டன் தடுக்காததால் ஏற்கெனவே பிரிட்டன் இவ்வுடன்படிக்கையை மீறி நடந்திருக்கிறது எனத் தாரவாதி மறுமொழியளித்தார். மேலும் யாண்டபோ உடன்படிக்கை காரணமாக தாரவாதி அச்சமின்றி ஆங்கிலயர்களிடம் எடுத்துரைத்தார். இதனால் பர்னி மனக்கசப் படைந்தார். மேலும் அவருடைய அரசியல் நடவடிக்கைகளுக்கும் பல தடைகள் போடப்பட்டன. இதனால் வெறுப்படைந்த பர்னி கி.பி. 1837 ஜூன் மாதம் அவாவை (இரங்கூன்) விட்டு வெளியேறி இந்தியாவிற்குத் திரும்பினர். இரங்கூனிலிருந்த அரசப் பிரதிநிதி அலுவலகத்தைப் பர்னி மூடியது தவறு எனக் கருதிய தலைமை ஆளுநர் அவரைக் கண்டித்தார். 'கொடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது; தாரவாதி மிகுந்த போர் வீரர்களைப் படைகளில் சேர்த்துக்கொண்டிருக்கிறர்; மேலும் அவர் மிகுந்த அளவில் போர்க் கருவிகளை வாங்கிக் கொண்டிருக்கிறர்; ஆகையால் அமர புராவைப் படை வலிமை கொண்டு தாக்கவேண்டும்' எனப் பர்னி பதிலளித்தார். இந்த யோசனையைத் தலைமை ஆளுநர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆகையால் தலைமை ஆளுநர் ரிச்சர்டு பென்சனை (Richard Benson) அரசப் பிரதிநிதியாக நியமித்தார். பென்சனுக்குப் பின் வில்லியம் மெக்லியாடு (William Mcleod) பதவியேற்றார். ஆனால் இவர்களால் பல ஆண்டுகள் அரசப் பிரதிநிதி பதவியிலிருக்க முடியவில்லை. ஆகையால், இரங்கூனிலிருந்த அரசப் பிரதிநிதி அலுவலகத்தை மூடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வரசி யல் தொடர்பு துண்டிக்கப்பட்டது 1852-ஆம் ஆண்டுப் போருக்கு ஒரு சிறந்த காரணம் ஆகும்.

இதற்கிடையிலே 1838ல் எழுந்த மாண் இனத்தாரின் கலகத்தையும், 1840ல் நடந்த ஷான் இனத்தாரின் (Shan) புரட்சியையும் தாரவாதி நன்கு முறியடித்தார். இக் கலகத்தை அடக்கிய பிறகு தம் படைவன்மையைத் தம்பட்டம் அடிக்கும் நோக்கத்துடன் தாரவாதி படைகளையெல்லாம் திரட்டி அணிவகுத்து இரங்கூனுக்குச் சென்றார். அராகன், தென்னுசெரிமிலிருந்த ஆங்கிலேயர்கள் இதைக் கண்டு மனம் கலங்கினார்கள். சில படைத்தலைவர்கள் ஆங்கிலேயர்களைத் தாக்கும்படித் தாரவாதியிடம் முறையிட்டார்கள். ஆனால், தாரவாதி இவர்களைக் கட்டுப்படுத்தினார். ஆங்கிலேயர்கள் இச் சமயத்தில் ஆப்கன், சீக்கியப்போர்களில் (Afghan war, Sikh war) கடுமையாக ஈடுபட்டிருந்ததால் பர்மாவின்மேல் படையெடுக்க முடியவில்லை.

படை முதல்வரும் தாரவாதியின் மூத்த மகனுமான இளவரசர் பேகன் மின் (Pagan Min) தாரவாதியை ஆதரித்தார். ஆனால், அவருடைய இளையமகன் தந்தையின் கொள்கைகளை எதிர்த்து இசைப்பாடகி மியாகலேவுடன் (Lady Myagalay) கூட்டுச் சேர்ந்து கலகம் செய்யத்திட்டமிட்டார். ஆனால், இவர்களுடைய சதியாலோசனைத் திட்டத்தை முன்னதாகவே தாரவாதி கண்டுபிடித்தார். சதித்திட்டம் போட்ட இருவரும் தூக்கிலிடப்பட்டனர். ஆனால், மியாகலே இறந்த துன்பத்திலிருந்து தாரவாதி மீளமுடியவில்லை; மேலும், தம் நிலைமறந்து பித்துப்பிடித்தவர் போலிருந்தார்அவர். ஆகையால், பேகன் மின் தந்தையைக் கவனித்துக்கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினார். 1846-ல் தாரவாதி இறைவனடி சேர்ந்தார். இளவரசர் பேகன் மின் அரசு பதவியேற்றார். இவருடைய இளையஉடன் பிறந்தவர்களான இளவரசர் மிண்டன் (Prince Mindon), இளவரசர் கானௌங் (Prince Kanaung) ஆகியோர் இவரை ஆதரித்தார்கள்.

பேகன் மின்

ஆங்கிலேய இராணுவத் தலைவர்களிடமிருந்து நாகரிகப் போர்க் கருவிகளைப் பேகன் மின் விலைகொடுத்து வாங்கினார். படைவலிமையை மிகுதிப்படுத்தவே இவ்வாறு செய்தார். இங்கிலாந்து அரசருடன் தூதுவப்படியளவில் அரசியல் தொடர்பை அமைக்க விரும்பினார். இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் சீனாவுடன் வாணிபத் தொடர்பு கொள்ள ஆர்வம் காட்டினார்கள்; பர்மாவைப் பின் வாயிலாகப் பயன்படுத்தி ஒளிவுமறைவாக ஆங்கிலேயர்கள் வாணிபம் செய்யத் தொடங்கினார்கள். 'கீழ்த்திசையில் உள்ள நாடுகளில் (Nation of the East) பர்மாதான் மிகச் செருக்குடன் தனக்கு மிஞ்சிய நாடில்லை என நினைக்கிறது. தாங்கள்தாம்

உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை விடாப்பிடியாகப் பின்பற்று வதில் பர்மிய மக்களுக்கு ஈடாக வேறொருவருமில்லை' என ஏகாதி பத்தியக் கொள்கைகளைப் பின்பற்றும் கோமான் டல்அவுசி (Lord Dalhousie) கூறினர். பர்மாவுடன் போர் புரிவதற்குக் காரணம் கிடைக்காமல் ஆங்கிலேயர்கள் தவித்தார்கள் எனப் பர்மிய வரலாற்றாசிரியர் மாங்தின் ஆங் (Maung Htin Aung) கூறுகிறார். ஆறு ஆண்டுக்காலம் பேகன் மின் மோசமாக ஆட்சிபுரிந்ததால் நிருவாக அமைப்புச் சீர்குலைந்தது; இதுதான் பர்மிய ஆங்கிலேயப் போருக்கு ஒரு சிறந்த காரணமாய்த் திகழ்ந்தது என ஐரோப்பிய வரலாற்றாசிரியர் ஹால் (Hall) எடுத்துரைக்கிறார்.

சுங்கவரிபற்றிப் பர்மா எடுத்த தீர்மானம் இறுதியில் இரண்டாவது பர்மிய-ஆங்கிலேயப் போராக உருவாகியது. இரங்கூனின் ஆளுநர் இரங்கூன் துறைமுகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடனும் கள்ளவாணிபத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத் துடனும் சுங்கவரிபற்றிய சில சட்டங்களை அறிவித்தார். இதை ஆங்கிலேய வணிகர்கள் வரவேற்கவில்லை; பர்மியர்களின் கொடுங்கோல் ஆட்சியால் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்ப தாக ஆங்கிலேய வணிகர்கள் கல்கத்தா அரசாங்கத்திடம் கூறினர்கள். பர்மாவின் உள்ளூர்ப் பகுதிகளை ஆங்கிலேயர்கள் கைப்பற்றவேண்டும் என இவர்கள் முறையிட்டார்கள். ஆங்கிலேய அதிகாரிகளும் இவர்களுடைய யோசனையை ஆதரித்தார்கள்.

1851ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு ஆங்கிலேய வணி கர்கள் சுங்கவரி செலுத்தாமல் ஏமாற்றிய காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டார்கள். நூறுபவுண்டு ஸ்டெர்லிங் (100 sterling= 1000 ரூபாய்கள்) தண்ட வரியாய்ப் போடப்பட்டது. கில்பெர்ட்கூ (Gil bert khoo) என்ற வரலாற்றாசிரியர் இதையே சிறிது மாற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'பெகு நகரத்தின் (pegu) ஆளுநர் முவாங் ஒக் (Muang OK) கையூட்டு வாங்கியதாகக் குற்றம் சாட்டி இரங்கூனிலிருந்த ஆங்கிலேயக் குடிமக்களைக் கொடுமைப் படுத்தினர். கி.பி. 1851 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கப்பற் படைத்தலைவர்களான செப்பேர்டு, லூயிஸ் ஆகியோர் (Captains Sheppard and Lewis) கொலை செய்ததாகவும் பணத்தைத் தகாத முறையில் கையாடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு, 1000 ரூபாய் கள் அபராதமாகச் செலுத்தவேண்டியதாயிருந்தது. ஆகையால் இவ்விரண்டு ஆங்கிலேயர்களும் தங்கள் வழக்கைத் தலைமை ஆளுநரான கோமான் டல்அவுசியிடம் கூறி முறையிட்டார்கள்'.

இச் சூழ்நிலையில் டல்அவுசியின் சீக்கியப்போர் (SiKh war) நன்முறையில் முடிவடைந்திருந்தது. ஆங்கிலேயர்களின் மதிப்பு

ஓங்கியிருந்தது; அவர்களுடைய படைவலிமையைப் பார்த்து எல்லோரும் அச்சமுற்றுர்கள் ; மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். தாம் பர்மாவிடம் கண்டிப்பில்லாமல் நடந்து கொள்வதை வலிமைக்குறைவு என மற்றவர்கள் கருதக்கூடாது என டல்அவுசி விரும்பினுர். ஆகையால், லம்பார்ட் என்பவரைப் பர்மாவுக்கு இறுதி எச்சரிக்கையுடன் அனுப்பினுர். அவமானப் படுத்தப்பட்ட இவ்விரண்டு கப்பற்படைத் தலைவர்களும், 1,920 பவுண்டுகள் இழப்பீடாக அளிக்கவேண்டும் என டல்அவுசியிடம் முறையிட்டிருந்த போதிலும் இவ்விழப்பீட்டுத் தொகையில் 1,000 பவுண்டுகளை (1,000 pounds) டல்அவுசி குறைத்தார்.

போர்க்கோலம் பூண்ட போர்க்கப்பல் படைப்பிரிவுகளுடன் (இரு போர்க்கப்பல்கள் எனக் கில்பெர்ட்கூ கூறுகிருர்) லம்பார்ட் இரங்கூனுக்குச் சென்றுர். இரு விண்ணப்பங்களை அங்கு லம்பார்ட் வெளியிட்டார் :

(அ) நீதி நேர்மையின்றி அபராதம் செலுத்தக் கட்டாயப் படுத்தியதாலும் செப்பேர்டு, லூயிஸின்மேல் குற்றம் சாட்டிய தாலும் அவர்களுக்குப் பர்மா அரசாங்கம் இழப்பீட்டுத் தொகை யளிக்க வேண்டும்.

(ஆ) ஆளுநர் மூவாங் ஒக் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும். தம்முடைய நிகழ்ச்சி ஏட்டில் (minutes) டல்அவுசி பின் வருமாறு எழுதியிருந்தார்:

'பண்டைய குடிமக்களின் நாடுகளைவிட, சிறப்பாகச் சிறிய அவா அவையை (court of Ava) விட, கீழான நாடாக இந்திய அரசாங்கத்தைக் கருத ஒருநாளும் விடமாட்டோம்.'

தாம் எடுத்து வந்திருக்கின்ற எச்சரிக்கையைச் செயல் படுத்தும்படி இறுமாப்புடனும், ஏளனத்துடனும் லம்பார்ட் கட்டளையிட்டார். இவர் நடத்தை தூதரக ஒழுங்குமுறை விதிகளை (protocol) மீறியதாக இருந்தது. ஆனுலும் தந்திரத் துடனும், கட்டுப்பாட்டுடனும் மன்னர் பேகன் மின் நடந்து கொண்டார். இரங்கூனின் ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்குவ தாகவும், விசாரணை செய்த பிறகு இழப்பீட்டுத் தொகைபற்றித் தீர்மானம் எடுப்பதாகவும் பேகன் மின் லம்பார்ட்டிடம் கூறினுர்.

புதிய ஆளுநர் பதவியேற்கும்போது அவரை அனைவரது எதிரிலும் பேகன் மின் அவமானப்படுத்தினுர். இரங்கூன் ஆளுநரின் சுற்றுக்கட்டு வெளியிடத்தில் (court yard) நுழையும்போது இளவரசர்கள்கூட, ஒழுங்குமுறை விதிப்படி, தங்கள் குதிரை

களிலிருந்து இறங்கவேண்டும். ஆனால், இந்த வணக்க வரிசை முறையைச் செய்ய லம்பார்ட்டு மறுத்தார். ஆகையால், இரங்கூன் ஆளுநர் லம்பார்ட்டின் தூதுக்குழுவைப் பார்க்க மறுத்தார். ஆகையால் பொதுமக்கள்முன் இழிவுபடுத்திக் கொள்ளுகிற முறையில் தம்மிடம் ஆளுநர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என லம்பார்ட்டு கட்டளையிட்டார். இதன் விளைவால் லம்பார்ட்டு மன்னருக்குச் சொந்தமான ஒரு கப்பலைக் கைப்பற்றிக்கொண்டு இந்தியாவிற்குத் திரும்பினார். லம்பார்ட்டின் கப்பலின்மீது பர்மியர்கள் குண்டுவீசினார்கள்; ஆங்கிலேயர்களிடம் பர்மியர்களைவிட மிகச்சிறந்த போர்க்கருவிகள் இருந்ததால், அவர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆங்கிலேயர்களினால் தாக்கப்பட்ட இரங்கூன் துறைமுகம் கொழுந்துவிட்டு எரிந்தது. லம்பார்ட்டின் நடத்தைபற்றி டல்அவுசி கண்டனம் தெரிவித்தார். ஆனால், லம்பார்ட்டைப் பதவியிலிருந்து நீக்கவில்லை; அவர் நடத்தையைத் தெளிவாக விளக்கியும் கூறவில்லை.

மன்னர் பேகன் மின் இழப்பீட்டுத் தொகையை அளிக்கத் தயாராகவிருந்த போதிலும் டல்அவுசி மீண்டும் ஓர் இறுதி எச்சரிக்கையைப் பர்மாவிற்கு அனுப்பினார். இவ்வெச்சரிக்கையின்படி (1) இரங்கூனின் புதிய ஆளுநரை அரசர் பதவியிலிருந்து நீக்கவேண்டும். (2) ஆங்கிலேய அதிகாரிகளை அவமானப்படுத்தியதால் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் முறையான வழியில் மன்னர் தம் அமைச்சர்கள் மூலம் மன்னிப்புக் கேட்கவேண்டும். (3) இரண்டு ஆங்கிலேய வணிகர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக 100,000 (Pound sterling) அளிக்கவேண்டும். பாதிக்கப்பட்டிருக்கும் இரங்கூனில் வசிக்கும் பிரிட்டிஷ் மக்களின் உடைமைகளுக்கு ஈடு செய்யவேண்டும். (4) கம்பெனி நியமிக்கும் இரங்கூன் அரசப் பிரதிநிதியை மன்னர் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்விறுதி யெச்சரிக்கை தம்மைப் பெரிதும் அவமானப்படுத்துவதாக மன்னர் கருதினார். தம் நாட்டை உரிமை நாடாகக்கருத ஆங்கிலேயர்கள் மறுக்கிறார்கள்; ஆகையால் அவர்களுடன் போர் புரிய முயன்றார். ஆனால் 'மன்னர் அவையினருக்குப் போரில் ஈடுபடுவதில் விருப்பமில்லை. பர்மாவைப் பாதுகாக்க யாதொரு முயற்சியும் அவையினர்கள் எடுக்கவில்லை. ஆங்கிலேயர்கள் படையெடுத்த சமயம் அதைத் தடுக்க முயற்சிகள் செய்யவில்லை.'

ஆகையால், கி.பி. 1852 ஏப்ரல் மாதம் படைத்தலைவர் காட்வின் (General Godwin) மார்டபனைக் (Martaban) கைப்பற்றினார். இதை மீட்கப் பர்மியர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அடுத்ததாக, மூன்று வாரத் தாக்குதலுக்குப் பின்

ஏப்ரல் மாதம் இரங்கூனையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள். மே மாதம் பர்மாவின் கடைசிக் கோட்டையான பாசைனை (Bassein) லம்பார்ட் தலைமையின் கீழிருந்த ஆங்கிலேயப் படை வீரர்கள் கைப்பற்றினார்கள். மேலும், பர்மியப் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கம் டல்அவுசிக்குக் கிடையாது. இவ்வித நடவடிக்கைகள் பர்மாவிற்குத் தண்டனை விதிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டன. இவ்வகையான நடவடிக்கைகள் எடுத்தால் பர்மிய மன்னர் பிப்ரவரி இறுதி எச்சரிக்கையை ஏற்றுக்கொள்வார் என டல்அவுசி நினைத்தார். ஆனால், பர்மிய மன்னர் விடாப்பிடியாக ஆங்கிலேயர்களின் இறுதி எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

டல்அவுசி இதற்கிடையில் இரங்கூனிற்கு வந்தார். இரங்கூனிற்கு வந்தவுடன் அவருடைய மனம் மாறியது. பெகுவைக் கைப்பற்றினால் அராகனைக் தென்னசெரிமுடன் இணைக்கமுடியும்; அதனால் ஆங்கிலேயர்களுக்குப் பல நன்மைகள் விளையும் எனக் கருதி இலண்டனுக்குப் பெகுவைக் (Pegu) கைப்பற்ற வேண்டும் என்ற ஆலோசனையை அனுப்பினார். இலண்டனிலிருந்து பதில் வருவதற்கு முன்பே பெகுவை ஜூன் மாதம் கைப்பற்றினார்; அக்டோபரில் பிரோமைக் (Prome) கைப்பற்றினார். கேதி (Cady) என்ற வரலாற்றாசிரியர் பிரோமை அக்டோபர் 10ஆம் நாளும், பெகுவை நவம்பர் 22ஆம் நாளும் டல்அவுசி கைப்பற்றியதாகத் தவறாகக் கூறுகிறார். டிசம்பர் மாதம் பர்மியர்கள் மீண்டும் பெகுவை மீட்பதற்கு வீணாக முயற்சி செய்தார்கள். டிசம்பர் 10ஆம் நாள் பெகு ஆங்கிலேயப் பர்மாவின் மூன்றாவது இடமாக அமைக்கப்பட்டதென டல்அவுசி அறிவித்தார். இதன் விளைவாக ஐராவதி யாறு ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் வந்தது; இந்த ஆற்றின் மூலம் சீனாவுடன் ஆங்கிலேயர்கள் வாணிகத் தொடர்பு கொள்ளலாம்.

முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேய அரசியல் மேதகை (Statesman) ரிச்சர்டு கோப்டென் (Richard Cobden) டல்அவுசியின் பர்மியப் படையெடுப்பைப்பற்றி மணித்திரட்டான முறையில் பின்வருமாறு கூறுகிறார் :

'ஆயிரம் பவுண்டு (pound) உரிமைக் கோரிக்கையுடன் டல்அவுசி தொடக்கத்தில் பர்மியர்களை அணுகினார். பிறகு தம் அதிகாரிகளை அவமானப்படுத்தியதால் இரங்கூன் ஆளுநர் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனத் தெரிவித்தார். அடுத்த படியாக இழப்பீட்டுப் பணத்தின் தொகை நூறாயிரம் பவுண்டு

களாக உயர்த்தப்பட்டது. அரசருடைய அமைச்சர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற கோரிக்கை வெளியிடப்பட்டது. இதற்குப் பின் பர்மா படையெடுப்புத் தொடங்கப்பட்டவுடன் எதிர்பாராத வகையில் திடீரென்று இழப்பீட்டுத் தொகை, உரிமைக்கோரிக்கை, மன்னிப்பு இவைகளெல்லாம் கைவிடப்பட்டன. பெகுத் (Pegu) தவிர்கையை இழப்பீடாகவும், சரி செய்யும் எதிரீடாகவும் ஏற்றுக்கொள்ளப் பெருமகனும் ஆட்சியாளரும் உடன்பட்டனர். வரலாற்றாசிரியர் கேதி (Cady) பின்வருமாறு கூறுகிறார் : 'பலவகைகளில் இது டல்அவுசியின் போர் எனக் கூறலாம். தயக்கமின்மை, நன்கு ஆலோசித்து உருவாக்கப்பட்ட, செயல்படுத்தப்பட்ட போர்த் திட்டம், வீட்டு மருத்துவ வசதிகள், கப்பற் படையைத் திறமையுடன் பயன்படுத்திய முறை உட்பட, 1824-1825ஆம் ஆண்டுகளில் செயற்படுத்திய திட்டத்திற்குப் புறம்பாயிருந்தன எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.'

ஆங்கிலேயர்கள் மிக்க செலவு செய்து படைவலிமையைக் காட்டித்தான் இரண்டாவது பர்மிய-ஆங்கிலேயர்களின் போரை நிறுத்த முடியும் என்பது போலச் சூழ்நிலை உருவாகியிருந்தது. ஆனால் இத்திட்டத்தைச் செயல்படுத்துமுன்பே கி.பி. 1853ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பேகன் மின் பதவியிலிருந்து நீக்கப் பட்டார். போரைத் தொடர்ந்து நடத்துவதை எதிர்த்த பேகன் மின்னின் ஒன்றுவிட்ட உடன்பிறந்தவரான மிண்டன் மின் (Mindon-Min) கி.பி. 1853 பிப்ரவரி மாதம் அரசப் பதவியேற்றார். இவ்வரசியல் புரட்சியே இரண்டாம் போர் முடிவடைந்ததற்குக் காரணமாய் விளங்கியது. எல்லாப் பர்மியப் படைவீரர்களும், அதிகாரிகளும் வடக்குப் பர்மாவிற்குச் சென்றுவிட்டார்கள். கீழைப் பர்மாவில் தொடர்ந்து நடந்த போர், வெறும் கொள்ளைக் காரர்கள் சூறையாடும் உருவில் இருந்தது. இவ்வகையான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பிரோமிலிருந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் மேய்தி (Myede) மாகாணத்தின் வட வெல்லைக்குள் 50 மைல்கள் சென்றார்கள். இதன் விளைவால் பல சிறந்த தேக்கு மரக் காட்டுப் பகுதிகள் ஆங்கிலேயர்களின் எல்லைக்குள் வந்தன.

இரண்டாவது போரின் சிறப்பு

பர்மாவின் படைவலிமை நொறுங்கிவிட்டது எனத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. தாக்கின ஐரோப்பியர்களைத் தடுக்க முடியாததால் மகாபண்டுலாவின் புகழ் மங்கியது. ஒரு காலத்தில் கட்டுப்பாடுகளுடன் இருந்த படை ஒழுங்குணர்வை இழந்து வெறும் நாடோடிக் கும்பலாக மாறியது. ஆங்கிலேயர்கள் பெகுவைக் கைப்பற்றுவதைத் தடுக்க முடியாமலிருந்ததால் மிகச்

சிறந்த இடத்தைப் பர்மா இழந்தது. பர்மாவின் கடல் தொடர்பு துண்டிக்கப்பட்டது; அதனுடைய எல்லாத் துறைமுகங்களும், கடற்கரைப் பகுதிகளும் ஆங்கிலேயர்களுக்கு உரியனவாயின. ஆகையால், பர்மா ஒரு நிலஞ்சூழ்ந்த நாடாக (land-locked country) மாறியது; கடல் மூலம் பரவும் மாறுதல்கள் உண்டு பண்ணும் செயல்களிலிருந்து ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகையால், தன்னுடைய தொன்றுதொட்டுவந்த வழக்கத்திற்குள் ஒதுங்கி உள்ளடங்கியது; மீண்டும் கி.பி. 1860ஆம் ஆண்டில்தான் அது வெளி உலகத் தொடர்பை நாடமுயன்றது.

5. மிண்டன் மின்னும், ஆங்கிலேயர்களும்

1852 முதல் 1878 வரை மிண்டன் மின் (Mindon Min) ஆட்சி புரிந்தார். இவருடைய இருபத்தாறுண்டு ஆட்சிக் காலத்திலே மிக முக்கியமான நிகழ்ச்சி ஆங்கிலேயர்களோடு போர் புரியாமல் இருந்ததே ஆகும். ஆங்கிலேயர்களுடனிருந்த உறவு வளர்ச்சியடைந்தது. இதற்குப் பல காரணங்களிருந்தன :

(1) ஆங்கிலேயர்களுக்கு ஏற்றவாறு மன்னர் மிண்டன் மின் நடந்துகொண்டதால் ஆங்கிலேயர்கள் மனக்கசப்படைய வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

(2) முன்னுள் அரசர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னர் மிண்டன் மின் பண்பு நலமுடைய, இரக்கமுள்ள இயல்பு உள்ளவர் எனக் கூறலாம். பல ஆண்டுகள் புத்தத் துறவியாக மிண்டன் மின் வாழ்ந்ததால் அவரிடம் பண்புவாய்ந்த, கல்வித் தேர்ச்சிபெற்ற மனப்பான்மை உருவாகியிருந்தது.

(3) ஆங்கிலேயர்களுடன் மிண்டன் மின் உடன்படிக்கைகள் செய்துகொண்டார்; தலைநகரத்தில் ஆங்கிலேய அரசப் பிரதிநிதி இருக்க அனுமதி அளித்தார்.

(4) சில வாணிகப் பொருள்களின் தனி உரிமை வேண்டும் என இரங்கூனில் வாழ்ந்த வணிகர்கள் வலியுறுத்தியபோது முன்னறிவோடு மிண்டன் மின் ஒப்புக்கொண்டதால், சண்டைப் பூசல்களைத் தவிர்க்க முடிந்தது.

(5) மன்னருக்கும், பெகு ஆணையரான ஆர்தர் பாய்ரெவிற்கும் (Arthur Phayre) இடையே இணைப்பு அலுவலராய்த் (liasion officer) தாமஸ் ஸ்பியர்ஸ் (Thomas Spears) நல்ல வேலையாகப் பணிபுரிந்ததால் இவ்விரு நாடுகளிடையே இருந்த மனக்கசப்பு மிகவில்லை.

(6) தப்பெண்ணத்தை அகற்றும் மிண்டன் மின்னின் கொள்கைகளும் இதற்குக் காரணமாயின.

மிண்டன் மின்னின் பண்பு நலன்கள்

மன்னர் மிண்டன் மின் மிகுந்த மதப்பற்றுடையவர்; பண்பு மேம்பட்ட சிறப்பியல்புடையவர்; நன்னடத்தை வாய்ந்தவர்; நல்லெண்ணங்களை யுடையவர்; இரத்தம் சிந்திப் போர்புரிவதை எதிர்ப்பவர்; இழிந்த குணங்களும், வஞ்சனை இயல்பும் இல்லாதவர்; வரலாறு, பொருளாதாரம் முதலியவற்றைப் பற்றி செய்திகளைப் பாராட்டும் மனப்பான்மையில்லாதவர். ஆங்கிலேயர்களிடம் அடிமைபோலவும் நடந்துகொள்ளவில்லை; விடாப்பிடியாக எதிர்க்கும் மனப்பான்மையையும் காண்பிக்கவில்லை. ஆகையால், மிண்டன் மின் ஒரு நாணயமுள்ள மன்னர், முன்னேற்றக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை படைத்தவர் என ஆங்கிலேயர்கள் அவருக்கு மதிப்பளித்தனர்.

வரலாற்றாசிரியர் மாங் தின் ஆங் (Maung A tin Aung), 'பர்மாவை ஆண்ட அரசர்களுக்குள் மிகத்திறமை வாய்ந்த அரசர் மிண்டன் மின், உயர்ந்த குறிக்கோள்களைக் கடைப்பிடிப்பவர்; ஆனால் நடைமுறைக்கு ஒத்த செயல்களைப் புரிபவர். தம் விருப்பம் போல் ஆட்சிபுரிபவராக இருந்தபோதிலும் பணிவான இயல்பு உடையவர்; நாட்டுப்பற்று நிறைந்தவர். ஆனாலும், நாட்டின் குறைபாடுகளையும் உணர்ந்தவர்; பொதுவாகப் போரற்ற அமைதி நிலையை விரும்புபவர்' எனக் கூறுகிறார்.

அண்டையிலிருந்த ஆங்கிலேய அரசுடன் மிண்டன் மின் நேச மனப்பான்மையுடன் உறவு பூண்டார்; ஆனால் இது உள்ளுணர்ச்சியுடன் கூடிய நட்பாக இல்லை. முதலில் அமரபுராவிற்கு வந்து அரசு பதவியேற்றதும் பேகன் மின்னால் சிறையிடப் பட்டிருந்த எல்லா ஐரோப்பியர்களையும் விடுதலை செய்தார். அவர்களை ஆங்கிலேயப் படைத் தலைவர்களிடம் அனுப்பினார். ஆங்கிலேயப் படைகளுடன் எவ்வகைத் தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாமென ஆணையிட்டார். ஆங்கிலேயப் படைத் தலைவர்கள் டல்அவுசியுடன் மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றிக் கேட்கத் தொடர்புகொண்டார்கள். டல்அவுசி பின்வருமாறு கட்டளையிட்டார்: (1) கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் திறமையுடன் ஆங்கிலேய ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டும். (2) அராகன் ஆணையரான படைத்துறைப் பணித் தலைவர் ஆர்தர் பாய்ரேவை (Mayor Arthur Phayre) பெகுப் பிரதேசத்தின் முதல் ஆணையராக நியமித்தார். (3) பர்மிய

அரசரிடமிருந்து தூதுக்குழுவை வரவழைக்கப் பாய்ரேவிற்கு முழு அதிகாரம் (plenipo tentiary) அளிக்கப்பட்டது.

பெகுப் பகுதியிலிருந்து ஆங்கிலேயர்கள் வெளியேற வேண்டும் என மன்னர் மிண்டன் மின் வேண்டுகோள் விடுத்தார். ஆணையர் பாய்ரே பின்வருமாறு பதிலுரைத்தார்: (1) மன்னர் வேண்டுகோளை ஏற்க முடியாது. (2) பிரோம் (Prome) மாகாணம் வரையுள்ள (பிரோம் உட்பட) பகுதிகள் ஆங்கிலேயர்களைச் சேர்ந்தவை என ஒப்புக்கொண்டு ஓர் ஒப்பந்தத்தை மன்னர் மிண்டன் மின் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தால் தாயட் மியோவிலிருந்து (Thyat Myo) பிரோம் வரையிருக்கும் ஆங்கிலேயப் படைவீரர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

ஆனால், பாய்ரே கேட்டுக்கொண்டதை மிண்டன் மின் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையால், இரண்டாவது போர் முடிந்து விட்டதாக டல்அவுசி அறிவித்தார். பிரோமிற்கு வடக்கே யிருந்த பகுதிகளை ஆங்கிலேயர்கள் தொடர்ந்து வைத்துக்கொண்டனர்.

ஆங்கிலேயர்களுக்கு மனக்கசப்பை உண்டாக்காமலிருந்தால் தான் பர்மாவின் உரிமையைப் பாதுகாக்க முடியும் என மிண்டன் மின் உணர்ந்தார். ஆங்கிலேயர்களோடு மட்டுமல்லாமல் பிரான்சுடன்கூட மிண்டன் மின் உடன்படிக்கைகள் செய்துகொண்டார். அவர் பிரான்சுடன் கொண்ட தொடர்பை ஆங்கிலேயர்கள் வெறுத் தார்கள். பர்மாவை உரிமை நாடாகப் பாதுகாக்கவேண்டும் என்பதே மிண்டன் மின் நோக்கம். ஆனால், ஏற்கெனவே பர்மா ஆங்கிலேயர் களின் சார்பரசு என உரிமை விஞ்சிய முறையில் ஆங்கிலேயர்கள் கருதினர்கள். இதனல் மனக்கசப்பு ஏற்பட்ட போதிலும் வெளிப் படையாகப் போர் மூளவில்லை.

மிண்டனின் அமைதி முறைகள் பல தடவைகளில் ஆங்கிலே யர்களின் மதிப்பைப் பெற்றன. முதல் முறையாக அவர் ஆங்கி லேயருடன் அரசியல் தொடர்புகொள்ளும் முயற்சி 1854-ல் ஏற்பட்டது; பெகுவைப் பர்மாவிற்கு திருப்பித் தரும்படிக் கேட்க அனுப்பியஒரு தூதுக்குழுவை நல்ல முறையில் ஆங்கிலேயர்கள் நடத்தியதால்மிண்டன் மின் அமைதியடைந்தார். பதிலாக, ஒரு தூதுக் குழுவைப் பர்மாவிற்கு அனுப்புமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக்கொண்டார். கி.பி. 1855-ல் பாய்ரேவின் தலைமையில் ஓர் ஆங்கிலேயத் தூதுக்குழு மாண்டலேயிற்கு வந்தது. நேச மனப்பான்மையுடன் உரையாடல்கள் நடந்தன. பாய்ரேவுடன் பேச்சு நடத்த 'மன்னருக்குப் பேரறிவாளியான தாமஸ் ஸ்பியர்ஸ்

(Thomas Spears) என்ற ஆங்கிலேயர் உதவிபுரிந்தார். ஒற்று மைக்கு இடந்தராத டல்அவுசிகூடப் பின்வருமாறு தம் எண்ணத்தை வெளியிட்டார் :

> 'பர்மாவினுள் நுழைந்த நேரத்திலிருந்து அதன் எல்லையிலிருந்து வெளியேறும் வரை தூதுக்குழுவை முனைப்பான தனிப் பண்புக் கூறுகளோடும், மெச்சத்தக்க விருந்தோம்பும் பண்புகளோடும், பெருந்தகைமையோடும் உபசரித்தார்கள்...உடன்படிக்கை மூலம் ஏற்படுத்தக்கூடிய ஒற்றுமையும், அமைதியும், உடன்படிக்கையில்லாமலே நிலவுகிறது என்பதைத் திட்டவட்டமாக நான் பதிவு செய்கிறேன்.'

தன்மதிப்பிற்கு இழுக்கு எனக் கருதி முதலில் ஆங்கிலேயத் தூதர் தலைநகரத்தில் தங்குவதற்கு மிண்டன் அனுமதி அளிக்கவில்லை. ஆனால், இரங்கூனில் வாழ்ந்துவந்த ஆங்கிலேயர்களின் உதவியை, பிரிட்டிஷ்—இந்தியாவிடமிருந்து ஊதியம் பெறும் ஆங்கிலேயர்கள் உட்பட, தற்கால நடவடிக்கைகளை அறிவதற்காகப் பயன்படுத்த மிண்டன் தயங்கவில்லை. உதாரணமாக பாய்ரே அளித்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு பர்மாவில் புகழ்பெற்ற தாமஸ் ஸ்பியர்ஸ் என்ற ஆங்கிலேய வணிகரைத் தலைநகரத்தில் செய்தித்தாள்-எழுத்தாளராகவும் (News-Writer), அரசருக்கும் பெகு ஆணையருக்கும் இடையே பணிபுரியும் பணித்துறையைச் சாராத அலுவலராகவும் (unofficial link) நியமித்தார். இக்காரணத்தால் 1853 முதல் 1861 வரை பர்மியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நேச மனப்பான்மை வளர்ந்தது. ஸ்பியர்ஸ் பணி புரிந்ததால் அரசப் பிரதிநிதியின் தேவையில்லாமலிருந்தது எனக் கூறலாம். ஆனால் கி.பி. 1861-ல் உடல் நலம் சரியாக இல்லாததால் ஸ்பியர்ஸ் விடுமுறை எடுத்துக்கொண்டு பர்மாவை விட்டுச் சென்றவுடன் அரசப் பிரதிநிதியின் தேவையை உணரமுடிந்தது.

மேலைப் பர்மாவிலிருந்த சூழ்நிலையின் காரணமாக ஆங்கிலேய வணிகர்களும், கம்பெனி அலுவலர்களும் சீனாவிற்குச் செல்லும் வாணிகச் செல்வழியைப் (trade route) பற்றி அளவாய்வுக் கூறுகள் பதிவு செய்து திரட்டுவதற்காக (Survey) மிண்டனிடம் அனுமதி கேட்டனர். மிண்டனும் அனுமதியளித்தார். இவ்வாய்வுப் பயணத்திற்குப் பிறகு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. தென்-கிழக்குப் பர்மாவிலிருந்து யூனான் (Yunan) வரை வாணிபச் செல்வழி அமைக்க வேண்டும் எனப் பிரிட்டிஷ்—இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

கி.பி. 1853–ல் பாய்ரே ஒரு வாணிக உடன்படிக்கை செய்ய முயற்சி செய்த போதிலும் அதில் அவர் வெற்றியடையவில்லை. கி.பி. 1826-ல் மீண்டும் மாண்டலேயிற்குப் பாய்ரே தரகு பேச்சு நடத்துவதற்காக அனுப்பப்பட்டார். வாணிகத்தை வளர்க்கச் செய்ய வேண்டும் என மிண்டனும் விரும்பினர். ஆகையால் மிண்டனை இணங்க வைத்துப் பாய்ரே பர்மாவுடன் ஒரு வாணிக ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையின் அம்சங்கள் :

(அ) கீழைப் பர்மாவில் ஆங்கிலப் பர்மிய எல்லைகளைக் கடந்து வரும் பொருள்களின் மேல் விதிக்கும் சுங்க வரிகளைக் குறைக்க வேண்டுமென அரசரும், பிரிட்டிஷ்—இந்திய அரசாங்கமும் தீர்மானித்தனர்.

(ஆ) தங்கள் நாடுகளுக்குள் சுற்றிவர வணிகர்களுக்குத் தடை ஒன்றும் விதிக்கவில்லை.

(இ) மிண்டனின் தலைநகருக்கு ஓர் ஆங்கிலேய அரசப் பிரதி நிதி அனுப்பப்படுவார்.

(ஆனல் ஒரு பர்மிய அரசப் பிரதிநிதியை இலண்டனுக்கு அனுப்பப் பிரிட்டிஷ் இந்தியா உடன்பாடு தரவில்லை).

இவ்வொப்பந்தத்தின்படி கிளமென்ட் வில்லியம்ஸ் (Clement Williams) ஆங்கிலேய அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பின் மாண்டலேயிற்கு வந்தார். ஆகையால் மீண்டும் பர்மாவிற்கும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் தூதுவ அரசியல் தொடர்பு (Diplomatic relations) ஏற்படலாயிற்று.

இவ்வுடன்படிக்கையின்படிப் பர்மிய வணிகர்கள் உரிமையுடன் ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளுக்குள் செல்லலாம் என்றுலும், பர்மிய வணிகர்கள் அப்பகுதிகளுக்குச் செல்லவேண்டிய நோக்கமோ, வாய்ப்போ, கட்டாயமோ இல்லை. அவ்வாறு பர்மிய வணிகர்கள் ஆங்கிலேயப் பகுதிகளுக்குச் சென்றிருந்தாலும் அவர்களால் ஆங்கிலேயர்களுக்குத் தொல்லையோ ஆபத்தோ ஏற்பட்டிராது. ஆனல், பர்மாவின் எல்லையைக் கடந்து சுற்றிவந்த ஆங்கிலேய வணிகர்கள் இரகசிய ஒற்றர்களாகப் பணிபுரிந்தார்கள். வாணிகம் செய்வதாகச் சாக்குப்போக்குக் கூறி ஆங்கிலேயப் படை அதிகாரிகளும் பர்மாவிற்குள் நுழைந்து மிண்டனின் ஆட்சிக்கெதிராகக் காரேன் (Karen) இனத் தலைவர்களைக் கலகம் செய்யுமாறு தூண்டினர்கள். ஆங்கிலேய அரசப் பிரதிநிதியாக மாண்டலேயில் பணிபுரிந்துவந்த படைப்பகுதி முதல்வன் (Colonel Sladen) ஆங்கிலேய வணிகர்களிடமிருந்து ஊதியம் பெற்றுக்கொண்டு

ஒற்றர் பணியைச் செய்துகொண்டிருந்தார். கிரிமியன் போரிலும், இந்தியச் சிப்பாய்க் கலகத்திலும் ஆங்கிலேயர்கள் கடுமையாக ஈடுபட்டிருந்தபோதிலும் மிண்டன் கீழைப்பர்மாவை மீட்பதற்காக அதன்மேல் படையெடுத்துச் செல்லவில்லை.

1866-ல் மின் மங்கிற்கெதிராக நடந்த இளவரசர் மியின்கன் (Myingun) கலகத்தில் ஆங்கிலேய அரசப் பிரதிநிதியான ஸ்டேலரும் பங்குகொண்டார். இக்கலகம் பர்மாவின் இறுதி வீழ்ச்சியை விரைவுபடுத்தியது எனப் பர்மிய வரலாற்றாசிரியர் மாங்தின் ஆங் கூறுகிறார். கி.பி. 1866-ல் ஆங்கிலேய அரசப் பிரதிநிதியை வெறுத்த தம் இளைய உடன்பிறந்தவரான காளெங்கை (Kanoung) அடுத்து நேர் உரிமையுள்ள இளவரசராக (Crown Prince) மிண்டன் நியமித்தார். இதை மிண்டனின் புதல்வர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆகையால், உரிமை பெற்ற இளவரசருக்கு எதிராகச் சதிசெய்யத் தொடங்கினார்கள். மன்னரின் மகளை மியின்கன், உரிமை பெற்ற இளவரசரின் மகளை மணம் புரிந்து கொண்டிருந்தபோதிலும், தம்முடைய மாமனின் புதுப் பதவியை வரவேற்கவில்லை. ஆகையால், கி.பி. 1866-ல் மியின்கனும் அவருடைய உடன்பிறந்தவருமான மியின் கொண்டைங்கும் (Myin Gondaing) இணைந்து உரிமை பெற்ற இளவரசர் காளெங்கைப் படுகொலை செய்தனர். நகரத்திற்கு வெளியிலிருந்த மிண்டனைக் கொலைசெய்வதற்கும் ஒரு கொலை காரனை அனுப்பினார்கள். மிண்டன் உத்தரவிட்டதன் பேரில் இக்கொலைகாரன் தன்னுடைய வாளைக் கீழே போட்டான். ஒரு குதிரைமேல் தாவி மியின்கனின் ஆள்கள் அரச மாளிகைக்குள் நுழையுமுன் மன்னர் மிண்டன் அரசமாளிகைக்குள் நுழைந்து ஒளிந்துகொண்டார். இதற்கிடையில் மியின்கனையும் அவருடைய படையையும் அரசப்படை வீரர்கள் ஆற்றங்கரை ஓரத்தே தோற்கடித்து விரட்டினார்கள். மியின்கனும், மியின் கொண்டைங் கும் ஐராவதிப் படகுகளின் தொகுதியிலிருந்த (Irawady Flottila Company) படகை யெடுத்துக்கொண்டு ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்த பகுதிகளுக்குள் சென்று ஒளிந்தனர். பின்பு காரேன் இனத்தாரின் பகுதிகளில் தோன்றி மியின்கன் கலகம் செய்தார். ஒரு வலிமைவாய்ந்த படையைப் பயன்படுத்தி மிண்டன் இக் கலகத்தை அடக்கினார். ஆகையால், மியின்கன் இரங்கூனிற்குத் திரும்பினார். கலகம் செய்த இருவரும் கல்கத்தாவிற்குச் சென்று இறந்துபோனார்கள். மியின்கன் காசிக்கு அனுப்பட்டுப் பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டார். ஆங்கிலேயர்கள் இக்கலகத்தில் ஈடு பட்டிருந்தார்கள். படைப்பகுதி முதல்வர் ஸ்லேடன் இக்கலகத்தைப் பற்றி முன்கூட்டியே அறிவார்; கலகம் தொடங்கியவுடன் அரச

மாளிகைக்கு வந்தார்; கலகக்காரர்கள் தோற்றவுடன்தான் அரச மாளிகையைவிட்டு வெளியேறினர் எனப் பலர் ஆங்கிலேயர்கள் மீது குற்றம் சாட்டினர். மியின்கனின் காரேன் பகுதிக் கலகத்திலும் ஆங்கிலேய அதிகாரிகள் ஈடுபட்டிருந்தார்கள் எனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. 1885-ல் பர்மாவை இறுதியாக ஆங்கிலேயர்கள் கைப்பற்றும்வரை மியின்கன் படைப்பகுதி முதல்வர் ஸ்லேடனின் காப்புத்துணைப்பொருள் (Protege) எனப் பர்மிய அவையினர் கருதினர். ஆனால், மன்னர் மிண்டன் இதை நம்ப மறுத்தார். ஆனால், இக்கலகம் பர்மாவின் இறுதி வீழ்ச்சியை விரைவுபடுத்தியது; இக்கலகம் மூண்டதிலிருந்து தேசம் முழுவதும் சட்டத்துக்குக் கட்டுப்படாத குழப்பமிக்க அமைதி குலைந்த சூழ்நிலை தலைதூக்கியது. மியின்கன் நாடுகடத்தப்பட்டு இந்தியாவிலிருந்தாலும் அவரிடம் பரிவுகாட்டுபவர்கள் மன்னர் அவையிலும் அவைக்கு வெளியிலும் இருந்தார்கள்.

மியின்கன் கலகத்திற்கு முன்பே கி.பி. 1866-ல் இரண்டாவது வாணிக ஒப்பந்தத்தை ஏற்படுத்த ஆங்கிலேயர்கள் முயன்று தோல்வியடைந்தனர். இதற்குச் சிறந்த காரணமென்னவென்றல் பர்மியத் தனி வாணிப உரிமையை ஆங்கிலேயர்கள் அடைய வேண்டும், சீன வாணிபத்தின் மூலம் செல்வம் திரட்டுவதற்காக மேலைப் பர்மாவைப் (Upper Burma) பின்வாயிலாகப் பயன்படுத்த வேண்டும் என ஆங்கிலேய வணிகர்களும் அலுவலர்களும் விரும்பினர்கள். இச்சமயத்தில் ஏற்றுமதியாகும் பொருள்களும் கல்கத்தாவிலிருந்து விலைக்கு வாங்கிய இறக்குமதிப் பொருள்களும் மிண்டனின் தனி உரிமையிலிருந்தன. ஆனல், பர்மாவில் இறக்குமதியாகும் பொருள்களின் தனிஉரிமையை அடைய ஆங்கிலேய வணிகர்கள் விரும்பினர்கள். மேலும் கி.பி. 1826ஆம் ஆண்டு வாணிக ஒப்பந்தம் ஆங்கிலேய வாணிகர்களுக்கு மனக்கசப்பை அளித்தது; இவ்வொப்பந்தத்தின்படி அரசர் மிண்டன் நடந்து கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினர்கள். ஆகையால் ஒரு புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டுமெனக் கோரிக்கையிட்டார்கள்.

மியின்கனின் கலகத்திற்குப்பின் மிண்டனுக்கும் போர்க்கருவிகள் தேவையிருந்தன. ஆகையால், இரண்டாவது வணிக ஒப்பந்தம் பற்றிப் பேச்சு நடத்த அவரே முன்வந்து ஒரு தூதுக்குழுவை அனுப்பினர். பாய்ரேவிற்குப்பின் உயர்தனி ஆணையராக (High Commissioner) நியமிக்கப்பட்ட படைப்பகுதி முதல்வர் ஆல்பர்ட் பெய்ட்சி (Albert Fytche) பேச்சு நடத்தினர். பிரிட்டிஷ் இந்தியாவிற்குச் சாதகமாக இவ்வொப்பந்தத்தை யேற்படுத்த

வேண்டுமென்றும், மிண்டனின் அயல்நாட்டுச் செய்திகளை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் பெய்ட்சிக்குப் போதனையளிக்கப்பட்டது. பேச்சு நடத்தும்போது மன்னர் வலிமையிழந்ததால் ஆங்கிலேயர்களால் பல புதுச்சலுகைகள் பெற முடிந்தது.

கி.பி. 1867ஆம் ஆண்டு வாணிக ஒப்பந்தத்தின் சிறப்புகள் பின்வருமாறு :

(அ) நடைமுறையிலிருக்கும் சுங்கவரிகளைக் குறைத்துச் சரக்கு ஒவ்வொன்றின் மொத்தவிலை மதிப்பில் 5 விழுக்காட்டைப் புதிய வரியாகத் தீர்மானிக்கவேண்டும்.

(ஆ) நாணயமாக்கப்படாத பவுன் வெள்ளிப்பாளங்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யத் தடையில்லாமல் முழுமையான உரிமையளிக்கப்படும்.

(இ) பர்மாவின் வழியாகச் சீனவுடன் ஆங்கிலேயர்கள் வேண்டும் தொடர்புகொள்ள மன்னர் உதவிபுரிய வேண்டும்.

(ஈ) மரம், பெட்ரோல், மணிக்கல் முதலியவை தவிர மற்ற எல்லாப் பொருள்களின் மேலுமுள்ள ஏனைய உரிமைகளை மன்னர் விட்டுவிட வேண்டும்.

(உ) கீழைப்பர்மாவிலுள்ள (Lower Burma) ஆங்கிலேய ஆணையரின் உடன்பாட்டுடன் போர்க்கருவிகளையும், படைத் தளவாடங்களையும், பல நீராவிக்கப்பல்களையும், ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளிலிருந்தும் அவற்றின் வழியாகவும் மன்னர் வரவழைக்கலாம்.

(ஊ) பாமோவில் (Bhamo) ஒரு துணை ஆங்கிலேயப் பிரதிநிதி நியமிக்கப்படுவார். (பாமோவிலிருந்து யூனான்வரை ஒரு வாணிகச் செல்வழியைக் கண்டுபிடிக்க ஆங்கிலேயர்கள் விரும்பினார்கள்).

(எ) வடக்கே பாமோவரை ஐராவதியாற்றின் வழியாக ஆங்கிலேய நீராவிக்கப்பல்கள் செல்லலாம்.

கடற்படைத் தளபதி ஸ்ட்ரோவரைப் (Captain Strover) பாமோவின் துணை ஆங்கிலேயப் பிரதிநிதியாகச் சிலேடன் நியமித்தார். கி.பி. 1867ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்குப் பின் மேலைப் பர்மாவை (upper Burma) ஆங்கிலேயர்கள் அளந்து கணக்கெடுத்தனர். கி.பி. 1868-ல் பேன்தேயர்களுடன் (Panthays) வாணிகத் தொடர்புகொள்வதில் இரங்கூன் வாணிகக் குழாம்

அரங்கின் (Rangoon Chamber of Commerce) உதவியுடன் கிட்டத்தட்ட ஸ்லேடன் வெற்றியடைந்தார் எனக்கூறலாம். இவ்வகையான பொருளாதார நடவடிக்கை பற்றிய முயற்சியை, இந்தோ-சீனுவிலிருந்து யூனன்வரை பிரான்சும் ஆய்வு செய்ததால் ஆங்கிலேயரும் செய்தனர்.

மூன்றும் பர்மிய-ஆங்கிலேயப் போர்

கி.பி. 1752-ல் அலங்பயாவால் ஏற்படுத்தப்பட்ட கொன்பாங் மரபினரின் ஆட்சியைக் குழிதோண்டிப் புதைத்த மூன்றும் பர்மியர் ஆங்கிலேயர்கள் போர் பலகாரணங்களால் ஏற்பட்டது. மிண்டன் ஆட்சிக்காலத்தில் இப்போர் தோன்றவில்லை யென்றாலும், அவர் ஆட்சியின்போது நடந்த பல நிகழ்ச்சிகளும் இப்போர் தோன்று வதற்கு மூலகாரணங்களாயிருந்தன.

(அ) மன்னர் மிண்டனின் அயல்நாட்டுக் கொள்கைகள் ஆங்கிலேயர்களுக்குச் சினத்தை மூட்டின.

(ஆ) 'மிதியடி நடவடிக்கை' பற்றித் தூதுவ அரசியல் தொடர்பு துண்டிக்கப்பட்ட செய்தி.

(இ) ஆங்கிலேயர்களும், பர்மியர்களும் கி.பி. 1867ஆம் ஆண்டு வாணிக உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளாததால் ஏற்பட்ட விளைவுகள்.

(ஈ) ஆங்கிலேயர்கள் 'காரேன் நடவடிக்கை'களில் தலை யிட்டுப் பர்மியர்களின் மனக்கசப்பை மிகுவித்தது.

(உ) பர்மாவும் பிரான்சும் கூட்டுச் சேர்ந்து பிரிட்டிஷ் இந்தியாவை எதிர்ப்பார்களோ என்ற அச்சத்தால் தூண்டப்பட்டு பிரெஞ்சின் செல்வாக்கை நீக்கும் நோக்கத்துடன் பர்மாவுடன் போர்புரிய முன்வந்தது.

(ஊ) மேலைப் பர்மாவின் வாணிபம் மூலம் மிக்க பயன் அடைய விரும்பிய இரங்கூனில் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் இந்திய அரசாங்கத்தை மேலைப் பர்மாவில் தலையிடும்படித் தூண்டியது.

(எ) தீபாவு (Thibaw) அரசாங்கத்தின் மிக இழிந்த ஆட்சி.

(ஏ) ஆங்கிலேயர்களின் புகழுக்கும் பர்மியர்களின் தன் மானத்திற்கும் ஏற்பட்ட போட்டி மனப்பான்மை.

(ஐ) கி.பி. 1885 ஜூன்-டிசம்பரில் இங்கிலாந்தில் பதவிக்கு வந்த பழைமை பேணும் கட்சியினரின் (Conservative Party) ஆட்சி.

(ஒ) பம்பாய்-பர்மா வாணிப நிறுவனத்தின் வழக்கு.

மிண்டனின் அயல்நாட்டுக் கொள்கைகள் :

மிண்டனின் ஆட்சிக் காலத்தில் மேலைநாடுகளுக்குப் பர்மாவில் நுழைந்து செல்வாக்குப் பெற வாய்ப்புக் கிடைத்தது. மற்ற மேலை நாடுகளுடன் அரசியல் தொடர்புகொள்ள மன்னர் மிண்டன் எடுத்த முயற்சிகளை ஆங்கிலேயர்கள் வெறுத்தார்கள். தம் ஆட்சி தொடங்கிய காலத்தில் அமெரிக்கக் குடியரசும் பர்மாவும் ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டுமென மன்னர் மிண்டன் மக்கள் தலைவரும், அமெரிக்கச் சமயப் பரப்பாளருமாகிய திரு. கின்கார்டு (Mr. Kin Kaird) மூலம் பியர்ஸுக்குத் (Pierce) தாம் அனுப்பிய கடிதத்தில் எழுதியிருந்தார்.

ஆனால், இம்முயற்சி தோல்வியடைந்தது. மேலும் பிரிட்டிஷ்-இந்திய அரசாங்கத்தின் உடன்பாடு பெறாமல் மன்னர் மிண்டன் தன் ஆட்சித் தொடக்கத்தில் ஒரு தூதுக்குழுவை இலண்டனுக்கும் பாரிஸுக்கும் அனுப்பினார். பர்மிய அவைக்கு வெகுமதிகள் எடுத்துக்கொண்டுவந்து ஒரு பிரெஞ்சுத் தூதுக்குழு கி.பி. 1856-ல் இரங்கூன் வழியாக அமரபுராவிற்கு வந்தது; இது ஆங்கிலேயர்களுக்கு மிகவும் சினமூட்டியது. கி.பி. 1856-ல் பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர் ஒருவர் பாமோவிற்கு வந்து வாழ உடன்பாடு அளிக்கப் பட்டது. நிர்வாகம் புரிவதற்கு உதவுவதற்காகப் பல பிரெஞ்சுக் காரர்களும், இத்தாலியர்களும் பர்மாவிற்கு வந்து பதவியில் சேர மிண்டன் ஊக்கமளித்தார். கி.பி. 1859-ல் படைத்துறை முதல்வர் எம். டி' ஆர்கோனி (General M. D' Orgoni) பல பிரெஞ்சுக் கைவினைஞர்களையும், பொறிவல்லுநர்களையும் பர்மாவிற்கு அழைத்து வந்தார். ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பர்மியப் பகுதிகளை மீட்டுக்கொள்ள மன்னர் மிண்டனை ஆர்கோனி தூண்டு கிறார் என இரங்கூனில் வாழ்ந்து வந்த ஆங்கிலேயர்கள் பறை சாற்றினர். ஆனால், கி.பி. 1860-ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரெஞ்சு அரசாங்கம் இந்தோ-சீன நடவடிக்கைகளில் கடுமையாக ஈடு பட்டதால், பர்மாவின்மேலிருந்த அக்கறை படிப்படியாகக் குறைந் தது. கிறித்தவ சமயத்தைப் பரப்புவதில்தான் பர்மாவிலிருந்த இத்தாலியர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

இச் சூழ்நிலையில் சீனாவுடன் ஒரு நில வாணிபச் செல்வழி மூலம் தொடர்புகொள்ளப் பிரான்சும், பிரிட்டனும் முயற்சி யெடுத்துக் கொண்டிருந்ததால் அவ்விருநாடுகளிடையே போட்டி மனப்பான்மை உருவாகியது. இவ்விரு நாடுகளிடையே பர்மா அகப்பட்டுக் கொண்டு தவித்தது.

கி.பி. 1872-ல் மிண்டன் இரண்டாவது தூதுக்குழுவை ஐரோப் பாவிற்கு அனுப்பினார். இதன் நோக்கம் : (1) இந்தியாவைத்

தவிர மற்ற நாடுகளுடன் அரசியல் தொடர்பு கொள்ளுதல்; (2) முடிந்தால் போர்க்கருவிகளை வாங்குவது; இத்தாலியுடனும், பிரான்சுடனும் செய்த உடன்படிக்கையின்படி கெம்புக்கல் சுரங்கங் களில் வேலைசெய்ய ஒரு பிரெஞ்சுக் கம்பெனிக்கு உடன்பாடு அளிக்கப்பட்டது. ஆனால் கெம்புக்கல் சுரங்கங்கள் அரசருக்கு மட்டுமே உரியனவானதால் அவைகளை விட்டுக்கொடுக்க முடியாது என்ற காரணத்தால் பிரான்சுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மன்னர் உறுதி (Ratification) செய்யவில்லை. ஒப்பந்தத்தைச் செல்லுபடி செய்யும் நோக்கத்துடன் பிரெஞ்சுத் தூதுக்குழு கி.பி. 1873-ல் மாண்டலேயிற்கு வந்தபோது பிரான்சின் உதவியை மன்னர் மிண்டன் நாடினார். ஆனால், இம்முயற்சி வீணாகப் போயிற்று. ஏனென்றால், இச்சமயத்தில் பர்சியர்களின் (Prussion) ஆட்சியின் கீழ் பிரான்சு இருந்தது. அயல்நாட்டு அமைச்சர் டி பிரோக்லீ (De Broglie) தனித்தலைமை மையத்தைக் கடுமையாக எதிர்ப்பவர். ஆகையால், மாண்டலேயில் இரண்டு இரகசிய உடன்படிக்கைகளைப் பற்றி உரையாடல்கள் நடந்தன. பர்மா விற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையே ஏதாவது தகராறு வந்தால் பிரான்சு இடையீட்டாளராகப் பணிபுரிய முன்வரவேண்டும்; பர்மியப் படைகளுக்குப் பயிற்சியளிப்பதற்காகப் பிரான்சுப் படைத் துறை அலுவலர்களைப் பர்மாவிற்கு அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டன. ஆனால், இவ்விரண்டு ஒப்பந்தங்களையும் பாரிஸி லுள்ள பிரெஞ்சு அரசாங்கம் ஏற்க மறுத்தது.

இத்தாலியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையினால் இவ்விரு நாடுகளுக்கும் யாதொரு பயனும் கிடையாது; வெறும் பெயரளவில் நேசமனப்பான்மைதான் இருந்தது. இத்தாலியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மிண்டன் செல்லுபடி செய்தார் (ratified). ஆகையால், பர்மா–இத்தாலியின் உறவு ஆங்கிலேயர்களுக்கு எரிச்சல் மூட்டியபோதிலும் அச்ச மூட்டும் சூழ்நிலையை உருவாக்கவில்லை.

ஆனால் பர்மா-பிரான்ஸ் தொடர்பு எரிச்சல் மூட்டியதோடல் லாமல் அச்சத்தையும், சீறியெழும் உணர்ச்சியையும் கிளறியது. மாண்டலேயில் பிரெஞ்சு வாணிக ஒப்பந்தத்தின்படிப் பர்மாவை எந் நாடாவது தாக்கினால், அதைத் தன்மேல் தாக்குவதாகப் பிரான்சு கருதிப் பர்மாவிற்கு உதவியளிக்க முன்வரும் எனச்சமய குரு லீகாம்டே (Father Lecomte) தவறாகப் புரிந்து கொண்டிருக் கிறார் என ஒரு பிரெஞ்சு நீராவிக்கப்பலின் தலைவர் கூறுவதாக படைப்பகுதி முதல்வர் பிரௌன் (Cobonel Browne) ஒரு வதந்தியைப் பரப்பினார். மிண்டனுக்குப் பின் தீபாவு ஆட்சிக்கு

வந்தபிறகு பிரான்ஸ்-பர்மா உறவு வலிமையுறத் தொடங்கியது. இதனை ஆங்கிலேயர்கள் மனவெறுப்புடனும் ஐயத்துடனும் நோக்கினார்கள்.

மன்னர் தீபாவும் பிரான்சும்

மன்னர் மிண்டன் கி.பி. 1878 செப்டம்பர் மாதம் இறந்தவுடன் அரசர் தீபாவு பதவிக்கு வந்தார். மேலை நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் மின்டனின் கொள்கைகளை இவரும் தொடர்ந்து செயல் படுத்தினார். ஆங்கிலேயர்கள் பர்மாவின்மேல் படையெடுப்பார் களோ என அஞ்சித் தீபாவு பிரான்சுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினார். பர்மாவின் இந் நடவடிக்கை மூன்றாவது பர்மியர்-ஆங்கிலேயர் போர் தொடங்கியதற்குச் சிறந்த காரணமாயிருந்தது. பர்மாவில் ஒருசமயம் ஆங்கிலேயர்களின் ஆளுநராயிருந்த ஒய்ட் (White), 'மேலைப் பர்மாவில் பிரான்சு அல்லது வேறேதாவதொரு நாடு தன் செல்வாக்கை மிகுதியாக வளர்த்துக்கொண்டு கீழைப் பர்மாவிலிருந்த நம்முடைய நிலையைத் தாங்கமுடியாதவாறு செய்துவிடுமோ என்ற அச்சம்தான் நாம் பர்மாவில் தலையிட்ட தற்கு இறுதிக் காரணமாயிருந்தது' எனக் கூறுகிறார்.

கி.பி. 1881 முதல் பிரான்சு வலுவந்த கொள்கைகளைக் கடுமையாகப் பின்பற்றத் தொடங்கியதால் தென்கிழக்காசியாவில் பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயிருந்த தனித்தலைமைப் போட்டி வலிமையடைந்தது. கொச்சின்-சீனாவிலே தொடக்கத்தில் குடியேறிப் படிப்படியாக அன்னம், டொங்கிங் ஆகியவை வரை யிலும் பிறகு மேற்கே லாகோஸ் வரையிலும் பிரெஞ்சுத் தலைமை பரவியது; பர்மாவிற்குத் திறை செலுத்திவந்த ஷான் இனத்தார் நாடுகளின் (Shan States) கிழக்கெல்லையாகவும் இருந்தது. பிரான் சுக்கும் பிரிட்டனுக்கும் இடையே கடும் போட்டியேற்பட்டதால் சீன நாட்டிலுள்ள யூனன் மாகாணத்துடன் இறுதியாகப் பிரான்சால் வாணிகத் தொடர்பு அமைத்துக் கொள்ள முடிந்தது. கி.பி 1883 முதல் 1885 வரை பர்மாவிலும் பிரான்சின் நடவடிக்கைகள் மிகத் தொடங்கின.

பிரான்சு ஊக்கமளித்த காரணத்தால் கி.பி. 1883-ஆம் ஆண்டின் வேனிற்காலத்தில் ஆறு அதிகாரிகள் அடங்கிய ஒரு தூதுக்குழு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்துவதற்காகப் பாரிஸ் நக ரத்திற்கனுப்பப்பட்டது. 'உலகநாடுகள் பர்மாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் (recognition); அறிவியல் நுட்பத்தொழில் முதலிய வற்றில்பர்மாவை வளரச்செயயவேண்டும் என்ற நோக்கங்களுடன் இத்தூதுக்குழு அனுப்பப்படுகிறது' எனமன்னர் தீபாவு அறிவித்தார்.

உண்மையில் இதன் முக்கிய நோக்கம் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பர்மாவிற்குப் பிரான்சின் உதவியை நாடுவதேயாகும்.

ஆங்கிலேயர்கள் இப் பர்மியத் தூதுக்குழுவின் நோக்கத்தைப் பற்றி ஐயமுற்றனர்கள்; தென்கிழக்காசியாவில் பிரான்சு படை வலிமையின் மூலம் தன் செல்வாக்கை மிகுத்துக் கொள்ளும் என அச்சமுற்றனர்கள். பர்மாவில் பிரிட்டனுக்குத் தனிவகையான சிறப்பியல்புடைய உரிமையும், அக்கறையும் தனக்கிருப்பதாகப் பிரான்சிடமும் மற்ற ஐரோப்பிய நாடுகளிடமும் அடிக்கடி பிரிட்டன் எடுத்துரைத்தது.

பர்மியத் தூதுக்குழு பிரான்சில் பல மாதங்கள் தங்கியது; இது ஆங்கிலேயர்களின் ஐயத்தை மேலும் கிளறியது. பர்மாவிலிருக்கும் பிரெஞ்சுக்குடிகள் பர்மாவிலுள்ள பிரெஞ்சு அயல் நாட்டுப் பேராளர் (French Consul) நிருவாகத்தின் கீழ்வரவேண்டும் என அடிக்கடிப் பிரான்சு வேண்டுகோள்விட்டும் பிரிட்டன் அவ்வுரிமையை அளிக்க மறுத்தது. கி.பி. 1883ல் தொடங்கிய பர்மா-பிரான்சு பேரப் பேச்சு, கி.பி. 1884 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடந்தது. இறுதியில் கி.பி. 1885 ஜனவரி மாதம் 18 ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் செய்யப் பட்டது.

இதற்கிடையில் பாரிஸில் பிரிட்டனின் தூதராயிருந்த (Ambassador) கோமான் லயான்ஸ் (Lord Lyons) எவ்வகையான தரகு பேச்சு நடக்கிறதென விளக்கிக் கூறும்படிப் பிரெஞ்சு அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டார். வாணிகத் தொடர்பான நடவடிக்கைகள்பற்றி மட்டும்தான் உரையாடல் நடக்கிறதென்றும், ஆங்கிலேயர்கள் அஞ்சுவதுபோல டொகிங் வழியாகப் பிரெஞ்சுப் போர்க்கருவிகள் பர்மாவிற்கு அளிக்கப்படமாட்டா என்றும் அயல் நாட்டமைச்சர் பெர்ரி (Ferry) காப்புறுதியளித்தார். பிரான்சி லிருந்து பர்மியத் தூதுக்குழு இத்தாலிக்குச் சென்றது; பிறகு நெதர்லாந்துக்குச் (Netherlands) சென்றது. ஆனால், அங்கு ஓர் உடன்படிக்கையும் செய்யமுடியவில்லை. ஜெர்மனியுடன் ஒரு வாணிக நேய ஒற்றுமை (Peace) உடன்படிக்கை செய்து கொண்டது.

கி.பி. 1885-ஆம் ஆண்டின் உடன்படிக்கையால் பர்மியத் தூதுவர் அலுவலகம் ஒன்று நிலையாகப் பாரிசில் (Paris) அமைக்கப் பட்டது. ஆனால் இரங்கூனிலிருந்த ஆங்கிலேய வணிகர்கள் பல வதந்திகளைப் பரப்பினர்கள் : (1) இரகசியமாகப் பிரான்சுடன் ஓர் இராணுவ ஒப்பந்தத்தையும், இவ்வொப்பந்தத்தின் ஒரு பகுதி

யாகப் பர்மா ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், பிரெஞ்சு அயல் நாட்டு அமைச்சர் வலியுறுத்தப்பட்டுத் தம் பதவியை விட்டு விட்டதால் இவ் வதந்தி பரவுவது நின்றது; (2) ஒரு பிரெஞ்சுக் கம்பெனிக்கு மாணிக்கக்கல் சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டன. (3) ஒரு பிரெஞ்சு மேற்பார்வையாளர்கீழ்ப் பர்மிய அஞ்சல்–தந்தி நிலையம் வைக்கப்பட்டது; (4) ஷான் இனத்தாரின் நாடுகள் (Shan States) வழியாக மாண்டலேயைப் பிரெஞ்சு இந்தோ சீனுவுடன் இணைக்கும் இரயில் வழி அமைக்கப்படப் போகிறது; (5) மேலே ஐராவதியில் (Upper Irrawady) ஒரு பிரெஞ்சுச் சிறு கப்பல் பகுதிக்கம்பெனி அமைக்கப்படும். ஆனால் இவ் வதந்திகளெல்லாம் தவறு எனப் பர்மிய வரலாற்றுசிரியர் மாங்தின் ஆங் கூறுகிறார். 'இவ் வதந்திகளை நம்பின ஆங்கிலேய வணிகர்கள் தீபாவுவைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் எனப் பிரிட்டிஷ் இந்தியாவிடம் முறையிட்டபோதிலும் அவை நம்பத்தக்கதாக வில்லை எனக் கீழைப் பர்மா ஆங்கிலேய அதிகாரிகள் கருதினார்கள்' என்றும் மாங்தின் ஆங் கூறுகிறார்.

ஆனால், வரலாற்றுசிரியர் கேதி (Cady) இச் சூழ்நிலை உருவானதைச் சிறிது வேறுவிதமாக வருணிக்கிறார்: 'கி.பி. 1885 ஜூன் முதல் நாள் பிரெஞ்சு அயல்நாட்டுப் பேராளர் ஹாஸ் (Haas) மாண்டலேயிற்கு வந்தார். ஹாஸ் துணிவுடையவர்; எல்லோரையும் கவர்ந்து ஈர்க்கிற பகட்டான செயல்களைப் புரியவேண்டும் என்ற ஆசையை உடையவர்; அரசாங்கக் கட்டளைகளை மீறி நடக்கும் தன்மையுடையவர். தாம் பதவியேற்ற ஒரு மாதத்திற்குள் பின்வரும் ஒப்பந்தத்தைப் பர்மாவுடன் செய்துகொண்டார்: (1) ஏறத்தாழ இரங்கூனில் கட்டி முடிக்கப்பட்ட பிரிட்டிஷ் இரயில் வழியை இணைப்பதற்காக மாண்டலேயிலிருந்து தொங்கோவிற்கு (Toungoo) ஓர் இரயில்வழி அமைக்க £ 2·5 மில்லியன் (7½ விழுக்காடு வட்டி, 70 ஆண்டுக் குத்தகையுடன்) பணம் பர்மாவிற்கு அளிக்கும்; (2) £ 2·5 மில்லியன் அளித்துப் பர்மாவிற்கு ஒரு செலாவணி வழங்கி நாட்டுடைமை வங்கி அமைப்பதற்குப் பிரான்சு உதவும்.'

மேலே கூறிய செய்திகளையும், பம்பாய்–பர்மா வாணிப நிறுவனத்தின் (Bombay—Burma Trading Company) தேக்கு மரச் சலுகைகளில் இருந்த பிரெஞ்சு ஆர்வத்தையும்பற்றி மாண்டலேயிலிருந்த இத்தாலியின் அயல்நாட்டுப் பேராளர் ஆண்டிரியினே (Andreino) ஆங்கிலேயர்களுக்கு அறிவித்தார். இச்சமயத்தில் ஆண்டிரியினே மூன்று வகையான தனித்தனிப் பணிகளைப் புரிந்து வந்தார்: (அ) பர்மிய அவையிலுள்ள

இத்தாலிநாட்டின் அயல்நாட்டுப் பேராளர்; (ஆ) பர்மாவிலுள்ள பம்பாய்—பர்மா வாணிப நிறுவனத்தின் பிரதிநிதி (Agent); (இ) மாண்டலேயிலுள்ள ஆகிங்லேய ஒற்றர்களின் தலைவர்.

மேலும், டொகிங்மூலம் பர்மாவிற்குப் போர்க் கருவிகளைத் தருவதாகப் பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் பர்மியர்களுக்கு எழுதியதாகக் கூறிய ஒரு கடிதத்தையும் ஆண்டிரியினே வெளியிட்டார். அத்துடன், மாணிக்கக்கல் சுரங்கங்களில் கிடைக்கும் மிகுபயனில் ஒரு பங்கையும், பர்மியத் தேயிலைத் தனிஉரிமையையும் பிரான்சிற்குப் பர்மிய அரசர் கொடுப்பதாக இக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதெனவும் அவர் அறிவித்தார். சினமடைந்த ஆங்கிலேயர்கள் மியின்கனுக்கு உதவியளித்துப் பர்மிய மன்னராக அவருக்கு முடிசூட்டவேண்டும் என நினைத்தார்கள். இதற்கிடையில் மியின்கனைப் பிரான்சு சைகானிற்கு அழைத்துச் சென்றது. இந்தோசீனுவிலிருந்து பர்மாவின்மேல் படையெடுக்க மியின்கனுக்கு உதவி புரிவதாகப் பிரான்சு கூறியது என்ற வதந்தி நிலவி வந்தது. இதனுல் ஐயமுற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் இலண்டனிலிருந்த பிரெஞ்சுத் தூதரை வரவழைத்துப் பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் பெர்ரியின் கடிதத்தைப்பற்றி விளக்கிக் கூறுமாறு கேட்டுக்கொண்டது. இந் நிகழ்ச்சிக்குப்பின் தீபாவுவின் மேலுள்ள பிரெஞ்சுக் கட்டுப்பாடுகளும், சலுகைகளும் குறைந்தனவென வரலாற்றுசிரியர் மாங்தின் ஆங் கூறுகிருர்.

8. ஆங்கிலேயர்களின் நேர்மையற்ற நடத்தை

மூன்றுவது பர்மியர்-ஆங்கிலேயர் போர் மூண்டதற்கு மற்ருெரு முக்கியமான காரணம் ஆங்கிலேயர்களின் நேர்மையற்ற நடத்தையும், பர்மாவைப் பிரிட்டிஷ்-இந்தியாவின் ஒரு சிறிய பகுதி என்று நம்பிப் பர்மாவைத் தங்களுக்குச் சரிசமமான நாடாக நடத்தாமலிருந்ததுமே ஆகும். ஆங்கிலேயர்களின் நடத்தையிலிருந்து இம்மனப்பான்மை தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

கி.பி. 1867ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி ஆங்கிலேயப் பகுதிகளிலிருந்தும், ஆங்கிலேயப் பகுதிகள் வழியாகவும் போர்க் கருவிகளையும், வெடிமருந்துகளையும் கீழைப்பர்மாவிலுள்ள ஆங்கிலேய ஆணையரின் உடன்பாட்டுடன் மன்னர் மிண்டன் வரவழைக்கலாம். ஆனுல், பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த ஆங்கிலேய வணிகரிடமிருந்து மிண்டன் போர்க்கருவிகளை வாங்க முயன்ற போது, போர்க்கருவிகளை ஆங்கிலேய வணிகர்கள் மிண்டனுக்கு விற்கக்கூடாது எனப் பிரிட்டிஷ் இந்தியாவின் தலைமை ஆளுநர்

தடைவிதித்தார். ஆகையால் பிரான்சிடமிருந்தும், இத்தாலியிட மிருந்தும் மிண்டன் போர்க்கருவிகளையும், வெடிமருந்துகளையும் வாங்கியபோது அவைகளை ஆங்கிலேயர் வசமிருந்த கீழைப் பர்மாவின் வழியாகக் கொண்டுவரக்கூடாது என ஆங்கிலேயப் படைத்தலைவர் உத்தரவிட்டார்.

இராணி விக்டோரியா (Queen Victoria) நட்பார்வச் செய்தியைத் தலைமை ஆளுநர் மூலம் மிண்டனுக்கு அனுப்பினார். ஆகையால் கி.பி. 1872-ல் கின்வுன் மின்ங்யீ (Kinwun Mingyi) தலைமையில் ஒரு தூதுக்குழுவை மிண்டன் இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் அவைக்கு அனுப்பினார். அவர்களைப் பிரிட்டன் மரியாதையுடன் நடத்தியது. இங்கிலாந்து இராணியுடன் நேரடி அரசியல் தொடர்பு அமைத்துக்கொள்ள இத்தூதுக்குழு முயன்று தோல்வியடைந்தது. இத்தூதுக்குழுவை வரவேற்ற பிரிட்டனின் இந்திய அலுவலக அமைச்சர் (Secretary of State of india) சியாமின் பழநிலையைவிடத் தாழ்ந்த படிநிலையில் பர்மாயிருக்கிற தென்றும், பர்மா ஏற்கெனவே பிரிட்டிஷ் இந்தியாவின் சிறிய பகுதி என்றும் இராணியிடம் எடுத்துரைத்தார். மேலும், பிரிட்டனின் அயல்நாட்டு அமைச்சருக்கு (Secretary of State of Foreign Affairs) இத்தூதுக்குழு அறிமுகப்படுத்தப்படவில்லை. ஆகையால், பர்மாவை ஓர் உரிமை நாடாகப் பிரிட்டன் கருதாமல் ஆங்கிலேயர் களின் குடியேற்ற நாடாகத்தான் கி.பி. 1872ஆம் ஆண்டிலே கருதியது.

ஓர் உரிமை நாட்டுக்குள் பிளவு ஏற்படுத்தி ஆட்சியைக் கைப் பற்றுவது ஆங்கிலேயத் தனித்தலைமையின் வழிவழி மரபு. மிண்டன் ஆட்சியின்போது மேற்கு காரெனித் தலைவர்களை (Western Karenni) தூண்டிவிட்டுப் படைஉதவியை ஆங்கிலேயர்கள் அளித்தது ஆங்கிலேயர்களின் அரசியல் தந்திரத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆங்கிலேயர்களின் இராணுவ உதவியுடன் சில காரெனித் தலைவர்கள் மிண்டனுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். ஆங்கிலேயர்கள் படை உதவியளிக்கிறோம் என வாக்குறுதி அளித்தபோதுகூட காரெனித் தலைவர் நேரடியாக மன்னர் மின் மாங்கை வந்து சந்தித்துத் தாம் அவருக்கு அடங்கி நடப்பதாக வாக்குறுதி அளித்தார். அரசரின் உடன்பாட்டுடன் படைப்பகுதி முதல்வர் ஸ்லேடன் இக்கொரனித் தலைவனைச் சந்தித்துப் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வரும்படி வற்புறுத்தினார். ஸ்லேடன் கூறியதைக் காரெனித்தலைவர் மன்னரிடம் எடுத்துரைத்தார். ஆனால், மன்னர் மின்மாங் ஸ்லேடன்மேல் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்குக் காரெனி நாடு ஒரு ஷான் இனத்தாரின்

(Shans) நாடு. காரெனி நாட்டின் நிலைமை காரெனி வழக்கைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் திரு. டக்லெஸ் போர் சைத்து (Sir Douglas Forsyth) தலைமையில் ஒரு தூதுக்குழுவை அனுப்ப ஆங்கிலேயத் தலைமை ஆளுநர் மன்னர் மிண்டனின் உடன்பாட்டைக் கேட்டார்; மன்னரும் இதற்கிணங்கினர். கி.பி. 1875ஆம் ஆண்டு இத் தூதுக்குழு பர்மாவிற்கு வந்தது. காரெனி நாடுகளின் (Karenni States) உரிமையையும், போரில் ஈடுபடாத நடு நிலைமையையும் பர்மா ஏற்றுக்கொள்ளவேண்டும் என இத் தூதுக்குழு மிண்டனிடம் கோரிக்கைவிட்டது. மிண்டனும் இவ் வொப்பந்தத்தை வேறுவழியில்லாமல் ஒப்புக்கொண்டார். மன்னர் அனவிரந்தா (Anavrantha) காலத்திலிருந்து பர்மாவின் பகுதி யாக இருந்த வெளிநாடுகளை மிண்டன் இழந்தார். பர்மிய வழிமரபு முறைப்படி மன்னரைச் சந்திக்க வரும்போது மிதியடிகளை அகற்றி விட்டுத் தரையிலே அமரவேண்டும். ஆங்கிலேய அரசப் பிரதிநிதி போர்சைத்து (Forsyth) இம்முறையை விரும்பாமல் ஆங்கிலேயத் தலைமை ஆளுநரிடம் இவ்வாறு அவமதிப்புத் தமக்கு ஏற்படுவதைத் தெரிவித்தார். தலைமை ஆளுநர் உடனடியாகப் போர் சைத்திற்குப் பின்வரும் 'அரசப் பிரதிநிதிகள் மிதியடி அணியவும், வாள் வைத் துக்கொள்ளவும் உடன்பாடு கொடுத்தால்தான் அவர்கள் இனிமேல் மன்னரை நேராகச் சென்று சந்திக்கலாம்' என ஆணை யிட்டார். தலைமை ஆளுநர் மிண்டனுக்கும் இச்செய்தியை அனுப் பினர். ஆகையால்அரசப்பிரதிநிதியை வரவழைத்து நேரடியாக உரையாடல் செய்வதை மன்னர் மிண்டன் நிறுத்தினர்.

மன்னர் மிண்டன் இறுதிக்காலத்திலும், இறந்தபிறகும் (1878) அரசப்பதவிக்குப் போட்டியேற்பட்டதால் சிறிது குழப்பச் சூழ்நிலை நிலவியது. ஆகையால், மன்னர் தீபாவு (Thee baw) பதவியேற்ற வுடன் கலகம் செய்த இளவரசர்களையும், அவர்கள் குடும்பத்தையும் பூண்டோடு ஒழிக்குமாறு கட்டளையிட்டு அக்கட்டளையை நிறை வேற்றினர். தீபாவு செய்த கொலைகளை எதிர்த்துத் திரு. ஷா (Sir Shaw) கண்டனம் தெரிவித்தார். ஆங்கிலேய அரசப்பிரதி நிதியான திரு. ஷாவையும் கொலை செய்யும் திட்டம் இருப்பதாக ஆங்கிலேயர்கள் வதந்தியைப் பரப்பினர்கள். ஆனல், திரு. ஷா நோயுற்று இறந்தார். அவருக்குப்பின் பதவியேற்ற அரசப் பிரதி நிதிகள் அச்சத்துடன் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். ஆகை யால், தலைமை ஆளுநர் பர்மாவிலுள்ள அரசப் பிரதிநிதி அலுவல கத்தைக் கி.பி. 1879 அக்டோபரில் மூடிவிட்டார். தலைமை ஆளு நரின் இச்செய்கை மன்னர் தீபாவுவின் அச்சத்தைக் கிளறியது.

ஆகையால், தம் மரியாதையைத் தெரிவிக்கும்பொருட்டு உடனடியாக ஒரு தூதுக்குழுவைத் தலைமை ஆளுநரிடம் மன்னர் தீபாவு அனுப்பினார்.

பர்மா பிரான்சுடனும், இத்தாலியுடனும் நெருங்கிய தொடர்பு கொள்ள விரும்பியதால்தான் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் பர்மாக் கொள்கைகளில் இவ்வகையான மாறுதல்கள் முளைத்தன. இச்சமயத்தில் இந்தியாவில் தலைமை ஆளுநராய்ப் பணி புரிந்து வந்த கோமான் லிட்டன் (Lord Lytton) பர்மா முழுவதையும் வலிந்து சென்று கைப்பற்ற வேண்டுமென அறிவித்தார். கி.பி. 1878ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பர்மாவின் தலைமை ஆணையராக இருந்த அய்ட்சிசனுக்கு (Aitchison) இதனை எழுதினார் :

'நான் இரகசியமாகக் கூறப்போவது உங்களுக்கெல்லாம் வியப்பையும், அதிர்ச்சியையும் அளிக்கும். மேலைப் பர்மாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றுவதற்கு ஒரு நல்ல சாக்குப் போக்கும், வியப்பும் கிடைத்தால் எனக்கு மகிழ்ச்சியளிக்கும்'.

ஆகையால் கி.பி. 1878ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் மேலைப் பர்மாவின் பெரும் பகுதியையாவது கைப்பற்ற வேண்டும் எனப் பின்வரும் காரணங்களுக்காக விரும்பியது :

(அ) பிரான்சுடன் இருந்த வாணிகப் போட்டி

(ஆ) ஆங்கிலேய ஆணவம், பர்மியர்களின் தன்மானம்

(இ) மேற்குக்காரே வழக்கினால் ஏற்பட்ட மனக்கசப்பு (1873—5)

இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானில் போர் புரிந்து கொண்டிருந்தார்கள்; ஜுலூவுடன் (Julus) சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்; தென் ஆப்ரிக்காவிலும் போயர்ஸ் (Boars) கலகத்தினால் போர் நடப்பதற்குரிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது. ஆகையால்தான் அவர்கள்பர்மியர்களுடன் போர் செய்யவில்லை. கி.பி. 1885ஆம் ஆண்டில்தான் தீபாவுவின் ஏழாண்டு ஆட்சிக்குப்பின் மூன்றாவது பர்மியர்-ஆங்கிலேயர் போர் மூண்டது.

இரண்டு சிறிய செய்திகளுக்காக மனக்கசப்பு ஏற்பட்டவுடன் கோமான் லிட்டன் பர்மாவுடன் போரிடத் தயாரானார்: (1) கி.பி. 1879ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு கப்பலுக்குள் அமளியேற்பட்டது. இதைச் 'சுவிமியோ நிகழ்ச்சி' (Shwemyo Incident) என அழைக்கிறார்கள். (2) சாலேமயோவில் (Salay myo) கலகக்

காரர்களால் ஏற்பட்ட கலகச் சூழ்நிலையினுல் சாலேமியோவிற்குச் சென்று கொண்டிருந்த ஆங்கிலேயக் கப்பலைப் பர்மியர்கள் 22 மணி நேரம் நிறுத்தி வைத்தார்கள். இதை 'யூனுன் நிகழ்ச்சி' (Yunnan Incident) என அழைக்கிருர்கள். இதனுல் சினமுற்ற ஆங்கிலேயர்கள் போர் புரியத் தயாரானுர்கள். ஆனுல், இவ்வகையான போர் செய்தற்குரிய சூழ்நிலை உருவாகும் முன்பே கி.பி. 1880ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் முற்போக்குக் கொள்கைக் கட்சியினர் (Liberal Party) கிளாட்ஸ்டோன் (Gladstone) தலைமையில் பதவிக்கு வந்தனர். இக்கட்சியின் கொள்கை அமைதியை நாடுவது. ஆகையால், லிட்டன் நீக்கப்பட்டுக் கோமான் ரிப்பன் (Lord Rippon) இந்தியாவின் தலைமை ஆளுநரகப் பதவியேற்ருர். அய்ட்சிசன் நீக்கப்பட்டுப் பெர்னுர்டு பிரிட்டிஷ் பர்மாவின் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டார். இக்காரணத்தால் மேலைப் பர்மாவைத் தாக்கும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

9. ஆங்கிலேய வணிகர்களின் பேராசை

தொடக்கத்திலிருந்த பர்மிய வாணிகத் தனி உரிமையைப்பெற வேண்டும் என்ற பேராசை ஆங்கிலேய வணிகர்களிடமிருந்தது. இறுதியில் இதுவே கி.பி. 1885ஆம் ஆண்டில் போர் மூண்டதற்குக் காரணமாய் விளங்கியது. ஆகையால், பிரெஞ்சு வாணிப முயற்சிகளை ஆங்கிலேய வணிகர்கள் எதிர்த்தார்கள். பர்மிய வாணிக உரிமையைக் கைப்பற்றும் நோக்கத்துடன்தான் 1862, 1867 ஆகிய ஆண்டுகளில் உடன்படிக்கைகள் உருவாக்கப்பட்டன. இவ்வுடன்படிக்கையின்படி மன்னர் மிண்டன் மரம், பெட்ரோல், மணிக்கல் முதலியவை தவிர மற்றப் பொருள்களின் மேலுள்ள தனி உரிமைகளை விட்டுவிடுவதாக வாக்குறுதியளித்திருந்த போதிலும், மற்றப் பொருள்களின் மீதும் தம் தனி உரிமையை, நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையின் கட்டாயத்தால் விட்டுவிடவில்லை. ஆகையால், இரங்கூனிலிருந்த ஆங்கிலேய வணிகர்கள் கண்டணம்தெரிவித்தார்கள்.

கி.பி. 1870ஆம் ஆண்டு முதல் மேலைப்பர்மாவின் மேல் ஆங்கிலேய வணிகர்கள் அக்கறை காட்டத் தொடங்கினுர்கள். சீனுவிற்கு ஒரு வாணிகச் செல்வழியைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் ஆங்கிலேயர்களின் துணிவுப் பயணங்கள் மிகுந்தன. கி.பி. 1872ஆம் ஆண்டில் இரங்கூனிற்கும் மேற்குச் சீனுவிற்குமிடையே 600 மைல் தூரமுள்ள இரயில்வழி அமைக்கும்படி ஆங்கிலேய வணிகர்கள் இங்கிலாந்து அரசாங்கத்தை வற்புறுத்தினுர்கள். கி.பி. 1873ஆம் ஆண்டில் யூனுன், மிண்டன் பர்மாவுடன்

வாணிகத் தொடர்புகொள்ள விரும்பியபோது அதிலும் தங்களுக்கு ஒரு பங்கு வாங்கித்தரவேண்டும் எனப் பிரிட்டிஷ்-இந்திய அரசாங் கத்தை ஆங்கிலேய வணிகர்கள் வலியுறுத்தினார்கள்.

மன்னர் தீபாவு ஆட்சிக்கு வந்தபின் மேலைப்பர்மாவில் ஆங்கி லேயர்களின் காப்பாட்சியை அமைக்கவேண்டும் எனப் பிரிட்டிஷ்-இந்தியா விரும்பியது. ஆகையால், இரங்கூனிற்கு வந்திருந்த தீபாவுவின் எதிரியான நியா உங்யானை (Nya Ungyan) அரசராக்க வேண்டுமென ஆங்கிலேயர்கள் விரும்பினார்கள். ஆங்கிலேய வணிகர்களிடமிருந்து போர்க்கருவிகளை விலைக்கு வாங்கிக்கொண்டு தாயெட்மியோவிலிருந்து (Thayetmyo) படைவலிமையுடன் நியா உங்யான் மேலைப் பர்மாவின்மேல் படையெடுத்தார். ஆனால், தீபாவுவின் படை வீரர்கள் இவர்களைத் தோற்கடித்ததால் இவர்கள் கல்கத்தாவிற்குத் திரும்பினார்கள். இரங்கூனிலிருந்த ஆங்கிலேய அதிகாரிகள்தாம் இப்போருக்குக் காரணம் எனக்கூறித் தீபாவு இழப்பீட்டுத் தொகையை அவர்களிடம் கேட்டார்: ஆனால், இதற்கு இரங்கூனிலிருந்த ஆங்கில அதிகாரிகள் செவிசாய்க்கவில்லை. ஆகையால் தீபாவு ஆங்கிலேயர்கள் பர்மாவின்மேல் எப்பொழுது வேண்டுமானாலும் படையெடுக்கலாம் என்ற அச்சத்துடன்தான் ஆட்சிபுரிந்துவந்தார்.

தீபாவுவின் ஆட்சியின்போது வாணிக நிலைமை வளர்ச்சி யடைந்தது. இரங்கூனிலிருந்த ஆங்கிலேய வணிகர்கள் தங்களுக்கு மேலும் இலாபம் வேண்டுமென்றும், தீபாவுதாம் இதற்குத் தடங்கலாக இருக்கிறார் என்றும் கூச்சலிட்டார்கள். ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தை நாட்டுடைமையாக்கி அரசின் தனி உரிமையை மீண்டும் அமைக்கவேண்டுமெனத் தீபாவு விரும்பினார். பிரிட்டிஷ் பகுதி மூலம் போர்க் கருவிகளை வரவழைக்க ஆங்கி லேயர்கள் அனுமதியளிக்காததால் 1867ஆம் ஆண்டின் உடன் படிக்கை செல்லுபடியாகாது எனத் தீபாவு கருதினார். கோமான் ரிப்பன் பர்மியர்களின்மேல் பரிவுகாட்டும் நோக்கத்துடன் கி.பி. 1881ஆம் ஆண்டில் ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். இங்கிலாந்து அரசருடன் நேரடியான அரசியல் தொடர்பு அமைக்க உடன்பாடு வேண்டும் என்று தீபாவு வலியுறுத்தியதால் இத்தூதுக்குழுவுடன் நடத்திய உரையாடல்கள் நிறுத்தப்பட்டன.

இச்சூழ்நிலையில் மியின்கன் இளவரசன் கி.பி. 1881ஆம் ஆண்டில் அரசப் பதவியைக் கைப்பற்ற முயன்று தோல்வியடைந் தார். மாகாணங்களிலும், நகரங்களிலும் அமைதியிலாச் சூழ்நிலை உருவாகியது. ஒரு சீனக் கொள்ளைக்கூட்டம் பாமாவைக்

(Bhamo) கொளுத்திச் சூறையாடியது. வெளிப்படையாக ஷான் இனத்தார்கள் தீபாவுவை எதிர்த்தார்கள். நாட்டில் கையூட்டும், ஊழலும் மிகுந்தன. இக்குழப்பச் சூழ்நிலையினுல் ஆங்கிலேய வணிகர்களின் வாணிகம் தடைப்பட்டது. ஆகையால், பர்மாவில் தலையிடும்படிப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தை அவர்கள் வற்புறுத்தினுர்கள். 1884ஆம் ஆண்டில் மியின்கன் இளவரசர் குடும்பத்தை மன்னர் தீபாவுகொலை செய்து ஒழித்ததால் ஆங்கிலேய வணிகர்களும், சமயப்பரப்பாளர்களும் பர்மாவைக் கைப்பற்ற வேண்டும் எனக்கூச்சலிட்டனர்.

கி.பி. 1885ஆம் ஆண்டில் பிரான்சிற்குப் பர்மாவில் சலுகைகள் அளிக்கப்பட்டன. சிறப்பாகப் பம்பாய்-பர்மா வாணிப நிறுவனத்தைத் தங்கள் தலைமையின்கீழ்ப் பிரான்சு கொண்டுவர முயல்கிறது என்ற செய்தி பரவத் தொடங்கியவுடன், இரங்கூனில் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் மேலைப் பர்மாவை உடனடியாகக் கைப்பற்ற வேண்டும் என்று சினத்தோடு கோரிக்கையிட்டார்கள்.

பம்பாய்—பர்மா வாணிப நிறுவனமும், இறுதி எச்சரிக்கையும் :

மரவாணிபத் தனியுடைமை ஏற்றுமதி பம்பாய் — பர்மா வாணிப நிறுவனத்திடம் இருந்தது. தாங்கள் இக்கம்பெனிக்குக் கொடுத்த மரங்களுக்குப் பணம் கொடுக்கவில்லையெனக் காட்டுக் காவலர்கள் முறையிட்டார்கள். காட்டுக் காவலர்களுக்கு நிறுவனம் £ 33,333 கொடுக்க வேண்டும் என்பதைப் பர்மிய அவை கண்டு பிடித்தது; தவிர, மன்னருக்கும் £ 36,666 ½ நிறுவனம் கொடுக்க வேண்டியிருந்தது. பர்மியச் சட்டப்படி இவ்வாறு தாமதம் செய்தால் கொடுக்க வேண்டிய தொகையை இரண்டு மடங்காகப் பெருக்கித் தரவேண்டும். ஆகையால், கம்பெனி மொத்தம் £ 733,333 தமக்குச் செலுத்த வேண்டுமென மன்னர் உத்தர விட்டார். மன்னரின் இத்தீர்ப்பைப் பயன்படுத்திப் பர்மாவைப் பிரிட்டிஷ் காப்பாட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென ஆங்கிலேய வணிகர்கள் நினைத்தார்கள். கம்பெனி இப்பெருந் தொகையைக் கொடுக்காமல் தப்பவைக்க வேண்டுமென ஆட்ரைனே (Adreino) விரும்பினுர். ஒரு திட்டத்தின் மூலம் ஆங்கிலேயர் பொதுமக்களை மன்னர் தீபாவுவிற்கெதிராகக் கிளர்ச்சி செய்ய வைக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். அதன்படி மன்னரின் தீர்ப்பை ஒளித்து வைத்துவிட்டு இரங்கூனிலுள்ள ஆங்கிலேய அரசு மன்னரிடம் அடைக்கலம் புகவேண்டும் எனப் பிரெஞ்சு அயல் நாட்டமைச்சர் பெர்ரி (Ferry) எழுதியதாகக் கூறி ஒரு கடிதத்தை வெளியிட்டு, எண்ணியபடியே ஆங்கிலேயர்களின் சினத்தைக் கிளறிவிட்டார்.

பர்மாவைக் கவரும் நோக்கத்துடன் இந்தியாவின் புதுத் தலைமை ஆளுநரான கோமான் டப்பெரின் (Lord Dufferin) பின் வருமாறு ஓர் இறுதி எச்சரிக்கையை மன்னர் தீபாவுவுக்குக் கி.பி. 1885ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாள் அனுப்பினார்:—

(அ) நிறுவனம் அபராதம் செலுத்த வேண்டும் என்பதைப் பற்றி மூண்ட சண்டையைத் தீர்ப்பதற்காகத் தலைமை ஆளுநர் அனுப்பும் ஒரு மிகச் சிறந்த தூதரை, அவமதிக்கும் சடங்குகளில்லாமல் மன்னர் வரவழைக்க வேண்டும்.

(ஆ) இத் தூதர் தீர்ப்பளிக்கும்வரை நிறுவனத்துக்கெதிராக வெளியிட்ட மன்னரின் தீர்ப்பைத் தற்காலிகமாக விலக்கி வைக்க வேண்டும்.

(இ) மாண்டலேயின் ஆங்கிலேய அரசப் பிரதிநிதியை மீண்டும் மன்னர் வரவேற்க வேண்டும்.

(ஈ) பர்மா நிலப்பரப்புமூலம் ஆங்கிலேயர்கள் சீனாவுடன் வாணிபத் தொடர்பு கொள்ள வசதிகள் செய்து தரவேண்டும்.

(உ) தலைமை ஆளுநரின் கட்டுப்பாட்டுக்குள்ளும், மேற்பார்வையின்கீழும் தம் அயல்நாட்டுக் கொள்கையை மன்னர் செயல்படுத்த வேண்டும்.

இவ்விறுதி யெச்சரிக்கையை மன்னர் தீபாவு ஏற்க மறுத்தார். பின் வருமாறு கி.பி. 1885ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் நாள் பதிலுரைத்தார் :—

(அ) பர்மியச் சட்டமுறைப்படி நிறுவனத்தின்மேல் ஏற்கெனவே தீர்ப்பளித்ததால் இத் தீர்ப்பைப் பற்றி ஆராய ஒரு தனித் தூதுவர் தேவையில்லை.

(ஆ) தீர்ப்பை ஆராய்வதற்காக ஒரு மனுவை விண்ணப்பிக்க உரிமையிருக்கிறது; நிறுவனம் இம்மனுவை அளிக்குமென எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால் எல்லாத் தீர்ப்புகளும் நடப்பதுபோல, இத்தீர்ப்பும் தாற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

(இ) மாண்டலேயிற்கு வந்து பதவியேற்கும் அரசப்பிரதிநிதியை வரவேற்கிறோம்.

(ஈ) பர்மிய நிலப்பரப்பு மூலம் ஆங்கிலேயர்கள் சீனாவுடன் வாணிகத் தொடர்பு கொள்ள உதவியளிக்கிறோம்.

(உ) ஓர் உரிமை நாட்டின் வெளிநாட்டுச் செய்திகளையும் உள்நாட்டுச் செய்திகளையும் அந்நாட்டிற்குத்தான் செயல்படுத்த உரிமையிருக்கிறது.

(ஊ) பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளோடு நேச உறவு தொடர்ந்து அமைக்கப்படும்.

10. முடியாட்சியின் முடிவும், உரிமையின் அழிவும்

பர்மியரின் இனம், சமயம், பண்பாடு ஆகியவற்றின் எதிரிகளை எதிர்க்குமாறு நவம்பர் 7ஆம் நாள் மன்னர் தீபாவு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். மன்னர் தீபாவுவின் பதில் நவம்பர் 9ஆம் நாள் இரங்கூனுக்குச் சென்றது. இறுதியெச்சரிக்கை கொடுக்கும் மூன்று நாள்களுக்கு முன்பே அக்டோபர் 19ஆம் நாளிலிருந்து ஆங்கிலேயப் படையின் தயாராக்கமுயற்சி தொடங்கியது. நவம்பர் 14ஆம் நாள் ஆங்கிலேயப்படை உரிமை பெற்ற பர்மாவைத் தாக்கத் தொடங்கியது. நவம்பர் 25ஆம் நாளில் மியின்கனும் (Myingan), நவம்பர் 26, 27 ஆகிய நாள்களில் அவாவும் (Ava), சாகைன்ங்கும் (Sagaing), நவம்பர் 28ஆம் நாளில் மாண்டலேயும் கைப்பற்றப்பட்டதால் பர்மாவின் முடியாட்சியும், உரிமையும் ஆங்கிலேயர்களால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. மூன்றுவது போர் இரண்டு வாரங்களுக்குள் முடிந்தது. தோற்கடிக்கப்பட்ட மன்னர் தீபாவுவும், அவருடைய பட்டத்தரசியும் இரண்டு எருதுகளால் இழுத்துச் செல்லப்பட்ட ஒரு சாதாரணப் பெட்டிவண்டியில் மன்னர் அவையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். யானைமேலோ, சிவிகையிலோ மன்னர் முறையிட்டபடி மன்னர் அழைத்துச் செல்லப்படவில்லை. மன்னர் சென்ற வழியாக அணி வகுத்து நின்ற பர்மியர்கள் அழுதார்கள். கொன்பாங் மரபினரின் கடைசி மன்னர் அரசுரிமையிலிருந்து தள்ளப்பட்டார். நாடு கடத்தப்பட்ட மன்னர் தீபாவு பம்பாய்க்கு அனுப்பப்பட்டார். அங்கே 1916ஆம் ஆண்டில் அவர் இறந்தார்.

முடியாட்சி ஒழிந்த பிறகுகூடப் பர்மிய அவையினரிடம் (Hlut daw) பர்மிய நடவடிக்கைகளின் சட்டம் செயல்படுத்தும் அதிகாரங்கள் நீடித்திருந்தன. பர்மா முழுவதும் ஆங்கிலேய நிருவாகத்தின்கீழ் வந்தது. தன்னுடைய அரசுரிமையையும், பிற உரிமைகளையும் பர்மா முழுவதும் இழந்தது.

மேலைப்பர்மா முழுவதும் ஆங்கிலேய அரசாங்கத்தின் தலைமையின்கீழ் வந்தால்தான் அந்நாட்டு வாணிபத்தின் மூலம் மிகுந்த

பயன் பெறமுடியும் என வாணிபச் சமுதாயம் நினைத்ததால் மேலைப் பர்மா முழுவதும் பர்மாவுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் கூக்குரலிட்டது. இவ்வாறு செய்தால் பர்மிய மக்களும் நன்மையையும், வளமையையும் பெறுவார்கள் என இரங்கூன் வாணிபச் சங்கம் ஒரு விண்ணப்பத்தின் மூலம் அரசப் பிரதிநிதியிடம் (Viceroy) தெரிவித்தது. ஆங்கிலேய அரசாங்கமும் இவ்வெண்ணத்தை வரவேற்ற போதிலும் மேலைப்பர்மாவை வலிந்து கவர்வது நேர்மையான உரிமை என மெய்ப்பிக்க வேண்டும் என விரும்பிச் சட்டவல்லுநர்களின் ஆலோசனையைக் கேட்டது. இவர்கள் கூறிய ஆலோசனைப்படிப் பல காரணங்களால் மேலைப் பர்மாவை ஆங்கிலேயர்கள் கைப்பற்றுவதுதான் சரி எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

(1) இனிமேலும் தீபாவுவை ஆங்கிலேயர்கள் அரசராக ஏற்றுக்கொள்ள முடியாது.

(2) தீபாவுவிற்குப்பின் மன்னர் பதவியேற்கத் தகுதி வாய்ந்த அரசர் இல்லை.

(3) மன்னர் அவையின் (Hlut daw) ஆட்சியின்கீழ்ப் பர்மாவை இனிமேலும் விடுவதில்லை; விட்டால் ஆங்கிலேயர்கள் பாதிக்கப்படுவார்கள்.

(4) மற்றோர் ஐரோப்பிய நாடு பர்மாவில் செல்வாக்கு பெறக் கூடாது.

(5) மேலைப்பர்மாவை மற்றப் பர்மியப் பகுதிகளுடன் இணைத்து ஒரே நாடாக அமைக்க வேண்டும்.

ஆகையால் கி.பி. 1886ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் சட்டப்படி மேலைப்பர்மா ஆங்கிலேயப் பர்மாவின் பகுதியாக அமைக்கப்பட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் மூன்று போர்களால் படிப்படியாகப் பர்மாவின் பகுதியாக மேலைப்பர்மா அமைக்கப்பட்டது.

(அ) கி.பி. 1824 — 26 முதல் பர்மியர் — ஆங்கிலேயர் போருக்குப் பின் அராகனும், தென்னசெரிமும் ஆங்கிலேயர்களின் மாகாணங்களாக மாறின.

(ஆ) கி.பி. 1852ஆம் ஆண்டில் இரண்டாம் பர்மியர்— ஆங்கிலேயர் போருக்குப்பின் பெகு பகுதி அராகனுடனும், தென்னசெரிமுடனும் இணைக்கப்பட்டது. கி.பி. 1862ஆம் ஆண்டில் இம் மூன்றும் சேர்ந்த பகுதி பிரிட்டிஷ் பர்மா என அழைக்கப்பட்டது.

(இ) கி.பி. 1885ஆம் ஆண்டில் மூன்றும் பர்மியர்—ஆங்கிலேயர் போருக்குப்பின் எஞ்சிய உரிமைப் பர்மாவை (மேலைப்பர்மா) ஆங்கிலேயர்கள் கைப்பற்றி அராகன், தென்னுசெரிம், பெகு ஆகியவற்ருேடு இணைத்தார்கள். பர்மா இந்தியாவின் ஒரு பகுதிப் பிரிவாய் மாறியது.

11. ஆங்கிலேய நிருவாகம்

அராகன், தென்னுசெரிம், பெகு ஆகியவற்றில் தொடங்கிய ஆங்கிலேய ஆட்சியை ஒரு நிருவாகச் சோதனைமுறை என அழைக்கலாம். உள்நாட்டுச் சூழ்நிலையைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டபின்தான் ஒரு திறமையான நிருவாக அமைப்பை உருவாக்கவும், செயல்படுத்தவும் ஆங்கிலேயர்களால் முடிந்தது. இதற்கிடையில் பிரிட்டிஷ் பர்மா வங்காள அரசாங்கத்தின் ஆட்சியின் உள்ளூர் நிருவாகம் அமைக்கப்பட்டது. கீழைப் படிகளிலுள்ள உள்ளூர்த் தலைவர்களும் ஆட்சிபுரியப் பயன்படுத்தப்பட்டார்கள். ஆங்கிலேய அதிகாரிகளுக்கும், பர்மியத் தலைவர்களுக்கும் இடையே கடக்கமுடியாத இடைப்பள்ளம் இருந்ததெனக் கூறலாம். மத்திய அரசாங்கத்திலிருந்த பெரும்பான்மையான அதிகாரிகள் ஆங்கிலேயர்கள்; மாகாணம், கிராமம் ஆகியவற்றின் நிருவாகத்தில் இருந்தவர்களில் பெரும்பான்மையோர் பர்மியர்கள். இவ்விரண்டு இனத்தார்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவில்லை. வழி வழி மரபில் வளர்ந்த சமூகம், நீதி, பொருளாதாரம் ஆகியவற்றில் இயங்கும் முறையை ஆங்கிலேயர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் பர்மியர்களின் ஒத்துழைப்பு ஆங்கிலேயர்களுக்குக் கிடைக்கவில்லை; பர்மியர்களால் ஆங்கிலேயர்களுக்குப் பல இன்னல்கள் வந்தன. கி.பி. 1890ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பர்மாவில் வேறுவகை நிருவாக அமைப்பை ஆங்கிலேயர்கள் உருவாக்கினுர்கள்.

கி.பி. 1826ஆம் ஆண்டில் உடன்படிக்கைக்குப்பின் அராகன், தென்னுசெரிம் ஆகிய நாடுகள் இந்தியாவிலிருந்த தலைமை ஆளுநரின் நேர்முக ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. பர்மியப் பகுதிகளை இந்தியாவின் புறக்காவல் அரண் என ஆங்கிலேயர்கள் கருதியதால் கி.பி. 1834ஆம் ஆண்டில் தென்னுசெரிம் வங்காள அதிகாரத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டது. பத்தாண்டுகள் பினுங்கிலிருந்து அனுப்பப்பட்ட அதிகாரிகள் இங்கு ஆட்சி புரிந்தனர். தாராள மனப்பான்மைக் கொள்கைகளும்

உள்ளூர்ப் பழக்கவழக்கங்களும் கலக்கப்பட்டு நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கொள்கையைப் பின்பற்றியே கி.பி. 1825ஆம் ஆண்டு செப்டம்பரில் தென்னுசெரிமிற்கு அனுப்பப்பட்ட ஏ.டி. மைன்கே (A. D. Maingay) நடந்துகொண்டார். மைன்கே (1825-1833) புலுண்டெல் (Blun Dell 1833-43) ஆட்சியின் போது, இந்திய நிருவாக முறையைப் பின்பற்றி நேர்முக ஆட்சி அமைக்கப்பட்டது. கி.பி. 1843ஆம் ஆண்டுக்குப்பின் இந்தியாவி லிருந்து வரவழைக்கப்பட்ட துணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்குப் பர்மியர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அதிகாரத்தை மையப்படுத்தியதால் கிராம நிருவாகிகள் முயற்சி தொடங்கும் நிலையற்றவர்களாக இருந்தார்கள்.

நீதிமுறையில் ஆங்கிலேய நடைமுறைகளுக்கும் பர்மியர்களின் நடைமுறைகளுக்கும் மிகுந்த வேறுபாடுகளிருந்தன. ஆங்கிலேயர் சட்டமன்றங்களைப் பற்றிப் புரிந்துகொள்வது பர்மியர்களுக் குக் கடினமாயிருந்தது. பர்மிய நடுவர் தீர்ப்பு முறை (arbitration) நேர்மைக்குக் கேடுவிளைத்துவிட்டது என ஆங்கிலேயர்கள் கருதி னர்கள். மேலை நாட்டுச் சட்டமுறைப்படி நீதிவழங்கப் பர்மியக் குற்றவியல் நடுவர்கள் (magistrates) நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவருக்குக்கூட ஆங்கில மொழி பேசவோ, படிக்கவோ தெரியாது. தண்டலாளர் நீதிமன்றங்கள் (magistratescourts) தென்னுசெரிமில் ஆம்ஹெர்ச்டிலும் (Amherst), தாவோயிலும் (Tavoy) அமைக்கப்பட்டன. நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் வந்திருக்க அனுமதி அளிக்கப்படவில்லை. கி.பி. 1829ஆம் ஆண்டில் உரிமை அல்லது குற்றம் பற்றிய வழக்குகளில் நிகழ்வு பற்றிய முடிவான விவாதத்தை ஆய்ந்து ஒருமனதாகத் தீர்ப்புக்கூறும் 12 பேர்கொண்ட ஆயம் (Jurytrial) அறிமுகப்படுத்தப்பட்டது.

தொடக்கத்தில் கிராமத் தலைவர்களுக்கு ஊதியம் அளிக்கப் பட்டது. அரசாங்கம் இவர்களை மேற்பார்வையிட்டது. ஆனல் தேவையான வருமானம் கிடைக்காததால் இவர்களுக்கு ஊதியம் அளிக்கமுடியவில்லை. போக்குவரத்துச் சாதனங்களும், இணைப்பு களும் இழிந்த நிலையிலிருந்ததால் மேற்பார்வைக் கடமையைச் சரிவரச் செய்ய முடியவில்லை. ஆகையால் பழைய பர்மியர்கள் அமைப்பே மீண்டும் அமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் சார்பில் வரிவாங்கிய கிராமத்தலைவர்களுக்கு வரி வருமானம் (பங்குவரி) அளிக்கப்பட்டது. அவர்கள் நிலையாக ஓர் இடத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் பதவி வழிவழியாக வரும் பதவியாகையால், மத்திய அரசாங்கம் கண்டிப்பான முறைகளில் அமைக்கப்பட்ட போதிலும், உள்ளூர் நிருவாகம் பர்மிய வழிமரபு முறைகளைப் பின்பற்றியது.

அரசியற் கட்டுப்பாடற்ற வாணிகக்கோட்பாடு-நிருவாகம்

பெகு மாகாணம் ஆங்கிலேயப் பர்மாவுடன் இணைக்கப் பட்டவுடன் இம்மாகாணமும் தென்னுசெரிமைப்போல நிருவகிக்கப் பட்டது. இந்தியாவிலிருக்கும் தலைமை ஆளுநருக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்ட ஓர் ஆணையர் நியமிக்கப்பட்டார். முதல் ஆணைய ராகப் பணிபுரிந்த படைத்துறைப் பணிமுதல்வர் ஆர்தர் பாய்ரே (Mayor Arthur Phayre) தென்னுசெரிமில் அமைக்கப்பட்ட நிருவாகத்தைப்போல ஒரு நிருவாக அமைப்பைப் பெகுமாகாணத் தில் அமைத்தார். பெகு மாகாணம் ஐந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டமும் ஒருதுணை ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாவட்டங்கள் பல சிறிய பட்டணங்களாகப் பிரிக்கப்பட்டன. சிறிய பட்டணம் ஒவ்வொன்றும் ஒரு மயோ ஒக் (Myo-ok) அல்லது சிறிய பட்டண மேலதிகாரியின் ஆட்சியின் கீழ் வந்தது. சிறிய பட்டணம் ஒவ்வொன்றும் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டத்தையும் ஆளும் பொறுப்பு ஒரு தைக்துக்யீ (Taikthugyi) அல்லது வட்டத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கீழே இறுதியாகப் பிரிக்கப்பட்ட பகுதிகள் கிராமங்கள் இக்கிராமங்களின் நிருவாகப் பொறுப்பு பயிதாங்யிடம் (Byedangyi) அல்லது கிராம அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. கி.பி. 1862ஆம் ஆண்டில் அராகன், தென்னுசெரிம், பெகு ஆகியவை ஒன்ருகச் சேர்க்கப்பட்டுப் பிரிட்டிஷ் பர்மா என அழைக்கப்பட்டன. பிரிட்டிஷ் பர்மாவின் ஆட்சித்தலைமை இரங் கூனில் ஒருதலைமை ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின் வரும் நோக்கத்துடன் இம்மூன்று நாடுகளும் இணைக்கப்பட்டன:

(அ) நிருவாக அமைப்பை ஒரே சீராக்குவது—ஒவ்வொரு நாட்டிலும் ஒரே வகையான நிருவாக அமைப்பிலிருந்தது. ஆனுல் இவைகள் தனியாக நிருவாகம் செய்யப்பட்டன.

(ஆ) அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து நிருவாகச் செலவைக் குறைப்பது.

(இ) வாணிகத்திற்கு ஊக்கமளிப்பது.

மேலும் மிகுதியான நிருவாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு மத்திய அரசாங்கம் வலிமையடைந்ததும் பர்மிய வழிவழி மரபு முறை மறைந்து நடுநிலைமையுள்ள சட்டத்தின் ஆட்சியாக மாறியது. ஆனுல், தத்துவ அளவில்தான் இவ்வகையான நேர்முகஆட்சி அமைக்கப்பட்டிருந்தது. பர்மியக் கிராமமக்களுக்குத் தங்களுடைய தைக்துக்யீகளைத்தாம் தெரியும்; ஆனுல் இத்

தைக்துக்யீகள் இரங்கூனிலுள்ள ஆங்கிலேய மத்திய அரசாங்கத்திடமிருந்துதான் கட்டளைகளைப் பெறுகிறார்கள் என இவர்கள் அறியார்கள். பர்மிய ஆட்சியின்பொழுது இருந்த கிராமவாழ்க்கை முறையே ஆங்கிலேய ஆட்சியிலும் தொடர்ந்து நடந்துவந்தது. பயிதாங்யீ, அவர்களிடமிருந்து வரிவாங்கினார். அவர்களுடைய வழக்குகள் நடுவர் தீர்ப்பு முறைக்காகக் கிராமத் தலைவரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. தங்களுடைய பரம்பரை வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் அவர்கள்தொடர்ந்து நடத்தி வந்தார்கள். 'இம் முறை உண்மையில் நேர்முக ஆட்சி என்றாலும், நடைமுறையில் வட்டத்தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்ட மறைமுக ஆட்சியே' எனப் பர்னிவல் (Farnivale) எனும் பேராசிரியர் கூறுகிறார்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிவரை பர்மாவில் மிகக் குறைந்த அளவில் தலையிட்டு வாழ்க்கை முறை தன் வழியிலே செல்வதற்கு உடன்பாடு அளித்தார்கள் ஆங்கிலேயர்கள். ஆகையால் கி.பி. 1886 ஆம் ஆண்டில் மேலைப் பர்மாவைக் கைப்பற்றிய பின்கூடப் பின்வரும் திட்டங்களையே செயல்படுத்த ஆங்கிலேயர்கள் முயன்றார்கள்:

(1) பர்மியர்களுக்கு மனநிறைவு அளிக்கக்கூடிய ஆனால் ஆங்கிலேயச் சட்டமுறைப்படி நீதி அளிக்க முயல்வது.

(2) பர்மிய மக்களும் ஆங்கிலேய அரசாங்கமும் ஒப்புக் கொள்ளத்தக்கதான வரிமுறை அமைப்பைச் செயல்படுத்துவது.

(3) பர்மியர்களுக்கு அடிப்படையுரிமைகள் அளிப்பது. அவர்கள் எச்சமயத்தையும் பின்பற்றலாம்; தனிமனிதருக்குரிய உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

(4) கட்டுப்பாடில்லா வாணிபத்தைப் பாதுகாப்பது;

(5) போக்குவரத்து வசதிகளை மிகுவிப்பது.

பர்மாவிலிருந்து நடுப்படிகளிலும், உயர்படிகளிலும் இருந்த பர்மிய ஆட்சி அமைப்பை நீக்க ஆங்கிலேயர் முயன்றனர். இனிமேலும் மன்னர் லுட்தாவுன்கள், மயோதுக்யீகள் முதலியோர் இல்லை. அவர்களுக்குப் பதிலாக ஆங்கிலேய அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். 17,000 முதல் 18,000 வரை எண்ணிக்கையுடைய ஒரு துக்யீ (thugyi) ஒவ்வொரு சிற்றூருக்கும் நியமிக்கப்பட்டார். வரிவாங்குவது, பாதுகாப்பு அளிப்பது, சிறு பூசலைத் தீர்த்துத் தீர்ப்பளிப்பது போன்றவற்றை இவர்கள் புரிந்தார்கள்.

தாங்கள் வசூலித்த மொத்தவருமானத்திலிருந்து 10 விழுக்காடு பங்குகளை இவர்கள் எடுத்துக்கொள்ளலாம். துக்யீகள் அரசாங் கத்திற்கு வரிசெலுத்தவேண்டும். ஒரு சிறு நிலப்பகுதியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கு அவர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தார்கள்; அவர்களிடம் மிகுந்த அதிகாரங்கள் இல்லாமலிருந்ததால் அவர்கள் திறமையுடன் ஆட்சிபுரிய முடியவில்லை.

செயல்திறமுடைய நிருவாகம் 1897—1923

தலையிடா நிருவாக அமைப்பு மாறிச் செயல்திறமுடைய நிருவாக அமைப்பு கி.பி. 1897ஆம் ஆண்டில் உருவாகியது. தலைமை ஆணையர், துணைநிலை ஆளுநர் (Lieutenent-Governor) தகுதிநிலைக்கு உயர்த்தப்பட்டார். இவருக்கு உதவிபுரிய ஒரு சட்டமன்றம் (Legiseative Council) அமைக்கப்பட்டது. சட்டத்தைப் பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட வேண்டு மென்றால், செயல்திறமுடைய நிருவாகம் தேவையாயிருந்தது.

சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டது. தொடக்கத்தில் 9 உறுப்பினர்களிலிருந்தார்கள். கி.பி. 1909ஆம் ஆண்டில் 30 உறுப்பினர்களாக உயர்ந்தார்கள். வாணிபக் குழுவினர்களுக்குச் சட்டமன்ற நடவடிக்கைகளில் மிகுந்த செல்வாக்கும் சலுகைகளும் இருந்தன. கி.பி. 1920ஆம் ஆண்டில் ஆசிய நாட்டின் உறுப்பினர்கள் சிலரும் நியமனஞ் செய்யப்பட்டனர்.

புதிய அரசாங்கத்துறைகள் அமைக்கப்பட்டன. நிருவாகத் திறமை மிகுந்த உயர்நோக்கம் படைத்த சமூகத் தொண்டுகளும் பொருளாதார வளர்ச்சியும் செய்யப்பட்டன.

அரசாங்கத் துறைகள் மூலம் கிடைத்த வசதிகளைப் பர்மியர்கள் பாராட்டவில்லை; புதுமுறைக் கல்வித்திட்டம் மூலம் விளையக்கூடிய நன்மைகளைப் பற்றிப் பர்மியர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நகர நிறுவனங்களுடைய நடவடிக்கையின்மேல் அவர்கள் அக்கறை காட்டவில்லை. நடைவழிகளும், அவற்றின் ஓரங்களில் பதிக்கப்பட்ட கல்வரிசைகளும், தெருவிளக்குகளும், மருத்துவ வசதிகளும், தண்ணீர் வசதிகளும், தந்திநிலைய வசதிகளும் நகர்ப் புறங்களிலும் செய்யப்பட்டன. ஆனால், இவ்வசதிகள் மூலம் பர்மியர்களைவிட ஆங்கிலேயர்களே மிகுந்த அளவில் நன்மை யடைந்தனர். கி.பி. 1923ஆம் ஆண்டில் பொதுநலத் துறைமூலம்

மின்சாரம், தண்ணீர், நெடுஞ்சாலை ஆகியவற்றின் வசதிகளும் மற்றும் பலவசதிகளும் பர்மாவிற்குக் கிடைத்தன.

படித்துப் பட்டம்பெற்று ஆங்கில மொழிபேசும் பர்மியர்கள் படைத்துறையைச் சாராத அரச அலுவலர்களாகவும் (Civil Services) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், ஊதியம், பதவி உயர்வு, ஆகியவை அளிப்பதில் ஓரங்காட்டப்பட்டது. மிகச் சிலருக்கே உயர்ந்த பதவியளிக்கப்பட்டது. 1908ஆம் ஆண்டில் பர்மியர் ஒருவர் முதல் முறையாக உயர்நீதிமன்றத்தின் நீதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சமயத்தில் பர்மியர்களுக்குத் தன்னாட்சி முறையில் பயிற்சியளிக்க வேண்டுமென்பதே ஆங்கி லேயர்களின் கொள்கை.

நாட்டுப்புறப் பகுதிகளிலும் பல மாறுதல்கள் தோன்றின; வட்ட அமைப்பு (Circle System) நீக்கப்பட்டுக் கிராம அமைப்புத் தோன்றியது. இப்பொழுது கிராமங்கள் உள்ளூர் நிருவாக அமைப் பாக மாறியதால், தனியொருவரைக் குறித்த நிருவாக அமைப்பு ஒழிந்தது. கிராமப்புற அமைப்பு, இயல்பான நிருவாக உறுப்பாக வளரவில்லை. உயிர்ப்புத்திறமற்ற கண்டுபிடிப்பு, நிருவாகத் திறமைக்குக் சிறப்பையளித்ததால் தாயக அரசியல் சமூக அமைப் பாக மாறின. இதன் விளைவாகப் பொதுவாகப் பர்மியர்கள் ஆட்சியின்போதிருந்த மக்கள் பேராதரவு பெற்ற தன்னாட்சிக்குப் பதிலாக அயல்நாட்டாரின் சட்ட அமைப்பு உருவாகியது; இப்புதிய அமைப்பு விடுவித்த சமுதாயத்துக்கு மாறான ஆற்றலை இதனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகையால், தன்னாட்சிமுறை மலருவதற்குப் பதிலாகத் தேய்வுறத் தொடங்கியது.

கி.பி. 1923ஆம் ஆண்டிலிருந்து உணர்ச்சியற்ற, நட்பார்வ மில்லாத ஆட்சிச் சார்பற்ற பொதுமுறையான நிருவாகம் உருவாகியது. ஒவ்வோர் அதிகாரியும் தம்வேலைகளைச் செய்வதில் தான் கடுமையாக ஈடுபட்டனர். மக்களுடன் நெருங்கிப்பழகாததால், மக்களைப்பற்றித் தெரிந்துகொள்ளாததால் அதிகாரிகள் மக்களை விரும்பும் வாய்ப்பேற்படவில்லை. ஆகையால், மக்களுடனிருந்த தொடர்பில் மனமுவந்து இரக்கத்துடன் அதிகாரிகளால் நடந்து கொள்ள முடியவில்லை. இதனால் பர்மிய மக்களால் இவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதிகாரிகளை வரிவாங்குபவர் களாகத்தாம் மக்கள் கருதினர். அவர்களுக்குக் கையூட்டும் அளித்துத் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற மனப்பான்மைதான் உருவாகியது. சுருங்கக்கூறினால், ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் பர்மிய மக்களுக்கும் ஒரு வகைத் தொடர்பும் உருவாகவில்லை.

பொருளாதாரம் சமூக-அமைப்பு மாற்றங்கள்

பர்மாவின் நிருவாக அமைப்பு மாறியதால் கி.பி. 1826-1923க் கிடையுள்ள ஆண்டுகளில் சமூகப் பொருளாதார அமைப்பில் மிகுந்த மாற்றங்கள் தோன்றின. அரசியல் சம்பந்தமாகப் பர்மா விற்கு மிக்க நன்மை விளையவில்லை யென்றாலும், பொருளாதார வளர்ச்சியினால் பர்மியர்களுக்குப் பல நன்மைகள் விளைந்தன. ஆனால், வாணிபச்சங்கங்கள் தாம் மிகுதியான பயனையடைந்தன. அடுத்து இந்திய சீனவணிகர்கள் நன்மை அடைந்தார்கள். இருந்தாலும் பர்மிய அரசர்கள் காலத்தில் கிடைத்த நன்மைகளை விட மிகுதியான நன்மைகளை ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போது பர்மியர்கள் அடைந்தார்கள். ஆனால், பொருளாதார வளர்ச்சி மலருமுன் பர்மிய வழிமரபுச் சமுதாயத்தை இழக்கவேண்டிய கட்டாயமேற்பட்டது. ஆகையால், ஆங்கிலேயர்களின் ஆட்சியின் பொழுது பர்மியப் பண்பாடுகளும், சமயமும் சரிவிறக்கமுறத் தொடங்கின. இரண்டாம் உலகப் போருக்குப்பின் தன் வழிவழி மரபுச் சூழ்நிலையிலிருந்து மேலெழும்பியபோது உருமாற்றப்பட்ட நிலையைத்தான் பர்மா நோக்கியது. பலப்பல நாட்டுப் பழங்குடிகளைச் சார்ந்த பழக்கங்கள் மறைந்தன. கவர்ச்சியும், நயமுமில்லாத புதுநாகரிகப் பண்பாடு அமைப்பு பர்மாவில் தோன்றியது. ஆகையால், மனநிறைவு அளிக்கும் சூழ்நிலை உருவாகவில்லை. இதை உணர்ந்த பர்மியர்கள் வருந்தினார்கள்.

பொருளாதார வளர்ச்சி

தொடக்கத்தில் கட்டுப்பட்ட அளவில்தான் பொருளா தாரத்தைச் சீர்ப்படுத்த ஆங்கிலேயர்கள் முயன்றார்கள். தென்னு செரிமில் கட்டுப்பாடற்ற வாணிபம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தங்கள் தேவைக்கான அரிசியைக்கூடப் பயிரிடுவோர் விற்கத்தொடங்கியவுடன் இதைத் தடுக்கும் நோக்கத்துடன் அவர்களுள் ஒவ்வொருவனும் தன் மொத்த விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கைத்தான் விற்கவேண்டும் என்ற சட்டத்தை மைன்கே (Maingay) கொண்டுவந்தார். அரிசியைக் கொண்டு போவதற்காகச் சில சாலைகள் அமைக்கப்பட்டன. ஆனால், சாலைகள் அமைப்பதற்கு மிகுந்த கூலியாட்கள் தேவையாக இருந்தனர். இச்சமயத்தில் பொருளாதாரம் வேளாண்மையையே நம்பியிருந்தது. தங்கள் நிலங்களில் கடுமையாக வேலைசெய்வதில் பர்மியர்கள் ஈடுபட்டிருந்ததால் பொதுநலத்துறை வேலைகளில் சேர்வதில் பர்மியர்கள் ஊக்கம் காட்டவில்லை. ஆனால், முன்பு பர்மிய அரசர்கள் செயல்படுத்திய திட்டம்போல ஆங்கிலேயர்களும் ஒருதிட்டத்தைச் செயல்படுத்தினர். பர்மியர்கள் ஆண்டில் இரண்டு

மாதங்கள் கட்டாயமாக அரசாங்கத்திடம் கூலியாள்களாகப் பணிபுரியவேண்டும்; இதுவும் அரசாங்கத்தின் தேவையை நிறைவேற்ற முடியவில்லை. இது ஆங்கிலேயர்களின் பரந்த மனப்பான்மையுடைய முற்போக்குக் கொள்கைகளுக்கு முரணாக இருந்தது. இதன்காரணமாக அரசாங்கப் பொதுநலத்துறைகளில் கூலியாள்களாக வேலைசெய்வதற்காக இந்தியச் சிறைக்கைதிகள் பர்மாவிற்கு அழைத்துவரப்பட்டனர். கி.பி. 1838ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து மிகுந்த கூலியாள்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். ஆனால் கி.பி. 1843ஆம் ஆண்டுக்குப் பின்தான் மிகுந்த அளவில் இந்தியக் கூலியாள்கள் பர்மாவிற்கு வந்துகுடியேறினர். இச்சமயத்தில் தனியார் பணித்துறைகளில் கைதிகளை வேலைக்கு வைக்கக்கூடாது என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. குடியேறிய இந்தியர்கள் அதிகரித்ததால் மக்கள் தொகை அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சிக்கு மக்கள் தொகை வளர்ச்சியும் இச்சமயத்தில் தேவையாயிருந்தது. ஆங்கிலேய வணிகர்கள் நிலவுடைமையாள்களாக மாறுவதற்கு ஆங்கிலேய அதிகாரிகள் ஊக்கமளித்தார்கள். ஆனால், பர்மாவிலிருந்து தேக்குமர வியாபாரத்தில்தான் ஆங்கிலேய வணிகர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். தேக்குமரங்கள் கட்டுப்பாடில்லாமல் தென்னசெரிமில் வெட்டப்பட்டதால் சாதாரணமாகக் கிடைக்கும் வருமானத்தை விடக் குறைந்த வருமானம்தான் ஆங்கிலேய அரசாங்கத்திற்குக் கிடைத்தது. கி.பி. 1850ஆம் ஆண்டில் தேக்கு மரக்காடுகள் அழிக்கப்படும்வரை, கப்பல் கட்டும் தொழிலுக்கு முதன்மை கிடைத்தது.

இவ்வகையான சூழ்நிலைதான் அராகனிலும் பதினைந்தாண்டு ஆட்சிக்குப்பின் பெகுவிலும் நிலவியது. போதியவளவு கூலியாள்கள் செல்வமில்லாமலிருந்தாலும், சட்டமற்ற அமைதி குலைக்கும் சூழ்நிலை உருவாகியதாலும், ஆக்க நல அரசு அமைப்பதற்கு ஈடாக ஒழுங்கமைதி நிலைநாட்ட அரசாங்கம் தன் முழுக்கவனத்தையும் செலுத்தியது. அமைக்கப்பட்ட சில சாலைகளும் கவனமின்மையால் இழிநிலையுற்றன. ஆகையால் தண்ணீர்ச் செல்வழிகள் மூலம் தான் போக்குவரத்து ஏற்பட்டது. பிரிட்டிஷ் இராணுவ ஆட்சி, குறைந்த ஊதியம் பெறும் காவலர்கள் ஆகியவை தவிர வேறு வகையான மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை என 1869ஆம் ஆண்டில் ஆங்கிலேயத் தலைமை ஆணையர் கூறினர்.

இந்திய அரசாங்கத்தின் உடன்பாட்டுடன் பிரிட்டிஷ் பர்மா அரசாங்கத்தை நடத்தவேண்டியதாயிருந்ததால்தான் இவ்வகையான சூழ்நிலை உருவாகியது. அமைதி நிலைநாட்டுவதில்தான்

இந்தியா கவனம் காட்டியது. வளர்ச்சிசெய்ய வேண்டுமென்றால், செலவு செய்யவேண்டும் என்பதால் வளர்ச்சித் திட்டங்களை இந்தியா புறக்கணித்தது. முடிந்த அளவில் தனியார்களிடம் வாணிபம் விடப்பட்டது; படிப்படியாகப் பர்மாவின் பல பகுதிகளிலும் பரவத்தொடங்கியது. வரிச்சுமை மிகுந்தபோதிலும் பொருளாதார வளர்ச்சியினால் முன்னைவிட இப்பொழுது பர்மியர்களுக்குப் பல நன்மைகள் விளைந்தன.

ஆங்கிலேய அரசாங்கத்தின் வருத்தந்தரத்தக்க அம்சங்கள் பொருளாதாரத்தைவிடச் சமூக அமைப்பில்தான் மிகுதியாக வெளிப்பட்டன. மிகுந்த அளவில் இந்தியர்கள் வந்து குடியேறியதால் பல சமூகச்சிக்கல்கள் ஏற்பட்டன. பொருளாதாரத்தை இந்தியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். கீழ்ப்படியிலுள்ள அரசாங்க வேலைகளில் சேர்ந்தார்கள். இதன்விளைவாகப் பன்மைச் சமுதாயம் (Plural Society) தோன்றியது. பர்மியர்களுக்கும் பயிற்சியளிப்பதைவிட ஊதியம் அளித்து இந்தியக் கூலியாள்களை வேலைக்கு அமர்த்துவது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மிகுந்த பயன் அளித்தது என ஆங்கிலேயர் கூறினர். இதனால், குடியேறிய அயல் நாட்டினத்தார்களுக்கும் பர்மியர்களுக்குமிடையே உட்பூசல் உருவாகியது.

அயல் நாடுகளுடன் தொடர்புகொண்டதால் திடீரென்று கூலியாள்களின் தேவைமிகுந்தது. வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்பட்டது. கி.பி. 1871ஆம் ஆண்டிலிருந்து பர்மாவிலிருந்து ஐரோப்பாவிற்கு நீராவிக்கப்பல்கள் செல்லத் தொடங்கின. கி.பி. 1852ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர்கள் வசமிருந்த பர்மியத் துறைமுகங்களில் ஏற்றுமதி—இறக்குமதி செய்யப்படும் சரக்குகளின் எடையளவு மிகுந்தது. கி.பி. 1902ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானியக் கப்பல்களும், ஜெர்மன் கப்பல்களும் பர்மியத் துறைமுகங்களுக்கு வரத்தொடங்கின; கி.பி. 1905ஆம் ஆண்டிலிருந்து இந்தோனேசியக் கப்பல்களும் வர ஆரம்பித்தன.

குறைந்த ஊதியத்துடன் மிகுந்த அளவில் கூலியாள்கள் கிடைத்ததாலும், பர்மாவில் இயற்கைப் பொருள்களிருந்ததாலும், பர்மிய அரசாங்கம் ஆதரவும் ஊக்கமும் அளித்ததாலும் பர்மாவில் மூலதனம் போடப் பல அயல்நாட்டினர்கள் முன்வந்தார்கள். இதில் சிறப்பாக ஆங்கிலேய—இந்திய வணிகர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இப்புதிய சூழ்நிலை பர்மியர்களைத் தடுமாறச் செய்தது. தங்கள் நாட்டிற்கு என்ன ஏற்படுகிறது என்பதைப் பர்மியர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவர்களால் இவ்

வகையான புதியசூழ் நிலையில் பங்கெடுக்கவும் முடியவில்லை. பர்மியர் களும் இதில் பங்கெடுக்க வேண்டும் என வலியுறுத்தவுமில்லை. மேலை நாடுகளின் வாணிபக் கலங்களையும், வாணிகத்தையும் பர்மா பயன்படுத்தத் தொடங்கியது. ஆனால், பர்மியர்கள் ஏழைகளாகத் தாம் இருந்தார்கள். தங்கள் வாழ்க்கையை மிகப் பாதித்த, அலைக்கும் பொருளாதார விசைத்திறத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருந்தனர்.

வாணிபத்தின் மூலம் வரும் மிகுந்த பயனில் பர்மியர்களுக்குப் பங்கு கிடைக்கவில்லை யென்றாலும், நெல் உற்பத்தி வளர்ச்சியின் மூலம் மறைமுகமாகப் பர்மியர்களுக்குப் பல நன்மைகள் கிடைத்தன.

இப் பொருளாதார வளர்ச்சி மக்கள் தொகையையும் மிகுவித் தது. கி.பி. 1870ஆம் ஆண்டில் 6·11 மில்லியனாக இருந்த மக்கள் தொகை கி.பி. 1900ஆம் ஆண்டில் 9·28 மில்லியனாக மாறியது. கி.பி. 1921ஆம் ஆண்டில் பர்மாவில் 13·2 மில்லியன் மக்கள் வாழ்ந் தார்கள். இதில் நான்கில் மூன்று பங்கினர் வேளாளர்கள். எனவே, அரிசியேற்றுமதி மிகுந்தது. கி.பி. 1900ஆம் ஆண்டு வரை அயல் நாட்டார் வாணிபத்தைவிட அரிசி ஏற்றுமதியே மிகுந்த அளவில் வளர்ச்சி யடைந்தது. ஆனால் கி.பி. 1900ஆம் ஆண்டுக்குப்பிறகு அரிசி ஏற்றுமதி பின்தங்கியது. தேக்குமர வியாபாரம், எண்ணெய் உற்பத்தி, சுரங்கங்கள் ஆகியவை அயல் நாட்டார் வசம் விடப் பட்டன. கி.பி 1923ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவது உலகப் பெரும் போர்வரை பெட்ரோல் வியாபாரத்தில் மேலை நாட்டினர் மிகுந்த கவனம் செலுத்தினர். கி.பி. 1898ஆம் ஆண்டில் பெட் ரோல் உற்பத்தி 20 மில்லியன்கள் காலன்கள். கி.பி. 1923ஆம் ஆண்டில் இதுவே 270 மில்லியன் காலன்களாக மிகுந்தது. பர்மா பெட்ரோலியக் கம்பெனி பொதுவாகப் பர்மியர்களையே வேலைக் கமர்த்தியது.

நில ஊழிய உரிமை

பர்மியப் பொருளாதார அமைப்பில் கவர்ச்சியூட்டுகிற பகுதி வேளாண்மைதான். கடுமையாக உழைத்துக் காட்டுப் பகுதிகளை அழித்தால் செழிப்புள்ள நாடாக விளங்கும். ஆங்கிலேயர்கள் அளித்த ஊக்கத்தினால் பர்மியர்கள் ஆர்வத்துடன் உழைத்துத் தங்கள் நிலங்களை மிகுதியாக்கிக் கொண்டார்கள். கருஞ்சிவப் புடைய சமவெளிகளிலிருந்து கழிமுகப்பகுதிகளுக்கு வந்து குடியேறி அரிசி உற்பத்தியில் பர்மியர்கள் இறங்கினார்கள். மிகுந்த அளவில் வந்த கப்பல்கள் பர்மாவிலிருந்து தேவைக்கு மிஞ்சிய அரிசி

முட்டைகளை இந்தியாவிற்கும், சீனுவிற்கும், மலேசியாவிற்கும், இந்தோனேசியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் எடுத்துச் சென்றன.

ஆனுல், தனியாள்களாயிருந்த ஏர் உழவர்களுக்கு மூலதனம் தேவையாயிருந்தது. இத்தேவையை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்ததால் வட்டித் தொழிலர்களின் இரும்புப்பிடியில் உழவர்கள் மாட்டிக் கொண்டார்கள். பர்மியர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை. ஆங்கிலேய அரசாங்கம் ஏற்படுத்திய பாங்குகள், கடன்தவணைச் சலுகைகளைப்பற்றி இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பர்மியர்களின் அறியாமையைத் தங்களுக்குச் சாதக மாகச் செட்டியார்கள் பயன்படுத்தி உழவர்களின் நிலமதிப்புக்குத் தகுந்த மாறு வட்டிக்குக் கடன் வழங்கினுர்கள். நல்ல காலம் தொடர்ந்து வந்தவரை பல ஆண்டுகள் உழவர்கள் நன்மையடைந் தார்கள். ஆனுல், வளர்ச்சிக் குறைபாடு அல்லது விலையிறக்கம் அல் லது நோய் போன்ற ஏதாவதொரு ஆபத்தேற்பட்டால் உழவர்கள் ஏழ்மை நிலையில் வாட வேண்டிய கட்டாயம் ஏற்படும். இவ்வாறு ஏற்பட்டால் வட்டித் தொழிலர்கள் இவர்கள் நிலங்களைக் கைப்பற்றி மற்ருேர் உழவரிடம் விற்றுவிடுவார்கள். இவ்வாறு நிலங்களின் கைம்மாற்றம் அடிக்கடி ஏற்பட்டது. கீழைப்பர்மாவில் நூற்றுக் கணக்கில் வட்டித் தொழிலர்கள் இருந்தார்கள். உடைமையன்றி விலகியிருந்த பண்ணை மேலாட்சிமுறை (Absentee land lordison) நாடு முழுவதும் பரவலாயிருந்தது. கீழைப் பர்மாவிலுள்ள நிலங் களிலுள்ள பாதி நிலங்கள் உடைமையினின்று விலகியிருந்த பண்ணை மேலாட்சிமுறை யிருப்பதுபோலிருந்தன. அரிசி மிகுதியாக உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கிலிருந்து நான்கில் மூன்று பங்குவரை நிலங்கள் இவ்வகையான முறை யின்கீழிருந்தன. மிகுதியான நிலங்கள் உடமையினின்று விலகி யிருந்த வட்டித் தொழிலர்களின் பண்ணை மேலாட்சி முறையின் கீழிருந்தன.

உடைமையினின்று விலகியிருந்த பண்ணை மேலாட்சி முறை யில் அரிசி உற்பத்தியாகும் பகுதிகளின் பொருளாதாரம் சீர்குலைந் தது. குத்தகையாளர்களும், தொழிலாளர்களும் கடன்வாங்கி வாழ்ந் தார்கள். இதற்கு மிகுதியாக வட்டியளிக்க வேண்டியதாயிருந்தது. பர்மிய வட்டித் தொழிலர்கள்தாம் மிகுந்தவட்டி வாங்கினுர்கள். இதைவிடக் குறைந்த வட்டியில் செட்டியார்கள் பணம் வழங்கி னுர்கள்; அரசாங்கம் இந்நிலையைச் சீர்ப்படுத்த முயன்றது. ஆனுல் நில அளவாய்வாளர்கள் நேர்மையில்லாமலும், திறமையில்லாமலும் இருந்ததால் அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறவில்லை.

பொதுவாக, இவ்வகையான பொருளாதாரச் சூழ்நிலை மிகுந்த அளவில் பெகுவிலிருந்து அடுத்தபடியாக அராகனும், தென்னு செரிமும் இல்வாறு துன்புற்றன. மேலைப் பர்மாவில் மிகக்குறைந்த வளவில்தான் வட்டித் தொழிலர்களிருந்தார்கள். ஆகையால், இப் பகுதியில் உழவர்கள் தொல்லைக்குள்ளாகவில்லை.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே மேலைப் பர்மாவிலும் இச்சூழ்நிலை உருவாகியது. உழவர்கள் ஏழ்மையடைந் தார்கள். மிகுந்த அளவு கடனில் மூழ்கியிருந்தார்கள். இவர்களின் ஏழ்மை மேன்மேலும் மிகச் செட்டியார்களின் செல்வம் பன்மடங் காகப் பெருகத் தொடங்கியது. கி.பி. 1908—10 ஆம் ஆண்டு களில் மிகுந்த நிலங்கள் வட்டித் தொழிலர்களிடமும், வணிகர் களிடமுமிருந்தன. இதை இவர்கள் ஒவ்வோராண்டும் குத்தகைக்கு விட்டார்கள்; கடன் சூழ்நிலை பொதுவாக எங்குமிருந்தது. நிலம் உழும் உரிமையாளர்கள் பொதுவாகச் செட்டியார்களின் கைப்பொம் மைகளாக இருந்தார்கள்.

சிலகாலம் குத்தகை யெடுத்தவர்கள் குத்தகை உரிமையுடனி ருந்தார்கள். ஓர் ஏர்உழவர் நிலத்தை ஓரிரண்டு ஆண்டுகள்தாம் வைத்திருந்தார். பிறகு இவரிடமிருந்து அடுத்தவரிடம் நிலம் மாற்றப்பட்டது. இவ்வகையாக நிலஉரிமை மாறி மாறி வந்ததால் நிலத்தை வளர்க்கும் ஆர்வம் உழவர்களிடமில்லை. பதிலாகக் குறைந்த அளவில் உழைத்து நிலத்திலிருந்து இயன்ற அளவு மிகுந்த பயன் பெறமுடியுமோ? விரைவில் நிலங்கள் பாழடிக்கப் பட்டன.

இதைத்தடுக்க அரசாங்கம் முயன்றது. நிலங்கள் அளவை செய்யப்பட்டன; அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஜே. எஸ். பர்னிவல் (J. S. Furnival) பின்வரும் ஆலோசனை அளித்தார்:

(1) விளைச்சல்கள் குறைவாகச் சீரழிந்த நாட்களில் வரிகள் ஏற்றவாறு குறைக்கப்பட வேண்டும்.

(2) உழவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடனளிப்பதற்குக் கூட்டுறவு—நிலையங்கள் (Co-operatives) அமைக்கப்படவேண்டும்.

(3) பளு, எடை ஆகியவைகளைத்தர முத்திரை நிறை அளவு களாக மாற்ற வேண்டும்.

(4) பருத்திகளின் தரத்தைக் குறிப்பிட்டுத் தங்கு தடையின்றி அங்காடிகளில் போட்டி போட உடன்பாடு அளிக்கவேண்டும்.

ஆனால், இவ்வாலோசனைகளை மறுசீராய்வுக்குழு (Reviewing Committee) ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்டது. ஆகையால், சிறிதளவு வளர்ச்சிதான் செய்யப்பட்டது.

பல அரசாங்கக் கூட்டங்கள்மூலம் குத்தகை முறையைச் சீரமைக்க முயற்சியெடுக்கப்பட்டது; நிலவுரிமையாளர்களுக்கு நிலையான உரிமை அளிக்கவும் உழவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் இச்சட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் சட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்த நிலவுரிமையாளர்களான செட்டியார்களும், ஐரோப்பிய வணிகர்களும் இவைகளைச் சட்ட சபையில் எதிர்த்ததால் இச்சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வர முடியவில்லை.

உழவர்களில்லாதவர்களுக்கு நில உடைமை மாற்றம் செய்வதைத் தடுக்க ஆளுநர் திரு. ஹெர்பெர்ட்திர்கெல் ஒய்ட் (Sir Herbert Thirkeil White) கி.பி. 1906ஆம் ஆண்டில் பெரிதும் முயன்றார். இம்முறையை நீக்காவிட்டால் ஏர்உழவர்களுக்குப் பல இன்னல்கள் தொடர்ந்து விளையும் என அஞ்சினார். அவர் பின் வருமாறு உரைத்தார் :

'படிப்படியாக ஆனால் உறுதியாக, பர்மியர்கள் நிலத்தைவிட்டு (வலிந்து பறிக்கப்பட்டு) வெளியேற்றப்படுவார்கள்; போட்டிருக்கும் திட்டத்தைக் கைவிட்டால் உழவர் அல்லாதவர்களுக்கும், இந்தியக் குடிமக்களுக்கும் நிலம் கிடைத்துவிடும். ஏற்றுமதி செய்வதற்காக மிகுந்த அளவில் அரிசி உற்பத்தி செய்யப்படும்; மிகுந்த நிலவருமானமும், சுங்கவரிகளும் சேமித்துவைக்கப்படும். ஆனால், வாழ்க்கைத் தரம் குறையும். நிலம்விட்டு நீக்கப்பட்டால் உறுதியாகப் பர்மிய இனத்தார்கள் நிலைமை மிகச் சீரழியும். இது சீர்ப்படுத்த வியலாதநிலையை அடைந்தால் கவலையும் ஏக்கமும் விஞ்சும்.' ஆனால், ஒய்ட்டிற்குபின் பதவியேற்ற திரு. ஹார்வி ஆதம்சன் (Sir Harvey Adamson)கி.பி. 1901ஆம் ஆண்டில் இத்திட்டத்தைக் கைவிட்டார்.

ஆங்கிலேய ஆட்சியினால் விளைந்த சமூக மாற்றங்கள்

சமயக்குருவின் பண்பு கெட்டதே மிகச் சிறந்த மாறுதல் எனக் கூறலாம். பர்மிய அரசர்கள் ஆட்சியின் போது மிகவும் மதிப்பு வாய்ந்தனவாகவும், கட்டுப்பாடுகட்கடங்கினவாகவும் இருந்த துறவி மடங்கள் ஆங்கிலேய ஆட்சியின் போது சமூதாயத்துக்கு மாறான தாழ்நிலையையடைந்தன.ஆங்கிலேயர்கள் ஆட்சியில் மடத்

துறவிகள்கூட நீதிமன்றம், காவல் துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததால் பர்மிய மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். பல சமயத்துறவிகள் செறிவற்றுக் கடமையிலிருந்து தவறத்தொடங்கினார்கள். மாயவித்தைகளிலும் மந்திரதந்திரங்களிலும், மற்றும் பல குருட்டுப் பழக்கவழக்கங்களிலும் சிறுதிறமாகச் செயலாற்றத் தொடங்கினார்கள். சிலர் கலகக்காரர்களைத் தூண்டிவிட்டு அரசாங்கத்திற்கெதிராகத் தலைமை தாங்கி ஊர்வலம் நடத்தினார்கள். ஒரு காலத்தில் இவர்களெல்லாரும் பர்மியச் சமூகத்தில் அறிவாளிகளாகக் கருதப்பட்டார்கள்; கல்விகற்பித்தார்கள். ஆனால், இப்பொழுது இவ்வாறு கல்வித்திட்டத்திற்கு வாய்ப்பளிக்கவில்லை. ஆங்கிலம் மூலமாகக் கல்வி பயிலப் பலர் விரும்பினார்கள். சமயச் செல்வாக்குத் தளர்ச்சியடைந்ததால் சமூகத்திற்கேற்பட்ட இழப்புக்குறைபாடுகளை நோக்கிட எல்லோரும் வருந்தினர். ஏனென்றால் புத்தமதம் ஒரு மனிதத்தன்மையுடைய, தன்னடக்கமுள்ள ஒற்றுமை உருவாக்கக்கூடிய சமுதாயப் பிணைப்பைச் செயல்படுத்தக் காரணமாயிருந்தது. இதைத் தொட்டறிய முடியாதென்றாலும், இது மிகவும் இன்றியமையாதது.

பண்பாடு சீரழிந்ததும் வருந்தத்தக்கது. இலக்கியம், இசை, நாட்டியம், சிற்பவேலை, சமயவளர்ச்சி, மற்றும்பல பர்மியப்பண்பாடுகளைப் புலப்படுத்தும் கலைகளைப் பர்மிய அவைதான் வளர்த்துப் பாதுகாத்துவந்தது. மன்னரும், மன்னர் அவையும் மறைந்ததால் பர்மியப்பண்பாடு தழைத்தோங்க வாய்ப்பின்றிக் கீழ்நிலையை அடைந்தது.

இவ்வகையான நெறிபிறழ்வுச் சூழ்நிலை நிலவியதால் பர்மா முழுவதும் சட்டமில்லாத குழப்பச் சூழ்நிலையேற்பட்டது. வேலை கிடைக்காத இளைஞர்கள் கொள்ளைக்காரர்களாக மாறினார்கள். கையூட்டு, ஊழல் ஆகியவை நிறைந்த காவல்துறை குற்றம் செய்ய உதவிபுரிந்து துணைநின்றது. தண்டனைகளளித்த போதிலும் சூழ்நிலையை மாற்றமுடியவில்லை. கி.பி. 1913–14ல் 221 கிராமங்கள் மேல் அபராதங்கள் விதிக்கப்பட்டன. தங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லை என்ற காரணத்தால் 637 கிராமத் தலைவர்கள்மேல் அபராதம் விதிக்கப்பட்டது. சில பர்மியர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயர் அரசாங்கப் பதவிகளும், வாணிபம் செய்ய வாய்ப்பும் அளிக்கப்படவில்லை; சமூகஏணியில் மேலே ஏறாமல் தரைமட்டத்தை நோக்கிச் சென்றார்கள் பர்மியப் பொதுமக்கள். இக்காரணத்தால் ஆங்கிலேய ஆட்சியைப் பர்மியர்கள் வெறுத்தார்கள்.

சமூக அமைப்பிலே பிளவுசெய்து ஊடுருவிச் சென்று பர்மா விற்கு வந்து குடியேறிய இந்தியர்களாலும் பர்மியர்களுக்கு நியாய மாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இந்தி யர்கள் பர்மாவில் குடியேறிச் சிறு பட்டணங்களில் பல தொழில் களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். உதாரணமாக மருத்துவர் களாகவும், பணியாளர்களாகவும், அஞ்சல் தந்தி நிலையங்களிலும் இவர்கள் மிகுதியாக இருந்தார்கள். வணிகர்களாகவும், தொழில் தலைவர்களாகவும், முதலாளிகளாகவும் செழித்தோங்கினார்கள். பர்மியர்களைவிட இந்தியர்களைக் குறைந்த ஊதியத்திற்குப் பெற முடிந்ததால் ஆங்கிலேயர்கள் இந்தியர்களைத் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்தினார்கள். மேலும் பர்மியர்களைக் கட்டுப்படுத்து வதைவிட இந்தியர்களை ஆங்கிலேயர்களால் எளிதில் கட்டுபடுத்த முடிந்தது. ஆகையால், பணம் சேமிக்கவும், தங்கள் வசதிகளை எளிதில் பெறவும் ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு ஆங்கி லேயர்கள் வேலை கொடுத்தார்கள்; பர்மியர்களுக்கு வேலை தர வில்லை; சிறுசிறுவாணிகத்தில் சீனர்கள் இந்தியர்களுடன் பட்டணங் களில் போட்டியிட்டனர்; நாட்டுப் புறத்திலிருந்த ஆங்கிலேய வணிகர்களுக்கும் பர்மிய உழவர்களுக்குமிடையே இடையீட்டாளர் களாவும் பணிபுரிந்தார்கள். பட்டணங்களில் பர்மியர்கள் அச்சுத் தொழிற்சாலைகள் நடத்துவதில்தான் வெற்றிகண்டனர். நாட்டுப் புறங்களில் அவர்களால் வேளாண்மைதான் செய்ய முடிந்தது.

பர்மியர்களின் பிற்போக்கான சூழ்நிலையைக் கல்வி வாய்ப் பேற்படுத்தி நீக்க வேண்டும் என அரசாங்கம் திட்டம் வகுத்தது. அதாவது அரசாங்கம் ஆங்கிலேயக் கல்விமுறையைத்தான் நடை முறையில் கொண்டுவர நினைத்தது. ஆங்கிலமொழி தெரிந்திருந்த தால்தான் இந்தியர்களுக்கு மேற்பட்ட பதவிகள் கிடைத்தன. ஆகையால் ஆங்கிலமொழி பயின்றால் பர்மியர்களுக்கும் அரசாங்கப் பதவிகள் அளிக்க அரசாங்கம் தயாராக இருந்தது. மேலும் வாணிபம் செழித்தோங்கி வளர்ச்சியடைந்து வந்ததால் ஆங்கிலம் பயின்ற அலுவலர்களின் தேவை மிகுந்தது. கி.பி. 1870ஆம் ஆண்டிலிருந்து பணியாளர்களின் தேவை மிகுதியாயிருந்ததால் பல பர்மியக் குழந்தைகள் இவ் வேலைகளில் சேரும் நோக்கத்துடன் ஆங்கில மொழிப் பள்ளிகளில் படிக்கத் தொடங்கினார்கள் என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

12. பர்மிய நாட்டுரிமை இயக்கம்

மற்றக் குடியேற்ற நாடுகளிலிருந்த நாட்டுரிமை இயக்கம்போல பர்மிய நாட்டுரிமை இயக்கமும் ஐரோப்பியர்களின் ஆட்சியை

எதிர்க்கும் நோக்கத்துடன்தான் தோன்றியது. ஐரோப்பியக் கல்வி முறை பர்மியர்களிடையே அரசியல் விழிப்பை உருவாக்கி நாட்டுப் பற்றைத் தட்டியெழுப்பியது. நாட்டுரிமை இயக்கத்தின் தொடக்கத்தில் புத்தசமயக் குருமார் தொகுதியும் (Clergy) நாட்டு விடுதலையுரிமை உணர்ச்சியைத் தூண்டிவிடுவதில் மிகச்சிறந்த பங்கெடுத்துக்கொண்டது. ஆங்கிலேயர்களை எதிர்க்கும் மனப் பான்மையும் உணர்ச்சியும் மறையாமல் தொடர்ந்து நீடித்திருந்தன. அரசாங்கத் துறைகளில் இந்தியர்களுக்கு மிகுந்த வேலைகள் அளிக்கப்பட்டதாலும், ஆங்கிலேயர்களுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் வாணிபத்துறைகளைக் கவர்ந்துகொண்டதாலும் இந்தியர்களை வெறுத்து எதிர்க்கும் உணர்ச்சி பர்மா முழுவதும் பரவியிருந்தது.

பர்மிய நாட்டுரிமை இயக்கம் இருபதாம் நூற்றுண்டில் தோன்றியபோதும் ஆங்கிலேயர் கி.பி. 1886ஆம் ஆண்டில் பர்மாவை இந்தியாவின் ஒரு பெரும் பிரிவாக (மாகாணமாக Province) மாற்றியவுடன் மிகக்கடுமையான எதிர்ப்பு பர்மிய ரிடையே உருவாகியது. கொரில்லாப் போர்முறைமூலம் பர்மியர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர்; புத்தசமயக் குருமார்கள்கூடத் தம்மால் இயன்றவளவு கலகம் செய்தார்கள். சினமுற்ற ஆங்கி லேயர்கள் ஆயிரக்கணக்கான பர்மியர்களைத் தூக்கிலிட்டார்கள். பர்மியர்களின் கலகத்தையும், கிளர்ச்சியையும் அடக்குவதற்காக 30,000 நிலைப்போர்ப்படையையும், 30,000 படைத்துறைக் காவலர்களையும் ஆங்கிலேயர்கள் பயன்படுத்த வேண்டிய நிலையேற்பட்டது.

கி.பி. 1887ஆம் ஆண்டு முதல் கி.பி. 1890ஆம் ஆண்டுவரை திரு. சார்லெஸ் கிராஸ்த்வெய்ட் (Sir Charles Croshthwaite) பர்மாவின் தலைமை ஆணையராகப் (Chief Commissioner) பணி புரிந்தார். இவர் இரக்கமின்றிக் கொடுமையாக ஆட்சிபுரிந்தார். நாட்டுப்புற மக்களை அடைக்கலம் புகச்செய்வதற்காகப் பல அச்ச மூட்டும் திட்டங்களைச் செயல்படுத்தினர். கொரில்லாப் போர் வீரர்களுக்குப் பரிவுகாட்டுகின்றன என்று ஐயமுற்ற சிற்றூர்கள் கருணையில்லாமல் எரிக்கப்பட்டன. மீண்டும் இச்சிற்றூர்கள் புதுப்பிக்கப்படவில்லை. பொறுக்கியெடுத்துச் சில குடும்பங்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டன. யாராவது ஒரு பர்மியர் போர்க் கருவிகளை எடுத்துச் செல்கிறார் என ஐயம் எழும்போது அங்கேயே அவர் கழுவிலேற்றப்பட்டார். ஆங்கிலேயர்களுடன் புரிந்த போர்களிலே பல ஆயிரக்கணக்கான பர்மியர்கள் இறந்தார்கள்; கைப்பற்றப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர். இவ்வகையான

பர்மியப்போர் கி.பி. 1886ஆம் ஆண்டிலிருந்து 1890ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் நடந்தது. இறுதியாகப் பர்மியக் கலகம் அடக்கப்பட்டுத் தோல்வியடைந்தது. பர்மியர்கள் தூக்கிலிடப்பட்ட இடங்களில் சிறுபுத்த விகாரங்களை மக்கள் கட்டினார்கள். கிராஸ்த்வெய்ட்டின் அடக்குமுறை ஆட்சியினால் ஆங்கிலேயர்களைத் திறமையுடன் எதிர்க்கும் நாட்டுத் தலைவர்கள் மறைந்தார்கள். ஆகையால், ஆங்கிலேயர்களால் கி.பி. 1890ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டுவரை அமைதியை நிலைநாட்ட முடிந்தது.

பர்மியர்கள், தங்கள் நாடு இழிநிலையடைந்ததற்கு ஆங்கிலேய அரசாங்கம்தான் காரணம் என வெறுப்படைந்தார்கள். வேலையே கிடைக்காது என நம்பிக்கையற்ற நிலையிலிருந்த இளைஞர்கள் வேலைகிடைப்பதற்காகத் தளர்கால்சராய் (trousers) அணிந்து கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. [சாதாரணமாகப் பர்மியர்கள் கோடுகளிட்ட அங்கியும் (Sarong), கைப்பகுதியுள்ள புறச்சட்டையும் (Jacket) அணிவார்கள்] உதாரணமாக, பர்மிய வரலாற்றாசிரியர் மாங்தின் ஆங் பின்வருமாறு கூறுகிறார்:

'கிறித்தவப் பள்ளிகளுக்குச் செல்லும் பர்மியச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் ஐந்துகட்டளைகளைவிட (புத்தரின் ஐந்து கட்டளைகள் Five precepts) மோசேயினால் கொடுக்கப்பட்ட பத்துக்கட்டளைகளைப்பற்றி (Ten Commandments) மிகுதியாகத் தெரியும். அவர்கள் கிறித்தவர்களாக மாறவில்லையென்றாலும் பர்மியச் சமூக அமைப்பில் பொருந்தவில்லை.'

ஆசிரியர்கள் படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களாக மாறியதால் மாணவர்களுடைய அன்பையும், மதிப்பையும் இழந்தார்கள். ஆகையால் பிற்காலத்தில் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிப்பு நிறுத்தமும், ஊர்க்கட்டும் (Strikes boycott) ஏற்பட்டன. ஓர் ஆங்கிலேய அதிகாரியின் அலுவலக அறையில் நுழைந்தவுடன் தாழ்ந்த படியிலுள்ள பர்மியப்படைத் துறையைச் சாராத அரசு அலுவலர்கள் (Junior civil servants) தங்களுடைய மிதியடிகளைக் கழற்றி விடவேண்டும். ஆனால், இளம் பர்மிய மாவழக்கறிஞர்கள் தங்களுடைய மிதியடிகளைக் கழற்றாமல் அலுவலக அறையில் நுழைந்தால் ஆங்கிலேய அதிகாரிகள் கண்டனம் தெரிவிக்க முடியாது. ஆகையால இந்நடத்தையைப் 'பர்மிய மாவழக்குரைஞர்கள் ஆட்சி' (Burmese barristocracy) என ஓர் ஆங்கிலேய அதிகாரி வருணித்தார். வழக்குரைஞர்கள் அரசாங்கப் பணித்துறையில் பணிபுரியாமலிருந்ததால், அவர்கள்

ஆங்கிலேய அதிகாரிகளுக்கு ஒப்பாகக் கருதப்பட்டார்கள். இக் காரணத்தால் சட்டப்படிப்பின் மதிப்பு மிகுந்தது.

பொதுவாகப் புதிதாக உருவாகிய சமுதாய அமைப்பில் ஆங்கிலேய அதிகாரிகள் உயர்படியிலிருந்தார்கள்; பர்மிய அதிகாரிகள் நடுத்தர வகுப்பினர்களாக இருந்தார்கள்; கிராம மக்கள் கீழ்ப்படியிலிருந்தார்கள். பர்மிய அதிகாரிகள்கீழ்ப் பணி யாளர்களாகப் பணிபுரிந்த போதிலும், அவர்களுக்குப் பொதுவாக நல்ல ஊதியம் கிடைத்தது. ஆகையால், அவர்கள் தங்கள் குழந் தைகளை இரங்கூனிலிருந்த சிறந்த பள்ளிகளுக்கோ, கல்கத்தாப் பல்கலைக்கழகத்திற்கோ, இலண்டனிலிருந்த வழக்குரைஞர் நுழைவு இசைவுதருந் தனியுரிமையுடைய நாற்பெருஞ் சங்கங்களுக்குரிய கட்டடத்திற்கோ (The inns of court in London) கல்வி பயிலு வதற்காக அனுப்பினர். படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களாகச் சேரப் பெரும்பான்மையான பர்மிய இளைஞர்கள் முயன்றார்கள். கிராமத்தலைவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் இழந்து ஆங்கிலேயர்களின் கைப்பாவைகளாக மாறினார்கள்.

பொருளாதார அமைப்பும் மனநிறைவளிக்காததால் பர்மியர் கள் ஆங்கிலேயர்களை வெறுத்தனர். பெயரளவில் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையே மிகுதியாக இருந்த வாணிகச் சமநிலை (balance of trade) பர்மாவிற்குத் துணையாயிருந்தது. ஆனால், வாணிபத்தின்மூலம் வரும் மிகுந்த பயன் பர்மியர்களின் உரிமையாக வில்லை. ஆங்கிலேய வாணிபக் கம்பெனிகளின் செல்வத்தைத் தான் அது மிகுவித்தது. மேலும் அயல் நாடுகள் நாணய மாற்றினையும் (Foreign exchange) பண அனுப்பீட்டையும் (remittance) வரையறுக்கவில்லை; மிகுந்த பயன்கள் யாவும் (வெளிநாட்டுக்குச் சென்ற) பண அனுப்பீடாகவும், ஆங்கிலேய இந்தியப் படைவீரர்களின் ஊதியமாகவும், ஆங்கிலேய அதிகாரி களின் கீழ்ப்படியிலிருந்த இந்தியப் பணியாளர்களின் ஊதிய மாகவும் செலவழிக்கப்பட்டன. இந்திய ஆங்கிலேய அரசாங்க அலுவலர்களின் ஊதியமும் பண அனுப்பீடாக இந்தியாவிற்கோ, இங்கிலாந்திற்கோ அனுப்பப்பட்டது. ஆகையால், பர்மாவின் பொருளாதார வளர்ச்சி உண்மையில் பொருளாதாரச் சுரண்ட லாகவும், ஆங்கிலேய-இந்தியர்களின் தன்னலத் தோட்டமாக வும் மாறியது. மேலும், அரசாங்கத்தின் வேலையில்லாக் கிராம

மக்களின் கொள்கை கவலைமூட்டியது. சிற்றூரில் வாழும் ஒருவனுக்கு 'வெளிப்படையாகப் பிழைப்பதற்கு வசதியில்லை' யென்றால் (No ostensible means of livelihood) அரசாங்கம் சட்டப்படி அவரைக் கைதுசெய்து தண்டலாளர் முன் வழக்கிட்டுச் சிறையிலடைக்கலாம். இடம்பெயர்ந்த வேலையில்லாக் குடியானவர்களுக்கு உண்மையில் தேவையானது சமூகநலமும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்களும் (Social legislation) ஆகும். ஆனால், பொதுமக்கள் நலனை வளரச்செய்யும் திட்டங்களைச் செயல்படுத்த அரசாங்கத்திற்கு நிதி தேவையாயிருந்தது. சுங்கவரி, தனியார்கள் வரி, சுரங்கப் பொருள், பெட்ரோல் மற்றத் தனிச் சிறப்புரிமைகள் ஆகியவற்றின் மூலமாக அரசாங்கத்திற்கு மிகுந்த அளவில் வருமானம் வந்தபோதிலும் செலவினத்திற்குக் குறைந்த வரவின் நிலையே இருந்தது. ஏனென்றால், மூன்றாவது பர்மியர்-ஆங்கிலேயப் போரின் செலவை ஆண்டுத் தவணையில் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியதாயிருந்தது; பர்மியக் கொரில்லாப்போர் வீரர்களுக்கு எதிராகப் புரிந்த போருக்காகவும், பர்மாவிலிருந்த ஆங்கிலேய இந்தியக் கோட்டைக் காவற்படைகளுக்காகவும், படைத்துறையைச் சாராத உயர்பதவியிலிருந்த ஆங்கிலேய அதிகாரிகளுக்காக அளித்த உயர்ந்த ஊதியத்திற்காகவும் பணம் செலவழிக்க வேண்டியதாயிருந்தது. பொதுவாகச், சமூகத்திலிருந்த தங்கள் வாணிகத்தை வலிந்து கவர்வதைப் பர்மியர்கள் இழந்தார்கள். பர்மிய இந்திய நிலவுடைமையாளர் இந்திய வட்டித் தொழிலாளர்களின் சுரண்டுதலையும், வேலைகளுக்காக இந்தியர்களுடன் போட்டியிடவேண்டியதாயிருந்த சூழ்நிலையையும் பர்மியர்கள் வெறுத்தார்கள்; கடுஞ்சினத்தோடு எதிர்ப்பும் தெரிவித்தார்கள்.

இவ்வகையான ஆங்கிலேய எதிர்ப்புணர்ச்சிகள் பர்மியப் பண்பாட்டுச் சங்கங்களை அமைத்துப் பர்மிய வழிமரபுப் பண்புகளுக்கு உயிர்கொடுக்கப் பர்மியர்களைத் தூண்டின.

இவ்வகையான முயற்சிகள் எடுத்த இயக்கங்கள்

(அ) துறவுக் குழுவைச் சாராத புத்தசமய முறைக் கொள்கை இயக்கம் (Buddhist Lay School Movement).

(ஆ) புத்தசமய இளைஞர்கள் சங்கம் (Young Men's Buddhist Association—YMBA). இனி இது இளைஞர்கள் சங்கம் என அழைக்கப்படும்.

(இ) பர்மா ஆராய்ச்சிச் சமுதாய அமைப்பு (The Burma Research Society).

'கல்விப் பயிற்சிபெற்ற ஒரு பர்மிய இளைஞர்குழு துறவுக் குழுவைச் சாராத புத்த சமய முறைக் கொள்கை இயக்கத்தைத் தொடங்கியது. புத்தரின் கோட்பாடுகளுடன் மேலைநாட்டுக் கல்வி முறையை இணைக்க இவ்வியக்கம் முயன்றது புத்தசமயக் கோட்பாடுகளை அறிவுறுத்தினால் பர்மிய இளைஞர்களிடையே நாட்டுப் பற்றை உருவாக்கலாம்; பர்மியப் பண்பாடுகளையும், வழிவழி மரபுகளையும் பற்றி அறிந்துகொள்ளத் தூண்டிவிடலாம். மேலைநாட்டு அரசியல் அமைப்பின் உண்மையையும் விளக்கிக்கூறினால் பர்மாவில் புதியதாக உருவாகிய சூழ்நிலைக்கேற்றவாறு பர்மிய இளைஞர்கள் தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்' என்பவைகளே இவ் வியக்கத்தின் நோக்கங்கள் இலங்கையில் இச்சமயத்தில் பர்மிய சமயத்தைப் பின்பற்றியவர்கள் போர்த்துகீசியர்களால் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால், பர்மாவிலே எச்சமயத்தைப் பின் பற்றவும் முழுமையான உரிமை அளிக்கப்பட்டிருந்தது. படித்துப் பட்டம் பெற்ற பர்மிய இளைஞர்களிடையே சிகரெட்டு, புகையிலை, சாராயம் பருகுதல் ஆகிய பழக்கங்களை ஒழிக்கும் நோக்கத்துடன் இரங்கூன் கல்லூரி மாணவர்களும் அரசாங்க உயர்பள்ளி மாணவர்களும் இளைஞர் மட்டுநடைச் சங்கத்தை (Young Men's Temperance League) அமைத்தார்கள். கூடிய விரைவிலேயே இச்சங்கத்தின் கிளைகள் பர்மா முழுவதும் தோன்றலாயின. இச் சங்கங்களை அடிப்படையாகப் பயன்படுத்தி இளம்பெரு வழக்குரைஞர்களைக் கொண்ட புத்திளைஞர்களின் புத்தசமய சங்கத்தை (YMBA—இனி இஃது இளைஞர்கள் சங்கம் என அழைக்கப்படும்) 1906ஆம் ஆண்டில் நிறுவினார்கள். அரசியலில் பங்குகொடுக்க வேண்டுமென்பது இளைஞர்கள் சங்கத்தின் நோக்கம் அன்று. புத்தசமயம், நன்னடத்தை இயல்பு ஆகியவற்றைப் பரப்புவதே இதன் நோக்கம் ஆகும். இச் சங்கத்தினால் தங்களுக்கு ஆபத்துவரும் என ஆங்கிலேய அரசாங்கம் கருதவில்லை. இச் சங்கம் நாடுமுழுவதும் புத்தசமயப் பள்ளிகளை நிறுவியது. இப் பள்ளிகளுக்கு அரசாங்கம் 50 விழுக்காடு பொருளுதவி செய்தது. பொதுமக்கள் 50 விழுக்காடு நன்கொடை அளித்தனர். அரசாங்கம் கிறித்தவப் பள்ளிகளுக்குப் பொருளுதவியளித்ததால் புத்தசமயப் பள்ளிகளுக்கும் பொருளுதவியளிக்க மறுக்கவில்லை. இப் புத்தசமயப் பள்ளிகளில் புத்தசமயத் திருமறை நூல்கள் நாள்தோறும் கற்பிக்கப்பட்டன. கிறித்தவப் பள்ளிகளில் நாள்தோறும் கிறித்தவத் திருமறை (Bible) கற்றுத்தரப் பட்டது.

இளைஞர்கள் சங்கத்தை அமைத்த தலைவர்களுக்குள் முதன்மையானவர்கள் இங்கிலாந்தில் கல்விபயின்ற யூ மே ஔங்

(U May Oung), யூ கின் (U Kin), யூ பாபே (U Bape), திரு. மாங் கியி (Sir Maung Gyi) ஆகியோர் ஆவர். இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டுப் பர்மாவில் வந்து தங்கியிருந்த இந்திய அரசியல் வாதிகளுடன் இளைஞர்கள் சங்கத்தலைவர்கள் தொடர்புகொண் டார்கள். இதன் பயனாக இத் தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட பர்மியப் படைத்துறையைச் சாராத அரசு அலுவலர்கள் தங்கள் சங்கத்தின் வாயிலாகத் தங்களுக்கும் பதவியுயர்வு அளித்து ஆங்கிலேய உயர்அதிகாரிகளுக்கு ஒப்பாக நடத்தவேண்டும் என விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனால் முதல் உலகப் பெரும் போர் தொடங்கியதால் இதற்கு ஒருமுடிவும் எடுக்கப்படவில்லை.

1907ஆம் ஆண்டில் எம். டூரோ செல்லியின் (M. Duroiselle) உதவியுடன் யூ மே ஔங்கும், ஜே. எஸ். பர்னிவெல்லும் (J. S. Furnivall) பர்மா ஆராய்ச்சிச் சமுதாய அமைப்பை நிறுவினார்கள். ஆளுநர் ஒய்ட் (Governor White) அவர்களே இதன் புரவலராக (patron) இருந்தார். பர்மியப் பண்பாடுகளைப்பற்றிப் பயில்வதும், பர்மாவையும் பர்மியர்களைப்பற்றிய விவரங்களையும் ஆராய்ச்சி செய்வதுமே இதன் நோக்கம். இவ்வமைப்பிற்கு மக்களின் பேரா தரவு கிடைக்கவில்லை. சிறுபான்மையரான படித்துப் பட்டம்பெற்ற பர்மியர்களும் பர்மாவின்மேல் வெளிப்படையாகப் பரிவுகாட்டிய சில ஆங்கிலேய அதிகாரிகளும் இதை ஆதரித்தார்கள். ஆனால், அரசியல் விழிப்புணர்ச்சியைத் தட்டியெழுப்புவதில் இது சிறந்த பங்கைப் பெற்றது.

இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் பர்மிய இனங்களைப் பிரித்து ஆட்சிபுரிவதில் ஈடுபட்டிருந்தார்கள். பர்மாவிலுள்ள மலைச்சாதி இனத்தாரைப் பர்மியரிடமிருந்து பிரித்தார்கள்; அரசாங்கத் திற்குக் கிறித்தவ சமயப் பரப்பாளர்களும் உதவி புரிந்தார்கள். சிறுபான்மையரான மலைச்சாதியினர் கிறித்தவ மதத்தைத் தழுவி னார்கள். புத்தரைப் பற்றித் தவறான கதைகளைப் புனைந்தும், பர்மியர்களை இழிவுபடுத்தக்கூடிய செய்திகளைப் பரப்பியும் கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் தங்கள் கடமைகளைப் புரிந்துவந்தார்கள்.

ஷான்களுக்கும், பர்மன்களுக்கும் ஆங்கிலேயர்கள் படைப் பயிற்சியளிக்கவில்லை. ஆனால், சின், கச்சீன், காரேன் முதலிய இனத்தார்களுக்குப் படைப்பயிற்சியளித்தார்கள். மலைச்சாதி இனத் தார்கள் எவரும் 'மன்னர் சிறப்புப் பணிப்படையின்' (Kings Commission) படைவீரர்களாகச் சேர்க்கப்படவில்லை.

பர்மியர்கள் முனைந்து கேட்குமுன்னே, இச் சூழ்நிலையில் பர்மாவின் அரசியல் சட்டதிட்டத்திலே மாறுதல்கள் ஏற்படுத்த

இந்தியாவின் பதில் ஆளுநர் (Viceroy) முயன்றுர். இதனுல், ஊக்குவிக்கப்பட்ட பர்மியர்கள் புரட்சிகரமான அரசியல் சட்ட திட்ட மாறுதல்களே விரும்பி விண்ணப்பம் செய்தார்கள். பர்மாவை வருத்திய அரசியல் முன்னேற்றங்கள் பொதுவாக இந்தியாவி லிருந்து கிளம்பின; இந்தியாவிலிருந்து செயல்படுத்தப்பட்டன. ஆங்கிலேய அரசியல் அதிகாரிகள், பர்மா இந்தியாவின் ஒரு பகுதி எனக் கருதியதால் இந்திய நிருவாகம் பற்றிச் செயல்படுத்தும் திட்டங்கள் பர்மாவுக்கும் பொருந்தும் எனக் கருதினுர்கள்.

மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் (கி.பி. 1909)

உள்நாட்டமைப்பில் சில மாறுதல்கள் தேவை என இந்தியர்கள் வலியுறுத்தியதால் கி.பி. 1909ஆம் ஆண்டில் மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. இச் சீர் திருத்தங்களேப் பர்மாவிலும் செயல்படுத்தவேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கி.பி. 1909ஆம் ஆண்டுச் சட்டத்தின் மிகச் சிறப்பு, சட்டசபையின் அதிகாரத்தையும் உறுப்பினர் களேயும் மிகுதியாக்கி மாற்றியமைப்பது ஆகும். ஆகையால் இந்தியாவிலும் பர்மாவிலும் பிரதிநிதிகளடங்கிய அரசாங்கம் அறிமுகப்படுத்தப்பட்டது; ஆனுல், இது முழு மக்களாட்சிச் சட்ட சபையை அமைக்கவில்லே. பர்மியச் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்டனர்; இப் பிரதிநிதிகளில் நான்குபேர்கள் பர்மியர்கள்; சட்டசபையின் உறுப்பினர்கள்; தங் கள் சாதிக்குரிய பிரிவின் பிரதிநிதிகள் மன்ற வரவுசெலவுத் திட்டப் பட்டியலேப்பற்றி விவாதிக்கவும், மன்றத் தீர்மானங்களே நிறை வேற்றவும் இச் சபைக்கு உரிமையளிக்கப்பட்டது. இம் மன்றத் தலேவரே நாட்டின் முதல்வர் (Head of State). இம்மன்றம் நிறை வேற்றும் தீர்மானங்களின்மேல் இவர் மறுப்பு ஆணையைச் (Veto) செலுத்தலாம். அரசாங்கத்திற்கு ஆலோசனே யளிக்கும் உரிமை இம் மன்றத்திற்கு அளிக்கப்பட்டது. ஆனுல், அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயமில்லே. மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் பர்மாவிற்கு ஏற்றவையாக இல்லே என்றும், பர்மியர்கள் இதைத் தாங்களாகவே கேட்கவில்லே யென்றும் பர்மாவின் ஆளுநரான சர் ஹெர்பெர்ட் திர்கெல் ஒய்ட் (Sir Herbert Thirkell White) அறிவித்தார். 'பர்மாவிலிருந்த ஒருவருக்கும் இதனுல் பயனில்லே. இதன் பயனுகப் பணமும் நேரமும் வீணுக்கப் பட்டது' எனக் கூறினுர். திறமைவாய்ந்த பர்மியர்களுக்குப் பதவி உயர்வும், ஊக்கமும் அளித்து நிருவாகத்தை வலுப்படுத்த வேண்டியதுதான் அரசாங்கத்தின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும் என மேலும் அவர் வலியுறுத்தினுர்.

1915–18ஆம் ஆண்டுகளில் முதல் உலகப்போரின் காரணமாக வேளாண்மையில் இன்னல்கள், பொருளாதார வேற்றுமைக் கொள்கைகள், பல்துறை இழப்புகள் ஆகியன நேர்ந்தன. போதிய கப்பல்களில்லாததால் தேவைக்கு மிகுதியான அரிசியை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. திடீரென்று குடியானவர்கள் கைவிடப்பட்டார்கள். வட்டித்தொழிலர்கள் தாம் கொடுத்த கடன்களை அடைக்கும்படி வற்புறுத்தினார்கள். மேலும் தேவையான கடன்களை ஏழைக் குடியானவர்களுக்கு அளிக்க வேறுயாரும் முன் வரவில்லை. வேளாண்மையின் உயிர்நாடியாயிருந்த கீழைப்பர்மா மக்கள் மிகவும் துன்புற்றனர். நெல் விலை 100 கூடைகளுக்கு 120 ரூபாயாக இருந்ததிலிருந்து 80 ரூபாயாகக் கி.பி. 1917ஆம் ஆண்டில் குறைந்தது; மற்றப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. மிகவும் மனக்கசப்படைந்த மக்களின் உணர்ச்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக எழும்பின.

முதல் உலகப்போரின்போது பர்மியக் கூலியாள்கள் படைகளில் சேர்க்கப்பட்டு மெஸபொடோமியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்; ஆனால், பர்மியர்களுக்குப் படைத்தலைவர்கள் பதவியளிக்கப்படவில்லை யாதலால் மக்களிடையே மனக்கசப்பு மிகுந்தது. கி.பி. 1917ஆம் ஆண்டில் சில பர்மியர்களுக்கும், இந்தியர்களுக்கும் படைத்தலைவர்கள் பதவி (Commission) அளிக்கப்பட்டது. பர்மியர்களுக்கு மனநிறைவு உண்டாகியது. உலகப்போருக்குப் பின் யூதின்தட் (Utintut) என்பவர் படைத்துறையைச் சாராத அரசாங்க உயர்படி அலுவலராக (I.C.S.) நியமிக்கப்பட்டார். படையிலிருந்து வெளியேற்றப்பட்ட பர்மியர்கள் படைப் பயிற்சியளிக்கவேண்டும் எனக் கிளர்ச்சி செய்தார்கள். ஆகையால், அரசாங்கம் ஆங்கிலேய அதிகாரிகளின்கீழ்ப் பர்மா உள்நாட்டுப் பாதுகாப்புப் படை (Burma Territorial Army) ஒன்றை அமைத்தது. திட்டப்படி இப் படையில் நான்கு படைவகுப்பணிகள்தாம் அமைக்கப்பட்டன. இவற்றில் ஒன்று ஷான்படை வகுப்பணி; மற்றொன்று பர்மியர்படை வகுப்பணி. பணியாளர்களும், கீழ்ப் படியிலிருந்த படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களும் தாம் இப் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இரண்டு வாரத் தொடக்கப்பயிற்சி மட்டுமே அளிக்கப்பட்டது.

உலகப்போரின் சூழ்நிலையில் பர்மிய நாட்டுரிமை இயக்கம் படிப்படியாக அரசியல் சார்பாக நடவடிக்கைகளெடுக்கத் தொடங்கியது. சிறப்பாக அமெரிக்கக் குடியரசு தலைவர் வில்சன் உலக அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பதினான்கு நோக்கங்களை (Fourteen points) அறிவித்தவுடன், இதன் எதிரொலி பர்மா

விலும் கேட்டது. இரண்டாவதாகப் பர்மிய நாட்டுரிமை இயக்கத்தை மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கமும், அறப்போரும் படித்துப் பட்டம் பெற்ற பர்மியர்களைக் கவர்ந்தன. ஆனால், இந்தியர்களின் மேலுள்ள கசப்பால் இந்திய நாட்டுரிமை இயக்கத்தின் முறைகளைப் பர்மா நேரடியாகப் பின்பற்றவில்லை. ஆனாலும், சட்டசபையைவிட்டு வெளியேறுதல் (Walk-outs), ஊர்க்கட்டு (boycott), வேலைநிறுத்தம் போன்ற பலமுறைகள் மூலம் ஆங்கிலேயர்களின் கவனத்தை ஈர்க்கலாம் என இந்திய நாட்டுரிமை இயக்கம் காண்பித்ததைப் பர்மா கற்றுக்கொண்டது. பிற்காலத்தில் வாய்ப்பேற்பட்ட சமயங்களில் இம் முறைகளைப் பர்மாவும் பின்பற்றியது. ஆனால், இம் முறைகளில் பர்மியத் தனி ஒருமைகளையும் பார்க்க முடிந்தது.

பர்மியப் புத்தவிகாரங்களுக்குள் ஆங்கிலேயர்கள் மிதியடி யணிந்துகொண்டு செல்லுவது வழக்கமாக நடந்துவந்தது. இச் செய்கை பர்மியர்களின் சினத்தைத் தூண்டியபோதிலும் அவர்கள் பலகாலம் ஒருசேரக்கலந்து இதை எதிர்க்க முன்வரவில்லை. ஆனால், 1916—17ஆம் ஆண்டுகளில் யூ தியின் மாங் (U Thein Maung) இதை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்து மக்களின் நாட்டு உணர்ச்சியைக் கிளப்பினார். இவருக்கு இளைஞர்கள் சங்கம் (Y.M.B.A.) பேராதரவு அளித்தது. கி.பி. 1918ஆம் ஆண்டு இக் கிளர்ச்சி குழப்பச் சூழ்நிலையை அடைந்தது. புத்தவிகாரங்கள் பற்றிய சட்டங்களை ஒவ்வொரு புத்தவிகாரத் தலைவர் பொங்யீயும் (Pongyi—புத்தத் துறவி) தம் விருப்பம்போல அமைத்துச் செயல்படுத்தலாம் என அரசாங்கம் அறிவித்தது. ஆகையால், புத்தவிகாரத் தலைவர் 'பொங்யீகளின்' சட்டத்தை அரசாங்கமே செயல்படுத்தவேண்டும் எனக் கி.பி. 1919ஆம் ஆண்டில் புத்தசமயச் சங்கங்கள் அரசாங்கத்திடம் முறையிட்டன. 'மிதியடி அணியாதே என்னும் கிளர்ச்சி' எல்லா இளைஞர் சங்கங்களையும் ஒருங்கு இணைத்தது. இது ஒரு சமயக்கிளர்ச்சி யென்றாலும் இரங்கூனில் இது ஆங்கி லேயர்களை எதிர்க்கும் கிளர்ச்சியாக மாறியது. தங்கள் விருப்பம் போல் தங்களை ஆளும் ஆங்கிலேயர்கள் நடந்துகொள்ள முடியாது என வெளிப்படையாகக் கிளர்ச்சிசெய்து தெரிவிக்கப் பர்மியர் களுக்குக் கிடைத்த முதல்வாய்ப்பு இதுவேயாகும்.

ஆனால் முதல் உலகப்போர் முடிந்தபிறகுதான் பர்மியர்களின் ஆங்கிலேய எதிர்ப்புக்கிளர்ச்சி அரசியல் வடிவமுறையுடன் தோன்றியது. ஒரு குடும்பம் 5 ரூபாய் வரிசெலுத்தவேண்டும் என ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய சட்டத்தையும் மேலைப் பர்மாவில் செயல்முறையிலிருந்த வேளாண்மையைத்தவிர மற்றப்

பொருள்களின்மேல் விதித்த தாத்தமதோ வரியையும் பர்மியர்கள் எதிர்த்தார்கள். கி.பி. 1916–1918ஆம் ஆண்டுகளில் இவ்வரிகளை வசூலிப்பது கடினமாயிருந்தது; 1920ஆம் ஆண்டில் அரசியல் புரட்சியின் சிறந்த பகுதியாக விளங்கியது. பர்மியர்களை எதிர்த்து அவமானப்படுத்துபவர்கள் எனக் காவலர்கள் வெறுக்கப் பட்டார்கள். நீதிமன்றங்களின் மேல் மக்கள் நம்பிக்கை யில்லாம லிருந்தார்கள். ஆகையால் அரசாங்கத்திற்கும் மக்களுக்கு மிடையே பிரிவுசெய்யும் இரும்புத்திரை உருவாகியது. ஆங்கி லேயர்களின் போலி உயர்வு தாழ்வு வேறுபாடும், போலி ஒய்யார நடையும் தங்களை அவமானப்படுத்துவதாகப் பர்மியக் கல்லூரி மாணவர்கள் கருதி வெறுத்தார்கள்.

மான்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (1917-1918)

மான்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின்படி இந்தியா விற்குப் பொறுப்புள்ள தன்னுட்சி யுரிமையை யளித்து, பிரிட்டிஷ் பேரரசின் முழுமைவாய்ந்த பகுதியாக அமைக்க வேண்டும் என்ற திட்டம் இயற்றப்பட்டது. தொடக்கத்தில் சில பர்மியர்களே இத் திட்டத்தில் ஆர்வம் காட்டினுர்கள். இத் திட்டத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று இந்தியாவைச் சுற்றி வந்தது; ஆனுல் இக் குழு பர்மாவிற்கு அனுப்பப்படவில்லை. இளைஞர்கள் சங்கம் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. ஆனுல், இவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை.

இந்தியாவுடன் பர்மாவை இணைக்கும் நோக்கத்தில் பர்மியர் கள் ஆர்வம் காட்டவில்லை. ஆகையால் பர்மாவிற்காகத் தனித் திட்டத்தை உருவாக்க வேண்டும் என அவர்கள் முறையிட்டனர். இதன் விளைவாக ஆளுநர் கிராட்தாக்கு (Governor Craddock) திட்டம் உருவாகியது. கிராட்தாக்கு பர்மியர்கள் கூறுவது சரியே என அறிவித்தார். பிரதிநிதிகளடங்கிய சட்டமன்ற அரசாங்க அமைப்பில் இந்தியர்களுக்குள்ள அரசியல் அனுபவம் பர்மியர்களுக் கில்லை. பிரதிநிதிகளடங்கிய சட்டமன்ற அரசாங்க அமைப்பில் செயலாற்றும் திறமையோ, அனுபவமோ எந்தப் பர்மியர்களுக்கும் கிடையாது. இந் நோக்கத்துடன்தான் கிராட்தாக்குவின் திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டம் பர்மியர்களின் இன உணர்ச்சி களைக் கிளறியது. இதுவரை அமைதியாக இருந்த பர்மியர்கள்கூட இந்தியாவிற்கு அளிக்கும் அரசியல் சலுகைகளைப்போல் பர்மா விற்கு அளிக்கப்படவேண்டும் எனக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினுர்கள். இளைஞர்கள் சங்கம்தான் யூ பா பே (U Ba Pe),

யூ தியின் மாங்க் (U Thein Maung) ஆகியோர் தலைமையில் இக் கிளர்ச்சியைத் தொடங்கிற்று. கி.பி. 1919ஆம் ஆண்டில் இளைஞர்கள் சங்கம் இலண்டனுக்குச் சென்று முறையிட்டது. ஆனால், கி.பி. 1919ஆம் ஆண்டுச் சட்டத்தில் பர்மாவைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இது அரசியல் கிளர்ச்சியைத் தூண்டுவதற்கு அடிகோலியது. இந்தியாவிற்களிக்கும் தன்னாட்சி முறையே பர்மாவிற்கும் அளிக்கப்படவேண்டும் எனப் பர்மியர்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆகையால், இக் கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சியாக உருவெடுத்தது. இளைஞர்கள் சங்கம் மற்றப் பர்மிய விடுதலைப் போராட்டத்தின் மன்றங்களுடன் ஒருசேரக் கலக்கப் பட்டுப் பர்மியர்கள் பொது மன்றம் (General Council of Burmese) என அழைக்கப்பட்டது. உடனடியாக இதுவே உன்தானு நாட்டியக்கமாக (Wunthanu Movement) அமைக்கப்பட்டது. 'உன்தானு' என்றால் நாட்டின் நலன்களைப் பாதுகாப்பவர்கள் எனப் பொருள். இவ்வியக்கம் ஆங்கிலேய வாணிபப் பொருள்களை ஊர்க்கட்டுச் செய்யும்படியாக மக்களைத் தூண்டியது. பொதுவாக இவ்வியக்கம் வெற்றியடைந்தது எனக் கூறலாம்.

பர்மியர்களின் பொதுமன்றத் தூதுக்குழு ஒன்று இலண்டனுக் குச் சென்றது. பர்மாவிற்குத் தன்னாட்சியுரிமை அளிக்க முயற்சி யெடுக்கப்படும் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இக்குழுவினிடம் வாக்குறுதியளித்தது. இத் தூதுக்குழு இலண்டனிலிருந்து இரங் கூனிற்குத் திரும்பி வந்தபோது 10,000 பர்மியர்கள் இரங்கூன் துறைமுகத்திற்கு வந்து இவர்களை வரவேற்றார்கள். நாட்டுப்புரட்சி ஒன்று கிளம்பிவிடுமோ என ஆங்கிலேயர்கள் அச்சமுற்றார்கள். மேலும், உன்தானு இயக்கத்தால் ஆங்கிலேய வாணிக நலன் தடைப்பட்டது.

கி. பி. 1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த மாபெரும் பல் கலைக்கழகத்தின் பணி முடக்கத்தைத் (strike) தொடங்கிய நாட் டியக்கமே ஆங்கிலேய ஆட்சியை வெளிப்படையாக எதிர்த்த முதல் இயக்கம் எனக் கூறலாம். இரங்கூன் பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டுமென்றும், ஆங்கிலோ-நாட்டு மக்கள் பேசும் மொழிப் பள்ளிகளுக்கு (Anglo Vernacular) ஆதரவு அளித்து ஊக்குவிக்க வேண்டுமென்றும் ஆங்கிலேய அரசாங்கம் திட்டம் வகுத்தது. இதனால், ஆங்கிலேயர்கள் தங்களது பண்பாட்டைப் பர்மாவின் மேல் திணித்துப் பர்மாவைத் தமதாக்கிக் கொள்ளத் (indoctrination) திட்டம் வகுத்திருக்கிறார்கள் எனப் பர்மியர்கள் சீறியெழுந்தனர். திட்டப்படி கி.பி. 1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரங்கூன் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது. இப் பல்கலைக்

கழகத்தின் நிருவாகப் பொறுப்பு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களடங்கிய மன்றத்தினிடம் விடப்பட்டது; கல்வி பற்றிய நடைமுறை விவகாரங்கள் ஒரு பல்கலைக்கழக ஆட்சிக்குழு விடம் (Senate) ஒப்படைக்கப்பட்டன. இக்குழுவின் உறுப்பினர்க ளெல்லாம் ஆங்கிலேயப் பேராசிரியர்கள். ஆகையால் இப்பல்கலைக் கழகத் திறப்பு விழாவின்போது பர்மிய மாணவர்கள் வெளியேறிப் படிப்பு நிறுத்தம் தொடங்கினார்கள். இரங்கூன் பல்கலைக்கழகச் சட்டத்தைப் பர்மிய நாட்டுரிமை உணர்ச்சிகளை எதிர்த்த ஒரு சட்டமாக இம்மாணவர்கள் கருதினார்கள். படிப்படியாக இப்படிப்பு நிறுத்தம் பள்ளிகளுக்கும் பரவியது. அரசாங்கமும் உடனடியாகப் பள்ளிகளைத் தாற்காலிகமாக மூடியது. மாணவர்கள் தங்கள் வீடு களுக்குத் திரும்பிச் செல்ல மறுத்துப் புத்தமடங்களிலும், புத்த விகாரங்களின் வழியோரங்களிலுள்ள நடைமேடைகளிலும் தங்கி னார்கள். எல்லா மடத் துறவிகளும், பயணிகளும் தங்கள் உணவை இம் மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார்கள். விரைவிலேயே இப் பள்ளி நிறுத்தம் பர்மா முழுவதும் பரவி ஆங்கிலேய ஆட்சியை எதிர்க்கும் நாட்டியக்கமாக உருவெடுத்தது. சில மாணவர்களைக் கல்லூரிகளிலிருந்தும், பள்ளிகளிலிருந்தும் அரசாங்கம் நீக்கியது. இம்மாணவர்களைத் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் செல்லவில்லை யென்றால், அவர்களின் தந்தையர் அரசாங்க வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் அறிவித்தது. ஆயினும், இப் பள்ளி, கல்லூரி நிறுத்தம் தொடர்ந்து நடந்தது. நாட்டின் தலைவர்கள்கூடி நாட்டுக் கல்வி மன்றம் (Council of National Education) ஒன்றை அமைத்தார்கள். இளைஞர்கள் சங்கம் நடத்திய பள்ளிகள் 'நாட்டுப் பள்ளிகள்' எனப் பெயரிடப்பட்டு இம்மன்றத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. இச் சூழ்நிலை அரசாங்கத்தின் மனத்தை மாற்றியது. பள்ளி, கல்லூரி ஆகியவற்றிலிருந்து மாணவர்களை நீக்கும் சட் டத்தை அரசாங்கம் நீக்கியது; பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்காக ஒரு குழுவை நியமித்தது; சில நாட்டுத் தலை வர்கள் குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பள்ளி, கல்லூரிப் படிப்பு நிறுத்தத்தை மாணவர்கள் உடனடியாக நிறுத்தினார்கள். ஆனால், பல மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளி லிருந்து வெளியேறிப் புதிய நாட்டுப் பள்ளிகளில் சேர்ந்தார்கள்.

இப் பரவலான படிப்பு நிறுத்த இயக்கத்தின்மூலம் நேரடியாகப் பல சிறந்த மாறுதல்கள் தோன்றின:

(அ) இவ்வாறு பயன் முனைப்பான வேலை (படிப்பு) நிறுத்தங் களின் மூலம் நாட்டியக்கத்தை வளர்க்கலாம் என மாணவர்களும் பெற்றோர்களும் புரிந்துகொண்டார்கள்.

(ஆ) பர்மியர்கள் பொதுமன்றம் வலிமையடைந்தது; இம் மன்றமே பர்மாவில் கி. பி. 1923ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய இரட்டையாட்சியை (dyarchy) எதிர்த்துப் போரிட்டது.

(இ) படித்த பர்மியர்களெல்லாம் அரசியல் விழிப்புணர்ச்சி யடைந்து கடுமையான அரசியல் பற்றைக் காட்டத் தொடங்கினர்.

இரட்டையாட்சி

இந்தியாவிற்கு அளித்ததைப் போலப் பர்மாவிற்கும் கி.பி. 1923ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் இரட்டையாட்சி முறையை (இருவேறு தனி மேலுரிமைகளையுடைய இந்திய ஆட்சி முறை) அளித்தது. கி பி. 1923ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் பர்மா ஓர் ஆளுநரின் முழுமையான ஆட்சியின் கீழ்வரும் மாகாண மாக (A full governor's province) அமைக்கப்பட்டது. இப் புதுத் திட்டம் உரிமைகளை மிகக் குறைவாகவும், மிகத் தாமதமாகவும் அளிக்கிறது எனப் பர்மியர்கள் கருதினார்கள். இந்தியர்கள் தன் னாட்சி உரிமைகளைப் பெற மேலும் மேலும் கிளர்ச்சி செய்வார்கள் என நம்பியதால் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிப்பதே நல்லது என ஆங்கிலேயர்களே கருதத் தொடங்கினார்கள். இதனால், ஆங்கிலேயர்களுக்குப் பர்மாவைச் சீர்திருத்தம் செய்வதில் சிறிதும் அக்கறை இல்லையெனப் பல பர்மியத் தலைவர்கள் ஐயக்கண்ணோடு நோக்கினார்கள்.

கரேனி நாடுகளைப் (Karenni State) பர்மாவிடமிருந்து முற்றி லும் ஆங்கிலேயர்கள் பிரித்தார்கள். மலைச்சாதி இனத்தார்களான சின்கள் (Chins), கசீன்கள் (Kachins), ஷான்கள் ஆகியவர்கள் அரசியல் முன்னேற்றம் அடையவில்லை; ஆகையால் பர்மாவின் ஆங்கிலேய ஆளுநரின் நேரடி ஆட்சியின்கீழ் இம் மலைப்பகுதிகள் கொண்டு வரப்பட்டன என்ற போலிக் காரணத்தை ஆங்கிலேயர் கள் கூறினர் மேலும், இரட்டையாட்சியின்கீழ் அமைக்கப்பட்ட சட்டசபையில் இம் மலைப்பகுதிகளில் வாழ்ந்த இனத்தவர்களின் விவகாரங்களைப்பற்றி விவாதிக்கக்கூடாது சிறுபான்மை இனக் குழுவினர்களுக்கு ஆங்கிலேய அரசாங்கம் தனிப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்ற போலி வாதத்துடன் பர்மின்கள், இந்தியர்கள், ஆங்கிலோ–இந்தியர்கள் (ஆங்கிலோ–பர்மியர்கள் உட்பட) கரேன்கள எனச் சமவெளிகளிலுள்ள பர்மியர்கள் பல இனக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டார்கள். உண்மையில் 85 விழுக்காடு கரேன் இனத்தவர்கள் கிறித்துவ மதத்தில் சேராதவர்கள்.

இரட்டை ஆட்சியில் சில அரசாங்கப் பணித் துறைகள் ஆளு நரின் அதிகாரத்தின்கீழ் மட்டும்தான் வரும் என ஒதுக்கி வைக்கப்

பட்டன. ஆனால் கல்வி, உடல்நலம், வேளாண்மை, காடு முதலிய துறைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆட்சியின்கீழ் அமைக்கப்பட்டன ; ஆனால் இத் துறைகளுடைய தீர்மானங்களின்மேல் மறுப்பு ஆணை செலுத்த (Veto) ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 103 உறுப்பினர்களடங்கிய மன்றம் அமைக்கப்பட்டது. 79 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ; 24 உறுப்பினர்களை ஆளுநர் நியமனஞ் செய்வார். இந்த 24 உறுப்பினர்களில் 14 பேர்கள் அரசாங்கத் தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பதவியில் முற்பட்ட படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களிலிருந்து நியமனஞ் செய்யப்படுவார்கள். சில பர்மியர்களிடையே இனப் பிரிவுணர்ச்சிகளைக் கிளறும் திட்டமும் வகுக்கப்பட்டது. சிறுபான்மையினரான வகுப்பு இனப் பிரிவினர்கள் சட்டமன்றத்திலுள்ள 21 இடங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாடாளுமன்றச் செயல்முறைப்படி 21 சிறுபான்மைக் குழுவின் உறுப்பினர்களும், ஆளுநரால் நியமனஞ் செய்யப்பட்ட 24 உறுப்பினர்களும் ஒருசேரக் கலந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 58 பர்மிய உறுப்பினர்களை எப்பொழுதும் எதிர்த்தார்கள். மூன்றாண்டுகளுக்கொருமுறை சட்டமன்றத் தேர்தல்கள் நடக்கும்.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழகங்களின் (Circle Boards) உறுப்பினர்களிலிருந்து 28 மாவட்ட மன்றங்கள் (District Councils) அமைக்கப்படும். கிராமத் தலைவர்களின் அதிகாரங்கள் வலுப்படுத்தப்படும்.

பர்மியர்கள் பொதுமன்றத்தினரிடையே இப் புதுத் திட்டம் பிரிவை உருவாக்கியது ; தேர்தலில் பங்கெடுக்கவேண்டும் எனக் கூறிய யூ பா பே (U Ba Pe) குழுவினர்கள் இம் மன்றத்திலிருந்து பிரிந்து மக்கள் கட்சியை (The People's Party) நிறுவினார்கள். இதை 'இருபத்தொரு கட்சி' (Twenty one Party) எனவும் அழைத்தார்கள். அமைதியாகச் சட்டதிட்ட முறையிலும் தன்னாட்சி முறையிலும் போரிட வேண்டுமென்பதே இக் கட்சியின் நோக்கம். திரு. ஜே. ஏ. மாங்கியியின் (J. A. Maung Gyi) கீழ் ஒரு சுயேச்சைக் கட்சியும் கி.பி. 1924–1925ஆம் ஆண்டில் இயங்கி வந்தது. பர்மாவிலுள்ள ஆங்கிலேய ஆட்சியை இக் கட்சி ஆதரித்தது. இக் கட்சியைப் 'பொன் பள்ளத்தாக்குக் கட்சி' (Golden Valley Party) என அழைத்தார்கள்.

தேர்தலில் பங்கெடுக்கக்கூடாது எனக் கூறிய பர்மியர்கள் பொதுமன்றத்தினர்களில் பெரும்பான்மையோர் ஆவார்கள். இவர்களின் தலைவராக யூ சிட் லைங் (U Chit Hlaing) பணியாற்றினார்.

இக் கட்சி சட்டமன்றத்தை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சட்டமன்றத்தில் நுழையாமல் வெளியே இருந்து போராடியது. பொதுமன்றத்தினர்களின் விலக்கு (boycott) நடவடிக்கையால் குழப்ப வன்முறை நிலவுவதற்குச் சூழ்நிலை உருவாகியது.

பர்மியர்களின் போர் புரிகிற இத்தகைய மனப்பான்மையை யூ ஒட்டாமா (U Ottama) என்ற பொங்யீ (Pongyi) ஊக்குவித்தார். ஆங்கிலேய ஆட்சி புத்த சமயத்திற்குத் தாங்கொணாத் தொல்லையை உருவாக்கியிருக்கிறது எனச் சீறியெழும் சினத்துடன் இவர் செய்த தாக்குதல்களால் தூண்டப்பட்ட இளம் மடத்துறவிகள் இவருக்குப் பேராதரவளித்தார்கள். கி.பி. 1921ஆம் ஆண்டில் பர்மா முழுவதும் பயணம் செய்த இவர் இரட்டையாட்சி முறையை எதிர்த்துப் பிரசாரம்செய்து தாயகத்தின் ஆட்சி உரிமைக்காகப் போராடினர். இவரால் தூண்டப்பட்ட பர்மியர்கள் வன்முறையில் புரட்சி செய்தார்கள். பிரான்சு அல்லது அமெரிக்கக் குடியரசு பர்மாவின் உதவிக்கு வரும் என இவர் சோதிடம் கூறினர். கி.பி. 1921ஆம் ஆண்டு முதல் 1927 வரை இவரை ஆங்கிலேயர்கள் பலமுறை சிறையிலடைத்தனர். இதனால் இவரை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகியது. இவருக்குத் துணையாக நின்று போராடிய மற்ருெரு சிறந்த பர்மியத் தலைவர் யூ விசாரா (U Wisara). கி.பி. 1928ஆம் ஆண்டில் யூ ஒட்டாமா கைது செய்யப்பட்டார். கி.பி. 1929ஆம் ஆண்டில் யூ விசாரா உண்ணுநோன்பு இருந்து உயிர்நீத்தார். இதனால் ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்க்கும் உணர்ச்சிகள் பன்மடங்கு பெருகி நாட்டியக்கம் வலுவடைந்தது.

கி.பி. 1923–29ஆம் ஆண்டுகளில் பர்மாவில் மூன்று பொதுத் தேர்தல்கள் நடந்தன. முதல் தேர்தலில் 12 விழுக்காடே பர்மியர்கள் வாக்களித்தனர். பர்மாவின் முதல் சட்டமன்றத்தில் உறுப்பினர்களும், பர்மியரல்லாத உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் ஆதரித்தார்கள். இரண்டாவது பொதுத் தேர்தலில் 17 விழுக்காடு பர்மியர்கள் வாக்களித்தார்கள். யூ பாபேவின் மக்கள் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தது. கி.பி. 1925–29ஆம் ஆண்டுகளை நாட்டு வகுப்பினர்களுக்குள் மனநிறைவின்மையையும், கொள்கைப் பிணக்கையும் உருவாக்கிய ஆண்டுகள் எனக் கூறலாம். 1925ஆம் ஆண்டுச் சட்டமன்ற உறுப்பினர்களின் நடத்தையிலிருந்தே இப் புது மனப்பான்மையைக் காணலாம். அயல் நாட்டாட்சி அதிகாரத்தை எதிர்க்கவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர மற்றப்படி வேருெரு திட்டமும் இவர்களிடையே இல்லாமலிருந்தது. பர்மிய உறுப்பினர்கள் பர்மியரல்லாத உறுப்பினர்

களுடன் சட்டமன்றத்தில் மோதிக்கொண்டார்கள். மேலும் நாட்டியக்க வகுப்பினர்களுக்கிடையேகூட ஒற்றுமையில்லாமலிருந்தது. ஆகையால், இரண்டாவது சட்டமன்றம் திறமையுடனே பயன் விளைவிக்கும் செயல் திறனுடனே பணிபுரியவில்லை. மூன்ருவது பொதுத் தேர்தலின்போது பர்மியர்கள் பொதுமன்றத்தில் மீண்டும் பிரிவேற்பட்டது இச்சமயம் யூ சிட் லைங் தேர்தலில் பங்கெடுக்க விரும்பினர். இத் தேர்தலில் 20 விழுக்காடே பர்மியர்கள் வாக்களித்தார்கள். மீண்டும் யூ பாபேவின மக்கள் கட்சிக்குப் பெரும்பான்மையும் பேராதரவும் கிடைத்தன.

கி.பி. 1925–29ஆம் ஆண்டுகளில் இந்திய எதிர்ப்புணர்ச்சிகளும் அதிகரித்தன. அரசாங்கப் பணித்துறையில் ஓரளவு குறிப்பிட்ட பதவிகளை இந்தியர்களுக்காக ஒதுக்கி வைக்க வேண்டும் என ஓர் இந்திய உறுப்பினர் இரண்டாம் சட்டசபையில் கேட்டுக்கொண்டார். ஆனல், அவர் இவ்வாறு பேசும்போது மற்றச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூக்குரலிட்டுத் தொடர்ந்து பேச அவருக்கு வாய்ப்பளிக்கவில்லை. பதிலாக, அரசாங்கப் பணித்துறைகளில் பர்மியர்களுக்குச் சலுகைகள் அளிக்கவேண்டும் எனப் பர்மிய உறுப்பினர்கள் முறையிட்டார்கள். இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

சைமன் ஆணைக்குழு

கி.பி. 1929ஆம் ஆண்டில் சைமன் ஆணைக் குழு (Simon Commission) வெளியிட்ட அறிக்கையின்போது மீண்டும் நாட்டுப் பற்றுடையவர்கள் கொதித்துக் கொந்தளித்து எழுந்தார்கள். கி.பி. 1919ஆம் ஆண்டின் இந்தியச் சீர்திருத்தச் சட்டத்தை ஆராய்ந்து மேலும் பல சட்ட திட்ட மாறுதல்களை ஏற்படுத்துவதற்காகக் கி. பி. 1928ஆம் ஆண்டில் சர் ஜான் சைமன் (Sir John Simon) தலைமையில் ஆணைக்குழு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. ஆனல் குழுவின் உறுப்பினர்களெல்லாம் ஆங்கிலேயர்களாக இருந்ததால் இந்தியர்கள், பர்மாவில் பொங்யீகள் (Pongyis) இக்குழுவை எதிர்க்க மக்களைத் தூண்டிவிட்டார்கள். ஆனலும், சில நாட்டு மன்றங்கள் இக் குழுவின் முன்னல் சான்றளித்துப் பர்மாவை இந்தியாவிலிருந்துப் பிரித்து தன்னுட்சி உரிமையளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தின. எடுத்துக்காட்டாக, 'பர்மா பர்மியருக்கே' (Burma for Burmans League) என்னும் சங்கம் உடனடியாகப் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கவேண்டுமென்றும், தன்னுட்சியுரிமையுடைய மன்னர் நேராட்சிப் பகுதியுடைய நாடாகப் (Dominion Status) பர்மாவை அமைக்கவேண்டுமென்றும் கோரிக்கையிட்டது. அரசியல் நோக்கமுள்ள பிரிவினைச் சங்கம் (Separation League)

'பர்மா பர்மியருக்கே' என்னும் சங்கத்தின் கொள்கையை ஆதரித்தது. பர்மாவுக்கு உரிமையளிக்கும் ஓர் அரசியலமைப்புத் திட்டத்தை இச் சங்கம் சைமன் குழுவிடம் கொடுத்தது.

ஆராய்ச்சி செய்தபிறகு பர்மாவை இந்தியாவிலிருந்து விரைவிலேயே பிரித்துவிடவேண்டும் எனச் சைமன் ஆணைக் குழு ஆலோசனையளித்தது. இவ்வாலோசனையை ஆங்கிலேய அதிகாரிகள் குழாமும், வாணிபச் சமுதாயமும் வரவேற்றன. பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்படலாம்; இந்தியாவிலுள்ளதைப் போன்றதொரு சட்டதிட்டத்தைப் பர்மாவிற்கு அளிக்கலாம் எனச் சட்டமன்றத்தில் 1930ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆளுநர் திரு. சார்லஸ் இன்ஸ் அறிவித்தார். பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தால் அரசியல் சட்டதிட்டவழியில் பர்மா தாமதமாகத்தான் முன்னேறமுடியும் என்ற கொள்கையுடன் பாமாவின் (BaMaw) பிரிவை எதிர்க்கும் சங்கம் பிரிவினையாலோசனைத் திட்டத்தை எதிர்த்தது. விரைவில் சங்கத்திற்கு மக்களின் பேராதரவு கிடைத்தது.

அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்வோர் கை ஓங்கத் தொடங்கியது. பர்மியத் தலைவர்கள் பல சீர்திருத்தங்களை விரும்பினார்கள்.

(1) பர்மியர்களுக்குத் தேவையான அளவு கல்வி வசதிகள் செய்து அவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும்படியான வாய்ப் பேற்படுத்த வேண்டும்.

(2) பொதுநலம், சமூகத்தொண்டு ஆகிய துறைகளில் பர்மியர்களுக்கு மட்டுமே வேலை அளிக்கவேண்டும்.

(3) நாட்டின் பொருளாதார அமைப்பில் பர்மியர்கள் சுறுசுறுப்புடன் பங்கெடுப்பதற்காக உதவியளிக்கவேண்டும்.

(4) பர்மியப் பொதுமக்களின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்த வேண்டும்.

(5) பர்மியப் பொருளாதார அமைப்பில் அயல்நாட்டார் சுரண்டுதலைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

(6) பர்மியர்களால் ஏற்கமுடியாத படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களின் வேலைகளைக் குறைக்கவேண்டும்.

(7) நாட்டின் வளர்ச்சிக்காக அதிக நிதிஉதவியை ஒதுக்கி வைக்கவேண்டும்.

(8) நெடுஞ்சாலைகளையும், கட்டடங்களையும் கட்டுவதற்காகச் செலவழிக்கும் நிதியைக் குடியானவர்களுக்குக் கடன் தவணைச் சலுகைகள் அளிப்பதற்காகப் பயன்படுத்தவேண்டும்.

ஆனால், இச்சமயத்தில் சட்டமன்றத்தில் மேம்படுவாக்குகள் பெற்று எதிர்க்கட்சிகளைத் தோல்வியுறச்செய்ய அரசாங்கத்தால் முடிந்தது.

சாயாசான் கலகம் (Sayasan rebellion, 1930-31)

கி.பி. 1930-31ஆம் ஆண்டுகளில் சாயாசான் கலகத்தைக் கண்ட நாட்டுப்பற்று மிக்கவர்கள் இக் கலகத் தலைவரின் துணிச்சலையும், நாட்டுப்பற்றையும், நற்பண்புகளையும் கண்டு மனம் குழைந்து வியந்து பாராட்டினார்கள். இதை ஓர் அரசியல் சமயச் சார்புள்ள கலகம் எனக் கூறலாம். ஆங்கிலேய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுச் சாயாசானை அரசராக அமைத்து மீண்டும் முடியாட்சியை அமைக்க வேண்டுமென்பதே இக் கலகத்தின் நோக்கம். இக் கலகத்தின் பர்மிய வழிவழி மரபு நோக்கத்திற்கு மக்களின் பேராதரவு கிடைத்தது. பொங்யீகள் (Pongyis) தங்கள் முழுமையான ஆதரவை இதற்கு அளித்தார்கள். உண்மையில் அரசியலில் ஈடுபடும் நோக்கமுள்ள பொங்யீகள்தாம் இக்கலத்தின் திட்டத்துக்கு ஆக்கம் காட்டினார்கள்.

சாயாசான் கலகம் மூண்ட சமயத்தில் கி.பி. 1930ஆம் ஆண்டு பொருளாதாரத்தின் இழிநிலை பர்மாவையும் மிகுதியாகத் தாக்கியது. கி.பி. 1860ஆம் ஆண்டில் விற்றவிலைதான் அரிசிக்குக் கிடைத்தது. பர்மியத் தொழிலாளிகளிடமும், ஏர் உழவர்களிடமும் சேமிப்பில்லை; ஆகையால் அரசாங்கத்திற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். மக்களைத் தூண்டிக் கலகம் செய்யுமாறு ஒரு தாயக மருத்துவர், சாயாசான் ஆகியோர் பிரசாரம் செய்தார்கள். ஆனால் மேலைப் பர்மாவிலும், ஷான் இனத்தார் பகுதிகளிலும் இவர்களுக்கு மிக்க ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால் கீழ்ப்பர்மாவிலிருந்த தெரவாதி மாவட்டத்தில் (Therawaddy district) கலகம் முற்றி வெடிப்பதற்கேற்ற சூழ்நிலை உருவாகியிருந்தது. இந்திய வட்டித் தொழிலர்கள் பலர் நிலங்களைக் கவர்ந்துகொண்டிருந்தார்கள். அரிசிச் சேமிப்புக் கிடங்குகள் அரிசி விற்கமுடியாமல் நிரம்பிவழிந்தன. துணிகள் வாங்குவதற்கு மக்களிடையே பணம் இல்லை. ஆங்கிலேயர்களுக்கு அளிக்கவேண்டிய ஆண்டு வரிகளை மக்களால் செலுத்த முடியவில்லை. ஆகையால், கலகம் செய்யுமாறு சாயாசான், மக்களைத் தூண்டினார். ஆண்டு வரிகளைப்பற்றி ஆங்கிலேயர்களுடன் உரையாடல் நடத்தும்வரை பொறுத்திருக்குமாறு கிராமத்

தலைவர்கள் சாயாசானைக் கேட்டுக்கொண்டார்கள். சாயாசானும் இவ்வாலோசனையை ஏற்றுக்கொண்டார். ஆனால், வரிசெலுத்து வதைத் தள்ளிவைக்கவோ, நீக்கவோ அரசாங்கம் மறுப்பளித்தது. ஆகையால், போர்வாள்களுடனும் கைத்தடிகளுடனும் கலகக் காரர்கள் தாக்கினார்கள். இரண்டு ஆங்கிலேயப்படை அணிப்பிரிவு களால் தொடக்கத்தில் கலகத்தையடக்க முடியவில்லை. படை வீரர்கள் கிராமங்களைக் கொளுத்தினார்கள். பெருமளவில் மக்கள் கழுவிலேற்றப்பட்டனர். தெரவாதியிலிருந்து இரங்கூனுக்குக் காரில் இரண்டுமணி நேரத்தில் சென்றுவிடலாம்; இரங்கூன் மக்களுக்கு தெரவாதிக் கலகத்தின்மேல் பரிவிருந்தது; ஆனால், அவர்கள் எவ் வித உதவியும் செய்ய இயலாதவர்களாயிருந்தார்கள். மக்களைப் படுகொலை செய்யும் ஆங்கிலேய அதிகாரிகள் தங்கள் கொடுமை யான கடமைகளைச் செய்த பிறகு இரங்கூனில் நடக்கும் நடன விருந்தினர் கூட்டங்களில் கலந்துகொண்டார்கள்.

கலகம் மூண்டவுடன் இங்கிலாந்தில் இந்திய வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட ஆளுநர் இன்ஸ் விரைவாகப் பர்மாவிற்குத் திரும்பினார். கலகக்காரர்களுக்கு அரசியல் குற்ற மன்னிப்பளித்தார் (amnesty). கலகத்தில் பங்கெடுத்துக்கொள்ளாத சில மதிப்பு வாய்ந்த பொங்யீகள் மூலம் இது அறிவிக்கப்பட்டது. இதில் அரசாங்கம் ஓரளவு வெற்றியடைந்தது. ஆனால், கலகக் காரர்கள் தொடர்ந்து போரிட்டார்கள். சாயாசானும், அவருடைய துணைப்படைத்தளபதியான யூமியாட் ஆங்கும் (U Myat Aung) கி.பி. 1931ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், கலகம் தொடர்ந்து நடந்தது; எல்லாக் கழிமுக மாவட்டங்களிலும், மத்திய பர்மாவிலும், மேலைப் பர்மாவிலும், ஷான் நாடுகளிலும் கலகம் பரவியது. புதுக்கொரில்லாப் போர்வீரர்கள் தோன்றினார்கள். இவர்களில் முதன்மையானவர்கள் தாயட்மெயோ மாவட்டத்தில் (Thayetmyo district) காமாப்பகுதியில் (Kama), பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்துவந்த சாயா நான் (Saya Nan), சிவிபோ மாவட்டத்தைச் (Shwebo district) சேர்ந்த பண்டாகா (Bandaka) ஆகியோர் ஆவர். இறுதியில் கி.பி. 1931ஆம் ஆண்டுக் கடைசிப்பகுதியில் இக்கலகம் அடக்கப்பட்டது. 10,000 கலகக்காரர்கள் கொலைசெய்யப்பட்டு உயிர் துறந்தார்கள்; 9,000 பேர் சிறைபிடிக்கப்பட்டனர்; சாயாசான், சாயாநான், பண்டாகா உள்பட 128 கலகத் தலைவர்கள் கழுவிலேற்றப்பட்டார்கள். சாயாசானின் வழக்கு பர்மிய நாட்டுப்பற்றுடையவர்களிடையே புத்துணர்ச்சியளித்தது; சாயாசானுடன் பணிபுரிந்த வழக்குரை ஞர் பாமாவ் புகழ் ஓங்கி அரசியலிலே முன்னேற்றம் அடைந்தார்.

இவ்வழக்குமூலம் யூ சாவிற்கும் அரசியல் புகழ் கிடைத்தது. சாயாசானின் கலகத்தினுல் தங்கள் வழிமரபுப் பண்புகளின்மேல் மக்களுக்கிருந்த பற்றும், மரியாதையும், செருக்கும் விழிப் புணர்ச்சியும் பெற்றன. பர்மிய நாட்டியக்கத்தின் வளர்ச்சியிலே இக்கலகம் ஒரு சிறந்த இடம் பெற்றிருக்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

இந்திய வட்டமேசை மாநாடு (கி.பி. 1930 நவம்பர்–1931 சனவரி)

இதற்கிடையில் இலண்டனில் நடந்த இந்திய வட்டமேசை மாநாட்டில் பர்மியத் தூதுக்குழு உறுப்பினர்களான யூ பாபே (U Bape), யூ ஆங்தின் (U Aung Thin), எம். எம். ஒன்கைன் (M. M. Ohn Ghine), ஆஸ்கர்டி கிளன்வில்லி (Oscorde Glanville) ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களெல்லோரும் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்படவேண்டும் என்ற திட்டத்தை ஆதரித்தார்கள். பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்படுமென்றும், அதன் வருங்கால அரசியல் சட்டதிட்டம் ஓர் ஆணைக்குழுவின் மூலம் அல்லது பர்மா வட்டமேசை மாநாட்டின் மூலம் உருவாக்கப் படுமென்றும் பிரிட்டன் அறிவித்தது. ஆனுல், இப்புதிய அரசியல் சட்டதிட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு ஒப்பாக இருக்கும் எனப் பிரிட்டன் வாக்குறுதி யளிக்காததால் பர்மியத் தூதுக்குழு வினரிடையே மனக்கசப்பு நிலவியது.

பர்மா வட்டமேசை மாநாடு (கி.பி. 1931–1932 சனவரி)

கி.பி. 1931ஆம் ஆண்டு செப்டம்பரில் இலண்டனில் பர்மிய வட்டமேசை மாநாடு தொடங்கப்பட்டது. பன்னிரண்டு பர்மியர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள். இவர்களில் ஏழுபேர்கள் பிரிவினைக் கொள்கையை ஆதரிப்பவர்கள் (Separationists); ஐந்துபேர்கள் பிரிவினைத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் (anti-separationists); இம்மாநாட்டின் இயலாற்றலைப் பற்றித் தொடக்கத்திலிருந்தே பர்மியத் தூதர்களிடையேயும், ஆங்கிலேய மாநாட்டுப் பிரதிநிதிகளிடையேயும் கருத்து வேறுபாடிருந்ததால் இம்மாநாட்டின் நோக்கம் தோல்வியடையும் எனத் திண்ணமாகத் தெரிந்தது. இம்மாநாட்டைப் பர்மாவின் புதிய அரசியல் சட்ட திட்டத்தை உருவாக்கப் பயன்படுத்த வேண்டுமெனப் பர்மியர்கள் கூறினுர்கள். ஆனுல், ஆங்கிலேயப் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பல்வேறு கருத்து வேறுபாடுகளைத் தெரிவித்து, வருங்காலத்தில் அரசியல் சட்டதிட்டத்தை உருவாக்கவேண்டும் என்ற கருத்து வேறுபாட்டைத் தெரிவித்தார்கள்.

ஆகையால், இம்மாநாட்டில் ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பர்மாவிற்கு ஈரவையுடைய சட்டமன்றம் (bicameral legislature) அளிக்கவேண்டும்; ஆளுநருக்குத் தொடர்ந்து அதிக அதிகாரங்கள் மறுப்பு ஆணை (veto) செலுத்தும் உரிமை உட்படக் கொடுக்கப்படவேண்டும் எனப் பொதுவாக எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். சிறுபான்மைக் குழுவினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும். பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்துப் பர்மியமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திடமும், இம்மன்றங்களுக்குப் பதிலளிக்க கடமைப்பட்டிருக்கும் அமைச்சர் அவையிடமும் ஒப்படைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. பர்மியமக்கள் இவற்றை விரும்புகிறார்கள் எனப் பிரிட்டன் புரிந்து கொள்ளும் சமயத்தில், ஆட்சி அதிகாரம் அளிக்கப்படும் எனப் பிரிட்டிஷ் பிரதமமந்திரி இம் மாநாட்டின் இறுதியில் வாக்குறுதி யளித்தார்.

ஆனால், பர்மிய மக்கள் ஆங்கிலேயர்களை நம்ப மறுத்தார்கள். பர்மா இந்தியாவிலிருந்து பிரியும் கொள்கையையும் பர்மிய நாட்டியக்கத்தை ஒழிக்கும் நோக்கத்தையும் ஆங்கிலேயர்கள் பிணைத்ததை இவர்கள் மனமார வெறுத்தார்கள். பிரியும் கொள்கையால் பர்மாவிற்கு ஒரு நன்மையும் கிடைக்காது. ஆங்கிலேயர்கள் ஏதோ சூழ்ச்சி செய்கின்றார்கள் என்றே பெரும் பான்மையான பர்மியர்கள் கருதினார்கள்.

பர்மா இந்தியாவிலிருந்து பிரிவதை எதிர்த்து இரண்டு பிரிவு எதிர்ப்புக் கட்சியினர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இந்தியாவிற்குத் தன்னாட்சியுரிமையளித்தால் பர்மா பின்தங்கி விடும்என இவ்விரு கட்சியினரும் கருதினர். யூ சிட் ஹ்லைங்கின் கட்சி இந்தியக் கூட்டரசுடன் பர்மா இணைக்கப்படவேண்டும் என வாதாடியது. தாற்காலிகமாகப் பர்மா விடுதலையடையும்வரை இந்தியக் கூட்டரசுடன் பர்மா இணைக்கப்படவேண்டும்; பர்மா நினைக்கும் பொழுது இந்தியக் கூட்டரசைவிட்டு வெளியேற உரிமையுண்டு என டாக்டர் பாமாவ் (Dr. Ba Maw) வலியுறுத்தினார். மக்களின் அச்சத்தைக்கிளப்பி அவர்களின் பேராதரவைச் சிறப்பாக மேலைப் பர்மாவில் இவ்வியக்கம் பெற்றது; பர்மாவின் புதிய அரசியல் சட்டதிட்டம் இரட்டையாட்சியை உருவாக்கும் என்னும் கருத்தை மக்களிடையே பரப்பி அவர்களின் அச்சத்தைச் கிளறினார்கள்.

கி.பி. 1932ஆம் ஆண்டுத் தேர்தலிலே பிரிவு எதிர்ப்புக் கட்சியினர்களின் வெற்றி மக்களின் பிரிவு—எதிர்ப்பு மனப் பான்மையை வெளிக்காட்டியது. முக்கியமாக இந்தியர்களை

எதிர்க்கும் மனப்பான்மை குறைவாக இருந்த மேலேப் பர்மாவில் இவர்களுக்கு மாபெரும் வெற்றிகிடைத்தது. 42 பிரிவு எதிர்ப்புக்கட்சியினரின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரிவை வரவேற்ற கட்சியினர்களில் 29 உறுப்பினர்கள்தாம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பர்மாவின் வருங்கால அரசியல் செல்வாக்கை இத்தேர்தல் சுட்டிக் காண்பித்தது. அவரே கி.பி. 1937ஆம் ஆண்டில் முதல் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

பிரிவு-எதிர்ப்புக் கட்சியினர்களின் வெற்றி பிரிட்டனைத் திகைக்க வைத்தது. ஆகையால், இந்தியாவுடன் நிலையாக இணையவேண்டுமா, பிரியவேண்டுமா என்ற தீர்மானத்தைச் சட்ட மன்றம் தனக்குத் தெரிவிக்குமாறு பிரிட்டன் கேட்டுக்கொண்டது. கி.பி. 1933ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள் ஒரு சிறப்புச் சட்ட மன்றம் கூடியது. இக்கூட்டத்தின்போது பிரிவு—எதிர்ப்புக் கட்சியினர்கள் அதிகமாக வாதாட மறுத்தார்கள். மேலும், பர்மா இந்தியாவுடன் தாற்காலிகமாகத்தான் இணைந்திருக்கவேண்டும் என்ற கொள்கையைக் கைவிட்டு யூசிட் லேங்கின் கொள்கையை ஆதரித்தார்கள். ஆனால், உறுதியான தீர்மானம் ஒன்றும் எடுக்க வில்லையெனப் பிரிட்டனிடம் அறிவித்தார்கள். ஆகையால், இலண்டனில் அமைக்கப்பட்ட ஒரு கூட்டுக்குழுவின் முன் (Joint-Committee) கி.பி. 1933ஆம் ஆண்டு டிசம்பரில் தங்கள் பிரிவை எதிர்க்கும் அல்லது பிரிவை ஆதரிக்கும் கொள்கையைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்குமாறு பர்மிய அரசியல் தலைவர்களைப் பிரிட்டன் கேட்டுக்கொண்டது. பர்மியத் தலைவர்களின் கருத்தினைக் கேட்டவுடன் தீர்மானத்தை இறுதியாக எடுக்கும் உரிமை பிரிட்டிஷ் அரசாங்கத்திடம்தான் இருக்கிறதென்றும் அறிவித்தது. பிரிவு-எதிர்ப்பு வாதிகளின் வாதங்கள் நம்பத்தக்கனவாக இல்லை எனக் கூறிப் பர்மாவை இந்தியாவிலிருந்துப் பிரித்துவிடவேண்டும் என்ற தீர்மானத்தைப் பிரிட்டன் அறிவித்தது. இதுபற்றி ஓர் அரசியல் சட்டதிட்டத்தை உருவாக்கவும் செயல்புரியவும் தொடங்கியது.

பர்மா அரசியல் சட்டதிட்டம்—கி.பி. 1935

கி.பி. 1935ஆம் ஆண்டில் பர்மா அரசியல் சட்டதிட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

(1) 1937ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் பர்மா இந்தியாவி லிருந்து பிரிக்கப்பட்டுத் தனி நாடாக அமைக்கப்படும்.

(2) பிரதமமந்திரியின்கீழ் ஒன்பது அமைச்சரடங்கிய அமைச்சரவை அமைக்கப்படும். இது பிரதிநிதிகள் சபைக்குப் (House of Representatives) பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கும்.

(3) சட்டமன்றம் கலைக்கப்படும்; பதிலாக ஈரவைச் சட்ட மன்றம் அமைக்கப்படும். 132 உறுப்பினர்களடங்கிய பிரதிநிதிகள் மன்றம் அமைக்கப்படும். 36 உறுப்பினர்களடங்கிய சட்டமாமன்ற மேலவை அமைக்கப்படும். இதில்பாதி உறுப்பினர்கள் ஆளுநரால் நியமனஞ் செய்யப்படுவார்கள். எஞ்சிய பாதி உறுப்பினர்களைப் பிரதிநிதிகள் அவை தேர்ந்தெடுக்கும்.

(4) பர்மாவின்மேல் இந்தியாவிற்கிருந்த அதிகாரங்களெல் லாம் அமைக்கப்படும் புதிய பர்மிய அரசாங்கத்திடம் மாற்றி யளிக்கப்படும்.

(5) பாதுகாப்பு, செலாவணி, அயல்நாட்டு விவகாரங்கள், மலைப்பகுதியிலுள்ள சிறுபான்மைக் குழுவினர்கள் பற்றிய அதிகாரங்கள் ஆளுநரிடம் ஒப்படைக்கப்படும்.

(6) நெருக்கடி நிலையின்போது அரசாங்க அதிகாரத்திற்கு ஆபத்துவிளையும் சூழ்நிலை உருவாகும் சமயம் ஆளுநரிடம் அரசாங்கத்தின் முழு அதிகாரங்களும் அளிக்கப்படும்.

ஆளுநருக்கு மேலும் பல சிறப்பான சலுகைகளும், அதிகாரங் களும் அளிக்கப்பட்டன. மொத்தத்தில் பர்மாவிற்குத் தன்னாட்சி யுரிமையளிக்கப்படவில்லை. ஆனால், தன்னாட்சி முறைவழியில் பர்மா செல்லத்தொடங்கியது.

மக்களின் எதிரொலி, கி.பி. 1930–1941

கி.பி. 1930–32ஆம் ஆண்டுகளில் உழவர்கள் கலகம் தோற்ற தாலும், இந்தியாவிலிருந்து பிரியும் பிரச்சினையை அரசியல் தலைவர் கள் தவறான முறையில் கையாண்டதாலும் பர்மா திறமையுள்ள தலைவர்களில்லாமல் வெறுமையாயிருந்தது. இரங்கூன் பல்கலைக் கழக மாணவர்கள் தலைவர் பதவிக்காகப் போட்டியிடத் தொடங் கினார்கள் ; ஒரு நாட்டுப் புரட்சி மூலம்தான் உரிமையை மீண்டும் பெற முடியும் என அவர்கள் நினைத்தார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் உள் நாட்டுப் பள்ளிகளில் படித்தவர்கள்; பர்மிய வரலாற்றை நன்கு அறிந்தவர்கள். பல்கலைக் கழகம் ஆங்கிலேயர் களை ஆதரிக்கிறது ; பல்கலைக் கழகத்தில் மிகச் சிறந்த பதவிக ளெல்லாம் ஆங்கிலேயர்கள் வசமிருக்கின்றன ; மாணவர் இல்ல மேற்பார்வையாளர்களெல்லாம் (Wardens) ஆங்கிலேயர்கள்; இந்நிலையில் பல்கலைக் கழகச் சூழ்நிலையை இவர்கள் வெறுத்தார்கள்.

வரலாற்றைப்பற்றி விரித்துரைக்கும்போது பர்மிய மன்னர்களைத் தாழ்த்திப்பேசி, ஆங்கிலேய ஆட்சி பர்மாவிற்கு வந்தது பர்மாவின் நற்பேறு என ஆங்கிலேய வரலாற்றாசிரியர்கள் வலியுறுத்தினார்கள். தங்களுடைய மறுப்பைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் சட்டைக் கை (Shirt-Sleeves) மட்டுமணிந்துகொண்டும், மரக்கட்டை காலணி அணிந்துகொண்டும், ஒலியெழுப்பிக் கொண்டும் பல்கலைக் கழக நடைக் கூடங்கள் வழியாகப் பர்மிய மாணவர்கள் திரிந்தார்கள். சாதாரணமாக அவர்கள் தாயகத்தில் உற்பத்தி செய்த துணிகளை அணிந்து கொண்டார்கள். ஆண்மீகப் போராட்ட உணர்ச்சிகளடங்கிய ஒரு நாட்டுப் பாடலையியற்றினார்கள்; இதுவே கி.பி. 1948ஆம் ஆண்டில் பர்மாவின் நாட்டுப் பாடலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது; பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள இடங்களில் அவர்கள் இப்பாடலைப் பாடினார்கள். இம்மாணவர்களின் தலைவர்களான பாசெய்ன் (Basein), பதாவுன்ங் (Bathoung), லேமாங் (Laymaung), தேஇன்பேமியன்ட் (Theinpo Hyint) போன்றவர்களைத் 'தாகின்' (Thakin) என அழைத்தார்கள். கி.பி. 1886ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர்கள் தங்களைத் தாகின்கள் என அழைத்துக் கொண்டார்கள், 'தாகின்' என்றால் தலைவர் அல்லது மேலாட்சியாளர் எனப் பொருள். ஆகையால், பர்மிய மாணவர்களும் தங்களைத் 'தாகின்கள்' என அழைத்துக்கொண்டார்கள் கி.பி. 1935ஆம் ஆண்டில் இம்மாணவர்கள் தோபாமா அசி-அயோன் (Do Bama-AsiAyon) அல்லது 'நமது பர்மியக் கூட்டரசு' என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினார்கள்.

கி.பி. 1936ஆம் ஆண்டில் மாணவர்களின் பணிமுடக்கம் (Strike) நடைபெற்றது. பல்கலைக் கழகத்தை அரசாங்கத்தின் பின்ஒட்டாய் நடத்தாமல் கல்வி பயிலும் ஓர் இடமாக மாற்ற வேண்டும்; பேராசிரியர்கள் உயர் பதவியிலுள்ள பணித்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களைப் போல நடந்துகொள்ளாமல் பேராசிரியர்கள்போலவே பணிபுரிய வேண்டும் என மாணவர்கள் முறையிட்டார்கள். கி.பி. 1932ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சட்ட மன்றம் கி.பி. 1935ஆம் ஆண்டில் முடிவு அடையும் நேரம் இது. ஆகையால், கி.பி. 1935ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட புதுச்சட்டப்படி இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட தனி நாடான பர்மாவில் பொதுத் தேர்தல்களை நடத்த வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களாயிருந்த பர்மிய அரசியல் தலைவர்கள் மாணவர்கள் 'பணிமுடக்கம்' செய்வதை வரவேற்கவில்லை; சட்டமன்ற உறுப்பினர்களாக இயங்காத அரசியல் தலைவர்கள் 'பணிமுடக்கம்' செய்வதை ஆதரித்தார்கள்; ஆனால், இவ்விரு திறத்தினரும் மாணவர்களை நயந்து வேண்டினர், 'பணிமுடக்கத்தின்' தலைவர்கள்

மாங்நு (Maungnu), மாங் ஆங்சன் (Maung Aung San) ஆகியோராவர். கி.பி. 1929ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத்தை விட்டு மாங்நு வெளியேறினர்; உள் நாட்டுப் பல்கலைக் கழகத்தின் கல்லூரித் தலைவராக (Principal) சில காலம் பணிபுரிந்தார். மீண்டும் சட்டப் படிப்புப் பயில்வதற்காக இரங்கூன் பல்கலைக் கழகத்தில் மாணவராகச் சேர்ந்தார். மாங் ஆங்சன் பல்கலைக் கழகத்தில் இறுதி ஆண்டு வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்; இவர் உள்நாட்டுப் பள்ளியிலே பயின்றவர் கொரில்லாப் போர் வீரத் தலைவராயிருந்த இவருடைய பாட்டனுர் 1886ஆம் ஆண்டில் கழுவிலேற்றப்பட்டார். இவர்களுக்கு மாங் பாசுவே (Maung Baswe), மாங்கியா நியின் (Maungkyau Nyein), மாங்லாபே (Maung Hlabe), எம். ஏ. ரஷீத் (M. A. Raschid), மாங்கியாவ் மியன்ட் (Maung Kyaw Myint), மாங் துன்வின் (Maung Tun Win) போன்ற இளைஞர்களின் ஆதரவு கிடைத்தது. பர்மா உரிமைபெற்ற பிறகு இவர்களெல்லோரும் அமைச்சர்களாகப் பணிபுரிந்தார்கள். கி.பி. 1939ஆம் ஆண்டில்தான் பல்கலைக்கழகச் சட்டம் திருத்தப்பட்டது. மாணவர்களுடைய வேண்டுகோள் ஓரளவில் நிறைவேற்றப்பட்டது; கி.பி. 1939ஆம் ஆண்டில் யூகின்தட் பல்கலைக்கழகத்தின் முதலாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழக வேந்தராகப் பதவியேற்றுர்.

கி.பி. 1937ஆம் ஆண்டுத் தேர்தலில் 'தாகின்கள்' பங்கெடுக்க மறுத்தார்கள். இத்தேர்தலுக்குப் பின் பாமாவ் பிரதமராகப் பதவியேற்றுர். நேர்மையுடனும், கருத்துத் தெளிவுடனும், ஓரளவு திறமையுடனும் பணிபுரியத் தொடங்கினுர் இவர். ஆனல் இப்புது அரசாங்கத்திற்கு இகழ்ச்சி உண்டுபண்ணும் நோக்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்களான யூ சா (U Saw), யூ பாபே (U Bape) ஆகியவர்கள் குழப்பச் சூழ்நிலையை உருவாக்கினுர்கள்.

கி.பி. 1938 ஆம் ஆண்டில் யூசாவின் செய்தித்தாள் வன்முறை கலந்த ஒரு கலகத்தை முஸ்லிம்களுக்கெதிராக உருவாக்கியது. இக் கலகமே படிப்படியாக இந்தியர்களைத் தாக்கும் கலகமாக மாறியது. அரசியலில் ஈடுபட்ட பொங்யீகள் இக்கலகத்தில் சிறந்த பங்கு கொண்டார்கள். இவ்வாறன சூழ்நிலையில் 'தாகின்கள்' பணி முடக்கத்தையும் (Strikes) ஊர்வலங்களையும், பொதுக்கூட்டங் களையும் நடத்தினுர்கள். ஆதையால் பாமாவ் பதவியிலிருந்து துரத்தப்பட்டார். யூபு (U Pu) பிரதமராகப் பதவியேற்றுர். இம் மாறுதலைச் செய்தவர் யூசாதான்; பாமாவ் அரசாங்கம் திறமையில் லாமல் கவனக்குறைவாக நடந்துகொள்கிறது எனக்கூறி 1939ஆம் ஆண்டு பிப்ரவரியில் பாமாவிற்கெதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து யூ சா வெற்றியடைந்தார்.

யூ பூ அரசாங்கம் பத்தொன்பது மாதங்கள் பதவியிலிருந்தது. யூபூ பழமைப் பற்றுளர் கொள்கைகளைப் பின்பற்றினர். மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றும் 'தாகின்கள்' யூபூவிற்கெதிராக வேலை செய்ததால் இறுதியில் யூ பூ பதவியிலிருந்து நீக்கப்பட்டார். கி.பி. 1939ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் இரண்டாம் உலகப்போர் மூண்டபோது பிரிட்டனை ஆதரித்ததால்தான் இறுதியாக யூ பூ அரசு கவிழ்ந்தது.

தாகின்களும், டாக்டர் பாமாவும் ஒரு புதிய அரசியல் அமைப் பான 'சுதந்திர உரிமைக் கூட்டணி' (Freedom Bloc) மூலம் யூபூவை எதிர்த்தார்கள். பர்மாவிற்கு உரிமை அளிக்குமாறு ஆங்கிலேயர்களை யூபூ அரசாங்கம் கேட்கவேண்டும், இல்லாவிடில் பதவி விலகல் செய்யவேண்டும் என்ற பிரசாரத்தை மக்களிடையே இவர்கள் பரப்பினர்கள். உரிமையின் மூலம்தான் தங்கள் பொருளா தார நிலையை வளர்க்க முடியும் என மக்கள் நம்பும்படி, பிரசாரம் செய்தார்கள். பொங்யீகளும் 'உரிமைக் கூட்டணி'யை ஆதரிக் கிறர்கள் என அறிந்தவுடன் மக்களும் செய்தித் தாள்களும் பாமாவ் 'தாகின்கள்' கட்சிக்குப் பேராதரவு அளிக்கத் தொடங்கினர் கள். உரிமைக் கூட்டணியின் செயலாளர் தாகின் ஆங்சன் (Thakin Aungsen) யூபூ பதவியிலிருந்து விலக வேண்டும் எனச் செய்தித் தாள்களின் மூலம் பிரசாரம் செய்தார். மேலும், யூபூவின் வலக்கையிலிருந்த யூசாக்கூட இவ்வகையான எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவித்தவுடன் யூபூ திகைப்புற்றர். இதற் கிடையிலே ஜப்பானின் தென்கிழக்காசியக் கொள்கை தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. தங்கள் நாட்டியக்கத்தை வலுப்படுத்து வதற்காக ஜப்பானின் உதவியை நாடலாம் எனத் தாகின்களும் பாமாவும் நினைத்தார்கள்.

கி.பி. 1940ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாமாவும், யூபூவும் வெளிப்படையாகவே மோதிக்கொண்டார்கள். ஆகையால், பாமாவ் கைதுசெய்யப்பட்டார்; ஓராண்டுச் சிறைத்தண்டனை யளிக்கப்பட்டது. மக்களின் உணர்ச்சி கொதித்தெழுந்தது. இவ்வகையான சூழ்நிலை உருவாகியதால் யூபூ பதவியிலிருந்து நீக்கப்பட்டார். யூசா பிரதமரானர்.

யூசாவின் கொள்கைகள்

(1) நாட்டிற் கெதிராகப் பணிபுரிபவர்களை ஒழிக்கவேண்டும். பாமாவ் மற்றும் பல தாகின்களின் சிறைவாழ்வு நீடிக்கப்பட்டது. ஆஸ்கன் உட்படப் புரட்சியாளர்களான தாகின்கள் நாட்டை விட்டோடிச் ஜப்பானுக்குச் சென்றர்கள். செய்தித்தாள்களின்

உரிமை பறிக்கப்பட்டது; கிளர்ச்சி செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்.

(2) உரிமைக் கோரிக்கையை விட்டுவிட்டுத் தன்னாட்சி யுரிமையுடைய மன்னர் நேராட்சிப்பகுதி (Dominion Status) உரிமைக் கோரிக்கையாக வெளியிடப்பட்டது.

(3) அரசாங்கத்துறை வேலைகள் பர்மியர்களுக்கே என்று கூறப்பட்டது.

(4) கட்டாய இலவசத் தொடக்கக்கல்வி அளிக்கப்படல் வேண்டும்.

(5) சிறுபான்மையோர் குழுவினரின் உரிமைகளுக்கு ஆதரவளித்தல்.

(6) ஜப்பானிய ஆதரவை நாட முயற்சி யெடுத்தல் வேண்டும்.

யூசா தம் கொள்கைகளைச் செயல் படுத்தத் தொடங்கியவுடன் ஜப்பானிய தென்கிழக்காசியப் படையெடுப்பு ஏற்பட்டது; இதன் விளைவாக யூசாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதன்பின் பர்மியநாட்டுரிமை இயக்கம் ஜப்பானிய ஆட்சியின்போது பாமாவ், தாக்கின்கள் தலைமையின்கீழ் வந்தது.

13. பர்மாவில் ஜப்பானிய ஆட்சி

ஜப்பானுடைய தனித்தலைமைத் திட்டத்தில் பர்மாவிற்குத் தொடக்கத்தில் முதன்மையளிக்கப்படவில்லை. ஆனால்,

(1) சீனாவிற்குச் செல்லும் பர்மா நெடுஞ்சாலை அமைக்கப் பட்டதாலும்,

(2) ஆங்சானும், மற்றத் தாகின்களும் பர்மாவை விடுதலை செய்யும் நோக்கத்துடன் ஜப்பானின் உதவியை நாடியதாலும் ஜப்பானின் மனம் மாறியது. மேலும், பர்மியர்கள் தங்களுடன் ஒத்துழைத்தால் தங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும் என ஜப்பான் நம்பியது.

யூசாவின் ஆட்சியின்போது தாகின் ஆங்சன் மாறுவேட மணிந்து அமாய்த் துறைமுகத்திற்குச் சென்று சீனர்களின் உதவியை நாடினார். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தாங்கள் கலகம் செய்ததால் தங்களுக்குதவுமாறு சில தாகின்கள் ஜப்பானிய இரகசிய ஒற்றர்களை அணுகிக் கேட்டுக்கொண்டார்கள். படைப் பகுதி முதல்வன் சுசூகி (Colonel Susuki) இரங்கூனில்

செய்தித்தாள் எழுத்தாளராகப் பணிபுரிந்தபோது ஆங்சனைச் சந்திக்கும் வாய்ப்பேற்பட்டது; அவர் தம்முடன் ஆங்சனை டோக்கியோ நகரத்திற்கு அழைத்துச் சென்றார். ஒரு ஜப்பானிய வாணிபக் கப்பலில் ஆங்சன் இரங்கூனிற்குத் திரும்பிவந்தார். இவர் மாங்பா சுவேயுடனும் (Maungba Swe), மாங்கியாவ் நெயினுடனும் (Maung Kyaw Nein) கலந்து 'முப்பது தோழர்கள்' (Thirty Comrades) குழுவை உருவாக்கினர். அவர்கள் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் வாழ்க்கையை ஒப்படைப்பதாக வாக்குறுதி யெடுத்துக் கொண்டார்கள். தங்கள் உறவினர்களை அரசாங்கம் துன்புறுத்தக் கூடாது என்ற நோக்கத்துடன் புதுப்பெயர்களை வைத்துக் கொண்டார்கள். ஜப்பானியர் வலிந்து கைப்பற்றிய பார்மோசாவில் (Formosa) இவர்களுக்குப் படைப் பயிற்சியளிக்கப்பட்டது.

சீனாவுடன் இணைக்கும் பர்மா நெடுஞ்சாலை அமைக்கப் பட்டவுடன் ஜப்பான் பர்மாவின்மேல் ஆர்வம் காட்டியது. ஆகையால் ஜப்பானியர்கள் ஆங்சனுடன் மீண்டும் தொடர்பு கொண்டார்கள். பர்மியர்கள் பிரிட்டனை ஆதரிக்காமல் ஜப்பானை ஆதரித்தது இயல்பே. கிறித்தவப் பிரிட்டனை ஆதரிப்பதற்குப் பதிலாகப் புத்தசமயத்தைப் பின்பற்றும் ஜப்பானை ஆதரிப்பதுமேல் எனப் பல பர்மியர்கள் கருதினர்கள். ஜப்பான் மூலம்தான் உரிமை அடையமுடியும்; பிரிட்டன்மூலம் அடையமுடியாது எனப் பர்மியர்கள் நினைத்தார்கள். முப்பது தாகின் தோழர்களும் படையெடுத்துவரும் ஜப்பானுக்குப் பேராதரவளிக்க முன் வந்தார்கள்.

ஜப்பான் பர்மாவை உரிமை நாடாக மாற்றியமைக்கும் என ஆங்சன் எண்ணினர். ஜப்பான் இக் கோரிக்கையைச் செயல் படுத்தாமல் காலங்கடத்தியது. ஜப்பான் தாய்லாந்தைக் கைப் பற்றிய சமயம் பர்மா விடுதலைப்படையை (Burma Independence Army) அமைத்தது. ஜப்பானியப் படைவீரர்களுடன் பர்மாவின் விடுதலைப்படையும், முப்பது தாகின் தோழர்களும் கீழைப் பர்மாவினுள் கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் நுழைந்த போது மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்; மேலும் பல பர்மியர்கள் பர்மாவின் விடுதலைப்படையில் சேர்ந்தார்கள். மூன்று அல்லது நான்கிடங்களில்தாம் இருதரப்பாரும் நெருங்கி மோதிக் கைகலந்து சண்டையிட்டார்கள். சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றியவுடன் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்குள் சென்று பின் வாங்கினர்கள். ஆங்கிலேயப் படைவீரர்களைக் கொரில்லாப்போர் மூலம்கூடப் பர்மியர்கள் துன்புறுத்தவில்லை. சில சமயங்களில் பரிவுகூடக் காட்டினர்கள்.

கீழைப் பர்மையையும், இரங்கூனையும் கைப்பற்றிய பின்கூடப் பர்மிய உரிமையை அறிவிக்கும் அறிகுறிகளை ஜப்பான் காட்டவில்லை. பிறகு, பர்மிய மாகாணங்களை ஜப்பானிய விமானப் படைகள் தாக்கின. இதன்விளைவாக மேலைப் பர்மாவைச் ஜப்பான் கைப்பற்றியது. ஆகையால், கி.பி 1942ஆம் ஆண்டு ஜப்பான் பர்மா முழுவதையும் கைப்பற்றியது.

ஜப்பானியக் கைப்பற்றலும் பொருளாதாரமும்

பர்மாவின் வாணிபம் மிகவும் பாழ்பட்டது. மலேயா தொல்லையுற்றதைப்போல் பர்மாவின் அயல்நாட்டுக் கடல் வாணிபமும் தொல்லைக்காளாகி நிறுத்தப்பட்டது. கடல்வாணிபம் தடைசெய்யப்பட்டதால் மலேயாவிற்கு அரிசி கிடைக்கவில்லை. ஆனால், பர்மாவில் 3 மில்லியன் டன் அரிசி எஞ்சி, பயன்படுத்தப்படாமல் கீழைப்பர்மாவிலிருந்தது. படைத்துறையைச் சாராத போக்குவரத்து வசதிகள் பர்மாவில் பாழ்பட்டதால் பசியால் வாடும் மேலைப்பர்மாவிற்கு இவ்வரிசியை அனுப்பமுடியவில்லை. இதே காரணத்தால் மேலைப்பர்மாவிலிருந்து சமையல் செய்வதற்குப் பயன்படுத்தும் எண்ணெயைத் தெற்கே அனுப்ப முடியவில்லை.

பெரும்பான்மையான கால்நடைகளைத் தங்கள் படைகளின் தேவைகளுக்காக ஜப்பானியர்கள் பயன்படுத்தினார்கள். பல ஆண்டுகள் ஜப்பானியர் அரிசிப் பொருளாதாரச் சூழ்நிலையைப் பாழாக்கினார்கள். அன்றாடத் தேவைகள் கிடைக்காமல் மக்கள் துன்புற்றனர். பல குடியானவர்கள் தங்கள் தேவைகளை மட்டும் இன்னல்பட்டு நிறைவேற்றும் நிலையை யடைந்தார்கள். வரம்பு மீறி 'நாணயத்தை' (banana notes) அச்சடித்து வெளியிட்டதால் பொருளாதாரம் மேலும் இழிவான நிலையை யடைந்தது. பொன் அல்லது வேறேதாவது மதிப்புவாய்ந்த உலோகத்தின் பக்க ஆதரவில்லாமல் காசுமுறிகளை அச்சடித்தார்கள். பயன்படுத்தும் பொருள்கள் (Consumer goods) கிடைப்பது அரிதாக இருந்தாலும், எல்லைமீறிக் காசுமுறிகளைப் பக்க ஆதரவில்லாமல் அச்சடித்து வெளியிட்டதாலும் மிகவும் இழிவான பணவீக்கச் சூழ்நிலை (inflation) யேற்பட்டது. தொழிற்சாலைபற்றிய நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்ததே ஜப்பான் புரிந்த ஒரே ஒரு நல்ல செய்கை. இரண்டாவது, தன்னிறைவுடைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு ஆதரவளிக்க முன்வந்தது. ஆனால், பர்மாவின் இரயில், ஆறு ஆகியவற்றின் போக்குவரத்தும் இயந்திரத் தொகுதிகளும் மிகுதியாகச் சீர்குலைந்ததால், போர் முடிந்தபின் இவற்றின் நிலையை விரைவில் சீர்ப்படுத்த முடியவில்லை.

ஜப்பானின் ஆட்சியும் விடுதலைப் போராட்டமும்

ஜப்பானிய இராணுவ ஆட்சி மூன்றுண்டுகள் நீடித்தது. ஆனால் 'பர்மிய மக்களுக்கு 60 ஆண்டுகள் ஆங்கிலேய ஆட்சியை விட இது மேலும் வெறுப்பூட்டியது' எனப் பர்மிய வரலாற்றுசிரியர் மாங்தின் ஆங் கூறுகிறுர்.

பர்மா விடுதலைப் படையை (B.I.A.) ஜப்பான் அமைத்ததைப் பற்றி ஏற்கெனவே கண்டோம். தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்தவே இப்படையை ஜப்பானியர்கள் அமைத்தார்கள். விடுதலைப் படையில் அரசியலில் ஈடுபட்ட பொங்யீகளு மிருந்தார்கள். இவர்கள் ஆங்கிலேயர்களையும், சீனக் குயோமின்டாஸ் படைகளையும் கடுமையாக எதிர்த்தார்கள். விடுதலைப் படையில் 30,000 பர்மியர்களிருந்தார்கள் ; குடியேற்ற ஆட்சியிலிருந்து ஜப்பான் பர்மாவிற்கு விடுதலையளிக்கப் போகிறது என இவர்கள் ஆர்வத்துடன் ஜப்பானை ஆதரித்தார்கள். விடுதலைப் படைப் போர்வீரர்கள் மாகாணங்களிலெல்லாம் சுற்றித் திரிந்து பல இடங்களில் நிருவாகத்தைக் கைப்பற்றினுர்கள்.

கி.பி. 1942ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் தாகின்துன்ஒகே (Thakin Tunoke) தலைமையில் பாஹோ நிருவாகத்தை (Baho administration) ஜப்பானியர்கள் அமைத்தார்கள். சிதறியிருந்த விடுதலைப் படை வீரர்களை ஒன்று சேர்க்கப் பாஹோ நிருவாகம் முயன்றது. ஆனுல், இதன் முயற்சி தோல்வியடைந்தது. இரங்கூனில் மட்டும்தான் பாஹோவின் நிருவாகம் திறமையுடன் செயல் புரிய முடிந்தது. சூன் மாதத்திற்குள் ஜப்பானிய நடு நிருவாகக் குழு (Japane Central Administrative Committee) அமைக்கப் பட்டது ; ஆகையால் மக்களின் ஆதரவு பெருத பாஹோ நிருவாகத்திடமிருந்து எல்லா அதிகாரங்களும் பிடுங்கப்பட்டன. பாஹோ நிருவாகம் கலைக்கப்பட்டது. பதிலாகப் படைத் துறைப் பணித் தலைவர் ஆங்சனின் (Major General Aungsan) கீழ் ஒரு புதிய பர்மாப் பாதுகாப்புப்படை(The Burma Defence Army-BDA) அமைக்கப்பட்டது. ஆனுல் உண்மையில் எல்லா அதிகாரங்களும் ஜப்பானியப் படையிடமே இருந்தன. ஜப்பான் இராணுவ ஆட்சியை அமைத்துப் பர்மாவை ஓர் எதிரிகளின் நாடாகக் கருதித் தான் ஆட்சி புரியத் தொடங்கியது. கி.பி. 1942ஆம் ஆண்டு மே மாதம் மாண்டலேவைச் ஜப்பான் கைப்பற்றியவுடன் ஜப்பானியர்களின்மேல் மனக்கசப்படைந்த ஆங்சன் ஆங்கிலேயர்களுடன் தொடர்புகொண்டு ஜப்பானுக்கெதிராக ஓர் இரகசிய இயக்கத்தை அமைக்கும் நோக்கத்துடன் தாகின் தேஇன்பே மியின்ட் (Thakin Teinpe Myint) என்பவரை இரகசியமாக இந்தியாவிற் கனுப்பினுர்.

ஜப்பானியர்கள் கொடிய நாகரிகமற்ற செயல்களைப் புரிந்தார்கள் ; அடக்குமுறை ஆட்சியை அமைத்தார்கள். ஜெர்மன் ஒற்றுக் காவற்படை (Gestopo) போல ஓர் இராணுவக்காவல் படையை அமைத்தார்கள். விவரங்களைத் திரட்டுவதற்காகச் சான்ருளர்களை (Witnesses) இரக்கமில்லாமல் அடித்துத் தகடாக்கினர்கள். ஒரு படுகள ஆட்சியைப் (reign of terror) பர்மாவின்மேல் திணித்தார்கள். உதாரணமாக, ஒரு ஜப்பானிய இராணுவக் காவல் படை வீரர் 'நிறுத்து' எனச் சைகை காட்டியவுடன் சிறிது தாமதமாகச் சைக்கிள் ஓட்டுபவர் சைக்கிளை நிறுத்தினுல் அவருக்கு உடனடியாகக் கடுமையாகக் கன்னத்தில் அறை விழுவது உறுதி. ஒரு பெண் சிறிது தாமதமாகக் காலராவிற்கெதிராகப் போடப்படும் நோய்த் தடுப்பு ஊசிபோடும் சான்றிதழை (Certificate) காண்பித்தால், அவளுடைய பிட்டத்தில் (buttocks) ஊசி போட்ட குறிகள் இருக்கிறதா எனப் பார்ப்பதற்காக எல்லோர் எதிரிலும் அவளுடைய சட்டையின் கியு விளிம்பு முழுவதையும் ஜப்பானியக் காவலர்கள் தூக்கிவிடுவார்கள்.

பாஹோ நிருவாகத்தின்மேல் மனக்குறைவு ஏற்பட்டவுடன் படைத்துறையைச் சாராத அரசாங்கத்தின் தலைவராக, ஜப்பானிய இராணுவ அதிகாரத்தின்கீழ்ப் பணிபுரிய டாக்டர் பாமாவைத் தேர்ந்தெடுத்தார்கள். தங்களுடைய நாட்டுரிமை இயக்கத்தின் நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவும், ஆட்சி அதிகாரத்தை அனுபவிப்பதற்காகவும் நாட்டுத் தலைவர்கள் ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்தார்கள்; ஆனுல் தாகின் தேயின்பே (Thakin Theinpe) இந்தியாவிற்கு ஓடினுர். சோ (Soe) ஜப்பானியர்களுக்கெதிராகக் கொரில்லாப் போர் புரிந்தார். பின்பு தங்கள் கொள்கைகளை ஜப்பானியர்கள் மாற்றிக் கொண்டார்கள். பர்மியர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகப் பர்மாவிற்கு உரிமையளிப்பதாக வாக்குறுதியளித்தனர். ஆனுல் இதற்கு ஒரே ஒரு கட்டுப்பாடு விதித்தார்கள். நேச நாடுகளை எதிர்த்துப் போர்புரிவதாகப் பர்மா அறிவிக்க வேண்டும். கி.பி. 1943ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் உரிமைப் பர்மிய அரசாங்கத்திடம் ஜப்பானிய இராணுவ நிருவாகம் ஆட்சி அதிகாரம் ஆகியவற்றை ஒப்படைத்தது. இப்புதிய பர்மா உடனடியாக இங்கிலாந்துடனும் அமெரிக்காவுடனும் போர் புரிவதாக அறிவித்தது.

டாக்டர் பாமாவ் நாட்டின் முதல்வர் (Head of State of Adipadi) ஆனுர்; மேலும், பிரதமர் அமைச்சரவை நாட்டின் முதல்வரிடம் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தால் முக்கிய நிருவாக

விவகாரங்கள்பற்றி ஆலோசனையளிக்க ஒரு தனிப்பட்ட ஆய்வுரையாளர்கள்குழு (Privy Council) அமைக்கப்பட்டது.

பாமாவ் நிர்வாகத்தில் அமைச்சர்கள் பதவியேற்ற தாகின் நாட்டுத் தலைவர்களுக்கு ஜப்பானியர்களிடையே அதிகச் செல்வாக்கும் மக்களுடைய பேராதரவும் இருந்தன. ஜப்பானியர்களின் அடக்குமுறை அட்டூழியங்களிலிருந்து இவர்கள் இரகசியமாகப் பல பர்மியர்களைக் காப்பாற்றினார்கள். ஆங்சனும், தான்துனும் (Than Tun) ஜப்பானியர்களைக் கவிழ்ப்பதற்காகச் சூழ்ச்சிகள் செய்தார்கள்.

கி.பி. 1943ஆம் ஆண்டில் பர்மா பாதுகாப்புப் படையைப் பர்மா நாட்டுப் படையாக (Burma National Army) ஆங்சனும், படைப்பெருந் தலைவர் நீவின்னும் (General Newin) மாற்றியமைத்தார்கள். நாட்டுப் படையின் தனிச் சிறப்புப் பண்புகள் யாவும் இப்படைக்கிருந்தன. ஜப்பானியர்களை வெறுக்கவும், கொரில்லாப் போர் முறையில் தேர்ச்சி பெறவும் நாட்டுப் படை வீரர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், கி.பி. 1944ஆம் ஆண்டில் ஜப்பானியர்கள் தோல்வியடையப் போகிறார்கள் எனப் புரிந்தவுடன் அவர்களைத் தாக்கவும் தொடங்கினார்கள்.

ஜப்பானியர்களைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் இது தீவிரமாக இறங்கியது. ஆங்சன் கலகம் செய்யும் ஒரு திட்டத்தையும் வகுத்தார். காரேன் தலைவர்களுக்கும், பர்மியப் படையிலிருந்த காரேன் படைப்பிரிவுகளுக்குமட்டும்தான் இந்த இரகசியத் திட்டத்தைப் பற்றித் தெரியும். பிரிட்டிஷ் முதற் பெரும் படைத் தலைவர் கோமான் மவுன்ட் பாட்டன் (British commander-in-chief Lord Mountbattan) கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆங்சனுக்குக் கலகம் செய்ய உடன்பாடு அளித்தார். உடனடியாக ஆங்சனும் அவர் படை வீரர்களும் கலகம் செய்து ஜப்பானியர்களைத் தாக்கினார்கள். நாடு முழுவதும் ஜப்பானியர்களை எதிர்க்கும் கிளர்ச்சிகள் தோன்றின. இரங்கூனை ஆங்கிலேயப் படை வீரர்கள் கைப்பற்றியவுடன் ஜப்பானிய ஆட்சி கவிழ்ந்தது. கி.பி. 1945ஆம் ஆண்டில் மே மாதத்திற்குள் பிரிட்டன் பர்மா முழுவதையும் மீண்டும் கைப்பற்றியது. பர்மிய மக்களும் நாட்டுரிமை இயக்கத் தலைவர்களும் ஆங்கிலேயர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

பர்மிய மாகாணம் ஒன்றுகூடப் போரினால் பாதிக்கப்படவில்லை. பர்மாவையும், தாய்லாந்தையும் இணைக்கும் இரயில்வழி போடுவதற்காக வேலையில் அமர்த்தப்பட்ட பல பர்மிய இளைஞர்கள்

ஆங்கிலேய டச்சுப் போர்க் கைதிகளுடன் வலிந்து கனிவிக்கப்பட்ட தொழிலாளர் கூடாரங்களில் (Forced labour camp) மரித்தார்கள். பொருளாதாரம் அடியோடு நிலைகுலைந்தது. ஆங்கிலேயர்கள் ஜப்பானியப் படையெடுப்பில் பின்வாங்கும் போது 'நிலத்தளத்தைக் கரியாக்கும் கொள்கையை'ப் (Scorched Earth Policy) பின்பற்றியதால் எண்ணெய்க் கிணறுகள், வெள்ளி, டங்ஸ்டன் சுரங்கங்கள், துறைமுகக்கருவிக்கல அமைவு ஆகியவை வெடி வைத்துத் தகர்க்கப்பட்டன. ஜப்பானிய ஆட்சியின்போது பர்மா வெளிநாடுகளுடன் வாணிபம் செய்யவில்லை. அரிசிப் பஞ்சமில்லை யென்றாலும் ஆடைப் பஞ்சமிருந்தது. பொருள்களின் விலை 100 மடங்கு மிகுந்திருந்தது. பணவீக்கத்தின் வெறியாட்டம் கட்டுப் படுத்த முடியாத நிலையிலிருந்தது. இவ்வகையான சூழ் நிலையில் தான் ஆங்கிலேயர்களின் ஆட்சி மீண்டும் பர்மாவிலமைக்கப் பட்டது.

14. சுதந்திர பர்மா

பிலிப்பைன்சுக்கு உரிமை கிடைத்தபிறகு பர்மாவிற்கும் உரிமை கிடைத்தது. பர்மாவிற்கு உரிமை கிடைத்தவுடன் அந்நாட்டைப் 'பர்மாக் கூட்டரசு, பொதுவரசு' (Republic of the Union of Burma என அழைத்தார்கள். இச்சிறப்புப் பெயரிலுள்ள முக்கியமான சொல் 'பொதுவரசு' அல்லது 'குடியரசு' (Republic). பர்மாவி லுள்ள பாதிப்பகுதிகளுக்குமேல் ஷான்கள் (Shans), காசின்கள் (Kachins), அராகன்கள் (Arakanese), காரேன்கள் (Karens), இந்தியர்கள், சீனர்கள் போன்ற சிறுபான்மையினரான எண்ணிகை யுள்ள இனத்தார்கள் வாழ்ந்து வந்தார்கள். பெரும்பான்மையான பர்மிய இனத்தைச் சேர்ந்த பர்மியர்கள் இரங்கூனிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள்.

ஜப்பான் அடைக்கலம் புகுந்தவுடன் ஆங்கிலேயர்கள் பர்மா விற்குத் திரும்பி வந்தார்கள். பர்மாவிற்கு இறுதியாக ஆட்சி யுரிமை (Dominion Status) கொடுப்பதாக ஆங்கிலேயர்கள் வாக்களித்தார்கள்; ஆனால், பர்மியத் தலைவர்களுக்கு இது மன நிறைவு அளிக்கவில்லை. முழு உரிமை அளிக்கவேண்டும் என ஆங்சானும் (Aung San), அவருடைய வல்லாண்மைக் கொள்கையை எதிர்க்கும் மக்கள் விடுதலைப் போராட்டக் கூட்டிணைவுக் கட்சியும் (Anti-Fascist People's Freedom League AFPFL) வலியுறுத்திக் கோரிக்கை விடுத்தனர். உரிமையைப் பற்றிப் பிரிட்டனுடன் பேச்சு நடந்துகொண்டிருக்கும்போது ஆங்சானும், அவருடைய ஆறு நண்பர்களும் இரங்கூனில் நடந்த அமைச்சர் அவைக் கூட்டத்தி

லிருந்து வெளியே வருங்கால் படுகொலை செய்யப்பட்டார்கள். பிரதமர் பொறுப்பை யூநூ (U Nu) ஏற்றுக்கொண்டார். கி.பி. 1947ஆம் ஆண்டில் இவர் தலைமையின்கீழ் ஒரு நாட்டரசியல் அமைப்புத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரெஞ்சு நாட்டின் தலைவரைப் போலவும், பிரிட்டனிலுள்ள அமைச்சர் அவையைப் போலவும், அமெரிக்கக் குடியரசில் உள்ள இரு சட்ட மன்றங்களைப் போலவும் (bi Cameral Legislature) உள்ள அரசியல் அமைப்புத் திட்டத்தைப் பர்மா செயல் முறையில் கொண்டுவந்தது. இவ்விரு சட்டமன்றங்களில் ஒன்று இனத் தேசியக் கூற்றரங்கு (Chamber of Nationalities ; மற்றொன்று பிரதிநிதிகள் சட்டமன்ற மண்டபம் (Chamber of Deputies). இனத்தேசியக் கூற்றரங்கில் 63 பர்மியர்களும், 62 மற்ற இனங்களைச் சேர்ந்தவர்களும் உறுப்பினராக இருந்தார்கள். பிரதிநிதிகள் சட்டமன்ற மண்டபத்தில் 250 பிரதிநிதிகள் உறுப்பினர்களாயிருந்தார்கள். பெயரளவில் அணியெனத் திகழ்ந்த ஒரு மக்கள் பெருந்தலைவருக்கும், ஒரு பிரதம அமைச்சருக்கும், மூன்று துணைப் பிரதம அமைச்சருக்கும் (Deputy Prime Ministers) சட்ட நிறைவேற்ற ஆட்சித் துறையின் முழு உரிமை அளிக்கப்பட்டது. மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது; இன்பமான ஆக்க நல அரசு (Welfare State) அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

பர்மா உரிமைக்குப் பரிவு காட்டிய தொழிற்கட்சித் (Labour Party) தலைவரான கிளிமெண்ட் அட்லியுடன் (Klement Atlee) ஓர் உடன்படிக்கை செய்வதற்காக இலண்டனுக்கு யூநூ சென்றார். கி.பி. 1947ஆம் ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள் செய்த உடன்படிக்கையின்படி பர்மாவிற்கு முழு உரிமை அளிக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்கீழ் நிதி பற்றிய விவகாரங்களில் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆங்கிலேயரின் கப்பல், விமானம், இராணுவப்படை ஆகியவற்றிற்குரிய தூதுக் குழு ஒன்றைப் பர்மா ஏற்றுக் கொண்டது. பர்மாவின் துறைமுகங்களையும், விமானத்தளங்களையும் பயன்படுத்த ஆங்கிலேயப் படைக்கு உடன்பாடு கொடுக்கப்பட்டது. கி.பி. 1948ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் விடியற்காலை 4-20 மணிக்குப் பர்மா உரிமையடைந்தது.

பிரதமர் யூநூ (கி.பி. 1948 - 58)

உரிமை கிடைத்தவுடன் குழப்பமும், கலகமும் முளைத்தன. ஆங்கிலேய ஆட்சி மறைந்த பிறகு அமைதி குலைந்தது;

சட்டம் ஒதுங்கி மறைந்தது; தள்ளாடிக்கொண்டிருந்த சமூக அமைப்பு விழுந்தது. சிறுபான்மையான எண்ணிக்கையுள்ள இனத்தார்களுக்குள் சண்டை மூண்டது. இவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டதோடல்லாமல் மத்திய அரசாங்கத்துடனும் போர் புரிந்தார்கள். இதனால் ஆட்சிக்குழுவுக்குள் பிரிவு ஏற்பட்டது. கம்யூனிஸ்டுகள் ஸ்டாலின் கட்சி, (Stalinists) டிராட்சிக் (Trotsksy) கட்சி என இரு பிரிவாகப் பிரிந்து, தனித்தனியாக உள்நாட்டுக் கலகத்தில் பங்குகொண்டனர். உரிமைக்காகப் பாடுபட்ட முன்னாள் தலைவர்களில் பலர் மக்கள் தொண்டர்கள் சங்கம் (People's Volunteer Organisation-PVO) ஒன்றை நிறுவிக் கலகம் செய்தார்கள். மேலும் பர்மாவிலுள்ள திறமையான படைவீரர்களுடைய காரேன் நாட்டுப் பாதுகாப்பு மன்றம் (Karen National Defence Organisation) அரசாங்கத்திற்கு எதிராகப் படையேந்திக் கலகம் செய்தது. கிராமப் பகுதிகளில் கொடுஞ் சூழ்நிலை நிலவி வந்தது; பயணம் செய்யவே முடியாமலிருந்தது. நான்கு அல்லது ஐந்து நகரங்கள்தாம் (இரங்கூன் உட்பட) நன்கு பாதுகாக்கப்பட்டன.

யூநூ படைத்துறையை நிறுவி வலுப்படுத்தினார்; 'காவலர் இராணுவப் படைக்கூட்டரசு' (Union Military Police) ஒன்றை நிறுவினார். கிராமப் பாதுகாப்புப் படைவீரர்களுக்கு விளக்க மூட்டினார். கலகக்காரர்களைக் கடுமையாக எதிர்த்தார். ஆனால், அடைக்கலம் புகும் கலகக்காரர்கள் நல்லவிதமாக நடத்தப் படுவார்கள் என வாக்குறுதியளித்தார். சமூகச் சீர்திருத்தங்கள் செய்யவும் முனைந்தார். புத்தமதத்தைப் பின் பற்றுபவர்களிடையே புத்துணர்ச்சி ஏற்படப் பாடுபட்டார்; கையூட்டையும், ஊழலையும் ஒழிக்கும் நோக்கத்துடன் ஒரு சிறந்த ஆராய்ச்சிக் குழுவை (Bureau of Special Investigation) அமைத்தார். உடல்நலம், கல்வி வசதிகளைப் பெருக்க வேண்டுமென்றும், குறைவான செலவில் வீட்டு வசதிகள் செய்ய வேண்டுமென்றும் திட்டமிட்டார். அயல் நாட்டு நூல்களை மொழிபெயர்ப்பதற்காகப் பர்மா மொழிபெயர்ப்பு மன்றம் ஒன்றை அமைத்தார்.

சமூக அமைப்பிலுள்ள கொடுமையை நீக்கவும், நெறியற்ற வழியில் சென்ற பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தவும் சோஷியலிஸம் தான் தேவை என யூநூ பிரசாரம் செய்தார். நிலங்களைப் பங்கீடு செய்யவும், குத்தகைக்காரர்களின் நிலைமையைச் சீர்ப் படுத்தவும், எளிய தவணையில் கடன் கொடுக்கவும், நிலங்களைச் சீர்செய்யவும், பண்படுத்தவும் (reclamation), நீர்ப்பாசன வசதிகளைச் செய்யவும், கடன் தொல்லைகளைக் குறைக்கவும்

திட்டங்கள் வகுத்தார். இதன் விளைவாகப் படிப்படியாகக் கலகக்காரர்களை மக்கள் வெறுக்கவும், ஏளனம் செய்யவும் தொடங்கினார்கள். சூழ்நிலையில் வளர்ச்சி யேற்பட்டதால் கி.பி. 1952ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல்கூட நடந்தது. ஆனாலும், பெருஞ் சாலைகளும் ஆறுகளும் பயணம்செய்வதற்குப் பாதுகாப்பாகிவிட்டது எனக் கூறமுடியாது; கிராமங்களில் கொள்ளைக்காரர்களின் அச்சம் மிகுந்திருந்தது. நாடாளுமன்றத்தில் வல்லாண்மைக் கொள்கையை எதிர்க்கும் மக்கள் 'விடுதலைப் போராட்டக் கூட்டிணைவு'க் (AFPFL) கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தது. ஆனால் இக்கட்சியிலிருந்த ஒரு சிலர் வெளியேறிப் பர்மியத் தொழிலாளர் குடியானவர்கள் கட்சி (Burma Workers and Peasants Party—Bwpp) ஒன்றை அமைத்தார்கள். இக்கட்சியை ஓர் இடதுசாரிக் கொள்கையுடைய எதிர்க்கட்சி என அழைக்கலாம்.

கோட்பாடுகள், அரசாங்கம், அரசியல்

உலக வாழ்க்கையிலிருந்து தப்பிச்செல்லும் வழிமுறையையும், தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட புத்தமதமும், உலகத்தைச் சீரமைக்கவேண்டும் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சோஷியலிஸமும் ஒன்றுசேர்க்கப்பட்டதே பர்மியர்களின் அரசியல் கோட்பாடு (Burmas-ideology). போருக்கு முன் இருந்த மார்க்ஸிசக் கொள்கைகள், ஆங்கிலேயப் பேரரசின் குடியேற்றக் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்த உணர்ச்சிகள், ஆங்கிலேயத் தொழிற்கட்சியின் ஆக்கநல அரசுக் கொள்கை–இவையெல்லாம் கலந்து மலர்ந்தது. பர்மியர்களின் சோஷியலிஸம், சோஷியலிஸம் மறைந்திருக்கும் கம்யூனிஸம் அல்லது கம்யூனிஸத்திற்கு அழைத்துச் செல்லும் முதல்வழி எனப் பர்மியத் தலைவர்கள் கருதவில்லை. கம்யூனிஸத்தின் நாத்திக ஒழுக்கத் துறை சார்பற்ற கொள்கைகளை ஏற்கத்தகாதன என்று தள்ளி வைத்தார்கள்; குடியாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்கவேண்டும் எனத் தீர்மானம் செய்தார்கள். சட்டத்தின்படித் தனியார் உடைமைகள் பாதுகாக்கப்படும்; ஆனால், அயல்நாட்டார் உடைமையுரிமைகளை வரையறுத்துக் கட்டுப்படுத்தவும், அவர்களின் உடைமைகளை நாட்டுடைமையாக்கி, இழப்பீடு செய்யவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. இயற்கைப் பொருள்களையும், நீரில் செல்லும் போக்குவரத்தையும், அரிசி ஏற்றுமதியையும், நாட்டு நிதி அலுவலகங்களையும் நாட்டுடைமையாக்கும் உரிமையை தேவைக் காலச் சட்டம் கொடுத்திருந்தது. பொதுத்துறைகளை அரசாங்க உடைமையாக்கிக் கொள்ளவும், தனியார் துறைகளைச் சாராத பொருளாதார நிருவாகங்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யவும்

சட்டப்படி உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. உருவளவிலும், பெயரளவிலும் குடியாட்சி முறையிருந்தது; ஆனால் நடை முறையில் ஒரு கட்சி, ஒரே மனிதனின் ஆட்சியின் கீழிருந்த சிலராட்சி இயங்கிவந்தது. வல்லாண்மைக் கொள்கையை எதிர்க்கும் மக்கள் விடுதலைப் போராட்டக் கூட்டிணைவு சோஷிய லிஸக் கட்சியினது ஆதிக்கத்தின் கீழ்வந்தது; யூநூ இக்கட்சியின் வழிகாட்டியாய்த் திகழ்ந்தார். 'வல்லாண்மைக் கொள்கையை எதிர்க்கும் மக்கள் விடுதலைப் போராட்டக் கூட்டிணைவு'க்குத் (இனி மேல் இதைக் கூட்டிணைவு என அழைப்போம்) தொழிலாளர்களி டையேயும் ஆதரவும் செல்வாக்கும் இருந்ததால், இக்கூட்டிணை தன் விருப்பப்படி அரசாங்கத்தை நடத்தியது; இராணுவத்தைத்வு தன் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தது; படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவல்களிடையே நல்லொழுக்கத்தை நிலை நாட்டியது. ஒருசில வேலைகளைப் பகிர்ந்துகொடுத்தனர்; தீர்மானங்கள் செய்தனர்; நிர்வாக வேலைகளைச் செய்தனர். மேலை நாடுகளில் பயிற்சி பெற்ற இளம் அதிகாரிகள்தாம் அரசாங்கத்தை எதிர்க்கும் கருத்துகளைத் துணிவோடு அறிவித்தார்கள்.

ஒரு மிதவாதி என யூநூ பெயரெடுத்தார். அயல்நாட்டு மூலதனத்தை நாட்டுடைமையாக்கவேண்டும் என்ற ஆசையால் தூண்டப்பட்ட போதிலும் இம்மூலதனமும் நாட்டிற்குத் தேவை என்ற கருத்தையும் வரவேற்றார். ஆகையால், அயல் நாட்டு மூலதனத்தின்மேல் பரிவுகாட்டினார். இவைகளை நாட்டுடைமை யாக்குவதைவிட ஈரிணைவான செயல்முறை 'கூட்டுச் செயல்முறை (Joint Operation)யினைக் கொண்டுவருவது நல்லது எனத் தெரிவித்தார். ஆனால் அவருடைய அரிசி வாணிகத்திட்டம் தோல்வியடைந்தது. குடியானவர்—வாணிகர் மன்றம் ஒன்றை அமைத்தார்; இம்மன்றம் குடியானவர்களிடமிருந்து அரிசியை விலக்கு வாங்கியது (இதனால் சீன இடையீட்டாளர்கள் இவ்வேலை களிலிருந்து துரத்தப்பட்டார்கள்); இவ்வரிசியை வாங்கின விலையைப்போல் நான்கு அல்லது ஐந்து மடங்கு உயர்த்தி வெளி நாட்டிற்கு விற்றது. ஆனால் அரிசி வாணிபத்தின் அடித்தளமே சாய்ந்தவுடன் (கி.பி. 1954ஆம் ஆண்டில் நடந்ததைப் போல) இதனால் விளைந்த பொருளாதாரச் சீரழிவைத் தாங்கள் அரசியல் வழியில் முன்னேறுவதற்காகக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

உள்நாட்டுக் கம்யூனிஸ்டு பிரச்சினை அயல் நாட்டைச் சாராத தாயகத்துக்குரிய பிரச்சினையாகக் கருதப்பட்டது; இதைக் கட்டுப் படுத்தி ஒழுங்குபடுத்த அரசாங்கத்திற்கு உரிமையாகிறது என

அறிவிக்கப்பட்டது. கி.பி. 1948ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுகளின் கலகம் படுதோல்வியடைந்தவுடன், கம்யூனிஸ்டுகள் தலைமறைவாகத் திரிந்த இரகசிய இயக்கத்தைத் தொடங்கினார்கள். ஆகையால் கி.பி. 1953ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது. அரிசிக் குழப்பம் கிளம்பவும் இவ்வாய்ப்பைக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்திற்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினார்கள். அரிசித் தனி உரிமை பெற்றவர்கள் கையூட்டும் ஊழலும் நிறைந்தவர்கள்; திறமையற்றவர்கள் என நெல்பயிரிடும் குடியானவர்களிடையே கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தார்கள்; ஆகையால் சோஷியலிசக் கட்சியை ஆதரிப்பதற்குப் பதிலாகப் பர்மாத் தொழிலாளர் குடியானவர் கட்சியை (Bupp) ஆதரிக்கும்படித் தூண்டினார்கள்.

பர்மாவில் அரசியலும், பொருளியலும் இணைபிரியா நண்பர்கள். இரண்டாம் உலகப் போருக்குப்பின் மறுசீரமைப்புப் பிரச்சினை கிளம்பியபோது, நாட்டிலுள்ள நிலை உயரவில்லை. பாதிக்கும் குறைவான செழிப்பு நிலங்களில் பயிரிடப்பட்டன; அரிசி வாணிபம் எழுச்சியற்ற நிலையிலிருந்தது. போக்குவரத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும், சுரங்கங்களுக்கும் மறுஉயிர் கொடுக்கப் பர்மியர்களின் மூலதனம் முன் வரவில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மூலதனம் போடப் பர்மியர்களிடம் பணம் இல்லை; ஆனால் புத்த விகாரங்கள் கட்டுவதற்கும், பல்சுவைக் கேளிக்கைக் காட்சிகள் கொண்டாடுவதற்கும் அவர்களிடம் மிகுந்த செல்வம் இருந்தது. நான்கடி ஆண்டுத் திட்டங்கள் மூலம் நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூட்டிணைவு (AFPFL) முயன்றது.

கி.பி. 1956ஆம் ஆண்டு முதல் நான்காண்டுத் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. நாட்டின் நிலைக்கு ஏற்றவாறு நல்ல ஆலோசனையுடன் முதல்திட்டம் வகுக்கப்படவில்லை; சமாளிக்கமுடியாத நன்கு வரையறுக்கப்படாத திட்டமாயிருந்தது. தொழிற்சாலைகளை நிறுவிப் பரப்பிச் சமூக வசதிகளைப் பெருக்கி எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற பொதுவான, தெளிவற்ற திட்டமாயிருந்தது. சமூக அமைப்புப் படிகளிலுள்ள எல்லாரும் ஒத்துழைத்து இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்; பரந்த மனத்துடன் அயல் நாடுகள் மிகுந்த உதவி செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. நல்ல திட்டங்கள் உருத்திரிந்து இடக்கு முடக்கான வழியில் சென்றது; அரிசிவாணிபத்தில் திடீரென விலை வீழ்ச்சியேற்பட்டதால் வருமானம் (ஊதியம்) மிகவும் குறைந்தது; உள்நாட்டுப் போர்கள் நடந்ததால் பெரும்

பான்மையான அயல் நாட்டு மூலதனம் பர்மாவிற்குள் நுழைய வில்லை. இரண்டாவது உலகப் போருக்கு முன்பிருந்த பொருளாதார நிலையைத்தான் கி.பி. 1956ஆம் ஆண்டில் பர்மாவால் அடைய முடிந்தது; அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் $\frac{1}{500}$ பொருளா தார நிலைதான் பர்மாவில் இருந்தது.

அயல்நாட்டுக் கொள்கை

தொடக்கத்திலிருந்த 'நடுநிலைமைக் கொள்கை' (Neutralism) அல்லது 'இணைப்பு இல்லாத' (Non-alignment) கொள்கை மூலம் பர்மா தன் நாட்டுத் தேவையை நிறைவுசெய்ய முயன்றது. கி.பி. 1948ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப்பின ராகச் சேர்ந்தது. சோவியத் உருசியாவைச் சார்ந்த நாடுகளுக்கு அடுத்தப்படியாக முதலில் முன்வந்து கி.பி. 1950ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டு சீனாவை ஒப்புக்கொண்ட நாடு பர்மாவேயாகும். சீன-பர்மா எல்லை 1200 மைல்கள்; ஆகையால், சீனாவுடன் நட்பிடைப் பிணக்கு ஏற்படக்கூடாது; போர் நடவடிக்கை களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடாது எனப் பர்மா கருதியது. பலநூறு ஆண்டுகளாகத் தாய்லாந்துடன் பர்மா போர் புரிந்திருக்கிறது. ஆகையால், தாய்லாந்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவில்லை. ஆனால், இந்தோனேசியாவின் மேல் பரிவு காட்டியது. ஹோசி-மின்னின் நாட்டுபற்றுக் கொள்கைகளை ஒப்புக் கொண்டது. ஆனால் சியாங்-கெய்-சேக்கைப் பற்றி (Chiang Kai Shek) அக்கறை காட்டவில்லை. கம்யூனிஸ்டு சீனாவின் படைக்கு அஞ்சிப் பர்மா விற்குள் பல குயோமிண்டாங் படை வீரர்கள் நுழைந்தனர். ஆனால் இவர்கள் அழையா விருந்தாளிகளாகக் கருதப்பட்டனர். கொரியாவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஐக்கிய நாட்டுச் சபையின் தீர்மானத்தைப் (Resolution) பர்மா ஆதரித்த போதிலும், கம்யூனிஸ்டு சீனா கொரியாவில் வலுச்சண்டை இட்டது என்று கூறிய தீர்மானத்திற்கு எதிராகப் பர்மா வாக்களித்தது. கி.பி. 1950ஆம் ஆண்டில் கொலம்போ திட்டத்தின் (Colombo Plan) உறுப்பினராகச் சேர்ந்தது; கி.பி. 1954ஆம் ஆண்டு வரை அமெரிக்கக் குடியரசின் பொருளாதார உதவியை ஏற்றுக்கொள்வ தாய் அறிவித்தது. [ஆனால் பர்மா எல்லைப் பகுதிகளில் புகுந்து போர்புரிந்து வந்த படைத்துறை முதல்வர் லீமீ (General Limi) அவர்கட்கும், அவருடைய குயோமின்டாங் அகதிகளுக்கும் அமெரிக்கக் குடியரசு அளிக்கும் உதவியைத் தற்காலிகமாகத் தள்ளிவைத்தது].ஜப்பானுடன் கலந்து நடந்த சான்பிரான்சிஸ்கோ அமைவுக் கூட்டத்தில் (San Francisco Peace Conference) பர்மா கலந்துகொள்ள மறுத்தது. ஆனால் கி.பி. 1954ஆம் ஆண்டு

முன்னுள் எதிரியான ஜப்பானுடன் அமைதி இழப்பீடு செய்யும் ஒப்பந்தத்தைப் பர்மா செய்துகொண்டது. சோஷிஸியலிஸக் கொள் கையின்மேல் உள்ள மதிப்பால் இஸ்ரேலுடனும், யுகோஸ்லேவியா வுடனும் உளங்கனிந்த, அன்பு நிறைந்த தொடர்பு கொண்டது. ஆனுல் வெளிநாடுகளின் அயலார் கோட்பாடுகளின் கைப்பாவை யாகப் பர்மா இருக்காது என யூநூ கூறினுர்; செயல் முறையிலும் இயங்கினுர். எல்லா நாடுகளுடனும் ஒற்றுமையாய் வாழவேண்டும்; ஆசியாவின் சிறந்த போரான, 'இல்லாக் குறைக்கு எதிராகப் புரியும்' போரின்மேல் ஒருமித்த கவனம் செலுத்தவேண்டும் என்பதே யூநூவின் சிறந்த நோக்கம். கி.பி. 1955ஆம் ஆண்டில் பாண்டுங் மாநாடு கூடுவதற்கு முதலில் முன் நின்று ஆதரவு காட்டி முயற்சி செய்த சில நாடுகளில் பர்மாவும் ஒன்று.

யூநூவும், நீவின்னும் (U Nu and Ne-Win 1956-62)

கி.பி. 1956ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் 'கூட்டிணேவு' (BFPEL) ஏறத்தாழ மக்களின் பாதிவாக்குகளேப் பெற்றது. 250 தொகுதிகளில் 170 தொகுதிகளேக் கைப்பற்றியது. ஆகையால் பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் (Chamber of Deputies) இது 170 இடங்களேப் பெற்றது. பர்மியத் தொழிலாளர் குடியானவர் கட்சியை (BWPP) மையமாகக் கொண்ட நாட்டுக் கூட்டணியான (National Unity Front-NUF) எதிர்க்கட்சிகளுக்கு 30 விழுக்காடு மக்கள் வாக்கும், 50 இடங்களும் கிடைத்தன. கி.பி. 1950ஆம் ஆண்டு வரை யூநூ பிரதமராக இயங்கினுர். இச்சமயத்தில் உள்நாட்டு கலகம் உண்டாகியது. வன்செயல் மேற்கொள்ளாத இரக்கமுள்ள பௌத்தராய் யூநூ இருந்ததால் கொரில்லாப் போர் வீரர்களேயும், சட்ட மீறுபவர்களேயும் வலிந்து சென்று கொடிய முறையைப் பயன்படுத்தி அடக்க மறுத்தார். இவ் வன்மைக் குறைவுக் குணமே அவர் பதவியையிழந்ததற்குக் காரணமாய் இருந்தது. முதல் நான்காண்டு திட்டத்தைவிட இரண்டாவது நான்காண்டுத் திட்டம் பெரிதும் தோல்வியடைந்தது. அயல்நாட்டு உதவி மிகுதியாகக் கிடைத்த போதிலும் நாட்டின் பற்றுக்குறையைத் தீர்க்க முடியவில்லே. ஆகையால் கி.பி. 1958ஆம் ஆண்டில் யூநூ பதவியிலிருந்து விலகிப் படைத்துறை முதல்வர் நீவின்னிவிடம் (General Newin) அரசாங்கத்தை ஒப்படைத்தார். இதை இடையீட்டுக் காலக் கண்காணிப்பு மேற்கொண்ட அரசாங்கம் (Caretaker Government) என அழைக்கிருர்கள்.

படை வன்மையைப் பயன்படுத்திக் கி.பி. 1958ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு வரை நீவின் கையூட்டையும், ஊழலே

யும் ஒழித்தார். அரசியல் படைத்தலைவர்களின்கீழ் வந்தது. நேர்மையற்ற வஞ்சகமுள்ள அரசியல்வாதிகளின் மீதும் கண்டித்த செய்தித்தாள்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டன; நாடகங்கள் மூலம் அரசாங்கத்தை மறைமுகமாக ஏளனமோ, கண்டனமோ செய்கிறார்கள் என நினைத்துப் பல நடிகர்கள் சிறைச்சாலையில் தள்ளப்பட்டனர்; பொறுப்புணர்ச்சியில்லாமல் நடந்ததாகக் கூறி நூற்றுக்கணக்கான மாணவர்கள் கோகோ தீவிற்கு (Coco island) அனுப்பப்பட்டார்கள். அரசாங்க அரசியல் சட்ட அமைப்பை நீவின் மாற்றவில்லை; சட்டதிட்டத்தின் மெய்க்கருத்திற்கெதிராக நடக்க முயற்சி செய்யவில்லை. நாட்டைச் சீர்ப்படுத்தி ஒழுக்குபடுத்திவிட்டோம் என நீவின் முடிவெடுத்தவுடன் தேர்தல்கள் நடத்தினார்; அரசாங்கத்திலிருந்து விலகினார் கி.பி. 1960ஆம் ஆண்டுத் தேர்தலில் யூநூ மீண்டும் தேர்தெடுக்கப்பட்டார்; மீண்டும் பிரதம மந்திரிப் பதவியேற்றார். நாட்டில் மீண்டும் மிகமிக இழிவு உண்டாகும் நிலை உருவாகியது. யூநூ திறமையற்றவராயிருந்தார். கட்சி தலைவர்களுக்குள் பூசல் ஏற்பட்டது; நாடே உடைந்து பிரிந்துவிடக் கூடிய கொடுஞ்சூழ்நிலை தோன்றியது.

நீவின் ஆட்சி (கி.பி. 1962 — ......)

ஆகையால் கி. பி. 1962ஆம் ஆண்டு மார்ச்சு 2ஆம் நாள் யூநூவைப் பதவியிலிருந்து விலக்கி நீவின் மீண்டும் பதவி ஏற்றார். யூநூவையும், ஐந்து அமைச்சர்களையும், 50 நாட்டுத் தலைவர்களையும் குடியாட்சி முறையை ஆதரிக்கும் 3,000 பர்மியர்களையும் நீவின் சிறையிலடைத்தார். நாட்டை ஆள்வதற்காக 'அமைச்சர்கள் புரட்சி மன்றம்' (Revolutionary Council of Ministers) ஒன்றை அமைத்தார். அரசியல் அமைப்புச் சட்டத்தை நீக்கினார். சட்ட சபைகளைக் கலைத்தார்; சட்டமியற்றவும், சட்டம் நிறைவேற்றவும் இன்றியமையாத அதிகாரங்களோடு நீதி மன்றத்தின் அதிகாரங்களையும் எடுத்துக்கொண்டார். நாட்டில் சட்டமும், ஒழுங்கும், அமைதியும் திரும்பியவுடன் தம் அதிகாரத்தை விட்டு மீண்டும் அரசியல்வாதிகளிடம் ஒப்படைப்பதாய் வாக்குறுதியளித்தார். இவருடைய உட்கருத்துகள் பின்வருவன: (1) கலகத்தை ஒடுக்கி அழிக்கவேண்டும்; (2) பர்மியர்களின் நாட்டு உணர்ச்சிகளைத் துப்புரவு செய்யவேண்டும்; (3) மிஞ்சியுள்ள மேலை நாட்டின் கலாசாரம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றின் செல்வாக்கை ஒழிக்க வேண்டும்; (4) பர்மியர்கள் சோஷியலிஸ வழியைச் சார்ந்த அமைப்பை நிறுவ வேண்டும்; (5) தொடர்ந்து 'இணைப்பு — இல்லாத' அயல் நாட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

நீடித்த கலகங்களை அரைகுறையாகத்தான் அடக்க முடிந்தது; ஆகையால் உள்நாட்டுப் போர் மூளும் சூழ்நிலை நிலவிவந்தது. தெற்கில் காரேன்களோடும், கிழக்கில் ஷான்களோடும், வடக்கில் காசின்களோடும், நாடு முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகளுடனும் நீவின் போரிட்டார். கம்யூனிஸ்டுகளுக்குள் ஒற்றுமையில்லாமலிருந்ததால்கி.பி. 1908ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுகளை அடக்க ஆற்றல் உண்டாயிற்று.

எளிமை வாய்ந்த, பழம்பாணியான ஆடம்பரமில்லாத வழி வழிமரபான பர்மியர்களின் வாழ்க்கையை மக்கள் பின்பற்ற வேண்டும் என நீவின் பிரசாரம் செய்தார். வாழ்க்கைத் தொழில் சார்ந்த கல்வித் திட்டத்தைப் பள்ளிக் கூடங்களில் புகுத்தினர்; ஒழுக்கமும், நேர்மையும் மாணவர்களிடையே மலரவேண்டும் எனக் கற்பிக்கப்பட்டது. தனியார் பள்ளிக் கூடங்களையும் ஒழுங்கு முறைப்படுத்தினர்; அயல்நாட்டு நன்கொடை வாங்கக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. மேலைநாட்டுச் செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் செய்தித்தாள்களும் திரைப்படங்களும் தணிக்கை செய்யப்பட்டன. சுற்றுப்பயண மேல்வரிச் சான்றுரிமைக் குறிப்பு (Tourist Visa) 24 மணி நேரம்தான் செல்லுபடியாகும் என அறிவித்தார். லான்ஜின் (Lanzin) அல்லது 'பர்மிய சோஷியலிஸ முறைத் திட்டக் கட்சி' (Burma way to Socialism Program Party) ஒன்றை அமைத்து, அதன்மூலம் நிருவகித்தார். சோஷியலிஸ சமுதாயத்தை உருவாக்க விரும்பினர்; அச்சமுதாயத்தில் தனியார் பொருளாதார அமைப்புக்கு மிகச்சிறிய வாய்ப்பே கொடுக்க வேண்டும் என நினைத்தார். உடனுறையாக நிலவுடைமையாளர்களின் (absentee Land Lords) நிலங்களையும், அயல் நாட்டார் சொந்தமாக வைத்துக்கொண்டிருந்த தொழிலகங்களையும், வங்கிகளையும் நாட்டுடைமையாக்கினர். இம்முறை மூலம் பர்மியப் பொருளாதாரத்தை வலிந்து கவர்ந்து கொண்டிருந்த சீனர்களையும், இந்தியர்களையும், ஆங்கிலேயர்களையும் நாட்டை விட்டுச் செல்லும் படிச் செய்தார். போக்குவரத்துச் சாதனங்களின் ஏற்றுமதி—இறக்குமதி வாணிபம் அரசாங்கத் தனி உரிமையின்கீழ்க் கொண்டு வரப் பட்டன.

நீவின் ஆட்சி இன்றும் நீடித்து நடந்து வருகிறது.

3. மலேயா, சிங்கப்பூர்

1. ஆங்கிலேயர்களும் பினங்கும்

அமெரிக்க நாட்டுச் சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்கள் தோல்வியடைந்தவுடன் வங்காள விரிகுடாவின் கிழக்குப் பகுதியில் ஓர் ஆங்கிலத்தளத்தை (Base) அமைக்க விரும்பினர்கள். ஆகையால் கி.பி. 1785ஆம் ஆண்டில் லைட் (Light) என்பவரைக் கேதா (Kedah) சுல்தானுடன் சமரசப் பேச்சு நடத்த ஆங்கிலேயர்கள் அனுப்பினர்கள். இப்பேச்சின் போது கேதா சுல்தான் பின்வரும் ஒப்பந்தவிதியை வரையறுத்துக் கூறினர். இதன்படி பினங் தீவில் ஆங்கிலேய வாணிகத் தளங்களை அமைக்கக் கேதா சுல்தான் உரிமை வழங்கினர். வாணிகம் இதனுல் பாதிக்கப்படும் எனக் கேதா சுல்தான் கூறியதால் ஆண்டுக்கு 30,000 டாலர்கள் இழப்பீட்டுப் பணமாக ஆங்கிலேயர்கள் கேதா சுல்தானுக்கு அளிக்க வேண்டும் என்ற ஒப்பந்தவிதி வரையறுக்கப்பட்டது. கேதா சுல்தானை எதிரிகள் தாக்கினுல் அவருக்கு ஆங்கிலேயர்கள் பாதுகாப்பு அளிக்கவேண்டும்; கேதா சுல்தானின் பகைநாடான சியாம் (Siam) கேதாவைக் கைப்பற்றக் காத்திருந்தது. ஆகையால் தமக்குப் பாதுகாப்பு அளித்தால் ஆங்கிலேயர்களுக்குப் பினங்கைக் கொடுக்கக் கேதா சுல்தான் தயாராகவிருந்தார். கேதா சுல்தான் கூறியதைத் தம் மேலவர்களுக்கு லைட் தெரிவித்தார். லைட்டின் மேலதிகாரிகள் பினங்கில் ஆங்கிலேய வாணிகத் தலங்களை அமைக்கும்படிச் கட்டளையிட்டு லைட்டைப் பினங்கின் முதல் கண்காணிப்பாளராய் (Suprintendent) நியமனம் செய்தார்கள்.

கி.பி. 1786ஆம் ஆண்டில் ஜூலை மாதம் லைட் பினங் தீவிற்கு (Pulau Pinang) வந்தார். ஆகஸ்டு மாதம் 11ஆம்நாள் இத்தீவைக் கைப்பற்றினர். இத்தீவில் மக்கள் நடமாட்டம் மிகுதியாகக் கிடையாது. இதற்குப் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவு (Prince of Wales island) அல்லது வேல்ஸ் இளவரசர் தீவு எனப் பெயரிட்டார். ஆனுல் இது சம்பந்தமாக இதுவரை கேதா சுல்தானுக்கும் ஆங்கிலேய வாணிகத் குழுவிற்கும் யாதோர் ஒப்பந்தமும் ஏற்படவில்லை. சியாம் கேதாவை எதிர்த்ததால் கேதா சுல்தானுக்கு ஆங்கிலேயர்கள் உதவியளிப்பார்கள் என லைட் கேதா சுல்தானிடம் கூறியிருந்

தார். ஆனால், கேதா சுல்தானுக்குப் பாதுகாப்பளிக்க ஆங்கிலேய வாணிகக்குழு தயாராக இல்லை.

ஆங்கிலேய வாணிகக் குழுவின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட கேதா சுல்தான் பினாங் தீவை மீண்டும் தம் ஆதிக்கத்திற்குக் கொண்டுவர விரும்பினார். ஆகையால் கி.பி. 1791ஆம் ஆண்டில் பினாங்கைத் தாக்குவதற்காகக் கேதா சுல்தான் ஒரு கப்பற்படையைப் பிராய் ஆற்றிற்கு (Prai River) அனுப்பினார். கேதா சுல்தான் ஆங்கிலேயப் படைகளைத் தாக்குவதற்கு முன், லைட் சுல்தான் படைகளைத் தாக்கினார். சுல்தானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. மீண்டும் பினாங்கைக் கைப்பற்றக் கேதா சுல்தான் முயற்சியே எடுக்கவில்லை. இப்போருக்குப்பின் சுல்தானுக்கும் ஆங்கில வாணிகக் குழுவுக்கும் ஒரு நேச உடன்படிக்கை (Treaty) ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி ஆங்கிலேய வாணிகக்குழு ஆண்டிற்கு 6,000 டாலர்கள் சுல்தானுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்தது. ஆனால் சுல்தானை அவர் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதாக உறுதிமொழி அளிக்கப்படவில்லை.

கி.பி. 1801ஆம் ஆண்டுவரை பினாங் கட்டுப்பாட்டு வரம்பற்ற துறைமுகமாய் (Free-port) விளங்கியது. ஏற்றுமதி, இறக்குமதிச் சரக்குகளுக்கு வரி விதிக்கப்படவில்லை. ஆகையால் இத்துறைமுகத்தில் வாணிகம் தழைத்தோங்கியது. 1795ஆம் ஆண்டில் பினாங்கில் 8,000 மக்கள் இருந்தார்கள். சீனர்களும், இந்தியர்களும், புகிஸ் (Bugis) இனத்தாரும் பினாங்கிற்கு வந்து குடியேறினார்கள். ஆண்டிற்கு 1½ மில்லியன் டாலர்கள் வாணிகம் பினாங்கில் நடந்தது. ஆனால் செலவிற்குத் தகுந்தபடி வரவில்லை. வரவிற்குமேல் ஆண்டிற்கு 700,000 டாலர்கள் செயலாட்சிக்குச் செலவாயின. ஆகையால் கி.பி. 1801ஆம் ஆண்டில் பினாங்கிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்கும், இறக்குமதியாகும் பொருள்களுக்கும் 5 விழுக்காடு வரி விதிக்கப்பட்டது. இதற்குப்பின் பினாங் கட்டுப்பாடுகளற்ற துறைமுகமாய் விளங்கவில்லை.

பினாங்கின் பாதுகாப்பிற்காக அதிகமாகச் செலவழித்தாலும், பினாங் தளம் ஆங்கிலேயர்களுக்குப் பயனுள்ளதாகவிருந்தது. உதாரணமாகக் கி.பி. 1795ஆம் ஆண்டில் மலாக்காவைக் கைப்பற்றும் போதும், கி.பி. 1797ஆம் ஆண்டில் ஸ்பானியர்களிடமிருந்த மணிலாவைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர்கள் படையெடுத்த போதும் பினாங் தளம் ஆங்கிலேயர்களுக்குப் பயனுள்ளதாயிருந்தது. மணிலாவிற்குப் படையெடுத்துச் செல்லும் படைக்குத் தேவையான பொருள்கள் பினாங்கில் கிடைத்தன.

கி.பி. 1800ஆம் ஆண்டில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்டிற்கு 4,600 டாலர்கள் அளிப்பதாய்க் கூறிக்கேதா சுல்தானிடமிருந்து பினங் தீவுக்கு எதிராக இருக்கும் வெல்லெஸ்லி மாகாணத்தை (Province of Wellesley) வாங்கினர்கள். இம்மாகாணத்தை வாங்கியதால் பினங்கைச் சூழ்ந்திருக்கும் இரு கரைகளும் ஆங்கிலேயர்கள் வயம்வந்தன. ஆகையால் பினங்கின் பாதுகாப்புப் பெருகியது. மேலும் பினங்கில் மக்கள் தொகை பெருகி வந்ததால், இவ்விடம் உணவுப் பொருள்கள் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. கி.பி. 1805ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பினங்கை இந்தியாவின் நான்காவது மாகாணமாக (Presidency) அமைத்தது (மற்ற மூன்று மாகாணங்கள் பம்பாய், சென்னை, கல்கத்தா). கி.பி. 1805ஆம் ஆண்டிலிருந்து 1810ஆம் ஆண்டுவரை இந்திய அரசாங்கம் பினங்கை ஒரு கப்பல் தளமாக மாற்ற முயற்சியெடுத்தது. ஆனல், பினங்கில் வளர்ந்த மரங்கள் கப்பல் கட்டுவதற்குப் பயன்படவில்லை. ஆகையால் இலங்கையில் உள்ள திரிகோணமலையைக் (Trincomalee) கப்பல்தளமாக்க ஆங்கிலேயர்கள் முயற்சியெடுக்கத் தொடங்கினர்கள்.

பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் நடந்த போரின்போது (கி.பி. 1793—1815) பினங், ஆங்கிலேயர்கள் நினைத்தபடி, மிகுதியாகப் பயன்படவில்லை. கட்டற்ற வாணிப முறைமூலம் வருமானம் வரவில்லை; ஆட்சிமுறைச் செலவு அதிகரித்தது; பினங்கைக் கப்பல் தளமாக மாற்றமுடியவில்லை; புதிதாக உருவாக்கிய காபி, மிளகு ஆகியவற்றின் தோட்டங்கள் வளர்ச்சி அடையவில்லை. மேலும் கி.பி. 1811ஆம் ஆண்டில் ஜாவாவில் டச்சுக்காரர்களின் வசமிருந்த இடங்களை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்கள். ஆகையால் ஆங்கிலேயர்களுடைய கப்பல்கள் பினங்கிற்கு வருவதற்குப் பதிலாகப் படாவியாவிற்குச் (Batavia) செல்லத்தொடங்கின. பினங்கை விடப் படாவியா தென்கிழக்காசிய வாணிபத்திற்குப் பயனுள்ளதாக இருந்தது. நறுமணத் தீவுகளிலிருந்தும் (Spice islands), தென்கிழக்காசியாவின் முக்கிய வாணிகத் தலங்களிலிருந்தும் பினங் மிகத்தொலைவில் இருந்தது.

ஆங்கிலேயர்களும் மலாக்காவும்

பிரெஞ்சுப் புரட்சிப் போரின்போது கி.பி. 1795ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்கள். ஆலந்திற்கும் (Holland) பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட ஹேக் உடன்படிக்கையின்படி (The Hague Agreement 1795) ஆலந்து

பிரிட்டனுடன் போரிடும் கட்டாயம் ஏற்பட்டது. இவ்வுடன் படிக்கையின்படி டச்சுப்பேரரசின் கடல்தளங்களைப் (Naval base) பிரான்சுநாடு பயன்படுத்தலாம் என உரிமை அளிக்கப்பட்டது. ஆனால், பிரான்சு டச்சுப்பேரரசின் கடல்தளங்களைப் பயன்படுத்து முன் டச்சு அரசாங்கம் நாடுகடத்தப்பட்டது. பிறகு பிரிட்டனுக்கும், நாடுகடத்தப்பட்ட டச்சு அரசாங்கத்திற்கும் (Dutch Government in-exile) ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன் படிக்கையின்படி போர்முடியும்வரை டச்சுக் குடியேற்றப் பகுதிகளைப் பிரிட்டன் தன் ஆட்சிக்குட்படுத்தலாம். இந்தச் சூழ்நிலையில் தான் மலாக்கா பிரிட்டனின் மேலாதிக்க உரிமையின்கீழ் வந்தது. பினங்கைவிடப் பெரியதாயிருந்த மலாக்காவில் 15,000 மக்கள் குடியேறியிருந்தார்கள். மேலே கூறிய உடன்படிக்கையின்படி பிரிட்டன் டச்சுக் குடியேற்றப் பகுதியான மலாக்காவைச் சிறிது காலத்திற்குத்தான் வைத்துக்கொள்ளலாம்; போர் முடிந்த பிறகு பிரிட்டன் மலாக்காவை ஆலந்திற்குத் திருப்பி அளிக்கவேண்டும். ஆனால், பினங்கில் ஆட்சிபுரிந்துவந்த ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மலாக்காவை ஆலந்திற்குத் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. மலாக்காவைத் திருப்பிக்கொடுத்தால் ஆலந்திற்கு வாணிபத் தனியுரிமை மீண்டும் கிடைக்கும்; ஆனால் மலேசியாவிலிருந்து வந்த வெள்ளீயத்தை விற்கும் வாணிகத் தலமாக பினங் மாறமுடியாது.

மலாக்காவை டச்சுக்காரர்களிடமிருந்து நிலையாகக் கைப்பற்ற வேண்டுமென்றால் கடும்போர் புரியவேண்டும் என ஆங்கிலேயர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகையால் மலாக்காவில் உள்ள படையரணை இடித்துத்தள்ளவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். இப் படையரண்தான் டச்சுக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தது. ஆகையால் கி.பி. 1806-7ஆம் ஆண்டுகளில் மலாக்காவின் படையரண் இடித்துத்தள்ளப்பட்டது. கி.பி. 1824ஆம் ஆண்டில் போர்செய்யாமல் மலாக்காவைக் கைப்பற்றிய பின்தான் மலேசியாவிலே புகழ்வாய்ந்த படையரணை இடித்துத் தள்ளியமைக்கு ஆங்கிலேயர்கள் வருந்தினார்கள். ஆனால், 1806-7ஆம் ஆண்டுகளில் மலாக்காவின் வலிமையைக் குறைக்கவேண்டும் என்பதே பிரிட்டனின் நோக்கம். ஆகையால், மலாக்காவிலுள்ள குடிமக்களைப் பினங்கிற்கு மாற்றவேண்டும் எனக் கருதினார்கள். அவ்வாறு குடிமக்களை மாற்றினால் டச்சுக்காரர்கள் மீண்டும் மலாக்காவிற்கு வரும்போது மலாக்காவில் ஒன்றுமே இருக்காது என்று எண்ணினார்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஸ்டாம்போர்டு ராபல்ஸ் (Stamford Raffles) கி.பி. 1808ஆம் ஆண்டில் மலாக்காவிற்கு வந்துசேர்ந்தார். ராபல்ஸ் மற்ற ஆங்கிலேயர்களின் கருத்துகளை வரவேற்கவில்லை. மலாக்காவை அழிக்காது பாதுகாக்கவேண்டும் என்ற குறிப்புரையைத் தம்முடைய மேலதிகாரிகளுக்கு அனுப்பினர். இதுபற்றி மூன்று காரணங்களை எடுத்துரைத்தார். முதலாவதாக, மலாக்காவிலிருந்து பிரிட்டன் வெளியேறினல் வேறு ஒரு நாடு அதைக் கைப்பற்றும். அவ்வாறு வேறொரு நாடு மலாக்காவைக் கைப்பற்றினல் பிரிட்டனின் வசமுள்ள பினங்கிற்கு ஆபத்துவரும். இரண்டாவதாக, மலாக்கா புகழ்பெற்ற ஒரு நகரம். அதை நிருவகிப்பதற்கு மிகுதியாகப் பணம் செலவழிவதில்லை. மூன்ருவதாக, டச்சு அரசாங்கம் தாற்காலிகமாக வெளியேறிய வுடன் மலாக்காவிலுள்ள மக்களை பிரிட்டன்தான் அங்கு அழைத்துவந்தது. ஆகையால், அவர்களை மலாக்காவிலிருந்து வெளியேற்றுவது நியாயமில்லை. ராபல்ஸ் எடுத்துரைத்ததை மேலதிகாரிகள் வரவேற்ருர்கள். ஆகையால், மலாக்காவில் வாழ்ந்து வந்த மக்களை வெளியேற்றும் முயற்சியைப் பிரிட்டன் கைவிட்டது.

கி.பி. 1815ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் நெப்போலியன் போர் முடிந்தவுடன் மலாக்காவைப் பிரிட்டன் ஆலந்திற்குத் திருப்பிக்கொடுத்தது. ஆனல், கி.பி. 1818ஆம் ஆண்டில்தான் டச்சு அரசாங்கம் மீண்டும் மலாக்காவிற்குள் நுழைந்தது; இதன் பின் மலாக்கா டச்சு அரசாங்கத்திடம் ஆறு ஆண்டுகள்தாம் இருந்தது.

2. ராபல்சும் சிங்கப்பூரும்

கி.பி. 1781ஆம் ஆண்டில் தாமஸ் ஸ்டாம்போர்டு ராபல்ஸ் மேற்கிந்தியத் தீவில் (West-Indies) பிறந்தார். ஆனல், இங்கிலாந்தில் வளர்ந்தார்; படித்தார்; கிழக்கிந்தியக் கம்பெனி யின் இலண்டன் அலுவலகத்தில் 15ஆம் வயதில் பணியாளராகச் சேர்ந்தார். கி.பி. 1805ஆம் ஆண்டில் தம் 24ஆம் வயதில் பினங்கிற்கு அரசாங்கத் துணைச்செயலாளராக வந்தார். பினங் கிற்கு வந்தபிறகு மலேய் மொழியைக்கற்று எளிதாகப் பேசத் தொடங்கினர். ஆகையால் மொழி பெயர்ப்பாளராகவும் பணி புரிந்தார். மலேய் மக்களின்பண்பாடு, வரலாறு ஆகியவற்றைப் படித்துப் புலமையடைந்திருந்தார். கி.பி. 1808ஆம் ஆண்டில் ராபல்ஸ் மலாக்காவிற்கு வந்தார். மலாக்காவை ஆங்கிலேயர்கள் கைவிடக்கூடாது என இவர் கூறிய அறிவுரையைப்பற்றி முன்னரே கூறப்பட்டிருக்கிறது. இந்தியாவின் ஆளுநர்-முதல்வர்

(Governor-General) கோமான் மின்டோவிற்கு ராபல்ஸை மிகவும் பிடித்திருந்தது. பினங்கும், மலாக்காவும் ஆளுநர்-முதல்வர் மின்டோவின் ஆட்சியின் கீழிருந்தன. கி.பி. 1808 ஆம் ஆண்டில் மலாக்காவைக் கைப்பற்றியபிறகு டச்சுக்காரர்களுடைய மேலாதிக்க உரிமையின் கீழிருந்த கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றவேண்டும் என மின்டோ விரும்பினர். மேலும் ஜாவாவை டச்சு அரசாங்கத்திடமிருந்து கைப்பற்றவேண்டும் என நினைத்தார். மலேயாவைப் பற்றி ராபல்ஸுக்கு நன்கு தெரியும் எனப் புரிந்துகொண்டு கல்கத்தாவிற்கு ராபல்ஸை மின்டோ வரவழைத்தார். மலேய் நாடுகளின் ஆளுநர்—முதல்வரின் அரசாங்கப் பிரதிநிதியாக (Governor-General's Agent) ராபல்ஸ் நியமிக்கப்பட்டார். மலேய் நாடுகளின் தலைமை அலுவலகமாக மலாக்கா விளங்கியது. மலாக்காவிலிருந்து ஜாவாமீது படையெடுக்கவேண்டும் என மின்டோ விரும்பினர். கி.பி. 1811ஆம் ஆண்டில் மின்டோ ஜாவாவின்மேல் படையெடுத்து அதைக் கைப்பற்றினர். ஜாவாவின் துணை ஆளுநராக (Lieutenant-Governor) ராபல்ஸ் நியமிக்கப்பட்டார். ராபல்ஸின் ஜாவா ஆட்சியைப் பற்றி நாம் இந்தோனேசிய வரலாற்றில் படிக்கலாம்.

ஆங்கிலேயர்களின் மேலாதிக்க உரிமையின்கீழ்ப் போர்னியோவைக் கொண்டுவரவேண்டும் என ராபல்ஸ் விரும்பினர். ஆங்கிலேயர்கள் ஜாவாவைக் கைப்பற்றும் சமயத்தில் போர்னியோவில் டச்சுக்காரர்கள் குடியேறவில்லை என்ற காரணத்தால் டச்சுக்காரர்களுக்குப் போர்னியோவைக் கோரிப் பெறும் தகுதி கிடையாது என ராபல்ஸ் கருதினர். ஆகையால் கி.பி. 1812ஆம் ஆண்டில் பன்சர்மசீனில் (Banjermesin) துணைக்காப்பரசின் ஆளுநர் (Reisident) ஒருவரை ராபல்ஸ் நியமித்தார். போர்னியோவில் நடந்த வாணிபம் கடற்கொள்ளைக்காரர்களால் பாதிக்கப்பட்டதால் வாணிபத்தைப் புத்தமைவாக்க விரும்பிக் கி.பி. 1813 ஆம் ஆண்டில் புருனை (Brunei), பொன்டிய நாக்கு (Pontianak), பன்சர்மசீன் ஆகிய அரசர்களுடன் ராபல்ஸ் ஒப்பந்தம் செய்து கொண்டார். இவ்வொப்பந்தப்படி, போர்னியோவில் நடக்கும் வாணிபம் இம்மூன்று துறைமுகங்களில்தாம் நடக்கவேண்டும் எனவும், அவ்வாணிபத்திற்கு ஆங்கிலேயர்கள் பாதுகாப்பளிப்பார்கள் எனவும் ராபல்ஸ் கூறினர். ஆனல் கி.பி. 1815ஆம் ஆண்டிலிருந்து போர்னியோவையும் சேர்த்துக்கொண்டு தன் ஆட்சியை விரிவாக்க பிரிட்டன் முயற்சி எடுக்கவில்லை. கி.பி. 1817–18ஆம் ஆண்டுகளில் டச்சுக்காரர்கள் மீண்டும் தங்கள் ஆட்சியைத் தென்கிழக்காசியாவில் அமைத்தபோது சிங்கப்பூரை

உருவாக்கும் எண்ணம் இந்தியாவின் தலைமை ஆளுநரிடம் தோன்றியது.

ஐரோப்பாவில் நிலவியிருக்கும் சூழ்நிலையின் காரணமாகக் கிழக்காசியாவில் டச்சுக்காரர்கள் ஆண்டுவந்த பகுதிகள் அவர்களுக்கே திருப்பி அளிக்கப்பட்டன. வியன்னு சமாதான மாநாட்டில் பிரான்சு மீண்டும் போரில் ஈடுபடாமலிருக்கும்படிச் செய்யவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பிரான்சைச் சுற்றி வன்மை குறைந்த நாடுகள் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அந்நாடுகளைக் கைப்பற்ற பிரான்சு விரும்பக்கூடும். பிரான்சின் எல்லையில் இருக்கும் நாடு ஆலந்து. சொந்தமான அந்நியக் குடியேற்றப் பகுதிகளில்லா ஆலந்து எளிதில் தோல்வியுறக்கூடிய நாடாகிவிடும் எனப் பிரிட்டன் கருதியது. ஆகையால், வலுப்படுத்துவதற்காக ஆலந்துக்குச் சொந்தமான கிழக்கு ஜாவா, மொலுகாஸ் (Maluccas), மலாக்கா ஆகியவற்றைப் பிரிட்டன் ஆலந்திற்குத் திருப்பிக்கொடுத்தது. ஆனல் ஆலந்துக்குச் சொந்தமான கேப் ஆப் குட் ஒப்பையும் (Cape of Good Hope), இலங்கையையும் பிரிட்டன் ஆலந்திற்குத் திருப்பி அளிக்கவில்லை. டச்சுக்காரர்களின் ஆட்சி மீண்டும் தென்கிழக்காசியாவில் வருவதை ராபல்ஸ் எதிர்த்தார். ஆனல், இவர் எதிர்ப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. ஆகையால், கி.பி. 1816ஆம் ஆண்டில் ராபல்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றார்.

சுமத்திராவின் மேற்குக் கரையிலுள்ள பிரிட்டனின் வாணிபத்தலமான பென்கூலனின் (Bencoolen) துணைநிலை ஆளுநராய் 1817ஆம் ஆண்டில், ராபல்ஸ் பதவியேற்றார். இங்கிருந்து தென்கிழக்கு ஆசியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சியை பரப்ப விரும்பினர். தென்கிழக்கு ஆசியாவில் தனியுரிமையாட்சியை அமைக்க டச்சுக்காரர்கள் விரும்பினர்கள். ஆனல், இது ஆங்கிலேயர்களின் வாணிபத்திற்குத் தடையாயிருந்தது. ஆகையால், தென்கிழக்கு ஆசியாவில் மத்திய வாணிபத்தலம் ஒன்றை அமைக்க ராபல்ஸ் விரும்பினர். ஆனல் டச்சுக்காரர்களை எதிர்த்துக்கொண்டு இவ் வாணிகத்தலத்தை அமைக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. பென்கூலனில் வாழ்ந்துகொண்டே அங்கிருந்த உள்நாட்டரசர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள ராபல்ஸ் முயன்றார். ஆனல், இம்முயற்சியைப் பிரிட்டன் கண்டித்தது. சுமத்திரா முழுவதும் பிரிட்டிஷ் ஆட்சியைப் பரப்ப ராபல்ஸ் விரும்பினர்; இதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வரவேற்கவில்லை; ராபல்சிற்கு அனுமதியும் அளிக்கவில்லை. ஆனல், இந்தியாவின் தலைமை ஆளுநர் கோமான் ஹேஸ்டிங்ஸ்

(Hastings) ராபல்ஸ் கருத்தை ஆதரித்தார். ஆகையால் கி.பி. 1818ஆம் ஆண்டில் ராபல்ஸ் கல்கத்தாவிற்கு வரவழைக்கப் பட்டார். மலேயத் தீவகற்பத்தின் தெற்கே ஓர் ஆங்கிலேய வாணிகத்தலத்தை ஏற்படுத்தவேண்டும் என ராபல்ஸ் ஆலோசனை கூறினர்.

இந்தியாவின் தலைமை ஆளுநர் ராபல்ஸின் கருத்தை வரவேற்று அதற்கு அனுமதியும் கொடுத்தார். கி.பி. 1818ஆம் ஆண்டில் ராபல்ஸ் கல்கத்தாவிலிருந்து பினங்கிற்குச் சென்றார். ராபல்ஸ் மற்றொரு வாணிகத்தலத்தை ஏற்படுத்தும் கருத்தை பினங்கில் உள்ள ஆங்கிலேயர்கள் வரவேற்கவில்லை. பினங்கிலிருந்து ராபல்ஸ் காரிமன் தீவுகளுக்குச் (Carimon Islands) சென்றார். இத்தீவுகளில் சிறந்த பயனுள்ள துறைமுகம் இல்லை. ஆகையால் கி.பி. 1819ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் ராபல்ஸ் சிங்கப்பூருக்கு வந்துசேர்ந்தார்.

கி.பி. 1795ஆம் ஆண்டில் ஜோஹூர் வல்லரசு (Johore) சுல்தான் மகமது ஆட்சியின்கீழ் வந்தது. ஜோஹூரின் பல பகுதிகள் பெயரளவில்தான் சுல்தான் மகமதின் கீழிருந்தன. அவை ஜோஹூர், பாகாங் (Pahang), சிங்கப்பூர், ரியோ (Riau), லிங்கா (Lingga) மற்றும் தெற்குத் திசையில் உள்ள சிலதீவுகள் ஆகும். ஆங்கிலேயர்கள் மலாக்காவைக் கைப்பற்றியவுடன் டச்சு செல்வாக்குக் குறைந்தது. ஆகையால், புகிஸ் (Bugis) செல்வாக்கு ஓங்கியது. இதைச் சுல்தான் மகமது வரவேற்கவில்லை. ஏனென்றால் ஜோஹூர் வல்லரசு டச்சு அதிகாரத்திற்குப் பதிலாகப் புகிஸ் மேலாதிக்க உரிமையின்கீழ் வந்தது. ஆகையால், சுல்தான் மகமது ரியோவிலிருந்து லிங்காவிற்குச் சென்று அங்கே ஒதுங்கி வாழத்தொடங்கினர்.

கி.பி. 1812ஆம் ஆண்டில் லிங்காவில் சுல்தான் மகமது இறந்தார். அவருக்குப்பின் நாட்டை யார் ஆள்வது என்ற வினா எழுந்தது. சுல்தான் மகமதிற்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் இருவர் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; மற்ற இருவரும் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அரசக்குல மனைவிகளுக்குக் குழந்தைகள் கிடையா. மற்ற இருமனைவிகளுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். மூத்தவனின் பெயர் துங்கு உசைன் (Tengku Hussein); இளையவனின் பெயர் துங்கு அப்துல் ரஹ்மான் (Tengku Abdul Rahman). தமக்குப் பிறகு யார் அரசாளவேண்டும் என்பதைப் பற்றிச் சுல்தான் மகமது வெளிப்படக் கூறியதில்லை. ஆனால், தமது

மூத்த குமாரனை துங்கு உசைன்தான் தமக்குப் பிறகு அரசாள வேண்டும் என நினைத்தார் என்று தோன்றுகிறது. ஜோஹூர் வல்லரசின் முக்கியத் தலைவர்களான பென்தஹாரா (Bendahara), தெமென்ங்காங் (Temeng gong) உறவினர் குடும்பத்திலிருந்து பெண்கள் எடுத்துத் துங்கு உசைனின் திருமணங்களைச் சுல்தான் மகமது நடத்தியிருந்தார். சுல்தான் மகமது இறக்கும்போது துங்கு உசைன் பென்தஹாராவுடன் பாகாங்கில் இருந்தார்.

தந்தை இறக்கும் போது துங்கு உசைன் லிங்காவில் இல்லாததால், துங்கு அப்துல் ரஹ்மானைச் சுல்தானாக நியமிக்க புகிஸ் அரசர் விரும்பினார். துங்கு அப்துல் ரஹ்மானுக்குத் தேவையான உரிமையில்லாமலிருந்ததால் தம் ஆதரவை எதிர்பார்த்து வாழ்வான் என புகிஸ் அரசர் நினைத்தார் சுல்தான் மகமதின் அரச குடும்ப மனைவிமார்கள் துங்கு உசைனின் உரிமையை ஆதரித்தார்கள். ஆனால் புகிஸ் சுல்தானை எதிர்க்கும் படை பலம் துங்கு உசைனிடம் இல்லை. 1815ஆம் ஆண்டில் டச்சு ஆதிக்கம் தென் கிழக்கு ஆசியாவிற்கு மீண்டும் வந்தவுடன் டச்சு அரசாங்கமும் புகிஸ் ஆதரவு அளித்த துங்கு அப்துல் ரஹ்மானைச் சுல்தானாக ஏற்றுக்கொண்டது. கி.பி. 1818ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கும் புகிஸுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பிரிட்டனும் துங்கு அப்துல் ரஹ்மானை ஜோஹூர் சுல்தான் என (வெளிப்படையாகக் கூறாமல்) ஒப்புக் கொண்டது. நாடு கடத்தப் பட்டவர்போல தனியாக மலேயாவின் தெற்கிலுள்ள தீவுகளில், துங்கு உசைன் வாழ்ந்து வந்தார்.

கி.பி. 1819ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்கு வந்தபோது ஜோஹூர் செய்தியைப் பற்றி ராபல்ஸுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். ராபல்ஸ் சிங்கப்பூருக்கு வந்தபோது டச்சுக்காரர் ஒருவரும் அத்தீவில் வாழவில்லை. சிங்கப்பூரில் நல்ல துறைமுகம் இருக்கிறது என்றும், அது சிறப்பு வாய்ந்த இடத்தில் இருக்கிறது என்றும் ராபல்ஸ் கண்டுகொண்டார். ஜோஹூரின் தெற்குத் தலை நிலப் பரப்பின் (mainland), சிங்கப்பூரின் தலைவரான தெமென்ங்காங் ராபல்ஸ் சிங்கப்பூருக்கு வந்தபோது சிங்கப்பூரில் வசித்து வந்தார். சிங்கப்பூரில் டச்சுச் செல்வாக்கு ஓங்கியிருந்ததால் இவ்வூரை ஆங்கிலேய வாணிகத்தலமாக ஆக்குவதை டச்சுக்காரர்கள் விரும்ப மாட்டார்கள் என்பது ராபல்ஸுக்குத் தெரிந்ததே.

ஆகையால் துங்கு அப்துல் ரஹ்மானை ஜோஹூரின் சுல்தான் எனப் பிரிட்டன் ஒப்புக்கொண்டதை மீறிச்செல்ல ராபல்ஸ் முடிவெடுத்தார். இதைப்பற்றித் தெமெங்காங்கிடம் பேச்சு

நடத்திய பிறகு துங்கு உசைனைச் சுல்தான் என ராபல்ஸ் ஒப்புக் கொண்டார். ஆகையால் கி.பி. 1819ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் நாள் புதிய சுல்தான் துங்கு உசைனும், தெமெங் காங்கும், ராபல்ஸும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தின்படி சிங்கப்பூரை ஆங்கிலேய வாணிகத் தலமாக மாற்றலாம்; ஆங்கிலேயர்கள் சிங்கப்பூருக்கு வந்து குடியேறலாம். ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனி ஆண்டுதோறும் தெமெங்காங்கிற்கு 3,000 டாலரும், புதிய சுல்தானுக்கு 5,000 டாலரும் கொடுக்கவேண்டும். ஆனால் இவ்வுடன்படிக்கைக்கு டச்சுக்காரர்களின் எதிர்ப்பு இருக்கும், பிரிட்டன் ஆதரவு அளிக்காது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ராபல்ஸுக்கு ஆதரவு அளித்த இந்தியாவின் தலைமை ஆளுநர் கூட இவ்வொப்பந்தத்தை வரவேற்கத்தயங்கினர். மேலும் சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த மலேய் மக்களின் ஆதரவும் ராபல்ஸுக்குக் கிடைக்கவில்லை; எவ்வளவு நாள்கள் ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரில் தங்கியிருப்பார்கள் என்று அவர்களுக்குப் புரியவில்லை. மலாக்காவில் பிரிட்டன் ஆட்சி புரிந்ததும், டச்சுக்காரர்கள் மலாக்காவிற்கு மீண்டும் வந்தவுடன் அங்கிருந்து பிரிட்டன் வெளியேறியதும் மலேய் மக்களுக்குத் தெரிந்ததே. ஆகையால் டச்சுக்காரர்களை எதிர்க்க மலேய் மக்கள் தயாராக இருக்கவில்லை. பினங்கில் உள்ள பிரிட்டிஷ் ஆளுநரும் ராபல்ஸின் ஒப்பந்தத்தை வரவேற்கவில்லை. அவர் ராபல்ஸின்மேல் பொறாமை கொண்டார்.

உடனடியாக டச்சுக்காரர்கள் ஒரு மறுப்பு அறிவிப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கொடுத்தார்கள். சிங்கப்பூரிலிருந்து ராபல்ஸ் விலகிக் கொள்ளவேண்டும் எனக் கூறப் பிரிட்டிஷ் அரசாங்கமும் நினைத்தது. இதற்கிடையில் அச்சேவுடனும் (Achech) ராபல்ஸ் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். தென் கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வாணிபம் தழைத்தோங்கும் என டச்சுக்காரர்கள் அஞ்சினர்கள். ஆகையால், ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரை விட்டு வெளியேறினல் தாங்கள் இந்தியாவில் இருக்கும் டச்சுத் துறைமுகங்களிலிருந்து வெளியேறுவதாக டச்சுக்காரர்கள் வாக்குறுதியளித்தார்கள். ஆனால் ராபல்ஸ் சிங்கப்பூரை விட்டு வெளியேற மறுத்தார்.

கி.பி. 1819ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிங்கப்பூரில் 150 மீனவர்களும், தெமெங்காங்கின் சில மலேய் குடிகளும், சில சீனத்தொழிலாளர்களும் வாழ்ந்துவந்தார்கள். சிங்கப்பூர் ஆங்கிலேயர்களின் வாணிபத்தலமாக மாறுவது உறுதியென்று தெரிந்தவுடன் சிங்கப்பூரின் மக்கள்தொகை அதிகரித்தது.

1819ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் சிங்கப்பூரின் மக்கள் தொகை ஐயாயிரத்துக்கு மேல் வளர்ந்தது. தென் கிழக்கு ஆசியாவின் தீவுக் கூட்டங்களிலிருந்து பல கப்பல்களும் சிங்கப்பூர்த் துறைமுகத்திற்கு வரத் தொடங்கின. பொதுவாக, மலாக்காவிலுள்ள மலேய் மக்களும், சீனர்களும், புகிஸ் மக்களும் சிங்கப்பூருக்கு வந்தார்கள். கட்டுப்பாட்டு வரம்புகளற்ற துறைமுகமாய்ச் சிங்கப்பூர் விளங்கியதால் அதிகமான வணிகர்கள் சிங்கப்பூருக்கு வரத் தொடங்கினர்கள். கி.பி. 1820ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் ஜனத்தொகை 10,000 ஆக வளர்ந்தது; 4 மில்லியன் டாலர்கள் வாணிபமும் நடந்தது. கி.பி. 1825ஆம் ஆண்டில் பிரிட்டனின் மூன்று வாணிகத்தலங்களின் வர்த்தகப் புள்ளி விவரம் பின் வருமாறு: மலாக்கா: 2,500,000 டாலர்கள்; பினங்: 500,000 டாலர்கள்; சிங்கப்பூர்: 22,185,000 டாலர்கள். பினங்கிற்கு எதிராக மற்றோர் ஆங்கிலேய வாணிபத்தலம் வரக்கூடாது எனப் பினங்கின் ஆளுநர் பானர்மேன் ஏன் கூறினர் என்பதை இப்புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சிங்கப்பூரின் வளர்ச்சியைக் கண்ட ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களின் மறுப்பை வரவேற்கவில்லை. மலாக்காக் கடற்கால் (Malacca Straits) பற்றிய படைத்துறைக்குரிய, கப்பல் போக்குவரத்துகளையெல்லாம் டச்சுக்காரர்களிடமே விட்டு விடமுடியாது என நெதர்லாந்திலிருந்த ஆங்கிலேயத்தூதுவர் டச்சுக்காரர்களிடம் கி.பி. 1819ஆம் ஆண்டில் கூறினர். மேலும், சிங்கப்பூரை விட்டு வெளியேறும் எண்ணம் கிடையாது எனக் கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கி.பி. 1820 ஆம் ஆண்டில் கூறியது.

கி.பி. 1824ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் இலண்டன் உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். இவ்வுடன்படிக்கையின்படி சிங்கப்பூர் ஆங்கிலேயர்களின் வாணிகத்தலம் என்பதை டச்சுக்காரர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆகையால் இதற்குப் பின் சிங்கப்பூரில் ஆங்கிலேயர்கள் குடியேறுவதைக் குறித்து டச்சுக்காரர்கள் கண்டனம் தெரிவிக்கவில்லை. தென் கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளைப் பங்கு போட்டுக்கொண்டு ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் வரும் சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவேண்டும் என இவ்வுடன்படிக்கையின் மூலம் அறிவித்தார்கள். மலாக்காக் கடற்காலின் மேற்கேயும், தெற்கேயும் இருக்கும் பகுதிகள் டச்சுக்காரர்களைச் சேர்ந்தவையென்றும், வடக்கேயும், கிழக்கேயும் இருக்கும் பகுதிகள் ஆங்கிலேயர்களைச் சேர்ந்தவையென்றும் அறிவித்தார்கள். ஆகையால் சிங்கப்பூருக்குத் தெற்கே இருக்கும் தீவுகள் டச்சுச் செல்வாக்கிற்குட்பட்ட பகுதி

களாயின. ஆனால் தீபகற்பமும் சிங்கப்பூரும் பிரிட்டிஷ் செல்வாக்கிற்குட்பட்ட பகுதிகளாயின. சிங்கப்பூருக்குத் தெற்கே உள்ள தீவுகளைப்பற்றி இவ்வுடன்படிக்கை தெளிவாகக் கூறவில்லை. ஆகையால் போர்னியோ யாரைச் சேர்ந்தது என்பதைப் பற்றி ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் பிற்காலத்தில் வெவ்வேறு பொருள் விளக்கம் கொடுத்தார்கள். இவ்வுடன்படிக்கையின்படி மலாக்கா ஆங்கிலேயர்களிடமும், பென்கூலன் டச்சுக்காரர்களிடமும் கொடுக்கப்பட்டன. மலேசியாத் தீவுகளின் வருங்காலத்தை நோக்கும் போது இந்த உடன்படிக்கை மிகமுக்கியமானது என்பது தெரிகிறது. இவ்வுடன்படிக்கையை நோக்கினால், டச்சுக்காரர்களிடம் போட்டி போட்டுக்கொண்டு தென்கிழக்கு ஆசியா முழுவதும் பிரிட்டிஷ் வல்லரசு ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆங்கிலேயர்கள் கைவிட்டு விட்டார்கள் என்பது புலனாகிறது. சுமத்திராவைப் பிரிட்டிஷ் செல்வாக்கிற்கு உட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தையும் கைவிட்டது. மலேயாத் தீபகற்பத்தில் ஆங்கிலேயர்களுடன் டச்சுக்காரர்கள் போட்டியிடுவதை நிறுத்தியதால் மலேயாத் தீபகற்பத்தில் அனைத்து நாடுகளிடையே போட்டியும், சண்டையும் ஏற்படுவது மிகவும் குறையும். ஜோஹூர் வல்லரசு இரு கூறுகப் பிரிந்தது. டச்சுக்காரர்கள் ஆதரித்த சுல்தான் ஜோஹூரின் பெரும்பான்மைப் பகுதிகளிலிருந்து ஒதுக்கப்பட்டார். முடிவாக ஜோஹூரில் தெமெங்காங் குடும்பத்தின் அரசாட்சி அமைக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி கடல்மூலம் பிரிட்டன் சீனவிற்குச் செல்லும் வழி பாதுகாக்கப்பட்டது; தொல்லைக்கிடமற்றதாயிற்று.

சிங்கப்பூரைப் பாதுகாப்பதற்காகக் கிழக்கிந்தியக் கம்பெனி மற்றோர் உடன்படிக்கையைச் சுல்தானுடன் ஏற்படுத்திக் கொண்டது. கி.பி. 1819ஆம் ஆண்டின் உடன்படிக்கைப்படி சிங்கப்பூரில் ஆங்கிலேயர்கள் குடியேறுவதற்கும், வாணிபம் செய்வதற்கும்தான் உரிமை வழங்கப்பட்டது. ஆனால், கி.பி. 1824 ஆம் ஆண்டின் ஒப்பந்தப்படி சுல்தானும், தெமெங்காங்கும் சிங்கப்பூரைப் பிரிட்டனுக்கே அளித்தார்கள். பதிலாகச் சுல்தானுக்கு மொத்தத் தொகையாக 33,200 டாலர்களும், மாதம்தோறும் 1,300 டாலர்கள் ஓய்வுக்கால ஊதியமும், தெமென்ங்காங்கிற்கு மொத்தத் தொகையாக 26,800 டாலர்களும், மாதம்தோறும் 700 டாலர்கள் ஓய்வுக்கால ஊதியமும் ஆங்கிலேயர்கள் கொடுத்தார்கள். கி.பி. 1825ஆம் ஆண்டில் தெமெங்காங் இறந்தார்; கி.பி. 1835ஆம் ஆண்டில் சுல்தான் இறந்தார்.

ஆகையால் கி.பி. 1824ஆம் ஆண்டுக்குள் ஆங்கிலேயர்கள் குடியேறிய மூன்று நகரங்களையும் பிரிட்டன் அமைத்தது. இப் பகுதிகளுக்கு மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் (Straits Settlements) எனப்பெயர் இடப்பட்டது. மலாக்காத் தீபகற்பகத்தின் புற எல்லையில் பிரிட்டிஷ் அரசாங்கச் செல்வாக்கு வளரத் தொடங்கியது. மலேயத் தீபகற்பத்திலிருந்து டச்சுக்காரர்கள் வெளியேறினர்கள். அவர்களுக்குப் பதிலாக ஆங்கிலேயர்களின் வாணிபத்துடன் போட்டியிட வேறுயாரும் வரவில்லையென்ருலும், ஆங்கிலேயர்களின் செல்வாக்கு மலேய் நாடுகள் முழுவதும் பரவ மேலும் ஐம்பது ஆண்டுகள் ஆயின. சீனுவிற்குச் செல்லும் வாணிகவழியைப் பாதுகாப்பதற்காக இக் கடற்கால் குடியேற்றங் கள் அமைக்கப்பட்டன எனக் கிழக்கிந்தியக் கம்பெனி அறிவித் தது. ஆனல், இக் கடற்கால் குடியேற்றங்களில் வாழும் வணி கர்களுக்கு வேறுபல எண்ணங்கள் இருந்தன.

3. சயாம், மலேயா நாடுகள், மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் கி. பி. 1817—1863

சிங்கப்பூர் ஒரு வாணிகத்தலமாய் மாறின காலத்திலிருந்து துணைக்காப்பரசின் ஆளுநர் (Resident) ஒருவர் சிங்கப்பூரில் ஆட்சிபுரிந்துவந்தார். ஆளுநருக்கும், இந்தியாவில் இருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி மன்றத்திற்கும் (Council of the East India Company) இவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். முதலில் துணைக்காப்பரசின் ஆளுநர் பென்கூலனில் வாழ்ந்து வந்த ராபல்ஸிடமிருந்து கட்டளை முறைகளை ஏற்றுக்கொண்டார். ஆனல் கி.பி. 1824ஆம் ஆண்டில் ராபல்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பிய பிறகு இவர் இந்தியாவுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொண்டார். கி.பி. 1824ஆம் ஆண்டில் மலாக்கா டச்சுக்காரர் களிடமிருந்து ஆங்கிலேயர்கள் வசம் வந்தவுடன் மலாக்காவிலும் ஒரு துணைக்காப்பரசின் ஆளுநர் நியமிக்கப்பட்டார். இவரும் இந்தியாவுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொண்டார்.

மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களில் உள்ள மூன்று நகரங் களின் ஆட்சி முறையையும் ஒன்ருக்கக் கிழக்கிந்தியக் கம்பெனி முடிவெடுத்தது. ஆகவே, கி பி. 1826 ஆம் ஆண்டில் மலாக்காவும், சிங்கப்பூரும் பினங்கின் துணைநிலை மண்டலங்களாக (dependencies) மாறின. இம்மூன்று பகுதிகளிலும் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் இருந்த போதிலும், இவை பினங்கில் வாழ்ந்து வந்த ஆளுநர் ஆட்சியின்கீழ் வந்தன. இவ்வாருன ஆட்சிமுறை நான்கு ஆண்டுகள் தாம் நீடித்தது.

இம்மூன்று பகுதிகளுக்குள் சிங்கப்பூரில் மட்டும்தான் செலவுக்குமேல் வரவு கிடைத்தது. பினங்கிற்கு வருவாய் வராத தால் அது கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சுமையாயிருந்தது. ஆகையால், கி.பி. 1830 ஆம் ஆண்டில் பினங் தலைமை ஆளுநரின் குடியிருப்பு மனையாக (Residency) மாற்றப்பட்டது. மலாக்கா கடற்கால் குடியேற்றங்களில் உள்ள மூன்று பகுதிகளும் தலைமை ஆளுநரின் மூன்று பணிமனைகளாக மாற்றப்பட்டன. இந்தியா விற்குக் கீழ்ப்பட்டிருக்கிற நாடுகளாய் இம்மூன்று பகுதிகளும் மாறின.

கி.பி. 1832ஆம் ஆண்டில் இம்மூன்று பகுதிகளையும் சேர்த்து ஆட்சிபுரிவதற்காக ஆளுநர் ஒருவர் சிங்கப்பூரில் நியமிக்கப் பட்டார். பினங்கிலும், மலாக்காவிலும் துணைக்காப்பரசின் ஆளு நர்கள் (Resident Councillors) நியமிக்கப்பட்டார்கள். கி.பி. 1832ஆம் ஆண்டிலிருந்துதான் இப்பகுதிகளுக்கு மலாக்காக் கடற் கால் குடியேற்றங்கள் (Straits Settiements) எனப் பெயர் உண்டாயிற்று. இப்பகுதிகளின் தலைமை அதிகாரியை மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் ஆளுநர் என அழைத்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் மலேய் நாடுகளான கேதா (Kedah), பேரக் (Perak), செலங்கர் (Selangor) ஆகியவற்றிற்குச் சியாமிடமிருந்து தொல்லைவந்தது.

பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து சியாமைச் சக்ரீ அரசர்குலம் (Chakri dynasty) ஆட்சிபுரிந்து வந்தது. சியாம் வலிமையுடைய நாடாக மாறியது; கம்போடியா வின் பகுதிகளைக் கைப்பற்றியது; கி.பி. 1785ஆம் ஆண்டில் பர்மாவுடன் போர்செய்து கொண்டிருந்தது. ஆனல் சியாம் பர்மாவில் நுழைய முடியாதபடி பர்மியர்கள் போரிட்டார்கள். கேதா, சியாமிற்குக் கீழ்ப்பட்ட நாடாக (Vassal) இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கேதாச் சுல்தான் சியாமிற்குப் புங்கா மாஸ் (Bunga Mas) அனுப்புவது வழக்கம். புங்காமாஸ் என்றுல் தங்கத்தால் செய்த மலர்கள் என்று பொருள் ஆகும். தங்கத்தையும் வெள்ளியையும் கிளைகளுடன் கூடிய இரு செடிகளாகச் செய்து சியாம் மன்னருக்குக் கேதாச் சுல்தான் அனுப்புவது வழக்கம். மேற்குக் கடற்கரை ஓரமாகப் பர்மாவுடன் சியாம் போர் புரிந்து கொண்டிருந்தது. அக்காரணத்தால் புங்கா மாஸைத்தவிர படைக் கலம் பூண்ட மரக்கலங்களையும், அரிசியையும், சியாம் கேதாவிடம் கேட்டது. கேதாவைத் தனக்குக் கீழ்ப்பட்ட நாடாகத்தான் சியாம் கருதியது. கேதாவின் அயல் நாட்டுத் தொடர்பு தன் மூலம்தான் செய்யப்படவேண்டும் என்றும், கேதாவில் யாராவது புதிய

சுல்தான் பதவிக்கு வந்தால் சியாம்தான் அதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சியாம் நினைத்தது. ஆகையால் சியாமைக் கேட்காமல் பினங்கையும், வெல்லெஸ்லி மாகாணத்தையும் கேதா ஆங்கிலேயர்களுக்கு அளித்ததைச் சியாம் வரவேற்கவில்லை. மேலும் கேதாவில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த சுல்தான் அகமது தாசுதீன் (Ahmad Tazu'd-din 1798—1843) பர்மாவுடன் சேர்ந்துகொண்டு தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிருர் என்று சியாம் ஐயுற்றது.

ஆகையால் கேதாவில் தன் ஆட்சியை வலுப்படுத்துவதற்காகவும், மலேயாத் தீபகற்பத்தின் தெற்கிலுள்ள பகுதிகளைத் தன் செல்வாக்கிற்குட்பட்ட பகுதிகளாக மாற்றுவதற்காகவும் கேதாச் சுல்தானைப் பேரக் நாட்டின்மீது படையெடுக்கும்படி கி.பி. 1816 ஆம் ஆண்டு நவம்பரில் உத்தரவிட்டது. பேரக் நாடு சியாம் நாட்டிற்குப் 'புங்காமாஸ்' செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறியது. ஆகையால் பேரக்குடன் சியாம் வலுச்சண்டைக்குப் போக முன்வந்தது. பேரக் ஒரு சுதந்திர நாடு. சியாமிற்கும் பேரக்கிற்கும் யாதொரு சண்டை சச்சரவும் கிடையாது.

ஆகையால், அரைகுறை மனத்துடனும், தயக்கத்துடனும் அகமது தாசுதீன் பேரக்கின்மேல் படையெடுத்தார். பேரக் சுல்தான் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பேரக்கின் பதில் ஆளுநராக (Viceroy) ராசாமூதா நியமிக்கப்பட்டார்; ஆனல், கேதாச் சுல்தானின் கண்காணிப்பின்கீழ் வந்தார். கி.பி. 1819ஆம் ஆண்டில் சியாமிற்குப் 'புங்காமாஸ்' (திறை) பேரக்கிலிருந்து அனுப்பப்பட்டது. தவிரக் கேதா படைக்கலம்பூண்ட மரக் கலங்களையும் (armed boats) அரிசியையும் சியாமிற்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும், பினங்கிற்குக் கேதாவிலிருந்து அரிசி அனுப்பக்கூடாது என்ற தடைஉத்தரவும் இருந்தது.

போருக்கு வேண்டிய பொருள்களை மேலும் அகமது தாசுதீன் அனுப்பவேண்டும் என்ற காரணத்தாலும், பர்மாவுடன் இணைந்து சியாமிற்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிருர் என்ற ஐயம் இருந்ததாலும், அகமது தாசுதீன் சியாமிற்கு வரவேண்டும் எனச் சியாம் உத்திரவிட்டது. தமது உயிருக்கே ஆபத்துவருமோ என அஞ்சி அகமது தாசுதீன் சியாமிற்குப் போக மறுத்தார்.

ஆகையால், லீகர் அரசர் (Raja of Ligor) தலைமையின்கீழ்ச் சியாம் கேதாவின்மேல் படையெடுத்தது. கேதாவில் வாழ்ந்துவந்த

மலேய் மக்கள் வெல்லெஸ்லி மாகாணத்திற்கு ஓடிவிட்டார்கள். கேதாச் சுல்தானும் பினங் அரசாங்கத்திடம் அடைக்கலம் புகுந்தார். கேதா சியாம் ஆட்சியின் கீழ்வந்தது. கேதாச் சுல்தானைத் தன்னிடம் கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் நட்புத்தொடர்பும், வாணிகத்தொடர்பும், துண்டிக்கப்படும் என்றும் சுபியா பினங் ஆளுநருக்குச் செய்தி அனுப்பினர். ஆளுநர், பிலிப்சு இக்கோரிக்கைக்கு இசைய மறுத்தார்.

சியாம் நாட்டுப் படைவீரர்கள் வெல்லெஸ்லி மாகாணத்தின் மேல் படையெடுப்பார்களோ என அஞ்சிப் பினங் அரசாங்கம் தன்னுடைய படைவீரர்களை வெல்லெஸ்லி மாகாணத்திற்கு அனுப்பியது. பினங்கின் வாணிபம் பாதிக்கப்பட்டது. பினங் அரசாங்கத்திடமிருந்து உதவி கிடைக்காததால் கேதாவின்மீது படையெடுப்பதற்காகத் தாசுதீன் பர்மாவுடனும், செலங்கருடனும் தொடர்புகொண்டார். ஆனால், கேதாவில் பர்மா செல்வாக்கு ஓங்குவதைவிடச் சியாம் செல்வாக்கு ஓங்குவதையே பினங் அரசாங்கம் வரவேற்றது; சியாமுடன் வாணிபத்தை அதிகரிக்கவும் விரும்பியது.

கி.பி 1818, 1819ஆம் ஆண்டுகளில் வாணிபத் தொடர்பாகப் பினங் சியாமிடம் உதவி நாடியது. கி.பி. 1821ஆம் ஆண்டில் ஒரு பணித்துறையைச் சாராத பிரதிநிதியையும் (Unofficial Agent) சியாமிற்குப் பினங் அனுப்பியது இந்தியத் தலைமை ஆளுநரும் சான்கிராபோர்டு என்னும் தூதரைச் சியாம் நாட்டு அரசரவைக்குக் கி.பி. 1822ஆம் ஆண்டில் அனுப்பினர். சியாமிற்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் உள்ள உறவு முறையை உறுதிசெய்யவேண்டும் என்றும், பினங்கில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியைச் சியாம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும், சியாமிற்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் உள்ள வாணிகத் தொடர்பை வலுப்படுத்தவேண்டும் என்றும் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு தூதரைச் சியாம் நாட்டு அரசரவைக்கு அனுப்பியது. முடிந்தால் கேதாச் சுல்தானை மீண்டும் சுல்தான் பதவியில் அமர்த்தவேண்டும் என்று கிழக்கிந்தியக் கம்பெனி நினைத்தது.

கிராபோர்டுவின் தூதுக்குழு வெற்றியடையவில்லை மேலும், கிராபோர்டு அறிவுக் கூர்மையுள்ள அரசியல் தந்திரியும் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சி பினங்கில் இருப்பதைச் சியாம் ஒப்புக்கொண்டு விட்டது என்ற எண்ணத்துடன் கிராபோர்டு திரும்பிவந்தார்.

ஆனால், பினாங்கில் பிரிட்டிஷ் ஆட்சி இருப்பது பற்றியும், வாணிபத்தைப் பற்றியும் உடன்படிக்கை ஒன்றும் ஏற்படவில்லை. அகமது தாசுதீனை மீண்டும் பதவியில் அமர்த்தச் சியாம் ஒப்புக்கொள்ளவில்லை. அகமது தாசுதீனுடைய நடவடிக்கையால் சினம் கொண்ட சியாம் அவர் போர்க் கைதியாகச் சியாமிடம் மாற்றப் படவேண்டும் என்று பிரிட்டனிடம் கோரிக்கைவிட்டது. மேலும், அகமது தாசுதீனுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி அளிக்கும் 10,000 டாலர்கள் ஓய்வூதியத்தைச் சியாமால் நியமனம் செய்யப்பட்ட ஒருவருக்கு அளிக்கவேண்டும் என்றும் சியாம் கூறியது.

கேதா சியாம் ஆட்சிக்குள் வந்தவுடன் கொரில்லாப் போர் (Guerrilla Warefare) தொடங்கியது பேரக்கிலிருந்து சியாம் ஆட்சியியைத் துரத்துவதற்காகச் செலங்கர் சுல்தானும் உதவி புரிந்தார். ஆகையால் கி.பி. 1822ஆம் ஆண்டில் பேரக் சியாம் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டது. பேரக் விடுதலை அடைந்த போதிலும் செலங்கர் சுல்தான் இப்ரஹீம் விடுதலைப் போராட்டத்தில் உதவி செய்ததால் அவருக்கு (வெள்ளியத்தில்) கப்பம் செலுத்தியது.

கி.பி. 1823-24ஆம் ஆண்டுகளில் ஆங்கில-பர்மாப் போரின் போது (Anglo-Burmese war) ஆங்கிலேயப் போர்வீரர்களோடு லீகர் மன்னர் ஒத்துழைக்கவேண்டும் எனக் கிழக்கிந்தியக் கம்பெனி கேட்டுக்கொண்டது. ஆனால், லீகர் மன்னர் ஒத்துழைக்க முன் வரவில்லை; காரணம் சியாமின் இசைவில்லாமல் லீகர் மன்னர் முக்கியமான நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது. ஆனால், அதே சமயத்தில் கேதாவிற்குப் போர்வீரர்களை அனுப்பவும், பேரக்கின்மேல் படையெடுக்கவும் லீகர் மன்னர் தயாராய் இருந்தார்; லீகர் மன்னரின் இம்மாதிரியான நடவடிக்கைகளின் நோக்கம் சியாமின் ஆட்சியை இந்நாடுகளில் அமைக்கவேண்டும் என்பதே. கி.பி. 1824ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ராபர்ட் புல்லர்ட்டன் என்னும் புதிய ஆளுநர் பினாங்கில் பதவியேற்றார். மலேய் நாடுகளில் சியாமின் செல்வாக்கைக் குறைக்கவேண்டும் என இவர் விரும்பினார். பினாங்கிற்குச் சியாம் மூலம் பல இன்னல்கள் வரும் எனக் கருதினார்.

புல்லர்ட்டன் எடுத்துக்கொண்ட முயற்சியால் கி.பி. 1825ஆம் ஆண்டில் கடற்படைத் தளபதி ஹென்ரி பர்னி, லீகர் அரசரிடம் பேச்சு நடத்துவதற்காகச் சென்றார். செலங்கர் மீதும் பேரக்கின் மீதும் படையெடுப்பதாகப் புல்லர்ட்டன் லீகர் அரசரிடம் எச்சரிக்கை செய்தார். மேலும் சிறு பீரங்கிப் போர்க்கப்பல்களை

(Gun-boats) டிராஸ் நதிக் கழிமுகத்திற்குக் கி.பி. 1825 ஆம் ஆண்டு மே மாதம் அனுப்பினர்.

இச்சமயத்தில்தான் பேரக்கின்மீதும் செலங்கர் மீதும் லீகர் மன்னரும் படையெடுக்க ஆயத்தம் செய்தார். இச்சூழ் நிலையில் தான் பர்னியும் லீகர் மன்னரும் பேச்சுநடத்தினர்கள் இப்பேச்சின் பயனாக ஒரு தொடக்க உடன்படிக்கை (Preliminary Treaty) ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி தரைமூலமாகவோ கடல் மூலமாகவோ பேரக்கிற்கும், செலங்கருக்கும் சியாம் படைகளை அனுப்பாதென லீகர் மன்னர் வாக்குறுதி அளித்தார்.

பேரக்கிற்கும், செலங்கருக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளை அரசியல் தந்திரத்தைப் (diplomacy) பயன்படுத்தித் தீர்ப்பதாகக் கிழக்கிந்தியக் கம்பெனி வாக்குறுதி அளித்தது. கேதா சுல்தான் சார்பிலும் கிழக்கிந்தியக் கம்பெனி சிறு வாக்குறுதிகள் கொடுத்தது. ஆண்டுக்கு 4,000 டாலரும், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 'புங்கா மாஸமும்' சியாம் நாட்டிற்குக் கேதாச் சுல்தான் அனுப்ப வேண்டும். ஆண்டுதோறும் கொடுக்கப்படும் கேதா சுல்தானின் ஓய்வு ஊதியத்தைப் பெருக்குவதாகவும் கிழக்கிந்தியக் கம்பெனி வாக்குறுதி அளித்தது. சியாம் நாடு இதை ஒப்புக்கொண்டால் கேதாச் சுல்தானிடம் கொண்டுள்ள எதிர்ப்பைத் தாம் கைவிடுவதாக லீகர் மன்னர் கூறினர். மேலும், தரை மூலமாகவும், கடல் மூலமாகவும் கேதாவின் மேல் படையெடுப்பதில்லை என்றும் லீகர் மன்னர் வாக்குறுதியளித்தார்.

இந்த ஒப்பந்தத்தைப் பர்னி இந்தியாவிற்கு எடுத்துச் சென்றார்; இந்திய அரசாங்கமும் இந்த ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் தூதராகப் பர்னி சியாம் நாட்டிற்கு அனுப்பப்பட்டார். பினங்கிற்கும், செலங்கிற்கும் இடையே உள்ள சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக இந்நாடுகளுக்குப் பினங் அரசாங்கத்தின் செயலாளர் ஜான் ஏண்டர்சனைப் புல்லர்ட்டன் அனுப்பினர். ஏண்டர்சனை இவ்விரு நாடுகளும் வரவேற்றன. பேரக்கில் ராசா ஹாசன் தலைமையின்கீழ்த் தங்கியிருந்த படைப்பிரிவுகளை வாபஸ் வாங்குவதாகச் செலங்கரின் சுல்தான் இப்ராஹீம் வாக்குறுதியளித்தார். செலங்கருக்கும் பேரக்கிற்கும் இடையே உள்ள பெர்னும் ஆற்றை அந்நாடுகளின் எல்லைப் பகுதியாய் மாற்றச் சுல்தான் இப்ராஹீம் இணங்கினர். பேரக்கிடமிருந்து கப்பமோ, மேலாதிக்க உரிமையோ இனிக் கேட்பதில்லை எனவும் சுல்தான் இப்ராஹீம் இசைவு தெரிவித்தார். பேரக்கின் சுல்தான் அப்துல்லாவும் பெர்னும் நதியை எல்லையாக்க

ஒப்புக்கொண்டார்; மேலும் செலங்கர் நாட்டுச் செய்திகளில் தலையிடுவதில்லை என்றும் அப்துல்லா கூறினார். ஆனால், அப்துல்லா சியாமிற்கு அஞ்சினார். ஆகையால், சியாம் நாட்டிற்குப் 'புங்கா மாஸ்' அனுப்பவும் தயாராய் இருப்பதாய்க் கூறினார். இதைப் பற்றிப் பினங் அரசாங்கத்தின் ஆலோசனையையும் கேட்டார்.

பர்னி சியாம் நாட்டிற்குப் பேச்சு நடத்தச் சென்றிருப்பதாக மேலே கூறினோம். அவர் சொல்லுவதைச் சியாம் ஒப்புக்கொள்ளா விட்டால் கிழக்கிந்தியக் கம்பெனி சியாம்மீது படையெடுக்கும் என்று கூறக்கூடப் பர்னிக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. சமரசமாகப் பேசிச் சியாமிற்கு ஏதாவது கொடுப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை. உதாரணமாக, பர்மாவில் பிரிட்டன் கைப்பற்றிய தென்னசெரிமிலிருந்து ஏதாவது ஒரு பகுதியைச் சியாமிற்கு அளிக்கவும் கிழக்கிந்தியக் கம்பெனி பர்னிக்கு அதிகாரம் அளிக்கவில்லை. சியாம், பர்னியின் கருத்துரைகளை ஐயுற்றது. ஆகையால் பர்னிக்கும், சியாமிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தெளிவற்றதாயும் உறுதியற்றதாயும் இருந்தது.

கி.பி. 1826ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரிட்டனுக்கும், சியாமுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையைப் 'பாங்காக் உடன்படிக்கை' என அழைப்பார்கள். இவ்வுடன்படிக்கையின் அம்சங்கள் பின்வருவன :

கேதா சியாம் நாட்டு மேலாதிக்க உரிமையின்கீழ் இருக்கும். பினங்கிலும், வெல்லெஸ்லி மாகாணத்திலும், பேரக்கிலும், செலங்கரிலும், பர்மாவிலும் சுல்தான் அகமது தாசுதீன் வாழ அனுமதி அளிக்கப்படவில்லை. முன்னாள் கேதா சுல்தான் கேதாவின் மீதோ, சியாம் நாட்டின் மீதோ படையெடுக்க ஆங்கிலேயர்கள் அனுமதி அளிக்கக்கூடாது. பேரக்கிலும், செலங்கரிலும் சியாம் நாடு தலையிட்டுத் தொல்லையளிக்கவோ, கிளர்ச்சிசெய்யவோ, குழப்பம் ஏற்படுத்தவோ, படையெடுக்கவோ கூடாது. ஆங்கிலேயர்களும் பேரக்கிற்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. செலங்கர் பேரக்கின்மேல் படையெடுத்துச் செல்லாமல் பாதுகாக்க வேண்டும். பேரக்கும் சியாமும் நாற்பது அல்லது ஐம்பதுபேர்களுக்கு மேற்படாத தூதுக்குழுக்களை மாற்றிக்கொள்ள நினைத்தால் அதற்கு இடையூறாகக் கிழக்கிந்தியக் கம்பெனி இருக்கக்கூடாது. பேரக் சுல்தான் 'புங்காமாஸ்' அனுப்ப விரும்பினால் அதற்குத் தடையாகவும் கம்பெனி யிருக்கக்கூடாது.

கேலன்தான், தெரங்கானு (Trengganu) வைப்பற்றி இந்த ஒப்பந்தம் மிகத் தெளிவாகக் கூறவில்லை. முற்றிலும் வேருன கருத்துக்களைக்கூற வாய்ப்பு இருந்தது. இவ்விருநாடுகளும் சியாமிற்குத் திறை செலுத்தும் நாடுகளாயிருந்தபோதிலும் இவ்விரு நாடுகளுடன் ஆங்கிலேயர்கள் வாணிபம் செய்ய அனுமதி அளிக்கச் சியாம் தயாராக இருந்தது. பர்னியின் நோக்கம் பின்வருமாறு: இவ்விருநாடுகளும் சியாமிற்குப் 'புங்காமாஸ்' மட்டும் அளிக்க வேண்டும்; தவிர வேறொன்றிலும் சியாம் தலையிடக் கூடாது; அப்படித்தலையிட்டால் ஆங்கிலேய வாணிபத்திற்கு அது இடையூருக இருப்பதாகக் கருதி ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு விருப்பமுள்ள நடவடிக்கைகளை எடுக்கலாம்; அவ்வாறு ஆங்கிலேயர்கள் நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்புகள் ஏற்பட்டால் இந்த உடன்படிக்கை முறிந்தது எனப் பொருள்படும்.

ஆங்கிலேயர்களுக்கும் சியாமிற்கும் வாணிகத் தொடர்பான உடன்படிக்கையும் ஏற்பட்டது. பண்டங்கள்மீது விதிக்கும் வாணிப வரி குறைக்கப்பட்டது. வாணிபத் தொடர்பான வேற்றுமைகள் நீக்கப்பட்டன. ஆனல், நடைமுறையில் இவை தந்திரமாக வெல்லப்பட்டன.

பதினேழாவது நூற்ருண்டிற்குப் பிறகு கி.பி. 1826ஆம் ஆண்டில்தான் முதன் முதலாகச் சியாம் ஒரு ஐரோப்பிய நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. பாங்காக்கை விட்டுப் பர்னி சென்றபோது அவருக்கு வழக்கத்திற்கு மாருன பெருமை கிடைத்தது. அரசர் மூன்ரும் இராமா அவரை வழியனுப்பினுர்.

ஆனல், பேரக்கைப் பொறுத்தவரையில் பேரக்கின் மேல் சியாம் படையெடுத்தால் ஆங்கிலேயர்கள் பேரக்கின் உதவிக்கு வருவார்கள் எனப் புல்லர்ட்டன் பேரக் சுல்தானிடம் கூறினுர். லீகர் மன்னரின்மேல் புல்லர்ட்டனுக்கு ஐயமிருந்தது. ஏனென்ருல், கி.பி. 1825ஆம் ஆண்டில் தொடக்க உடன்படிக்கை ஆன சமயத்திலிருந்து லீகர் மன்னரின் தந்திரங்களும் நடவடிக்கைகளும் பேரக் சுல்தானை அச்சுறுத்துவன போலவும், கட்டாயப்படுத்துவன போலவும் இருந்தன. இராணுவத் தலைவர் ஜேம்ஸ் லோவ்வை 40 சிப்பாய்களுடனும், சிறிய போர்க்கப்பல்களுடனும் தனித் தூதராய்ப் பேரக்கிற்குப் புல்லர்ட்டன் அனுப்பினுர். ஆங்கிலேயர்கள் சுல்தானுக்கு உதவிபுரிவார்கள் எனவாய்மூலம் கூறவும், பேரக்கிலுள்ள சியாம் நாட்டுப் பிரதிநிதிகளின் நடவடிக்கைகளைப் பற்றி அறியவும், அவர்களைச் சியாம் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என எச்சரிக்கை செய்யவும், பேரக் நாடு ஒரு சுதந்திர

நாடாகையால் அந்நாட்டுச் செய்திகளில் சியாம் தலையிடக்கூடாது என்று பேரக் சுல்தான் எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டும் எனக் கூறவும்தான் தனித்தூதர் பேரக்கிற்குச் சென்றார்.

சியாமிடமிருந்து கையூட்டு வாங்கின மலேய் தலைவர்களைப் பதவியிலிருந்து நீக்கப் பேரக் சுல்தானை இசையச் செய்தார் இராணுவத்தலைவர் லோவ். மேலும், கி.பி. 1826ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் சுல்தான் அப்துல்லாவுடன் ஓர் உடன் படிக்கை செய்துகொண்டார். இவ்வொப்பந்தப்படி 'சுல்தான் அப்துல்லா சியாமுடனும், லீகருடனும், செலங்கருடனும், மற்ற மலேய நாடுகளுடனும் அரசியல் தொடர்பு ஒன்றும் வைத்துக் கொள்ளக்கூடாது. மேலும் 'புங்காமாஸ்' அல்லது வேறு வகையான கப்பமும் சுல்தான் அப்துல்லா மற்ற நாடுகளுக்குச் செலுத்தக் கூடாது. பேரக்கிற்குள் மற்ற நாட்டு மக்கள் நுழையக்கூடாது. சுல்தானுக்கு ஆங்கிலேயர்கள் உதவிகிடைக்கும். ஆனால், எல்லா நாட்டு வணிகர்களும் பேரக்கிற்கு வரலாம்' என்பதே அந்த ஒப்பந்தமாகும். தின்திங்ஸ் (Dindings) கடற்கரையோரங்களில் ஒருபகுதியையும், தின்திங்ஸ் சுற்றியிருக்கும் பல தீவுகளையும், பங்கரையும் (Pangkor) சுல்தான் பிரிட்டனுக்கு அளித்தார்.

மேலும், பேரக் சுல்தானின் இசைவுடன் லோவ் குறவ் (Kurau) ஆற்றோரத்தில் இருக்கும் கடற்கொள்ளைக்காரர்களின் இருப்பிடத்தைத் தாக்கினர். கடற்கொள்ளைக்காரர்களின் தலைவன் யுதினைக் (Udin) கைப்பற்றினர். யுதினுக்கும் லீகர் மன்னருக்கும் இடையே பேரக்கிற்கு இன்னல்கள் ஏற்படுத்தவேண்டும் என்ற இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருந்தது. ஆனால், கைப்பற்றப்பட்ட கடற்கொள்ளைககாரன் யுதினை விசாரணை செய்வதற்காக லீகர் மன்னரிடம் லோவ் அனுப்பினர். குறவ் பகுதி கேதாவைச் சேர்ந்தது; யுதின் ஒரு சியாம் நாட்டு அதிகாரி; ஆகையால் சியாம் நாட்டு ஆட்சிப்பகுதியில் லோவ் வரம்புமீறி நடந்ததால் யுதின் குற்றவாளி அல்லர் என்று லீகர் மன்னர் தீர்ப்பளித்தார்.

இந்தியாவில் ஆட்சி செய்யும் ஆங்கிலேய அரசாங்கம் லோவ் உடன் படிக்கையை ஏற்கெனவே கண்டித்திருந்தது மேலும் லீகர் மன்னரின் கருத்துரைகளும் அவர்களுக்குத் தெரியவந்தன. ஆகையால் இந்தியாவின் தலைமை ஆளுநர் பேரக்கிற்கு ஒரு மறுப்புக் குறிப்பாணை அனுப்பினர். மேலும் அரசியல் நடவடிக்கை களில் லோவ் ஈடுபடக்கூடாது என அவர் பதவியிலிருந்து தாற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டார்.

ஆனால், புல்லர்ட்டன் லோவ் செய்கையை ஆதரித்துப் பேசினார். யுதின், லீகர் மன்னரால் அமைக்கப்பட்ட கடற் கொள்ளைக்காரன் என்றும், குறவ் பேரக்கில் இருக்கிறது என்றும் புல்லர்ட்டன் மனநிறைவு உண்டாகும்படி விளக்கம் கூறினார். ஆகையால் தலைமை ஆளுநர் லோவைத் திரும்பவும் பதவியில் அமர்த்தினார். ஆனால், பேரக்கும் லோவும் சேர்ந்து செய்து கொண்ட கி.பி. 1826ஆம் ஆண்டின் உடன்படிக்கையை இந்திய அரசாங்கம் உறுதிசெய்யவில்லை. ஆனால், இந்த உடன் படிக்கையைக் காட்டிப் பேரக் சுல்தான்கள் பிற்காலத்தில் பிரிட்டன் அரசாங்கத்தின் உதவியை நாடினார்கள். பிரிட்டிஷ் அரசாங்கமும் அவர்களுக்கு உதவிபுரிந்தது.

பர்னி ஒப்பந்தத்திற்குப்பிறகு கேதாச் சுல்தானை மலாக்கா விற்குப் போகவேண்டும் என்று கூறினார்கள். ஆனால், அவர் போகவில்லை. ஆகையால் கி.பி. 1831ஆம் ஆண்டில் அவருக்கு அளித்துவந்த ஒய்வூதியத்தைத் தாற்காலிகமாக நிறுத்தினார்கள்; கி.பி. 1831ஆம் ஆண்டில் அவர் மலாக்காவிற்குப் போனார். கி.பி. 1836ஆம் ஆண்டில் சுமத்திராவில் இருக்கும் டெலி (Deli) நகரத்திற்குப் போவதாகக்கூறி மலாக்காவை விட்டுச் சென்றார். ஆனால், உண்மையாக அவர் வடக்குத்திசையில் சென்று பேரக்கில் உள்ள புருவாசுக்குச் (Bruas) சென்றார். அங்குக் கேதாவின்மேல் படையெடுப்பதற்காக மலாய்ப்படைகளைத் திரட்ட முயன்றார். ஆகையால், மலாக்காவிற்குத் திரும்பும்படி அவருக்குப் பினாங்கி லிருந்து ஆணைவந்தது. அவர் இவ்வாணையைப் புறக்கணித்தார். ஆகையால் இரண்டு கப்பல்களை அனுப்பி அவரை அச்சுறுத்தி மலாக்காவிற்குத் திரும்பும்படிச் செய்தார்கள்.

கி.பி. 1835ஆம் ஆண்டில் சியாமிற்கு எதிராகக் கேதாவில் படைக்கிளர்ச்சியும், எதிரெழுச்சியும் எழுந்தன. கடல் நில வழிகளைத் தடைசெய்து பினாங் சியாமிற்கு உதவி செய்தது. பர்னி உடன்படிக்கைப்படி கேதாவில் கேதாச் சுல்தானை மீண்டும் பதவி யில் நியமிக்க முயற்சி செய்தால் ஆங்கிலேயர்கள் சியாமிற்கு உதவி புரியவேண்டும்.

கி.பி. 1841ஆம் ஆண்டில் மீண்டும் தம்மைக் கேதாச் சுல்தா னாகப் பதவியில் நியமிக்கவும், மன்னிப்புக் கேட்கவும் தமது மூத்த மகனைப் பாங்காக்கிற்குக் கேதாச் சுல்தான் அனுப்பினார். கேதாச் சுல்தானின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், கேதாவில் ஏதாவது கலகம் ஏற்பட்டால் பினாங் மீண்டும் சியா மிற்கு உதவியளிக்காது என்றும் பினாங் அரசாங்கம் ஒரு கடிதத்தில்

எழுதி அதையும் கேதாச் சுல்தானின் மூத்த மகன் மூலம் பாங்காக்கிற்கு அனுப்பியது. சியாமிற்கு எப்பொழுதும் உதவீ செய்யும் வீகர் அரசர் இந்தச் சமயத்தில் உயிரோடு இல்லை. கேதாவின் மூலம் சியாமிற்கு யாதொரு பயனும் இல்லை. அதனால் பல துன்பங்கள் தாம் வந்தன. ஆகையால் கி.பி. 1842ஆம் ஆண்டில் கேதாச் சுல்தானின் கோரிக்கையைச் சியாம் ஏற்றது. கேதாவிலிருந்த சியாம் நாட்டு அலுவலர்கள் சியாமிற்குத் திரும்பினார்கள். கேதாவை இரு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியைக் கேதாச் சுல்தானுக்குச் சியாம் அரசர் மீண்டும் அளித்தார். மற்றொரு பகுதியைப் பெர்லிஸ் (Perlis) எனப் பெயர் கொடுத்து, அதைச் சியாம் நாட்டின் ஆதரவின்கீழ் வைத்தார். கி.பி. 1843ஆம் ஆண்டில் கேதாச் சுல்தான் தாசுதீன் பேரக்கில் உள்ள கிரியான் (Krian) பகுதியைக் கைப்பற்றினார். ஆகையால் கேதாவிற்கும் பேரக்கிற்கும் சச்சரவு ஏற்பட்டது. பினாங் பேரக்கை ஆதரித்தது. ஆகையால், கி.பி. 1848ஆம் ஆண்டில் பினாங் அச்சுறுத்தியதால் கேதா தன் படைகளைக் கிரியன் பகுதியிலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடையில் பேரக்கும், செலங்கரும் சுதந்திர நாடுகளாகத் திகழ்ந்தன. பெர்லிஸிலும், கேதாவிலும்தான் சியாம் நாட்டின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. ஆனால், இந்நாடுகளை மலேய் சுல்தான்கள்தாம் ஆண்டு வந்தார்கள். அவர்கள் சியாமிற்கு வழக்கம்போல் கப்பம் செலுத்தி வந்தார்கள். பர்னி லோவ் உடன்படிக்கைகள் மலேயத் தீபகற்பத்தின் மேற்குப் பகுதிகளில் சியாம் நாட்டுச் செல்வாக்கு ஓங்க முடியாதபடிச் செய்தன. ஆனால், சியாம் நாட்டின் எல்லையில் இருக்கும் கேலன்தானிடமிருந்து சியாம் வற்புறுத்தி ஏதாவது ஒன்றைக் கேட்டுக் கொண்டேயிருந்தது. 'புங்காமாஸைத்' தவிரப் பண உதவியையும், படை உதவியையும் அடிக்கடி கேலன்தானைச் சியாம் கேட்டுக் கொண்டேயிருந்தது. ஆகையால், 1830ஆம் ஆண்டில் கேலன்தான் மலேய் சுல்தான் ஆட்சியின் கீழிருந்தபோதிலும், சியாம் நாட்டின் அடிமையென்றே கூறலாம். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தெரங்கானு 'புங்காமாஸ்' அனுப்பிய போதிலும், நடைமுறையில் ஒரு சுதந்திர நாடாக விளங்கியது.

கி.பி. 1858-63ஆம் ஆண்டுகளில் பாகாங்கில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. பாகாங் சுல்தானுக்குப் பென்தஹாரா (Bendehara) என்ற பட்டம் இருந்தது. அவர் ஜோஹூர் சுல்தானுடைய பதில் ஆளுநர் (Viceroy); ஆனால், ஜோஹூரின் ஆற்றல் குன்றத் தொடங்கியவுடன் பாகாங் அரசர் சுதந்திர அரசராக விளங்கினார்.

கி.பி. 1857ஆம் ஆண்டில் பென்தஹாரா சேவா அரசர் அலி இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய மூத்த மகன் துன் முதாயிர் (Tun Mutahir) பதவியேற்ருர். ஆனுல் அரசர் அலியின் மற்ருெரு மகன் வான் அகமது (Wan Ahmad) தானும், அவருடைய அண்ணனும் சேர்ந்து ஆளவேண்டும் எனத் தம் தந்தை விரும்பி ஞர் எனக்கூறி ஆட்சிப் பதவியில் தமக்கும் பங்கு வேண்டும் எனக் கேட்டார். ஆகையால், முதாயிருக்கும், வான் அகமதுக்கும் உள்நாட்டுப் போர் தொடங்கியது. பாகாங்கின் வாணிபம் இதனுல் பாதிக்கப்படுமோ என அஞ்சி, மலாக்காக் கடற்கால் குடியேற்றங் களின் ஆளுநரான கேவநாகு (Cavenagh) இருவருக்கும் சமா தானம் செய்ய முன்வந்தார். தம் உடன்பிறந்தவருக்கு ஓய்வு ஊதியம்தான் கொடுக்க முடியும் என முதாயிர் கூறினுர்; இதை அகமது மறுத்துவிட்டார்.

கி.பி. 1861ஆம் ஆண்டில் அகமது பாகாங்கிலிருந்து துரத்தப் பட்டார். ஆகையால் அவர் சியாமின் உதவியை நாடிப் பாங்காக் கிற்குச் சென்ருர். லிங்காவின் முன்னுள் சுல்தானு மகமது முசாபர்சாவும் சியாமின் உதவியைத் தேடி அங்கு ஏற்கெனவே வந்திருந்தார். மகமது தங்களுக்கு எதிராக வேலை செய்கிருர் என்று கி.பி. 1857ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் அவரைப் பதவியி லிருந்து நீக்கினுர்கள். ஆகையால், இவரும் சியாம் நாட்டின் உதவியை நாடிப் பாகாங் சுல்தாஞக விரும்பினுர். ஆனுல் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆகையால், இச்சுயநலவாதி வான் அகமதுடன் சேர்ந்துகொண்டார்.

கி.பி. 1862ஆம் ஆண்டில் இவ்விரண்டு இளவரசர்களையும் ஏற்றிக்கொண்டு சியாமின் ஒரு போர்க்கப்பலும், மற்றும் பல சிறு கப்பல்களும் தெரங்கானுவிற்கு வந்தன. இவற்றைத்தவிர மற்றும் மூன்று பெரிய சியாம் நாட்டுப் போர்க்கப்பல்களும் தெரங் கானுவிற்கு வந்தன. ஏனென்ருல் பாகாங்கின் மேல் படையெடுக் கத் தெரங்கானு வசதியாக இருந்தது.

மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் ஆளுநரான கேவ நாகு சியாம் நடவடிக்கைகளை ஐயுற்ருர். ஆகையால், இந்த இரண்டு இளவரசர்களையும் தெரங்கானுவிலிருந்து நீக்கும்படி அவர் சியாம் நாட்டைத் தூண்டினுர். ஆனுல், இம்முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. ஆகையால், கி.பி. 1862ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் ஓர் போர்க்கப்பலைத் தெரங்கானுவிற்கு அனுப்பினுர். லிங்காவின் முன்னுள் சுல்தானைப் பாங்காக்கிற்கு உடனடியாக அனுப்பவேண்டும் என அதிகாரத்துடன் கோரிக்கை

விடுத்தார். இந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டதால் அவர் தெரங் கானுவின் கோட்டையைத் தாக்கினுர். உடனடியாக அவர் முயற்சிக்கு வெற்றி ஏற்படவில்லை.

ஆனுல், கி.பி. 1863ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் லிங்காவின் முன்னுள் சுல்தானை மகமதுவைச் சியாமிற்கு அனுப்பியது. இரண்டு மாதங்களுக்குப் பிறகு முதாயிர் இறந்தார். ஆகையால், பாகாங்கின் உள்நாட்டுக் கலகம் அடங்கியது. அகமது பென்த ஹாரா பதவியேற்ருர். சியாம், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் அவர் நல்ல நட்புறவு வைத்துக்கொண்டார்; தம் சுதந்திரத்தை அவர் இழக்கவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தமது மரபு பட்டப் பெயரைப் பென்தஹாராவிலிருந்து சுல்தாஞக மாற்றிக் கொண்டார்.

கி.பி. 1863ஆம் ஆண்டிலிருந்து சியாமின் செல்வாக்கு மலே யாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் மங்கியது.

நானிங் போர்

மலாக்கா ஆற்றுப் பிரதேசங்களில் (hinterland) சுமத்திரா விலிருந்து வந்த மினங்கபாவு மலேய் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய சமூக அமைப்புக்கும் மற்ற மலேய் மக்களின் சமூக அமைப்புக்கும் வேற்றுமை இருந்தது. உதாரண மாக, அவர்கள் தாய் வழியாட்சி முறை (matriarchical) சமூக அமைப்பை அமைத்துக் கொண்டிருந்தார்கள். இச் சமூக அமைப் பில் ஆண் சந்ததி மூலம் இல்லாமல் பெண் சந்ததி மூலம் ஒருவ ருக்குச் சொத்து வந்தது. இவர்கள் பல சிறிய நாடுகளை நிறுவி யிருந்தார்கள். அவற்றில் ஒருநாடு நானிங். டச்சுக்காரர்கள் மலாக்காவை ஆண்டுவந்த காலத்திலிருந்து நானிங் மக்கள் தங்கள் வருமானத்தில் பத்திலொரு பங்கை வரியாக (tithes) ஆண்டு தோறும் மலாக்காவிற்குச் செலுத்தி வந்தார்கள். ஆனுல், ஆங்கிலேயர்கள் மலாக்காவில் ஆட்சிபுரிந்து வந்தபோது கி.பி. 1831ஆம் ஆண்டில் இம் மக்கள் அவ்வாண்டுக்குரிய வரியைச் செலுத்த மறுத்தனர். ஆனுல், டச்சுக்காரர்களிடமிருந்து இந்த வரி உரிமை தங்களுக்கு வந்தது, ஆகையால் நானிங் மக்கள் இவ்வரியைக் கொடுக்கவேண்டும் என ஆங்கிலேயர்கள் வாதாடி ஞர்கள். அதனுல் நானிங் மக்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் கி.பி. 1831-32ஆம் ஆண்டுகளில் சண்டை ஏற்பட்டது. இச் சண்டைக்கே நானிங் போர் எனப் பெயர். இப்போரின் விளைவால் நானிங் மலாக்காவுடன் இணைக்கப்பட்டது. நானிங்கை ஆட்சி புரிந்து வந்த அரசருக்கு மலாக்காவிலே ஒரு வீடும், அவர்

உயிரோடு வாழும்வரை ஓய்வு ஊதியமும் ஆங்கிலேயர்கள் அளித்தார்கள்.

4. சரவாக்

மலேசியாவின் பத்தொன்பதாவது நூற்றுண்டின் வரலாற்றிலே ஒரு முதன்மையான பகுதி ஜேம்ஸ் புருக் (James Brooke) என்னும் ஆங்கிலேயர் சரவாக்கைக் (SarawaK) கைப்பற்றிய வரலாறு.

ஜேம்ஸ் புருக் கி.பி. 1803ஆம் ஆண்டிலே இங்கிலாந்தில் பிறந்தார். கி.பி. 1825ஆம் ஆண்டுவரை கிழக்கிந்தியக் கம்பெனி யின் படைகளில் ஓர் உயர்ந்த பதவியில் பணிபுரிந்தார். ஆனால், முதல் பர்மாப்போரின்போது அடிபட்டதால் கம்பெனிப் படையிலிருந்து விலகிக் கொண்டார். கி.பி. 1831ஆம் ஆண்டி லும், கி.பி. 1834ஆம் ஆண்டிலும் அவர் சீனுவிற்கும், தென்கிழக் காசியாவிற்கும் சென்றுர். கி.பி. 1835ஆம் ஆண்டில் தம் தந்தை இறந்தவுடன் அவர் 30,000 பவுண்டுகளுக்கு வாரிசானுர்; ராயலிஸ்ட் (Royalist) எனும் கப்பலை வாங்கினுர். கி.பி. 1839ஆம் ஆண்டில் அக் கப்பலில் இங்கிலாந்திலிருந்து சிங்கப்பூருக்குச் சென் றுர். அவர் சிங்கப்பூரில் தங்கியிருந்தபோது சிங்கப்பூரின் ஆளுநர் அவர் மூலம் குசிங் (Kuching) அரசர் மூதா அசீமிற்குப் பரிசு களை அனுப்பினுர்.

புருக் சரவாக்கிற்கு வந்தபோது சரவாக் புருணையின் (Brunai) ஒரு பகுதியில் இருந்தது. புருணைச் சுல்தான் ஓமர் அலிசைபுதீன் (Omar Ali Saifuddin) கீழ் இருக்கும் பகுதிகளில் பல ஆளுநர் கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். ஆனல், இவ் வாளுநர்கள் சுதந்திரமாக ஆட்சிபுரிந்து வந்தார்கள். பதினெட்டாம் நூற் ருண்டிலிருந்து புருணைப் பட்டினம் சிறிதாகிக் கொண்டே வந்தது. கி.பி. 1730ஆம் ஆண்டில் புருணையின் மக்கள்தொகை 40,000; பல ஆயிரம் சீன விவசாயிகளும் அங்கு வசித்து வந்தார் கள். ஆனுல், கி.பி. 1810ஆம் ஆண்டில் புருணையின் மக்கள் தொகை 15,000 ; சீனர்களில் ஒரு சிலரே புருணையில் வசித்து வந்தார்கள். ஆகையால் கி.பி. 1842ஆம் ஆண்டில் புருணை ஒரு சிறு கிராமம்போல் தோற்றமளித்தது. கி.பி. 1837ஆம் ஆண்டி லிருந்து டயாக் மக்களும், சரவாக் மலேய் மக்களும் சரவாக்கில் சுல்தானுக்கு எதிராகக் கலகம் செய்யத் தொடங்கினுர்கள். புருணை சுல்தானின் மாமனுன அரசர் மூதா அசீமால் இக்கலகத்தை அடக்க முடியவில்லை. புருக் சரவாக் வந்திருந்தபோது புருணை

யின் ஆளுநர் பென்கிரன் மாக்கோட்டாவின் ஆட்சியை எதிர்த்து டயாக் மக்களும் சரவாக் மலேய் மக்களும் கலகம் செய்து கொண்டிருந்தார்கள்.

குசிங்கிற்கு முதன் முறை புரூக் வந்தபோது அதிக மாதங்கள் தங்கவில்லை. அதே ஆண்டில் சிங்கப்பூருக்குத் திரும்பி வந்து விட்டார். தமக்கு உதவி செய்யும்படிச் சிங்கப்பூரை அரசர் மூதா அசீம் கேட்டார். ஆனால் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் அரசாங்கம் சரவாக் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. புரூக் தலையிட விரும்பினார். ஆகையால் கி.பி. 1840ஆம் ஆண்டில் அவர் மீண்டும் குசிங்கிற்கு வந்து சேர்ந்தார். அரசர் மூதா அசீம் அவரை மிக மகிழ்ச்சியோடு வரவேற்றார். சரவாக் கலகத்தை அடக்க புரூக் ஒத்துழைத்தால் அவருக்குச் சரவாக் ஆளுநர் பதவியை அளிப்பதாக அசீம் கூறினார். புரூக்கும் அதற்கு உடன்பட்டார். ஆனால் புருனேயின் ஆளுநர் பென்கிரன் மாக்கோட்டா இதை எதிர்த்தார். மாக்கோட்டாவைப் பதவியிலிருந்து நீக்கினால்தான் கலகம் நிறுத்தப்படும் எனக் கலகம் செய்தவர்கள் கூறியதால் கி.பி. 1841ஆம் ஆண்டில் அசீம் புரூக்கை ஆளுநராக நியமித்தார். கலகமும் மெல்ல மங்கி மறையத் தொடங்கியது. கி.பி. 1842ஆம் ஆண்டில் புரூக்கின் ஆளுநர் பதவியைச் சுல்தான் உறுதிப்படுத்தினார். புரூக்கிற்குச் சரவாக்கின் ஒரு பகுதியையும் அளித்தார். அதற்கு ஈடாக ஆண்டுதோறும் புரூக் சுல்தான் அசீமிற்குக் கப்பம் கட்ட வேண்டும். ஆகையால் புரூக் சரவாக்கின் அரசர் ஆனார். புரூக்கின் குடும்பம் இங்கு நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தது.

இதற்குமுன் இருந்த ஆட்சி அமைப்பு குலைந்திருந்ததால், ஒரு புதிய ஆட்சி அமைப்பை புரூக் அமைக்க வேண்டியதாய் இருந்தது. புரூக் பதவியேற்கும் சூழ்நிலையில் வாழ்க்கைக்கும், சொத்துடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. இபன்ஸ் அல்லது கடல் டயாக்குகள் நில டயாக்குகளிடமிருந்து கொள்ளையடித்தார்கள்; சூறையாடினார்கள். நில டயாக்குகளைப் பாதுகாக்கவும், கடற்கொள்ளைக்காரர்களைக் கட்டுப்படுத்தி ஒழிக்கவும், எதிரிகளின் தலைகளை வெற்றிச் சின்னங்களாகக் கருதித் திரட்டும் காட்டுமிராண்டித் தன்மையை ஒழிக்கவும் புரூக் விரும்பினார். ஆனால் புதுச் சட்டங்களை அறிமுகப்படுத்தப் புரூக் முயலவில்லை. பழக்கவழக்கங்களில் இருக்கும் சட்டங்களையும், தலைவர்களைக் கலந்து ஆலோசிக்கும் முறையையும் புரூக் கடைப்பிடித்தார். ஐரோப்பிய வாணிபத்தலமாகச் சரவாக்கை மாற்றவும் புரூக் விரும்பவில்லை. சரவாக் மக்களின் நன்மையை நாடியே

ஐரோப்பிய அரசாங்கம் அமைந்திருக்க வேண்டும் என புரூக் விரும்பினார். சரவாக்கின் பண நெருக்கடி நிலையைப் போக்கு வதற்காகத் தம் செல்வம் முழுவதையும் புரூக் பயன்படுத்தினார்.

ஆங்கிலேய அரசாங்கத்தின் உதவி புரூக்கிற்கு மிகுதியாகக் கிடைக்கவில்லை ; மலேயத் தீபகற்பத்தின் அரசியல் செய்திகளில் தலையிடுவதில்லை என ஆங்கிலேய அரசாங்கம் தீர்மானித்திருந்தது. கி.பி. 1843ஆம் ஆண்டிலும், 1845ஆம் ஆண்டிலும் கடற் கொள்ளைக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்த போது தான் சிங்கப்பூர் அரசாங்கத்திடமிருந்து புரூக்கிற்கு உதவி கிடைத்தது. சிங்கப்பூருக்கும், ஆங்கிலேயர்கள் புதிதாகக் கைப் பற்றிய ஹாங்காங்கிற்கும் இடையேயிருக்கும் போர்னியோவை ஆங்கிலேயர்களின் நிலத்தளமாக மாற்ற முயற்சி செய்தால் தமக்கு ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும் என புரூக் நினைத்தார். அவர் இதில் எண்ணியபடியே அவருக்கு வெற்றி கிடைத்தது.

கி.பி. 1846ஆம் ஆண்டில் அரசர் மூதா அசீமையும், அவர் குடும்பத்தினரையும், புரூக்கிற்கு உதவி செய்கிறார்கள் என எண்ணி, ஒரு சிலர் சதி செய்து கொலைசெய்தார்கள். ஆகையால் சிங்கப்பூர்க் கடற்படை உதவியுடன் புரூக் புருனேயைக் கைப் பற்றினார். உடனடியாகப் புருனேச் சுல்தானுடன் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி சரவாக் புருனேச் சுல்தானுக்கு இனிமேல் கப்பம் செலுத்த வேண்டாம் ; சரவாக்கிற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. கி.பி. 1847 ஆம் ஆண்டில் புருனேச் சுல்தானுடன் செய்துகொண்ட மற்ற ஓர் உடன்படிக்கையின்படி லாபுவான் தீவு பிரிட்டனுக்கு அளிக்கப் பட்டது. இத்தீவைக் கடல்தளமாகப் பிரிட்டன் மாற்றியது. மேலும் இவ்வுடன்படிக்கையின்படிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் அதனுடைய பகுதிகளை வேறு ஓர் அரசாங்கத் திற்கு அளிக்கக்கூடாது.

லாபுவானிற்குப் பதிலாகச் சரவாக்கைக் கடல்தளமாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் மாற்றவேண்டும் எனப் புரூக் விரும்பினார். ஆனால் லாபுவான் தீவில் நிலக்கரி கிடைத்தது ; மேலும் குசிங்கைவிட லாபுவானில் துறைமுகவசதிகள் அதிகமாயிருந்தன. சரவாக்கை ஒரு சுதந்திர நாடாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்க வேண்டும் எனவும், சரவாக்கிற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் புரூக் விரும்பினார். அவருடைய இந்த எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால் தீரச் செயல்களை

நாடிச் செல்லும் வீரன் (Knight) என்ற பட்டத்தை புருக்கிற்கு அளித்து, புருணே, போர்னியோ ஆகியவற்றின் அந்நிய நாட்டுப் பிரதிநிதித் தளபதியாகப் (Consul General) புருக்கைப் பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது. கி.பி. 1848ஆம் ஆண்டில் லாபுஅன் தீவின் ஆளுநர் பதவியும் புருக்கிற்கு அளிக்கப்பட்டது. இது புருக்கின் வாழ்க்கையிலே ஒரு முதன்மையான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. சரவாக்கிலே புருக்கின் ஆட்சி நிலையாயிற்று. கி.பி. 1841ஆம் ஆண்டில் குசிங்கின் மக்கள் தொகை 8,000 ஆக இருந்தது; ஆனால், கி.பி. 1850ஆம் ஆண்டில் 50,000 ஆக உயர்ந்தது; கி.பி. 1850ஆம் ஆண்டில் குசிங்கின் ஏற்றுமதி 2,50,000 டாலர்கள். பிற நாட்டிலிருந்து வந்து குடியேறுபவர்களின் மக்கள் தொகை பெருகியதால் குசிங்கின் மக்கள் தொகை அதிகரித்தது. உதாரணமாக, பேமங்காட்டிலிருந்து (Pemangkat) 3,000 சீனர்கள் வந்து குடியேறினார்கள்.

புருக் சரவாக்கில் செல்வாக்குடன் இருப்பதையும், பிரிட்டன் லாபுஅனில் ஆட்சிபுரிவதையும் டச்சுக்காரர்கள் எதிர்த்தார்கள். இது கி.பி. 1824ஆம் ஆண்டின் உடன்படிக்கையை மீறுவதாய் இருக்கிறது என டச்சுக்காரர்கள்கருதினார்கள். போர்னியோவைச் சிங்கப்பூருக்குத் தெற்கில் அமைந்திருக்கும் ஒரு தீவாய்ப் பிரிட்டன் கருதவில்லை எனப் பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியது; இக் கருத்தை ஆலந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம், ஐரோப்பாவில் நடந்த கி.பி. 1848ஆம் ஆண்டின் புரட்சிக்குப்பிறகு ஆலந்திற்குப் பிரிட்டனின் உதவி தேவையாயிருந்தது. கி.பி. 1850ஆம் ஆண்டில் டச்சு அரசாங்கம் பிரிட்டனின் கருத்தை ஏற்றுக்கொண்டது. கி.பி. 1850ஆம் ஆண்டிலிருந்து 1870ஆம் ஆண்டுவரை போர்னியோவின் மேல் உள்ள ஆசையும், அக்கறையும் பிரிட்டனுக்குக் குறைந்தன. பிரிட்டன் எதிர்பார்த்தபடி லாபுஅனின் கடல்தளம் பயன்படவில்லை; லாபுஅனின் நிலக்கரியின் விலை மிகவும் உயர்ந்தது. மேலும் லாபுஅனிலிருந்து கடற்கொள்ளைக்காரர்களைப் பிடிக்கக் கடினமாயிருந்தது. குசிங்கோ போர்னியோ வாணிபத்திற்கு மிகப் பயனுள்ளதாயிருந்தது. சரவாக்கைப் பிரிட்டனுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் புருக் முயற்சி செய்தார். இதிலும் பிரிட்டன் அக்கறை காட்டவில்லை.

கி.பி. 1850ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1863ஆம் ஆண்டுவரை சரவாக்கின் நகராட்சி எல்லை அதிகரித்தது. கி.பி. 1853ஆம் ஆண்டில் ரேசாங் (Resang) ஆற்றின் எல்லைவரை பரவியிருந்தது; கி.பி. 1861ஆம் ஆண்டில் பின்துலு (Bintulu) ஆற்றின்எல்லைவரை பரவியது. டயாக், லானுவன் ஆகிய கடற்கொள்ளைக்காரர்கள்

மாருடா விரிகுடாவில் வாழ்ந்து வந்தார்கள். கி.பி. 1849ஆம் ஆண்டில் தான்சோங் பெதிங் மாரு போரில் (Tansong Beting Maru-War) அவர்களைப் புருக் தோற்கடித்தார். இப்போருக்குப் பிறகு கடற்கொள்ளைக்காரர்களின் தொல்லை குறைந்தது. கடற் கொள்ளைக்காரர்களைத் தோற்கடிக்கப் பிரிட்டிஷ் கப்பற்படை புருக் கிற்கு உதவியது. இதைப் பிரிட்டனில் இருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்த்தது. ஆகையால், புருக் லாபுனன் ஆளுநர் பதவியினின்றும் விலகினர். கி.பி. 1862ஆம் ஆண்டுக்குப் பிறகு கடற்கொள்ளைக்காரர்களின் தொல்லை ஒழிந்தது; டயாக் மக்களின் உள்நாட்டுக் கலகங்களும் மறைந்தன. எதிரிகளின் தலைகளை வெற்றிச்சின்னங்களாகக் கருதித் திரட்டும் காட்டுமிராண்டிப் பழக்கமும் (head-hunting) அழிந்தது. கி.பி. 1862ஆம் ஆண்டில் சரவாக் ரேஞ்சர்ஸ் (Sarawak Rangers) என்ற சரவாக் உள் நாட்டுப் பாதுகாப்புப் படையைப் புருக் அமைத்தார்.

பாவுவில் (Bau) உள்ள பொன் சுரங்கத்தில் பணிபுரியும் சீனர்களுக்குப் புருக்கின் ஆட்சி பிடிக்கவில்லை. புருக்கின் ஆட்சியினால் தங்களுடைய சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என அவர்கள் கருதினர்கள். புருக்கிற்குப் பிரிட்டனுடைய ஆதரவு கிடைக்கவில்லை என அவர்கள் அறிந்துகொண்டார்கள். மேலும், கி.பி. 1856ஆம் ஆண்டில் நடைபெற்ற சீன-ஆங்கிலேயர்கள் போர் அவர்களுக்கு ஆங்கிலேயர்களின்மேல் உள்ள வெறுப்பை அதிகரித்தது. ஆகையால், கி.பி. 1857ஆம் ஆண்டில் பொன் சுரங்கத்தில் பணிபுரியும் சீனர்கள் புருக்கிற்கு எதிராகக் கலகம் செய்தார்கள். யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் ஆற்றுவழியாகச் சென்று சீனர்கள் குசிங் மாகாணத்தை எளிதில் கைப்பற்றினர்கள். ஆற்றில் நீந்திச் சென்று புருக் உயிர்தப்பினர். ஐந்து நாள்கள் சீனர்கள் வசம் குசிங் மாகாணம் இருந்தது. டயாக், மலேய் மக்கள் ஆகியவர்களின் படையைப் புருக் திரட்டினர். இப்படை உதவியுடனும், சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு கப்பலின் உதவியுடனும், குசிங் மாகாணத்தை மீண்டும் புருக் கைப் பற்றினர். பாவு எல்லைவரை சீனர்கள் துரத்தப்பட்டார்கள்; கிட்டதட்ட 3,500 சீனர்கள் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பிறகு பல ஆண்டுகள் சரவாக்கிற்குவந்து குடியேறிய சீனர்கள் இம்மாதிரியான முயற்சி எடுக்கவில்லை.

உடல் நிலைமை சரியில்லாததால் கி.பி. 1863ஆம் ஆண்டில் ஜேம்ஸ் புருக் சரவாக்கிலிருந்து பிரிட்டனுக்குச் சென்றார். மேலும், ஐந்து ஆண்டுகள் பிரிட்டனில் உயிரோடு இருந்தார். உள்நாட்டுக் கலகங்களிலிருந்தும், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும்

சரவாக்கைப் பாதுகாக்கும்படிச் செய்த பிறகுதான் புருக் பிரிட்டனுக்குச் சென்றார். பிரிட்டனும் சரவாக்கைச் சுதந்திர நாடாக ஒப்புக்கொண்டது. பிரிட்டனின் அந்நியநாட்டுப் பிரதிநிதியையும் (British Consul) குசிங்கிற்குப் பிரிட்டன் அனுப்பியது. ஆகையால் பிரிட்டிஷ் ஆட்சி சரவாக்கில் நிலைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் புருக் பிரிட்டனுக்குத் திரும்பினார்.

5. சிங்கப்பூர் கி.பி. 1823-1870

கி.பி. 1819ஆம் ஆண்டில் சிங்கப்பூர் அமைக்கப்பட்டது. கி.பி. 1823ஆம் ஆண்டுவரை சிங்கப்பூர் பென்கூலனின் துணைநிலை மண்டலமாக இருந்தது. பென்கூலனிலிருந்து ராபெல்ஸ் அடிக்கடி வரமுடியவில்லை. அங்கு அவருக்குப் பல அலுவல்கள் இருந்தன. ஆகையால் சிங்கப்பூரில் ஆட்சிபுரிய ராபெல்ஸ் ஒரு துணைக்காப்பரசின் ஆளுநரை (Resident) நியமித்தார். கி.பி. 1822-23ஆம் ஆண்டுகளில் ராபெல்ஸ் சிங்கப்பூருக்கு இரண்டாவது முறையாகவும் இறுதி முறையாகவும் வந்தார். கி.பி. 1823ஆம் ஆண்டில் அவர் இங்கிலாந்திற்குத் திரும்பினார். அங்குக் கி.பி. 1826ஆம் ஆண்டில் இறந்தார்.

கி.பி. 1823-6ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூர் இந்தியாவின் தலைமை ஆளுநர் ஆட்சியின்கீழ் வந்தது. கிராபோர்டு (Crawford) என்பவர் சிங்கப்பூரின் துணைக்காப்பரசு ஆளுநராய் இருந்தார். கி.பி. 1826ஆம் ஆண்டில சிங்கப்பூர் தனிக் குடியிருப்புப் பகுதியாய் (Settlement) இருக்கக்கூடாது எனத் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், ஆங்கிலேயர்கள் ஆண்டுவந்த மற்றக் குடியிருப்புப் பகுதிகளான பினாங்குடனும், மலாக்காவுடனும் சிங்கப்பூர் இணைக்கப்பட்டது. ஆனால், சிங்கப்பூர் பினாங்கின் மேலாட்சியின்கீழ் வந்தது. இவைகளையே மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் (Straits Settlements) என அழைத்தார்கள். இதன் விளைவாகக் கி.பி. 1927ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் சட்டமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இச் சட்டமன்றங்கள் பினாங்கின் உயர் வழக்கு மன்றத்தின்கீழ் வந்தன.

மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் வங்காள அரசாங்கத்தின் ஆட்சியின்கீழ் வந்தன. ஆகையால் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் வங்காளத்தில் முன்னுள் இந்திய மன்னரவையின் ஆளுநர் முதல்வரின் பணிமனையாக மாறியது. ஆனால் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களுக்கு ஓர் ஆளுநர் இருந்தார். அவருக்குக்

கீழ் இரு துணைக்காப்பரசின் ஆளுநர்களும், மற்ற உறுப்பினர்களும் (Resident Councillor) இருந்தார்கள்.

சிங்கப்பூரும் வாணிபமும்

ஐம்பது ஆண்டுகளுக்குள் சிங்கப்பூர் ஒரு பெரிய மாநகரமாய் மாறியது. வாணிபம் வளர்ந்து மக்கள் தொகை மிகுந்தது. முக்கியமாகச் சீனர்களின் தொகை பெருகியது. ஆனால், மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கட்குச் செய்த செலவு வரவுக்கு மேல் இருந்தது. ஆகையால், அதிகச் செலவு செய்யக்கூடாது என வங்காள அரசாங்கம் கட்டுப்பாடு செய்தது.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முறையில் பற்றுக்குறை இருந்தபோதிலும், ஐரோப்பியச் சீன வணிகர்கள் சிங்கப்பூரில் தங்கிச் செல்வம் சேர்த்தார்கள். சில புகழ் பெற்ற வாணிகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. உதாரணமாக, கி.பி. 1821ஆம் ஆண்டில் செமும், கி.பி. 1827ஆம் ஆண்டில் பௌஸ்டெட்டும் (Boustead), கி.பி. 1827ஆம் ஆண்டில் பேட்டரசன் போர்னியோ சங்கமும் தோற்றுவிக்கப்பட்டன. சிங்கப்பூரின் புவியியல் அமைப்பால்தான் சிங்கப்பூரின் வாணிகம் தழைத்தோங்கியது. உலக கிழக்கு-மேற்கு வாணிபச் செல்வழியில் சிங்கப்பூர் அமைந்திருக்கிறது. ஆகையால், ஐரோப்பாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்த ஆக்கத் தொழில் பண்டங்கள் சிங்கப்பூர் வழியாகச் சீனாவிற்கும், இந்தோ—சீனாவிற்கும், கிழக்கிந்தியத் தீவுகட்கும் (East Indies) அனுப்பப்பட்டன. சிங்கப்பூர் சுங்கவரி—காப்புவரிக் கட்டுபபாடு முதலியவையற்ற வாணிபத் தலமாயிருந்ததால் வாணிபம் தழைத்தோங்கியது. ஆகையால், தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பண்டங்கள் எல்லாம் சிங்கப்பூர் வியாபாரத் தலத்திற்கு வந்துகுவிந்தன. சிங்கப்பூரின் வாணிப விலை மதிப்பு கி.பி. 1825ஆம் ஆண்டில் 2,610,000 பவுண்டுகளிலிருந்து 1830ஆம் ஆண்டில் £ 3,948,000 பவுண்டுகள் வரையும், 1840ஆம் ஆண்டில் £ 5,851,000 பவுண்டுகள் வரையும், 1859ல் £ 10,371,000 பவுண்டுகள் வரையும் உயர்ந்தது. மற்ற மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில் வாணிபம் இவ்வளவு வளரவில்லை. பினாங்கும், மலாக்காவும் சிங்கப்பூர் வாணிபத் தலத்தின் வழியாகத்தான் வியாபாரம் செய்தன.

கி.பி. 1825ஆம் ஆண்டிலிருந்து 1867ஆம் ஆண்டுவரை கிழக்கிந்தியத் தீவுகளில் ஆங்கிலேயர்களுடைய வாணிபம் தழைத்தோங்கியதற்குக் காரணம் சிங்கப்பூர்த் தீவுதான். ஹாங்காங்கை அமைப்பதற்கு முன் சிங்கப்பூர்தான் சீன வாணிபத் தொடர்பு

வளர்ச்சிக்குக் காரணம். இந்தியாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் ஆடைகளும் அபினியும் சிங்கப்பூருக்கு வந்தன. இவை தென் கிழக்கு ஆசியாவில் உள்ள தீவுக்கூட்டங்களிலும், சீனுவிலிருந்து வந்த வணிகர்களிடமும் விற்கப்பட்டன. கி.பி. 1840ஆம் ஆண்டில் சீனுவிலிருந்து 250 மரக்கலங்களின் வகைகள் (Junks: தட்டையான அடிப்பாக மரக்கலங்கள்) சிங்கப்பூருக்கு வந்தன. இச்சீன வியாபாரிகள் தேயிலையும், பட்டும் கொண்டுவந்தனர். இவைகளைத் தாங்கள் வாங்கும் பண்டங்களுக்கு ஈடாக அவர்கள் கொடுத்துப் பண்டங்களை வாங்கினுர்கள். ஆனுல், கி.பி. 1824ஆம் ஆண்டுக்குப்பிறகு போர்னியோவுடன் சிங்கப்பூர் செய்த வியாபாரம் தழைத்தோங்கத் தொடங்கியது.

கி.பி. 1860ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் வாணிப மதிப்பு ஓர் ஆண்டிற்கு £ 10 மில்லியன்கள். டச்சுக் கிழக்கிந்தியத் தீவு வியாபாரம் முழுவதும் £ 14 மில்லியன்கள்தாம். சிங்கப்பூரின் வியாபாரத்தலம் தழைத்தோங்கியதின் காரணம் அது கிழக்கிந்தீஸுடன் செய்த வியாபாரம்தான். தென்கிழக்கு ஆசியாவின் பிரதம வங்கிகளும், காப்புறுதிச் சங்கங்களும் (Insurance Companies) சிங்கப்பூரில் வளர்ந்தன. முதலில் கி.பி. 1846ஆம் ஆண்டில் ஓரியன்டல் வங்கி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது ஆனுல், நாளடைவில் இது மறைந்தது. கி.பி. 1859ஆம் ஆண்டில் சாடர்ட் பாங்க்ன் கிளை ஒன்று சிங்கப்பூரில் ஏற்படுத்தப்பட்டது. சைம் டார்பீ, ஹென்ரீவாக், கூத்ரிஸ் போன்ற கூட்டு வாணிக நிலையங்களுக்கும், அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா ஆகிய வற்றில் உள்ள வாணிக நிலையங்களுக்கும் இக்கூட்டு வாணிக நிலையங்கள் தரகர்களாக மாறி வாணிபம் செய்தன. இவைகளுக்குள் முக்கியமானது போர்னியோ வாணிப நிலையம்.

ஐம்பது ஆண்டுகளுக்குள் மீனவர்களின் கிராமத்திலிருந்து தென்கிழக்காசியாவின் முக்கிய வாணிபத்தலமாகச் சிங்கப்பூர் மாறியது. மக்கள் தொகை வளர்ந்ததால்தான் சிங்கப்பூரில் வாணிபம் வளர்ந்தது. சிங்கப்பூரின் மக்கள் தொகை வளர்ச்சி பின்வருமாறு :

கி.பி. 1820	5,000
கி.பி. 1830	16,634
கி.பி. 1840	39,681
கி.பி. 1850	59,043
கி.பி. 1860	80,792

கி.பி. 1860ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 50,000 சீனர் களும், 13,000 இந்தியர்களும், 11,000 மலேய் மக்களும் இருந் தார்கள்.

சிங்கப்பூருக்கு வந்து வாணிபம் செய்து செல்வம் சேர்க்கலாம் என்ற வாய்ப்பு இருந்ததால்தான் மக்கள் சிங்கப்பூருக்கு வந்தார்கள். சிங்கப்பூரில் வசித்து வந்த அதிக வணிகர்கள் சீனர்கள். இவர்கள் இரகசியச் சங்கங்களை (Secret Societies) அமைத்திருந்தார்கள். இச் சங்கங்கள் சீனர்களின் நல்வாழ்க்கை யைக் கண்காணித்து வந்தன. ஆனால், இச் சங்கங்களின் நோக் கம் 'அரசாங்கத்திற்குள் அரசாங்கம்' (Government within Government) அமைக்கவேண்டும் என்பதுதான். தங்களைத் தாங் களே ஆட்சி புரியவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சீனர்கள் இம் மர்மச் சங்கங்களை அமைத்திருந்தார்கள். பிரிட்டிஷ் சட்டங்கள் பிடிக்காததால் அவற்றை அவர்கள் புறக்கணித்தார்கள்.

முதன் முதலில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சீனர்களின் மர்மச் சங்கத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஏனென்றால் அவர்களுக்குச் சீனர்களின் மொழி தெரியவில்லை. கி.பி. 1867ஆம் ஆண்டில் ஒருசிலருக்குச் சீன மொழி தெரியும். கி.பி. 1823ஆம் ஆண்டுவரை காவல்துறை அலுவலகத்தில் 18 பேர்களே வேலை செய்தார்கள். ஆகையால், நகரைப் பாதுகாப்பது கடினமாயிருந் தது. சங்கத்தலைவர்களின் அதிகாரம் ஓங்கியிருந்தது. ஆனால், எவ்வளவு மனிதர்களின்மேல் தங்களுக்கு அதிகாரம் உண்டு என்பதைப்பற்றிச் சங்கத்தலைவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. இது சிங்கப்பூரின் அமைதி நிலைமையைக் குலைத்தது. கி.பி. 1851ஆம் ஆண்டில் சீனர்களின் மர்மச் சங்கங்கள் சீனக் கிறித்த வர்களைத் தாக்கி 500 பேரைக் கொலை செய்தது.

கி.பி. 1854ஆம் ஆண்டில் சீனர்களுக்குள் ஏற்பட்ட சண்டை பத்து நாள்கள் நீடித்தது. 400 சீனர்கள் கொலை செய்யப்பட் டார்கள். கி.பி. 1831, 1846, 1857, 1863, 1864 ஆகிய ஆண்டு களில் சீனர்களுக்குள் இத்தகைய கலகங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு சீன மர்மச் சங்கத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாமல் இருந்ததால் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிங்கப்பூரில் குடியேறிய மக்களுக்கு வாழ்க்கை கடினமா யிருந்தது. ஒருசில சீனர்களே செல்வம் சேர்த்தார்கள். சீனர்களில் பலர் வாணிபம் செய்தனர். பதச்சாறு செய்யும் தோட்டங்களிலும், மிளகு வளரும் தோட்டங்களிலும் பல சீனர்கள் வேலை செய்தனர்.

ஆனால், அவர்களிடம் நோய் மலிந்தது; கடன் தொல்லை அதிகரித்தது. மேலும் அவர்கள் சீனாவில் உள்ள தங்களது குடும்பத்திற்குப் பணம் அனுப்பவேண்டியிருந்தது. மேலும், ஆண்களுடன் சீனப் பெண்மணிகள் அதிகமாக வரவில்லை. கி.பி. 1860ஆம் ஆண்டில் ஒரு சீனப் பெண்மணிக்கு 15 சீன ஆண் சிங்கப்பூரில் இருந்தார்கள். இதனால்தான் ஒருவேளை சீனர்களிடம் மனதுக்குள் அடக்கி வைத்த மனத்துன்பங்களும் தீவிரக் கருத்துவேற்றுமைகளும் இருந்தனவோ என்னவோ ?

ஆட்சி முறை

கி.பி. 1823ஆம் ஆண்டிலிருந்து 1867ஆம் ஆண்டு வரை சிங்கப்பூர் அரசாங்கத்தை இந்தியாவிலிருந்து ஆண்டார்கள். சிங்கப்பூர் அரசாங்கத்திடம் அவ்வளவு அதிகாரமில்லை. சீனர்களை அடக்கி ஆளச் சிங்கப்பூர் அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஊழியர்களை அதிகரிக்கவேண்டும் என சிங்கப்பூர் விரும்பியது. ஆனால், ஊழியர்களைக் குறைக்கவேண்டும் என இந்திய அரசாங்கம் கட்டளையிட்டது. ஆகையால், சிங்கப்பூர் அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் சச்சரவு உண்டாயிற்று. மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் செலவைக் குறைக்கவேண்டும் என இந்திய அரசாங்கம் விரும்பியது. ஆகையால்தான் கடற்கொள்ளைக்காரர்களை அடக்கவும், சீன மர்மச் சங்கங்களை ஒழிக்கவும் இந்திய அரசாங்கம் சிங்கப்பூர் அரசாங்கத்திற்குப் பொருளுதவி கொடுக்கவில்லை. கி.பி. 1856ஆம் ஆண்டு சிங்கப்பூரில் காவலரின் ஆணையரை நியமிக்கவில்லை (Commissioner of Police).

கி.பி. 1851 வரை மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் வங்காளத்தின் ஆட்சிக்கீழ் இருந்தன. ஆனால், கி.பி. 1851ஆம் ஆண்டிலிருந்து இவை தலைமை ஆளுநர் ஆட்சியின் கீழே வந்தன. கி.பி. 1858ஆம் ஆண்டில் இந்தியச் சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி ஒழிந்தது. இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆட்சியின்கீழ் இந்தியா வந்தது. ஆகையால், மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள், கிழக்கிந்தியக்கம்பெனி ஆட்சியிடமிருந்து விடுதலை யடைந்து இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தினது ஆட்சியின்கீழ் வந்தன. ஆனால், இம்மாற்று முறையால் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் ஆட்சிமுறை அதிகமாக மாறவில்லை. இந்தியாவில் உள்ள அரசாங்கம் தென்கிழக்கு ஆசியாவில் மிக்க அக்கறையும் கவனமும் செலுத்தவில்லை.

கி.பி. 1842ஆம் ஆண்டில் ஹாங்காங்கை அமைத்தவுடன் சிங்கப்பூரின் மேல் இருந்த அக்கறை இன்னும் குறைந்தது. ஆனால், டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவிலும், ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸிலும், பிரெஞ்சுக்காரர்கள் இந்தோ சீனவிலும் வாணிபத்தலங்களை அமைத்ததுடன் ஆங்கிலேயர்கள் மலேயத் தீபகற்பத்தின்மேல் கவனம் செலுத்தத் தொடங்கினர்கள். கி.பி. 1844ஆம் ஆண்டிலே சிங்கப்பூரில் இருந்த செய்தித்தாள்கள் மலேயா நாடுகளைப் பிரிட்டன் கைப்பற்றவேண்டும் எனக் கூறின. ஆனல், இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிடாக் கொள்கையை மாற்றவில்லை.

கி.பி. 1835ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூர் அரசாங்கத்தில் இந்திய அரசாங்கம் தலையிடக்கூடாது எனச் சிங்கப்பூரில் உள்ள வணிகர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கி.பி. 1855ஆம் ஆண்டில் செலாவணிச் சட்டம் (Currency Act) ஒன்றைக் கொண்டுவந்தார்கள். இந்திய ரூபாய்தான் 'நாணய மதிப்புத் தகவு' (Monetary Standard) ஆக இருக்கவேண்டும் எனத் தீர்மானித்தார்கள். இதனல், கி.பி. 1855-56ஆம் ஆண்டுகளில் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில் வாணிப வரி விதிக்கக்கூடாது என இந்திய அரசாங்கம் சட்டமும் கொண்டுவந்தது. இது சிங்கப்பூரின் சுங்கவரிக் கட்டுப்பாடு இல்லாத வாணிபத்தைப் பாதிக்கும் என்பதைப் பற்றி இந்திய அரசாங்கம் கவலைகொள்ளவில்லை. மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில் உள்ள வியாபாரங்களின் நன்மையைப் பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்கம் கவலைப்படவில்லை.

சிங்கப்பூரில் ஒரு சட்டசபையை அமைக்கவேண்டும் என்று சிங்கப்பூரில் குடியிருந்த வியாபாரிகள் விரும்பினர்கள். இச்சட்டசபையின் மூலம் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம் என இவர்கள் விரும்பினர்கள். மேலும், தண்டக் கைதிகளை மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களுக்கு அனுப்புவதையும் இவர்கள் விரும்பவில்லை. ஆகையால், கி.பி. 1858ஆம் ஆண்டில் விடுவிக்க வேண்டும் என ஒரு விண்ணப்பத்தைப் பிரிட்டிஷ் சட்டசபைக்கு அனுப்பினர்கள். இந்திய அரசாங்கமும் இதை ஆதரித்தது. ஏனென்றல் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின்மேல் பணம் செலவழிக்க இந்திய அரசாங்கம் விரும்பவில்லை. கி.பி. 1867ஆம் ஆண்டில்தான் இந்த எண்ணம் நிறைவேறியது. ஆகையால், கி.பி. 1867ஆம் ஆண்டில் மலாக்கா நீரிணைப்புக்கு குடியேற்றங்கள் குடியேற்ற அலுவலகத்திற்கு (Colonial office) மாற்றப்பட்டன. கி.பி. 1869ஆம் ஆண்டுக்குப் பிறகு இக் குடியேற்றங்களின்

செல்வமும் முதன்மையும் வளர்ந்தன. கி.பி. 1869ஆம் ஆண்டில் சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டது. இதுவும் மலாக்காக் குடியேற்றங்களின் செல்வ அதிகரிப்புக்கு ஒரு முக்கியக் காரணம் ஆகும்.

சிங்கப்பூரைப் பயன்படுத்திவந்த கப்பல்களின் கொள்ளளவு

கி.பி. 1869	600,000 டன்கள்
கி.பி. 1873	1,030,000 டன்கள்
கி.பி. 1878	1,600,000 டன்கள்

வாணிபம்

	கி.பி. 1870	கி.பி. 1879
இறக்குமதி	$ 37 மில்லியன்கள்	$ $56\frac{1}{4}$ மில்லியன்கள்
ஏற்றுமதி	$ $31\frac{1}{2}$ மில்லியன்கள்	$ 49 மில்லியன்கள்

ஆகையால், சூயஸ்கால்வாயைத் திறந்ததிலிருந்து சிங்கப்பூரின் செல்வாக்கு அதிகரித்தது. மேலும், கடல் வாணிபச் செல்வழி மலாக்காக் கடற்கால் மூலம் இருக்கவேண்டும் என மாற்றப்பட்டது. ஆகையால், பினாங்கின் வாணிபமும், சிங்கப்பூரின் வாணிபமும் தழைத்தோங்கின. இதனால் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் பற்றுக்குறை நீங்கியதோடு அல்லாமல், தேவைக்கு மேற்பட்ட கையிருப்பும் சேர்ந்தது. ஆனால், குடியேற்ற அலுவலகம் (Colonial office) தலையிடாக் கொள்கையைக் கி.பி. 1873ஆம் ஆண்டு செப்டம்பர் வரை மாற்றவில்லை.

6. பல் இனச் சமுதாயத்தின் தோற்றம்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைப்பகுதிவரை மலேய் மக்கள் மட்டும் மலேயத் தீவகற்பத்தில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பலர் கடற்கரை ஓரங்களிலும், ஆற்றங்கரைகளிலும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். மலாக்காச் சுல்தானியக் காலத்தில் சிலர் சுமத்திராவிலிருந்து வந்து குடியேறினர். மேலும், செலிபிஸிலிருந்து புகிஸ் மக்களும், சுமத்திராவிலிருந்து மினங்கபாவு மக்களும் மலேயாவிற்கு வந்து குடியேறினார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் மலேயத் தீபகற்பத்தின் மக்கள்தொகை அதிகம் இல்லை. மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களைத் தவிர வேறு பெரிய பட்டணங்களும், மாநகரங்களும் உருவாகவில்லை. பொதுவாக மக்கள் தொகை கிராமங்களில் உள்ள

ஆற்றோரங்களிலோ, கடற்கரையோரங்களிலோ வாழ்ந்து வந்தார்கள். பல நூற்றாண்டுகளாக இச் சமுதாயம் மாறாமல் இருந்து வந்தது; வெளி உலகத்துடன் மிகுந்த தொடர்பு கொள்ளவில்லை. ஆனால், பினாங், சிங்கப்பூர் முதலியவற்றில் வாணிகத்தலங்கள் அமைத்தவுடனும், வெள்ளீய வாணிபத்தின் தன்மை அதிகரித்தவுடனும் மாறுதல் உருவாகியது. அயல் நாடுகளுடன் மலேயா நெருங்கிய தொடர்புகொள்ளத் தொடங்கியது; இதன் விளைவால் மலேயாவில் பல் இனச் சமுதாயம் தோன்றத் தொடங்கியது. மலேயாத் தீபகற்பகற்பகத்திற்கு அயல் நாடுகளிலிருந்து அதிகவளவில் மக்கள் வந்து குடியேறத் தொடங்கினர். இவர்களே மலேயாவின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தார்கள். மலேயாவிற்கு வந்து குடியேறிய இப்புதிய மக்கள் சுமத்திராவிலிருந்தோ, செலிபிஸிலிருந்தோ வந்த மலேயர்கள் அல்ல. மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் வழியாகச் சீனாவிலிருந்து சீனர்கள் வந்தார்கள். இச் சீன இனத்தினரே மலேயாச் சமுதாய அமைப்பை மாற்றினார்கள். பிற்காலத்தில் மலேய மக்கள் தொகையில் சீனர்கள் 40 விழுக்காடு இருந்தார்கள்; ஆகையால் சீனர்கள் வந்து குடியேறிய வரலாறு மலேயாவின் வரலாற்றிலேயே உருவாகிய ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

மலேயாவிற்கும் சீனாவிற்கும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு இருந்து வந்தது. மலாக்காச் சுல்தானியத்தின் காலத்தில் மலேய் சுல்தான்கள் சீனப் பேரரசர்களிடம் பல தூதுக் குழுக்களை அனுப்பினார்கள். சென்ஹோ, மற்றும் பல தூதர்களைச் சீனப் பேரரசர்களும் மலேயாவிற்கு அனுப்பினார்கள். ஆனால், இத்தொடர்புகளால் மலேயாத் தீபகற்பத்தில் நிலையான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. பொதுவாகச் சீனப் பேரரசர்கள் அயல்நாடுகளின்மேல் மிகுந்த கவனம் செலுத்தவில்லை. ஆகையால், மலேயாக் கலாசாரம் சீனர்களின் கலாச்சாரத்துடன் தொடர்புகொள்ளவில்லை. ஆனால், சீனாவிற்கும் மலேயாவிற்கும் வாணிகத் தொடர்பு இருந்துவந்தது. ஆகையால், சில சீன வணிகர்கள் மலேயாத் தீபகற்பத்தின் வாணிபத்தலங்களிலும், போர்னியோ வாணிபத் தலங்களிலும் குடியேறினார்கள். முக்கியமாக இவர்கள் மலாக்காவிலும், புருனையிலும் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் வாழ்ந்துவந்த பகுதிகளுக்குக் 'காம்போங்-காம்போங் சீனா' (Kampong-Kampong China) அல்லது 'சீனக் கிராமங்கள்' என்ற பெயர் இடப்பட்டது. கி.பி. 1511ஆம் ஆண்டில் போர்த்துக்கீசியர்கள் மலாக்காத் துறைமுகத்தைத் தாக்கியபோது, மலாக்காத் துறைமுகத்தில் ஒரு சீனக் கப்பலும் இருந்தது. பதினேழாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவில் மிங் அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தபோது மலாக்காவில்

உள்ள 'புகித் சீனுவில்' சீனர்களின் கல்லறை இருந்தது. கி.பி. 1641ஆம் ஆண்டில் மலாக்காவை டச்சுக்காரர்கள் கைப்பற்றிய போது, டச்சுக்காரர்கள் கணக்குப்படி, மலாக்காவில் 300 முதல் 400 சீனர்கள் வசித்து வந்தார்கள். கி.பி. 1678ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி சீனர்களின் எண்ணிக்கை 892 ஆக அதிகரித்தது. கி.பி. 1750ஆம் ஆண்டில் இது 2,161 ஆக மாறியது. பதினேழு, பதினெட்டாவது நூற்றுண்டுகளில் புருனேயில் சீனர்கள் வணிகர்களாகவும், மிளகு தோட்டங்களில் பணிபுரியும் விவசாயிகளாகவும் இருந்தார்கள். ஜோஹூர், பாகாங் ஆகிய ஆற்றோரங்களிலும் சில சீனர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட சீனக் குடும்பங்கள் குடியேறியிருப்பதாகக் கி.பி. 1700 ஆம் ஆண்டில் ஜோஹூர்லாமாவிற்கு வந்த அலெக்ஸாண்டர் ஹாமில்டன் என்பவர் கூறுகிறுர். கி.பி. 1838ஆம் ஆண்டில் பாகாங் ஆற்றோரமும், குவாலா தெரன்கானுவிலும் சீனர்கள் குடியேறியிருந்தார்கள் என முன்சி அப்துல்லா தம்முடைய 'அப்துல்லா பயணம்' (Abdullah Pelajaran) என்னும் நூலில் கூறுகிறுர். குவாலா பாகாங்கில் வாழ்ந்து வந்த சீனர்கள் கேயெக்ஸ் (Khehs) குலத்தைச் சேர்ந்தவர்கள்; இவர்கள் எல்லோரும் பாலித்தீவைச்சேர்ந்த மகளிரையோ, மலேய் பெண்மணிகளையோ மணந்திருந்தார்கள். ஆனுல், இவர்களுடைய குழந்தைகள் சீன மொழியில்தான் பேச விரும்பினுர்கள். தெரன்கானுவில் வாழ்ந்து வந்த சீனர்கள் ஒக்கியன்ஸ் (Hokkiens), கேயெக்ஸ் குலங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலோர் மலேய் மொழியே பேச விரும்பினர். இவ்வாறு தம் வரலாற்றிலே அப்துல்லா குறிப்பிடுகிறுர்.

ஆனுலும் சீனச் சமுதாயம் பெரிதாக வளரவில்லை; வாணிபம் செழித்தோங்கி வளர்ந்தவரை அவர்கள் நிலையாக வாழ்ந்து வந்தார்கள். முக்கியமாக மலாக்காவில் சீன ஆண்களுக்கும் மலேய் மகளிருக்கும் கலப்புத் திருமணம் நடந்திருந்ததால் சீனர்கள் இங்கு நிலையாக வாழ்ந்து வந்தார்கள். இச் சமுதாயப் பிரிவைச் சேர்ந்தவர்களைப் 'பாபாக்கள்' (Babas) என அழைத்தார்கள். இவர்கள் சீன மொழியுடன் கலப்பற்ற மலேய் மொழியைப் பேசினுர்கள். ஆனுல், இவர்கள் அணிந்த உடை, பின்பற்றிய சமயம், பண்பாடு முதலியவை சீனக் கலாசாரத்தைப் பின்பற்றியதாயிருந்தன. மலாக்காவை ஏற்படுத்தியதிலிருந்து சீன வணிகர்கள் தாம் அங்கு வசித்து வந்தார்கள். வாணிபம் செய்ய வசதியிருந்த இடங்களில் அவர்கள் வசித்து வந்தார்கள். உதாரணமாக, புருனேயில் வாணிபம் செய்ய வாய்ப்புக் குறைந்தவுடன் அங்கிருந்த சீனர்கள் வெளியேறத் தொடங்கினுர்கள். அராபியர்கள், இந்தியர்கள், ஜாவா மக்கள் ஆகியவர்களுக்கு இருந்த சிறப்பும் செல்

வாக்குமே சீனர்களுக்கும் இருந்தன. மற்ற அயல் நாட்டினரைவிட இவர்கள் செல்வாக்கு மங்கியே இருந்தது எனலாம்.

பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்தில் பினுங்கும், சிங்கப்பூரும் அமைக்கப்பட்டவுடன் சீனர்கள் இங்குவந்து குடியேறினுர்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டில் வந்து குடியேறிய சீனர்கள்தாம் மலேயச் சமுதாய அமைப்பில் முதன்மையான மாறுதல்களை உருவாக்கினுர்கள். இச் சீனர்கள் ஏன் சீனுவை விட்டு வெளியேறினுர்கள்? எக்காரணத்தை முன்னிட்டு மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களை நாடி வந்தார்கள்?

சீன அரசாங்கத்தின் போக்கு

சீனர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறுவதைச் சீன அரசர்கள் வரவேற்கவில்லை. அதனுல் சீனுவிற்கு யாதொரு நன்மையும் இல்லை என அவர்கள் கருதினுர்கள் மன்சு அரசர்கள் ஆட்சி புரிந்தபோது (கி.பி. 1644–1911) சீனர்கள் வெளிநாடு செல்லக்கூடாது எனக் கட்டளையிட்டார்கள். ஆனுல், மன்சு அரசர்கள் சீனுவைச் சேர்ந்தவர்கள் எனச் சீனர்கள் கருதவில்லை. தென் சீனு மக்கள் மன்சு அரசை வெறுத்தார்கள். இந்தப் பகுதியிலிருந்துதான் சீன மக்கள் அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறினுர்கள். பத்தொன்பது நூற்றுண்டின் இடைப் பகுதியில் தைப்பிங் புரட்சி ஏற்பட்டபோது தென் சீனுவில்தான் பெரிய கலகம் ஏற்பட்டது.

சீனர்கள் சீனுவைவிட்டு வெளியேறுவதை மன்சு அரசாங்கம் விரும்பாதபோதிலும், சீனர்கள் வெளிநாட்டுக்குச் சென்றுர்கள். ஆனுல், அவ்வாறு அயல்நாடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் தங்கள் குடும்பங்களைப் பொறுப்புத் தொகை வைப்பதுபோல் சீனுவில் விட்டுச் சென்றுர்கள். பொதுவாகச் சீன மக்களும் அயல்நாடு செல்ல விரும்பவில்லை. அவ்வாறு சென்றுல் ஒருவேளை வெளிநாடுகளில் இறக்க நேரிடுமோ என அஞ்சினர். அவ்வாறு தாங்கள் ஒருவேளை வெளிநாடுகளில் இறக்க நேர்ந்தால் இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகளைத் தங்களுக்கு யாரும் செய்ய மாட்டார்கள் என அஞ்சினுர்கள். ஏனென்றுல் சீனுவில் முன்னோர்களை வழிபடும் சடங்குகள் இருந்தன. ஆகையால் பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கம்வரை சீனர்கள் மிகுதியாக அயல்நாடு செல்லவில்லை.

பதினெட்டாவது நூற்றுண்டின் இறுதியில் சீனுவின் நிலைமை கவலைக்கிடமாயிருந்தது. சீனுவின் மக்கள்தொகை பெருகியது. ஆனுல், அங்கு வேலை கிடைப்பது கடினமாயிருந்தது; உணவுப்

பொருள்கள் கிடைப்பது அரிதாயிருந்தது. அயல் நாட்டாருடன் செய்யும் வாணிபத்தைச் சீன அரசு தீவிரமாகக் கண்காணித்து வந்தது. அயல் நாட்டு வாணிபத்தின் மூலம் ஒரு சில சீனருக்கே நன்மை உண்டாயிற்று. ஆகையால் தென் சீனுவிலிருந்தும், தென் கிழக்குச் சீனுவிலிருந்தும்—முக்கியமாகக் குவாங்குங், பூகியன், குவாங்சி—சீனமக்கள் பொருள் திரட்ட வேலேதேடி வெளிநாடுகளுக்குச் சென்றனர். தென் கிழக்கு ஆசியாவில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் இவர்கள் சென்றுர்கள். முக்கியமாகச் சியாம், ஜாவா, பிலிப்பைன்ஸ், போர்னியோவின் சில பகுதிகள், மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறினுர்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்தில் சீனர்கள் சிறியவளவில் வெளியேறத் தொடங்கி ஞர்கள்; பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடைக்காலத்தில் இது மிகவும் அதிகரித்தது. அச் சமயத்தில் சீனுவில் தைப்பிங் புரட்சி ஏற்பட்டது. கி.பி. 1861ஆம் ஆண்டில் அப் புரட்சி நிறை வடைந்தவுடன் கலகம் செய்த பலர் சீன அரசாங்கத்திற்கு அஞ்சி அயல் நாடுகளுக்கு வெளியேறினர்.

மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் கவர்ச்சி

பிஞங்கும் சிங்கப்பூரும் ஏன் சீனர்களே ஈர்த்தன? முதலாவதாக, இப் புதிய பட்டணங்களில் தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது; வாணிபம் விரைவாக வளரத் தொடங்கியது. இரண்டாவதாக, இவ்விடங்களில் அமைதிச் சூழ்நிலே நிலவியது; சட்டத்திற்குட்பட்டு மக்கள் நடந்தார்கள். ஆகையால் மக்களின் சொத்துடைமைகளுக்குப் பாதுகாப்பு இருந்தது. இறுதியாக சீனுவில் இருந்தது போல் இவ்விடங்களில் அரசாங்கக் கட்டுப் பாடு இல்லே. மேலும் இவ்விடங்களில் குடியேறியவர்களின் வாழ்க்கையில் யாரும் தலேயிடவில்லே. தம் தம் தலேவர்களின் ஆட்சியின் கீழ்த்தாம் சீனர்கள் இருந்தார்கள். ஆகையால் அவர்களுக்குப் பாதுகாப்பும், சுதந்திரமும் நிறைந்திருந்தன. இதே காரணங்களால்தாம் கி.பி. 1840ஆம் ஆண்டிலிருந்து சரவாக்கில் சீன மக்கள் தொகை பெருகத் தொடங்கியது. கி.பி. 1860ஆம் ஆண்டில் பிஞங்கிலும், சிங்கப்பூரிலும் நடந்த சீன இரகசிய மன்றங்களின் கலகத்திற்குப் பிறகுதான் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் சீன மக்களேப் பற்றி அக்கறை காட்டத் தொடங்கின.

மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களுக்கு வந்த சீனர்களில் பெரும்பாலோர் தொழிலாளிகள்; செல்வம் திரட்டிக் கொண்டு சீனுவிற்குப் போகலாம் என்ற எண்ணத்துடனே, தங்கள் குடும்

பங்களைப் பிறகு அழைத்து வரலாம் என்ற நோக்கத்துடனே தனியாக வந்தார்கள். பொதுவாக, கப்பல் முதலாளிகள் அவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்து வந்தார்கள். பயணம் செய்வதற்கு அவர்கள் பணம் செலுத்த வேண்டாம். ஆனால் கப்பல் முதலாளிகளிடமிருந்து தங்களை வாங்கியவரிடம் ஓராண்டுக்குப் பணி புரிய வேண்டும். கப்பல் முதலாளிகள் ஒரு தொழிலாளியை 17 அல்லது 20 டாலர்களுக்கு விற்றார்கள். சீனாவிலிருந்து கப்பலில் பயணம் செய்யும் செலவு 14 டாலர்கள்தான். பேரக்கில் ஒரு தொழிலாளிக்கு முதல் ஆண்டில் 42 டாலர்கள் ஊதியம் கிடைத்தது. ஆனால் அவ்வூதியத்திலிருந்து அவர்கள் சீனாவிலிருந்து கப்பலில் பயணம் செய்யச் செலவாகிய கட்டணம் கழிக்கப்பட்டது. ஆனால் இந்த ஓராண்டு முழுவதும் ஊதியத்தைத் தவிர அவர்களுக்கு உணவும், தங்க இடமும் இனமாக அளிக்கப்பட்டன. இவ்வாறு ஓராண்டுப் பணி புரிந்த பிறகு அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டது. சுதந்திரம் பெற்ற பிறகு தங்களுக்குப் பிடித்த தொழில்களில் அவர்கள் சேரலாம். பெரும்பான்மையான தொழிலாளர்கள் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களில் குடியேறினார்கள். ஆனால், படிப்படியாக அவர்கள் மலாக்காத் தலைநிலப் பகுதிக்குச் சென்று அங்குள்ள வெள்ளீயச் சுரங்கங்களில் வேலை செய்தார்கள்; சிறப்பாக மலாக்காவிற்கு அருகிலிருந்த காசாங், ராசா, பிறகு செலங்கர், பேரக் ஆகிய பகுதிகளுக்கு வேலை தேடிச் சென்றார்கள்.

வெள்ளீயச் சுரங்கங்களில் பணிபுரியும் சீனத் தொழிலாளர்கள்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்திற்குப் பிறகு சீனர்கள் மிகையளவில் மேற்கு ஆசியாவிற்கு வந்தார்கள். கி.பி. 1850ஆம் ஆண்டில் லாருட்டில் புதிய வெள்ளீயச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி. 1860ஆம் ஆண்டில் செலங்கரில் உள்ள குவாலாலம்பூரிலும் வெள்ளீயச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி. 1860ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் வெள்ளீயத்தின் தேவை பெருகியது. ஆகையால் வெள்ளீயம் தோண்டியெடுக்கப் பணியாளர்களின் தேவையும் அதிகரித்தது. குடியேறிய சீனர்கள் இத் தேவையை நிறைவு செய்தனர். மலேயத் தலைவர்களுக்கு இச் சுரங்கங்கள் உடைமையாக இருந்தன. சீனத் தொழிலாளர்களை மலேயத் தலைவர்கள் இச் சுரங்கங்களில் பணியில் அமர்த்தினார்கள். சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகியது; கி.பி. 1870ஆம் ஆண்டில் லாருட்டில் சீன மக்களின் தொகை மலேய் மக்களின் தொகையைவிட அதிகமாக இருந்தது. ஆனாலும் சீனர்கள்

அங்கு நிலையாகத் தங்குவார்கள் என்ற அறிகுறி ஏற்பட வில்லை. மலேயா பல் இனச் சமுதாயமாக உருவாகும் என்ற அறிகுறிகளும் தோன்றின. ரேனங் தீவிலும் சிங்கப்பூரிலும் கிட்டத்தட்ட சீன மக்களே மிகுதியாக வாழ்ந்தார்கள். ஜோஹூரிலும் சீனர்கள் குடியேறத் தொடங்கினர்கள். மலேயா விற்கு வந்த சீனர்கள் எல்லோரும் வெள்ளீயச் சுரங்கங்களில் பணிபுரியவில்லை. சீனர்களின் மக்கள் தொகை பெருகப் பெருக அவர்கள் பல்வேறு தொழில்களில் பணி புரியத் தொடங்கினர்கள். சாலையும், இருப்புப் பாதையும் போடச் சீனத் தொழிலாளர்களை ஒப்பந்தக்காரர்கள் அமர்த்தினர்கள். பெரும்பான்மையோர் முதன் மையாகச் சில்லறை வாணிகம் செய்தார்கள்; பலர் பொருள் தருபவர்களுக்கும், பெறுபவர்களுக்கும் இடையே இடையீட்டு வணிகர்களாய்ப் பணி புரிந்தனர்.

தங்களுடன் தங்களுடைய கலாச்சாரம், சமயம், மொழி ஆகியவற்றைச் சீனர்கள் கொண்டு வந்தார்கள். பழங்காலத்தில் மலேயாவிற்கு வந்து குடியேறிய சீனர்கள் மலேய் மக்களுடன் ஒருசேரக் கலந்து பாபாவாக்களாகவும், மலாக்காக் கடற்கால் சீனர்களாகவும் மாறியிருந்தார்கள். ஆனல் பத்தொன்பதாவது நூற்றுண்டில் மலேயாவிற்கு வந்து குடியேறிய சீனர்கள் மலேய் மக்களுடன் ஒன்றுபடவில்லை. அவர்கள் சுதந்திரமாகவும், மட்டற்ற தன்னம்பிக்கை உடையவர்களாகவும், வளம் நிரம்பிய வர்களாகவும், தம் நாட்டுக் கலாச்சாரத்தைக் கைவிடாதவர் களாகவும் தனித்து வாழ்ந்து வந்தார்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டில் சீனமக்கள் தொகை பெருகிக் கொண்டு வந்த போதிலும் அவர்களில் பெரும்பான்மையோர் சீனவிற்குத் திரும்பிச் சென்று விடுவோம் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தார்கள். கி.பி. 1850ஆம் ஆண்டிலும், கி.பி. 1860ஆம் ஆண்டிலும் வெள்ளீயத்தின் உற்பத்தி பெருகியபோது சீனர்கள் மிகையளவில் மலேயாத் தீபகற்பத்திற்கு வந்தார்கள். கி.பி. 1860ஆம் ஆண்டில் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களில் சீனர்களின் மக்கள் தொகை 97,000; ஆனல் மலேயாத் தீபகற்பத்தில் குடியேறிய சீனர்களின் எண்ணிக்கை 25,000 தான். வெள்ளீ யச் சுரங்கங்கள் உள்ள பகுதிகளில் சீனர்களின் தொகை அதிக ரிக்கத் தொடங்கியவுடன் அவர்களுக்குள் கலகங்கள் ஏற்பட்டன. சீன மக்கள் தொகை பெருகியதால்தான் ஆங்கிலேய அரசுக்கு மலேயா நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மலாக் காக் கடற்கால் குடியேற்றங்களின் அரசு சீனர்களுக்குள் ஏற்பட்ட கலகங்களைத் தடுக்க முயன்றது; இக் கலகங்களால் மலாக்காக்

கடற்கால் குடியேற்றங்களின் அமைதி குலைந்துவிடும் என அஞ்சியது.

7. மலேய் நாடுகளில் ஆங்கிலேயர்களின் தலையீடு

கி.பி. 1874ஆம் ஆண்டில் முதல் முறையாகப் பிரிட்டிஷ் ஆட்சிப் பொறுப்பாளர்கள் (Administrators) மூன்று மலேயா நாடுகளில் நியமனம் செய்யப்பட்டார்கள். கி.பி. 1874ஆம் ஆண்டிற்கு முன் மலேய் நாடு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கிழக்கிந்தியக் கம்பெனி தத்துவ அளவில் கையாண்டது. ஆனால் செயல் முறையில் கேதாவிலும், பேரக்கிலும், செலங்கரிலும், தெரன்கானுவிலும் ஆங்கிலேயர்கள் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றவில்லை என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். மேலும் பேரக், செலங்கர், மினங்க பாவு நாடுகளில் உள்ள சீனர்கள் பிரிட்டிஷ் குடிகள் ஆனார்கள். ஆகையால் லாருட்டிலோ, குவாலாலம்பூரிலோ, சுங்கை உசாங் கிலோ அவர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டால் பினாங்கிலோ, மலாக்காவிலோ, சிங்கப்பூரிலோ உள்ள ஆங்கிலேயர்களின் அரசாங்கத்தைத் தங்களுக்கு உதவி செய்யும்படியும், பாதுகாப்புக் கொடுக்கும்படியும் விண்ணப்பித்துக்கொண்டார்கள். இக் காரணங்களால் ஆங்கிலேயர்கள் மலேய் நாடுகளின் செய்திகளில் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது. சீன இரகசியச் சங்கங்களுக்குள் ஏற்பட்ட கலகங்களாலும், குழப்பங்களாலும், கடற் கொள்ளைக் காரர்களால் ஏற்பட்ட தொந்தரவினாலும் ஆங்கிலேயர்கள் மலேயா நாடுகளின் செய்திகளில் தலையிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

கி.பி. 1871ஆம் ஆண்டில் பேரக் சுல்தான் அலி இறந்தார். இளவரசாகப் (Raja Muda) பட்டம் ஏற்றிருந்த அப்துல்லா விற்குத்தான் அலிக்குப் பிறகு சுல்தானாகப் பதவியேற்க உரிமை யிருந்தது. அப்துல்லா கீழைப் பேரக்கில் (Lower Perak) வசித்து வந்தார். கீழைப் பேரக்கில் உள்ள மலேய் மக்கள் அவருக்கு உதவி செய்யத் தயாராயிருந்தனர். செங்காங்கில் வசித்து வந்த யூசுப் அப்துல்லாவின் மூத்த சகோதரர். ஆனால் யூசுபை மற்ற மலேய்த் தலைவர்களுக்குப் பிடிக்காததனால் அவருக்கு முந்திய காலத்திலேயே பதவிகள் கொடுக்கப்படவில்லை. கி.பி. 1869ஆம் ஆண்டில் அப்துல்லா இறந்ததால் தமக்குத்தான் சுல்தானாக உரிமையிருக்கிறது என யூசுப் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆகையால் சுல்தான் பதவிக்காகத் தற்பொழுது சண்டையிடவும்

தயார் என அறிவித்தார். ஆனால் மேற்குப் பகுதிப் பேரக்கில் (UPPer Perak) உள்ள மலேயத் தலைவர்களுக்கு அப்துல்லாவோ, யூசுபோ சுல்தானாகப் பதவியேற்பது பிடிக்கவில்லை.

தம் தந்தை உயிரோடு இருக்கும் காலத்திலே மலேயத் தலைவர்களுக்குச் சினமூட்டி அவமதித்தார் யூசுப். பினாங்கில் வசித்து வந்த பேகன் என்னும் வணிகருக்குப் பேரக்கில் உள்ள கிரியான் பகுதியில் சில நிலங்களைக் கி.பி. 1870ஆம் ஆண்டில் அப்துல்லா வழங்கினார். ஆனால் இதற்குச் சுல்தான் அலி அனுமதி அளிக்கவில்லை. அமைச்சர் இப்ராஹீம் கிரியான் பகுதியைத் தமக்குச் சுல்தான் அலி கொடுத்த வெகுமதியாகக் கருதினார். ஆகையால், அப்துல்லாவின் நடவடிக்கையால் அவரும் அவமதிப்புக்குள்ளானார். மேலும், சுல்தான் அலி இறப்பதற்கு முன் அப்துல்லாவின் மனைவி இராசாதிப்பா (Raja Tippah) ஒரு செலங்கர் இளவரசருடன் ஓடி மறைந்தார். சுல்தான் அலி இதற்குப் பழிவாங்க நினைக்கவில்லை. தம் மனைவியை திருமண விலக்குச் செய்ததாகச் அப்துல்லா அறிவித்தார்; இதனால் மலேய் மக்களுக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. மேலும், இராசாதிப்பா சுல்தான் அலியுடைய மகள். மலேய் நாடுகளில் நிலவிவந்த வதந்திப்படி தாம் இறக்கும் தறுவாயில் சுல்தான் அலி தம் மகளைப் பார்க்க விரும்பினார். ஆகையால் அவளை அழைத்து வருமாறு அப்துல்லாவிடம் கூறினார். இது ஒரு சதித் திட்டமோ என அஞ்சி அவளை அழைத்து வந்து காட்ட அப்துல்லா மறுத்தார். ஆனால் யாருக்குத் துணிவு இருக்கின்றதோ அவர் அவளை அவள் தந்தையிடம் அழைத்துச் செல்லலாம் என அப்துல்லா கூறினார். ஆகையால் செலங்கர் அரசர் தாவுத் (Daud) அவளை அழைத்துக் கொண்டு அவளுடைய தந்தையிடம் செல்வது போல நடித்து அவளுடன் செலங்கருக்கு ஓடிவிட்டார். இக்கதை உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கக்கூடும்; ஆனால் இதனால் அப்துல்லாவிற்குப் பல தீமைகள் விளைந்தன.

மேலும் இரண்டு சிறப்பு வாய்ந்த தலைவர்களுக்கும் பேரக் சுல்தான் பதவியைக் கேட்பதற்குச் சில உரிமைகள் இருந்தன. பென்தஹாரா இஸ்மாயிலின் சீடர் பலர் மேற்பகுதிப் பேரக்கில் இருந்தனர். திருமணத்தின் மூலந்தான் பென்தஹாராவிற்கு அரச குடும்பத்துடன் உறவு இருந்தது. சுல்தான் அலி பதவியேற்கும் முன் இருந்த சுல்தான்களுக்கும் இவர்தாம் பென்தஹாராவாயிருந்தார். ஆனாலும் இவருக்கு இளவரசு பதவி கிடைக்கவில்லை. காரணம் பதவியுயர்வின் ஏணியில் இவர் பெயர் முதலிடம் பெறவில்லை. மேற் பகுதிப் பேரக்கில் உள்ள மலேய்த் தலைவர்

கள் இவரைப் பற்றி நன்கு அறிவார்கள். இவர் ஒரு வயது முதிர்ந்தவர்; பழைமைப் பற்றுளர்; பழைய மரபுகளைக் கடைப் பிடிப்பவர். ஆகையால் இவரே சுல்தானாக வேண்டும் என மேற் பகுதிப் பேரக்கில் உள்ள மலேய்த் தலைவர்கள் விரும்பினார்கள்.

மற்ற மலேய்த் தலைவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அமைச்சர் இப்ராஹீம் பெரிய செல்வர். அவர் இஸ்மாயிலுக்குத் தம் ஆதரவை அளித்தார். மேற்குப் பகுதிப் பேரக்குடன் இப் ராஹீம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். திருமணத்தின் மூலம் கீழைப் பேரக்கின் தலைவரான இலக்குமணாவுடன் இவருக்கு உறவிருந்தது.

சுல்தான் அலி இறந்தவுடன் அவருடைய ஈமச் சடங்கிற்கும், அதன்பின் புதிய சுல்தானைத் தேர்ந்தெடுப்பதற்கும் அப்துல்லா மலேய்த் தலைவர்களால் அழைக்கப்பட்டார். மரபுபடி இந்த அழைப் பிதழ் பென்தஹாராவிடமிருந்து வரவேண்டும். மேலும் இந்த அழைப்பிதழுடன் அரச மரியாதைக்குரிய மஞ்சள் குடையுடன் வர வேண்டும். ஆனால் இம்மாதிரியான மரபுபடி அழைப்பிதழ் அப்துல் லாவிற்கு வரவில்லை. இவரை கஜாக் கிராமம் (Gajah Kampong) வரை தான் வரும்படி மலேய்த் தலைவர்கள் கூறினார்கள். மேலும் அப்துல்லாவும் தாம் அங்கே சென்றால் தமக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என அஞ்சினார். ஆகையால் அவர் இந்த அழைப் பிதழை ஏற்றுக்கொள்ளவில்லை; சயாங்கிற்கும் செல்லவில்லை.

சயாங்கிற்கு அப்துல்லா வரமறுத்ததால் பென்தஹாரா இஸ்மாயில் புதிய சுல்தானாக மலேய்த் தலைவர்களால் நியமிக்கப் பட்டார். சுல்தான் இஸ்மாயில், இறந்துபோன சுல்தான் அலி யின் மூத்தமகனைப் பென்தஹாராவாக நியமித்தார். அவரைச் சுல்தானாகத் தேர்ந்தெடுக்கும்போது அப்துல்லா, யூசுப், இலக் குமணா, ஷாபந்தர் ஆகியவர்கள் வரவில்லை.

குவாலாப் பேரக்கில் இலக்குமணாவின் புதல்வனைச் சுங்க அதிகாரி பதவியிலிருந்து நீக்கி மற்றொருவரைச் சுல்தான் இஸ் மாயில் நியமித்தார். ஆனால் அப்துல்லாவும், ஷாபந்தரும் அப் புதிய சுங்க அதிகாரியையும் பதவியிலிருந்து நீக்கி அங்கு நடக் கும் வாணிபத்தைத் தாங்களே நடத்தினார்கள். இதனால் சுல்தான் இஸ்மாயிலுக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. ஆனால் உடனடியாக ஒரு நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை. கி.பி. 1872ஆம் ஆண்டிலிருந்து தம்மையே சுல்தான் என அப்துல்லா அழைக்கத் தொடங்கினார். மேலும் கிரியான், லாரூட் அரசியல்

செய்திகளில் தலையிடத் தொடங்கினார். யூசுப்பையும் நண்பராக்கிக் கொண்டு அவரை இளவரசராக நியமித்தார். ஜீ ஹின் (Ghee Hin) சீன இரகசிய மன்றங்களுடன் தொடர்பு கொண்டு அப்துல்லா சதி செய்யத் தொடங்கினார். இந்த முயற்சியில் தாம் வெற்றி பெற்றால் லாரூட் சுரங்கங்களை ஜீ ஹின் சீனர்களுக்குக் குத்தகைக்கு விடுவதாக அப்துல்லா வாக்குறுதியளித்தார். மேலும் இச் சதி தொடர்பாகச் செலவாகும் செல்வத்தில் பாதியைத் தாம் கொடுப்பதாகவும் வாக்குறுதியளித்தார்.

இதற்கு இடையில் லாரூட்டில் சீன இரகசிய மன்றத்தைச் சேர்ந்த ஜீ ஹினுக்கும், அய்சனுக்கும் (Haisan) போர் மூண்டது. இச்சண்டையை அடக்குவதற்குத் தேவையான பாதுகாப்புப் படையோ, காவலர் படையோ அமைச்சர் இப்ராஹீமிடம் இல்லை; அவருக்கே ஆபத்து வரும்போல் இருந்தது. ஆகையால் அவர் பின்வாங்கிக் கிரியான் ஆற்றோரத்திற்குச் சென்றார். கி.பி. 1872 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லாரூட்டிற்கு அப்துல்லா வந்திருந்தார். மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் சட்டத்துறையின் தலைவர் சி. சே. இர்விங்கிடம் தம்மைச் சுல்தானாக ஒப்புக் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கையிட்டு ஒரு கடிதம் வரைந்தார். பினாங் மக்களில் பலரும் அப்துல்லாவைச் சுல்தானாக ஒப்புக் கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஆங்கிலேய அதிகாரிகள் விதித்தனர்.

இதற்கு இடையில் அப்துல்லாவிற்கும் அமைச்சர் இப்ராஹீமிற்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. லாரூட்டு அரசாங்கத்திற்கும், அதன் துணை மண்டலத்திற்கும் அமைச்சரே தலைவர் என ஒப்புக்கொண்டார். ஆனால், இச் சமாதான உடன்படிக்கை சில காலம்தான் நீடித்தது. கி.பி. 1873ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமைச்சருக்கும் அப்துல்லாவுக்கும் இடையே பூசல் உண்டாயிற்று. ஆகையால் அமைச்சர் பினாங்கிற்குச் சென்று வாழத் தொடங்கினார். கி.பி. 1873ஆம் ஆண்டு செப்டம்பரில் பினாங்கின் ஆளுநர் ஓர்டு (Ord) லாரூட்டின் அரசராக அமைச்சரை ஒப்புக்கொண்டார்.

செலங்கர், பேரக் ஆகியவற்றில் இருந்த வெள்ளீயச் சுரங்கங்களின் வளர்ச்சிக்காக ஐரோப்பியர்களும் சீனர்களும் அதிக மூலதனம் போட்டிருந்தார்கள். சீன இரகசிய மன்றங்களுக்கு இடையே போர் மூண்டதால் இச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் பயன் பாதிக்கப்பட்டது. ஆகையால் நிலையான ஆட்சி வர வேண்டும் என அங்குள்ள வணிகர்கள் விரும்பினார்கள். அவர்கள்

பிரிட்டிஷ் குடிமக்களாய் இருந்ததால் அமைதியும், நிலையான ஆட்சியும் அமைக்க வேண்டும் என மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் அரசை வேண்டிக்கொண்டார்கள். கி.பி. 1872-73 ஆம் ஆண்டுகளில் சீனர்களுக்குள் மூண்ட பூசல் கடுமையான நிலைமையை அடைந்தது. இக் காரணத்தால்தான் அமைச்சரை லாருட்டின் அரசராக ஆளுநர் ஓர்டு ஒப்புக்கொண்டார். வெள்ளீயச் சுரங்கங்களில் அமைதி நிலைநாட்டுவதற்காகக் காவல் படை ஒன்று இராணுவத் தலைவர் ஸ்பீடி (Speedy) தலைமையில் அமைக்கப்பட்டது. கி.பி. 1873ஆம் ஆண்டின் இறுதிக்குள் லாருட்டில் அமைதி நிலவியது. இச் சமயத்தில் ஆளுநர் ஓர்டுக்குப் பதிலாகச் திரு ஆண்ட்ரு கிளார்க் (Sir Andrew Clarke) என்பவர் பினங்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். தீபகற்பத்தின் நிலைமையைப் பற்றித் தெரிந்து கொண்டு அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்குரிய வழிமுறையைத் தனக்கு அறிவிக்கும்படி புதிய ஆளுநரிடம் பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியது.

மலேயாத் தீபகற்பத்தின் செய்திகளில் பிரிட்டன் தலையிடாவிட்டால் வேறு எந்த நாடாவது தலையிடும் எனப் பிரிட்டன் அஞ்சியது. காரணம், மலேயாத் தீபகற்பத்தில் வாழ்ந்த வணிகர்கள் வேறு ஏதாவது வல்லரசைத் (உதாரணமாக ஜெர்மனியை) தங்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்வார்கள் எனப் பிரிட்டன் அஞ்சியது. ஆகையால்தான் மலேயா நாடுகளில் தலையிடாக் கொள்கையிலிருந்து படிப்படியாகத் தலையிடும் கொள்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தொடங்கி வைத்தது.

கி.பி. 1873ஆம் ஆண்டின் இறுதியில் புதிய ஆளுநர் கிளார்க் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தார். மலேயா நாடுகளின் செய்திகளில் தலையிடுவதுதான் நல்லது என அவர் தீர்மானித்தார். தாம் பேரக் சுல்தானாகப் பதவியேற்பதற்காக ஒரு கடிதத்தின் மூலம் பிரிட்டிஷ் உதவியை அப்துல்லா நாடினார். பிரிட்டிஷ் உதவி மூலம்தான் தாம் சுல்தான் ஆக முடியும் என அப்துல்லா நினைத்தார்; மலேயா நாடுகளைப்பற்றி உள்ள பிரிட்டிஷ் கொள்கைகளை மாற்ற இது ஒரு நல்ல சமயம் எனக் கிளார்க் நினைத்தார்.

பேரக் அரியணைக்காகப் போட்டியிடுபவர்களையும், முதன்மை பெற்றிருந்த மலேய்த் தலைவர்களையும், சீனர்களின் தலைவர்களையும் பாங்கரில் (Pangkor) சந்திப்பதற்காகக் கிளார்க் அழைத்தார். ஆனால், இக் கூட்டத்திற்கு யூசுபைக் கிளார்க் அழைக்கவில்லை. இஸ்மாயிலைச் சுல்தானாக்க வேண்டும் எனத் தொடக்

கத்தில் கிளார்க் விரும்பினார். ஆனால் அப்துல்லா பாங்கருக்கு வந்தவுடன், அமைச்சரைத் தவிர, மற்ற எல்லோரும் அப்துல்லாவுக்கு ஆதரவு அளிப்பதைப் பார்த்து, தம் எண்ணத்தை ஆளுநர் கிளார்க் மாற்றிக்கொண்டார்.

ஜீஹின், அய்சான் ஆகிய சீன இரகசிய மன்றங்களைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளர்களுக்கு இடையே உள்ள பூசல்களைத் தீர்க்கக் கிளார்க் முயற்சியெடுத்தார். இரு தரப்பினரும் போர்க் கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும், பிரிட்டிஷாரும், சீனரும் கொண்ட ஒரு பொறுப்பாண்மைக்குழு சுரங்கத்தைப் பற்றிய சண்டையைத் தீர்க்க முயற்சி செய்யும் என்றும் கிளார்க் அறிவித்தார். கி.பி. 1874ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள் மலேயத் தலைவர்களுடன் ஆளுநர் கிளார்க் பாங்கர் வாக்குறுதி (Pangkor Engagement) உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வுடன்படிக்கை அப்துல்லாவைச் சுல்தானாக்க வேண்டும்; இஸ்மாயிலுக்கு ஓய்வு ஊதியமும், இளைய சுல்தான் (Sultan Mudan) என்ற பட்டமும் அளிக்கவேண்டும்; மற்ற எல்லாத் தலைவர்களும் அவர்களுடைய பதவிகளைத் தொடர்ந்து வகிக்கவேண்டும் என்பதாகும். லாரூட்டில் அமைச்சருக்கு இருந்த தனிப் பதவியைச் சுல்தான் ஒப்புக்கொண்டார். கி.பி. 1826ஆம் ஆண்டின் ஒப்பந்தப்படி பிரிட்டனுக்கு தின்திங் (Dinding) அருகேயுள்ள இடங்கள் கிடைத்தன; இதை இவ்வுடன்படிக்கையும் உறுதி செய்தது. மேலும், நாட்டுக்கு வரும் வருவாயை மலேயாத் தலைவர்கள் வாங்கக்கூடாது; சுல்தான்தான் வாங்க வேண்டும்; மலேயத் தலைவர்களுக்கு சுல்தான் உதவித்தொகை அளிக்கவேண்டும்; பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநர் ஒருவரைச் சுல்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்; ஆனால், இத்துணைக் காப்பரசின் ஆளுநருக்குச் சட்டத்தைச் செயல்படுத்தும் தகுதி கிடையாது; மலேய மதம், மரபு வழக்கம் ஆகியவற்றைத் தவிர மற்ற எல்லாச் செய்திகளிலும் இத்துணைக் காப்பரசின் ஆளுநரின் ஆலோசனையைக் கேட்டு, அதன்படிச் சுல்தான் நடக்கவேண்டும் என்றும், பாங்கர் வாக்குறுதி உடன்படிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இம்முறையில்தான் முதல் முறையாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் தானே நேரடியாக மலேய நாடுகளின் செய்திகளில் தலையிட்டு, அந்நாடுகளில் வாழ்ந்து ஆலோசனை அளிக்க ஒரு பிரிட்டிஷ் பணி முதல்வரையும் நியமித்தது. இதற்குப் பிறகு செலங்கர், சுங்கை உசாங் ஆகியவற்றின் செய்திகளிலும் கிளார்க் தலையிட்டார். கி.பி. 1873ஆம் ஆண்டு நவம்பரிலே செலங்கரில் ஒரு மலாக்கா வாணிகக் கப்பலைக் கடற்கொள்ளைக்காரர்கள் தாக்கினார்கள். இத்

தாக்குதலுக்குச் செலங்கரில் வசித்துவந்த ஒன்பது பேர்கள் காரணம் என நினைத்துக் கி.பி. 1874ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவர்களைத் தண்டிக்கச் செலங்கருக்குக் கிளார்க் இழுத்துச் சென்றார். இது சம்பந்தமாகச் சுல்தான் அப்துல் சமதிற்கும், அவருடைய பதில் ஆளுநர் தெங்கு கூடினுக்கும், ஆளுநர் கிளார்க்குக்கும் இடையே பேச்சு நடந்தது. இவ்வொப்பந்தப் பேச்சுப்படி அவர்களுக்குள் நட்புரிமை வளரத் தொடங்கியது; கடற்கொள்ளைக்காரர்கள் தண்டிக்கப்பட்டார்கள்; பிரிட்டிஷ் அரசாங்க ஸ்விட்டன் ஹாமைச் செலங்கர் சுல்தான் ஏற்றுக்கொண்டார். அவர் கோலாலங்கட்டில் வாழ்ந்து வந்தார். அந்த ஆண்டின் இறுதியில் ஒரு துணைக் காப்பரசின் ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

சிறிய நாடான சுங்கை உசாங் செலங்கருக்குத் தெற்கே இருக்கிறது. அங்கு வசித்து வந்த தலைவர்களில் ஒருவரான தாடோ கிளானு (Dato Klana) மலாக்காவில் வசித்து வந்தவர். அவ்வாறு மலாக்காவில் வசித்து வந்தபோது அவருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் நட்புத் தொடர்பு இருந்தது. இராசாவிலுள்ள வெள்ளீயச் சுரங்கத்திற்கு லிங்கி ஆறு வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆகையால் லிங்கி ஆற்றைச் சொந்தமாக்கிக் கொண்ட வருக்கு அதிக வருவாய் கிடைத்தது. கி.பி. 1874ஆம் ஆண்டு ஏப்ரல் ஒப்பந்தப்படி தாடோ கிளானுவிற்கும், சுங்கை உசாங்கின் மற்றொரு முக்கியத் தலைவரான தாடோ பந்தருக்கும் இடையே மூண்ட சண்டையில் ஆளுநர் கிளார்க் தாடோ கிளானுவை ஆதரித்தார். ஆனால், இவ்வொப்பந்தப்படி துணைக்காப்பரசின் ஆளுநர் ஒருவரைச் சுங்கை உசாங்கில் நியமிக்கவில்லை. தேவை யானபோது தாடோ கிளானுவிற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவி அளிக்கும் எனக் கிளார்க் உறுதியளித்தார்.

கி.பி. 1874ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஏப்ரல் மாதத்திற் குள் பேரக், செலங்கர், சுங்கை உசாங் ஆகியவற்றின் சுல்தான் களுடன் கிளார்க் உடன்படிக்கைகள் செய்துகொண்டார். பேரக் கிற்கு சே. டபுள்யு. பிர்ச்சையும் (Birch), லாருட்டிற்கு ஸ்பீடியை யும் (Speedy), லங்கட்டிற்கு ஸ்வெட்டன் ஹாமையும், செலங்க ருக்கு டேவிட்சனையும் துணைக்காப்பரசின் ஆளுநர்களாகக் கிளார்க் நியமித்தார். தாத்தாம் (Tatham) சுங்கை உசாங்கின் உதவித் துணைக்காப்பரசின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆகையால், பிரிட்டிஷ் அரசாங்கம் மூன்று மலேய் நாடுகளுக்கு நேர்டியாகப் பாதுகாப்பு அளித்தது.

8. பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநர் ஆட்சி கி.பி. 1874—1895

முதன் முதலில் ஆங்கிலேயத் துணைக் காப்பரசின் ஆளுநர்கள் மலேய் நாடுகளில் ஆட்சி புரிந்தபோது நிலையான சட்டங்களும், கட்டளைகளும் இல்லாததால் அவர்களால் முறையாக ஆட்சிபுரிய முடியவில்லை மலேய் நாட்டு அதிகாரிகள் விரும்பிக் கேட்கும்போது தான் அவர்களால் ஆலோசனைகளையும். தெளிவுரைகளையும் கொடுக்க முடிந்தது. பாங்கர் வாக்குறுதிப்படி மலேய் நாட்டு மக்களின் சமயம், பழக்கவழக்கங்களைப் பற்றி மட்டும்தான் ஆங்கிலேயத் துணைக் காப்பரசின் ஆளுநரிடம் மலேய் நாட்டு அதிகாரிகள் கட்டாயமாக ஆலோசனை கேட்டாக வேண்டும். மலேய மத விவகாரங்களையும், மலேய அரசியல் விவகாரங்களையும் தனித்தனியாகப் பிரிக்க முடியும். ஆனால், மலேயப் பழக்க வழக்கங்களை எல்லா மலேய் விவகாரங்களிலும் காணலாம். உதாரணமாக, பழக்க வழக்க முறையில் அரசாங்க வருமானம் சுல்தானுக்கும், மலேய் நாட்டுத் தலைவர்களுக்கும் சேரவேண்டும்; சில அரசாங்கப்பதவிகளைச் சில குடும்பத்தைச் சேர்ந்தவர் களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற பழக்க வழக்கம் இருந்தது.

துணைக்காப்பரசின் ஆளுநருடைய ஆலோசனைகளைக் கேட்டுச் சுல்தான்கள் நடக்கத் தயாராக இருந்தாலும், அரசாங்க விவகாரத் தில் புதுவித மாறுதல்களை ஏற்படுத்துவது எளிதாக இல்லை. மலேய் நாடுகளில் மைய ஆட்சிமுறை (Centralization) இல்லை; படைத் துறையைச் சாராத அரச அலுவலர்கள் (Civil Service) ஆட்சி முறையும் இல்லை. ஆகையால், துணைக்காப்பரசின் ஆளுநர்களால் ஒருவித மாற்றமும் ஏற்படுத்த முடியவில்லை. சில சமயங்களில் அவர்களுடைய ஆலோசனைகளை நடைமுறையில் அவர்களே கொண்டுவரவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் நடக்க நேரிட்டால் அரசாங்கச் சட்ட நிறைவேற்ற ஆட்சித்துறை ஆளுநர்களாக அவர்கள் மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், பாங்கர் வாக்குறுதிப்படி அரசாங்க ஆலோசர்களாக மட்டும்தான் அவர்கள் இருக்க வேண்டும்.

அரசாங்க விவகாரத்தில் மாற்றம் ஏற்படுத்த முயற்சி செய்த துணைக்காப்பரசின் ஆளுநர்களை அந்நிய நாட்டினர் என்றும், அவர்களுக்கு மலேயப் பழக்கவழக்கங்களைப் பற்றி ஒன்றும் தெரிய வில்லை என்றும் மலேய் மக்கள் கருதினார்கள். மேலும் செல்வம் திரட்டும் நோக்கத்துடன்தான் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் இம் மாற்றங்களை உருவாக்க நினைக்கிறார்கள் எனவும் மலேய்

மக்கள் கருதினர்கள். கி.பி. 1875ஆம் ஆண்டில் பொது மக்களுக் குரியதாகாத பண்ணைகளாகவும், செல்வங்களாகவும் மலேய் நாடுகள் விளங்கின. மலேய் நாட்டுச் செய்திகளில் மற்றவர்கள் தலையிடுவதை மலேயர்கள் விரும்பவில்லை; அதற்குத் தீவிர எதிர்ப்பு இருந்தது. தற்காலத்தைப் போலப் புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த பொது முறையான அரசு பற்றிக் கி.பி. 1874ஆம் ஆண்டில் மலேய் மக்களுக்குத் தெரியாது.

மலேய் மக்களுக்கும், சீனர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் இருந்ததாலும், கடற்கொள்ளைக்காரர்களின் தொல்லை இருந்த தாலும்தான் மலேய் நாட்டுச் செய்திகளில் ஆங்கிலேயர்கள் தலை யிட நேர்ந்தது. ஆங்கிலேயத் துணைக் காப்பரசர்கள் பதவியேற்ற மூன்று மலேயா நாடுகளிலும் அமைதி குலைந்திருந்தது; சட்டமும் ஒழுங்கும் அழிந்திருந்தன. ஏதாவது கலகம் ஏற்பட்டால் அக் கலகத்தை அடக்கவேண்டிய அளவு போர் வீரர்கள் துணைக்காப் பரசின் ஆளுநர்களிடம் இல்லை.

9. பேரக்

ஆளுநர் கிளார்க் (Clarke) பேரக் துணைக்காப்பரசின் ஆளுந ராகப் பிர்ச் (Birch) என்பவரை நியமித்தார். பிர்ச் பொறுமை யற்றவர்; பேரக் தலைவர்களுடன் தனி முறையில் நட்பு வைத்துக் கொள்ள இவரால் முடியவில்லை. சுல்தானுக்கு எல்லோர் முன்னிலை யிலும் அறிவுரையளித்தார்; மலேய வழிவழி மரபு பண்புகளில் தலையிட்டார். பேரக்கில் பொதுவாகவிருந்த கடன் அடிமைத்தன முறையில் (debt slavery) தலையிடத் தொடங்கினர்.

பாங்கர் வாக்குறுதி ஏற்பட்ட பத்து மாதங்களுக்குப் பிறகுதான் துணைக்காப்பரசின் ஆளுநராய்ப் பிர்ச் பதவியேற்றார். இதற்கிடை யில் சுல்தான் அப்துல்லா, ஆண்டுக்கொருமுறை தமக்கு 26,000 டாலர்கள் அளிக்கவேண்டும் என நிபந்தனை விதித்து பேரக் சுங்க வரி திரட்டும் உரிமையை ஒரு சிங்கப்பூர் சீனருக்குக் குத்தகைக்கு விட்டார். இதன்மூலம் கிடைத்த பெரும்பான்மையான வருமானத் தைத் தம் விருப்பம் போல் சுல்தான் செலவழித்தார்; உதாரண மாக ஒரு படைச் சீருடையை 4,000 டாலர்களைக் கொடுத்து ஐரோப்பாவிலிருந்து வாங்கினர். பதவியேற்றவுடன் இவ்வகை யான வீண் செலவுகளைப் பிர்ச் குறைக்க முயன்றார். வரி வாங்கும் உரிமையின் மூலம் பேரக் தலைவர்களுக்குச் சமூக உயர்படி நிலை கிடைத்தது. ஆகையால் இச் செய்திகளில் ஆங்கிலேயர்கள் தலையிடுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

கி.பி. 1875ஆம் ஆண்டு மே மாதம் சர் வில்லியம் செர்வாய்சு (Sir William Jervois) ஆளுநராகப் பதவியேற்றார்; இவர் ஆட்சியின்போது ஆங்கிலேயர்களுக்கும் பேரக்கிற்கும் ஆபத்தான நிலை உருவாகியது. துணைக்காப்பரசின் ஆளுநர் ஆலோசனை மட்டும் அளிக்கும் அரசியல் அமைப்பு மனநிறைவு அளிக்கும் வகையில் செயல்படவில்லை என இவர் கருதினார். ஆகையால், இவ்வமைப்பை மாற்றியமைத்துப் பேரக்கின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக்கொண்டு சுல்தான் சார்பில் நேரடியாக ஆட்சி புரியவேண்டும் என இவர் விரும்பினார். இவ்வெண்ணத்தைச் சுல்தான் வரவேற்கவில்லை; ஆனால், தீவிர வற்புறுத்தலினால் இறுதியாக இத்திட்டத்தைச் சுல்தான் ஏற்றுக்கொண்டார். மேலும், சுல்தானைக் கட்டாயப்படுத்தி இவ்வுரிமைபற்றிய வெளியீட்டில் கையெழுத்து இடும்படிப் பெர்ச் கூறினார். சுல்தான் அப்துல்லா இதை எதிர்த்தார்; கையொப்பமிடாவிட்டால் சுல்தான் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என பிர்ச் அச்சுறுத்தியதால் சுல்தான் இறுதியாகக் கையொப்பமிட்டார். ஆகையால், பிர்ச்சைப் பேரக்கிலிருந்து நீக்கும் நடவடிக்கையில் சுல்தான் ஈடுபடத் தொடங்கினார். இதற்குப் பேரக் தலைவர்களும் ஆதரவளித்தார்கள். இவர்கள் உருவாக்கிய திட்டத்தின் விளைவால் கி.பி. 1875ஆம் ஆண்டில் நவம்பர் 26ஆம் நாள் பெர்ச் படுகொலை செய்யப்பட்டார். இதனால், பேரக் முழுவதும் குழப்பச் சூழ்நிலை யேற்படுமோ எனச் செர்வாய்சு அஞ்சி இந்தியாவிலிருந்தும், ஆங்காங்கிலிருந்தும் படைகளை வரவழைத்தார்.

உண்மையில் பேரக் முழுவதிலும் கலகச் சூழ்நிலை நிலவவில்லை; பிர்ச்சை மட்டும் ஒழிக்கப் பேரக் தலைவர்கள் திட்டம் இட்டிருந்தார்கள். தெற்கு வழியாகவும், வடக்கு வழியாகவும் செர்வாய்சுப் படை வீரர்கள் பேரக்கிற்குள் நுழைந்தார்கள். ஆனால், இப்படை வீரர்களைத் தீவிரமாக யாரும் எதிர்க்கவில்லை. பிர்ச் கொலையின் காரணமாகப் பலர் கைது செய்யப்பட்டார்கள். சுல்தான் அப்துல்லாவும், இஸ்மாயிலும் (Ismail) நாடு கடத்தப்பட்டார்கள். பதிலாக யூசுப் (Yusuf) தொடக்கத்தில் பகர ஆளுநராகவும், பின்பு சுல்தானாகவும் நியமிக்கப்பட்டார்.

அக் லோவ் (Hugh Low) பேரக் துணைக்காப்பரசின் புதிய ஆளுநராக (Resident) நியமிக்கப்பட்டார். இவர் பேரக்கைத் திறமையுடன் ஆட்சி புரிந்தார். பேரக் தலைவர்களுடன் நேச மனப்பான்மையுடன் பழகி அவர்களுடைய ஆதரவைப் பெற்றார். வெள்ளீயச் சுரங்கங்களின் மூலம் வரும் வருமானத்தைத் தம் நேர்முக ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். இவ்வருமானத்தைப்

பேரக்கின் வளர்ச்சிக்காகச் செலவழித்தார். இதனால் பேரக் தலைவர்கள் சுங்கவரி வாங்கும் உரிமையை யிழந்து அரசு ஊதியம் பெறத் தொடங்கினார்கள்; ஆறு ஆண்டுகளுக்குள் பேரக்கின் 8,00,000 டாலர்கள் கடனைத் தீர்த்தார். கடன் அடிமை நிலையை (debt slavery) ஒழிக்க லோவ் முயற்சியெடுக்கவில்லை; கி.பி. 1874 ஆம் ஆண்டில் பேரக்கில் 3,000 கடன் அடிமைகள் (debt slaves) இருந்தார்கள்; பத்தாண்டுக்குள் இப்பழக்கம் தானாகவே ஒழிந்தது.

பேரக், செலங்கர், சுங்கை உசாங் ஆகிய பகுதிகளின் வெள்ளீயச் சுரங்கங்களின் மேல்தான் ஆங்கிலேயர்கள் அதிகக் கவனம் செலுத்தினார்கள். இவற்றின் மூலம்தான் இம் மூன்று நாடுகளிலும் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்தது. ஆகையால், வெள்ளீயச் சுரங்கங்களை வளர்ப்பதில் ஆங்கிலேயர்கள் முனைந்தார்கள். மலேசியாவின் முதலாவது புகைவண்டிப் போக்குவரத்துகள் தைப்பிங்கிலிருந்து (Taiping) வெல்டு துறைமுகம் (Port Weld) வரையும் (கி.பி. 1885), குவாலாலம்பூரிலிருந்து கிளாங் (Klang) வரையும் (கி.பி. 1886) வெள்ளீயச் சுரங்கங்களை ஏற்றுமதி செய்யும் இடங்களுடன் இணைக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டன; நெடுஞ்சாலைகளும் போடப்பட்டன.

ஒவ்வொரு நாட்டிலும் நாட்டாளர் மன்றங்கள் (State Councils) நிர்வாகத்திற்காக அமைக்கப்பட்டன. சுல்தானும், முதன்மையான தலைவர்களும், ஒன்று அல்லது இரண்டு சீன இனத் தலைவர்களும், துணைக் காப்பரசின் ஆளுநரும் இம் மன்றத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள். மக்கள் கருத்துகளை அறியும் நோக்கத்துடன்தான் இம் மன்றங்கள் நிறுவப்பட்டன. மலேய்த் தலைவர்கள் மூலம் மலேய் மக்களின் நம்பிக்கையை ஆங்கிலேயர்கள் பெற்றார்கள். அரசாங்கத் திட்டத்தைப் பற்றிச் செய்திகள் அனுப்பித் தலைவர்களின் ஆதரவைப் பெற்றார்கள்.

கி.பி. 1877ஆம் ஆண்டில் முதன்முதலாக நாட்டாளர் மன்றம் செலங்கரில் அமைக்கப்பட்டது. பிறகு, பேரக்கிலும், உசாங்கிலும் நிறுவப்பட்டது. கி.பி. 1883ஆம் ஆண்டில் செலிபூவிற்கும் (Jelebeu), கி.பி. 1887ஆம் ஆண்டில் ரெம்பாவுக்கும் (Rembau), கி.பி. 1887ஆம் ஆண்டில் மெனான்திக்கும் (Confederation of Sri Menanti), ஆங்கிலேயக் காப்பாட்சியும், ஆலோசனையும் அளிக்கப்பட்டன. கி.பி. 1889ஆம் ஆண்டில் நெக்ரிசெம்பிலனில் ஒரு பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

10. பாகாங்

மலேயத் தீபகற்பத்தில் சியாமியர்களின் செல்வாக்கிற்கு உட்படாமல் இருந்த நாடு பாகாங் (Pahang); ஆங்கிலேயர்களுடன் கூடப் பாகாங் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. சிங்கப்பூருக்கு அருகேயிருக்கும் ஜோஹூரில் ஆங்கிலேயத் துணைக்காப்பரசின் ஆளுநர் இல்லை; ஆனால் சிங்கப்பூரிலிருந்த அதிகாரிகளுடன் ஜோஹூர் தொடர்பு கொண்டிருந்தது; மேலும், இதற்கு உதவியும் அதிகார முத்திரையில்லாமல் (Un-offcial) கிடைத்தது. கி.பி. 1885ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கும் ஜோஹூருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படிப் பேரரசர் ஜோஹூர் சுல்தானாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்; அயல்நாட்டின் தாக்குதல் ஏற்பட்டால் பிரிட்டிஷ் பாதுகாப்பு ஜோஹூருக்கு அளிக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது.

பாகாங்மேல் ஆங்கிலேயர்கள் ஏன் தாமதமாகக் கவனம் செலுத்தினார்கள் ?

(1) மலாக்காக் கடற்கால் குடியேற்றங்கள் பயன்படுத்திய வாணிபச் செல்வழிகள் ஒன்றுகூடப் பாகாங் வழியாகச் செல்லவில்லை. ஆகையால் இக் குடியேற்றங்களிலிருந்த வணிகர்கள் பாகாங்கின் மேல் அக்கறை காட்டவில்லை.

(2) பாகாங் ஏற்றுமதி வாணிபம் செய்யவில்லை.

(3) அதிக அளவில் சீனர்கள் பாகாங்கிற்கு வந்து குடியேறவில்லை.

கி.பி. 1880ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து சுல்தான் வான் அகமது மேலை நதித் தலைவர்களுடன் (Up-river Chiefs) சுமுகமான தொடர்புகொள்ளவில்லை; அவர்களின்மேல் ஆட்சி செலுத்த முடியாததால் சுல்தானின் வருமான நிலை, பற்றுக்குறை நிலையை அடைந்தது. ஆகையால், அயல் நாட்டார்களுக்குச் சுல்தான் நிலங்களை விற்கத் தொடங்கினார்; இந் நிலங்களை வாங்கியவர்களில் பெரும்பான்மையோர் பிரிட்டிஷ் குடிகள். ஆங்கிலேயர்களின் நில உரிமைகள் பிரிட்டிஷ் அரசாங்க மேற்பார்வையிலிருக்க வேண்டுமென்றும், இதே வகையான சலுகைகள் ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் சுல்தான் அளிக்கக்கூடாது என்றும் பிரிட்டன் விரும்பியது. இந்நோக்கத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் சுல்தானை வற்புறுத்தி இசையச் செய்து

பிரிட்டிஷ் அயலிட நாட்டுப் பேராளர்-முதல்வர் (Consul-General) ஒருவரைப் பாகாங்கில் பிரிட்டன் நியமித்தது. கி.பி. 1888ஆம் ஆண்டில் ஒரு சீனப் பிரிட்டிஷ் குடிமகன் பேகானில் (Pekan) கொலை செய்யப்பட்டதால், சுல்தானை மீண்டும் வற்புறுத்திப் பாகாங்கில் ஒரு பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநரைப் பிரிட்டன் நியமித்தது. மேற்குக் கரைப்பகுதிகளிலுள்ள துணைக்காப்பரசின் ஆளுநரின் அதிகாரங்களே இவருக்கும் அளிக்கப்பட்டன. இம் மாற்றத்தை உடனடியாக மேலைநதித் தலைவர்கள் எதிர்த்தார்கள். இதன்மூலம் சுல்தான் வன்மையுறுவார். தங்கள் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படும் என அஞ்சினார்கள். ஆகையால், ஆட்சியை மையப்படுத்த முயற்சியெடுத்தபோது கி.பி. 1891ஆம் ஆண்டில் செமன்தானின் (Semantan) தலைவர் கலகம் செய்யத் தொடங்கினார். இக் கலகம் நான்கு ஆண்டுகள் நீடித்துக் கி.பி. 1895ஆம் ஆண்டில்தான் அடக்கப்பட்டது.

ஆகையால், கி.பி. 1880-1890 ஆம் ஆண்டுகளின் இடையிலே சியாம் செல்வாக்கிற்குட்படாத எல்லா மலேய் நாடுகளிலும் ஆங்கிலேயர் செல்வாக்கு ஓங்கியது. பேரக், செலங்கர், பாகாங், நெக்ரி, செம்பிலன் ஆகிய நாடுகளில் ஆங்கிலேயத் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்; ஜோகூர் பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. ஆனால், இங்குப் பிரிட்டிஷ் துணைக்காப்பரசின் ஆளுநர் நியமிக்கப்படவில்லை.

துணைக்காப்பரசின் ஆளுநர் ஆலோசனை மட்டும்தான் அளிக்க வேண்டும். ஆனால், இந் நாடுகளில் நிலவிய சூழ்நிலைகளில் ஆலோசனை அளித்தால் மட்டும் போதாது என ஆங்கிலேய அதிகாரிகள் நினைத்தார்கள். செயல்பட்டுவரும் ஆட்சி அமைப்பு மூலம் தங்கள் புதுக் கருத்துகளையும், ஆலோசனையையும் நிறைவேற்ற முடியாது என ஆங்கிலேய அதிகாரிகள் புரிந்துகொண்டார்கள். ஆகையால், தங்கள் விருப்பப்படி இவர்கள் செயலாற்ற முனைந்தார்கள்; இக்காரணத்தால் நடைமுறையில் இவர்கள் ஆலோசகர்களாக மட்டும் இல்லாமல் சட்டம் செயல்படுத்தும் அதிகாரிகளாகவும் மாறினார்கள். தொடக்கத்தில் தோல்வியடைந்தபோதும் இறுதியில் மூன்று நோக்கங்களை நிறைவேற்றி வெற்றியடைந்தார்கள்: (1) சட்டப்படி ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டினார்கள்; (2) வருமானம் வாங்குவதை மையப்படுத்தினார்கள்; (3) இந்நாடுகளின் வளவாய்ப்புத் தொகுதிகளை வளர்த்தார்கள்.

11. ஆங்கிலேய வடபோர்னியோக் கம்பெனி

மலேயாவில் தலையிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் வட போர்னியோவிலும் தன் செல்வாக்கைப் பிரிட்டன் பெருக்கிக் கொண்டிருந்தது. சரவாக்கில் மட்டுமில்லை, புருனைச் சுல்தானின் வட எல்லைப் பகுதிகள்கூட (தற்காலத்தில் சபா—Sabah) பிரிட்டனின் செல்வாக்கிற் குட்பட்டிருந்தன.

பத்தொன்பதாவது நூற்றண்டில் புருனை வலிமையற்ற நாடாக இயங்கியது; அதனுடைய ஊழிய மானியத்துக்குரிய அமைப்பு (Federal Structure) அழியும் நிலையிலிருந்தது. சுல்தான் அப்துல் மூமின் [Abdul mumin, கி.பி. 1852—83] சக்தியற்றவராயிருந்தார். உண்மையான அதிகாரங்கள் யாவும் அவருடைய பாங்கிரான்களிடம் (Pangiran) இருந்தன. பாங்கிரான் என்ருல் மிகச் சிறப்பு வாய்ந்த தலைவர்கள் எனப் பொருள்.

கி.பி. 1865ஆம் ஆண்டில் மோசஸ் (Moses) என்னும் அமெரிக்கக் குடிமகனிடம் தற்காலத்திய சபாவை நில மானியமாகச் சுல்தான் வழங்கினர்; பதிலுக்கு ஆண்டுக்கொருமுறை ஒரு குறிப்பிட்ட தொகையைச் சுல்தானுக்கு மோசஸ் அளிக்க வேண்டும். ஆங்காங்கிலிருந்த அமெரிக்க வாணிபக் கம்பெனியிடம் தம் உரிமைகளை மோசஸ் விற்றுவிட்டார். அக் கம்பெனியின் ஓர் உடைமைக்காரராக இருந்த டோரி (Torrey) என்ற அமெரிக்கக் குடிமகனைப் புருனைச் சுல்தான் அம்போங் அரசராக்கினர் (Raja of Ambong). ஆனல் அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளைப் போர்னியாவில் அமைக்க எடுத்த முயற்சிகள் கி.பி. 1866ஆம் ஆண்டுக்குள் தோல்வியடைந்தன. ஆகையால் டோரி தம் உரிமைகளை ஆங்காங்கில் அயலிடநாட்டுப் பேராளர் முதல்வராக (Consul-General) பணி புரிந்து வந்த ஓவர்பெக் (Over beck) என்னும் ஆஸ்திரியரிடம் (Austrian) விற்று விட்டார். இவர் ஆங்கிலேய டென்ட் சகோதரர்கள் கம்பெனியுடன் (Dent Brothers Company) பங்காண்மைக் கூட்டு வாணிகம் (Partnership) தொடங்கினர். கி.பி. 1877ஆம் ஆண்டில் இப் புதிய கம்பெனியுடன் புருனைச் சுல்தான் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி சபாவின் அரசுரிமை, நிருவாக உரிமை ஆகியவை கம்பெனிக்கு அளிக்கப்பட்டன. பதிலாக ஆண்டுக்கொருமுறை சுல்தானுக்கு 10,000 டாலர்களும், தெமங்காங்கிற்கு (Temenggong) 3,000 டாலர்களும் கம்பெனி அளிக்க வேண்டும். ஆனல் சுலு சுல்தானும் (Sultan of Sulu) இப் பகுதிகளின் உரிமைக் கோரிக்கையை வெளியிட்டதால் சபா பற்றி அவருடன் ஓவர்பெக் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு,

அவருக்கு ஆண்டுக்கொருமுறை 5,000 டாலர்கள் அளிப்பதாக வாக்குறுதியளித்தார். பதிலாக, சபாவின் முழு அரசுரிமை ஓவர்பெக்கிற்கு அளிக்கப்பட்டது.

கி.பி. 1881ஆம் ஆண்டில் டென்ட் சகோதரர்கள் ஓவர்பெக்கிடமிருந்து இக் கம்பெனி முழுவதையும் வாங்கினர். இதற்கிடையில் பிலிப்பைன்ஸிலிருந்த ஸ்பானியர்கள் சுலுவைக் கைப்பற்றினர்கள். இங்கிருந்த கம்பெனியின் பிரதிநிதியைத் துரத்தினர்கள். ஆகையால் டென்ட் சகோதரர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியை நாடினர்கள். கி.பி. 1870ஆம் ஆண்டில் மலேயாவில் பிரிட்டன் தலையிடும் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியதாலும், போர்னியோவில் பிரெஞ்சு அல்லது ஜெர்மன் குடியேற்றங்கள் வரக் கூடாது என விரும்பியதாலும் டென்ட் சகோதரர்களை ஆதரிக்கப் பிரிட்டன் முன் வந்தது. கி.பி. 1881ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் (Royal Charter) ஆங்கிலேய வட போர்னியோக் கம்பெனி (British North Borneo Company) அமைக்கப்பட்டது என அறிவித்தது. சபாவைக் கம்பெனி நிருவகிக்க உரிமை அளிக்கப்பட்டது. பதிலாகச் சபாவிற்கு வரும் ஆங்கிலேயக் கப்பல்களுக்கு வசதியளிப்பதாகக் கம்பெனி வாக்குறுதியளித்தது. வாணிபத்தின் உரிமைகள் அளிக்கப்படமாட்டா; உள்நாட்டு வழிமரபு பண்புகள் ஆகியவற்றில் கம்பெனி தலையிடாது. ஆங்கிலேய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் தன் உரிமையைக் கம்பெனி வேறொருவருக்கும் அளிக்கக்கூடாது; பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆளுநர்தான் நியமிக்கப்பட வேண்டும்.

போர்னிய நாடுகளில் நிலவிய அமைப்பைக் கலைக்காமலும் திருத்தாமலும் வைக்கும் நோக்கத்துடன் கி.பி. 1881ஆம் ஆண்டில் புருணை, சரவாக் வட போர்னியோ ஆகிய பகுதிகளைப் பிரிட்டிஷ் காப்பாட்சியின் (Protectorates) கீழ் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்தது. அதே சமயத்தில் லாபுவன் (Labuan) வட போர்னியோக் கம்பெனியின் நிருவாகப் பொறுப்பில் விடப்பட்டது. மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றப் பகுதிகளின் ஆளுநர் போர்னியோ நாடுகளின் உயர்தனிப் பேராளராக நியமிக்கப்பட்டார்.

போர்னியோ நாடுகள் பற்றி ஸ்பைன் ஹாலந்து ஆகியவற்றுடன் கூடப் பிரிட்டன் ஒப்பந்தம் செய்துகொண்டது. கி.பி. 1885ஆம் ஆண்டில் சுலுவிலிருந்த ஸ்பானியர்களின் உரிமையைப் பிரிட்டன் ஒப்புக்கொண்டது. சுலு சுல்தானுக்கு ஒரு காலத்தில் போர்னியோ நாடுகளின் மேலிருந்த அரசுரிமைகளை ஸ்பெயின்

விட்டுக் கொடுத்தது. சபா, டச்சு, போர்னியோ ஆகியவற்றின் எல்லைப் பகுதிகள் கி.பி. 1891ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்டன.

12. ஆட்சியை வலுப்படுத்தும் திட்டங்களும் முயற்சிகளும்

துணைக் காப்பரசின் ஆளுநர்கள் தங்கள் வசமிருந்த பகுதிகளை வளர்ப்பதற்காக ஒரே வகையான முறைகளைக் கையாளவில்லை; சூழ்நிலைக்கேற்றவாறு முறைகள் மாற்றிச் செயல் படுத்தப்பட்டன. உள்ளூர் வழிமரபு பண்புகளும், உணர்ச்சிகளும் புறக்கணிக்கப்பட வில்லை. ஒவ்வொரு துணைக் காப்பரசின் ஆளுநரும் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் ஆளுநருக்கு நேரடியாகப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். சட்டப்படி எல்லா நாடுகளின் அதிகாரங்களும், கொள்கைகளும் ஆளுநர் பொறுப்பில் வைக்கப் பட்டிருந்தன. ஆனால், குடியேற்றங்களின் நிருவாகத்தில் ஆளுநர் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் மற்றப்பகுதிகளின் நிருவாகத்தை மேற்பார்வையிட முயற்சியெடுக்கவில்லை.

பொதுவாகத் துணைக் காப்பரசின் ஆளுநர்கள் ஆட்சி மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய முடிந்தது. ஆனால், இவ்வாட்சியமைப்பில் பல பிழைகளும் இருந்தன. (1) துணைக்காப்பரசின் ஆளுநர்கள் கட்டுப்பாடில்லாமல் சுதந்திரத்துடன் நிருவகித்தார்கள். தம் விருப்பப்படி ஒவ்வொரு துணைக்காப்பரசின் ஆளுநர்களும் ஆட்சி புரிந்ததால் நான்கு மலேய் நாடுகளும் வெவ்வேறு திசைகளில் மிதந்தன; (2) குடியேற்றங்களின் அதிகாரிகளுடைய மேலாதிக்கக் கண்காணிப்பில்லை. (3) ஒரு சேரக் கலந்து ஒற்றுமையுடன் பொதுத் திட்டங்களை அமைக்கவில்லை; உதாரணமாக இந் நாடுகளை இணைக்கும் நெடுஞ் சாலைகள், புகைவண்டிப் போக்குவரத்து முதலியவற்றை அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்படவில்லை. (4) துணைக்காப்பரசின் சுயேச்சை அதிகாரம் ஓங்கியதால் இந் நாட்டரசர்களின், செல்வாக்கும் நகர மன்றங்களின் செல்வாக்கும் மங்கின.

மலேயாக் கூட்டரசு நாடுகள்

இதன் தீய விளைவுகள் கி.பி. 1890ஆம் ஆண்டில் தோன்றியதால் இந் நாடுகளிடையே ஒருமையுணர்ச்சியை உருவாக்கப் பிரிட்டனும், மலேயாவும் விரும்பின. ஆகையால் கி.பி. 1895ஆம் ஆண்டில் பேரக் துணைக் காப்பரசின் ஆளுநரான ஸ்வீட்டன் ஹாமைப் (Swettenham) பேரக், செலங்கர், நெகரி, செம்பிலன்,

பாகாங் ஆகியவற்றில் கூட்டரசை அமைக்க முயற்சியெடுக்குமாறு ஆங்கிலேய அரசாங்கம் கட்டளையிட்டது. பேராக் சுல்தான் இத்ரீஸ் (Sultan Idris) இத் திட்டத்தின் மேல் ஆர்வம் காட்டியதால் அவருதவியுடன் மற்றச் சுல்தான்களையும் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தார்கள். துணைக் காப்பரசு ஆளுநரின் அதிகாரத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தும் என ஸ்வீட்டன்ஹாம் வாக்குறுதியளித்ததால்தான் சுல்தான்கள் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சுல்தான்கள் நினைத்ததற்கு மாறாகத் துணைக் காப்பரசின் ஆளுநரைப் புதிதாக உருவாகிய கூட்டரசு அரசாங்கம்தான் (சுல்தான்கள் அல்லர்) மேற்பார்வையிட்டுக் கண்காணித்தது. கி.பி. 1895ஆம் ஆண்டில் இக் கூட்டரசு ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.பி. 1896ஆம் ஆண்டில் மலேயக் கூட்டரசு அரசாங்கம் அமைக்கப்பட்டது. கி.பி. 1963ஆம் ஆண்டில் தோன்றிய மலேயக் கூட்டரசின் முதற்படியாக இது அமைந்தது.

இக் கூட்டரசு அமைக்கப்பட்டவுடன் கி.பி. 1897ஆம் ஆண்டில் குவாலா காங்சரில் (Kula Kangsar) சுல்தான்கள் மாநாடு (Rulers' conference) கூட்டப்பட்டது. முதல் முறையாக இந் நான்கு நாடுகளின் அரசர்கள் கூடிப்பேச இம்மாநாடு வாய்ப்பளித்தது. இவ்வமைப்பின் மூலம் ஏற்பட்ட மாறுதல்கள் பின்வருமாறு:—

(1) துணைக் காப்பரசின் ஆளுநர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவும், அவர்கள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆலோசனைகளை அளிக்கவும் (சுல்தான்களின் அனுமதியுடன்) ஒரு துணைக் காப்பரசின் ஆளுநர்களின் முதல்வர் (Resident General) நியமிக்கப்பட்டார்.

(2) ஒருவரை ஒருவர் பாதிக்கும் விவகாரங்கள் பற்றி இந் நாடுகள் ஒரே வகையான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

(3) முக்கிய நிருவாகத்துறைகளெல்லாம் ஒரு கூட்டரசுத் தலைவரின் (Fedral head) கீழ்க் கொண்டுவரப்படும்; இவர் இத் துறைகளின் செயல்களை மேற்பார்வையிடுவார்.

(4) மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் ஆளுநர் மலேயாக் கூட்டரசு நாடுகளின் உயர்தனிப் பேராளராக நியமிக்கப்பட்டார். இவர் மூலம் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

(5) செல்வம் கொழிக்கும் கூட்டரசு ஏழ்மையில் வாடும் மற்றக் கூட்டரசு நாட்டிற்கு இயன்றவளவில் அதிக உதவியளிக்க வேண்டும். இம் முறைமூலம், வெள்ளீய ஏற்றுமதிமூலம் வருமானம்

வாங்கிய பேரக்கும், செலங்கரும், பாகாங், நெகரி, செம்பிலன் ஆகியவற்றிற்கும் உதவியளிக்கும். ஆகையால் முதல் முறையாகச் செல்வமுள்ள நாடுகளைச் செல்வமில்லாத நாட்டிற்கு உதவி புரிந்து வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டன.

குறைபாடுகள்

(1) இப்புதிய அரசை உண்மையில் ஒரு கூட்டரசு எனக் கூறமுடியாது. மாநில, மத்திய அரசாங்கங்களின் அதிகாரங்கள் பிரிக்கப்படவில்லை; அரசுரிமை வரையறுக்கப்பட்டு மத்திய, மாநில நிருவாகப் பொறுப்புகள் கூருக்கப்படவில்லை.

(2) அரசாங்க வருமானத்தின் முக்கியப் பகுதிகளான ஏற்றுமதிச் சுங்க வரிகள் மத்திய கூட்டரசின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. வருமானத்தைக் கட்டுப் படுத்திய தால் நிருவாகத்தையும், மத்திய அரசால் செயலாட்சி புரிய முடிந்தது.

(3) கூட்டரசு அமைக்கவேண்டும் என்ற நோக்கம் இருந்த போதிலும், உண்மையில் அம்மாதிரியான வாய்ப்பு அளிக்கப் படவில்லை.

(4) துணைக் காப்பரசின் ஆளுநர்களின் முதல்வர்தாம் திட்டங்களைத் தொடங்கினர். ஒன்றுக்கினர்; துணைக்காப்பரசின் ஆளுநர்களிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் சுல்தான் களுக்கு அளிக்கப்படாமல் சுல்தான்களிடமிருந்து விலகி மிகத் தொலைவிலிருந்த கோலாலம்பூரிலுள்ள தலைமை ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(5) இந்நாடுகள் பற்றிய முக்கியத் தீர்மானங்களெல்லாம் கோலாலம்பூரில் எடுக்கப்பட்டன. மாநில அரசுகளுக்குத் திட்டங்கள் வகுக்கும் வாய்ப்புக்கிடைக்கவில்லை.

(6) மலேய் நாடுகளில், இப்புதிய அமைப்பு உருவாக்கப் பட்டதால் ஆங்கிலேய அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. உண்மையான நிருவாகப் பொறுப்புகள் ஆங்கிலேயர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டன. மலேய் அதிகாரிகளுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை.

(7) மலேயப் பழக்கவழக்கங்களும், வழிவழி மரபுபண்புகளும் ஆங்கிலேயர்கள் தலையிடாததால் தொடர்ந்து நீடித்தன சடங்கு முறைமைக்காகத்தான் சுல்தான்கள் பயன்படுத்தப்பட்டனர்.

படிப்படியாகத் தங்கள் அரசியல் அதிகாரங்களைச் சுல்தான்கள் இழந்தார்கள்.

ஆகையால் மலேயக் கூட்டரசு, மைய ஆட்சி அமைப்புத் திசையில் செல்லத் தொடங்கியது. கோலாலம்பூரிலிருந்து இந் நான்கு மாநில அரசுகளும் ஆட்சிபுரியப்பட்டன.

கி.பி. 1909ஆம் ஆண்டில் ஒரு கூட்டரசு மன்றம் அமைக்கப் பட்டது. நான்கு சுல்தான்களும், நான்கு துணைக் காப்பரசின் ஆளுநர்களும், நான்கு அரசியல் துறையைச் சாராத அலுவலர் களும் துணைக்காப்பரசு ஆளுநர்களின் முதல்வரும் இதன் உறுப்பினர்களாக இயங்கினார்கள். இம்மன்றத்தில் சுல்தான்கள் தங்கள் மாநில அரசின் ஆட்சியாளர்கள் அல்லர்; தங்கள் நாட்டைத் தங்கள் சார்பாக ஆட்சிபுரிபவர்களுக்கு ஆலோசனை யளிக்கவேண்டும். ஆகையால், சுல்தான்களுக்கு ஆலோசனை யளிக்கும் அதிகாரம் மட்டும் அளிக்கப்பட்டது. தங்கள் மாநில அரசைத் தவிர மற்ற மாநிலங்கள் பற்றிய சட்டத்தைச் செயற் படுத்தும் அதிகாரங்கள் இல்லை.

கூட்டரசு அல்லாத மலேய் நாடுகள்

கி.பி. 1909ஆம் ஆண்டில் சியாமியர்—ஆங்கிலேயர் உடன் படிக்கையின்படி கேலன்தான், கேதா, பெர்லிஸ், தெரன்கானு ஆகிய பகுதிகளைப் பிரிட்டனுக்குச் சியாம் அளித்தது. இச்சமயத்தில்தான் சியாம் மலேயாவின் இன்றைய எல்லை வரையறுக்கப்பட்டது. (இதைப்பற்றி விவரமாகச் சியாம் வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது.) மற்ற மலேய்த் தீபகற்ப நாடுகளிலுள்ளதைப் போல் சியாமிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளிலும் பிரிட்டிஷ் காப்பாட்சி அமைக்கப்பட்டது. இந் நாடுகளில் சியாமிய ஆலோசகர்கள் நீக்கப்பட்டு ஆங்கிலேய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டார்கள். மலேய்க் கூட்டரசிலுள்ள துணைக்காப்பரசு ஆளுநர்களுக்குள்ள அதிகாரங்களே கி.பி. 1895–க்கு முன்பு இவ்வாலோசகர்களுக்கும் அளிக்கப்பட்டன. சியாமின் ஆட்சியின்கீழிருந்த மற்ற மலேய்த் தீபகற்பப் பகுதி களில் (மொன்தோன்-Monthon) தெற்கே இராஜாபுரி (Rajaburi) நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கவோ, தளம் அமைக்கவோ மற்ற நாடுகளுக்கு அனுமதியளிக்கப்படாது எனச் சியாம் பிரிட்டனுக்கு வாக்குறுதியளித்தது.

மலேயநாடுகளில் கடைசியாகக் கி.பி. 1914ஆம் ஆண்டில் ஆளுநர் அல்லது ஆலோசகர் ஏற்றுக்கொண்ட நாடு ஜோஹூர்.

சரவாக்கும் புருனேயும்

கி.பி. 1868ஆம் ஆண்டில் ஜேம்ஸ் புருக் இறந்தவுடன், கி.பி. 1863ஆம் ஆண்டிலிருந்தே சரவாக்கை நிருவகித்துவந்த சார்லஸ் புருக் (Charles Brooke) சரவாக்கின் மன்னராக முடி சூட்டப்பட்டார். சார்லஸ் திறமையுடன் நிருவாகம் செய்ததால் சரவாக்கின் கடன்களையெல்லாம் அடைத்தார். ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டினார். ஜேம்ஸ் பல முறை சரவாக்கை பிரிட்டிஷ் காப்பாட்சியுடன் கொண்டுவரவேண்டும் என நினைத்தார். ஆனால், சரவாக்கை ஒரு சுதந்திர நாடாகவே நிலைத்து வைக்கச் சார்லஸ் விரும்பினார்.

புருனையின் பகுதிகளைப் பறித்துச் சரவாக்கின் எல்லையைப் பரப்பவேண்டும் என்பது சார்லஸின் நோக்கம். ஆனால், கி.பி. 1882ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய அரசாங்கம் இதற்குத் தடையாக இருந்தது. ஆனால், கி.பி. 1880—1910ஆம் ஆண்டுகளுக்கு இடையிலே சரவாக்கும், வடபோர்னியோவும், புருனையின் சில பகுதிகளைப் பறிக்க முடிந்தன. கி.பி. 1884ஆம் ஆண்டில் துருஷன் பள்ளத்தாக்கையும் (Trushan Valley), கி.பி. 1890ஆம் ஆண்டில் லிம்பாங் பள்ளத்தாக்கையும் (Limbang Valley) சரவாக்கைப்பற்றியது. கி.பி. 1894ஆம் ஆண்டில் வடபோர்னியோக் கம்பெனி ஆட்சியின் கீழிருந்த பகுதிகளையெல்லாம் (சபா உட்பட) சரவாக்கிற்குக் கம்பெனி அளிக்க முன்வந்தது. ஆனால், இது பற்றிய தரகுபேச்சுத் தோல்வியடைந்தது. புருனையின்மேல் சார்லஸ் ஆட்சி செலுத்த விரும்பியபோதிலும், பிரிட்டனின் பாதுகாப்பு புருனைக்கு அளிக்கப்பட்டதால் சார்லஸ்ஸால் யாதொரு நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. கி.பி. 1906ஆம் ஆண்டில் இறுதியாகப் புருனைச் சுல்தானுக்கு உதவியளிப்பதற்காகப் பிரிட்டன் ஒரு பகர ஆளுநரை (Resident) நியமித்தது. புருனைச் சுல்தானுக்கு மற்ற மலேய் நாடுகளிலுள்ள சுல்தான்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்களும், சலுகைகளும்தாம் அளிக்கப்பட்டிருந்தன.

கி.பி. 1905ஆம் ஆண்டில் லாவாஸ் பள்ளத்தாக்கைக் (Lavas Valley) கம்பெனி சரவாக்கிற்களித்தது. கி.பி. 1906ஆம் ஆண்டில் லாபுவன் (Labuan) மற்றக் குடியேற்றங்களுடன் இணைக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1946ஆம் ஆண்டில் லாபுவன் மீண்டும் வடபோர்னியோவிற்கு அளிக்கப்பட்டது.

கூலியாள்கள் தேவையாகவிருந்ததால் கி.பி. 1880ஆம் ஆண்டிலிருந்து சரவாக்கிற்குச் சீனர்கள் வந்து குடியேறும்

திட்டத்திற்கு ஆதரவளிக்கப்பட்டது. தொடக்கத்தில் சரவாக்கிற்கு வந்து குடியேறிய சீனர்களெல்லோரும் கிறித்தவ சமயத்தை பின்பற்றுபவர்கள். சீனர்கள் சரவாக்கிற்கு இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில்தான் வந்து குடியேறியபோதிலும் இன்று மிகுந்த அளவில் உள்ள மக்கள் சீனர்களே; சீனர்களுக்குப் பிறகு அதிக மாயிருக்கும் இனத்தார்கள் கடல் டயாக் இனத்தார்கள் (Sea Dyck Community).

முடிவுரை

கி.பி. 1914ஆம் ஆண்டில் உலகப் போர் மூண்ட சமயம் மலேய்த் தீபகற்பம் மூன்று பிரிவுகளாக இருந்தன.

மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள்

(1) இவை ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான பகுதிகள். ஆகையால் ஆங்கிலேயர்கள் நேரடியாக ஆட்சிபுரிந்தார்கள். சிங்கப்பூர், பினங், மலாக்கா முதலிய பகுதிகளில் பிறந்தவர்களெல்லாம் பிரிட்டிஷ் குடிகள். இவை ஓர் ஆளுநரின் ஆட்சியின் கீழ்வந்தன. இவருக்கு மூன்று ஆணையர்கள் (Resident Commissioners) உதவிபுரிந்தார்கள்.

(2) **மலேயாக் கூட்ட ரசு நாடுகள் :** இந்நாடுகளில் பிரிட்டிஷ் காப்பாட்சி அமைக்கப்பட்டது. இந்நாடுகள் ஆங்கிலேயர்களின் குடியேற்றப்பகுதிகளல்ல. ஆகையால் இந்நாடுகளில் பிறந்தவர்களுக்குப் பிரிட்டிஷ் குடிஉரிமைகள் அளிக்கப்படவில்லை.

(3) கூட்டரசிலில்லாத மலேய் நாடுகள் சிங்கப்பூரிலிருந்த பிரிட்டிஷ் உயர்தனிப் பேராள் மூலம் பிரிட்டனுடன் தொடர்பு கொண்டன. ஒவ்வொரு கூட்டரசில்லாத மலேய் நாட்டிலும் ஆங்கிலேய ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆகையால், ஜோகூர், கேதா, பெர்லிஸ், கேலன்தான், தெரன்கானு ஆகியவை பிரிட்டனின் குடியேற்றப்பகுதிகள் அல்ல; வெறும் பிரிட்டிஷ் காப்பரசுதான் அமைக்கப்பட்டிருந்தது; இந்நாடுகளிடையே தொடர்பில்லை; ஒரு மத்திய அரசாங்க அமைப்பில்லை.

கி.பி. 1946ஆம் ஆண்டில் மலேயக் கூட்டரசு அமைக்கப்படும்வரை இம்மூன்று பிரிவுகளுடைய மலேய்த் தீபகற்பத்தின் அமைப்பு நீடித்தது.

13. மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி

இன்றுகூட மலேசியா வெள்ளீயத்தையும், இரப்பரையுமே நம்பி வாழ்கிறது. இப்பொருள்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தால் தென்கிழக்கு ஆசியாவிலேயுள்ள செல்வமிக்க நாடாக மலேசியா திகழ்கிறது. பலநூற்றுண்டுகளுக்குமேல் இரப்பர், வெள்ளீயம் ஆகியவற்றின் மூலம் மலேயாத் தீபகற்பம் செழித்தோங்கியது; மரம், மிளகு, கொப்பரை, இரப்பர் ஆகியவற்றின்மூலம் கிடைக்கும் வருமானத்தைப் போர்னியோ நாடுகளான சபாவும், சரவாக்கும் நம்பி வாழ்ந்து வந்தன. பெட்ரோலியத்தின்மூலம் சரவாக்கிற்கு வருமானம் கிடைத்தபோதிலும், புருனே தான் இதன்மூலம் வளம் கொழித்தது. பத்தொன்பதாவது நூற்றுண்டின் இறுதியிலே உருவாகிய அரசியல் மாற்றங்களால் வெள்ளீய உற்பத்தியையும், இரப்பர்த் தோட்டங்களைப் பயிரிடும் வாய்ப்பையும் அதிகரிக்க முடிந்தது. இவ்விரு பொருள்களை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் மேற்கு மலேசியாவில் நெடுஞ்சாலைகளும், புகைவண்டிப் போக்குவரத்தும் அமைக்கப்பட்டன. இவ்விரு பொருள்களின்மேல் கவனம் செலுத்தியதால் வேளாண்மைக்கு முதன்மை அளிக்கப்படவில்லை. எப்பொழுதும் சியாமிலிருந்தோ, பர்மாவிலிருந்தோ அரிசியை இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற மனப்பான்மை நிலவியது. ஆகையால்தான் சுதந்திர மலேசியாவில் வேளாண்மையை வளர்ப்பதற்காக மிகுந்த அளவில் துன்பப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. கி.பி. 1846ஆம் ஆண்டிலிருந்து கொப்பரை, அன்னுசிப்பழம், தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டது; சமீப காலத்தில் நெல் பயிரிடுவதற்கும் மீன் பிடிக்கும் தொழிலுக்கும் ஊக்கமளிக்கப்பட்டது. ஆனாலும் வெள்ளீயம், இரப்பர், மரம் இம்மூன்றையும் நம்பித்தான் மலேசியா வாழ்கிறது.

வெள்ளீயம்

பல நூற்றுண்டுகளாக வெள்ளீயத்தை மலேயாத் தீபகற்பம் ஏற்றுமதி செய்கிறது. தீபகற்பத்தில் இதைச் செலாவணியாகவும் பயன் படுத்திவந்தார்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலே கடற்கரையைச் சாராத கிந்தாப் பள்ளத்தாக்கிலும், மலாக்காவில் உள்ளூர்ப் பகுதிகளிலும் இவ் வெள்ளீயம் அதிக அளவில் கிடைத்தது. பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலே ஆண்டிற்கு 500 டன்கள் வெள்ளீயம் பேரக்கில் கிடைத்தன. பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடையிலே வெள்ளீயத்தின் ஏற்றுமதித் தேவை அதிகரித்ததால் லாருட்,

கோலாலம்பூர், ரசா (Rasah) ஆகிய பகுதிகளில் புதிய வெள்ளீயச் சுரங்கங்கள் திறக்கப்பட்டன. கி.பி. 1870ஆம் ஆண்டில் மலேசியா விரைவாக வளர்ச்சியடைந்ததற்கு வெள்ளீயத்தின் மூலம் கிடைத்த வருமானமே காரணம் ஆகும். கி.பி. 1890ஆம் ஆண்டு வரை வெள்ளீயச் சுரங்கங்கள் முழுவதும் சீனர்கள் வசமே இருந்தன.

கி.பி. 1880ஆம் ஆண்டின் இறுதியிலேதான் ஐரோப்பிய முதலாளிகள் வெள்ளீயச் சுரங்கங்களின்மேல் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள்; இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் மிகுந்த அளவில் ஆங்கிலேயர்கள் மூலதனம் இடத் தொடங்கினார்கள். கி.பி. 1890ஆம் ஆண்டுவரை பேரக்கிலுள்ள லாரூட் வெள்ளீயச் சுரங்கங்களுக்குத்தான் முதன்மை அளிக்கப்பட்டது. ஆனால் கி.பி. 1890ஆம் ஆண்டிலிருந்து பேரக்கிலுள்ள கிந்தாப் பள்ளத்தாக்கு முதலிடம் பெற்றது. ஆகையால், தொடக்கத்தில் கிந்தாப் பள்ளத்தாக்கிலிருந்து ஏழு சுரங்கங்களை ஐரோப்பியர்கள் வாங்கினார்கள். முதன் முதலாகக் கி.பி. 1883ஆம் ஆண்டில் ஒரு பிரெஞ்சுக் கம்பெனிதான் வெள்ளீயச் சுரங்கத்தை வாங்கியது.

கி.பி. 1913ஆம் ஆண்டில் வெள்ளீயத்திற்காகச் சேறுவாரும் புதுமையான இயந்திரங்களைப் (dredger) பயன்படுத்தத் தொடங்கியதால் வெள்ளீய உற்பத்தி அதிகரித்தது. விரைவில் மலேசியா உலக வெள்ளீய உற்பத்தியால் முதலிடத்தைப் பெற்றது. கி.பி. 1904ஆம் ஆண்டில் 51,773 டன்கள் வெள்ளீயத்தை உற்பத்தி செய்தது. இது இவ்வாண்டின் உலக உற்பத்தியில் பாதியாகும். ஆனால், கி.பி. 1929ஆம் ஆண்டில் மொத்த உலக உற்பத்தியில் 36 விழுக்காடே மலேசியா உற்பத்தி செய்தது.

பெரும்பான்மையான மலேசியாவின் வெள்ளீய ஏற்றுமதி அமெரிக்கக் குடியரசுக்குத்தான் செய்யப்பட்டது. பிரிட்டன் பொலிவியாவிலிருந்து (Bolivia) பெரும்பான்மையான வெள்ளீயத்தை இறக்குமதி செய்தது. ஏற்றுமதிப் பொருள்களின்மேல் விதிக்கப்பட்ட வரிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை நெடுஞ்சாலைகள், புகை வண்டிப் போக்குவரத்து முதலியவை அமைக்கவும், பிற்காலத்தில் மருத்துவச்சாலைகள், பள்ளிகள் முதலியவை கட்டவும் அரசாங்கம் பயன்படுத்தியது.

புதுப் பாங்கான கருத்துகளுடன் வெள்ளீய வருமானத்தின் மூலம் மலேயாவைப் புதுப்பிக்க முடிந்தது. மேலும், சுரங்கப் பொருள்களை உருக்கி உலோகம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை

முதலில் கி.பி. 1887ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் அமைக்கப்பட்டது; கி.பி. 1920ஆம் ஆண்டில் பட்டர்வொர்த்தில் அமைக்கப்பட்டது. இதன் பயனாக உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்காக மலேசியா அயல்நாடுகளை நம்பவேண்டிய கட்டாயம் ஏற்படவில்லை. இதனால் வாணிபமும் அதிக அளவில் வளர்ந்தது. வெள்ளீயத்தை உருக்கி உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்காகத் தங்கள் சுரங்கப் பொருள்களைச் சியாமும், இந்தோனேசியாவும் மலேசியாவிற்கு அனுப்பின.

இரப்பர்

வெள்ளீயம் இந்தோனேசியப் பூமியிலே பல நூற்றுண்டுகளாகக் கிடைத்ததால் மலேசியப் பொருளாதாரம் வெற்றிப் பாதையில் செல்ல முடிந்தது. ஆனால் இவ் வெற்றிக்கு மற்றொரு காரணம் இரப்பர் விளைச்சல் அதிகரித்தது ஆகும். ஆனால் இரப்பர் விளைச்சல் செய்வதை ஐரோப்பியர்கள்தாம் முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்கள். மலேசியாவில் இரப்பர் விளைச்சல்கள் அதிகரிக்கும் சூழ்நிலையில் மோட்டார்கார்களின் தேவை அதிகரித்தது. ஆகையால் இரப்பரின் தேவை (உதாரணமாக மோட்டார் டயர்கள்) அதிகரித்தது. முதன் முதலாகக் கி.பி 1876ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலும், பகர ஆளுநர் லோவின் குவாலா காங்சர் (Kuala Kangser) தோட்டத்திலும் இரப்பர் பயிரிடப்பட்டது. இவைகளே படிப்படியாகப் பரவி விரைவில் மலேயா முழுவதும் இலட்சக் கணக்கில் தோன்றின. கி.பி. 1897ஆம் ஆண்டு மலேசியாவில் 345 ஏக்கர்களில் இரப்பர் பயிரிடப்பட்டிருந்தது. ஆனால் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே மோட்டார் கார்களின் தேவை அதிகரித்ததால் உலகம் முழுவதும் இரப்பரைத் தேடின. ஆகையால் 1905ஆம் ஆண்டுக்குள் மலேய்த் தீபகற்பத்தில் 40,000 ஏக்கர்களில் இரப்பர் மரங்கள் பயிரிடப்பட்டன; கி.பி. 1906ஆம் ஆண்டில் 85,000 ஏக்கர்கள்; கி.பி 1920ஆம் ஆண்டுக்குள் மொத்த உலக உற்பத்தியில் 53 விழுக்காடு இரப்பர் (1,96,000 டன்கள்) மேற்கு மலேசியாவிலிருந்து வந்தது. கி.பி. 1920ஆம் ஆண்டில் 2,475,000 ஏக்கர்களில் இரப்பர் பயிரிடப்பட்டது.

இரப்பர் மலேசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கும் அமெரிக்கக் குடியரசுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் மலேய அரசாங்கங்களுக்கு, முக்கியமாக மலேயக் கூட்டரசு நாடுகளுக்கும் ஜோஹுருக்கும் அதிக அளவில் வருமானம் கிடைத்தது. இதை நோக்கிய மற்ற மலேசியப் பகுதிகளும் இரப்பரைப் பயிரிடத் தொடங்கின.

கி.பி. 1917ஆம் ஆண்டில் சபாவில் 35,000 ஏக்கர்களில் இரப்பர் பயிரிடப்பட்டது. இரப்பர் பயிரிடுவதற்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. ஆகையால் இவ்விடங்களில் குடியேற்றங்கள் தோன்றின. நெடுஞ்சாலைகளும் புகைவண்டிப் போக்குவரத்தும் பெருகின. ஆகையால் கி.பி. 1909ஆம் ஆண்டு பிறையிலிருந்து (Prai) ஜோஹூர் வரை இடைவிடாத புகைவண்டிப்பாதை அமைக்கப்பட்டது. கி.பி. 1923ஆம் ஆண்டுக்குப் பிறகு சிங்கப்பூரும் புகைவண்டிப்பாதை மூலம் இணைக்கப்பட்டது. தெற்கிலிருந்து வடக்கு வரை ஒரு பெரும் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.

இரப்பர், வெள்ளீயம் ஆகியவற்றின்மூலம் கிடைத்த வருமானம் சாலைகளையும், புகைவண்டிப் போக்குவரத்தையும் அமைக்க மட்டும் பயன்படுத்தப்படவில்லை; மருத்துவச்சாலைகளையும், பள்ளிகளையும் கட்டவும் பயன்படுத்தப்பட்டது. கி.பி. 1901ஆம் ஆண்டில் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (An institute of medical Research) ஒன்று அமைக்கப்பட்டதால் விரைவில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்த முடிந்தது. கி.பி. 1910ஆம் ஆண்டில் 1000 பேர்களில் 63 பேர்கள் மலேரியா நோயால் துன்புற்று இறந்தார்கள். கி பி. 1920ஆம் ஆண்டில் 19 மக்கள்தாம் இறந்தார்கள்.

கி.பி. 1922ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் சுல்தான் இத்ரீஸ் பயிற்சிக் கல்லூரி (Sultan Idris Training College) தான்ஜோங் மாலிமில் (Tangong Malim) அமைக்கப்பட்டது. மலேயா மக்களுக்கு அரசியல் பணித்துறையில் பணிபுரியப் பயிற்சியளிப்பதற்காகக் குவாலா காங்சரில் (Kuala Kangsar) மலேய்க் கல்லூரி (Malay College) நிறுவப்பட்டது. கி.பி. 1919ஆம் ஆண்டு ஆங்கில மொழிமூலம் கல்வி கற்பிக்கும் பதினேழு பள்ளிகள் மேற்கு மலேசியாவில் நிறுவப்பட்டன. இதற்குப் பின் இப்பள்ளிகள் மலேயா முழுவதும் அதிக அளவில் தோன்றின. நகரங்களில் வாழ்ந்தவர்கள்தான் பொதுவாக இப்பள்ளிகளைப் பயன்படுத்தினார்கள். கி.பி. 1928ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் ராபல்ஸ் கல்லூரி (Raffles college) அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் இதுவே சிங்கப்பூரிலிருந்த அரசர் எட்வர்டு மருத்துவக் கல்லூரியுடன் (King Edward VII, college of Medicine)இணைக்கப்பட்டு மலேயாப் பல்கலைகழகமாக மாறியது. பிறகு இதன் கிளை கோலாலம்பூரில் நிறுவப்பட்டுப் பின்பு மலேயாப் பல்கலைகழகமாக மாறியது. சிங்கப்பூரிலிருந்த மலேயாப் பல்கலைக்கழகம் சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகமாக மாறியது.

தொழிலாளர் (Labour)

கி.பி. 1901ஆம் ஆண்டிலிருந்து 1921ஆம் ஆண்டுவரை மலேயத் தீபகற்பத்தின் மக்கள் தொகை 1,600,000 என்பதிலிருந்து 3,30,000 ஆக உயர்ந்தது. சீன—இந்தியக் கூலியாள்கள் மலேயாச் சுரங்கங்களிலும், பண்ணைகளிலும் வேலை செய்ய வந்ததால்தான் மக்கள் தொகை இரண்டுமடங்காகப் பெருகியது. கி.பி. 1907ஆம் ஆண்டில் மலேயக் கூட்டரசு நாடுகளில் 229, 778 சீனர்கள் வெள்ளீயச் சுரங்கங்களில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பொதுவாகச் சீனர்கள் சொந்தப் பண்ணைகளில்தான் வேலைசெய்தார்கள். ஐரோப்பிய மூலதனத்துடன் செயல்படுத்தப்பட்ட பண்ணைகளில் இந்தியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். கி.பி. 1913ஆம் ஆண்டில் 12,000 ஜாவா மக்களும் இரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்தார்கள்.

கி.பி. 1920ஆம் ஆண்டுக்குள் தற்பொழுதுள்ள மலேசியா இன அமைப்பு அமைக்கப்பட்டது. பிறகு இவ்வமைப்பில் அதிக மாறுதல்கள் ஏற்படவில்லை. கி.பி. 1921ஆம் ஆண்டில் மேற்கு மலேசியாவின் (சிங்கப்பூர் உட்பட) மொத்த மக்கள் தொகை 3,328,000

மலேய்	1,630,000	48·9%
சீனர்கள்	1,80,000	35·5%
இந்தியர்கள்	472,000	14·2%
மற்றவர்கள்	46,000	1·4%

ஆகையால், பன்முக இன அமைப்பு மலேசியாவில் நிலையாக அமைக்கப்பட்டது.

ஆனால் போர்னியோப் பகுதிகளுக்குச் சென்று இந்தியர்களும், சீனர்களும் குடியேறவில்லை. கி.பி. 1887 முதல் 1926ஆம் ஆண்டு வரை இந்தியர்களைச் சபாவிற்கு அழைத்துவர முயற்சி செய்த போதிலும், இம்முயற்சி தோல்வியடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்தான் சபாவிலும், சரவாக்கிலும் அதிக அளவில் சீனர்கள் குடியேறத்தொடங்கினார்கள். கி.பி. 1921ஆம் ஆண்டில் சபாவிலுள்ள மொத்தக் கூலிகளில் 33 விழுக்காடு ஜாவா மக்கள் ஆவார்கள்.

14. சிங்கப்பூர்க் குடியேற்ற நாடு (கி.பி. 1870-1941)

மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களை இந்திய அரசாங்கத்திடமிருந்த இலண்டனில் உள்ள குடியேற்ற அலுவலகத்திற்கு மாற்றியதால் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் படைத்

துறை சாராத அரச அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் இக் குடியேற்றங்களில் வாழ வேண்டும் என்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சிங்கப்பூரில் உள்ள அரசியல் அலுவலர்கள் சீன மொழியையும், அம்மொழியிலுள்ள வேறுபாடுகளையும் கற்கத் தொடங்கினர்கள். இதனால், தாங்கள் ஆட்சிபுரியும் மக்களைப்பற்றி அறிய இவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதன் விளைவால் கி.பி. 1877ஆம் ஆண்டில் சீனர்களின் காப்பாட்சி (Chinese Protectorate) அமைக்கப்பட்டது.

மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் தாயக நேர் ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாய் (Crown Colony) மாறியதிலிருந்து அரசாங்கம் சீனர்களின் வருகையைக் கட்டுப்படுத்தவும், சீராக்கவும் நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கியது. முக்கியமாக அவர்களுக்குள் உள்ள குற்றவாளிகளை நாடு கடத்த வேண்டிய அதிகாரத்தைப் பெற்றது. மேலும், அவர்களுக்கு இக் குற்றத் தண்டனைக்கு எதிராக வேண்டுகோள் விடவும், மேல் வழக்காடவும் உரிமை கிடையாது. கி.பி. 1867ஆம் ஆண்டில் பினங் கலகத்திற்குப் பிறகு, கி.பி. 1869ஆம் ஆண்டில் பதிவுசெய்யவேண்டிய அவசரச் சட்டம் (Registration Ordinance) ஒன்றை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இச் சட்டத்தின்படி சீன மர்மச் சங்கங்களைச் சட்டப்படிப் பதிவு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உண்மையில், இம் மர்மச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் இசைவு கிடைத்தது. ஆகையால், சிங்கப்பூரில் பலர் இதை எதிர்த்து விமரிசனம் செய்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டுக்குள் எல்லா மர்மச்சங்கங்களும் சட்டப்படிப் பதிவு செய்யப்பட்டன. ஒரு மர்மச் சங்கத்தையும் அரசாங்கம் அடக்கவில்லை; நசுக்கவில்லை. பொதுவாக 60 விழுக்காடு சீன மக்கள் விருப்பத்துடனே, விருப்பம் இல்லாமலோ இம் மர்மச் சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

காப்பாட்சி

கி.பி. 1877ஆம் ஆண்டில் டபிள்யு. ஏ. பிக்கரிங் தலைமையில் ஒரு தனித்துறையை அரசாங்கம் அமைத்தது. அரசாங்க நிருவாகத்திற்கும் சீன மக்களுக்கும் இணைப்பாக இருக்க வேண்டும் என்று இத்துறையை அரசாங்கம் அமைத்தது. இத்துறையின் மூலம் சீன மக்களின் ஆதரவை அடையவேண்டும். அதன் பின் சீனர்களின் மர்மச் சங்கத்தை ஒழித்துவிட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தது. இவ்விலாகாவிற்குச் சீனர்களின்காப்பாட்சி (Chinese Protectorate) எனப் பெயரிடப்பட்டது. சீனர்களைச் சார்ந்த—குடியேறுதல், தொழிலாளர்களை வன்முறையில் கடத்திச்

செல்லுதல், புதிதாக வந்தவர்களின் கூலியை நிருணயித்தல், விவகாரங்கள், பெண்கள் கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள், விலை மகள் முதலிய எல்லா விவகாரங்களிலும் தலையிட்டது. சீனுவி லிருந்து வந்த சீனர்களின் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த முடியாததனுல்தான் இத்துறையை முதன்முதல் தொடங்கினுர் கள். சிங்கப்பூருக்கு வரும் சீனர்களின் எண்ணிக்கை மிக அதிகம். கி.பி. 1878ஆம் ஆண்டில் 34,000 சீனர்கள் சிங்கப்பூருக்கு வந்திறங்கினுர்கள்; கி.பி. 1888ஆம் ஆண்டில் 103,000 ஆக அதிகரித்தனர்.

சீனர்களின் மர்மச் சங்கங்களைச் சீனுவில் ஒழித்தார்கள்; டச்சுக்காரர்களும், ஸ்பானியர்களும் ஆண்டுவந்த நாடுகளிலும், ஹாங்காங்கிலும் இச் சங்கங்களை அழித்தார்கள். மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில்தாம் இச் சங்கங்களுக்கு இடம் கொடுத்தார்கள்; பொறுத்துக் கொண்டார்கள். முதன் முதலில் பிக்கரீஸ் இச் சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டும் என விரும் பினுர். அரசாங்கம் மறைமுகமாக இச் சங்கங்களின்மூலம் சீனர் களைக் கட்டுப்படுத்தலாம் என எண்ணினுர். இவ்வாறு ஆட்சி புரிவதில் இச் சங்கங்களைத் தலைமறைவாக ஓடும்படிச் செய்வதை விட இது மேலானது என எண்ணினுர். ஆனுல் இச்சங்கங்களைச் சட்டப்படி பதிவு செய்ததால், இச் சங்கங்களின் நடவடிக்கைகள் குறையவில்லை. இச் சங்கங்களைப் பதிவு செய்தது தவறு என்ற முடிவுக்குப் பிக்கரீஸ் வந்தார். ஹாங்காங்கில் பணிபுரிந்த சிங்கப்பூர் ஆளுநர் கிளமென்டி ஸ்மித் இச் சங்கங்களை ஒழிக்க வேண்டும் எனத் தீர்மானித்தார். ஆகையால், கி.பி. 1890ஆம் ஆண்டில் அவசரச் சட்டப்படி அரசாங்க அனுமதியில்லாமல் இருக்கும் மர்மச் சங்கங்கள் சட்டத்திற்கு முரண்பட்டவை; பிரிட்டிஷ் குடியாக இல்லாத உறுப்பினர்களை அரசாங்கம் நாடு கடத்தலாம். ஆனுல், அவற்றை மறைவாக ஓடும்படிச் செய்தது. ஆகையால் இச் சங்கங்களின் செல்வாக்குத் தொடங்கியது.

அரசாங்க அமைப்பு

சீனக் காப்பாட்சி இருந்தபோதும், சிங்கப்பூரின் செல்வாக்கு ஓங்கி வளரத்தொடங்கியது. சிங்கப்பூருக்கு வந்து குடியேறும் மக்களின் தொகை பெருகத் தொடங்கியது.

உதாரணமாக,

கி.பி. 1850—53,000	கி.பி. 1931—4,20,000
கி.பி. 1860—82,000	கி.பி. 1941—7,70,000

போரின்படி முக்கியமான இடமாகவும், வாணிபம் செய்வதற்கு முதன்மையான நாடாகவும் சிங்கப்பூர் மாறியது. சிங்கப்பூரில் வசித்து வந்த வணிகர்கள் சிங்கப்பூர்ப் பற்றிய தீர்மானங்களில் பங்குகொள்ளத் தொடங்கினுர்கள். முதன்முதலாகச் சிங்கப்பூரில் வசித்து வந்த ஐரோப்பியர்கள் சிங்கப்பூர்ப் பற்றிய விவகாரங்களில் தலையிடத் தங்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என வாதாடி வெற்றிபெற்ருர்கள். இவர்கள் சிங்கப்பூரின் அரசியல் அலுவலர்கள். வேறு பதின்மூன்று பேர்கள் அரசியலில் இல்லாத அலுவலர்கள். அந்தச் சமயத்தில் 7 ஐரோப்பியர்களும், மூன்று சீனர்களும், ஒரு மலேயரும், ஓர் இந்தியரும், ஒரு யுரேசியரும் அரசியலில்லாத அலுவலர்களின் உறுப்பினர்களாகப் பணிப்புரிந்தார்கள். ஒவ்வோர் அரசியலில்லாத அலுவலர்களின் உறுப்பினர்களும் அவர்களுடைய இனத்தைச் சார்ந்த சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பொதுவாகத் தொழிலாளர்களையும் தொழிற் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களையும் யாரும் தேர்ந்தெடுக்கவில்லை.

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மறைமுக வாக்குரிமையும் (Vote) சட்டசபையைச் சார்ந்த பெரும்பான்மையோர் அரசியலில் சேராத அலுவலர்களாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் கேட்கப்படவில்லை. சிங்கப்பூரில் அதிகமாய் உள்ள சீனர்கள்கூட இவ்வுரிமைகளைக் கேட்கவில்லை. அப்படி வாக்குரிமை கொடுத்தால் பிரிட்டிஷ் குடிமகனுக்குத்தான் அவ்வாக்குரிமை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோரிடமும் நிலவியிருந்தது. கி.பி. 1945ஆம் ஆண்டுவரை சிங்கப்பூர் மக்களுக்குத் தங்களுடைய சட்டசபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைக்கவில்லை. ஒவ்வொரு துறையின் அலுவலர்களையும் அரசாங்கம்தான் தேர்ந்தெடுத்தது.

வாணிபம்

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலே பிரிட்டிஷ் பேரரசு ஆட்சியில் சிங்கப்பூர் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. ஐரோப்பாவிற்கும், சீனுவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் நடுவில் உள்ள கடல்செல் வழிகளில் இருக்கும் முக்கிய இடங்களான ஜிப்ரால்டர், மால்டா, சூயஸ் கால்வாய், ஏடன், கொழும்பு, சிங்கப்பூர், ஹாங்காங் ஆகியவை பிரிட்டிஷ் வல்லரசு ஆட்சியின் கீழ் இருந்தன. ஆகையால் இவ்விடங்களுடன் தொடர்பு கொள்ளச் சிங்கப்பூர் ஒரு முக்கிய இணைப்புச் சங்கிலியாய் இருந்தது.

சிங்கப்பூர் ஒரு முக்கிய வாணிபத் துறைமுகப்பட்டினமாக விளங்கியது. முதல் உலகப் பெரும்போருக்குப் பிறகு இது ஒரு முக்கியக் கடல் தளமாகவும், போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க (Strategic) இடமாகவும் விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலே தொழில்துறைகள் மலேயாவில் தழைத்தோங்கத் தொடங்கியது. இரப்பர், வெள்ளீயம் (தகரம்) முதலிய பொருள்கள் சிங்கப்பூர், பினுங் வழியாக அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. சிங்கப்பூரில் உள்ளவர்களிடம் செல்வம் இருந்ததால் மலேயாவில் உள்ள பண்ணைகளும், சுரங்கங் களும் அவர்களுடைய ஆட்சியின் கீழ்வந்தன. அயல்நாடுகளுடன் முக்கியமாக டச்சுக் கிழக்கு இந்திய நாடுகளுடன், வாணிபம் செய்ததால்தான் சிங்கப்பூரில் செல்வம் குவியத் தொடங்கியது. இரண்டு உலகப் பெரும் போரின் இடைக்காலத்திலே கூட்டு மலேய நாடுகளும், மற்ற மலேய நாடுகளும், மலாக்க நீரிணைப்புக் குடியேற்றங்களும் சேர்ந்து ஒரு சுங்கச்சாவடி இணைப்புச் சங்கத்தை (Customs Union) அமைக்க வேண்டும் எனப் பலர் விரும்பினர். ஆனால், சிங்கப்பூரும் பினுங்கும் சுங்க வரி—காப்பு வரிக் கட்டுப்பாடு முதலியவையற்ற வாணிகத்தையே விரும்பின.

சமூக நிலைமை

மக்களுடைய தினசரி வாழ்க்கையில் அரசாங்கம் தலையிட வில்லை. இந்தியா, சீன அல்லது ஸ்காட்லாந்து போன்ற அயல் நாடுகளிலிருந்து வந்தவர்கள் தாம் சிங்கப்பூரில் குடியேறியிருந் தார்கள். செல்வம் சேர்த்துக்கொண்டு தங்கள் தாய் நாடுகளுக்குத் திரும்ப வேண்டும் என இவர்களில் பெரும்பான்மையோர் விரும் பினர்கள். முதல் உலகப் போருக்கு முன் சிங்கப்பூருக்கு வந்த அயல்நாட்டினர் இம்முறையைத்தான் கையாண்டனர். அயல் நாட்டிலிருந்து வந்த எல்லோரும் செல்வர்களாகத் திரும்பவில்லை. பலருக்கு ஊதியமோ, கூலியோ அதிகமாகக் கிடைக்கவில்லை. இவர்கள் கிடைத்த வருவாயை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினர்கள்.

செல்வம் சேர்த்துக்கொண்டு தாய்நாட்டிற்குத் திரும்ப முடியாது எனத் தெரிந்தவுடன் பல அயல் நாட்டினர் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களிலே நிலையாக வசிக்கத் தொடங்கினர். மக்கள் தொகை அதிகரித்தவுடன் அரசாங்கமும் இவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் தலையிடத் தொடங்கியது.

கி.பி. 1930ஆம் ஆண்டுவரை சிங்கப்பூருக்கு அபினியின் தனி உரிமை மூலம் வருமானம் வந்தது. ஆகையால் அபினி உண்பதை அரசாங்கம் தடைசெய்ய விரும்பவில்லை. ஆனால் முதல் உலகப் பெரும்போருக்குப் பிறகு அபினி விற்பதற்கும் உண்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதித்தது. கி.பி. 1929ஆம் ஆண்டில் அபினி உண்பவர்கள் எல்லோரும் அரசாங்க அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். திட்ட அளவில்தான் அபினி வாங்க அனுமதி கொடுக்கப்பட்டது. கி.பி. 1934ஆம் ஆண்டில் புதிதாக அபினி உண்பவர்கள் பதிவு செய்யக்கூடாது என்றொரு கட்டுப்பாட்டை அரசாங்கம் கொண்டுவந்தது. ஆகையால் அபினி உண்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது. இரண்டாவது உலகப்போரின்போது கி.பி. 1943ஆம் ஆண்டில் அபினி விற்பதற்குத் தடைபோடப்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அபினிக் கடைகளைத் திரும்பவும் திறப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டிலே பிரிட்டிஷ் படைத்தளமாகவும் பிரிட்டிஷ் கப்பல்கள் வந்து தங்கும் இடமாகவும் சிங்கப்பூர் விளங்கியது. இந்தியாவிலும், சீனாவிலும்தான் பிரிட்டன் போரிட்டது. சீனப் போரின் போது ஹாங்காங் பிரிட்டிஷ் படைத்தளமாக விளங்கியது.

முதல் உலகப் போரின்போது (1914-18) சிங்கப்பூரும், மலேயத் தீபகற்பமும் மிகுதியாகப் பாதிக்கப்படவில்லை. பொதுவாக இப்போர் ஐரோப்பாவிலும், மேற்கு ஆசியாவிலும்தான் நடந்தது. மேலும் முதல் உலகப் போரின்போது கிழக்கு ஆசியாவில் இருந்த முக்கிய வல்லரசுகளான ஜப்பான், உருசியா ஆகியவற்றுடன் பிரிட்டன் நட்புத் தொடர்பு கொண்டிருந்தது.

முதல் உலகப் பெரும் போரின்போது எம்டன் என்னும் ஜெர்மன் விரைபோர்க் கப்பல் (Cruiser) சீனாவிலிருந்து கிளம்பி, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள தன் எதிரிகளின் கப்பல்களைத் தாக்கியது. கி.பி. 1914ஆம் ஆண்டு அக்டோபரில் எம்டன் சென்னைமீதும், பினாங்மீதும் குண்டு வீசியது. ஆனால் கடைசியில் ஆஸ்திரேலியாவின் விரைவுப் போர்க்கப்பல் சிட்னி, கோகோஸ், கீலிஸ் ஆகிய தீவுகளின் அருகே மூழ்கடித்தது.

ஜெர்மன் போர்க் கைதிகள் சிங்கப்பூருக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்களை இந்தியப் போர்வீரர்கள் பாதுகாத்தார்கள். ஆனால் கி.பி. 1951ஆம் ஆண்டில் இவ்விந்தியப் படைக்காவல்

வீரர்கள் கலகம் செய்யத் தொடங்கினார்கள். இக்கலகத்தின் போது ஜெர்மன் போர்க் கைதிகளை இந்தியப் படைக் காவல் வீரர்கள் விடுதலை செய்தார்கள். சீனர்களின் புத்தாண்டு விழாவின் போது இக்கலகம் ஏற்பட்டது. ஆனால் இந்தியப்படைக் காவல் வீரர்களுக்குப் படைத் தலைவர்கள் இல்லை. ஆகையால் இவர்கள் கலகத்தை எளிதில் பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்கியது.

கி.பி. 1922ஆம் ஆண்டில் வாஷிங்டன் கடற்படை ஒப்பந்தப் படி (Washington Naval Treaty) ஹாங்காங்கிலும் 110° தீர்க்காம்ச ரேகைக்குக் கிழக்கிலும் கடற்படைத்தளம் அமைப்பதில்லையெனப் பிரிட்டன் வாக்குறுதியளித்தது. சிங்கப்பூர் இவ்வொப்பந்தத் திற்குள் வராததால், சிங்கப்பூரில் பிரிட்டிஷ் தொலைவாசியத் தளத்தை (British Far Eastern Base) அமைக்கப் பிரிட்டன் முடிவு செய்தது. இத்தளத்தைக் கட்டுவதற்குக் கி.பி. 1923ஆம் ஆண்டில் பிரிட்டன் பணம் கொடுத்தது; சிங்கப்பூர் அரசாங்கம் இடம் கொடுத்தது. ஆனால் இதைக் கட்டுவதற்குப் பல ஆண்டுகள் ஆயின. இரண்டாவது உலகப் போர் தொடங்கு வதற்கு முன்தான் இத்தளத்தைக் கட்டி முடித்தார்கள். அதுவரை இத்தளத்தைக் கட்டுவதற்கு $ 500,000,000 டாலர் செலவழிக்கப் பட்டது.

15. இருபோர்களுக்கு இடையே (கி.பி. 1918-1941) மைய ஆட்சி அமைப்பும், நாட்டாட்சி உரிமைகளும்

மலேய் நாடுகள் கூட்டரசு வரலாற்றிலே இடைவிடாமல் இடையூறு கொடுத்த நிகழ்ச்சி சுல்தான்கள் வகிக்க வேண்டிய அரசி யல் நிலைக்கும், மைய ஆட்சி நிருவாக அமைப்புக்கும் இடையே உருவாகிய தகராறுகளே ஆகும். சுல்தான்களின் ஆலோசனை யாளர்களாக ஆங்கிலேயர்கள் இயங்கி வந்தார்கள். மலேய் நாடு களின் கூட்டரசு அமைப்பு உருவாகிய காலத்திலிருந்து ஆலோசனை கொடுப்பதற்குப் பதிலாக நேரடியாக நிருவாகம் புரியத் தொடங் கினார்கள் ஆங்கிலேயர்கள். பொருளாதார வளர்ச்சியின் சூழ் நிலையிலே பிரிட்டன் தனக்கும், மலேய் நாடுகளுக்குமிடையே ஏற் பட்ட உடன்படிக்கை சட்டக்கட்டுப்பாடுகளை ஒதுக்கி வைத்தது. நிருவாக அமைப்பு படிப்படியாக மைய ஆட்சி அமைப்புத் திசையை நோக்கிச் சென்றது; வெள்ளீயம், இரப்பர் ஆகியவற்றின் மேல் ஒருமித்த கவனம் செலுத்தியதால் சுல்தான்களையும் மலேய்ச் சமுதாயத்தையும் புறக்கணித்து விட்டதாக ஆங்கிலேய அதிகாரிகள் உணரத் தொடங்கினார்கள். இன்றைய மலேய்

நாடுகள் கூட்டரசு அன்று; வெறும் கலவைதான் (amalgamation) எனத் திரு லாரன்ஸ் கில்லி மார்டு (Sir Lawrence Guillemard) கி.பி. 1925ஆம் ஆண்டில் வெளிப்படையாகக் கூறினர்.

முதல் உலகப்போருக்குமுன் தோன்றிய திடீர்ப் பொருளாதார வளர்ச்சி ஆண்டுகளில் அரசியல், சட்டதிட்ட விவகாரம் ஆகிய வற்றின் மேல் கவனம் செலுத்தவில்லை. இவற்றை முக்கியமாக யாரும் கருதவில்லை. மலேயாவில் செல்வம் கொழித்ததால் எல்லோர் கவனமும் வெவ்வேறு திசையில் சென்றது. இவற்றைப் பற்றி நினைத்தவர்கள் கூட செல்வச் செழிப்பினல் மனமாற்றம் அடைந்து மைய ஆட்சி அமைப்பை ஏற்றுக்கொண்டார்கள்; இவ்வாட்சி அமைப்புதான் முன்னேற்றத்திற்கு அடிகோலியது. ஆனல் கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப்பிறகு வெள்ளீயமும் இரப்பரும் மிக அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டதால் பொருளாதார வளர்ச்சியிலே முதல் விலை இறக்கம் தோன்றியது. ஆகையால், கூட்டரசு நிருவாகம் வெற்றிப்பாதையால் செல்கிறதா எனப்பலர் ஐயப்படத் தொடங்கினர்கள்; கூட்டரசு அமைப்பைப்பற்றி ஆராய்ச்சித் தொடங்கியது. ஆங்கிலேய அதிகாரிகளும், மலேய்ச் சுல்தான்களும் தீவிரமாகக் கவனம் செலுத்தத் தொடங்கினர்கள்.

அரசியல் செல்வாக்கை விட்டுக் கொடுத்துப் பொருளாதார வளர்ச்சியை ஏற்றுக்கொண்டு விட்ட உண்மையைச் சுல்தான்கள் புரிந்து கொண்டார்கள்; கி.பி. 1920ஆம் ஆண்டின் தொடக்கத் திலிருந்து வருமானம் குறையத் தொடங்கியவுடன் தாங்கள் இவ்வாறு ஏற்றுக்கொள்வது சரியா என ஐயுறத் தொடங்கினர்கள். கூட்டரசு இல்லாத மலேய் நாடுகளில் உள்ளவர்களிடம் அரசாங்க விவகாரங்களில் தங்களுக்கு இருப்பதைவிட அதிக அதிகாரம் இருப்பதை உணர்ந்தார்கள். கூட்டரசு மலேய் நாடுகளின் செல்வம் வளர்ந்த போது கூட்டரசு இல்லாத நாடுகளில் செல்வம் வளரவில்லை. ஆனல் படிப்படியாக இந்நாடுகளும் செல்வம் சேமிக்கத் தொடங்கின. மேலும் இதை ஆட்சி புரிந்தவர்களிடம் அதிக அதிகாரம் இருந்தது. தாங்கள் மிக அதிகமாக அதிகாரத்தை விட்டுக் கொடுத்துவிட்டதாகக் கூட்டரசு நாடு களின் சுல்தான்கள் தீர்மானித்தார்கள். இவர்களிடையே வட்டிக் குறைப்புக் குழு (Retrenchment Committee) கி.பி. 1923ஆம் ஆண்டில் வெளியிட்ட குறிப்புரையும் இவர்கள் கருத்தை ஆதரித்தது. மிகைப்படியான மைய ஆட்சி அமைப்பு மிகுவிலையுள்ளதாய் இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டது எனக் கூறியது. மிகைப்படியான மைய ஆட்சி அமைப்பின் திசையை மறுபக்கமாக மாற்ற வேண்டும் எனத் தலைமைச் செயலாளர்

திரு ஜார்ஜ் மாக்ஸ்வெல் (Sir George Maxwell) கருதினார்; இது பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக இவர் அமைத்த குழு, ஆட்சி உரிமையைப் பன்முகப்படுத்த வேண்டியது அவசியம் எனக் கி.பி. 1924ஆம் ஆண்டில் ஆலோசனை கூறியது. அரசாங்கம் இக் குழுவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டது. தலைமைச் செயலாளர்களுக்கு உள்ள அதிகாரங்களைத் துணைக் காப்பரசின் ஆளுநர்களுக்கு (resident) அளித்தது. இது முதல் சில துறைகளின்மேல் செலுத்தும் அதிகாரங்களை (உதாரணமாக வேளாண்மைத் துறையும், வனத்துறையும்) நாட்டாட்சி அரசாங்கத்திற்கு மாற்றிவிட வேண்டும் எனத் தீர்மானித்தது.

ஆனால் இங்ஙனம் உருவாகும் சூழ்நிலை சுல்தான்களின் நிலையை மாற்ற உதவவில்லை. ஆகையால் கிளையாட்சியை வலிமையுறச் செய்ய வேண்டுமெனக் கி.பி. 1925ஆம் ஆண்டில் உயர்தனிப் பேராளர் எடுத்துரைத்தார். இது பற்றிப் புத்தாய்வுத் திட்டத்தை அறிவித்தார்; இதை நடைமுறையில் செயல் படுத்தினால் சுல்தான்களின் அதிகாரங்கள் அதிகரிக்கும். தலைமைச் செயலாளர்களின் அதிகாரங்களை நாட்டரசு மன்றங்களுக்கும் (State Councils), துணைக்காப்பரசு ஆளுநர்களுக்கும் படிப்படியாகக் கொடுத்துவிட வேண்டும் என ஆலோசனை கூறினர். சில துறைகள் நாட்டரசு அதிகாரத்தின்கீழ் வரும். தலைமைச் செயலாளர் மூலமாக இல்லாமல் நேரடியாகவே சுல்தான்கள் உயர் தனிப் பேராளருடன் தொடர்புகொள்ள வேண்டும்; தலைமைச் செயலாளர் பதவியை மிக விரைவில் நீக்க வேண்டும் என்றும் உரைத்தார்.

இப்புத்தாய்வுத் திட்டம் மிகவும் அவசியமான முதல்படி எனச் சுல்தான்கள் வரவேற்றார்கள். ஆனால் ஐரோப்பிய வாணிகரும், சீன வாணிகரும் இதை எதிர்த்தார்கள். இரு காரணங்களுக்காக இவர்கள் அஞ்சினார்கள் : (1) இத்திட்டம் கூட்டரசின் ஆட்சி அதிகாரத்தின் வலிமையைக் குன்றச் செய்யும்; இது நாட்டின் வாழ்வு வளத்தைப் பாதிக்கும். (2) ஆற்றலிழந்த அதிகாரம் குறைந்த கூட்டரசு சிங்கப்பூரின் ஆட்சியின்கீழ் வருவது திண்ணம். அதுமுதல் கூட்டரசின் நலனைத் தமக்குச் சாதகமாகச் சிங்கப்பூர் பயன்படுத்தத் தொடங்கும். உயர்தனிப் பேராளர் சிங்கப்பூரில் வசித்து வந்ததால், கூட்டரசு நாடுகள் அவருடைய உதவியை நாடுவதற்காகத் தலைமைச் செயலாளர் பதவி தேவை எனப் பலர் கருதினார்கள்.

இக்காரணங்களால் ஒரு சமரச இணக்கம் செய்யப்பட்டது. குறைந்த அளவில், தவணையில், ஆட்சி உரிமையைப் பன்முகப் படுத்தத் தொடங்கியது பிரிட்டிஷ் அரசாங்கம். அரசாங்க வருமானத்தில் ஒரு பகுதி நாட்டாட்சி அரசாங்கத்திடம் கொடுக்கப் பட்டது. கூட்டரசு அரசாங்கம் கொடுக்கும் பொருளுதவியை இட ஒதுக்கீடு செய்ய அதிக சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஆனால் உண்மையான அதிகாரம் கோலாலம்பூரில்தான் முன்போலவே இருந்தது. நான்கு நாடுகளைப் பாதிக்கும் சட்டங்களைக் கூட்டரசு மன்றம் (Federal Council) செயல்படுத்தலாம். இப்புதிய சூழ் நிலைக்கு ஏற்றவாறு கி.பி. 1927ஆம் ஆண்டில் கூட்டரசு மன்றத் திலிருந்து சுல்தான்கள் விலகினார்கள்; இம்மன்றம் பொது விவாதத்தில் கலந்து கொண்டதால் தங்கள் மதிப்பு உயரவில்லை என உணர்ந்தார்கள். இது முதல் நிகழ்ச்சி நிரலை (agenda) துணைக்காப்பரசு ஆளுநர்களுடன் சுல்தான்கள் கூடிப் பேசு வார்கள்; மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சட்டத் திலும் கையொப்பமிடுவார்கள். ஆண்டுதோறும் கூடும் சுல்தான்கள் கூட்டம் (Annual Rulers Conference) இனிமேல் கூடும்; ஆனாலும் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை; சுல்தான்கள் கூட்டரசு மன்றத்திலிருந்து விலகியதால் சட்டமியற்று வதில் பங்கு கொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. உண்மையில் கிளையாட்சியை வலிமையுறச் செய்யும் திட்டம் போதிய அளவு முன்னேறவில்லை. தேவைக்குக் குறைந்த அளவில்தான் இத்திட்டம் நடைமுறையில் இயங்கி வந்தது.

கிளமெண்டியின் ஆலோசனைகள்

கி.பி. 1931ஆம் ஆண்டில் பதவியேற்ற உயர்தனிப் பேராளர் (முன்னாள் ஹாங்காங்கின் ஆளுநர்) திரு செஸில் கிளமெண்டி (Sircecil Clementi) ஆண்டிறுதியில் நடைபெற்ற சுல்தான்கள் மாநாட்டில் (Annual Rulers Conference) மீண்டும் கிளையாட்சி வலிமையுறச் செய்வதைப் பற்றிய வினாவை எழுப்பினார்.

கிளமெண்டி பின்வருமாறு ஆலோசனை செய்தார். கூட்டரசு, கூட்டரசு இல்லாத நாடுகளிடையே ஒத்துழைப்பும், இறுதியில் கூடிச் சேர்தலும் அவசியம். மலாக்கா நீரிணைப்பு நாடுகளும், பிரிட்டிஷ் போர்னியோவும் இந்நாடுகளுடன் இணைக்கப்படும். இவைகளெல் லாம் சிறு சிறு நாடுகளாயிருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் இவை தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வது எளிதன்று. மலேயாத் தீபகற்பம் சிறியதாயிருப்பதால் பல சுதந்திர அரசாங்கங்களுடன் நிலையாக இருப்பது கடினம் ஆகும்; தேவையற்ற ஒத்த அரசியல் அமைப்பால் தேவையற்ற அதிகச் செலவும், திறமைற்ற ஆட்சியும்

விளைகின்றன. மேலும் மலேயாத் தீபகற்பத்திற்கு வந்து நிலையாக வாழும் அயல்நாட்டார்கள்பற்றி ஒரு பொதுக் கொள்கையை மலேய்ச் சுல்தான்கள் ஒன்று கூடிச்சேர்ந்து உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கி.பி. 1931ஆம் ஆண்டின் புள்ளி விவரம் திகைப்பேற்படுத்துகிறது. வரலாற்றிலே முதல் முறையாக மலேய் இனம் அல்லாதவர்கள் மலேய் இனத்தாரைவிட அதிகமாக இருக்கிறார்கள். 1,930,000 : 2,330,000 பெரும்பான்மையான சீனர்கள் மேற்கு மலேயாவிலும், மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங் களிலும் நிலையாகக் குடியேறியிருப்பதால் எல்லா மலேய் நாடுகளும் ஒரு சேரக்கலந்து ஒரு பொதுக் குடியேற்றக் கொள்கையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம். ஹாங்காங்கில் நமக்கு ஏற்பட்ட அனுபவத்தால் மலேயாவில் குடியேறி இருக்கும் சீனர்களை ஆட்சி அதிகாரத்தால் கட்டுப்படுத்த வேண்டும்; முக்கியமாக அவர்களின் அரசியல் கல்வி, இரகசியச் சங்க நடவடிக்கை முதலியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட கிளமென்டியின் திட்டம் பின்வருமாறு : கூட்டரசு நாடுகளை, கூட்டரசில்லாத நாடுகளைப் போல உருவொத்தனவாக மாற்றினால்தான் கூட்டரசு இல்லாத நாடுகள் கூட்டரசு நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகொள்ள முன்வரும். கூட்டரசில்லாத நாடுகளில் ஆட்சிபுரியும் சுல்தான் களிடம் தங்கள் ஆட்சி அதிகாரங்களை விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை இல்லை. ஆகையால் கூட்டரசு நாட்டுச் சுல்தான்களின் ஆட்சி அதிகாரத்தை அதிகரிக்க வேண்டும். இனிமேலும் அவர்கள் வெறும் அதிகாரமற்ற பொம்மைகளாக இருக்கக்கூடாது. சுங்கவரி, குடியேற்றம், புகைவண்டிப் போக்குவரத்துப் போன்ற மத்திய அரசாங்கப் பணிதுறைகளை மட்டும் கூட்டரசு ஆட்சி அதிகாரத்தின்கீழ் தொடர்ந்து இருக்க வேண்டும்; மற்ற எல்லாத் துறைகளையும் நாட்டாட்சியிடம் விட்டுவிடவேண்டும், நாட்டாட்சி மன்றங்களை விரிவுபடுத்தி, வலுப்படுத்தி மேலும் பல சட்டமியற்றும் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். கூட்டரசு நாடுகளுக்கு ஐந்தில் இருபங்கு வருமானம் கொடுக்கப்படும். தலைமைச் செயலா ளரை இனிமேல் கூட்டரசு செயலாளர் (Federal Secretary) என அழைக்க வேண்டும். இக் கூட்டரசு செயலாளரும் நான்கு துணைக் காப்பரசின் ஆளுநர்களும் கூட்டரசு நாடுகளில் இருந்த ஆலோசனை யாளர்களைப் போல் பணிபுரிவார்கள் என நம்பலாம்.

எதிர்ப்பு

கி.பி. 1925ஆம் ஆண்டில் எதிர்த்த வாணிபச் சமுதாயமே மீண்டும் கிளமென்டியின் ஆலோசனையை முன்பு கூறிய காரணங்

களையே கூறி எதிர்த்தது. இதைத் தீவிரமாக நிலையாகக் குடியேறிய சீனர்கள் எதிர்த்தார்கள்; சில சீனர்கள் சீனுவிற்குத் திரும்பிச் சென்றுர்கள். பல பள்ளிக்கூடங்கள் சீனர்களால் கட்டப் பட்டிருந்தன. இவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. கி.பி. 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு சீன அரசாங்கத்தின் உதவி நேரடியாகவோ மறைமுகமாவோ இப்பள்ளிக்கூடங்களுக்குக் கிடைத்தன. ஆகையால் தன் ஆட்சி அதிகாரத்தின்கீழ் இவற்றைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்தது. சீன அரசியல் கட்சிகள் குடியேறிய சீனர்களின் செல்வாக்கைப் பெற்றன; தேசிய (குயோமின்டாங்) அல்லது கம்யூனிஸ்டு மன்றங்களுக்குக் குடியேறிய சீனர்கள் பணம் திரட்டினுர்கள். கூட்டரசு அதிகாரம் குறைந்தால் மலேய் இனத்தாரின் ஆக்கிரமிப்பிலுள்ள நாட்டரசு ஆட்சியின் கீழ் சீன இனத்தார் வருவர் எனச் சீனர்கள் அஞ்சினுர்கள். ஆகையால் கிளையாட்சியை வலுப்படுத்தும் நோக்கத்தை இவர்கள் எதிர்த்தார்கள்.

மேலும் கூட்டரசு இல்லாத நாடுகளான ஜோஹூர், கேதா ஆகியவற்றிலும் பலகட்சிகள் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இத்தகைய திட்டத்தின் மூலம் கூட்டரசு இல்லாத நாடுகளின், ஆட்சி அதிகாரமும் கூட்டரசு நாடுகளிலிருப்பது போல் குறைக்கபடுமோ என ஐயுற்றுர்கள். ஆங்கிலேயர்களின் உதவி யிருந்தால் போதும்; ஆனல் ஆங்கிலேயர்களின் ஆட்சி அதிகாரம் தேவையில்லை என நினைத்தார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத் தும் முதல்படியாகச் சுங்கவரி இணைப்புச் சங்கம் (Customs Union) ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கிளமென்டி கூறியதைச் சிங்கப்பூரில் வசித்த பெரும்பான்மையான மக்கள் எதிர்த்தார்கள். சுங்கவரியில்லாக் கட்டுப்பாடில்லாத துறைமுகமாயிருக்கும் சிங்கப் பூரின் நிலைமை இதனுல் மிகவும் பாதிக்கப்படும் என இவர்கள் அஞ்சினுர்கள்.

கிளமென்டின் ஆலோசனையும், எதிர்த்த கருத்துகளும் பிரிட்டனில் ஆராயப்பட்டன. கி.பி. 1932ஆம் ஆண்டில் குடியேற்ற நேருதவிச் செயலர் (Colonial under Secretary) சர் சாம்யுவல் வில்சன் (Sir Samuel Wilson) இதுபற்றி அறிய மலேயாவிற்கு வந்தார். பொருளாதார நோக்கத்துடன் பார்த்தால், மைய ஆட்சி அமைப்பே சிறந்தது; அரசியல் நோக்கத்துடன் பார்த்தால், கிளை ஆட்சியை வலுப்படுத்தும் திட்டம் மிக அவசியம் என இவர் கூறினுர். மேலை நாட்டாரின் கருத்துகளும், குடியேறிய சீனர்களும் மலேய் மக்களை அமுத்திக் கட்டுப்படுத்தாமல் இருக்க மறைமுகமாக ஆட்சிக் கொள்கையைப் பாதுகாக்க வேண்டும். மலேய்ச் சுல்தான்

களின் நிலையையும், அவர்களின் ஆட்சி அதிகாரம், மதிப்பு ஆகிய வற்றையும் தொடர்ந்து பாதுகாப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முக்கியக் கொள்கையாயிருக்க வேண்டுமெனக் கூறினர். இறுதியில் சமரசத்திட்டம் ஒன்றைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்தார்.

கிளையாட்சி வலுப்படுதல்

கிளையாட்சியைப் படிப்படியாக வலுப்படுத்த வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. முதல் தவணையில் நான்கு ஆண்டு களுக்குள் மத்திய அரசாங்கத் துறைகளைப் படிப்படியாக நாட் டாட்சி அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வரத் தீர்மானம் எடுக்கப் பட்டது. உதாரணமாக வேளாண்மை, கல்வி, காட்டியல், மருத் துவம், சுரங்கம், பொதுநலம் ஆகிய துறைகளை நாட்டாட்சி அரசாங்கத்திடம் கொடுக்க வேண்டும். நாட்டாட்சி அரசாங்கத் திற்கு வருமானங்களைத் திரட்ட உரிமையில்லை. ஆனால் கூட்டரசு ஆண்டுதோறும் மொத்த உதவித் தொகையளிக்கும். முதலில் ஆலோசனை செய்தபடி நாடுகளுக்கு நிதி திரட்ட அதிகச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. கி.பி. 1935ஆம் ஆண்டில் தலைமைச் செயலாளர் பதவியை நீக்கினலும் திரு செஸில் கிளமன்டி நினைத்ததற்கு மாருக மாறுதல்கள் மெதுவாகவே தோன்றத் தொடங்கின.

மிக முக்கிய மாறுதல் என்னவென்ருல், நாடுகளின் மன்றங்கள் விரிவாக்கப்பட்டன; வலுப்படுத்தப்பட்டன; தற்பொழுது இம் மன்றங்களிடம் அதிக அதிகாரங்கள் இருந்தன; ஆனல் இவ்வதி காரங்களைத் திறமையுடன் செயல்படுத்தத் தனி ஆற்றல் உடைய அதிகாரிகள் தேவையாக இருந்தார்கள். உதாரணமாகக் கி.பி. 1927ஆம் ஆண்டில் பேரக் நாட்டு மன்றத்தின் உறுப்பினர் களாகச் சுல்தானும், மலேயத் தலைமகனும் (Malay Chiefs) துணைக் காப்பரசின் ஆளுநர் செயலாளராக இரு சீனர்களும் இருந்தார்கள். கி.பி. 1937ஆம் ஆண்டில் இம்மன்றத்தில் 26 உறுப்பினர்கள் இருந்தார்கள். இவர்களில் பன்னிரண்டு உறுப்பினர்கள் மலேய் இனத்தார்கள்; ஏழு உறுப்பினர்கள் அதிகாரிகள்; எஞ்சிய ஏழு உறுப்பினர்கள் பணித்துறை சாராதவர்கள். ஆனல் இச்சமயத்தில் இருந்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோருக்கு நிருவாக அனுபவம் இருந்தது. நிருவாக விவகாரங்களில் தங்கள் செல் வாக்கைப் பலமுறை மன்றங்களால் பயன்படுத்த முடிந்தது.

முடிந்தால் மறைமுக ஆட்சியை அமைக்க வேண்டும் எனக் கிளமென்டி விரும்பிய திட்டப்படி அரசாங்கத் துறைகளில் மலேயர்

களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டது. கி.பி. 1910ஆம் ஆண்டிலிருந்தே மலேயர்களின் நிருவாகவூழியத்துறை (Malayan Administrative Service) இயங்கி வந்தது. இப்புதிய திட்டப்படி மலேயர்கள் அமைதிக் கால அரச ஊழியர்களாகச் (Malay Civil Service) சேர வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில் வசித்து வந்த சீனர்கள் அமைதிக்கால அரச ஊழியர்களாகப் பணிபுரியத் தமக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் எனப் பல முறை முறையிட்டார்கள். சீனர்களை நிருவாக அதிகாரிகளாக ஏற்றுக் கொள்ள ஒரு சுல்தானும் ஒப்புக்கொள்ளமாட்டார். ஆகையால் அவர்களுக்குத் தனிப்பணித்துறை நிறுவப்பட்டது.

கி.பி. 1939-40ஆம் ஆண்டுக்குள் கிளையாட்சியை வலுப் படுத்த வேண்டும் என்று செயல்படுத்திய முதல் தவணைத்திட்டம் ஏறக்குறைய நிறைவேற்றப்பட்டது எனலாம். மருத்துவத் துறையும் பொதுநலத்துறையும் நாட்டாட்சி அரசாங்கத்தின் முழு அதிகாரத்தின்கீழ் வந்தன. மற்றத் துறைகளில் நாட்டாட்சி அரசாங்கத்திற்கு முழுமையில்லா முறையில் அதிகாரம் இருந்தது. சில செய்திகள்பற்றிச் சட்டமியற்றும் அதிகாரமும் நாட்டு மன்றங் களுக்குக் கிடைத்தது. தனிப்பட்ட மொத்தத் தொகை செலவு செய்யவும் வாய்ப்பு அதிகமாகக் கிடைத்தது.

உலகப் போருக்கு முன் கிளையாட்சியை வலுப்படுத்தியதால் கூட்டரசு நாடுகளில் சுல்தான்களின் செல்வாக்கு அதிகரித்தது; இம்மாறிய சூழ்நிலையில் அரசாங்கம் அவர்களிடம் அடிக்கடி ஆலோசனை கேட்டது. படித்த மலேயர்கள் அதிகரித்தார்கள்; அதிக மலேயர்கள் அமைதிக் கால அரச ஊழியர்களாகப் பணி புரிந்தார்கள். இக்காரணங்களால் மலேய் இனத்தார்க்கு மேற்கு மலேயாவில் குடியேறிய சீனர்களுடன் போட்டியிடுதற்கான சக்தி கிடைத்தது.

கி.பி. 1941ஆம் ஆண்டில் மலேயாவில் உலகப் போர் மூண்ட சமயம் மலேயத் தீபகற்பத்தின் ஆட்சி அமைப்புச் சிக்கல்கள் எல்லாம் தீர்க்கப்படவில்லை. ஒற்றுமையும் ஒருமையும் தோன்று வதற்கு இன்னும் பல ஆண்டுகள் தேவை எனத் திண்ணமாகத் தெரிந்தது; மலேயாத் தீபகற்பம் நான்கு கூட்டரசுகளாகவும், ஐந்து கூட்டரசு இல்லாத நாடாகவும், மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களாகவும் பிரிந்து இருந்தது. கி.பி. 1896ஆம் ஆண்டில் உருவாக்கிய கூட்டரசை நீக்கி, கூட்டரசுப் பகுதி களுக்கும், கூட்டரசு இல்லாத பகுதிகளுக்கும் ஏறத்தாழ ஒரே

உருவம் கொடுத்து, பிறகு அவர்களுக்குள் நெருங்கிய தொடர்பை உண்டாக்கினல்தான் ஒருமையும், ஒற்றுமையும் தோன்றும் என எல்லோரும் கருதினர்கள். பொதுவாகக் கூட்டரசு இல்லாத நாடுகள் இவ்வாலோசனைகளையெல்லாம் வரவேற்கவில்லை. தங்கள் சுதந்திர உருவை விடாது வைத்திருக்கலாம்; ஆங்கிலேய அதிகாரிகளையும், ஆலோசனையையும் தேவையானபோது பெறலாம் என்ற எண்ணமே அவர்களிடம் இருந்தது. இவ்வாருன நன்மைகளையெல்லாம் விட்டுக் கொடுத்துப் புதுத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற மிகையார்வமும், பரபரப்பும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது இயற்கைக்குப் புறம்பானதன்று. முழுமையாகப் பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சி மலருவதற்குமுன் ஜப்பானியர்கள் கி.பி 1941ஆம் ஆண்டு டிசம்பரில் மலேயாவின் மேல் படையெடுத்தார்கள். ஆகையால் இத்திட்டம் வளருவதற்குக் கி.பி. 1946ஆம் ஆண்டு வரை தடையேற்பட்டது.

கிழக்கு மலேசியாவில் ஆட்சி முறையைச் சார்ந்த மாற்றங்கள்

மலேயத் தீபகற்பத்தில் உள்ள சூழ்நிலையும் கிழக்கு மலேயாச் சூழ்நிலையும் வெவ்வேறு மைய ஆட்சி அமைப்பா, கிளையாட்சியமைப்பா என்ற விவாதம் ஏற்பட வாய்ப்பில்லை. உண்மையான ஆட்சி முறையை எவ்வாறு உருவாக்குவது என்பதே இப்பகுதியில் எழுந்த வினு. போர்னியோ நாடுகள், மலேய் நாடுகள், மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் ஆகியவற்றின் ஆட்சி முறைகளையும், சட்ட முறைகளையும் ஏற்றுக்கொண்டதால் வருங்காலக் கிழக்கு மேற்கு மலேசியக் கூட்டமைப்புக்கு இது அடிப்படையாயிருந்தது. உதாரணமாக, மலேயர்கள் அமைதிக்கால அரச ஊழியர்கள் பணித்துறையிலிருந்து அதிகாரிகளைச் சபா (Sabah) நாடு ஏற்றுக் கொண்டது. கி.பி. 1936ஆம் ஆண்டில் முதல் முறையாக ஆப்பிரிக்காவில் பணிபுரிந்த ஒருவரை ஆளுநராக வாணிகச்சங்கம் நியமித்தது. இப்புதிய ஆளுநரான ஜார்டைன் (Jardine) உள் நாட்டு விவகாரங்களில் தாயகத்துக்குரிய மக்களை மிக அதிகமாக ஈடுபடச் செய்தார். ஆண்டுதோறும் நடைபெறும் தலைமக்கள் மாநாட்டை (Annual Chief Conference) மீண்டும் கூட்டத் தொடங்கினர். கி.பி. 1897ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய இப்பழக்கம் கி.பி. 1917ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுத்தப் பட்டிருந்தது. இதற்குத் தாயகத் தலைமக்கள் ஆலோசனை மன்றம் (Native Chiefs Advisory Council) என்ற பெயரிட்டார். தாயகத்து அரசாங்க அதிகாரிகளுக்கு நிதி பற்றிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது. முதன்முறையாகத் தாயகத்து மன்றங் களுக்கு நிதி பற்றிய பொறுப்பு மலேசியாவில் கொடுக்கப்பட்டது.

சபாவில் சீனர்கள் பரவியிருந்ததால் தாயகத்து அரசாங்க அதிகாரத்தை விரிவுபடுத்தத் தடை ஏற்படும் என ஜார்டைனும் நினைத்தார்.

கி.பி. 1920ஆம் ஆண்டில் சபாவில் குடியேறியிருந்த சீனர் களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. கி.பி. 1927ஆம் ஆண்டிலிருந்து தங்கள் பணத்தையே செலவழித்துக் கொண்டு சீனர்கள் வந்து குடியேறத் தொடங்கினுர்கள்; ஆகையால் உதவி புரிந்து குடியேற்றம் (Assisted immigration) செய்யும் கொள்கை தேவையில்லாததாயிற்று. கி.பி. 1937ஆம் ஆண்டில் சராசரி ஆண்டொன்றுக்கு 8,000 சீனர்கள் வந்து குடியேறுகிறுர்கள் எனத் தெரிந்தது. ஆகையால், முதல் முறையாக இது கட்டுப்படுத்தப் பட்டது. மேலைக்கரைகளில் இரப்பர்த் தோட்டங்கள் பயிரிடப் பட்டதாலும், புகைவண்டிப் போக்குவரத்து அமைத்ததாலும் பொருளாதாரவளர்ச்சி தோன்றியது. மேலும், ஜெஸ்ஸல்டன் (Jesselton), பியோபோர்ட் (Beaufort), வெஸ்டன் (weston) போன்ற பட்டணங்கள் வளரத் தொடங்கின. இரண்டாம் உலகப் போருக்குமுன் ஏற்றுமதிப் பொருள்களில் மிக முக்கிய இடத்தை இரப்பர் பெற்றது. உதாரணமாகக் கி.பி. 1940ஆம் ஆண்டில் இரப்பர் ஏற்றுமதி $ 14 மில்லியனும், மரச்சாமான் ஏற்றுமதி $ 2 மில்லியனுமாக இருந்தன.

கி.பி. 1920ஆம் ஆண்டிலிருந்து சரவாக்கில் வாழ்க்கைத் தொழிலோடு தொடர்புடைய நிருவாக அமைப்பு உருவாக்க முயற்சி யெடுக்கப்பட்டது. இச்சமயத்தில் வெய்நர் புருக்கு (Vyner Brooke) அரசராயிருந்தார். நிருவாகத்தைப் புதுப் பாங்குப் பாதையில் செலுத்தும் நோக்கத்துடன் கிளையாட்சியை வலுப்படுத்தும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதனைச் செயல்படுத்தியதால் தலைமைச் செயலாளர் பதவி ஒன்றுக்குக் கி.பி. 1923ஆம் ஆண்டில் சரவாக்கின் முதல் தலைமை நீதிபதி (Chief Justice) நியமிக்கப்பட்டார். பொதுவாக, அரசாங்கத்திற்கு நெகரி மன்றம் (Council Negeri) ஆலோசனை கூறியது. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், பெருஞ்சாலைகள் முதலியவற்றை அமைக்க முயற்சியெடுத்த போதிலும், இவற்றை அமைக்கச் சரவாக்கில் போதிய செல்வம் இல்லை. தன்னுடைய இயற்கைப் பொருள்களையே சரவாக் நம்பி வாழ்ந்து வந்ததால் அதனிடம் மிகுந்த அளவு செல்வம் இல்லை.

சரவாக்கில் புருக் ஆட்சி நூற்றுண்டு விழாவைக் கொண்டாடும்போது கி.பி. 1941ஆம் ஆண்டில் அந்நாட்டு அரசர்

ஒரு புதிய சட்டதிட்டத்தை அறிவித்தார். தாயகமக்களின் அரசாங்கப் பொறுப்பு அதிகரிக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம். நெகரி மன்றத்தில் (Council Negeri) இது ஒரு முக்கிய மாறுதலைப் புகுத்தியது. இதற்குமுன் சட்டமியற்றும் பொறுப்பு அரசரிடமே இருந்தது. இவருக்கு மன்றம் ஆலோசனை மட்டும் கொடுத்துவந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இம் மன்றம் கூடியது. தற்பொழுதிலிருந்து எல்லாச் சட்டங்களையும் செலவுதிட்டங்களையும் மன்றம் ஒப்புக்கொள்ளவேண்டும்; இனி மேல் ஓராண்டில் இருமுறைகூடும். ஆனால், மன்றத்தின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை; எல்லாத் தாயகத்து மக்களின் பிரதிநிதியாக புதியனவாகத் தோன்றிய மாறுதல்களால் தன்னுட்சி உரிமை (Self-Government) வளரவில்லை. அரசர் புருக்கிற்கு உதவ ஓர் ஆலோசனையாளரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது. மற்ற ஆங்கிலேய நாடுகளில் நடக்கும் நிருவாகத் திற்கும் புருக் ஆட்சிமுறைக்கும் அதிக வித்தியாசம் இல்லாமல் இருக்கப் பார்த்துக்கொள்வது; அயல் நாட்டுக் கொள்கையைக் கண்காணிப்பது ஆகிய இவையே இவ்வாலோசனையாளரின் கடமைகள் ஆகும்; ஆனால், ஜப்பானின் படையெடுப்பால் இப்புதிய முறைகளைத் தொடர்ந்து ஆய்ந்தறிய வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

பொருளாதாரப் புதிர்கள்

இரண்டு உலகப்போர்களின் இடையிலே மலேசியாவின் பொருளாதாரம் உறுதியில்லாத நிலையில் இருந்தது; இதற்குக் காரணம் செழிப்படைவதற்காக மலேசியா சில விளைபொருள்களை நம்பி வாழ்ந்தது. முதல் உலகப்போரின்போது நேச நாடுகள் மிக அதிகமாக வெள்ளீயத்தையும், இரப்பரையும் வாங்கியதால் மலேயாவிற்கு நிறைய வருமானம் கிடைத்தது. இப்பொருள்களை அதிக விலையில் விற்றதால் உற்பத்தியையும் அதிகரிக்க முடிந்தது. அதிகப்பயன் கிடைத்ததால் வெள்ளீயச் சுரங்கத்தை வளர்க்க மூலதனம் இட எல்லோரும் முன்வந்தார்கள். அதிகமான சுரங்கங்கள் தோண்டப்பட்டன; வெள்ளீய உற்பத்தியும் படிப்படி யாகத் தொடர்ந்து அதிகரித்தது.

இவ்வாறே இரப்பரின் உற்பத்தியும் அதிகரித்தது. ஆனால், வெள்ளீயத்தில் கிடைத்ததுபோல இரப்பரில் உடனடியாக மிகுந்த பயன்கிடைக்கவில்லை. வெள்ளீயத்தைச் சுரங்கத்திலிருந்து எளிதில் தோண்டி எடுக்கலாம்; வித்திடும் காலத்திலிருந்து மரத்தைக் குத்திச் சாறு வடியவிடும் காலம் வரை இரப்பர் மூலம் பயன் கிடைப்பதற்கு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. உதாரணமாகக்

கி.பி. 1914ஆம் ஆண்டில் இரப்பரை வித்திட்டால் கி.பி. 1921ஆம் ஆண்டில்தான் பயனை அனுபவிக்கமுடியும். கி.பி. 1910—12ஆம் ஆண்டுகளில் இரப்பரின் விலை திடீரென்று உயர்ந்ததாலும், முதல் உலகப்போரின்போது அதன் தேவை அதிகரித்ததாலும், இரப்பர்த் தோட்டங்கள் அதிகரித்தன. ஆனால், இரப்பர் உற்பத்தி அதிகரித்தவுடன் இரப்பரின் விலை குறையத் தொடங்கியது. கி.பி. 1923ஆம் ஆண்டுவரை இரப்பரின் விலை ஒரு பவுண்டிற்கு (Pound) 85 சென்டுகள் (Cents); கி.பி. 1922ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதுவே ஒரு பவுண்டிற்கு 20 சென்டுகள் என வீழ்ச்சியடைந்தது. இந்த விலை, உற்பத்தி செய்வதற்குப் போடும் மூலதனத்தைவிடக் குறைவாயிருந்தது; ஆகையால் பல இரப்பர்த் தோட்ட முதலாளிகள் ஓட்டாண்டிகளாய் மாறும் நிலைபேற்பட்டது. இதன் முக்கியக்காரணம் அமெரிக்காவில் இரப்பரின் தேவை குறைந்ததே ஆகும். இரண்டாவது காரணம் இரப்பரின் ஆதரவு (Supply) அதன் தேவையைவிட அதிகமாயிருந்தது.

பரந்தகன்ற மந்தமும் சோர்வும் (Great Depression)

கி.பி. 1929—32ஆம் ஆண்டுகளில் உலகப்பொருளாதாரச் சூழ்நிலையில் மந்தமும் சோர்வும் ஏற்பட்ட சமயத்தில் இரப்பரைப் போல வெள்ளீயமும் பாதிக்கப்பட்டது. விலைத்தாழ்வால் இரப்பர் உற்பத்தியாளர்கள் துனபுறத் தொடங்கினர்கள். முதல் உலகப் போருக்குப்பின் வெள்ளீயம், இரப்பரைபபோலப் பாதிக்கப்பட வில்லை; தேவை குறையவில்லை; சுரங்கங்கள் வெற்றிப் பொலிவுடன் இருந்தன. கி.பி. 1926ஆம் ஆண்டில் வெள்ளீயத்தின்விலை ஒரு டனனிற்கு 2414 டாலர்கள். கி.பி. 1929ஆம் ஆண்டு வரை இவ்வாருன சூழ்நிலையே இருந்தது. இதன்பின உலகப் பொருளாதாரச் சூழநிலையில் மநதமும சோர்வும் ஏற்பட்டதால் வெளளீயமும் இரபபரும் பாதிக்கப்பட்டன. சோர்வுநிலையும், திடீர் விலை வீழச்சியும் கி.பி. 1929ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தொடங்கியது; பங்கு மாற்று வாணிகக்களம் (Stock-Market) முறிந்ததே இதற்குக காரணம. உலகம் முழுவதும் திடீர் விலை வழசசியாலும, வேலையில்லாத் திண்டாட்டத்தினலும் பாதிக்கப் பட்டது. வெளளீயத்தின தேவை மிகவும குறைநததால கி.பி. 1931ஆம் ஆண்டில ஒரு டன் வெள்ளீயததின விலை 1,020 டாலர்கள்தான. இரப்பரின தேவை மறைந்தே விட்டது; கி.பி. 1932ஆம் ஆண்டில ஒரு பவுண்டிற்கு 9 செனடுகள்.

இதன் விளைவால் மலேசியச் சுரங்கங்களிலும், தோப்புப் பண்ணைகளிலும் மிகப் பெரிய வேலையின்மைச் சூழ்நிலை உருவா கியது. பல இடங்களில் உற்பத்தி செய்வதால் பயனேதும்

கிடைக்காது எனத் தெரிந்தது. உற்பத்திக்காகச் செலவு செய்யும் செல்வம் விற்பனை விலையைவிட அதிகமாக இருந்தது. ஆகையால் பல இரப்பர்த் தோட்டங்களில் மரத்தைக் குத்திச் சாறுவடிய விடுவது நிறுத்தப்பட்டது. இதனால் அரசாங்க வருவாயும் பாதிக்கப்பட்டது. வெள்ளீயம், இரப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதி யால் கிடைக்கும் வரிகளை நம்பி நிருவாகம் நடந்து வந்தது. ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தவுடன் வருவாயும் வீழ்ந்தது. அரசாங்க மும் சிக்கன வழிகளைக் கையாளத் தொடங்கியது. அரசாங்க ஊழியர்களின் ஊதியம் குறைக்கப்பட்டது. நிலைமுதல் வளர்ச்சிக் கான செலவீடுகள் (Capital expenditure) நிறுத்தப்பட்டன. எல்லாப்படிகளிலும் உள்ள மக்களும் மிகவும் துன்பப்பட்டார்கள்.

கி.பி. 1922ஆம் ஆண்டில் ஸ்டீவென்சன் குழு (Stevenson Committee) கூறிய ஆலோசனைப்படி இரப்பர் உற்பத்தியையும் தரவையும் (Supply) குறைத்து இரப்பர் விலையை அதிகரிக்க மலேயாவும், சிலோனும் ஒப்புக்கொண்டன. ஆனால் இந்தோ னேசியா இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உலக உற்பத்தியில் 70 விழுக்காடு சிலோனிலும், மலேயாவிலும் இருப்பதால் இவ்விரு நாடுகளும் தாங்கள் ஒப்புக்கொண்ட ஆலோசனையைச் செயல்படுத்தின. உற்பத்தியைக் குறைத்ததால் உடனடியாக விலை உயர்ந்தது. ஆனால் விலை உயர்ந்தவுடன் இந்தோனேசியா உற்பத்தியை அதிகரித்தது. ஆகையால் இப்புதிய திட்டத்தால் இந்தோனேசியாவிலிருந்த இரப்பர் முதலாளிகள் அதிகப் பயனை அடைந்தனர். கி.பி. 1922ஆம் ஆண்டிலிருந்து 1928ஆம் ஆண்டுவரை உலக உற்பத்தியில் இந்தோனேசியர்களின் உற்பத்தியின் பங்கு 25 விழுக்காட்டி லிருந்து 45 விழுக்காடாக அதிகரித்தது. மலேயா, சிலோன் ஆகியவற்றின் உற்பத்தி 70 விழுக்காட்டிலிருந்து 52 விழுக்காடாகக் குறைந்தது. இப்புதுத் திட்டத்தால் பயன் கிடைக்கவில்லை எனத் தெரிந்தவுடன் கி.பி. 1928ஆம் ஆண்டில் மலேயா இப்புதுத் திட்டத்தை விட்டுவிட்டது.

கி.பி. 1929ஆம் ஆண்டில் உலகத்தில் பரந்தகன்ற மந்தநிலை யேற்பட்டவுடன் இரப்பர் உற்பத்தி செய்யும் எல்லா நாடுகளும் கூடி ஒரு புதுக் கொள்கையைப் பின்பற்றுவது எனத் தீர்மானித்தன. ஆனால் இவற்றினிடையே நடந்த பேச்சு முடி வில்லாமல் நீடித்துச் சென்றது கி.பி. 1934ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி நான்கு ஆண்டு கள் உற்பத்தியை வரையறுக்க வேண்டும் எனத் தீர்மானித்தன. இரப்பர் பயிரிடும் நிலங்களை அதிகரிக்கக்கூட, ஒவ்வொரு நாடும்

(மலேசியா, சிலோன், இந்தோனேசியா, இந்தோ சீனு, சியாம்) குறிப்பிட்ட பங்கைத்தான் (Fixed quota) ஏற்றுமதி செய்ய வேண்டும். ஒவ்வோர் உற்பத்தியாளரும் ஒரு குறிப்பிட்ட பங்கை ஏற்றுமதி செய்யலாம் என எல்லா அரசாங்கங்களும் அறிவித்தன. மலேசியாவில் இரப்பர்த் தோட்டங்களுக்கு 60 விழுக்காடும், சிறுதிறநில உடைமையாளர்களுக்கு (Small Holders) 40 விழுக்காடும் ஒதுக்கப்பட்டன. இங்ஙனம் உற்பத்தியைக் கட்டுப்படுத்தியதால் விலை உயர்ந்தது. கி.பி. 1935ஆம் ஆண்டில் ஒரு பவுண்டிற்கு 20 சென்டுகளும் கி.பி. 1937ஆம் ஆண்டில் 43 சென்டுகளும் விலையாகத் திட நிலையை அடைந்தது.

இத்தகைய கொள்கையே வெள்ளீயத்திற்கும் பின்பற்றப் பட்டது. கி.பி. 1931ஆம் ஆண்டில் வெள்ளீயத்தை மிக அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளான மலேசியா, பொலிவியா (Bolivia), இந்தோனேசியா, நைஜீரியா ஆகியவை உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என ஒருமனதாகத் தீர்மானித்தன. அச்சமயத்தில் வெள்ளீயத்தின் விலை வீழ்ச்சியடைந்திருந்தது (ஒரு டன் $ 1,020). தொடக்கத்தில் இத்திட்டம் இந்நாடுகளுக்கு வெற்றியைத் தேடித்தரவில்லை; இத்திட்டத்தில் சேர்க்கப்படாத சிறிதளவில் வெள்ளீயம் உற்பத்தி செய்யும் நாடுகள் (உதாரணமாக சியாம்) இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் நாடுகளின் உற்பத்தியை அதிகரித்தன. ஆகையால் இந்நாடுகளை யும் இணங்கவைத்து மொத்த உற்பத்தியில் அவர்கள் ஏற்றுமதி செய்யவேண்டிய பங்கையும் நிர்ணயித்து இத்திட்டத்திற்கு ஏற்பட்ட ஆபத்தை நீக்கினுர்கள். கி.பி. 1935ஆம் ஆண்டில் ஒரு டன்னுக்கு $ 51,815 ஆக உயர்ந்தது. உலகப்போர் எதிர்பாராது எழுச்சிகொள்ளும்வரை வெள்ளீயத்தைப் போதிய நியாயமான விலையில் விற்க முடிந்தது. இத்திட்டத்தின்படி ஆண்டிற்கு 70,000 டன்களிலிருந்து 80,000 டன்கள் வரை மலேயா உற்பத்தி செய்யலாம். இதனுல் வெள்ளீயத்தின் விலை திட நிலையை அடைந்தது.

ஆனுல் இத்திட்டங்களால் உடனடியாக ஏற்படும் சிக்கல் களைத் தீர்க்கத்தான் முடிந்தது. நீண்டகாலச் சிக்கல்களை நீக்க மலேயாவின் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்த வேண்டும். உலகப் போருக்கு முன் இத்தகைய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிக ஊக்கம் அளிக்கவில்லை. தேங்காய் எண்ணெய் (Palm-oil), அன்னுசிப்பழம் ஆகியவற்றின் உற்பத்தி மூலமும் வருவாய் வந்தது. இவ்விரண்டும் மிக அதிகமாக ஜோஹூரில் தான் கிடைத்தன. ஆனுல் மீன் பிடிக்கும் வலையையும், வேளாண்மையையும் தற்கால முறைக்கேற்றவையாக்க முயற்சி

எடுக்கவில்லை. மலேயாவிற்கு மிக இன்றியமையாத உணவுப் பொருளான அரிசி உற்பத்தியைப் பெருக்கி மலேயாவைத் தன் நிறைவுப் (Self Supporting) பாதையில் செலுத்தவும் முயற்சிகள் எடுக்கவில்லை.

சமூக அமைப்பு மாற்றங்களும் சீனர்களும்

தொடக்கத்தில் (பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்) மலேயாவில் குடியேறிய பெரும்பான்மையான சீனர்கள் நிலையாக மலேயாவில் தங்கி வாழவில்லை. தங்கள் கிராமங்களுக்கோ மாகாணங்களுக்கோ இறுதியில் திரும்பிவிடவேண்டும் எனப் பலர் விரும்பினார்கள். ஆகையால் சில சீனர்கள் தங்கள் குடும்பங்களை மலேசியாவிற்கு அழைத்து வந்தார்கள்; மலேசியாவிலிருந்து சீனாவில் வசித்து வந்த தங்கள் குடும்பங்களுக்குப் பணம் அனுப்பினார்கள். ஆகையால் பெரும்பான்மையான சீனர்கள் தாற்காலிகமாகத்தான் குடியேறியிருப்பதாக நினைத்தார்கள். அரசாங்கமும், மலேய் மக்களும் அவ்வாறே நினைத்தார்கள். அரசாங்கம் சீன இனத்தார் வாழ்க்கையில் தலையிடவில்லை. அவர்களுடைய குலத்தலைவர்கள் மூலம்தான் அவர்களுடன் தொடர்புகொண்டது. இக்குலத் தலைவர்களைக் காபிடன் சீனா (Capitons China) என அழைத்தார்கள். சீனர்கள் மற்ற இனத்தார்களோடு கலந்து பழகாமல் தனித்து ஒதுங்கி வாழ்ந்தார்கள். உதாரணமாக ஹோக்கியன்கள் (Hokkiens) ஹக்கா (Hakka) இனத்தார்களோடு பழகவில்லை. (இவை சீன இனப் பிரிவுகள்). மலேய் இனத்தாருடனும், குடியேறிய இந்தியர்களுடனும், ஆங்கிலேய அதிகாரிகளுடனும் தொடர்புகொள்ளவில்லை. மற்ற இனத்தாருடன் ஒன்றுபட்டு இணைந்து வாழ முயற்சி செய்யவில்லை. மதம், சமூகப் பழக்க வழக்கம் ஆகியவற்றில் மலேயர்களுக்கும், சீனர்களுக்கும் அதிக வேறுபாடுகள் இருந்தன.

ஒன்றுபட்டு இணைந்து வாழ்வதற்குப் பதிலாகத் தங்கள் தனிப் பண்பாட்டைப் பாதுகாக்கவே சீனர்கள் முயன்றார்கள். அயல் நாடுகளில் வாழ்ந்தபோதிலும் தங்கள் மொழியையும், மரபையும் உறுதியுடன் பாதுகாத்தார்கள். முதல் உலகப் போர் மூண்ட போது சீனர்கள் நிலையாகக் குடியேறியிருந்தார்கள்; ஆனால் நிருவாகிகள் அவர்கள் தாற்காலிகமாகத்தான் குடியேறியிருக்கிறார்கள் எனக் கருதினார்கள்.

சீனர்களின் இரகசிய மன்றங்கள் (Chinese Secret Societies)

மலேயாக் கடற்கால் குடியேற்றங்களில் முதலில் வந்து குடியேறிய சீனர்கள் சீன இரகசிய மன்றங்களைப் புதியனவாகத் தொடங்கிவைத்தார்கள்; இம்மன்றங்கள் சீனர்களின் வாழ்க்கை முறையிலே முக்கிய இடம் பெற்றிருந்தன. இன்றுகூட இம்மன்றங்கள் சீனர்களின் வாழ்க்கையில் இன்றியமையாதவையாக இருக்கின்றன.

தற்காலத்தில் சீன இரகசிய மன்றங்கள் சட்டத்துக்கு மாறுன, முறைகேடான, குற்றத்தண்டனைக்குரிய மன்றங்களாய்க் கருதப் படுகின்றன. சிங்கப்பூரிலும், மலேய்த் தீபகற்பத்திலுள்ள பல பெரிய பட்டினங்களிலும் மறைமுகமாகப் பதுங்கி வாழும் சமுதாயப் பிரிவினர்களை இம்மன்றங்கள் அடக்கி ஆளுகின்றன. இம்மன்றங்கள் மக்களை அச்சுறுத்தி வன்முறையில் பணம் திரட்டுகின்றன; முரட்டுத்தனமாகத் தாக்குகின்றன; செல்வத்திற்காகக் கொலை செய்கின்றன. இன்று இரகசிய மன்றங்கள் பேரளவில் வேலை செய்கின்றன; கட்டாயப்படுத்தி வியாபாரிகளைத் தம் பாதுகாப்பின்கீழ் வைத்திருக்கின்றன; சூதாட்டத்தையும், விபசாரிகளையும் மருட்டித் தம் அதிகாரத்தின்கீழ் வைத்திருக்கின்றன.

சீன இரகசிய மன்றங்கள் முதன் முதலில் சீனுவில் பதினெட்டாம் நூற்றுண்டின் இடையிலே மன்சு அல்லது சிங் (Ching) பேரரசர்களைப் பதவியிலிருந்து நீக்கி, மிங் (Ming) பேரரசர்களிடம் ஆட்சியை ஒப்புவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டன. இந்த மன்றங்கள் இடைவிடாமல் பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இயங்கின; பத்தொன்பதாவது நூற்றுண்டில் அயல்நாடுகளில் வந்து குடியேறிய சீனர்கள் தங்களுடன் இந்த இரகசிய மன்றங்களையும் பண்பாடுகளையுமே கொண்டுவந்தார்கள்.

மலேயாக் கடற்கால் குடியேற்றங்களிலும், பாவோ (Bavo) பொன் சுரங்கங்களிலும், தீபகற்பத்தின் வெள்ளீயச் சுரங்கங்கள் இருக்கும் இடங்களிலும், முதன் முதலாகத் தோன்றிய சீன இரகசிய மன்றங்கள் சீனுவிலுள்ள சிங் அரசர்களை (Ching dynasty) முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பிறந்த மன்றங்கள் அல்ல. இந்த அரசியல் இலட்சியம் தொடர்ந்து இருந்தபோதிலும், தொடக்கத்தில் மலேயாவில் குடியேறிய சீனர்கள் இம்மன்றங்களைத் தொழிற்சங்கங்களைப் (trade union) போலவும், (மன்றக் குறையீடுகளும் வினைமுறை வழக்காறுகளும் உடைய பழைமை வாய்ந்த) கூட்டுரிமைக்கழக நிறுவனம் போலவும் (Freemasons), ஒருவருக்கொருவர் காப்பீடு செய்துகொள்வதற்

குரிய கழகம் (Mutual Benefit Society) போலவும்தான் இருந்தன. மறைமுகமாக இயங்கிய இம்மன்றங்கள் புதிதாக வந்து குடியேறு பவர்களின் நலத்தைக் கண்காணித்து வந்தன. நடைமுறையில் இருக்கும் அரசியல் சமூக அமைப்பில் அவர்களைச் சேர்த்துக் கொண்டன. புதிதாக வந்த எல்லாச் சீனர்களும் இம்மன்றங்களில் சேரவில்லை; சீனுவின் பல பகுதிகளிலிருந்து இவர்கள் வந் தார்கள். பல்வேறு மொழிகளைப் பேசினுர்கள். பல்வேறு பழக்க வழக்கங்களைப் பின்பற்றினுர்கள். ஆகவே போட்டியிட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் எதிர்த்து மன்றங்களை அமைத்தார்கள்.

குடியேறிய எல்லாச் சீனர்களையும் கட்டாயப்படுத்தி ஏதாவது ஒரு மன்றத்தில் சேரவைத்தார்கள்; தலைவர்களிடம் மிகுந்த அதிகாரங்கள் இருந்தன. மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்கள் தோன்றிய ஆண்டுகளில் இம்மன்றங்கள் அமைதியை நிலைநாட்ட உதவின; ஆகையால் இம்மன்றங்களின் தலைவர்களைச் சீனத் தலை யாரிகளாக (Capitans China) அரசாங்கம் நியமித்தது. கி.பி. 1880ஆம் ஆண்டுவரை இம்மன்றங்கள் மூலம்தான் சீனர்கள் நிருவ கிக்கப்பட்டார்கள். நாட்டின் அரசாங்கச் சட்டங்களைவிட மன்றங் களையே இவற்றின் உறுப்பினர்கள் மதித்தார்கள்; இவற்றிடை நம் பிக்கையும் கொண்டார்கள். படிப்படியாகப் பல்வேறு இரகசிய மன் றங்களின் அதிகாரத்திற்காகப் போட்டியிடத் தொடங்கினுர்கள்; ஆகையால் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்ற முன்னுள் நோக்கம் மறைந்து, தீய நோக்கங்கள் வேரூன்றத் தொடங்கின. சிறப்பாக இரு முக்கியப் பிரிவுகள் இருநதன. (1) ஜீ ஹின் மன்றம் (Ghee Hin), (2) ஹைசன் மன்றம் (Haisan Society) என்பன அவை. ஜீ ஹின் மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும் பான்மையோர் ஹக்கா சீனர்களும் (Hakka) ஆவார்கள். சிங்கப்பூரும், பினுங்கும் செழுமையுடன் தழைத்தோங்கியதால், இந்நாடுகளின் செல்வத்தைச் சட்டப்படியும், முறைகேடான முறையிலும் யார் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவது என இவ்விரு மன்றங்களிடையே சண்டை மூண்டது. கி.பி. 1824ஆம் ஆண்டிலும், கி.பி. 1846ஆம் ஆண்டிலும் இதனுல் சண்டையும் கலகமும் சிங்கப்பூரில் ஏற்பட்டன. கி.பி. 1851ஆம் ஆண்டில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட கத்தோலிக்கச் சீனர்களை இம்மன்றங்கள் கொன்றன; இவர்கள் ஒன்றுசேர்ந்து இம்மன்றங்களில் சேர மறுத்ததே இக்கொள்கைக்குக் காரணம். கி.பி. 1854ஆம் ஆண்டில் இம்மன்றங்களிடையே ஏற்பட்ட சண்டைகளினுல் சிங்கப்பூரில் 400 பேர்கள் இறந்தார்கள். கி.பி. 1857ஆம் ஆண்டில் குசிங்கின் (Kuching) அழிவிற்குக் காரணமாயிருந்தார்கள்; புருக் அரசை அநேகமாகக் கவிழ்த்தேயிருப்பார்கள். கி.பி. 1863ஆம் ஆண்டில்

சிங்கப்பூரில் கலகம் ஒருவாரம் நீடித்தது; கி.பி. 1867ஆம் ஆண்டில் பினங்கில் பத்து நாள்கள் கலகம் ஏற்பட்டது. லாரூட், செலங்கர் ஆகிய இடங்களில் உள்ள வெள்ளீயச் சுரங்கங்களைப் பற்றி இம்மன்றங்களிடையே எதிர்ப்புத் தோன்றியது; இந்த எதிர்ப்பு வலுத்துப் பேரக்கிலும், செலங்கரிலும் உள்நாட்டுப் போராக மாறிப் பல ஆண்டுகள் நீடித்தது.

மலேயாக் கடற்கால் குடியேற்றங்களிலுள்ள இம்மன்றங்களை மேற்பார்வையிடும் நோக்கத்துடன் கி.பி. 1869ஆம் ஆண்டில் இம்மன்றங்களை அரசாங்கம் பதிவு செய்தது. ஆனால் இதனால் இம்மன்றங்களின் தீய நடவடிக்கைகள் குறையவில்லை; ஆகையால் கி.பி. 1889 ஆம் ஆண்டில் இம்மன்றங்கள் சட்டத்துக்குமாறானவை என அரசாங்கம் அறிவித்தது; இதிலிருந்து இம்மன்றங்கள் இரகசியமாக இயங்கிவந்தன. படிப்படியாகக் குற்றவாளிகளும், ஆயுதந்தாங்கிக் கொடுந்தொழில் புரிவோர்களும் இம்மன்றங்களை ஆட்சிபுரியத் தொடங்கினார்கள்.

சீன அரசியல் கட்சிகள்

கி.பி. 1911ஆம் ஆண்டில் சீனாவில் புரட்சி தோன்றியபோது மலேயாவிலுள்ள சீனர்களும் தூண்டப்பட்டார்கள். புரட்சிக்கு முன் சீனாவிற்கு வெளியே டாக்டர் சன்யட்சென் (Dr. Sunyat Sen) புரட்சி இயக்கம் தொடங்கியபோது நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட சீனர்கள்தாம் பண உதவி செய்தார்கள். பணம் சேமிக்கும் நோக்கத்துடன் இக்கட்சியின் கிளைகள் மலேசியாவில் தோன்றின; இறுதியாக இங்ஙனம் சேகரித்த செல்வத்தைப் பயன்படுத்திக் கி. பி. 1911ஆம் ஆண்டுக்குப்பின் கான்டனில் (Canton) சன்யட் சென்னின் ஆட்சி அமைக்கப்பட்டது. மலேயாவிலுள்ள சில சீனர்களே மஞ்சு அரசாங்கத்தை ஆதரித்தார்கள்; பொதுவாக எல்லோரும் கி.பி. 1912ஆம் ஆண்டில் தோன்றிய குயோமின் டாங் கட்சியின் (Kuomintang Party) கோட்பாடுகளை வரவேற்றார்கள். சன்யட்சென்னின் வெற்றியை அயல்நாடுகளில் குடியேறியிருந்த எல்லாச் சீனர்களும் வரவேற்றார்கள்; பெருமை கொண்டார்கள்.

சீனர்கள் ஒருவர்கூடச் சீனக்குடி உரிமையை இழக்கக்கூடாது என்ற கொள்கையையே சீன அரசாங்கம் எல்லாச் சமயங்களிலும் பின்பற்றியது. அயல்நாடுகளில் குடியேறியிருந்தால்கூடச் சீனர்கள் சீனாவின் குடிகளே. குயோமின்டாங் அல்லது தேசியக் கட்சியும் (Nationalist Party) இக்கொள்கையையே பின்பற்றியது. ஆகையால் மலேசியாவில் பிறந்தவர்கள் உட்பட மலேசியாவில் குடியேறிய சீனர்கள் எல்லாரும் சீனக் குடிகள் எனப்பட்டார்கள்.

கி.பி. 1920ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெளிப்படையாகக் குயோமின்டாங் மலேயாவில் பிரசாரம் செய்தது. சீனர்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் குறிக்கோளுடன் சீனப்பள்ளிகள் மூலமும், அரசியல் கட்சிகள் மூலமும் பிரசாரம் செய்யப்பட்டது. ஆகையால் குயோமின்டாங் கட்சி சதிவேலை செய்கிறது என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டுக் கி.பி. 1930ஆம் ஆண்டில் அக்கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டது; சீனக் கல்வி வகுப்புகள் மூடப்பட்டன; சீனுவிலிருந்து வரும் நூல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அரசியல் வாதிகளை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. அவர்கள் மறைமுகமாக இயங்கத் தொடங்கினார்கள்.

ஆனால், கம்யூனிஸ்டுகளும், குயோமின்டாங்கும் சீனுவில் மனக்கசப்பினால் பிரிந்தவுடன் மலேயாவில் வாழ்ந்த சீனர்களும் அரசியல் போட்டியில் இறங்கினார்கள். இவ்விருகட்சிகளும் சீனர்களின் ஆதரவுக்காகப் போட்டியிட்டன. ஆகையால் இவ்விருகட்சிகளும் தாற்காலிகமாக வலிமை குன்றியிருந்தன. சீன அரசியல் கட்சிகள் இரகசியமாகத்தான் இயங்கிவந்தன; சியாங்-கெய்-சேக் தலைமையின்கீழ்க் குயோமின்டாங் நிலையாய் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு அயல்நாட்டு அரசியல் கட்சி களின் கிளைகள் இயங்கக் கூடாது என மலேய் அரசாங்கம் தீர்மானித்தது.

கி.பி. 1930ஆம் ஆண்டில் ஜப்பானியர்களின் படையெடுப் புக்குப்பின் சீனுவில் அச்சம் அதிகரித்தது. ஆகையால், மற்ற நாடுகளின் நட்பும், உதவியும் சீனுவிற்குத் தேவையாயிருந்தன. பிரிட்டனுக்கு எதிராக மலேயாவில் பிரசாரம் செய்ததால் பிரிட்ட னின் உதவி கிடைப்பது அரிது எனச் சீனு புரிந்துகொண்டது. கி.பி. 1937ஆம் ஆண்டில் சீனு—ஜப்பான் போர் மூண்டவுடன், சீனு ஜப்பானை எதிர்ப்பதில் முழுக்கவனம் செலுத்தியதால் மற்றச் செய்திகளைத் தாற்காலிகமாக மறந்தது.

சீன அரசியல் கட்சிகளின் செயல்கள் சுல்தான்களுக்கு அச்ச மூட்டின. ஆகையால் சீனக் கல்வி, குடியேற்றம் முதலியவற்றைப் பற்றிக் கட்டுப்பாடு வந்தது. ஒரு குறிப்பிட்ட அளவு சீனர்கள் தாம் மலேயாக் கடற்கால் குடியேற்றங்களில் வந்து குடியேறலாம் எனக் கி.பி. 1928ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்டது; மலேயா நாடுகளில் சீனர்கள் வந்து குடியேறுவது கிட்டத்தட்ட நிறுத்தப் பட்டது என்றே கூறலாம். உலகத்தில் விலை வீழ்ச்சி உச்சமடைந்த போது கி.பி. 1932ஆம் ஆண்டில் மலேயாவிற்கு வரும் சீனர்களின்

எண்ணிக்கையைப் போல ஒன்பது மடங்கு அதிகமாகச் சீனர்கள் மலேயாவை விட்டு வெளியேறினார்கள் [32,925—282,777]. கி.பி. 1939ஆம் ஆண்டின் இடையிலே மலேயாவிற்கு வந்த சீனர் களில் பெரும்பான்மையோர் மலேயாவில் முன்னரே வாழ்ந்து வந்த சீனர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்; குடும்பங்களுடன் சேர்ந்தவுடன் சீனர்கள் நிலையாக மலேயாவில் வாழ விரும்பினர் கள்; நில உடைமைகளைப் பெற ஆசைப்பட்டார்கள்.

நில ஆசையால் தூண்டப்பட்ட சீனர்கள் பலர் நிலங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கினர்கள். அனுமதியில்லாமலும், உரிமைப் பத்திரமில்லாமலும் சீனர்கள் பல நிலங்களை ஆக்கிரமித்தார்கள். இதைக் கி.பி. 1948ஆம் ஆண்டில்தான் அரசாங்கம் கண்டு பிடித்தது.

சீனர்களின் தேசிய உணர்ச்சி, இரகசிய மன்றங்கள், அரசியல் மன்றங்கள், பன்மொழிக் கல்வித் திட்டம், சட்டப்படியிராத முறை யில் நிலங்களை அபகரித்தல் போன்றவை மலேய் இனத்தாரின் சிறந்த சலுகைகளுக்கு ஆபத்து மூட்டுவனவாயிருந்தன. உடன் படிக்கையின்படி மலேயர்களுக்குச் சிறந்த சலுகைகள் காட்ட வேண்டும். உடன்படிக்கையின்படி இவைகளைப் பாதுகாக்க வேண்டியது பிரிட்டனின் பொறுப்பு ஆகும். தீவிரமாகப் போட்டி யிடும் சூழ்நிலை உருவாகியதால் தங்களை இப்போட்டிக்கு ஏற்றவாறு தயாராகிக் கொள்ளவில்லை எனக் கி.பி. 1930ஆம் ஆண்டில் படித்த மலேயர்கள் உணர்ந்தார்கள். அரசுபுரிபவர்களும் தங்களுடைய சலுகைகளுக்குப் போதிய அளவு பாதுகாப்பு அளிக்கவில்லை என நினைத்தார்கள்.

மலேயத் தேசிய இயக்கங்களும் அரசியல்களும்

அரசியல் செயல்கள் உட்பட, சீன இரகசிய மன்றங்களின் நடவடிக்கைகள் மலேயத் தேசியக் கோட்பாடுகளும், அரசியல் இயக்கங்களும் வளர்ச்சியடையக் காரணமாயிருந்தன.

மலேயத் தேசிய இயக்கத்தைப்பற்றி ஆராய்ந்து பேசும்போது இஸ்லாம் சமயத்தின் பங்கை மறக்கக்கூடாது. இஸ்லாம் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றிய போதுதான் மலேயத் தேசிய இயக்கமும் உண்மையில் தோன்றியது; இச் சூழ்நிலையில்தான் முஸ்தாபா கெமால் அடாடர்க் (Mustaffa Kemal Ataturk, கி.பி. 1880-1938) தலைமையின்கீழ் வாலிபத் துருக்கியர்கள் கட்சி (Young Turks : அரசியல் அமைப்பினைப் பழைய நிலைக்குக் கொணரும்படி கி.பி. 1908ஆம் ஆண்டில் துருக்கிச் சுல்தானைக்

கட்டாயப் படுத்திய கட்சி) வளர்ச்சியடைந்தது. முகம்மது அப்தூ (Mohammad Abduh, 1859-1905) தலைமையில் கெய்ரோவி லிருந்த ஆல்-மனர் குழுவின் இஸ்லாம் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றியது.

ஷேக் முகம்மது அப்தூவின் சீடர்களான ஷேக் முகம்மது தாஹிரும் (Sheikh Mohamed Tahir), ஷேக் அல்-ஆதியும் (Sheikh Al-Hadi) எகிப்து நாட்டிலிருந்து கி.பி. 1904ஆம் ஆண் டில் மலேயாவிற்குத் திரும்பியவுடன் இஸ்லாம் சமயச் சீர்திருத்த இயக்கம் மலேயாவிற்கும் வந்தது. இவர்கள் கி.பி. 1906ஆம் ஆண்டில் அல்-இமாம் (Al-Imam) என்னும் மலேயாவின் முதல் செய்தித்தாளைத் தொடங்கினார்கள்.

கி.பி. 1906ஆம் ஆண்டிலிருந்து 1926ஆம் ஆண்டுவரை சமயக் கருத்துப் படிவங்களே மலேய அரசியல் மனப்பான்மையை ஆக்கிரமித்தன. இஸ்லாம் சமயச் சீர்திருத்த இயக்கம்தான் மலேய் அரசியல் விழிப்பிற்கு முதல் படியாய் அமைந்தது. கௌம் மூதா (Kaum Muda) என இச் சீர்திருத்தவாதிகள் அழைக்கப்பட்டார்கள். புது நாகரிகப் பண்பாடுவாய்ந்த சமுதாயத்தின் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றின் அறைகூவல்களுக்குச் சரியான தீர்வு அளிப்பதற்காக இஸ்லாம் சமயத்தைத் தற்கால வழக்குக் கேற்றதாகப் புதுப்பாணியில் அமைக்கவேண்டும் என இவர்கள் விரும்பினார்கள். நகர்சார்ந்த, நாட்டுப்புறஞ் சாராத இயக்கம் எனக் கௌம் மூதாவைக் கூறலாம். அரபியர்களும், ஜாவிபெகானும் (Jawi Pekan) இதன் பெரும்பான்மையான தலைவர்கள். சமயப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன; நெராசா (Neracha), வர்த மலேயா (Warta-Malaya), அல் இமாம் (Al-Imam) ஆகிய செய்தித் தாள் களில் சமயக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. பொதுவாக இஸ்லாம் சமயத்தைப் பற்றிய கட்டுரைகளை இச் செய்தித்தாள்கள் வெளியிட்ட போதிலும், அரசியல் கட்டுரைகளையும் வெளியிட்டன. செருவன் அஜ்ஹார் (Seruan Azhar), பிலிஹன் திமுர் (Pilihan Timur) முதலிய பருவ இதழ்களில்தாம் (Periodicals) தேசியத் தன்னுட்சிக் கொள்கையைப் பற்றியும், நாட்டு விடுதலையுரிமைக் கோட்பாடு களைப் பற்றியும், அரசியல் செய்திகளைப் பற்றியும் முழுச் சுதந்திரத் துடனும் விவாதிக்கப்பட்டன. மலேய் மாணவர்களும், இந்தோ னேசிய மாணவர்களும் கூடி இப்பருவ இதழ்களை கெய்ரோவில் வெளியிட்டார்கள். அரபு நாடுகளில் வாழ்ந்துவந்த சில மலேய் மாணவர்களுக்கு ஒட்டமன் பேரரசு (Ottoman Empire) வீழ்ச்சிக்குப் பின்பு மலர்ந்து வந்த அராபியத் தேசிய உணர்ச்சிகளை நேரடி யாகக் கவனிக்க வாய்ப்புக் கிடைத்தது. தங்கள் தேசிய உணர்ச்சி

களைக் கிளறிய அரசியல் கருத்துகளை இப்பருவ இதழ்களின் மூலம் இவர்கள் வெளியிட்டதால் மலேய் மக்களையும் இக்கருத்துகள் கவர்ந்தன. மலேயாவும், இந்தோனேசியாவும் கூட்டுச்சேரும் என அரபு நாடுகளில் வாழ்ந்துவந்த மலேய் மாணவர்கள் நம்பினுர்கள்.

கி.பி. 1926ஆம் ஆண்டில் முதல் அரசியல் கட்சியான 'கெசாத்துவன் மெலயு சிங்கபுரா' (Kesatuan Melayu Singapura) அமைக்கப்பட்டது. துங்கு அப்துல் காதிர் (Tengku Abdul Kadir`, எம்பொக் சுலோ (Embok Suloh) ஆகியவர்களின் உதவியுடன் யூனுஸ் பின் அப்துல்லா (Eunos bin Abdullah) இக் கட்சியைத் தொடங்கினுர். இக்கட்சி தோன்றுவதற்கு முன்பே யூனுஸ் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கபட்டார்; இவ்வாறுன மரியாதை அளிக்கப்பட்ட முதல் மலேயர் இவரே. சட்ட சபையில் யூனுஸ் தனித்துப் பேசி வாதித்தால் பயன் இருக்காது; மலேய மக்களின் ஆதரவை இவருக்கு அளித்தால் இவர் முயற்சி வீணுகாது என்ற நோக்கத்துடன்தான் கெசாத்துவன் கட்சி தொடங்கப்பட்டது. இக்கட்சியின் நோக்கம் பின்வருமாறு: (1) மலேயப் பொருளாதார முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல்; (2) மலேய மக்களிடையே அரசியல் ஆட்சிப் பொறுப்பு விழிப்பைத் தட்டியெழுப்புதல்; (3) சமூகப் பொருளாதாரச் செயற்களங்களிலே வளர்ச்சி செய்து கொள்ளுமாறு மலேய் மக்களைத் தூண்டி ஊக்க மளித்தல்; (4) மலேய் மக்களின் கருத்துகளை அரசாங்கத்தின் முன் எடுத்துரைத்தல்; (5) மலேய் மாணவர்களிடையே உயர் படிப்புப் பயிலும் எண்ணத்தை தூண்டி ஊக்கமளித்தல்.

பேரக் அரசர் சூலன் (Raja Chulan of Perak), ரெம்பாவ் உண்டாங் (The Undang of Rembau), பேரக் நாட்டின் இளவரசர் (Raja Muda of Perak) போன்ற ஆங்கிலம் பயின்ற மலேய்த் தலைவர்கள் மலேயக் கூட்டரசு நாடுகளின் மன்றங்களில் வெளிப் படையாக மலேயாவின் விவரங்களை விவாதிக்கத் தொடங்கினுர்கள். ஆங்கிலம் பயின்ற மலேய்த் தலைவர்களுக்குள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் ஒன் (Onn : வருங்காலத்தில் தாத்தோ திரு ஒன்பின் ஜாப்பார்—Dato Sir Onn bin Ja'afar) என அழைக்கப்பட்டார். இவர் ஜோஹூர் நாட்டு மன்றத்தின் உறுப்பினராக நியமிக்கப் பட்டார். தமக்கு முழு உரிமையுடன் பேசவும், செயல்புரியவும் உரிமை அளித்தால்தான் இம் மன்றத்தின் உறுப்பினராகச் சேர்ந்து பணிபுரிய முடியும் என்று நிபந்தனை விதித்தார்; அரசாங்கமும் இதை ஒப்புக்கொண்டதால் இப்புதுப் பொறுப்பை இவர் ஏற்றுக் கொண்டார். தம்முடைய உரிமைகளை இவர் முழுமையாகப் பயன் படுத்தியதால் இவருடைய புகழ் நாடு முழுவதும் பரவியது;

கி.பி. 1946ஆம் ஆண்டில் முக்கியமாக இவருடைய முயற்சியால் தான் ஐக்கிய மலேயத் தேசியக் கட்சி (United Malays National Organisation—UMNO) உருவாக்கப்பட்டது. (இனி இக்கட்சியை, 'உம் நோ' என அழைப்போம்.)

சீன—ஜப்பான் போர், ஜப்பானியப் பொருள்களைச் சீனர்கள் ஊர்க்கட்டுதல் போன்ற செய்திகள் மலேய் மக்களிடையே உருவாகி யிருந்த அரசியல் விழிப்பை விரிவுபடுத்தின. சீனர்களின் பொருளாதார ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு மக்களிடையே அரசியல் விழிப்பு மேலும் அதிகமாக வளரவேண்டும் என மலேய்த் தலைவர்கள் உணர்ந்தார்கள். ஆகையால், கி.பி. 1937ஆம் ஆண் டிற்கும், கி.பி. 1947ஆம் ஆண்டிற்கும் இடையே பல மன்றங்களும், கட்சிகளும் மலேய்த் தீபகற்பத்தில் தோன்றின. கி.பி. 1937ஆம் ஆண்டில் கெசாத்துவன் கட்சியின் கிளைகள் மலாக்காவிலும், பினங்கிலும் அமைக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் பாகாங், செலங்கர், நெகரி செம்பிலன், வெலஸ்லி மாகாணம் ஆகிய இடங்களில் மலேய் மன்றங்கள் தோன்றின. கி.பி. 1938ஆம் ஆண்டில் முன்னேற்றவாதிகளின் கட்சியான 'கெசாத்துவன் மெலயு மூதா' (Kesatuan Melayu Muda—KMM) அமைக்கப் பட்டது.

கி.பி. 1938ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மலேயத் தேசிய வாதிகளின் முயற்சி மலர்ந்தது. கோலாலம்பூரில் மலேயாத் தீபகற்பத்தின் மலேய் மன்றங்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு தேசிய ஒருமை உணர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தது. கி.பி. 1940ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இம்மாநாட்டின் இரண்டாவது கூட்டம் சிங்கப்பூரில் நடந்தது. இரண்டாது உலகப்போர் மூண்டதால் திட்டப்படி மூன்றுவது மாநாடு கூட்ட முடியவில்லை.

இதற்குள் மலேயர்கள் இரண்டு அரசியல் பிரிவினர்களாய் மாறினர்கள். முதல்பிரிவு வலதுசாரிக் கோட்பாடுகளைப் பின் பற்றியது; மேலே கூறிய மாநாடுகளைக் கூட்ட இப்பிரிவினரே அதிக முயற்சியெடுத்தார்கள். இப்பிரிவின் கோட்பாடு 'மலேயா மலேய் மக்களுக்கே' என்பதே; ஆங்கிலம் பயின்ற, சமூக உயர்படிகளில் உள்ளவர்களே இப்பிரிவினர்களுக்கு தலைமை கொடுத்தார்கள். இப்பிரிவை 'மலேய்க் கல்லூரிப் பிரிவு' (Malay College group) என்றும் பலமுறை அழைத்தார்கள். மற்றொரு பிரிவினர்கள் இடதுசாரிக் கொள்கைகளைப் பின் பற்றினர்கள்; இந்தோனேசியத் தேசிய இயக்கத்துடன் நெருங்கிய

தொடர்புகொள்ளவேண்டும் என இவர்கள் விரும்பினார்கள். பொதுவாக, இவர்கள் மலேய் மொழியிலே பயின்றவர்கள்; இவர்களில் பெரும்பான்மையோர் சுல்தான் இத்ரீஸ் பயிற்சிக் கல்லூரியில் (sultan Idris Training College) பயின்றவர்கள்.

இடதுசாரிப் பிரிவினரின் தலைவர் இப்ராஹீம் பின் ஹாஜீ யாகோபு (Ibrahim bin Haji Yaakob) கி.பி. 1911ஆம் ஆண்டில் தெமர்லோ (Temerloh) மாவட்டத்திலுள்ள கெர்டாவுவில் (Kertau) பிறந்தார். கி.பி. 1929ஆம் ஆண்டில் இவர் சுல்தான் இத்ரீஸ் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். இக்கல்லூரியில் படிக்கும் போதுதான் கி.பி. 1926—72ஆம் ஆண்டுகளில் கம்யூனிஸ்டு புரட்சி தோல்வி அடைந்தவுடன் இந்தோனேசியாவிலிருந்து ஓடிவந்த இந்தோனேசிய அரசியல் தலைவர்களுடன் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் நெருங்கிப் பழகிய இந்தோனேசியத் தலைவர்களுக்குள் முக்கியமானவர்கள் தான் மலாக்கா (Tan Malaka), அலிமின் (Alimin), முஸோ (Muso), சூதான் ஜெனநன் (Sutan Djenain) முதலியவர்கள் ஆவார்கள். சூதான் ஜெனநன் மலேயக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சுறுசுறுப்புடன் பணிபுரிந்தவர். சூதான் ஜெனநனைச் சந்தித்த பிறகுதான் அரசியல் செய்திகளிலே இப்ராஹீம் ஊக்கம் செலுத்தத் தொடங்கினார். பொதுவாகக் குடியேற்றக் கொள்கைகளை எதிர்ப்பதே (anti-Colonial) இவரது முக்கிய அரசியல் கோட்பாடு எனக் கூறலாம்.

இப்ராஹீமும், இஷாக் ஹாஜீ முகம்மதும் (Ishak Haji Mohammad) இந்தோனேசியாவை விரும்பும் மற்ற மலேய்ப் பிரிவுகளுடன் இணைந்து கி.பி. 1938ஆம் ஆண்டில் கெசாத்துவன் மெலயு முதா (Kesatuan Melayu Muda) கட்சியைத் தொடங்கினார்கள். பத்திரிகையாளர்களும், செர்டாங்கிலுள்ள (Serdans) வேளாண்மைக் கல்லூரியின் மாணவர்களும், கோலாலம்பூரிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் இக்கட்சியில் சேர்ந்தார்கள். இக்கட்சியின் நோக்கம் (1) மலேயாவின் சுதந்திரத்தைப் பெற வேண்டும்; (2) பரந்தகன்ற இந்தோனேசிய அமைப்பில் சேர வேண்டும் என்பதே. இவர்கள் 'ஒத்துழையாமைக்' கொள்கை மூலம் (Non—Co-operation), முக்கியமாகக் கி.பி. 1939ஆம் ஆண்டில், உலகப்போர் மூண்டவுடன், அரசாங்கத்துடன் போரிட்டார்கள். இக்கட்சியின் கொள்கை தங்களுடைய நலத்தைப் பாதிக்கும் எனப் பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது. ஆகையால், கி.பி. 1940ஆம் ஆண்டில் இச்கட்சியின் தலைவர்கள் சிறைப் படுத்தப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் இப்ராஹீம் யாகோபு, இஷாக் ஹாஜீ முகம்மது, அகமது புஸ்தமம் (Ahmad

Boestamam), சூதான் ஜெனநன் முதலியவர்கள். ஆங்கிலேயர்கள் இப்ராஹீமை இந்தியாவிற்கு அனுப்புவதாகயிருந்தார்கள்; ஆனால், திடீரென்று சிங்கப்பூர் வீழ்ந்தவுடன் அவர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தவில்லை; இப்ராஹீமும், மற்றத்தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

விடுதலையடைந்த பிறகு உடனடியாகத் தம்முடைய கட்சியை இப்ராஹீம் மீண்டும் சீர்ப்படுத்தினார்; தம்முடைய குறிக்கோளைத் தொடர்ந்து பின்பற்றினார். மறைமுகமாகப் பதுங்கிப் பணிபுரியும் மலேயர்களைப் பாதுகாப்பதற்காக இப்ராஹீம் ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்தார். ஆனால், இரகசிய இயக்கங்களினால் விளையும் ஆபத்தை உணர்ந்து இப்ராஹீமின் கட்சியை ஜப்பானியர்கள் தடை செய்தார்கள். ஆனால், இத்தடை மூலம் இக்கட்சியின் தலைவர்களுக்குத் தீங்குவரவில்லை; வெளிப்படையாகச் சட்டப்படி மட்டும் இக்கட்சி மறைந்தது. இக்கட்சி வெளிப்படையாக மறைந்தவுடன் முன்வந்து கியுகன் (Gyugun) என்ற மலேய்ப் படையை ஜப்பானியர்கள் அமைத்தார்கள். இப்படையின் தலைவராக இப்ராஹீம் நியமிக்கப்பட்டார்; மற்ற மலேயர்கள் வாடாநியா (Wataniah) என்ற இரகசிய இயக்கத்தின் மூலம் ஜப்பானியர்களுக்குத் தொந்தரவு கொடுத்தார்கள்.

தடைவிதிக்கப்பட்ட கெசாத்துவன் ரய்யத் கட்சி 'இந்தோனேசிய செமனன்ஜுங்' (Kesatuan Rakyat Indonesia Semenanjung—KRIS) என்ற புதுப் பெயருடன் தோன்றியது. டாக்டர் புர்ஹாநுதீன் (Dr. Burhanuddin), இப்ராஹீம், ஒனன் ஹாஜீ சிராஜ் (Onan Haji Siraj) முதலியவர்கள் இக்கட்சியின் தலைவர்கள். இந்தோனேசிய—மலேயக் கூட்டியல் சுதந்திரத் திட்டம் ஒன்றை இவர்கள் செயல்படுத்த நினைத்தார்கள். சைகானிலுள்ள ஜப்பானியத் தென்கிழக்காசியப் பகுதியின் ஆட்சியாளர்களுடன் (Japanese Regional Command Far South East Asia) இந்தோனேசியாவின் சுதந்திரத்தைப் பற்றி உரையாடல் நடத்துவதற்காக டாக்டர் சுகர்னோ, டாக்டர் ஹட்டாத் தலைமையில் ஓர் இந்தோனேசிய உரிமைப் பேராளர் குழு சிங்கப்பூர் வழியாகச் சென்றது; அப்போது புதுக்கட்சித் (KRIS) தலைவர்களுடன் பேச்சுநடத்துவதற்காக இக்குழுவைச் சார்ந்த சிலர் சிங்கப்பூரிலே தங்கினார்கள். சுகர்னோவும், ஹட்டாவும் சிங்கப்பூரில் தங்காமல் நேராகச் சைகானுக்குச் சென்றார்கள். ஆனால், சைகானிலிருந்து திரும்பிவரும்போது தைப்பிங்கில் (Taiping) மலேயப் புதுக்கட்சித்தலைவர்களை (KRIS) இவர்கள் சந்தித்தார்கள்.

மூன்று நாள்களுக்குப் பிறகு ஜப்பான் சரணடைந்ததால் மலேசியா இந்தோனேசியாவுடன் இணையும் திட்டம் உட்பட இந்தோனேசியா—மலேசியாக் கூட்டியல் திட்டம் நொறுங்கியது. இத்திட்டம் தோல்வியடைந்தபோதிலும், உலகப்போர் முடிந்த பின், புதுக்கட்சியின் (KRIS) வாரிசான மலேய்த் தேசியக்கட்சி (Malay Nationalist Party—MNP) இந்நோக்கத்தைத் தொடர்ந்து பின்பற்றியது. மலேயாவும் இந்தோனேசியாவும் ஒன்றே என்பது தான் தேசியக்கட்சியின் கொள்கையும் நோக்கமும் ஆகும். மொக்டாருதீன் (Moktaruddin) தேசியக் கட்சியின் தலைவரா யிருந்தார்; இவருக்குப்பின் டாக்டர் புர்ஹாநுதீன், இஷாக் ஹாஜீ முகம்மது தலைமை வகித்தார்கள். இதன் இளைஞர்கள் மன்றக் கிளையான 'அங்காதன் பெமுதா இன்ஷாப்'பின் (Angkatan Pemuda Insaf—API) தலைவர் அகமது புஸ்தமம் (Anmadn Boestamam); இதன் மகளிர் கிளையான 'அங்காதன் வனிதா சதா'ரின் (Angkatan Wanita Sadar) தலைவி சாம்சியா சுதான் பாக்கே (Shamsiah Sutan Fakeh). இதன் இளைஞர் மன்றத்திற்குத் தடைவிதித்தபோது, இதற்குப் பதிலாக 'பெம்பெலா தன்ன அயர்' (Pembela Tanah Air—PETA) என்ற புதிய மன்றம் நிறுவப்பட்டது.

கி.பி. 1948ஆம் ஆண்டில் நெருக்கடி நிலை நிபந்தனைகளை (Emergency Regulations) அறிவித்த பின் இஷாக் ஹாஜீ முகம்மது தலைமையின் கீழிருந்த பூசத் தெனக ரய்யத்தின் (Pusat Tenaga Rakya) கெராக்கன் அங்காத ன்முதா (Gerakan Angkatan Muda) உட்பட எல்லா இடதுசாரி மலேய்க் கட்சிகளும் சட்டத்தை மீறிச் செயல்புரிகின்றன எனக் கூறிப் பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்தது. மலேயாத் தீபகற்பத்திலுள்ள எல்லா இடதுசாரி இயக்கங்களும் முறிவடைந்தன. இவ்வாறான சூழ்நிலை உருவாகிய தால் மலேயத் தேசிய இயக்கத்தின் தலைமையைத் தேசியக் கட்சி கைப்பற்றியது. இக் கட்சியில் மிதவாதிகளுக்குத்தான் அதிகச் செல்வாக்கிருந்தது. சட்டமுறைகளைப் பின்பற்றிச் (Constitutional means) சுதந்திரத்தைப் பெறவேண்டும் என இக்கட்சி தீர்மானித் தது. தேசியக் கட்சி, மலேயச் சீனர்கள் மன்றத்துடனும் (Malay-Chinese Association—MCA), மலேயா இந்தியன் காங்கிரசுடனும் (Malay Indian Congress—MIC) ஒத்துழைத்துக் கி.பி. 1957ஆம் ஆண்டில் மலேயா நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றது.

16. ஜப்பானியப் படையெடுப்பும், ஆட்சியும்

முதல் உலகப்போரின் போது மலேயா தாக்கப்படவில்லை; உலகப்போரில் பங்கும் கொள்ளவில்லை. ஆனால் இரண்டாம் உலகப்போரில் மலேயாவின் வரலாறு வேறு திசையில் மாறியது. தனது சீனப் போருக்கு ஆதரவாகத் தென்கிழக்காசியாவின் இயற்கைப் பொருள்களை ஜப்பான் நாடியது. அமெரிக்கக் குடியரசு ஜப்பானின் நோக்கத்தை எதிர்க்கலாம்; ஹொனலூலுவில் (Honolulu) அமெரிக்காவிற்குப் பேர்ல் ஹார்பர் (Pearl Harbour) தளம் இருக்கிறது. பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் அமெரிக்கப் படைத் தளங்கள் இருக்கின்றன. இவை தன் முயற்சிகளுக்குத் தடையா யிருக்கும் என ஜப்பான் ஐயப்பட்டது. அமெரிக்கக் குடியரசு தலை யிடுவதற்கு முன் தென்கிழக்காசியாவை ஆக்கிரமிக்க வேண்டும் என ஜப்பான் விரும்பியது. மேலும் யுரேசியாவில் (Eurasia) ஜப்பான் ஜெர்மனி தனித் தலைமையை அமைக்க வேண்டும் என ஜப்பான் விரும்பியது. இதற்குப் பிரிட்டன் தடையாயிருந்ததால் பிரிட்டனை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என ஜப்பான் நினைத்தது. ஆகையால் கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் நாள் ஜப்பானிய விமானப்படை பேர்ல் ஹார்பரிலிருந்த அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கியது. ஜப்பானின் நோக்கமும் நிறைவேறியது. இதே சமயத்தில் கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பரில் சிங்கப்பூரை ஜப்பானிய விமானப்படை தாக்கியது. கேலன்தான் கரைகளில் ஜப்பானியப் படைகள் இறங்கின. சியாமைக் கட்டாயப்படுத்தி ஓர் ஒப்பந்தத்தை முன்னரே செய்து கொண்டிருந்ததால் சியாம் தன்னைத் தாக்காது என்ற துணிவும் ஜப்பானுக்கிருந்தது. தடை யில்லாமலும் எதிர்ப்பில்லாமலும் மலேய்த் தீபகற்பத்தின் கிழக்குக் கரைகளில் ஜப்பானியப் படைவீரர்களை இறக்க முடிந்தது.

மலேய்த் தீபகற்பத்திலிருந்த படைகளுக்குக் காடுகளில் சண்டையிடுவதற்காகச் சரியாகப் பயிற்சியளிக்கப்படவில்லை. ஜப்பானியர்கள் விமானப்படைகளும், கப்பற்படைகளும், பிரிட்டனின் படைகளைவிட வலுவடைந்திருந்தன. ஆகையால் ஜப்பான் முறையான போர் செய்யவில்லை. ஜப்பானிய விமானங்கள் மலேயாவைப் பாதுகாக்கும் படைகள்மீது குண்டு வீசின; ஜப்பானியர்கள் கடல் வழியாகச் சென்று கடற்கரையில் இறங்கினார்கள்; சிலர் சைக்கிள் மூலம் காடுகளைக் கடந்தார்கள்; ஏற்கெனவே மலேயாவில் வசித்து வந்த ஜப்பானியர்கள் இவர்களுக்கு உதவி புரிந்தார்கள். ஆங்கிலேயப் படைவீரர்களாலும், இந்தியப் படை வீரர்களாலும், ஆஸ்திரேலியப் படைவீரர்களாலும், மலேய்ப் படை வீரர்களாலும் ஜப்பானியத் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை;

ஜப்பானியப் படைவீரர்கள் தங்களைச் சூழ்ந்து கொள்ளாமல் தடுக்க இவர்கள் தெற்கு நோக்கிப் புறமுதுகு காட்டி ஓடினார்கள். கி.பி. 1942ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாள் சிங்கப்பூரிலுள்ள பாது காப்புப் படைவீரர்களுக்கு அணைபோடப்பட்டது; சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றுவது உறுதி எனத் தெரிந்தது.

வட போர்னியோவிலும், சரவாக்கிலும் பாதுகாப்புப் படை வீரர்களைவிட ஜப்பானியப் படை வீரர்களே அதிகமாயிருந்தனர். கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் 10,000 ஜப்பானியப் படைவீரர்கள் சரவாக்கிலுள்ள மிரி (Miri) கடற்கரைப் பகுதிகளில் இறங்கினார்கள். இவர்களை எதிர்க்க ஒரு சிறு இந்தியப் படைதான் குசிங்கில் (Kuching) இருந்தது. பாதுகாக்க முடியாமல் குசிங் சரணடைந்தது.

வட போர்னியோவில் போர் பல நாள்கள் நீடித்தது; கி.பி. 1942ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் நாள் ஜெஸ்ஸல்டன் (Jesselton) கைப்பற்றப்பட்டது. 16ஆம் நாள் சான்டகான் (Sandakan). சரணடைந்தது. சிங்கப்பூர்தான் ஜப்பானியத் தாக்குதலைச் சமாளித்துக் கொண்டிருந்தது. ஆனால் இதுவும் சில நாள்களே நடந்தது.

ஜோஹூர் நீரிணைப்பு (Johore Straits) வழியாக ஜப்பான் சிங்கப்பூரைத் தாக்கியது. இதன்பின் சிங்கப்பூரின் வடக்கில் தீவிரப் போர் நடந்தது. கி.பி. 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் சிங்கப்பூர் சரணடைந்தது; மலேயப் போர் முடிவடைந்தது.

ஜப்பானிய ஆட்சி

மலேசியாவில் ஜப்பான் மூன்றரை ஆண்டுகள் ஆட்சி புரிந்தது. மக்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதாயிருந்தது, இறக்குமதியே இல்லை; நாணயம் பயனற்றதாயிருந்தது; கொடுங்கோன்மை ஆட்சி புரிந்தது.

காடுகளில் ஒளிந்து தாக்கும் பிரிட்டிஷ் படைகளால் ஜப்பானுக்குச் சில சமயங்களில் துன்பம் வந்தது. ஜப்பானுக்கு எதிராக மக்களைத் தூண்டிக் கலகம் செய்யும் நோக்கம் இவர்களுக்குக் கிடையாது. பயிற்சி கொடுத்துப் படை திரட்டி நேசநாடுகளின் படை வந்திறங்கினால், அவர்களுடன் கூடி ஒத்துழைத்து ஜப்பானைத் தாக்கவேண்டுமென்பதே இவர்களின் நோக்கம் ஆகும். இருந்த போதிலும் கலகங்கள் ஏற்படாமலில்லை. கி.பி. 1943ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாள் ஜெஸ்ஸல்டனைக் கைப்பற்றும் நோக்கத்துடன் சீன பாஜாஸ் (Bajaws) படை வீரர்கள் ஆல்பர்ட்

கிவோக் (Albert Kwok) தலைமையில் திடீரென்று ஜெஸ்ஸல்டனைத் தாக்கிச் சரணடைந்தார்கள். கி.பி. 1944ஆம் ஆண்டில் மீண்டும் கலகம் செய்யும் திட்டம் இருந்ததை ஜப்பானியர்கள் முன்னரே அறிந்து கலகத் திட்டமிட்டவர்களைக் கொலை செய்தனர்.

கி.பி. 1945ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் உலகப் போர் முடிந்தது. இச்சமயத்தில் ஜப்பானியர்கள் பர்மாவிலிருந்து விரட்டப்பட்டார்கள். அமெரிக்கர்கள் ஜப்பானையே தாக்கும் சக்தியுடையவர்களாயிருந்தார்கள். பிரிட்டன் மலேசியாவை விடுவிக்கத் திட்டம் தீட்டியது. கி.பி. 1945ஆம் ஆண்டு 10ஆம் நாள் லாபுவனில் (Labuan) ஆஸ்திரேலியப் படைவீரர்கள் இறங்கினார்கள். லாபுவனைத் தளமாக வைத்துத்தான் போர்னியோ நாடுகள் விடுதலை செய்யப்பட்டன. ஜப்பானியர்கள் போர்னியோ நாடுகளில் தீவிரமாகப் போர் புரிந்தார்கள்.

கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஹிரோஷிமா (Hiroshima), நாகசாகி (Nagasaki) மேல் குண்டு வீசியதால் ஜப்பான் சரணடைந்தது. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தது. மலேயத் தீபகற்பத்தில் மேலும் போர் புரிய வேண்டிய அவசியம் இல்லை.

கி.பி. 1945ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆங்கிலேயப் படை வீரர்கள் மலேய்த் தீபகற்பத்தில் வந்திறங்கினார்கள். பிரிட்டிஷ் இராணுவ ஆட்சி (British Military Administration) தொடங்கியது. போர்னியோவிலும் இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. கி.பி. 1946ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இவ்வாட்சி நீடித்தது.

இராணுவ ஆட்சியின் போது குடியேற்ற நாடுகளின் அலுவலகம் (Colonial office) ஒரு புதிய மலேய அரசியல் சட்டதிட்டத்தை உருவாக்கியது. கி.பி. 1946ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

17. மலேயா—போருக்குப்பின்

பர்மாவில் நெடுநாள் நடைபெற்ற சண்டைக்குப் பிறகுதான் ஜப்பானியர்களைத் தோற்கடிக்க முடிந்தது. ஆனால் மலேயாவில் ஜப்பானியர்களோடு போர் புரிய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை போருக்கு முன்னே ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் தோற்கடிக்கப்பட்டது. சபாவில் (Sabah) மட்டும்தான் சிறிதளவு பொருள், உயிர் ஆகியவற்றிற்குச் சேதங்கள் ஏற்பட்டன. மலேயாவிற்குள் ஜப்பானியர்களுடன் போர் மூளவில்லை யென்றாலும்,

நிருவாக அமைப்பு இழிநிலையிலிருந்தது. உதாரணமாக வெள்ளீயச் சுரங்கங்களும், இரப்பர்த் தோட்டங்களும் பாழடையும் நிலையிலிருந்தன. இவை ஜப்பானியர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கத்துடன், ஜப்பானியர்கள் மலேயாவிற்குள் நுழையும் சமயம் பாழடிக்கப்பட்டன. இவைகளைச் சீர்ப்படுத்த ஜப்பானியர்கள் முயற்சியெடுக்கவில்லை. அரிசி இறக்குமதி நிறுத்தப்பட்டதால், பெரும்பான்மையான மக்கள் பட்டினியால் வாடினர். காடுகளில் மறைந்து ஜப்பானியர்களின் எதிரிகளுக்கு உதவி புரிகிறார்கள் எனப் பல மலேய் மக்கள், முக்கியமாகச் சீனர்கள் கொலை செய்யப்பட்டார்கள். மக்களுக்குள் பிளவு செய்து ஆட்சி புரியும் தந்திரத்தை ஜப்பானியர்கள் செயல்படுத்தினார்கள். சீனர்களின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்காது என்பதைப் புரிந்துகொண்டு ஜப்பானியர்கள் சீனர்களைத் துன்புறுத்தினார்கள். மலேயர்களுக்குச் சலுகை கொடுத்தார்கள். இம்முறையின் மூலம் மலேய இனப் பிரிவுகளுக்குள் உருவாகும் ஒற்றுமையைக் குலைக்க ஜப்பானியர்கள் நினைத்தார்கள். ஆனால் கி.பி. 1943ஆம் ஆண்டு அக்டோபரில் கேதா பெர்லிஸ், கேலன்தான், திரன்ஸ்கெநௌ ஆகியவை சியாமிற்கு மீண்டும் கொடுக்கப்பட்டதால் மலேயர்களின் ஆதரவு ஜப்பானியர்களுக்குக் கிடைக்கவில்லை. மலேயர்களின் ஆதரவு கிடைக்கவில்லையென்றாலும், மலேய்ச் சீனர்களிடையே பிளவு ஏற்படுத்தும் நோக்கத்தில் ஜப்பான் தோல்வியடையவில்லை. ஜப்பான் சரணடைந்த பிறகு பிரிட்டிஷ் ஆட்சி மீண்டும் அமைக்கும் வரையில் இவ்விரண்டு இனங்களிடையே சண்டை இருந்து வந்தது. இவ்வாறான சூழ்நிலையில்தான் ஐக்கிய மலேயத் (Malayan Union) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மலேய்ச் சுல்தான்களின் ஆலோசனையைக் கேட்காமலே பிரிட்டன் ஐக்கிய மலேயத் திட்டத்தை உருவாக்கியது. இத்திட்டம் இரண்டாம் உலகப் போருக்கு முன் மலேயாவில் பிரிட்டன் பின்பற்றிய கொள்கைக்கு மாறாயிருந்தது. உலகப் போருக்கு முன் கிளையாட்சியை வலுப்படுத்தும் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

ஐக்கிய மலேயத் திட்டத்தின் நோக்கம் மலேயா நாடுகளை ஒன்றாயிணைப்பது; ஆனால் கூட்டரசு அமைப்பில்லை (Not a Federal Association). அதிகாரங்களை மையப்படுத்திச் சுல்தான்களைத் தங்கள் முழு அதிகாரங்களை இழக்கச் செய்யும் நோக்கமே இத் திட்டத்தில் தெரிந்தது. மத்திய அரசாங்கத்திற்கு அடங்கி எல்லா நாடுகளும் இருக்கவேண்டும். மத்திய சட்டசபைதான் சட்டமியற்ற வேண்டும்; சுல்தான்களின் இசைவு இனித் தேவை

யில்லை; அவர்களுக்கு ஆலோசனை அளிக்கும் உரிமை மட்டுமே அளிக்கப்பட்டது. மலேயக் கூட்டரசு நாடுகளான பேரக், செலங்கர், நெகரிசெம்பிலன், பாகாங் முதலியவைகளும் கூட்டரசில்லாத நாடுளான ஜோஹூர், கேதா, கேலன்தான், தெரன்கானு ஆகியவைகளும் ஐக்கிய மலேயாவுடன் இணைக்கப்பட்டன. குடியேற்ற நாடான சிங்கப்பூர் இணைக்கப்படவில்லை. சீனர்கள் மிக அதிகமாகச் சிங்கப்பூரில் இருந்ததால் சிங்கப்பூர் ஐக்கிய மலேயாவுடன் இணைக்கப்பட்டால் ஐக்கிய மலேயாவிலுள்ள இனங்களுக்குள் சீனர்களே பெரும்பான்மையாக இருப்பார்கள். இதனால் பல சிக்கல்கள் முளைக்கும் எனச் சிங்கப்பூர் இணைக்கப்படவில்லை.

நாடுகளின் உரிமைகள் பறிக்கப்பட்டன. சுல்தான்களின் அதிகாரங்கள் இங்கிலாந்து அரசருக்கு மாற்றப்பட்டன. ஆகையால், காப்பாட்சி நாடுகளும் (Protectorates) குடியேற்ற நாடுகளாக மாறின. மலேயாவில் பிறந்தவர்களெல்லோரும் மலேயாவில் தற்சமயத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளில் பத்து ஆண்டுகள் மலேயாவில் வாழ்ந்தவர்கள் எல்லோரும் ஐக்கிய மலேயாவின் குடிகளாக ஆனார்கள். இதனால் மலேய் இனத்தாரின் சிறந்த அரசியல் உரிமைகள் அழிக்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்நாடுகளை இனிமேலும் 'மலேய் நாடுகளாகக்' கருதவில்லைபோல் தோன்றியது. மூன்று மில்லியன் சீனர்களுக்கும், இந்தியர்களுக்கும் மலேய் இனத்தாரைக் கொள்ளையடிக்க வாய்ப்புத் தரப்பட்டது. இவ்வினத்தார்கள் மலேயாவின்மேல் திடப்பற்றுடையவர்கள் போல் நடந்து கொள்ளவில்லை. ஆகையால் ஐக்கிய மலேயாத் திட்டம் மலேய இனத்தாருக்குத் துன்பங்கள் உருவாக்கின போல் தோற்றமளித்தது. சுல்தான்கள் வற்புறுத்தப்பட்டதால் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

போர்னியோ நாடுகள் குடியேற்ற நாடுகளாக மாறுதல்

கி.பி. 1946ஆம் ஆண்டிலே போர்னியோ நாடுகளாகச் சரவாக்கும், சபாவும் இருந்தன. முற்றிலும் மாற வேண்டிய திட்டம் அறிவிக்கப்பட்டது. உலகப் போரினால் இந்நாடுகளில் அதிக இழப்பு ஏற்பட்டது. புருக் நிருவாகத்திடமும், வட போர்னியோ வாணிபச் சங்கத்திடமும் இவற்றைச் சீர்ப்படுத்த வேண்டிய அளவு செல்வம் இல்லை. கம்யூனியன் இயக்குநர்களும், அரசர் புருக்கும் (Raja Brooke) இந்நாடுகளைப் பிரிட்டன் எடுத்துக்கொண்டு நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடுகளாக (Crown Colonies) மாற்ற வேண்டும் எனப் பிரிட்டனிடம் முறையிட்டார்கள். பிரிட்டனும் இத்திட்டத்தை வரவேற்றுச் செயல்படுத்தியது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்பே சபா (Sabah) ஒரு குடியேற்ற நாடு போலத்தான் ஆளப்பட்டது. ஆகையால் இம்மாறுதலால் சபாவின் நிலை மாறவில்லை; வெளிப்படையாக அரசியல் அமைப்பின் உறுப்புத்தான் மாற்றப்பட்டது. ஆனால் இப் புதிய அமைப்பின் மூலம் சபாவை சீர்ப்படுத்தி முன்னேற்றுவதற் காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடமிருந்து நிதி உதவி கிடைத்தது.

ஆனால், சரவாக்கில் இத்திட்டத்திற்கு எதிர்ப்பிருந்தது. முக்கியமாகப் பெரும்பான்மையான சரவாக் மக்களுக்கு இத் திட்டம் பற்றி விளங்கவில்லை. பல மலேய் இனத்தார்களும், டயக்ஸ் (Dyaks) இனத்தார்களும் அரசாங்க அமைப்பு மாறுவதை வரவேற்கவில்லை. எதிர்ப்பு இருந்த போதிலும் சரவாக் நெகரி மன்றம் (Council Negeri) இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. இம் மன்றத்தின் 342 உறுப்பினர்களில் 18 பேர்கள் இத் திட்டத்தை ஆதரித்தார்கள்; 16 பேர்கள் எதிர்த்தார்கள் (ஐரோப் பியர்கள் அல்லாத உறுப்பினர்கள் 13 பேர்கள் ஆதரித்தார்கள்; 12 பேர்கள் எதிர்த்தார்கள்). இம்மன்றத்தின் தீர்மானத்தை பிரிட்டன் ஏற்றுக்கொண்டது. கி.பி. 1946ஆம் ஆண்டு 1ஆம் நாள் சரவாக் நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாய் (Crown-Colony) மாறியது. இதை எதிர்த்து அரசாங்கப் பணித்துறை களிலிருந்து 300 மலேய் மக்கள் பதவி விலகினார்கள்; இடை விடாமல் தொடர்ந்து பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. ஆளுநர் டன்கன் ஸ்டுவர்டு (Duncan Stewart) கி.பி.1949ஆம் ஆண்டில் ஒரு மலேயப் பள்ளி ஆசிரியரால் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலை மக்களிடையே அதிர்ச்சியளித்ததால் அரசாங்கத்தின் புதிய அமைப்பை எதிர்த்தவர்களின் மனநிலை மாறியது; ஊர்வலங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. 'இத் திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்த அந்தோனி புருக்கூடத் (Antony Brooke) தம்முடைய ஆதரவாளர்களை இப்புதிய அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ளும் படிக் கூறினர் கி.பி. 1951ஆம் ஆண்டில் சரவாக்கைத் தாம் ஆட்சி புரிய வேண்டும் என்று அது வரை கேட்டுவந்த உரிமையையும் விட்டுக் கொடுத்தார். ஆகையால் எதிர்ப்பு நீங்கியது; புதிய அரசியல் அமைப்பு இறுதியில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

ஐக்கிய மலாயாவின் எதிர்ப்புகள்

ஐக்கிய மலேயாத் திட்டத்தை மலேயர்களும், பல ஆங்கிலேய அதிகாரிகளும் எதிர்த்தார்கள். இதை எதிர்த்து ஐக்கிய மலேய்த்

தேசியக்கட்சியை(United Malays National Organisation-UMNO) கி.பி. 1946ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் தாட்டோ ஒன் பின் ஜாப்பர் (Dato Onn bin Ja'afar) அமைத்தார். சர் எட்வர்டு கிரான்டு (Sir Edward Grant) ஐக்கிய மலேய நாட்டின் முதல் ஆளுநராகப் பதவியேற்ற போது மலேய் மக்கள் ஊர்க் கட்டுச் (boycott) செய்தார்கள். முதல் முறையாக எல்லா மலேய் மக்களும் ஒன்று கூடித் தங்கள் சலுகைகளுக்காகவும் பாதுகாப்புக்காகவும் செயல்படத் தொடங்கினர்கள். நாடு முழுவதும் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன; குவாலாகஸ்கசாரில் நடந்த மிகப் பெரிய பொதுக் கூட்டத்தில் சுல்தான்களும் பங்கு கொண்டார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலும் இத்திட்டம் தீவிரமாக எதிர்க்கப்பட்டது. ஆகையால், தங்கள் தவற்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது.

இத் திட்டத்தை மீண்டும் ஆராய்வதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டத் தீர்மானம் எடுக்கப்பட்டது. செயற்குழு ஒன்றமைக்கப் பட்டது. சுல்தான்களும் ஐக்கிய மலேய்த் தேசியக் கட்சியின் பிரதிநிதிகளும் இக்குழுவின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டார்கள். இக்குழுவின் அறிக்கையே மலேயக் கூட்டரசு உடன்படிக்கையாக (Federation of Malaya Agreement) கி.பி. 1948 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது; இதுவே இன்றைய மலேய அரசியல் சட்டத்தின்படிப் பிறப்பிடம் ஆகும்.

புது அரசியல் சட்ட திட்டம்

ஐக்கிய மலேயாத் திட்டத்திற்கும் கி.பி. 1948ஆம் ஆண்டின் புதிய திட்டத்திற்குமுள்ள முக்கிய வேறுபாடு என்னவென்றால், மலேயத் தீபகற்பத்தில் அரசர்களும் சில அதிகாரங்களை விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து அவ்வதிகாரங்களைச் செலுத்தலாம். ஆனல் மலேயத் தீபகற்பத்திலுள்ள 9 நாடுகளும் இரு மலாக்கா தீரிணைப்புக் குடியேற்றங்களும் (சிங்கப்பூரைத் தவிர) ஒன்று கூடி ஒரே மத்திய அரசாங்கத்தின்கீழ் ஆட்சி புரிய வேண்டும். ஆகையால் உலகப்போருக்கும் முன்பிருந்த ஒற்றுமையின்மை ஒழிக்கப் பட்டது. மலேய இனத்தாருக்குத் தனிச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். எல்லா இனத்தாருக்கும் குடிஉரிமை அளிக்கப்பட்டது. ஆனல் மலேயாவிலே 15 ஆண்டுகளாயினும் வாழ்ந்திருக்க வேண்டும். மேலும் மலேயாவிலே நிலையாகத் தங்கி வாழ்வதாகவும் வாக்குறுதி எழுத்து மூலம் கொடுக்க வேண்டும்; மலேய் அல்லது ஆங்கில மொழி பேசத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் இறுதியாகப் பன்னுட்சி உரிமை கிடைக்கும் வழியில் இனி

அரசாங்கம் செல்ல வேண்டும். இதுதான் இப்புதிய அரசியல் சட்டத்தின் மிக முக்கிய அம்சமாகும்.

கி.பி. 1946ஆம் ஆண்டில் மலேயத் திட்டம் மலேய மக்களின் தேசிய உணர்ச்சியைக் கிளறியது. கி.பி. 1945ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கு வரவேற்புக் கிடைத்த போதிலும் அவர்கள் உலகப் போரின்போது வாக்குறுதியளித்தது போல் பாதுகாப்பு அளிக்காததால் அவர்களின் நன்மதிப்பு மலேயர்களிடையே குறைந்தது. கி.பி. 1946ஆம் ஆண்டில் அவர்களுடைய மதிப்பையும், அவர்கள் மேலிருந்த நம்பிக்கையையும், மேலும் அதிகமாகக் குறைத்தது; ஆங்கிலேயர்களுக்கு மலேய் மக்களின்மேல் இருந்த ஆர்வமும் ஊக்கமும் குறைந்து விட்டனவோ என மலேய் மக்கள் ஐயப்பட்டார்கள். தாங்களே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்; பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற விழிப்புணர்ச்சி மலேய் மக்களிடையே எழுந்தது. மலேய் மக்களின் உரிமைகளுக்குக் கி.பி. 1946ஆம் ஆண்டுத் திட்டத்தின் மூலம் ஆபத்து வந்ததால் மலேய் மக்களிடையே அரசியல் உணர்ச்சிகள் கொந்தளிக்கத் தொடங்கின; மலேய் மக்கள் அரசியலிலே தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார்கள். கி.பி. 1946ஆம் ஆண்டுக்கு முன் மலேயத் தேசியவாதிகள் இருந்தார்கள்; ஆனால் அவர்கள் இந்தோனேசியாவிலிருந்த இடதுசாரிக் கொள்கையுடையவர்களின் ஆதரவைத் தேடியதால் மலேய ஆளும் கட்சியினர் இவர்களைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், கி.பி. 1946ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐக்கிய மலேய்த்தேசியக் கட்சி (UMNO) தொடங்கியதை அதே ஆளும் கட்சியினர் பின்பற்றத் தொடங்கினர். தேச மக்கள் எல்லோரும் முதன் முறையாக அரசியலில் ஈடுபடத் தொடங்கினர்கள். தேசிய உணர்ச்சியைத் தூண்டிக் கிளறியதால், எண்ணிச் செயல்படாமலே ஐக்கிய மலேயத் திட்டம் மலேயச் சுதந்திரத்தின் முதல்படியாக அமைந்தது. இதை ஒரு முக்கிய மாறுதல் எனக் கூறவேண்டும். உலகப்போருக்கு முன் மலேய்த் தேசிய உணர்ச்சி பெரும்பாலும் இந்தோனேசியர்களால் தூண்டப்பட்டதே. மேலை நாடுகளை எதிர்த்த இஸ்லாம் சமயத்தால் இது அதிகரிக்கப்பட்டது. இந்தோனேசியாவுடன் மலேயா இணைய வேண்டும் என்று நினைத்தவர்களின் குறைந்த அளவிலிருந்தே மலேய நுண்ணறிவுள்ளவர்களுக்குத்தான் இது ஆர்வ மூட்டியது. கி.பி. 1946ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகள் முதல் தடவையாக மலேயாவைப்பற்றி எல்லோரையும் நினைக்கத் தூண்டின. எல்லா இனத்தவர்களும், பிரிவினர்களும் ஒன்றுசேர வழிகாட்டியாய் நின்றன.

கி.பி. 1948ஆம் ஆண்டு மலேய்க் கூட்டரசு உடன்படிக்கையின்படி உறுப்பினர்கள் மிகுதிப்படுத்தப்பட்ட சட்டசபை (Legislative Council) அமைக்கப்பட வேண்டும்; பெரும்பான்மையோர் பணித்துறையைச் சாராத உறுப்பினர்களாக (Unofficial members) இருக்க வேண்டும். கூட்டரசு செயலாட்சி மன்றத்தில் (Federal Executive council) பணித்துறையைச் சாராத ஏழு உறுப்பினர்கள் இருக்க வேண்டும். பணித்துறையைச் சாராத உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமனஞ் செய்யப்படுவார்கள். கி.பி. 1951ஆம் ஆண்டில் மன்றத்தில் உறுப்பினர் முறை (Member System) அறிமுகப்படுத்தப்பட்டது. மன்றத்தின் பணித்துறையைச் சாராத உறுப்பினர்களைச் சில துறைகளின் சார்புரிமைப் பேச்சாளர்களாக (Spokes men) நியமிப்பதுதான் இதன் நோக்கம். அவர்கள் செயல்முறையில் அமைச்சர்கள் போல இயங்கினார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்படாததால் மக்களுக்குப் பதில் கூற அவர்கள் கடமைப்படவில்லை. நியமனம் செய்யப்பட்டதால் உயர் தனிப் பேராளருக்குத்தான் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்.

மலேயாவில் நடந்த முதல் முக்கியத் தேர்தல் கி.பி. 1951ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நடந்த நகராட்சித் தேர்தலே (Municipal Elections) ஆகும். இத் தேர்தலின் போதுதான் முதன் முறையாக (மலேய்ச் சீனர்கள் அரசியல் கட்சிகள் இணைந்த) 'கூட்டணி' (Alliance) தோன்றியது. சில ஆண்டுகளுக்குப் பின் மலேயாவிற்குச் சுதந்திரம் வாங்கி வந்த பெருமை இக் கட்சிக்குக் கிடைத்தது. இக் கட்சியே தேர்தலில் வெற்றியடைந்தது. இதை எதிர்த்த மலேயாவின் விடுதலைக் கட்சி (Independence of Malaya party) தோல்வியடைந்தது. விடுதலைக்கட்சியின் தலைவர் தாட்டோ ஒன் (Dato onn) ஆவார்.

ஐக்கிய மலேய்த் தேசியக் கட்சியை (UMNO) அமைத்த தாட்டோ ஒன் கி.பி. 1951ஆம் ஆண்டில் இதை உண்மையான தேசியக் கட்சியாய் மாற்றும் நோக்கத்துடன், எல்லா இனத்தவர்களுக்கும் இக்கட்சியின் உறுப்பினர்களாகச் சேரும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்ற ஆலோசனையைக் கூறினார், இதைக்கட்சி ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஆகையால் கி.பி. 1951ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தாட்டோ ஒன் கட்சியிலிருந்து வெளியேறினார். தாட்டோ ஒன்னிற்குப்பின் துங்கு அப்துல் ரஹ்மான் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கேதாச் சுல்தானின் சகோதரர்; அச்சமயத்தில் வழக்குரைஞராகப் பணி புரிந்து வந்தார். தம்முடைய கட்சியில் எல்லா இனத்தாரையும் அனு

மதிக்க முடியாததால், மற்ற இனத்தாருடன் அரசியல் கூட்டணி மூலம் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும் என இவர் விரும்பினர். இதனுல் ஐக்கிய மலேய்த் தேசியக் கட்சியும் (UMNO), கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் நோக்கத்துடன் கி.பி. 1949ஆம் ஆண்டில் தொடங்கிய மலேயன் சீனர்கள் சங்கமும் (Malayan chinese Association) கூட்டணி அமைத்தன. பிறகு மலேயன் இந்தியன் காங்கிரஸ் (Malayan Indian Congress MIC) இக் கூட்டணியுடன் இணைந்தது. பின் இம் மூன்று கட்சிகளும் இணைந்தன; இதற்குக் 'கூட்டணிக் கட்சி' (Alliance Party) எனப் பெயரிடப்பட்டது. இக்கட்சியே கி.பி. 1955, 1959 ஆகிய ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களில் வெற்றியடைந்தது.

18. நெருக்கடி நிலைப் பிரகடனம்

நெருக்கடி நிலையினுல் மலேயாவின் சுதந்திரம் தாமதமாக மலர்ந்தது; மற்றும் வேறு சில கோணங்களிலிருந்து பார்த்தால் இதனுல் சுதந்திரம் விரைவாக வந்தது என்றும் கூறலாம்.

உலகத்திலுள்ள நாடுகளில் மலேயாவைப் போல ஒரு சில நாடுகளே கம்யூனிஸ்டுகளின் ஆட்சியைக் கைப்பற்றும் வன்முறை முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, இறுதியில் முறியடித்தன. கி.பி. 1945ஆம் ஆண்டிலிருந்து பல நாடுகளில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர்; ஆனுல் கட்டுப்பாடில்லாத சுதந்திரத் தேர்தல் முறையின் மூலம் ஒரு நாட்டிலும் ஆட்சியைக் கைப்பற்றவில்லை.

நெருக்கடி நிலை எவ்வாறு உருவாகியது?

கி.பி. 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் கம்யூனிஸ்டுப் படை வீரர்கள் மலேய அரசாங்கத்திற்கெதிராகக் கலகம் செய்தார்கள். ஜப்பானியர்கள் மலேயாவில் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே இவ்வகையான படைக் கிளர்ச்சி செய்ய முன்னேற்பாடு செய்து வந்தார்கள். கி.பி. 1920ஆம் ஆண்டில் கம்யூனிஸம் மலேயாவில் நுழைந்தது. மலேயாவிலிருந்த சீனக் குயோமின்டாங் கட்சியின் கிளைகள் இதற்கு ஆதரவு அளித்தன. குயோமின்டாங்கின் ஆதரவிருந்ததால் கம்யூனிஸ்டுகள் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பள்ளிகளிலும், தொழிற்சங்கங்களிலும் செல்வாக்குப்பெற்றனர். சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மேலாதிக்க உரிமையின் கீழிருந்த நான்யாங் பொதுத் தொழிலாளர் ங்கம் (Nanyang General Labour Union) ஒன்றைக் கி.பி.

1926ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் அமைத்தார்கள். மலேயாவிலுள்ள குயோமின்டாங் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டதால் கம்யூனிஸ்டு களால் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆகையால், தென்கிழக்காசியாவில் தங்களுடைய கட்சியை அமைக்கக் கம்யூனிஸ்டுகள் தீர்மானித்தார்கள். இதன் எதிரொலிதான் நான்யாங் கம்யூனிஸ்டுக் கட்சி (Nanyang Communist Party); தென்கிழக்கு ஆசியக் கம்யூனிஸ்டு நடவடிக்கைகளை இக்கட்சி கண்காணித்தது.

இக்கட்சிக்குச் சிறிய வெற்றிதான் கிடைத்தது. ஆகையால் கி.பி. 1937ஆம் ஆண்டில் அகில உலகக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு மலேயக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சிங்கப்பூரில் அமைக்கத் தீர்மானித்தது. கி.பி. 1930ஆம் ஆண்டிலிருந்த தொழிற்சங்கங் களிலும், இளைஞர் சங்கங்களிலும் மறைமுகமாக மெல்லமெல்லக் கம்யூனிஸ்டுகள் உட்புகுந்தார்கள். கி.பி. 1936-1937ஆம் ஆண்டு களில் அதிகவளவில் வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன, பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதனால் கம்யூனிஸ்டு களின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. மீண்டும் ஜப்பானி யர்கள் மேலாதிக்கத்தின்போது ஜப்பானியர்களுக்கு எதிராக உணர்ச்சிகளைத் தூண்டியபோதுதான் மீண்டும் கம்யூனிஸ்டு களுக்குச் சீனர்களின் பேராதரவு கிடைத்தது. ஜப்பானியர் களுக்கெதிராக எதிர்த்த மலேய மன்றங்களுக்குள் கம்யூனிஸ்டுக் கட்சிதான் மிகத் திறமையுடன் ஜப்பானியர்களை எதிர்த்தது. பிரிட்டிஷ் அரசாங்கமும் ஜப்பானியர்களை எதிர்க்க மலேயக் கம்யூனிஸ்டுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. 136ஆவது ஆங்கிலேயப் படை அதிகாரிகள் (British Officers of Force 136) கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து ஜப்பானியர்களுக் கெதிராகச் சதி செய்தனர்.

தங்களுக்கு ஆயுதங்கள் தேவையென்பதால் மலேயக் கம்யூனிஸ்டுகளும் ஆங்கிலேயப் படைகளுடன் இணைந்து ஜப்பானுக்கு எதிராகச் சதி செய்தார்கள். உலகப் போருக்குப் பின் மலேயாவைப் பிரிட்டனிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்பதே இவர்களின் குறிக்கோள்; 1943 ஆம் ஆண்டில் இத்திட்டம் இடப் பட்டது. ஜப்பான் தோற்றவுடன் பிரிட்டனுடன் போர் புரிவதற்கு ஆயுதங்கள் இரகசியமாகத் திரட்டப்பட்டன.

உலகப்போர் முடியும்போது மலேயக் கம்யூனிஸ்டுகளிடம் எட்டுப்படை வகுப்பணிகளிருந்தன; ஒவ்வொரு படை வகுப் பணியிலும் ஆயிரம் மலேய்ப் போர் வீரர்களிருந்தார்கள்.

உலகப் போர் முடிந்த பிறகு மலேயக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தடை விதிக்கப்படவில்லை; எல்லா முதன்மையான மாகாணங் களிலும் இக்கட்சியின் கிளைகள் இருந்தன. அரசாங்கத்திற்கெதி ராகக் கிளர்ச்சி செய்ய அதிக வாய்ப்புகள் இருந்தன. உணவுப் பொருள்கள், சிறப்பாக அரிசி முதலியன கிடைப்பது அரிதா யிருந்தது; பொருள்களின் விலை உயர்ந்திருந்தது. பொதுவாகச் சூழ்நிலை மோசமாயிருந்தது. தொழிலாளர் சங்கங்கள் கம்யூனிஸ்டு களின் மேலாதிக்கத்தின் கீழ் வந்தன. பொருளாதார அமைப்பைச் சின்னாபின்னமாக்கும் குறிக்கோளுடன் கி.பி. 1946ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. கி.பி. 1947ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள் பெருகின; பொதுவாகப் பண்ணைகளிலும், தோட்டங்களிலும் ஏறத்தாழ 300 முக்கியமான வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. ஆகையால், மலேயாவைச் சீர்ப்படுத்துவது மிகக் கடினமாயிருந்தது.

உருசியர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த அகில உலகக் குடியாட்சிக் கொள்கையுடைய இளைஞர் கூட்டணி (World Federation of Democratic Youth) உதவியுடன் கி.பி. 1948ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கல்கத்தாவில் தென்கிழக்காசிய இளைஞர் மாநாடு நடந்தது. தென்கிழக்காசிய நாடுகள் பிரதிநிதிகளை அனுப்பின; மலேயக் கம்யூனிஸ்டுக் கட்சியும் இரு பிரதிநிதிகளை அனுப்பியது. இம்மாநாடு கலைந்த சில மாதங்களுக்குப்பின் பர்மா, இந்தோனேசியா, இந்தோ-சீனு, மலேயா முதலிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் கிளர்ச்சிகள் எழுந்தன. கல்கத்தா மாநாட்டின்போது இவ்வாறுன கலகம் செய்யும் யோசனை உருசி யர்கள் கொடுத்திருப்பார்களோ என ஐயம் ஏற்படுகிறது. ஆயுதம் பூண்டு கிளர்ச்சி செய்யவேண்டும் என்ற நோக்கம் இம் மாநாட்டில் கூறப்பட்டது என்பதில் ஐயம் இல்லை. கி.பி. 1948ஆம் ஆண்டு மார்ச்சு, மே மாதங்களில் நடந்த கூட்டங்களில் மலேயக் கம்யூனிஸ்டுக் கட்சி கலகம் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தது.

தொடக்கத்தில், சட்டம் மீறி நடக்கும் செயல்களுக்குக் கம்யூனிஸ்டுகள்தாம் காரணம் என அரசாங்கம் நினைக்கத் தயங்கியது. ஆனுல் சிங்கப்பூரில் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் நடந்த வேலை நிறுத்தம் மலேயக் கூட்டரசுக்கும் பரவியது. ஆகையால், கயூனிஸ்டு தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குத் தடைவரம்பு இடப்பட்டது. கி.பி. 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 67 பேர் கொலை செய்யப்பட்டார்கள். இச்சூழ்நிலையில் கி.பி.

1948ஆம் ஆண்டு ஆகஸ்டு அல்லது செப்டம்பரில் கம்யூனிஸ்டுகள் வெளிப்படையாகக் கலகம் செய்யத் தீர்மானித்தார்கள். கி.பி. 1948ஆம் ஆண்டு பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் நாடு முழுவதும் பரவின; மூன்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் பேரக்கிலுள்ள சுங்கை சிபுட்டுக்கு (Sungei Siput) அருகே கொலை செய்யப்பட்டார்கள். ஆகையால், பேரக்கில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது; மற்ற இடங்களிலும் கொலைகள் நடந்ததால் கூட்டரசு முழுவதும் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

நெருக்கடி நிலைப் பிரகடனம் காவலர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளித்தது. பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனச் சந்தேகித்தவர்களையும் பயங்கரவாதிகளுக்கு உதவி புரிகிறார்கள் எனச் சந்தேகித்தவர்களையும் அரசாங்கம் காவலில் வைக்க உரிமை அளித்தது. அமைதிக் காலத்தில் இவ்வகையான அதிகாரங்கள்காவல் துறைக்குக் கிடையா; வழக்கு விசாரணையில்லாமல் யாரும் காவலில் வைக்கப்படக்கூடாது; ஆனால், நெருக்கடி நிலையில் இந்த அதிகார உரிமை அளிக்கப்பட்டது.

தொடக்கத்தில் நிலவிய சூழ்நிலை கம்யூனிஸ்டுகளுக்குச் சாதகமாயிருந்தது. பொருளாதாரத்தைக் குழப்பம் செய்து தகர்த்தெறியும் குறிக்கோளுடன் கம்யூனிஸ்டுகள் இரப்பர்த் தோட்டங்களையும், வெள்ளீயச் சுரங்கங்களையும் தாக்கினார்கள். உற்பத்தியைத் தடுக்கவேண்டுமென்பது இவர்களின் நோக்கம். மேலும், கி.பி. 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் மலேயத் தீபகற்பத்தில் மொத்தம் எட்டுப் போர் அணிப் பிரிவுகள்தாம் இருந்தன. இச்சிறு படையால் பயங்கரவாதிகளின் செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகையால், சிறப்புமுறைக் காவல்துறையினர் (Special Constables) அதிகரிக்கப்பட்டார்கள்; கி.பி. 1948ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24,000 சிறப்புமுறைக் காவலர்கள் இருந்தார்கள். ஏறத்தாழ ஓர் ஆண்டு, அரசாங்கம் பாதுகாப்புத் திட்டத்தைத்தான் பின்பற்றியது; கம்யூனிஸ்டுகள் நாட்டின் ஒரு பகுதியைக்கூடக் கைப்பற்றக்கூடாது; இரப்பர், வெள்ளீயம் ஆகியவற்றின் உற்பத்தி நிறுத்தப்படக்கூடாது என்ற குறிக்கோளுடன் தான் அரசாங்கம் பாதுகாப்புத் திட்டத்தைச் (Policy of Defence) செயல்படுத்தியது.

மலேய அரசாங்கம் கம்யூனிஸ்டுகளுடன் நடத்திய போர் முழு வளர்ச்சிபெற்ற போரில்லை; தொடக்கத்தில் பகைவர்களைக் கண்டு

பிடிப்பது கடினமாயிருந்தது; எவன் பகைவன் என்றுகூடப் புரிய வில்லை. உரிமையின்றிப் பொது நிலத்தில் தங்குபவர்களை (squatters) அச்சுறுத்திக் கம்யூனிஸ்டுகள் அவர்களது உதவியைத் தேடினார்கள். இங்ஙனம் உரிமையின்றித் தங்குபவர்கள் நகரத் திற்கும், கிராமத்திற்கும் வெளியே காடுகளுக்கு அருகே வாழ்ந்து வந்தார்கள். கி.பி. 1945ஆம் ஆண்டில் ஏறத்தாழ 400,000 பேர்கள் இத்தகைய பொது நிலங்களில் உரிமையின்றித் தங்கி யிருந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் சீனர்கள்.

கம்யூனிஸ்டுகளின் சிக்கலைத் தீர்ப்பதற்காகக் கி.பி. 1949ஆம் ஆண்டில் துணை நிலைப்படை முதல்வர் திரு எரால்டு பிரிக்ஸ் (Lieutenant-General Harold Briggs) செயற்குழு இயக்குநராக (Director of Operations) நியமிக்கப்பட்டார். பிரிக்ஸ் திட்டத்தை (Briggs Plan) இன்றுகூட மலேயர்கள் நினைவு வைத்திருக் கிறார்கள். இத் திட்டத்தின்கீழ்ப் புது நாட்டுப்புறப் பகுதிகள் அமைக்கப்பட்டு, அங்கே உரிமையின்றிப் பொது நிலத்தில் தங்கி யிருந்தவர்கள் தங்கி வாழ வசதிகள் செய்துதரப்பட்டன. நீண்ட காலத்திற்குப் பின்புதான் இத்திட்டத்தின் குறிக்கோள் நிறை வடைந்தது. 50,000 மக்களுக்கு முதல் முறையாக இத்திட்டத்தின் மூலம் புதுவாழ்வு அளிக்கப்பட்டது; இதனால் ஓரளவு நகர வாழ்க்கை (semi-urban) இவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள்கள் இரண்டு வகையானவை: (1) அச்சத்தால் தூண்டப்பட்டுப் பயங்கரவாதிகளுக்கு உதவி புரிந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துப் பயங்கரவாதிகளின் பிடிகளிலிருந்து விடுவிப்பது; (2) உரிமையின்றிப்பொது நிலத் தில் தங்குபவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு உதவி புரிவதைத் தடுத்து நிறுத்துவது. இம்முறையால் கம்யூனிஸ்டுகளுக்குத் தேவையான பொருள்களை அவர்கள் திரட்ட முடியாமல் செய்தால் தங்கள் தேவைகளை நாடிக் கம்யூனிஸ்டுகள் வெளியே வரவேண்டிய சூழ் நிலை உருவாகும்; அச்சமயத்தில் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்ய லாம். பிரிக்ஸ் திட்டத்தின் கீழ் 500 புதிய கிராமங்கள் அமைக்கப் பட்டன; இவைகளில் பெரும்பான்மையானவை மேற்குக் கடற் கரை நாடுகளில் அமைக்கப்பட்டிருந்தன. கம்யூனிஸ்டுகள் இறுதி யாக வீழ்ச்சியடைந்ததற்கு இத்திட்டம் ஒரு முதன்மைக் காரண மாக விளங்கியது.

பிரிக்ஸ் திட்டத்தின் மூலமாகக்கூடக் கம்யூனிஸ்டுகளின் செயல்களைக் குறைக்க முடியவில்லை. கி.பி. 1949, 1950, 1951ஆம் ஆண்டுகளில் பண்ணையாளர்களையும், சுரங்க முதலாளிகளையும்

பொது மக்களையும் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து தாக்கினார்கள். கி.பி. 1951ஆம் ஆண்டில் உயர் தனிப் பேராளர் சர் என்றீ கர்னீ Sir Hendry Gurney) படுகொலை செய்யப்பட்டார். ஆனாலும், மலேயப் பொருளாதார நிலையைச் சீரழிக்க வேண்டும் என்ற அடிப் படையான கம்யூனிஸ்டு நோக்கம் நிறைவேறுமலிருந்தது.

டெம்ப்லர் (Templer)

உயர் தனிப் பேராளர் படுகொலை செய்யப்பட்டதால், அரை குறை நடவடிக்கைகளால் கம்யூனிஸ்டுகளை ஒழிக்க முடியாது என அரசாங்கத்திற்குப் புரிந்தது. படைத் தலைவர் சர் செரால்டு டெம்ப்லர் (General Sir Gerald Templer) புதிய உயர்தனிப் பேராளராகவும், செயற்குழு இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார்.

டெம்ப்லரின் நோக்கம் இருவகை: (1) படை வலிமையைப் பயன்படுத்தி வெற்றி தேடி மக்களின் செல்வாக்கைப் பெற வேண்டும்; மக்களுக்குத் துணிவு ஊட் டவேண்டும்; (2) அரசாங்கத் தோடு, சரியான காரணமின்றி, எவராவது ஒத்துழைக்க மறுத் தால் அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

முதல் நோக்கத்தைச் செயல்படுத்துவதற்காகப் பிரிட்டனிட மிருந்தும், பல்வேறு சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசு நாடு களிடமிருந்தும் (Commonwealth Countries) அதிகப்படைகள் வரவழைக்கப்புட்டன. ஒரு கூர்க்காப்படை அணிப் பகுதியும் (Gurkah Brigade), பிரிட்டன், பிஜ்ஜி (Fizzi), கிழக்கு ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளின் போர் அணிப் பிரிவுகளும் ஏழு மலேயப் போர் அணிப் பிரிவுகளுடன் இணைக்கப் பட்டன. ஆகையால், நெருக்கடி நிலையை நீக்கும் பொறுப்புச் சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசு நாடுகளுக்கு விடப்பட்டது.

கம்யூனிஸ்டுகளின் செயல்கள் மிகையான அளவில் இருந்த பகுதிகளை 'இருள் நிறப் பரப்பெல்லை' (Black Area) என டெம்ப்லர் அழைத்தார்; குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்காகவும், மக்களுக்குத் துணிவு ஊட்டுவதற்காகவும் இவ்விடங்களுக்கு டெம்ப்லர் முன் அறிவிப்பில்லாமல் சென்றார். பயங்கரவாதிகளை அடக்கும் திட்டத்திற்கு ஒரு புத்துயிர் பூத்த விறுவிறுப்பும், சுறு சுறுப்பும் வந்தன.

இச் சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி மாறியது. மக்களுடைய ஆதரவை அடையாததால்தான் தங்களுடைய திட் டம் நிறைவேறவில்லை எனக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் உணர்ந்

தார்கள். மக்களை அச்சுறுத்தியதால் மக்களின் வெறுப்பும், சினமும் அவர்களிடம் திரும்பின. சுரங்கங்களிலும், பண்ணைகளிலும் மக்கள் தொடர்ந்து விடாமல் பணிபுரிந்ததை நோக்கினால் கம்யூனிஸ்டு களுக்கு அதிக அளவில் ஆதரவு கிடைக்கவில்லை எனக் கம்யூ னிஸ்டுகள் உணர்ந்தார்கள். ஆகையால், தங்களுடைய சூழ்ச்சி யைச் சீரமைக்கும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டுகள் காட்டிற்குள் சென்று மறைந்தார்கள். மக்களை முறையில்லாமல் தாக்கும் செயல் களை நிறுத்தினார்கள்; நடுத்தர வகுப்பினரின் ஆதரவை நாட முயற்சியெடுத்தார்கள். இச் சூழ்நிலையில்தான் அரசாங்கப் படை வீரர்களும் கம்யூனிஸ்டுகளைத் தீவிரமாகத் தாக்கத் தொடங்கினார் கள். கி.பி. 1953ஆம் ஆண்டிலிருந்து செயல் தொடங்குவதன் மூலம் எதிரி முயற்சியைத் தூண்டி இயக்கும் வாய்ப்பு வளம்பெறும் திட்டத்தைக் கம்யூனிஸ்டுகள் கைவிட்டார்கள்; கம்யூனிஸ்டுகள் இனித் துணிந்து முயற்சி மேற்கொள்ளவேயில்லை.

சில குறிப்பிட்ட இடங்களில் பயங்கரவாதிகளின் நடவடிக்கை களை அடக்கி ஒழிப்பதற்காகப் பரவலாகப் படைகள் முழு மூச்சுடன் பயன்படுத்தப்பட்டன. பயங்கரவாதிகளைத் தேடி அழிக்கும் குறிக் கோளுடன் 'புதர்க்காடு இயங்குமுறை' (jungle operations) செயல்கள் தொடங்கப்பட்டன. விரட்டப்பட்ட பயங்கரவாதிகள் காட்டுக்குள் ஓடி ஒளிந்தனர்.

. மீண்டும் ஒரு புதிய திட்டத்தை டெம்ப்லர் செயல்படுத்தினார். 'தீங்கற்ற அமைதியுள்ள பரப்புப் பகுதிகளை' (White Areas) உருவாக்கினார். பயங்கரவாதிகள் இப்பகுதிகளில் ஒழிக்கப்பட்ட தால் இப்பகுதிகளில் அமைதி நிலவியது; ஆகையால், இப்பகுதி களில் நெருக்கடி நிலைச் சட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த தடை உத்தரவுகள் நீக்கப்பட்டன. இவ்வாறு நெருக்கடி நிலையைத் தளர்த்தினால் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைப் பற்றி மக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்கு முன் வருவார்கள் என டெம்ப்லர் நினைத்தார். இம்முறை மூலம் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து பலநிலப் பகுதிகளைப் படிப்படியாக விடுவித்து 'தீங்கற்ற அமைதியுள்ள பரப்புப் பகுதிகளாக' மாற்றியமைக்கலாம் என டெம்ப்லர் விரும்பினார். முதல் 'தீங்கற்ற அமைதியுள்ள பரப்புப் பகுதியாக' அறிவிக்கப்பட்ட பகுதி மலாக்கா. (கி.பி. 1952ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்). ஆனால், இத்திட்டம் மெல்லத்தான் செயற்பட்டது. கி.பி. 1954ஆம் ஆண்டில் சரண டையும் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை பெருகியபோதிலும் தீவிரக் கம்யூனிஸ்டுகள் போரை விடத் தயாராக இல்லை. ஆனால், சரணடையும் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை படிப்படியாகப்

பெருகிக்கொண்டே போனதால் இறுதியாக கி.பி. 1960ஆம் ஆண்டில் மலேயா நாடு முழுவதும், சியாம் எல்லையிலுள்ள பகுதிகளைத் தவிர, 'தீங்கற்ற அமைதி நிலவும் பகுதிகள்' என அரசாங்கம் அறிவித்தது. ஆனால், தங்கள் செயல்களைக் கம்யூனிஸ்டுகள் தென் தாய்லாந்திலிருந்து தொடர்ந்து செயல்படுத்தினார்கள். கம்யூனிஸ்டுகள் சரணடைவது பெருகிக்கொண்டு வந்தபோதிலும் கி.பி. 1957ஆம் ஆண்டில் மலேயா சுதந்திரமடைந்தபோது நெருக்கடி நிலை நீக்கப்படவில்லை என்பதை நாம் மறக்கக்கூடாது.

கம்யூனிஸ்டுகளை அடக்கும் முறையைப்பற்றி டெம்ப்லர் பின்வருமாறு கூறுகிறார் : 'படைகளின் வெற்றி மூலம் மட்டும் கம்யூனிஸ்டுகளைத் தோல்வியடையச் செய்ய முடியாது; மக்களின் நன்மதிப்பின் மூலம்தான் இறுதியாகக் கம்யூனிஸ்டுகளை ஒடுக்கமுடியும். ஆகையால், அரசாங்கத்தின் பக்கம் மக்களை ஈர்க்கவேண்டும். மக்களுடைய நலனை வளர்க்க அரசாங்கம் ஊக்கமும் ஆதரவும் அளித்தால்தான் மக்களின் செல்வாக்கைப் பெறமுடியும்; அதே சமயத்தில் தங்கள் பணிகளைத் தாங்களே புரிய மக்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்'.

ஆகையால், நாட்டுப்புற மக்களுக்கு (புதுக் கிராமங்கள் உட்பட) மின்சாரம், கல்வி, மருத்துவம், தண்ணீர் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டன. நாட்டுப்புறங்களில் சாலைகள் அமைக்கப்பட்டன. கிராம மன்றங்கள் (Village Councils) நிறுவப்பட்டன. நெருக்கடி நிலையின் போதே இவைகளைவிடச் சிறப்புவாய்ந்த பெரிய மன்றங்களின் தேர்தல்கள் நடத்தப்பட்டன. காவலர்களுக்கு உதவிபுரியவும், பிறகு தங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை மக்களே ஏற்றுக்கொள்ளவும் குடிமக்கள் படைகள் (Homeguard Units) உருவாக்கப்பட்டன.

மலேயாத் தீபகற்பம் பயங்கரவாதிகளுடன் போராடிக் கொண்டிருக்கும் காலத்தில் போர்னியோ நாடுகள் பொருளாதார வளர்ச்சியும், செழிப்பும், வளமுமடைந்தன. பயங்கரவாதிகளின் போரில் சரவாக்கும், சபாவும் (Sabah) நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. கி.பி. 1956-57ஆம் ஆண்டுகளில்தான் சரவாக்கில் குச்சிங் நகரமன்றத்தின் (Kuching Municipal Council) தேர்தல் நடந்தது.

மலேயாத் தீபகற்பத்தைப் போலப் போர்னியோ நாடுகளிலும் பல் இனச் சமுதாய அமைப்பு உருவாகியிருந்தது : சரவாக்கிலுள்ள சீனர்கள் 31 விழுக்காடு; சபாவிலுள்ள சீனர்கள் 23 விழுக்காடு.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் சரவாக், சபா (Sabah), புருனை ஆகிய நாடுகளை இணைக்க முயற்சிகள் தொடங்கப்பட்டன. கி.பி. 1951ஆம் ஆண்டில் சரவாக், சபா (Sabah), புருனை ஆகிய நாடுகளின் உயர்நீதிமன்றங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன.

கி.பி. 1958ஆம் ஆண்டில் சபா (Sabah), சரவாக், புருனை ஆகிய நாடுகளின் கூட்டரசு அமைப்பது பற்றி உரையாடல் தொடங்கியது. இம் மூன்று நாடுகளும் தனித்தனியாகச் சுதந்திர மாக வாழ்வது கடினம் எனக் கருதப்பட்டது. சபாவும் (Sabah), சரவாக்கும் இத்திட்டத்தில் ஆர்வம் காட்டின. ஆனால், புருனைச் சுல்தான் இத்திட்டத்தில் ஆர்வம் கொள்ளவில்லை. சபா, சரவாக் ஆகிய நாடுகளைவிட மலேயாத் தீபகற்ப நாடுகளுடன் நெருங்கிய தொடர்பிருப்பதாகப் புருனைச் சுல்தான் சுட்டிக் காட்டினார். ஆகையால், இக்கூட்டரசு திட்டத்தைப் பற்றித் தொடர்ந்து உரை யாடல்கள் நடத்தவில்லை; புருனையின் பெட்ரோல் வருமானம் கிடைக்காவிட்டால் போர்னியோக் கூட்டரசுக்குத் திடமான, செல்வாக்குமிக்க நிதி நிலையிருக்காது. ஆனால், ஐந்து ஆண்டு களுக்குப்பின் புருனை மலேசியாவுடன் சேர மறுத்தது; சரவாக், சபா (Sabah) ஆகிய நாடுகள்தாம் மலேசியாவுடன் இணைந்தன.

19. சுதந்திரக்கொடி

நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் (Emergency) தன்னாட்சித் திட்டத்திற்குத் தடை ஏற்பட்டது. கம்யூனிஸத்தை ஒழிப்பதுதான் அரசாங்கத்தின் முதல் நோக்கம். ஆகையால், தன்னாட்சித் திட்ட அமைப்புகள் வளருவதில் ஊக்கம் காட்டவில்லை. ஆனாலும், இறுதியில மலேயாவிற்குச் சுதநதிரம் அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தை அரசாங்கம் மறக்கவில்லை. கி.பி. 1952ஆம் ஆண்டில் உயர்தனிப் பேராளராக நியமிக்கப்பட்ட படைத்துறை முதல்வர் டெம்ப்லர் இக்கருத்தையே வெளியிட்டார்.

கம்யூனிஸ்டுகளை அழிக்கும் நோக்கமும், மலேயாவிற்குத் தன்னாட்சி அளிக்கும் திட்டமும் ஒரே சமயத்தில் வளர்ச்சியடைய வேண்டும்; பயங்கரவாதிகளை ஒழிக்க மலேயத் தேசிய உணர்ச்சியை ஊக்குவித்து மக்களின உணர்ச்சிகளைக் கம்யூனிஸத் திற்கு எதிராகத் திரட்டவேண்டும் என டெம்ப்லர் உணர்ந்தார். ஆகையால், பயங்கரவாதிகளை ஒழிக்கும் திட்டத்திற்கு முதன்மை கொடுத்தபோதிலும், தேசிய உணர்ச்சிகள் வளருவதற்கும், அரசாங்கத்தில் மலேயர்கள் பங்குகொள்வதற்கும் நெருக்கடி நிலை ஒருவிதத்தில் உதவியது எனக் கூறலாம். இனம் அல்லது சமூகம

என்ற வேற்றுமையில்லாமல் பயங்கரவாதிகள் எல்லோரையும் மறைந்து தாக்கினார்கள்; படுகொலை செய்தார்கள். ஆகையால், கம்யூனிஸத்தை ஒழிப்பதற்காக எல்லாச் சமுதாயப் பிரிவினர்களும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்பதை எல்லா வகுப்பினரும் புரிந்துகொண்டனர். இத்தகைய ஒத்துழைப்பு, அரசியல் செயல்களிலும் ஒத்துழைப்பு உணர்ச்சிகளை உருவாக்கியது.

கி.பி. 1951ஆம் ஆண்டில் கூட்டரசு ஆட்சி அமைப்பில் உறுப்பினர் வகைமுறை அல்லது துணைப்பகுதி அமைப்பு முறை (Member System) அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டுத் தேர்தல்களும் நடந்தன. கி.பி. 1953ஆம் ஆண்டில் நெருக்கடி நிலையில் வளர்ச்சி தோன்றியதால் கூட்டரசு சட்டமன்றத்திற்குத் (Federal Legislative Council) தேர்தல் நடத்தவேண்டும் எனக் கூட்டணிக் கட்சியினர் (Alliance) வலியுறுத்தினார்கள். இதற்குப் பின் ஆங்கிலேயர்களுடன் பேச்சு நடத்தியபோது சட்டமன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் மக்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் எனக் கூட்டணிக்கட்சி முறையிட்டது. இறுதியில் தோன்றிய ஒப்பந்தத்தின்படி மொத்தம் 98 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும்; இவர்களில் 52 பேர் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். கி.பி. 1955ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொதுத் தேர்தல் நடந்தது; வாக்காளர்களின் எண்ணிக்கை 12,80,000 ஆகும். துங்குவின் கூட்டணிக்கட்சி (Alliance Party) சிறந்த வெற்றியடைந்தது; 52 தொகுதிகளில் நடந்த தேர்தலில் 51 இடங்களையும், 80 விழுக்காடு வாக்குகளையும் கூட்டணி பெற்றது. மலேயாவின் முதல் முதல் அமைச்சராகத் (Chief Minister) துங்கு அப்துல் ரஹ்மான் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் முறையாக ஆட்சி அமைப்பில் மலேயர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. நெருக்கடி நிலையை நீக்கும் நோக்கத்துடன் பயங்கரவாதிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கத் (amnesty) துங்கு முன்வந்தார். ஆனால், கம்யூனிஸ்டுகள் சரணடையாததால் நெருக்கடி நிலை நீடித்தது; கி.பி. 1957ஆம் ஆண்டில் மலேயாவிற்குச் சுதந்திரம் வந்த பிறகுகூட நெருக்கடிநிலை கி.பி 1960ஆம் ஆண்டுவரை நீடித்தது.

மூன்று கட்சிகளின் இணைப்பான கூட்டணிக் கட்சியின் அரசாங்கம், ஒற்றுமை யுணர்ச்சியை வளர்க்கத் துடித்தது. முதன்மையாக மக்களைப் பிளவுபடுத்திய இருகாரணங்களுக்குப் பதில் அளிக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. (1) மலேயாவிலிருந்த இரண்டு பெரும்பான்மையான இனத்தார்களான மலேயர்களுக்கும், சீனர்களுக்கும் இடையே பொருளாதாரச்

சரிசம நிலையில்லாமலிருந்தது; நாட்டுச் செல்வத்தில் மிகக் குறைந்த அளவுச் செல்வமே மலேயர்களுக்குக் கிடைத்தது. ஆகையால், தேசிய ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக மலேயர்கள் இருந்ததில் வியப்பில்லை; (2) மலேயாவின் ஒற்றுமையை வலியுறுத்தும் தேசியக் கல்வித்திட்டம் மூலம் மலேயச் சீனர்களையும், இந்தியர்களையும் மலேய மக்களுடன் விரைவில் ஒருசேரக் கலக்கவேண்டிய முயற்சி யெடுக்கவேண்டும்.

கி.பி. 1957ஆம் ஆண்டில் கல்வி அமைச்சர் அப்துல் ரசாக் (Abdul Razak) கல்விக்குழுவின் ஆலோசனைகள் செயல்படுத்தப் பட்டன. இக்குழுவின் அறிக்கை பின்வருமாறு:—எம்மொழியில் போதித்தாலும் மலேயாவிலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் ஒரு பொதுப் பாடத்திட்டத்தைப் பின்பற்றவேண்டும். மலேயமொழி மூலமும், ஆங்கில மொழிமூலமும் பாடம் கற்றுத்தரவேண்டும்; சீன மொழியையும் இந்திய மொழியையும் பயிலவும் வாய்ப்பு அளிக்கவேண்டும். முடிந்தவரையில் எல்லாப்பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும். இதை விரும்பாத பள்ளிகளுக்கு அரசாங்கம் நிதி உதவியளிக்கக்கூடாது. இவ்வாலோசனைகள் செயல்படுத்தப்பட்ட பிறகு புதுப் பள்ளிகளைத் தொடங்கும் முயற்சிகளும் தோன்றின.

பொருளாதாரநிலையைச் சரியீடு செய்வது மிகக்கடினம். நாட்டுப்புறத் தொழிற்சாலை வளர்ச்சி அதிகாரக் குழுவின் (Rural and Industrial Development Authority) தலைவராகக் கி.பி. 1951ஆம் ஆண்டில் டாட்டோ ஒன் (Dato'onn) நியமிக்கப்பட்டார். நாட்டுப் புறப் பகுதிகளில் வசித்துவந்த மலேய் இனத்தார்க்குக் கடனும், பயிற்சியும், பொருளாதார உதவியும் அளிக்க வேண்டுமென்பதே இக்குழுவின் நோக்கம். நாட்டுப்புற வறுமையோடு போர்புரிய முன்வந்த முதல் திட்டம் இதுவே. ஆனால், உண்மையில் சுதந்திரம் வந்த பின்தான், நெருக்கடிநிலை நீங்கிய பின்தான் நாட்டுப்புற வளர்ச்சியில் அரசாங்கம் ஊக்கம் காட்டியது.

நெருக்கடி நிலையின்போது மலேயாவிற்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று உரிமைக்குரல்கள் பெருவாரியாக எழுப்பப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்குள் தன்னாட்சி அளிக்கப்படவேண்டும்; நான்கு ஆண்டுகளுக்குள் முழுச்சுதந்தரம் அளிக்கப்படவேண்டும் எனக் கூட்டணிக்கட்சி கூறியது. இது சம்பந்தமாகக் கி.பி. 1956ஆம் ஆண்டில் ஒரு மலேய உரிமைப் பேராளர்குழு இலண்டனுக்குச் சென்றது. அவர்கள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் பொதுவாகப் பிரிட்டன் ஏற்றுக்கொண்டது. மலேயா

விற்குச் சுதந்திரம் அளிக்கக் காலம் கடத்தவேண்டும் என்ற எண்ணம் பிரிட்டனுக்கு இல்லை; இருந்தால் நெருக்கடி நிலையில் உருவாகிய மலேயர்களின் ஒத்துழைப்பை இழந்தாலும் இழக்கலாம் எனப் பிரிட்டனுக்குத் தெரியும்; சுதந்திரம் அளிப்பதைப் பற்றி விவாதம் நடக்கவில்லை; சுதந்திர மலேயாவிற்கு எவ்வகையான அரசியல் சட்டதிட்டம் உருவாக்குவது என்பதைப்பற்றித்தான் உரையாடல் நடந்தது. இதுபற்றிக் கூட்டணிக்கட்சி விண்ணப்பித்துக் கொண்டபடி உருவாகிய சரிசமத் தனியுரிமையுடைய கூட்டரசு குழு (Commonwealth Commission) கி.பி. 1957ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஓர் அரசாங்க வரைவுச்சட்டம் (Draft Constitution) வெளியிட்டது. இக் குழுவின் உறுப்பினர்கள் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகள்; இக் குழுவின் தலைவர் கோமான் ரீடு (Lord Reid). கூட்டணிக்கட்சி ஆய்வுக்காக எடுத்துரைத்த பொதுநிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்த பெரும்பான்மையான கருத்துகள் இக் குழுவின் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சிறு மாறுதலுக்குப் பிறகு இக் குழுவின் அரசியல் சட்டம் மலேயா அரசாங்கத்தின் அரசியல் சட்டமாக வெளிவந்தது.

மலேயாவிற்குச் சுதந்திரம் வந்தவுடன் மலேயாவின் அரசியல் சட்டம் நடைமுறைக்குவந்தது; இது ஒரு கூட்டரசின் மைய அமைப்புக்குரிய சட்டம் (Federal Constitution). கி.பி. 1948ஆம் ஆண்டு மலேயக் கூட்டரசு உடன்படிக்கையைத் (Federation of Malaya Agreement) தழுவியிருந்ததால் சுல்தான்களுக்கும் மலேய் நாடுகளுக்கும் தொடர்ந்து சில உரிமைகளும், ஆட்சி அதிகாரங்களும் அளிக்கப்பட்டன; ஆனால், சிறப்பான விவகாரங்களில் மத்திய அரசாங்கத்திற்கு மிக அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. வேறு வகையாகக் கூறினால் மலேயாவின் அரசியல் அமைப்பு ஒரு வலிமையுடைய கூட்டரசின் மைய அமைப்பு; இதில் சிறப்பான அதிகாரங்கள் கூட்டரசு மைய அமைப்பு அரசிடம் கொடுக்கப்பட்டன; நாடுகளின் ஆட்சி அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன (limited authority); வரம்புக்குட்படுத்தப்பட்ட மொத்தப் பண உதவி நாடுகளுக்கு அளிக்கப்பட்டது.

ஆகையால், மிகையளவில் மையப்படுத்தப்பட்ட கூட்டரசு அமைப்பை மலேயா ஏற்றுக்கொண்டது. ஆனால், இக்கூட்டரசிலுள்ள பல நாடுகள் தந்நிலையை விடாது வைத்திருந்தன; உதாரணமாகப் படைத்துறையைச் சாராத பொதுநிலை அரசு பணியைக் (Civil Service) கேலன்தான் தன்னிடமே வைத்துக் கொண்டது; அவ்வாறு ஜோஹூர் தனித்து இராணுவத்தையும்,

கூட்டாட்சியில்லாத எல்லா நாடுகளும் அவர்களுடைய வழி மரபில் வந்த வியாழன்—வெள்ளி விடுமுறைகளையும் விடாது வைத்திருந்தன. மொத்தம் ஒன்பது அரசர் குடும்பங்கள் இருந்ததால் நிலையாக ஒரே மன்னரை மன்னராக நியமிக்க முடியவில்லை. ஒன்பது அரசர்களும் கலந்து பேசி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்களுக்குள் ஒருவரைப் பிரதம அரசராய் அல்லது யாங்-டி-பெர்துவான்-அகுங்காய்த் (Yang di-Pertuan Agong) தேர்ந்தெடுக்க வேண்டும். சுதந்திர மலேயாவின் முதல் பிரதம அரசர் யாங்-டி-பெர்துவான் பெச்சார் ஆப் நெகரி செம்பிலன், துங்கு அப்துல் ரஹ்மான் இப்னி மர்ஹும் துங்கு முகம்மது (Yang di-Pertuan Besar of Negeri Sembilan, Thunku Abdul Rahman Ibni Al Marhum Thunku Muhammad).

இரு சபைகள் அடங்கிய சட்ட மாமன்றம் அமைக்கப்பட்டது. நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 104 உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் சபை (House of Representatives) அமைக்கப்பட்டது. 38 உறுப்பினர்களடங்கிய சட்ட மாமன்ற மேலவை (Senate) அமைக்கப்பட்டது; இவ்வுறுப்பினர்களில் சிலர் நியமனஞ் செய்யப்பட்டார்கள் (Nominated); சிலர் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரதிநிதிகள் சபைக்குத்தான் மிகையளவில் ஆட்சி அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. சட்டமியற்றும் நடவடிக்கை, வரவு செலவுத் திட்டப் பட்டியல் போன்ற விவரங்களைத் தவிர, மற்றச் செய்திகள் சம்பந்தமான செயல்களை மேலவை ஓர் ஆண்டுக்காலம் தாமதமாக்கலாம்.

சிறப்பான செய்திகளின் பிரதிநிதிகளாக 16 உறுப்பினர்கள் மேலவைக்கு நியமனஞ் செய்யப்பட்டார்கள்; ஒவ்வொரு நாட்டு மன்றமும் (State Assembly) இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது.

மலேயாச் சட்டம் கூட்டரசு சட்டமாதலால் ஒவ்வொரு நாடும் ஆட்சி உரிமையைத் தொடர்ந்து விடாது வைத்திருந்தது; இதே உரிமைகள் அளிக்கப்பட்டதால் இவற்றோடு பினாங்கும், மலாக்காவும் இணைந்தன. மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களின் மேலுள்ள தம்முடைய ஆட்சி உரிமையை இங்கிலாந்து அரசியார் விட்டுக் கொடுத்தார். மற்ற நாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் அமைப்பைப்போல் இந்நாடுகளுக்கும் அளிக்கப்பட்டது; ஆனால், இந்நாடுகளின் முதல்வர் சுல்தான் அல்லர்; ஆளுநரே. ஒவ்வொரு நாட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் அமைக்கப்பட்டது. இம் மன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக்

கொண்ட கட்சி பதவியில் அமரும். இச் சட்டமன்றம் நான்கு ஆண்டுகள்தாம் ஆட்சி புரியலாம்; இதற்குப்பின் மீண்டும் தேர்தல்கள் நடத்தவேண்டும். (ஆனால் கூட்டரசு நாடாளுமன்றம் ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சிபுரியலாம்.)

தங்களுடைய பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதற்காகச் சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகள்வரை மலேய இனத்தார்க்குச் சிறப்பான சலுகைகள் கொடுக்கப்படும். உதாரணமாகப் படைத் துறையைச் சாராத பொதுநிலை அரசு பணியில் பெரும்பான்மையான மலேயர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். மலேயா சுதந்திரமடைந்தவுடன் மலேயாவில் பிறந்த எல்லோருக்கும் குடி உரிமையுண்டு. சுதந்திர மலேயாவின் தேசிய மொழி இறுதியாக மலேய் மொழி ஆகும்; 1967ஆம் ஆண்டு வரை மலேய் மொழியும், ஆங்கில மொழியும் ஆட்சி மொழிகளாக (official languages) இருக்கும்.

கி.பி. 1957ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5ஆம் நாள் மலேயாக் கூட்டரசு உடன்படிக்கையில் எல்லோரும் கையொப்பமிட்டனர். கி.பி. 1957ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ஆம் நாள் மலேயாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது. ஒன்பது நாடுகளும், இரண்டு மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களும் இணைந்த சுதந்திர நாடே மலேயாக் கூட்டரசு (Persekuthan Tanah Malaya) எனப்பட்டது.

20. சுதந்திர மலேயா

சுதந்திர மலேயாவில் வளர்ச்சி தோன்றியதால் எல்லோரது நன்மதிப்பையும் பெற்றது. நாட்டுப்புற வளர்ச்சித் திட்டத்தினால் பல நன்மைகள் கிடைத்தன. தொழில் துறைத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. நாட்டுப்புறங்கள் செழுமையுடன் வளர்ச்சியடைய வேண்டும்; நாட்டுப்புறத்தை விட்டு வெளியேறிப் பட்டணங்களுக்குச் செல்பவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்பதே இத் திட்டங்களின் நோக்கம். கி.பி. 1960 ஆம் ஆண்டில் அவசரநிலைப் பிரகடனத்தை விலக்கியதால் நெடுஞ் சாலைகள், பாலங்கள் முதலியவை கட்டவும், பாசன வசதிகள் செய்யவும், வேளாண்மையுற்பத்தி, மின் உற்பத்தியைப் பெருக்கவும், நாட்டுப்புறங்களில் கல்வி வசதி செய்யவும் தேவையான அளவு செல்வம் இருந்தது. நாட்டுச் செல்வத்தின் அடிப்படையை விரிவாக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

சுதந்திரம் கிடைத்தவுடன் பொருளாதாரச் சூழ்நிலையில் மட்டும் மாற்றங்கள் தோன்றவில்லை; மலேய இளம் தலைமுறையின

ரிடையே ஊக்கமும், ஆர்வமும், பேருணர்ச்சியும், தன்னம்பிக்கையும், சீர்திருத்தம் செய்து சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற அவாவும் மலர்ந்தன. பெருமைதரக்கூடிய அழகான கட்டடங்கள் கோலாலம்பூரில் புதுப் பாங்கில் கட்டப்பட்டன. கலைக் கண்காட்சிகள் ஆர்வத்துடன் நடத்தப்பட்டன; இலக்கியம் ஓங்கி வளரத் தொடங்கியது; உலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கிடைத்தது. ஐக்கிய நாட்டு அமைப்பில் மலேயா மகிழ்ச்சியோடு பங்குகொண்டது.

அரசியல் துறையில் ஆட்கொள்ளுகிற நிகழ்ச்சிகள் ஏற்படவில்லை. படிப்படியாக முன்னேற்றங்கள் தோன்றின. மலேயன் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் ஏற்றவாறு குடியாட்சி முறை அமைக்கப்பட்டது. கி.பி. 1959ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டாட்சி (The Alliance Party) மீண்டும் வெற்றியடைந்தது. நாடாளுமன்றத்திலுள்ள 104 இடங்களில் 74 இடங்கள் இக் கட்சிக்குக் கிடைத்தன. இத் தேர்தலில் (1) பான்-மலேய் இஸ்லாம் கட்சி (Pan-Malayan Islamic Party—PMIP) 13 இடங்களைக் கைப்பற்றியது; (2) சோஷியலிஸ முன்னணி (Socialist Front) 8 தொகுதிகளில் வெற்றியடைந்தது; (3) மக்கள் முன்னேற்றக் கட்சி (People's Progressive Party) 4 இடங்களைக் கைப்பற்றியது. கேலன்தான் தெரன்கானுவில் (Trengganu) பான்-மலேய் இஸ்லாம் கட்சிக்குப் (PMIP) பெரும்பான்மை கிடைத்தது. மலேயாவிலுள்ள மற்றப் பகுதிகளில் எல்லாம் கூட்டாட்சிக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தது. இவ்வகை எதிர்க்கட்சிகள் வளருவது மக்களாட்சி அமைப்பு நன்கு செயல்படத் தேவை ஆகும். ஆனால், தற்சமயத்தில் துங்கு அப்துல் ரஹ்மானின் கூட்டாட்சியை வலிமையுடன் எதிர்க்க ஒரு கட்சியும் இல்லை.

இரண்டறக் கலக்குமுன்

கம்யூனிஸ்டு சதி வேலை (Communist Subversion) மீண்டும் தோன்றலாம் என மலேயா அரசாங்கம் ஐயுற்றுக் கொண்டிருக்கும் எண்ணங்கள் சிங்கப்பூரில் நடந்த நிகழ்ச்சிகளால் வலிமையடைந்தன. கி.பி. 1959ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூரில் (உள்விவகார) தன்னுட்சி நடந்தது. கி.பி. 1960ஆம் ஆண்டில் ஐந்து இடதுசாரிக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் மக்கள் செயற்கட்சியிலிருந்து (People's Action Party—PAP) விலகியதால் லீகுவான்யூ (Lee kuan Yew) அதிர்ச்சியடைந்தார். மேலும் கி.பி. 1961ஆம் ஆண்டு ஏப்ரலில் ஹாங்-லிம்(Hong-Lim) தேர்தலில் மக்கள் செயற் கட்சி தோல்வியடைந்தது. இந்நிகழ்ச்சிகள் மக்கள் கம்யூனிஸ்டுகளின்மேல் பரிவுகாட்டத் தொடங்கியிருக்கிறுர்கள் என்பதைக்

காட்டின. இக் காரணத்தால் சிங்கப்பூருக்குச் சுதந்திரமளிக்கப் பிரிட்டன் தயங்கும் எனப் பெரும்பான்மையான சிங்கப்பூர் மக்கள் அஞ்சினர்கள். கம்யூனிஸ்டு ஆதிக்கமுடைய சிங்கப்பூரை மலேய அரசாங்கம் வரவேற்கவில்லை. இச் சூழ்நிலை சிங்கப்பூரில் உருவாகியதால் சிங்கப்பூரையும் மலேயாவையும் இரண்டறக் கலக்கச் செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது எனக் கூறலாம்.

பெரும்பான்மையான சிங்கப்பூர்க் குடிமக்கள் சீனர்களானதால் எப்பொழுதும் எச்சரிக்கையுடன்தான் மலேயாத் தீபகற்ப நாடுகள் சிங்கப்பூருடன் தொடர்புகொண்டன. முக்கியமாக இக்காரணத்தால்தான் கி.பி. 1964ஆம் ஆண்டில் மலேயாவிலும் (Malayan Union), கி.பி. 1948ஆம் ஆண்டில் மலேயக் கூட்டரசிலும் சிங்கப்பூர் இணைக்கப்படவில்லை. சிங்கப்பூர் முக்கியப் பாதுகாப்புப் போர்த்தளமாயிருந்ததால் ஆங்கிலேயர்கள் அதைத் தங்கள் ஆட்சி அதிகாரத்தின்கீழ்த் தொடர்ந்து வைத்துக்கொள்ள விரும்பினர்கள் என்பது மற்றெரு காரணம். ஆனால், சிங்கப்பூரில் நடக்கும் நிகழ்ச்சிகளை இனிமேலும் பொருட்படுத்தாமலிருக்க முடியாது என மலேயாவுக்குக் கி.பி. 1961ஆம் ஆண்டுக்கு முன் விளங்கியது. சிங்கப்பூரில் கம்யூனிஸ்டுகள் வெற்றியடைந்தால், அத்தீவிலிருந்து கம்யூனிஸ்டு சீனு, தென்கிழக்கு ஆசியா முழுவதும் கம்யூனிஸ்டு ஆட்சியை அமைக்க முயலும். ஆகையால் சிங்கப்பூரைப் புறக்கணிக்காமல், சிங்கப்பூருடன் இணைந்து கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்க முயற்சி செய்வதே சரி என மலேயா நினைத்தது. ஆனால், இவ்வகையான புதிய சூழ்நிலையை உருவாக்கினல் ஒன்றேகால் மில்லியன் சிங்கப்பூர்ச் சீனர்களுடன் ஒன்றுசேர வேண்டும். கூட்டரசில் உள்ள சீனர்களுக்கு முன்பே மிகுந்த சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன எனச் சினம் கொண்டிருக்கும் சில கூட்டாட்சித் தலைவர்களை இப்புதிய திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவது கடினம்.

மலேசியாத் திட்டம்

மலேசியாத் திட்டம் உண்மையாகவே எக்காரணங்களால் உருவாகியது என்பதை இன்றுகூட நாம் திண்ணமாகக் கூற முடியாது. முதன் முதலாக இத்திட்டத்தைப் பற்றிக் கி.பி. 1961ஆம் ஆண்டில் மே மாதம் சிங்கப்பூரில் துங்கு தெரிவித்தார். ஆனால், இதற்கு முன் இத்திட்டத்தைப் பற்றி நிச்சயமாக நிறையப் பேச்சு நடந்திருக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஆலோசனை

செய்தபோது கம்யூனிஸ்டு ஆட்சி சிங்கப்பூரில் வந்துவிடுமோ என்ற அச்சத்தை மலேயா பகிர்ந்து கொண்டிருக்கலாம். மிக விரைவில் சிங்கப்பூருக்குச் சுதந்திரம் கொடுத்தாக வேண்டும்; இதை இனிமேலும் தாமதம் செய்ய முடியாது எனப் பிரிட்டனுக்குத் தெரியும். ஆகையால், மலேயாவின் அச்சத்தை மனத்தில் வைத்துக் கொண்டு சிங்கப்பூரும், மலேயாவும் இணைந்தால் மலேயாவின் அச்சத்தை ஓரளவு போக்கலாம் என்ற நோக்கத்துடன் பிரிட்டன் மலேசியாத் திட்டத்தை உருவாக்கியிருக்கலாம். மேலும், இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு ஓங்கியிருந்தது; இந்தோனேசியா மேல் நாடுகளுடன் தொடர்பு கொள்ள விரும்பவில்லை. ஆகையால், கம்யூனிஸம் பரவாமல் தடுக்க ஒரு பெரிய வலிமையடைந்த மலேசியாவை உருவாக்கப் பிரிட்டனும், அமெரிக்கக் குடியரசும் விரும்பியிருக்கலாம். பொதுவாகக் கம்யூனிஸத்திற்கு அணை கட்டும் நோக்கத்துடன்தான் மலேசியாத் திட்டம் போடப்பட்டது என உறுதியாகக் கூறலாம்.

நீண்ட நாள்களாக மிகுந்த சீனர்களைக் குடிகளாக ஏற்றுக் கொள்வதற்கு மலேயா தயாராக இருக்கவில்லை. ஆகையால் சிங்கப்பூருடன் மற்றப் பிரிட்டிஷ் போர்னியோ குடியேற்ற நாடுகளான சரவாக், வடபோர்னியோ, புருணைக் காப்பரசு (Brunai Protectorate) ஆகியவை இப்புதிய நாட்டுடன் சேர வேண்டும் என்ற திட்டத்தைப் பிரிட்டன் அறிவித்தது. பிரிட்டிஷ் போர்னியோப் பகுதிகளைச் சேர்ப்பதால் மேலும் 13,40,000 மலேய் மக்கள் சேர்க்கப்படுவார்கள். இம் மக்கள் சிங்கப்பூரிலுள்ள சீனர்களைச் சரியீடு செய்து புது மலேசியாவில் சம நிலையை உண்டுபண்ணுவார்கள். சரவாக்கின் மக்கள் தொகை 7,80,000; வட போர்னியோவின் மக்கள் தொகை 4,75,000; புருணையின் மக்கள் தொகை 85,000. பிரிட்டிஷ் போர்னியோப் பகுதியிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 25 விழுக்காடு சீனர்கள் என்பதை மறக்கக்கூடாது. இந்நாடுகளே தென்கிழக்காசியாவில் எஞ்சிய பிரிட்டன் குடியேற்ற நாடுகள். இந் நாடுகளின் மக்கள்தொகை குறைவாயிருந்ததால் அவர்கள் தனிச் சுதந்திர நாடாக இயங்குவது கடினம். சட்டம், கல்வி, நாணயம், திருவாக விவகாரங்கள் முதலிய செய்திகளில் இந்நாடுகளுக்கும், மலேயா, சிங்கப்பூர் ஆகியவற்றுக்கும் அதிக ஒற்றுமையிருந்தது. அரசியல் விவகாரங்களில் முன்னேற்றம் அடைந்த நாடுகளுடன் கூடிச் சேர விரும்பினால் பிரிட்டிஷ் போர்னியோ நாடுகளுக்கு விரைவில் சுதந்திரம் கிடைக்கும்.

துங்குவின் சிங்கப்பூர் அறிவிப்புக்குப் பிறகு இப்பகுதிகளில் மலேசியாத் திட்டத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடக்கத்

தொடங்கின. முக்கியமாகச் சிங்கப்பூரில் இத்திட்டத்தைப் பற்றி அதிகமாகப் பேச்சு நடந்தது. பல சிக்கல்களை மலேசியாத் திட்டம் தீர்க்கும் எனப் பலர் நம்பினார்கள். லீகுவான்யூவின் கட்சி கம்யூனிஸத்தைப் பற்றி அஞ்சியதோடல்லாமல் மலேயாவுடன் இணைந்தால் சிங்கப்பூருக்கு விரைவில் சுதந்திரம் கிடைக்கும் என நினைத்தது. மேலும், இத்திட்டத்தின் மூலம் போர்னியோ நாடுகளுக்கு விடுதலை கொடுக்கலாம் எனப் பிரிட்டன் விரும்பியது.

முதலில் நல்ல அறிகுறிகள் தோன்றின. மலேசியாத் திட்டத்தை உருவாக்குவதற்குத் தேவையான நாடுகளின் பிரதிநிதிகள் மலேசியன் ஆலோசனைக் குழுவின் (Malaysian Consultative Committee) உறுப்பினர்களாய்ச் சேர்ந்தார்கள். இக்குழு கி.பி. 1961ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் செச்சல்டனில் (Jesselton) கூடியது. சிங்கப்பூரில் அதிக ஆர்வம் இருந்தது; ஆனால், லீகுவான்யூவின் ஆட்சியின் இடதுசாரி உறுப்பினர்கள் உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்களில் கூட்டரசின் கட்டுப்பாடு அதிகரிக்கும் என அச்சமுற்றனர். ஆகையால், எட்டுச் சட்டசபை உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேறி, கி.பி. 1960ஆம் ஆண்டில் கட்சியைவிட்டு விலகிய ஐந்து உறுப்பினர்களுடன்சேர்ந்து பாரிசன் சோஷியலிஸ்டுக் கட்சியைத் (Barison Socialist Party) தொடங்கினார்கள். சரவாக்கிலும், சபாவிலும் (Sabah) இத்திட்டத்தை ஆதரிப்பவர்கள் அதிகரிக்கத் தொடங்கினார்கள். ஆனால், புருனே இத் திட்டத்தில் உற்சாகம் காட்டவில்லை; தனக்குப் பெட்ரோல் மூலம் வரும் வருமானத்தை மற்ற நாடுகள் பகிர்ந்து கொள்வதைப் புருனே வரவேற்கவில்லை.

பேச்சு நடந்தபின் மலேயாவும், சிங்கப்பூரும், பிரிட்டனும் கி.பி. 1961ஆம் ஆண்டு நவம்பரில் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டதாக முறைமையாக அறிவித்தன. போர்னியோ நாடுகளில் தேர்தல்கள் இதுவரை நடக்காததால் இம் மக்களின் கருத்தை அறிய வேண்டுமெனத் தீர்மானித்தனர்; மக்களின் கருத்தை அறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மலேயர்களும் ஆங்கிலேயர்களும் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்; கோமான் கொப்போல்டு (Lord Cobbold) இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1962ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் வரை இக் குழு சரவாக்கிலும் சபாவிலும் சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களைச் சந்தித்து அவர்களுடைய கருத்துகளை அறிந்தது. (1) மூன்றில் ஒரு பங்கு மக்கள் மலேசியாவுடன் உடனடியாகச் சேரவேண்டும் என விரும்பினார்கள். (2) மூன்றில் ஒரு பங்கு மலேசியாவுடன் சேர விரும்பியபோதும் தங்கள் தாயக

மக்களுக்கு உரிமை வகையில் பாதுகாப்பளிக்க வேண்டும் என முறையிட்டார்கள். (3) எஞ்சிய ஒரு பங்கு (இவர்களில் பெரும் பான்மையோர் சரவாக் சீனர்கள்) முதலில் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். அதைத் தரும்வரை பிரிட்டிஷ் ஆட்சி தொடர்ந்து நடக்கவேண்டும் எனத் தெரிவித்தார்கள். மேலே கூறியவை இக் குழுவின் அறிக்கையில் வெளியிடப்பட்டன.

மேலே கூறியதை ஆராய்ந்தால் மலேசியாத் திட்டத்தை எதிர்த்தவர்களைவிட வரவேற்றவர்களே பெரும்பான்மையோர். கொப்போல்டு அறிக்கை தங்கள் திட்டத்திற்குச் சாதகமாயிருந் தால் கி.பி. 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் நாள் புது நாடான மலேசியா பிறக்கும் என்று கி.பி. 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் மலேயப் பிரிட்டிஷ் அரசாங்கங்கள் அறிவித்தன.

பாரிசன் சோஷியலிஸக் கட்சி எதிர்த்தபோதிலும் சிங்கப்பூர் அரசாங்கம் மலேசியாத் திட்டத்தைக் கைவிடாமல் செயல்படுத்த வேண்டிய முறைகளைத் தொடங்கியது. மலேயாவுடன் எவ்வகை யான (இணைப்பைச் செயல்படுத்தவேண்டும்) கூட்டாட்சியை அமைக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கி.பி. 1962ஆம் ஆண்டு செப்டம்பரில் பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) எடுக்கப் பட்டது. மலேயாவுடன் இணையவேண்டும் என்ற கொள்கை ஆராயப்படாமலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப் பொதுமக்கள் வாக்கெடுப்பின் முடிவு பின்வருமாறு :

(1) லீகுவான்யூ கட்சியின் (PAP) மலேசியாத் திட்டத்தை ஆதரித்து 75 விழுக்காடு மக்கள் வாக்களித்தார்கள். (2) பாரிசன் சோஷியலிஸ்டு கட்சி கூறியதைப் பின்பற்றி 25 விழுக்காடு மக்கள் வெறும் வாக்குச்சீட்டைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

மலேசியாவுடன் சேர வேண்டிய எல்லா நாட்டு மக்களும் பொதுவாக இத்திட்டத்தை வரவேற்றார்கள். ஆகையால், கி.பி. 1962ஆம் ஆண்டின் திட்டப்படி மலேசியா பிறக்கும் என்ற எண்ணம் ஊர்ஜிதமாயிற்று.

ஆனால், இச் சூழ்நிலையில் எவரும் இந்தோனேசியாவின் மலேசியக் கொள்கையைப்பற்றிச் சிந்திக்கவில்லை. மலேசியாவின் அயல்நாட்டுக் கொள்கையைப் பற்றி விவரிக்கும் அத்தியாயத்தில் இந்தோனேசியாவின் மலேசியக் கொள்கையைப் பற்றி விவரமாக ஆராயப்பட்டிருக்கிறது.

21. சிங்கப்பூர்—குடியேற்ற நாட்டு நிலையிலிருந்து தனியுரிமையுடைய நகர அரசாக மாறுதல்
(Singapore—From Colony to City State)

ஜப்பானிய ஆதிக்கத்தின்போது சிங்கப்பூர் மக்கள், முக்கியமாகச் சீன மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். காரணமில்லாமல் பல சீனர்கள் கைது செய்யப்பட்டார்கள்; வழக்கு விசாரணையில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டும்; பொதுவாகச் சதிசெய்பவர்களை அகற்றி விட வேண்டும் என்ற மழுப்பு வாதத்தை ஜப்பானியர்கள் கூறினார்கள். அறிமுக அணிவகுப்புக் களத்திலிருந்து (Identification Parade) ஆயிரமாயிரம் சிங்கப்பூர் வாசிகள் பொறுக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பலவகையில் துன்புறுத்தப்பட்டார்கள்; ஏறத்தாழ 50,000 மக்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஜப்பானியர்கள் கொலையுண்டவர்களின் தலைகளை நெடுஞ்சாலைகளிலுள்ள கம்பங்களில் தொங்கவிட்டுப் போய்விடுவது வழக்கம்.

ஆகையால், கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஜப்பான் சரணடைந்தது என அறிந்தவுடன் சிங்கப்பூர் மக்கள் துயர் தீர்ந்தது என மகிழ்ச்சியுற்றனர். கி.பி. 1946ஆம் ஆண்டில் ஐக்கிய மலேயச் சட்ட திட்டம் மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களைப் பிரித்துக் கலைத்தது. பினங்கும் மலாக்காவும் புது மலேயா நாட்டுடன் இணைக்கப்பட்டன; சிங்கப்பூர் நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாக (Crown Colony) ஆங்கிலேய இராணுவ நிருவாகிகள் சிங்கப்பூரைக் கி.பி. 1945–46ஆம் ஆண்டில் தனியாக ஆட்சி புரிந்தார்கள்.

நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாட்டு அரசாங்கம்

இரண்டு காரணங்களால் மலேய்த் தீபகற்பத்திலிருந்து சிங்கப்பூர் பிரிக்கப்பட்டது. (1) சிங்கப்பூர் படைத்தளத்தின் சிறப்பும் அதனால் விளையக்கூடிய அரசியல் சிக்கல்களைத் தடுப்பதும்; (2) சிங்கப்பூரிலுள்ள பெரும்பான்மையான சீனர்களால் மலேய இனச் சமநிலைக் குலைவைத் (racial balance) தடுக்கும் நோக்கம்.

இப் புதிய அமைப்பில் சிங்கப்பூர்ச் சட்டமன்றத்தில் பணித்துறையைச் சாராத உறுப்பினர்களுக்குப் பெரும்பான்மை அளிக்கப்பட்டது. சட்ட திட்டத்தில் இது ஒரு புதுமுறையாகும். இம் மன்றத்தில் பணித்துறையைச் சாராதவர்கள் 13 பேரும், பணித்துறையைச் சார்ந்தவர்கள் 10 பேரும் உறுப்பினர்களாயிருந்தார்கள்.

பணித்துறையைச் சாராத ஆறு உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; பெருவாணிக அரங்கு (Chamber of Commerce) மூன்று உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். 21 வயதுக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் குடிகளுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆங்கிலம் பயின்ற மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களில் பிறந்த பிரிட்டிஷ் குடிகளிடம் படிப்படியாக அதிகாரத்தை மாற்றியமைக்கப் பிரிட்டன் நினைத்தது. ஆனால், இக்கொள்கை மற்றச் சிங்கப்பூர் மக்களிடம் மனக்கசப்பு ஏற்படுத்தியது. சிங்கப்பூரில் சீனமொழியில் பயின்றவரும் சீன தேசிய இயக்கத்திலே ஆர்வம் கொண்டவரும் ஆகிய வாலிபத் தலைமுறையினர் தங்களுக்கு அதிகாரம் செலுத்த வாய்ப்புக் கொடுக்காததால் பிரிட்டிஷ் கொள்கையை வரவேற்கவில்லை.

மலேயக் கூட்டரசுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அரசியலமைப்புக்குரிய மாற்றங்கள், மெல்லத்தான் சிங்கப்பூரில் தோன்றத் தொடங்கின. நெருக்கடிநிலைப் பிரகடனம் இருந்தால் இத்தகைய கொள்கையைப் பிரிட்டன் செயல்படுத்தியிருக்கும் எனக் கூற முடியாது. புரட்சிக்காரர்களின் கொடுஞ்செயல் நடவடிக்கை இத் தீவில் மிகுதியாகக் கிடையாது. தொழிற்சங்கங்களில் படிப்படியாக மறைமுகமாக உள்சென்று தோய்ந்து பரவுதல், சீன நடுத்தரப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆதரவைத் தேடுதல் போன்ற நடவடிக்கைகளின் காரணத்தால் மலேய்க் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் ஓடி ஒளிந்து தலைமறைவாகச் செயல்புரிந்தார்கள். இருந்தபோதிலும், கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் செல்வாக்கினாலும், சிங்கப்பூர்ப் படைத்தளத்தின் சிறப்பினாலும் ஆங்கிலேயர்கள் சிங்கப்பூருக்குத் தன்னாட்சியுரிமை கொடுக்கத் தயங்கினார்கள்.

கி.பி. 1948ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சிங்கப்பூரின் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது; மொத்த வாக்காளர்கள் 22,385. புதிய சட்டமன்றத்தின் ஆறு உறுப்பினர்கள்தாம் உள்நாட்டுத் தொகுதிகளிலிருந்து (Territorial Constituencies) தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்; இவர்களில் மூவர் முற்போக்காளர் கட்சியைச் சேர்ந்தவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இம் மன்றத்தில் சிறுபான்மையான மக்களின் பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள். அடுத்த கி.பி. 1951ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன் (மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தவேண்டும்) தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மேலும் மூன்றுபேர் அதிகரிக்கப்பட்டனர். ஒரு துணைமன்றக் கூட்டத் தலைவர் (Deputy Council President) நியமிக்கவும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இருந்தபோதிலும் அரசாங்கத்தால்

நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கே பெரும்பான்மை யிருந்தது; வாக்காளர்களின் எண்ணிக்கை 48,155 ஆக உயர்ந்தது. மூன்றில் இரண்டு பங்குக் குடிகளுக்கு வாக்களிக்கும் உரிமை அளிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் இரண்டு: (1) அவர்கள் பிரிட்டிஷ் குடிகள் அல்லர்; (2) அவர்கள் வாக்களிக்கும் பருவத்தைத் தொடவில்லை; கி.பி. 1951ஆம் ஆண்டுத் தேர்தலில் முற்போக்காளர் கட்சிக்கு மீண்டும் பெரும்பான்மை (6 இடங்கள்) கிடைத்தது. புதிய தொழிலாளர்கட்சி (Labour Party) இரண்டு இடம் பெற்றது. சில காலத்திற்குப் பின்பு இக்கட்சிக்கு இடைத்தேர்தலில் மேலும் ஒரு வெற்றி கிடைத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ஆளுநர் செயலாட்சி மன்றத்தின் (Governor's Executive Council) உறுப்பினர்களாகவும் இருப்பார்கள் என அரசாங்கம் அறிவித்தது. கி.பி 1953ஆம் ஆண்டில் ஜார்ஜ் ரெண்டெல் (George Rendel) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது; சிங்கப்பூரின் புதிய சட்டதிட்டத்தை உருவாக்குவதற்காகவே இக் குழுத் தோன்றியது.

ரெண்டெல் அரசியல் சட்டதிட்டம்

கி.பி. 1955ஆம் ஆண்டில் செயல் முறையில்வந்த அரசியல் சட்டதிட்டத்தின் மூலமுதல் ரெண்டெல் குழுவின் கி.பி. 1954ஆம் ஆண்டின் அறிக்கையே, வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பற்றியும், இரு மன்றங்களின் அமைப்பைப்பற்றியும் ஆலோசனை கூறியது. ரெண்டெல் குழுவின் அறிக்கையில் உள்ள மிக முக்கிய அம்சங்கள் :

(1) அரசாங்கம் தானாகவே பதிவு செய்து (Automatic registration) வாக்காளர்களின் எண்ணிக்கையை மிகுதியாக அதிகரிக்கவேண்டும். இதற்குமுன் தன்விருப்பப்படி பதிவு செய்து கொள்ளலாம். ஆகையால், வாக்காளர்களின் எண்ணிக்கை 75,000 என்பதிலிருந்து 300,000 ஆக உயர்ந்தது. ஆனால், பிரிட்டிஷ் குடிகளாயிருந்ததால்தான் வாக்களிக்க உரிமை கொடுக்கப்பட்டது.

(2) சட்டமன்ற (Legislative Assembly) உறுப்பினர்கள் 33 ஆக உயர்த்தப்படவேண்டும்.

(அ) 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ஆ) மூன்று அலுவல் சார்பான (ex. officio) உறுப்பினர்கள் அமர்த்தப்பட வேண்டும் [தலைமைச் செயலாளர் (Chief Secretary), நிதிச்செயலாளர்

(Financial Secretary), சட்டத்துறையின் தலைவர் (Attorney General)].

(இ) ஆளுநர் நான்கு உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்.

(ஈ) ஆளுநர் சபாநாயகரை நியமிக்க வேண்டும்.

(3) அமைச்சர்கள் மன்றம் (Council of Ministers) ஒன்று அமைக்கப்படவேண்டும். (அ) மூன்று அலுவல்சார்பான உறுப்பினர்கள்; (ஆ) சட்டமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியின் 6 உறுப்பினர்கள்; சில அரசாங்கப் பணித்துறைகள் இதன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்படும். சட்டமன்றத்திற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது இந்த அரசியல் சட்டதிட்டம்.

புதுக்கட்சிகள் தொடங்கப்பட்டன. மிதவாதி இடதுசாரிப் பிரிவினர்களும், தொழிற்சங்கங்களும் ஒத்துழைத்துத் தொழிலாளர் முன்னணிக் கட்சியை (Labour Front) அமைத்தார்கள். குடியேற்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டும் மக்கள் செயற்படுமுறைக் கட்சி (Peoples Action Party—PAP) நிறுவப்பட்டது. முற்போக்காளர் கட்சியை எதிர்க்கும் சக்தி இவ்விரு கட்சிகளுக்குமே இருந்தது.

பொதுத் தேர்தலின் முடிவு பின்வருமாறு :

தொழிலாளர் முன்னணிக் கட்சி	10
மக்கள் செயற்படுமுறைக் கட்சி	3
சுயேச்சை	3
முற்போக்காளர் கட்சி	4
மக்களாட்சியைச் சார்ந்த கட்சி [1]	4
கூட்டணிகள் (Alliance)	3

ஒரு கட்சிக்குக்கூடத் தேவையான பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனால், தொழிலாளர் முன்னணிக் கட்சியின் தலைவரான டேவிட் மார்ஷலை (David Marshall) ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும்படி அரசாங்கம் அழைத்தது; இவர் கட்சியே அதிக இடங்கள் பெற்றிருந்தன. சிங்கப்பூரின் முதல் முதல்அமைச்சராக மார்ஷல் பதவி ஏற்றார். கூட்டணிகளோடும் (Alliance) ஆளுநரால் நியமனஞ் செய்யப்பட்ட இரு தொழிலாளர் முன்னணிக் கட்சி

[1] Democratic Party : இக்கட்சிக்குச் சீனப்பெருவாணிக அரங்கின் (Chinese Chamber of Commerce) ஆதரவு கிடைத்தது.

உறுப்பினர்களோடும் கூட்டாக இணைந்து ஆட்சி அமைத்தார் (Coalition Government).

ஆனால், நிருவாகப் பொறுப்பும் அதிகாரமும் பிளவுபட்டுப் பங்கீடு செய்திருந்ததால் மார்ஷல் அரசாங்கம் துன்பத்திற்குள்ளாயிற்று. பதவியேற்று நான்கு மாதங்களுக்குப் பிறகு முதல் அமைச்சர், ஆளுநர் சர் ராபர்ட் பிளாக்கு (Sir Robert Black) ஆகியவர்களிடையே அதிகாரம், கருத்து வேறுபாடு தோன்றியது. நான்கு உதவி அமைச்சர்களை (Assistant Ministers) நியமிக்க மார்ஷல் விரும்பினார். இதை ஆளுநர் எதிர்த்தார். முதல் அமைச்சர் அறிவுறுத்தி இணங்க வைத்ததால், இக்கருத்து வேறுபாட்டைப் பிரிட்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் எடுத்துரைக்க வேண்டும். உடனடியாகத் தன்னாட்சி அமைக்க வேண்டும் எனச் சட்ட மன்றம் விண்ணப்பித்துக் கொண்டது. கி.பி. 1956ஆம் ஆண்டில் சிங்கப்பூரும் பிரிட்டனும் அரசியல் சட்டதிட்டம் பற்றிப் பேச்சு நடத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. விமான நிலைய ஊர்வலம் ஒன்று கலகமாக மாறியதை நோக்கினால், வெடிக்கும் இயல்புடைய மனப்பாங்கு மக்களிடம் இருக்கிறது என அறிய முடிந்தது. இம் மனப்போக்கிருந்ததால் தீவிரத் தொழிற் சங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. மக்கள் மன்றங்கள் அதிக அளவில் அமைக்கப்பட்டன. இச் சூழ்நிலையில் அரசாங்கத்தை நடத்துவது கடினமாயிருந்தது.

கி.பி. 1956ஆம் ஆண்டில் பேச்சு ஏறத்தாழ நன்முறையில் நடந்தது எனக் கூறலாம். தன்னாட்சி முறை சிங்கப்பூருக்கு அளிக்கப்படும்; உள்நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்புகள், அயல் நாட்டு உறவுத் தொடர்புகள், பாதுகாப்பு அதிகாரம் முதலிய வற்றைப் பிரிட்டன் கைவிடாமல் தொடர்ந்து நடத்தும் நோக்கப் படி ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தாததால் மார்ஷல் பதவியினின்று விலகினார். தொழிலாளர் முன்னணியின் தலைவரான லிம் யு ஹாக் (Lim Yeu Hock) முதல் அமைச்சர் பதவியேற்றார். உடனடியாகத் தொழிற் சங்கங்களும், பல சீன நடுத்தரப் பள்ளி மாணவர்களும் வேலை நிறுத்தங்களையும் ஊர்வலங்களையும் அடிக்கடி நடத்தினார்கள். இதைத் தடுப்பதற்காகக் காவலர் முயற்சிகளின் விளைவாகக் கி.பி. 1956ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பரில் நாடு முழுவதும் கலகங்கள் தோன்றின. ஆனால், இக்கலகங்களை லிம் யு ஹாக் திறனுடன் அடக்கினார். பல தலைவர்கள் கைது செய்யப் பட்டு அரசாங்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்கள். இச் சூழ்நிலை தன்னாட்சி அமைப்பதற்கு ஏற்றதாக இருக்கவில்லை.

தன்னாட்சி உரிமைப் பேச்சு

அனைத்துக் கட்சி உரிமைப்பேராளர் குழு ஒன்று கி.பி. 1957ஆம் ஆண்டில் அரசியல் சட்டதிட்டம் பற்றிய பேச்சு நடத்த இலண்டனுக்குச் சென்றது. இதன் விளைவால் உள்நாட்டுப் பாதுகாப்பு மன்றம் (Internal Security Council) ஒன்றை அமைக்கப் பிரிட்டன் உடன்பட்டது. இம்மன்றத்தின் உறுப்பினர்கள்-சிங்கப்பூர் 3, பிரிட்டன் 3, மலேயா 1. மலேய உறுப்பினர்களுக்கு வாக்குரிமை (Casting-vote) கொடுக்கப்பட்டது. இதன் பயனால் உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்களில் பங்குகொள்ளச் சிங்கப்பூருக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. சிங்கப்பூர் பின் சிங்கப்பூர் நாடு (State of Singapore) என அழைக்கப்பட்டது.

அரசியல் சட்டதிட்டப் பேச்சு கி.பி. 1957, 1958ஆம் ஆண்டுகளில் நடந்து கொண்டிருக்கும்போது சட்டமன்றம் சில முக்கியமான சட்டங்களை வெளியிட்டது. சிங்கப்பூருக்குத் தன்னாட்சி வந்தவுடன் சிங்கப்பூர் வளர இச் சட்டங்கள் ஊன்றுகோலாயிருந்தன. படைத்துறையைச் சாராத பொதுநிலை அரசுபணி (Civil Service), குடிஉரிமை, கல்வி ஆகியவற்றைப் பற்றியவை இச்சட்டங்கள். சிங்கப்பூரைத் தாய் நாடாக ஏற்றுக்கொள்ளும் எல்லாச் சிங்கப்பூர் மக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும் எனச் சிங்கப்பூர் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் விரும்பினார்கள். பொதுப்பணிக் குழு (Public Service Commission) ஒன்று அமைக்கப்பட்டதால் உள்நாட்டு அதிகாரிகளை விரைவாக நியமிக்க முடிந்தது. ஒரு குடிஉரிமைச் சட்டத்தின் (Citizenship Bill) மூலம் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சிங்கப்பூரில் பிறந்தவர்களுக்கும், சிங்கப்பூரில் எட்டு ஆண்டுகள் தங்கி வசித்துவந்தவர்களுக்கும் குடிஉரிமை அளிக்கப்பட்டது. இதன் பயனால் மேலும் 3,25,000 குடிகளுக்கு வாக்குரிமை கிடைத்தது; சீனமொழி பயின்றவர்களுக்குப் பெரும்பான்மை கிடைத்தது. சீன மொழிப் பள்ளிக்கூடங்களுக்கும், மற்றப் பள்ளிகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கி.பி. 1957ஆம் ஆண்டு நவம்பரில் கல்விச் சட்டம் (Education Bill) நீக்கியது. முதல் முறையாக ஒரு தேசியக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டது. இது நாட்டின் ஒற்றுமைக்கு மிக அவசியமான அடிப்படையாகும்.

இதுவரை ஆங்கில மொழியின் மூலம் பயிற்சியளிக்கும் மலேயாப் பல்கலைக் கழகத்தில்தான் (Malay University-தற்பொழுது சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகம்) சிங்கப்பூர் மக்களுக்குப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆங்கில மொழி மூலம் இப்பல்கலைக் கழகம் கற்பித்ததால் சீனமொழியில் பயின்ற சிங்கப்பூர் மக்களுக்குச்

சிங்கப்பூரிலே தங்கி மேல்படிப்புப் படிக்க வாய்ப்புக் கிடைக்க வில்லை. மேல்படிப்பிற்காக அவர்கள் சீனுவுக்கும், தைவானுக்கும், அமெரிக்கக் குடியரசுக்கும் செல்லவேண்டியதாயிருந்தது. ஆனால் சீனர்கள் பொருளுதவியுடன் கி.பி. 1958ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நான்யாங் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

கி.பி. 1957ஆம் ஆண்டின் இறுதியில் முதன்முறையாக எல்லா உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டு மன்றம் (City Council) பதவிக்கு வந்தது. மக்கள் செயல்படுமுறைக் கட்சிக்கு (PAP-இனிச் செயற்படுமுறைக் கட்சி என அழைப்போம்) 13 இடங்கள் கிடைத்தன. எஞ்சிய 30 இடங்கள் வேறு நான்கு கட்சிகளுக்கும், சுயேச்சைகளுக்கும் கிடைத்தன. பெரும்பான்மை யான இடங்கள் செயற்படுமுறைக் கட்சிக்குக் (PAP) கிடைத்த தால் இம்மன்றம் இதற்கு இசைந்து நடக்கக் கடமைப்பட்டிருந்தது. இத் தேர்தல் மூலம் செயற்படுமுறைக் கட்சி (PAP) மக்கள் ஆதரவை அதிக அளவில் பெறுகிறது எனப் புரிந்தது.

தன்னாட்சி

கி.பி. 1958ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசியல் சட்ட திட்டம் நடைமுறைக்கு வந்தது. சிங்கப்பூருக்கு முழுத் தன்னாட்சி உரிமை அளிக்கப்பட்டது. உள்நாட்டுப் பாதுகாப்பு மன்றத்தில் வாக்குரிமை தரப்பட்டது. அயல்நாட்டு வாணிபப் பொறுப்பும் அதிகாரமும் கொடுக்கப்பட்டன. அயல்நாட்டு உறவு, சிங்கப்பூரின் பாதுகாப்பு முதலியவற்றின் அதிகாரங்கள் தொடர்ந்து பிரிட்ட னிடமே இருந்தன. ஆகையால், அன்றாட நிருவாகப் பொறுப்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திடம் விடப் பட்டது.

5,55,655 வாக்காளர்கள் சட்டமன்றத்தின் மொத்த 51 உறுப் பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். கி.பி. 1955ஆம் ஆண்டில் 3,00,000 குடிகளுக்கே வாக்குரிமையிருந்தது.

பொதுத்தேர்தல் நடந்தபோது 90 விழுக்காடு குடிகள் வாக்களித்தார்கள். 51 தொகுதிகளில் தேர்தல் நடந்தது. செயற் படுமுறைக் கட்சி (PAP) 43 தொகுதிகளைக் கைப்பற்றியது. ஆகையால், லீகுவான்யூ பதவியேற்ருர்.

வாக்குறுதிப்படி செயற்படுமுறைக் கட்சி நாட்டு மன்றத்தைக் (City Council) கலைத்து ஒழித்தது. பொதுநலத்துறை வாரியத் திற்கும் (Public Utilities Board), அரசாங்கத் துறைகளுக்கும்,

நாட்டு மன்றத்தின் அதிகாரங்களும் பொறுப்புகளும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. மலேயாவில் பிறந்த சிங்கப்பூரின் முதல்வராக (Head of State) யாங்-டி-பெர்துவான் நெகரா (Yang-di-Pertuan Negare), இனச்சி யூசுப் பின் இஷாக் (Inche Yusof bin Ishok) நியமிக்கப்பட்டார்கள். தென்கிழக்காசியாவின் மிகச் சிறிய நாடான சிங்கப்பூரின் தலைமை அமைச்சராக (Chief Minister) லீ-குவான் யூ பதவியேற்றார்.

22. மலேயாவின் அயல்நாட்டுக் கொள்கை

1957-ல் மலேயா சுதந்திரமடைந்தபோதிலும், அதன் அயல் நாட்டு நடவடிக்கை பல கட்டுப்பாடுகளுக்குள் அடங்கியிருந்தது. மலேயக் கம்யூனிஸ்டுத் தீவிரவாதிகளின் புரட்சி நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் மலேயா சுதந்திரமடைந்ததால், கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் அயல்நாட்டுக் கொள்கைகளை மலேயா பின்பற்றியது. ஆகையால், மேலைநாட்டவர்களை ஆதரிக்கும் வெளிவிவகாரக் கொள்கைகளைப் பின்பற்றியது எனக் கூறலாம். 'இரண்டு கோட்பாடுகளுக்குள்—மேலைநாடுகளின் கோட்பாடுகள், கீழ்த் திசை நாடுகளின் கோட்பாடுகள்—முரண்பாடு, சண்டை சச்சரவு ஏற்பட்டால் மேலைநாடுகளின் கோட்பாடுகளையே அல்லது மேலைநாடுகள் நடைமுறையில் செயல்படுத்தும் மக்களாட்சியை நாங்கள் ஆதரிப்போம் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்' எனத் துங்கு அப்துல் ரஹ்மான் (Thunku Abdul Rahman) கூறினார். மேலைநாட்டுக் குடியாட்சித் தத்துவத்தையும், உதாரணமாகச் சுதந்திரமாகச் சிந்தனை செய்வதையும், பேச்சுரிமையையும், கீழ்த்திசை நாடுகளின் மக்களாட்சி முறையையும் துங்கு ஒப்பிட்டுப் பார்த்தார். கீழ்த்திசை நாடுகளின் குடியாட்சி முறையில் ''அவர்கள் உங்களுக்காகச் சிந்தனை செய்கிறார்கள்; பேசுகிறார்கள்; 'வழிகாட்டி வரையறுக்கப்பட்ட குடியாட்சியின்' (Guided Democracy) கீழ் எப்பாதையில் போக வழிகாட்டுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது'' எனத் துங்கு கூறினார். மலேயா பிரிட்டிஷ் சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசின் (British Commonwealth) உறுப்பினரா யிருந்ததால் ஆப்பிரிக்கா-ஆசியா ஆகிய நாடுகளுடன் ஒற்றுமையாயிருக்கவேண்டும் என விரும்பியது. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டணி அமைப்பு ஒன்றை நிறுவவேண்டும் எனவும் விரும்பியது. மேலை நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகொள்ளும் கொள்கை, பிரிட்டிஷ் இராணுவமும் தளமும் மலேயாவில் இருக்க அனுமதி அளிக்கும் கொள்கை முதலியவைகளை மலேயாவின் எதிர்க்கட்சிகள், முக்கியமாகச்

சோஷியலிஸ்ட் முன்னணிக் கட்சி (Socialist Front) எதிர்த்தது. இம்மாதிரிக் கொள்கைகளைப் பின்பற்றினால் இரண்டு வல்லரசு நாடுகளிடையே (big powers) ஏற்படும் சண்டையில் மலேயாவும் பங்குகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும் என எதிர்க்கட்சிகள் பயந்தன. ஆகையால், நடுநிலைக் கொள்கையை (policy of neutrality) மலேயா பின்பற்றவேண்டும்; அம்மாதிரியான கொள் கையைப் பின்பற்றினால்தான் ஆப்பிரிக்கா—ஆசியா இனக்குழுவின் உறுப்பினராகச் சேரமுடியும் என எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர்.

இந்த அயல்நாட்டுக் கொள்கையே ஐக்கிய நாடுகளின் அமைப்பிலும் மலேயா பின்பற்றியது. ஆப்பிரிக்காக் கண்டத்தி லுள்ள போர்த்துக்கீசியர்களின் குடியேற்றங்களையும் (Colonies), அல்ஜீரியாவில் பிரெஞ்சு நாடு பின்பற்றிய கொள்கைகளையும், தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையையும் (Apartheid) ஐக்கிய நாடுகளின் அமைப்பில் மலேயா தீவிரமாக எதிர்த்தது. 1960ஆம் ஆண்டில் சரிசம தனிஉரிமையுடைய கூட்டரசின் தலைமை அமைச்சர்களின் மாநாட்டில் (Common-wealth Minister's Conference) தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைத் தீவிரமாகத் துங்கு எதிர்த்ததால் தென் ஆப்பிரிக்கச் சரிசம தனி உரிமையுடைய கூட்டரசிலிருந்து விலக வேண்டியதாயிருந்தது. குடியேற்றக் கொள்கைகளை மட்டும் மலேயா எதிர்க்கவில்லை; அதனுடைய அரசியல் தத்துவத்திற்கு முரண் பாடாகவிருந்த மற்றச் செயல்களையும் எதிர்த்தது. ஹங்கேரியில் உருசியா பின்பற்றிய அடக்குமுறைச் செயல்களையும், திபெத்து நாட்டின்மீது சீனு படையெடுத்த நடவடிக்கை முதலியவைகளையும் மலேயா எதிர்த்துக் கண்டனம் தெரிவித்தது. ‘பண்டைய வழிவழி மரபான ஐரோப்பியக் குடியேற்றக் கொள்கைகளை எதிர்ப் பதில் ஆப்பிரிக்கா, ஆசியா மேம்பாடு அடைந்திருந்த தருணத்தில் அதைவிட இழிவான ஒரு புதிய பேய்த்தன்மையுடைய, பழிக்கப் படத்தக்க, கொடிய குடியேற்றக் கொள்கை ஒன்று உருவாகுவதை நாங்கள் விழிப்புணர்ச்சியுடன் காண்கிறோம்’ என மலேயாவின் ஐக்கிய நாடுகளின் அமைப்பின் உறுப்பினர் பொதுப்பேரவையில் கம்யூனிஸத்தைத் தாக்கும்போது கூறப்பட்டது.

1960—63ஆம் ஆண்டுகளில் ஆயிரத்திற்கு மேலுள்ள மலேய நாட்டின் படைவீரர்களைக் காங்கோவிற்குச் (Congo) சென்ற ஐக்கிய நாடுகளின் அமைப்பின் படைகளுடன் மலேயா அனுப் பியது. ஐக்கிய நாடுகளின் அமைப்பின்மேல் மலேயாவுக்குள்ள பற்றுறுதியை இச்செய்கை எடுத்து விளக்குகிறது.

கம்யூனிஸத்தைத் தீவிரமாக எதிர்த்த போதிலும், தென்கிழக்காசிய நேச உடன்படிக்கை அமைப்பின் (Southeast Asia Treaty Organisation) உறுப்பினராக மலேயா சேர மறுத்தது. படைத் துறைக்குரிய குறிக்கோளுடன் நோக்கினல் பிரிட்டனுடன் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தினல் ஏற்படும் பயன்களை விட மேலும் வேறு வகையான பயன்கள் தென்கிழக்காசிய நேச உடன்படிக்கை அமைப்பின் உறுப்பினராகச் சேர்வதால் ஏற்படாது. வலிமை குன்றியதாலும், அல்லது உலகத்தின் மற்றப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புகளினுலும் பிரிட்டனின் படைஉதவி மலேயாவுக்கு ஒருவேளை கிடைக்காமல் இருக்க நேரிட்டாலும், கம்யூனிஸ்டு சீனு தாய்லாந்து வழியாக நுழைந்து மலேயாவின் மேல் படையெடுத்தால் அமெரிக்கக் குடியரசு மலேயாவிற்கு உதவ முன்வரும் என மலேயா புரிந்துகொண்டது. மேலும், தென்கிழக்காசிய நேசஉடன்படிக்கை அமைப்பைக் கம்யூனிஸ்டு சீனு மட்டும் எதிர்க்கவில்லை; இந்தியா, இந்தோனேசியாகூட அதை வெறுத்து ஒதுக்கியது என மலேயாவுக்குப் புரிந்தது. மேலே கூறியதே மலேயா தென்கிழக்கு ஆசியா நேச உடன்படிக்கை அமைப்பில் சேராமல் மறுத்ததற்குக் காரணம் என 1954ஆம் ஆண்டில் கேன்பெராவில் (Canberra) நடந்த பேட்டியில் துங்கு கூறினர். 1963ஆம் ஆண்டில் இந்தோனேசியா மலேயாவைத் தாக்கிய சமயத்தில்கூட மலேயாவின் இக்கொள்கையில் மாறுதல் ஏற்படவில்லை.

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டுச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என மலேயா விரும்பியது. பிரிட்டனுடன் செய்து கொண்ட படைசம்பந்தமான உடன்படிக்கை மற்ற உடன் படிக்கைகள் முதலியன கூடிய சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும்; ஆகையால் தென்கிழக்காசிய நாடுகளின் நட்பும் பொருளாதார, முதலியவை சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றை மலேயா அமைக்க வேண்டியது அவசியம் என 1959ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் துங்கு கூறினர். ஆனல், துங்குவின் நோக்கத்தை மற்றத் தென்கிழக்காசிய நாடுகள் ஐயத்துடன் நோக்கின. பிரிட்டனும், அமெரிக்கக் குடியரசும் தூண்டியதால்தான் துங்கு இம்மாதிரிக் குறிக்கோளை வெளிப்படையாகத் தெரிவித்தாரோ என்றும், ஒருவேளை இந்நோக்கம் தென்கிழக்காசிய நேச உடன் படிக்கையின் உருமாறிய திட்டமாயிருக்குமோ எனவும் மற்ற நாடுகள் ஐயப்பட்டன. புதிதாகச் சுதந்திர மடைந்த மலேயா நாடு இக்குறிக்கோளை அறிவிக்க முன் வந்தால் மற்றத் தென்கிழக்காசிய நாடுகள் இவ்வெண்ணத்தை வரவேற்கா எனத் துங்கு பயந்தார். இந்நோக்கத்தை இந்தோனேசியா வரவேற்கவில்லை.

ஆனால், 1960ஆம் ஆண்டுக்குள் இம்மாதிரிச் சங்கம் ஒன்றை நிறுவ மலேயா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஒப்புக்கொண்டன; அரசியல் விவகாரங்களில் ஈடுபடாத (non-political) சங்கமாக இருக்கவேண்டுமென்றும், வல்லரசு நாடுகளுடன் இணையாமல் இருக்கவேண்டிய சங்கமாக அமைக்க வேண்டுமென்றும் ஓர் உடன் படிக்கை ஏற்பட்டது. இச்சங்கத்தைத் 'தென்கிழக்காசியச் சங்கம்' (The Association of Southeast Asia) என அழைத்தார்கள். இச்சங்கத்தின் அயல்நாட்டு அமைச்சர்களின் மாநாடு 1961ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பாங்காக்கில் கூடியது. வருங்காலத்திலும் ஆண்டுக்கொருமுறை இம்மாதிரியாகக் கூடிச் சந்திக்கவேண்டும் என்றும், தேசியத் தலைமைச் செயலகங்களை அமைக்கவேண்டு மென்றும் இம்மாநாடு முடிவெடுத்தது. சுற்றுலாத் திட்டம், தென்கிழக்காசிய நாடுகளின் விமானம், கப்பல், மற்றும் பல போக்குவரவு சாதனங்கள் முதலியவை சம்பந்தமானதிட்டம் அயல் நாட்டு வாணிபம், பண்பாட்டுப் பரிமாற்றம் நடவடிக்கைகள் (Cultural Exchanges) ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆகியவை சம்பந்தமான செயல்களை இந்நாடுகள் எடுக்கத்தொடங்கின. மீண்டும் 1963ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மணிலாவில் அயல் நாட்டு அமைச்சர்கள் சந்தித்தார்கள். 1963ஆம் ஆண்டு இறுதியில் மலேசியா பிலிப்பைன்ஸ் உறவு துண்டிக்கப்பட்டதால், தென்கிழக் காசியச் சங்கத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. மீண்டும் 1966ஆம் ஆண்டில்தான் இச்சங்கம் செயல்புரியத் தொடங்கியது.

1960ஆம் ஆண்டில் நெருக்கடிநிலை (Emergency) நீக்கப் பட்டவுடன், ஐக்கிய நாடுகளின் அமைப்பின் உறுப்பினராகக் கம்யூனிஸ்டுச் சீனாவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என மலேயா கூறியது. தன்நாட்டுக்குள் கம்யூனிஸ்டுகளுடன் போர்புரிந்து கொண்டிருக்கும் சமயத்தில் கம்யூனிஸ்டுச் சீனாவை ஐக்கிய நாடு களின் அமைப்பின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளக் கூடாது என மலேயா சண்டனம் தெரிவித்துக்கொண்டிருந்தது. ஆனால், 1960ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுச் சீனாவை ஐக்கிய நாடுகளின் அமைப்பின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையை மலேயா ஆதரித்து வரவேற்கும் எனத் துங்கு அறிவித்தார். நெருக்கடிநிலை நீடிக்கப்பட்டபோதிலும், சீனாவின் ஆதரவுடன் படைக் குறைப்பைச் செய்தால்தான் பலன்கிடைக்கும் எனத் துங்குவிற்கு அவருடைய நண்பர்கள் எடுத்துரைத்தார்கள். ஆனாலும், மலேயா சீனாவுடன் தூது உறவை அமைக்காது எனத் துங்கு அறிவித்தார். மலேயாவில் பெரும் அளவில் சீனர்கள் வாழ்ந்துவந்ததால் கம்யூனிஸ்டுச் சீனா அல்லது தேசியச் சீனாவுடன் உறவு வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் மலேயாவிற்கிருந்தது.

பார்மோசா (Formosa) அல்லது தைவான் (Taiwan) சீனுவைத் தனிநாடு எனக் கம்யூனிஸ்டுச் சீனு ஒப்புக்கொண்டால்தான் கம்யூனிஸ்டுச் சீனு ஐக்கிய நாடுகளின் அமைப்பின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையையும் மலேயா ஆதரிக்கும் என ஐக்கியநாடுகள் அமைப்பின் பொதுப் பேரவையில் மலேயா 1961ஆம் ஆண்டில் தெரிவித்தது. இறுதியாக ஐக்கிய நாடுகள் அமைப்பில் கம்யூனிஸ்டுச் சீனுவை உறுப்பினராக அனுமதிக்கக் கூடாது என 1961ஆம் ஆண்டில் மலேயா வாக்களித்தது; 1926ஆம் ஆண்டில் இது சம்பந்தமாக இவ் அமைப்பில் ஒரு மன்றத்தீர்மானக் கோரிக்கை (Motion) கொண்டு வந்தபோது, இது தெளிவற்றதாயிருக்கிறது என மலேயா வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த மறுத்தது (abstained). ஆனல், கம்யூனிஸ்டுச் சீனு இந்தியாவின்மேல் படையெடுத்ததால் மலேயா 1936ஆம் ஆண்டுக்குப் பிறகு கம்யூனிஸ்டுச் சீனுவை உறுப்பினராக ஏற்றுக்கொள்ளக்கூடாது என ஐக்கிய நாடுகள் அமைப்பில் மலேயா வாக்களிக்கத் தொடங்கியது. மூன்று காரணங்களால் இந்தியாவை மலேயா ஆதரிக்கிறது எனத் துங்கு புது டெல்லியில் எடுத்துரைத்தார். (1) அமைதியான முறையில் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரமடைந்ததாலும், மக்களாட்சி முறையில் நம்பிக்கை உள்ளதாயிருந்ததாலும், சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசின் உறுப்பினராயிருந்ததாலும், உணர்ச்சி வசப்பட்டு மலேயா மக்கள் இந்தியாவை ஆதரிக்கிருர்கள். (2) இந்தியாவின் இன்னல்களைப் பற்றி நெருக்கடி நிலையின்போது மலேயாவால் உணர முடிந்தது. (3) மேலும், ஒருவேளை இந்தியாவிற்கு எதிராகச் சீனு வெற்றியடைந்தால், உடனடியாக அது மலேயாவின் மேல் படையெடுக்கலாம். ஆகையால், இந்தியாவிற்கும் சீனுவிற்கும் வெளிப்படையாகப் போர் ஏற்பட்டால் முழுமனத்துடன் மலேயா இந்தியாவைத்தான் ஆதரிக்கும். 'மக்களாட்சியைக் காப்பாற்றும் நிதி' (Save Democracy Fund) ஒன்று தொடங்கப்பட்டது. துங்கு இதன் கூட்டத் தலைவராக (Chairman) நியமிக்கப்பட்டார். இந்நிதி மூலம் குடியாட்சி பாதுகாக்கப்படுமென்றும், இந்நிதி இந்திய அகதிகளுக்கு உதவ அனுப்பப்படும் என்றும் மலேய அரசாங்கம் அறிவித்தது. இந்நிதியை ஆயுதங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தலாம்; இந்நிதியைப் பயன்படுத்தி மலேயா மக்களிடையே அரசியல் வாதிகள் பிளவு ஏற்படுத்துவார்கள் என மலேய எதிர்க் கட்சிகள் வாதாடின. இந்தியாவின் சில எல்லைப்பகுதிகள் சீனுவிற்குச் சொந்தம் எனக் கம்யூனிஸ்டுச் சீனு கூறியதைப் பார்மோஸா சீனுவும் ஆதரித்தது. ஆகையால், இந்நிதிக்குப் பணம் அளித்த

வர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்கள்; பணம் கொடுத்த சீனர்கள் மிகக் குறைவே.

1965ஆம் ஆண்டு அக்டோபரில் பாகிஸ்தான் மலேயாவுடன் உள்ள தூதுவ உறவைத் துண்டித்தது. இந்தியா—பாகிஸ்தான் போர் சம்பந்தமாக ஐக்கிய நாடு சபையில் நடந்த விவாதத்தில் மலேயா பாகிஸ்தானிற்கு எதிராகச் சில அறிவிப்புகள் விட்டது என்ற காரணத்தினால் இத்தீர்மானத்தை எடுத்தோம் எனப் பாகிஸ்தான் அறிவித்தது. ஆனால், உண்மையான காரணம் இந்தியாவிற்கும் மலேசியாவிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பாகிஸ்தான் வெறுத்தது ஆகும்.

கம்யூனிஸ்டுகளுடன் போர் செய்துகொண்டிருக்கும் சூழ்நிலையில் மலேயாவிற்குச் சுதந்திரம் வந்ததால் மலேயா தென் வியட்நாமை ஆதரித்தது; கம்யூனிஸ்டு வடவியட்நாம்தான் வலுச் சண்டைக்கு வந்தது (aggressors) என அறிவித்தது. சீனாவின் ஆதரவுடன் தான் கம்யூனிஸ்டு கொரில்லாப் போர்வீரர்கள் தென் வியட்நாமிலும், மலேயாவிலும் சண்டையிடுகிறார்கள் என மலேயா நினைத்தது. முதன் முதலாக மலேயா சுதந்திரமடைந்தவுடன் துங்கு சென்ற அயல்நாடு தென்வியட்நாம். நெருக்கடி நிலை முடிந்த சூழ்நிலையிலும், டியம் (Diem) பதவியிலிருந்து வீழ்த்தப் பட்டபோதிலும், அமெரிக்கப் போர் நடவடிக்கைகள் வியட்நாமில் அதிகரித்திருந்தபோதிலும் கூட மலேயா தென்வியட்நாமை ஆதரித்தது. இம்மாதிரியாகவே தென்கொரியா மீதும் மலேயா பரிவு காட்டியது.

1960ஆம் ஆண்டில் 20 மலேசிய அரசியல் தூதுவர் அலுவலகங்கள் அயல் நாடுகளில் இருந்தன.

சுதந்திரமடைந்த சமயத்திலே நாட்டின் பாதுகாப்புப் பொறுப்புகளை முழுவதையும் மலேயா ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால், நாட்டிற்குள் கம்யூனிஸ்டுப் புரட்சி வீரர்களோடு மலேயா போர் செய்துகொண்டிருந்ததால் மலேயாவிலுள்ள பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகளின் படைவீரர்களைக் கம்யூனிஸ்டுகளை அடக்கி ஒழிப்பதற்காக மலேயா பயன்படுத்திக் கொண்டிருந்தது. ஆகையால், மலேயா பிரிட்டனுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டது. இவ்வுடன் படிக்கையின்படி, மலேயாவின் வெளிப்பாதுகாப்பு சம்பந்தமாகப் பிரிட்டனின் உதவியை மலேயா நாடலாம்; மலேயாவிற்குள் பிரிட்டன் இராணுவத்தளத்தை (Base) அமைக்கலாம்; வாய்ப்பு

நலன்களை நாடலாம். ஆனால், எவ்வளவு ஆண்டுகள் இவ்வுடன்படிக்கை நீடிக்கும் என்பது குறிப்பிடப்படவில்லை; இவ்வுடன்படிக்கையை மாற்றி அமைக்க இவ்விரு நாடுகளுக்கும் உரிமையளிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டில் நெருக்கடி நிலையை நீக்கிய பிறகும் இவ்வுடன்படிக்கையை மாற்றி அமைக்கவோ நீக்கவோ முயற்சி எடுக்கப்படவில்லை. பிரிட்டிஷ் படை மலேயாவைவிட்டுச் சென்றால் நாட்டின் பாதுகாப்பிற்காக ஏற்படும் செலவு அதிகரித்துவிடும் என மலேயாவிற்குத் தெரியும். அவ்வாறு செய்தால் நாட்டின் கிராம அபிவிருத்திக்காகச் செய்யப்படும் செலவைக் குறைக்கவேண்டிய நிலைமை வரும் என மலேயா பயந்தது.

மலேசியா

மலேசியா உருவானவுடன் இவ்வுடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏனென்றால், இவ்வுடன்படிக்கையின்படி சிங்கப்பூர், சபா (Sabah) அல்லது சரவாக்கின் பாதுகாப்பு முன்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிங்கப்பூரை இவ்வுடன்படிக்கையின்கீழ்க் கொண்டுவருவதால் பல சிக்கல்கள் விளையும். மலேயாவைப் போல, மலேசியாவும் தென்கிழக்காசிய நேச உடன்படிக்கை அமைப்பின் (SEATO) உறுப்பினராகச் சேராது. 1957ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி மலேயாவின் மீதோ பிரிட்டிஷ் காப்பாட்சியின் கீழுள்ள தூரக்கிழக்கு (Far East) நாடுகளின் மீதோ பிரிட்டனின் ஆட்சியின் கீழுள்ள நாடுகளின்மீதோ ஏதாவது ஒரு நாடு படையெடுத்தால், அல்லது படை எடுக்குமோ எனப் பயம் ஏற்பட்டால் இவ்விரு நாடுகளும் ஒத்துழைக்க முன்வரும். ஆனால், மலேயா அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் மலேயாவிலுள்ள பிரிட்டனின் (மற்றச் சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசு நாடுகளின்) படையை நேரடியாகத் தென்கிழக்காசிய நேச உடன்படிக்கை சம்பந்தமாக, (உதாரணமாகத் தாய்லாந்திற்கு) அனுப்ப முடியாது. சிங்கப்பூரின் பாதுகாப்பு விவகாரங்கள் பிரிட்டனின் அதிகாரத்தின்கீழ்தான் இருந்தது. சிங்கப்பூரிலுள்ள பிரிட்டனின் படைகளைத் தென்கிழக்காசியாவின் அமைதியை நிலைநாட்டுவதற்காக எங்கு வேண்டுமானாலும் கட்டுப்பாடில்லாமல், தென்கிழக்காசிய நேச உடன்படிக்கை அமைப்பு விவகாரங்கள் சம்பந்தமாகவும், அனுப்பப்படலாம் எனப் பிரிட்டன் கூறியது. ஆனால், இதைத் துங்கு ஏற்றுக்கொள்ள மறுத்தார். இனிமேலும், மலேசியா அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் சிங்கப்பூர்த் தளத்தைத் தன்னிச்சைப்படி பிரிட்டன் பயன்படுத்தக்கூடாது எனத் துங்கு கூறினார். சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்திருந்த சமயத்தில் எவ்விதவான கஷ்டங்

களும் முனைக்கவில்லை. ஆனால், 1965ஆம் ஆண்டு சிங்கப்பூர் சுதந்திரமடைந்தவுடன், சிங்கப்பூர் அரசாங்கம் கூறும் கட்டுப் பாட்டுகளுக்கு அடங்கித்தான் சிங்கப்பூரிலுள்ள தளத்தைப் பிரிட்டன் உபயோகிக்கலாம் எனச் சிங்கப்பூர் வலியுறுத்தியது.

இந்தோனேசியாவின் பகைமை

1957-ல் பிரிட்டன் மலேயாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்துகொண்ட சமயத்தில் தான் மேற்கொண்ட பொறுப்பு மிகவும் அதிகரிக்கும் எனப் பிரிட்டன் எதிர்பார்க்கவில்லை. முன்பு, போர்னியோப் பகுதிகளைப் பாதுகாக்கும் நேரடியான பொறுப்பு பிரிட்டனிடம் இருந்தது. தற்பொழுது மலேசியாவுடன் ஏற்பட்ட உடன்படிக்கையினுல் எதிர்முகமல்லாத பொறுப்புதான் பிரிட்ட னுக்கு இருந்தது. இந்தோனேசியாவின் பகைமையினுல் கூடிய சீக்கிரத்தில் பாதுகாப்பு விவகாரம் முக்கியத்துவம் பெற்றது. தொடக்கத்தில் இப் பகைமை வெளிப்படையாகத் தெரியவில்லை; இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சிதான் நேரடியாக மலேசியத் திட்டத்திற்குப் பகைமை வெளியிட்டது. 'நான்கில் ஒரு பங்கான பிரிட்டிஷ் குடியேற்ற காலிமன்தானிலுள்ள (Kalimantan) பகுதிகள் இனவகையிலும், நிலவியல் தொடர்பிலும் இந்தோனேசியப் பகுதிகளுடன் ஒன்றுபட்டிருந்தாலும், இப்பகுதிகள் மலேசியா வுடன் சேருவதை இந்தோனேசியா எதிர்க்காது' என இந்தோ னேசியா அயல்நாட்டு அமைச்சர் டாக்டர் சுபாந்திரியோ (Dr. Subandrio) 1961, நவம்பர் 13ஆம் நாள் தெரிவித்தார். இதையே ஒரு வாரத்திற்குப் பிறகு ஐக்கிய நாடுகளின் அமைப்பில் சுபாந் திரியோ கூறினர்; ஆனல், இம்மாதிரியான கலப்பிணைவு அப்பகுதி மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும் எனக் கூறினர். 1962 அஜ்ஹாரி கலகம் (Azhari revolt) ஏற்படும் வரை இந்தோ னேசிய அரசாங்கம் மலேசியா உருவாகும் எண்ணத்தை வெளிப் படையாக எதிர்க்கவில்லை. புருனே மக்கள் கட்சித்தலைவரான (Brunei Party Rakyat) ஏ. எம். அஜ்ஹாரி (A. M. Azhari) மலேசி யத் திட்டத்தை எதிர்த்தார்; பதிலாகப் புருனேச் சுல்தான் ஆட்சி யின்கீழ் புருனே, வட போர்னியோ (North Borneo), சரவாக்(Sara-wak) பகுதிகள் ஒன்று சேர்ந்து ஒரு சுதந்திர நாடாக அமைக்கப் படவேண்டும் என இவர் எடுத்துரைத்தார். இம்மாதிரி எண்ணம் நிறைவேறினுல் நூறு ஆண்டுகளுக்கு முன்பே புருனே நாடு உருவாகியிருக்கும்; நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் சரவாக், வட போர்னியோ உருவாகியது. ஆனல், புருனேச் சுல்தான் அஜ்ஹாரியின் எண்ணத்தை ஆதரிக்க மறுத்தார்; ஆனல், சுல்தானுல் நியமிக்கப்பட்ட புருனேச் சட்டசபை மன்றத்தினர்கள்

அஜ்ஹாரியின் கருத்தை ஆதரித்தார்கள். 1962-ல் புருனேயிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கலகம் மூண்டபோது, அஜ்ஹாரி மணிலாவிலிருந்தார்; பிறகு இந்தோனேசியாவிற்குச் சென்றார். இக் கலகம் பிரிட்டனைத் திடுக்கிடச் செய்தது. தொடக்கத்தில் இக் கலகம் வெற்றிப் பாதையில் சென்றது; ஆனால், செயல் திறமையற்ற, ஆற்றல் போதாதவர்கள் இக் கலகத்தை நடத்தியதால், இக் கலகத்தின் முக்கிய நோக்கம் (சுல்தானைச் சிறைப்படுத்துவது) நிறைவேறவில்லை. சுல்தானைச் சிறைப்படுத்தியிருந்தால், அவர் பெயரில் கலகக்காரர்கள் விளம்பரம் செய்திருக்கலாம். ஆனால், இச்சூழ்நிலை உருவாகுவதற்குள் ஆங்கிலேயப் படை வீரர்கள் நுழைந்து இக்கலகத்தை அடக்கிவிட்டார்கள்.

அஜ்ஹாரி கலகத்தினால் புருனே, போர்னியோ பகுதிகளில் ஏற்பட்ட விளைவுகள் முக்கியத்துவம் பெறவில்லை; ஆனால், இந்தோனேசியாவின் பகைமையைத் தூண்டிவிட்டதே இக்கலகத்தினால் ஏற்பட்ட முக்கிய விளைவு. எல்லா இந்தோனேசியத் தலைவர்களும், ஜனாதிபதி சுகர்னோ உட்பட, அஜ்ஹாரியை ஆதரித்தார்கள். மலேசியா, புதுக் குடியேற்றத் (New Colonialist) தத்துவத்தின், புது ஏகாதிபத்தியக் (Neo Imperialist) கோட்பாடுகளின் முனை விளைவு என இந்தோனேசியத் தலைவர்கள் கருதினார்கள். தன் நாட்டுக்குள் ஆங்கிலேயப் படைவீரர்கள் தங்குவதற்கு, மலேயாவின் சுதந்திர மனப்பான்மை பிரிட்டனால் கட்டுப்படுத்தப்பட்டதால் தான் கொடுக்கப்பட்டது என இந்தோனேசிய அரசியல் தலைவர்கள் கருதினார்கள். மேலும் மலேசியாவில், முக்கியமாக சரவாக், சபா (Sabah)விலுள்ள, ஆங்கிலேயப் படைகளால் இந்தோனேசியாவிற்கு இடையூறுகளும், ஆபத்துகளும் வரும் என இந்தோனேசியா கருதியது. மேலும், மலேசியாவை மிகப் பெரிய இந்தோனேசியாவின் (Great indonesia) பகுதியாகச் சேர்க்க வேண்டும் என இந்தோனேசியர் விரும்பியது எனப் பல மேலை நாட்டுப் பேராசிரியர்கள் சந்தேகித்தார்கள். 1958 ஆம் ஆண்டில் இந்தோனேசிய அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்த கலகக்காரர்களுக்கு மலேயாவும் சிங்கப்பூரும் அடைக்கலமும், பேராதரவும் கொடுத்ததை இந்தோனேசியா மறக்கவில்லை. ஆகையால்தான் ஆங்கிலேயப் படைவீரர்கள் மலேசியாவில் இருந்ததையும், மலேசியா உருவாவதையும் இந்தோனேசியா தீவிரமாக எதிர்த்தது. மேலும், புரட்சியில்லாமல் படைவீரர்களுடன் போரிடாமல் மலேயா சுதந்திரமடைந்தது; ஆகையால் உண்மையான சுதந்திரம் மலேயாவிற்குக் கிடைக்கவில்லை; பின்தங்கிய நாடாகவே மலேயா இருக்கிறது என இந்தோனேசியர்கள் கருதினார்கள்.

சபா (Sabah) வும் பிலிப்பைன்சும்

மலேசியா உருவாவதற்கு மேலும் பல தடங்கல்கள் ஏற்பட்டன. மலேசியாவுடன் சேரவிருக்கும் வடபோர்னியோ, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தது என 1962ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பிலிப்பைன்ஸ் கூறியது. சுலு சுல்தான் (Sultan of Sulu) ஆங்கிலேய வடபோர்னியோ கம்பெனிக்கு வடபோர்னியோவை வெறும் குத்தகைக்குத்தான் கொடுத்தது; இச் சூழ்நிலையில்தான் வடபோர்னியோ ஆங்கிலேய அரசரிடம் கொடுக்கப்பட்டது. மேலும் மீமுதல் ஆட்சித் தலைமையுரிமையை (Sovereignty) ஒரு முடிமன்னர்தான் மற்றொரு முடி மன்னருக்கு மாற்ற முடியும்; கம்பெனிக்குமுன் இருந்த சொந்தக்காரர்கள் முடிமன்னர்கள் அல்லர்; ஆகையால் பிலிப்பைன்ஸ் அரசாங்கம்தான் சுலுசுல்தானின் வாரிசு என பிலிப்பைன்ஸ் அரசாங்கம் கூறியது.

இம்மாதிரியான நடவடிக்கைகளைப் பிலிப்பைன்ஸ் எடுத்ததற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. 1961ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மகபகலுக்குத் (Macapagal) தனிப்பட்ட முறையில் வட போர்னியோவின் மீது அக்கறையிருந்தது. மகபகல் அயல்நாட்டு விவகார அதிகாரியாயிருக்கும் சமயம் தான் பிரிட்டன் தனக்குச் சொந்தமாயிருந்த வடக்கு போர்னியோ அருகேயுள்ள டர்ட்டில் தீவுகளைப் (Turtles Islands) பிலிப்பைன்ஸிக்குக் கொடுத்தது. 1950ஆம் ஆண்டில் மகபகல் சட்டசபை உறுப்பினராக இருந்த சமயத்தில் வடக்குப் போர்னியோ பிலிப்பைன்ஸுக்குச் சொந்தம் என ஒரு மன்றத் தீர்மானத்தைப் (Resolution) பிரதிநிதி சபையில் (House of Representatives) கொண்டு வந்தார். 'ப்ரீப்ரெஸ்' பத்திரிகை (Free Press) இது சம்பந்தமாகத் தீவிரப் பிரசாரம் செய்தது. மேலும் இந்தோனேசியாவை எதிர்க்கும் நோக்கத்துடன் மலேசியத் திட்டம் வகுக்கப்பட்டது; வட போர்னியோ மலேசியாவுடன் சேர்வதைவிடப் பிலிப்பைன்ஸுடன் சேர்ந்தால்தான் அதைச் சீனக் கம்யூனிஸ்டுகளிடமிருந்து சுலபமாகப் பாதுகாக்க முடியும் எனப் பிலிப்பைன்ஸ் கூறியது. இக்காரணத்தால் பிலிப்பைன்ஸ், மலேசியா உறவு சிறிது பாதிக்கப்பட்டது.

போர்

1963ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே இந்தோனேசியா மலேசிய எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றியது. இவ்விரு நாடுகளிடையே உச்சவளவுப் போர்தான் நடைபெறவில்லை. சுமத்திராவுக்கும், மலேயாவிற்கும் இடையே இந்தோனேசியக்

கப்பல்கள் சுற்றுக்காவல் (Potrelling) புரிந்தன. இதனால் மலேய மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள். இந்தோனேசியா, வட போர்னியோ தேசியப்படையையும் (North Borneo National Army) தூண்டி இந்தோனேசியா—வடபோர்னியோ எல்லையில் மலேயாவிற்குத் தொந்தரவு அளித்தது. 1964ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மலேயா கடற்கரையில் இந்தோனேசியப் படை வீரர்களை இறக்க இந்தோனேசியா தொடங்கியது. மலேசியத் திட்டத்தை எதிர்த்த சில மலேசியர்களையும் இந்தோனேசியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியது.

1963ஆம் ஆண்டு ஜூன் வரை தாற்காலிகமாக இந்தோனேசியா மலேசியாவைத் தீவிரமாக எதிர்ப்பதை நிறுத்தியது. இச்சமத்தில் மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் பிரதிநிதிகள் பல தடவைச் சந்தித்தார்கள். இதுவே இம் மூன்று நாடுகளின் மீயுயர் படிநிலைக்கூட்டத்திற்குக் (Tripartite Summit Meeting) காரணமாயிருந்தது. ஆனால் 1663ஆம் ஆண்டு ஜூலை—ஆகஸ்டு மீயுயர் படிநிலைக்கூட்டத்திற்கு முன்பு இந்தேனேசியாவின் தீவிர எதிர்ப்பு மீண்டும் தொடங்கப்பட்டது. இதற்குக் காரணமென்னவென்றால் 1963ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் நாள் இலண்டனில் மலேசிய ஒப்பந்தம் மீயுயர் படிநிலைக்கூட்டத்திற்குமுன் ஏற்பட்டதைச் சுகர்ணோ வரவேற்கவில்லை. மேலும் போர்னியோ மக்களின் விருப்பத்தைப் பொதுமக்கள் வாக்கெடுப்பு (referendum) மூலம் தெரிந்துக் கொள்ளவேண்டும் எனச் சுகர்ணோ அறிவித்தார்.

மீயுயர் படிநிலைக் கூட்டத்தில் 'மாபிலிண்டோ' (Maphilindo) என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. 'மாபிலிண்டோ' கூட்டாட்சியாய் (federative) இருக்கக்கூடாது; ஆனால் மலேய் பிறப்புடைய மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து, தங்களுடைய நாடுகளின் மீமுதல் ஆட்சித் தலைமையுரிமையை (Sovereigny) விட்டுவிடாமல், ஒற்றுமையுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. மாபிலிண்டோவின் நோக்கம் தெளிவாக விளக்கப்படவில்லை. ஆனால், இது குடியேற்றத் தத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் தீவிரமாக எதிர்த்தது. மாபிலிண்டோ திட்டத்தில் பண்பாட்டு நோக்கத்தையும், உணர்ச்சி வசத்தையும் நோக்க முடிந்தது. கம்யூனிஸ்டுச் சீனவிற்கு எதிராகக் கிளம்பியது போலவும் இருந்தது; ஆனாலும் கம்யூனிஸ்டுச் சீனவும்-இந்தோனேசியாவும் இச்சமயத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன என்பதை மறக்கக்கூடாது. மலேயாவில் உள்ள சீனர்கள் மாபிலிண்டோ அமைப்பின் மூலம் தங்களுக்கு ஆபத்து வரும் எனப்

பயந்தனர், உடனடியாகத் துங்குவும், மலேய்ச் சீன சங்கமும் இதை மறுத்து அவர்களுக்குத் தைரியம் கொடுத்தனர். இந்தோனேசிய—மலேசிய எதிர்ப்பு மீண்டும் தொடங்கியதால் மாபிலிண்டோ அமைப்பைப் பற்றி மேலும் வேறு பேச்சு வார்த்தை நடக்கவில்லை மீயுர் படி நிலைக் கூட்டத்தில் இந்தோனேசியாவும் மலேசியாவும் மலேசியாவைப்பற்றிப் போர்னியோ மக்களின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என ஒப்புக்கொண்டன. பொதுமக்கள் வாக்கெடுப்பு எடுத்தாக வேண்டும் என இந்தோனேசியா மீண்டும் வலியுறுத்தவில்லை. திட்டத்தின்படி மலேசியா அமைக்கப்பட்டால், மக்களின் எண்ணத்தை அறிவதற்குத் தேவையான அவகாசம் ஐக்கிய நாடுகள் அமைப்புக் குழுவிற்கு இருக்காது என மலேயா ஒப்புக்கொண்டது. திட்டத்தின்படி 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் நாள் மலேசியாவை அமைக்க வேண்டும். ஐக்கிய நாடு அமைப்பைக் குழுவின் அறிக்கை செப்டம்பர் 14ஆம் நாள் வெளிவருவதாயிருந்ததால் மலேசியாவைச் செப்டம்பர் 14ஆம் தேதி அமைக்கலாம் என மலேயா ஒப்புக்கொண்டு ஒத்திப் போட்டது. வடபோர்னியோ, சரவாக்கில் நடந்த சமீபத் தேர்தல்களில் மலேசியா அமைப்பதைப்பற்றியும் மக்களுக்கு முன்னல் வைக்கப்பட்டது; கட்டுப்பாடில்லாமல் நடந்த இத் தேர்தல்களில் பெரும்பான்மையான மக்கள் மலேசியா அமைப்பை வரவேற்கிறுர்கள் என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கையில் கூறப்பட்டது. இந்தோனேசியா இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தது; மூன்று நாடுகளும் ஒப்புக்கொண்டபடி ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்படுமுறை இருக்கவில்லை என இந்தோனேசியா கூறியது. ஆகையால் சூழ்நிலை மிகமோசமாய்த் திரும்பியது; அறிவிக்கப்படாத வெளிப்படைப் போர் மூண்டது. இதன் விளைவாக இந்தோனேசியாவுடன் உள்ள தூதுவ நட்புறவை (diplomatic relations) மலேசியா துண்டித்தது; இந்தோனேசியாவும் மலேசியா அமைப்பை ஒப்புக்கொள்ள மறுத்தது. தகராறு முற்றியது; போர்னியோ எல்லையில் சண்டை மூண்டது; 1964ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மலேயாக் கடற்கரைப் பகுதிகளில் போர் நடக்கத் தொடங்கியது. மலேசியாவுடன் உள்ள வாணிபத் தொடர்பை இந்தோனேசியா துண்டித்தது; முக்கியமாகப் பதனஞ் செய்ய இரப்பரையும், உலோகம் பெற உருக்கிப் பிரித்தெடுக்க வெள்ளீயத்தையும் இந்தோனேசியா மலேசியாவிற்கு அனுப்பவில்லை.

சமரசம் பேசப் பலநாடுகள் முன் வந்தன. முக்கியமாக அமெரிக்கச் சட்டமாமன்ற மேலவை உறுப்பினர் ராபர்ட் கென்னடி 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தென்கிழக்காசியாவிற்கு வந்து

பேச்சு வார்த்தை நடத்தினர்; இதன் பயனாகப் போர்னியோவில் தாற்காலிகமாகப் போர் நிறுத்தப்பட்டது. பிறகு மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் அமைச்சர்கள் 1964ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாங்காக்கில் சந்தித்தார்கள்; இதன் பிறகு இம் மூன்று நாடுகளின் மீயுயர் படிநிலைக் கூட்டம் 1964ஆம் ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்றது. ஆனால் ஓர் ஒப்பந்தமும் ஏற்படவில்லை; சரவாக்கில் 200 இந்தோனேசியக் கொரில்லாப் போர்வீரர்கள் இருப்பதைப்பற்றி மனக்கிலேசம் ஏற்பட்டது. இக் கொரில்லாப் போர்வீரர்களைச் சரவாக்கிலிருந்து நீக்கினால்தான் ஒப்பந்தம் ஏற்படுத்தலாம் என மலேசியா வற்புறுத்தியது. ஒப்பந்தம் முதலில் ஏற்பட்டவுடன்தான் இதைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என இந்தோனேசியா கூறியது; மேலும் வட போர்னியோவிலும் சரவாக்கிலும் பொதுமக்கள் வாக்கெடுப்பு மீண்டும் எடுக்கப்படவேண்டும் என இந்தோனேசியா வலியுறுத்தியது.

இந்தோனேசிய-மலேசியத் தகராறு ஐக்கிய நாட்டமைப்பில் விவாதிக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் பாதுகாப்பு அவையில் (Security Council) ஒரு மன்றத் தீர்மானம் (draft resolution) கொண்டு வரப்பட்டது. மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் நடக்கும் தகராறைப் பார்த்து வருந்துகிறோம்; இம்மாதிரி மீண்டும் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு இந் நாடுகளைக் கேட்டுக்கொள்கிறோம்; படைப்பலத்தைப் பிரயோகப்படுத்துவதாகப் பயமுறுத்தவோ பிரயோகிக்கவோ முயற்சியெடுக்ககூடாது. அவரவர்களின் நிலப்பகுதி உரிமைகளையும், சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும்' என இம்மன்றத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. ஒன்பது நாடுகள் இத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன; இரண்டு நாடுகள் இதை எதிர்த்து வாக்களித்தன. அவ்விருநாடுகளில் ஒன்று உருசியா; உருசியாவின் எதிர்ப்பு மறுப்பு ஆணைக்குச் (Veto) சமானமானதாகும். ஆகையால், இம் மன்றத்தீர்மானம் நிறைவேறாமல் தோல்வியடைந்தது. ஆனால், இம்மன்றத் தீர்மானம் மலேசியக் கொள்கைக்கு வெற்றிதேடிக் கொடுத்தது எனக் கூறலாம். 1965ஆம் ஆண்டில் பாதுகாப்பு அவையின் (Security Council) உறுப்பினராக மலேசியா தேர்ந்தெடுக்கப்பட்டது; உடனடியாக இந்தோனேசியா ஐக்கிய நாட்டமைப்பிலிருந்து விலகியது.

இச் சூழ்நிலையில் தாற்காலிகமாக மலேசியாவை ஒப்புக்கொள்ள (recognise Malaysia) மறுப்பதாகவும் இவ்விரு நாடுகளிடையே இருக்கும் அரசியல் தூதுவர் அலுவலகங்களை (Embassies) நீக்கி

அயல் நாட்டுப் பேராளின் அலுவலகங்களை (Consulates) அமைக்க வேண்டும் எனவும் பிலிப்பைன்ஸ் கூறியது. மலேசிய அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடல்லாமல், பிலிப் பைன்ஸ் நாட்டுடன் இருக்கும் அரசியல் உறவைத் (diplomatic relations) துண்டித்தது. மலேசியாவின் நடவடிக்கை பிலிப் பைன்ஸ் அரசாங்கத்திற்கு ஆச்சரியமளித்தது. மலேசியாவுடன் இருக்கும் முழு அரசியல் உறவையும் துண்டிக்கப் பிலிப்பைன்ஸ் விரும்பவில்லை. ஆகையால் 1964ஆம் ஆண்டு மே மாதம் அயல் நாட்டுப் பேராளின் அலுவலகங்கள் மணிலாவிலும், கோலாலம் பூரிலும் மீண்டும் அமைக்கப்பட்டன. 1966ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மார்கோஸ் (Marcos) பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி யாகப் பதவியேற்றவுடன் 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் இவ் விரு நாடுகளிடையே முழு அரசியல் உறவு (diplomatic relations) அமைக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கம்யூ னிஸத்தை ஆதரித்தவர்களின் திடீர்ப்புரட்சி இந்தோனேசியாவில் தோல்வியடைந்த போதிலும், இந்தோனேசிய—மலேசியப் போர் முடிவடையவில்லை. ஆனால் திடீர்ப் புரட்சிக்குப்பின் அமைக்கப் பட்ட இந்தோனேசிய அரசு தன் பொருளாதார நிலையைச் சீரமைக்க விரும்பியது. இந்தோனேசிய-மலேசிய வாணிபத் தொடர்பு முறிந்ததால், மலேசியாவைவிட இந்தோனேசியாவே வெகுவாகப் பாதிக்கப்பட்டது. மலேசியப்போரை நிறுத்தினால் மேலை நாடுகளின் உதவியை இந்தோனேசியா அதிகவளவில் பெற வாய்ப்பு ஏற்படும் என்று புதிய இந்தோனேசிய அரசு கருதியது.

ஆகையால், 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தோனேசியா சிங்கப்பூர் அரசை ஒப்புக்கொண்டது. 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் மலேசிய—இந்தோனேசிய அரசுகளின் பிரதிநிதிகள் பாங் காக்கில் உரையாடல் நடத்தினார்கள். போரை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென்றும், இவ்விரு நாடுகளிடையே தூதுவத் தொடர்பை அமைக்க வேண்டுமென்றும், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகள் ஒன்று கூடித் தென்கிழக்காசிய நாடுகள் மன்றம் (ASA) ஒன்றை உருவாக்க வேண்டுமென்றும் மலேசிய—இந்தோனேசியப் பிரதி நிதிகள் தீர்மானம் எடுத்தனர். 1966ஆம் ஆண்டு ஆகஸ்டு 12ஆம் நாள் இந்தோனேசியாவிற்கும் மலேசியாவிற்கும் ஓர் உடன் படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி போர் உடனடி யாக நிறுத்தப்பட்டது; தூதுவ உறவு அமைக்கப்பட்டது. சபா (Sabah), சரவாக் மக்கள் மலேசியக் கூட்டரசு அமைப்பில்

தொடர்ந்து சேர்ந்திருக்க ஒப்புக் கொள்கிறார்களா என அறிய இந் நாடுகளில் தேர்தல் நடத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

23. மலேயா, சிங்கப்பூரில் வாழும் இந்தியர்கள்

பண்டைக் காலத்திலிருந்தே இந்தியாவிற்கும், மலேசியா சிங்கப்பூருக்கும் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. மேற்கு மலேசியத் துறைமுகங்கள் கிழக்கு இந்தியத் துறைமுகத்திலிருந்து 1200 மைல் தூரத்தில் உள்ளன. மலேசியாவிலிருந்து இந்திய வணிகர்கள் தங்கம், நறுமணப் பொருள்கள், வெள்ளீயம் போன்ற பொருள்களை இந்தியாவிற்கு எடுத்துக்கொண்டு வந்து விற்றார்கள்; இந்தியச் செய் தொழில் பொருள்களை மலேசியாவில் விற்றார்கள்.

முதன் முதலாக மலேசியாவில் குடியேறிய இந்து மக்கள் தென் இந்தியர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மலேசியாவில் உள்ள தெற்குக்கேதாவிலும் (தெற்குக் கடாரம்), வெல்லஸ்லி மாகாணத்திலும் கிடைத்துள்ள கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் பல்லவக் கிரந்தக் கையெழுத்து முறைகளை நாம் காணலாம். மேலும், கி.பி. ஆறும் நூற்றாண்டி லிருந்து மலேசிய ஆற்றங்கரை ஓரங்களிலும், மலை உச்சிகளிலும் சைவ-வைணவக் கோவில்கள் வளரத் தொடங்கின. இக்கோவில் களில் உள்ள சிலைகள் பல்லவர் காலத்துச் சிலை அமைப்பில் உள்ளன. மேலும் மலேசிய அரசவைச் சடங்குகள் இந்து சமயச் சடங்குகளை ஒட்டியிருந்தன. மலேய் மொழியில் இன்றுகூடப் பல சம்ஸ்கிருத மொழிச் சொற்களை நாம் காணலாம். இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், பஞ்சதந்திரம் மலேசிய மக்களின் உடைமைகளாக மாறின.

இந்தியாவில் இஸ்லாம் சமயம் பரவத் தொடங்கியபின் மலேசி யாவிற்கு வரும் இந்திய வணிகர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. ஆனால் வங்காளம் கோல்கொண்டா, சோழ மண் டலம், குஜராத் முதலிய இடங்களிலிருந்து முகம்மதிய வணிகர்கள் மலேசியாவிற்குச் சென்றார்கள். இவர்கள் சென்ற போதுதான் மலேசியாவிலும் இஸ்லாம் சமயம் பரவத் தொடங்கியது. இந்திய முகம்மதிய வணிகர்களும் மலேசியாவில் இஸ்லாம் பரவ உதவி செய்தார்கள். ஆகையால் மலேசியச் சுல்தான்களிடம் இவர்களுக் குச் செல்வாக்கு மிக்கிருந்தது.

நெருங்கிய வாணிகத் தொடர்பாலும், அரசியல் தொடர்பாலும் இந்திய வணிகர்கள் மலாக்காவில் குடியேறினார்கள். மலாக்காவில் இந்தியர்கள் அதிகமாகக் குடியேறியிருந்த இடம் கிளிங் கிராம

மாகும் (Kampong Kling). இவர்கள் அரசாங்கப் பணியாளர்களா கவும், ஆசிரியர்களாகவும், தட்டர்களாகவும், தொழிலாளிகளாகவும் பணி புரிந்துவந்தார்கள். இந்திய முகம்மதியர்களுக்குத் தனி மசூதி இருந்தது; இம் மசூதியைச் சுற்றியிருந்த இடங்களில் அவர்கள் குடியேறியிருந்தார்கள்; இவ்விடம் பல்லி கிராமம் (Kampong palli) என அழைக்கப்பட்டது. ஆகையால், மலாக்காவில் இந்தியர்கள் நிரந்தரமாகக் குடியேறினர்கள். இவ்வூரில் இந்துக்களை 'மலாக் காச் செட்டியார்கள்' என்று அழைப்பது வழக்கம்; ஆனல் எல்லா இந்துக்களும் செட்டிச்சாதிப் பிரிவைச் சேர்ந்தவர் அல்லர்; இந்துக் கள் வாணிபம் செய்ததால் அவர்களை இவ்வாறு மலேசியர்கள் அழைக்கத் தொடங்கினர்கள். இங்குக் குடியேறிய இந்துக்கள் தங்கள் கலாச்சாரத்தையும், சமயப் பண்பாடுகளையும் கைவிட வில்லை. தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ்க் கல்வி யைத்தான் கற்பித்தார்கள். சோழ மண்டலத்திலிருந்து பெருவாரி யாக வந்து கொண்டிருந்தாலும், மலேசியக் குடிமக்களை மணம் புரிந்து கொண்டதாலும், தமிழ் முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகியது.

பதினெட்டாவது நூற்றுண்டில் மலாக்காவுடன் இந்திய முஸ்லிம்கள் வாணிகத் தொடர்புகொள்ள முடியவில்லை. ஆகை யால் இவர்கள் கடாரத்தின் வட பகுதியிலும், பினுங் தீவின் எதிரிலும் குடியேறினர்கள். இவர்கள் எல்லோரும் சோழமண்ட லத்திலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களே ஆவார்கள்; ஆகையால், அவர்களைச் 'சூலியாக்கள்' (Chulias) என்று அழைத் தார்கள். பிரான்சிஸ் லைட் என்பவர் பினுங் நகரை அமைத்தவுடன் அவர்களில் பலர் பினுங்கிற்குச் சென்று குடியேறினர்.

கி.பி. 1800ஆம் ஆண்டிலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் மலேசியாவிற்குச் செல்லத் தொடங்கினர்கள். மலேசியாத் தோப்பு களிலும், பண்ணைகளிலும் பணிசெய்ய இந்தியத் தொழிலாளர் களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. பெருவாரியாக மலாக்காக் கடற் கால் குடியேற்ற நாடுகளுக்குச் சென்று கரும்பு, காப்பி முதலிய பண்ணைகளிலும், வீடுகளிலும் இந்தியத் தொழிலாளர்கள் பணி புரிந்தார்கள்.

சட்டப்படி தொழில் முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் (Indenture system) செய்துகொண்டுதான் இந்தியப் பணியாளர் கள் மலேசியாவிற்குச் சென்றுர்கள். மலேசிய முதலாளிகள் இந்தி யாவிலிருந்த தங்கள் பிரதிநிதிகளின் மூலம் இந்தியத் தொழிலாளி களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு அவர்களை மலேசியா

விற்கு வரவழைத்தார்கள். இவ்வொப்பந்தப்படி இந்தியப் பணியாளர்கள் ஒப்பந்தம் செய்து கொண்ட முதலாளிகளின்கீழ் ஐந்து ஆண்டுகள் இடைவிடாமல் பணிபுரிய வேண்டும்; இந்த ஐந்து ஆண்டுகள் வேறு ஒருவரிடமும் பணிபுரியக்கூடாது. ஒப்பந்தத்தில் பணியாளர்கள் கூலியும் உறுதிப்படுத்தப்பட்டது; இக்கூலியில் ஐந்து ஆண்டுகளுக்கு எத்தகைய மாறுதலும் கிடையாது. பணியாளர்கள் இந்தியாவிலிருந்து மலேசியாவிற்குச் செல்வதற்கு முதலாளிகளே பணம் அளித்தார்கள். பொதுவாக இவ்வாறான பண்ணைப் பணிகளுக்குப் பெண்களைவிட ஆண்களே அதிக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கி.பி. 1864ஆம் ஆண்டில் பிரிட்டனின் சட்டமன்றம் ஒரு சட்டம் இயற்றியது. இச் சட்டத்தின்படி இந்தியப் பணியாளர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குப் பணிபுரியச் செல்லக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. இத்தகைய தடை இருந்த போதிலும் இந்தியப் பணியாளர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குத் தொடர்ந்து சென்றுகொண்டுதான் இருந்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டு பிரிட்டனின் சட்டமன்றம் இத்தடையை நீக்கியது. கி.பி. 1867ஆம் ஆண்டிலிருந்து மலேசியக் கரும்புத் தோட்டங்களில் இந்தியப் பணியாளர்களின் தேவை அதிகரித்து.

ஆனால், தொழில்முறைக் கட்டுபாட்டு ஒப்பந்தம் மூலம் பல இந்தியப் பணியாளர்கள் ஏமாற்றப்பட்டார்கள்; பல பணியாளர்கள் வன்முறையில், சட்டத்திற்குப் புறம்பாக மலேசியாவிற்குக் கடத்திச் செல்லப்பட்டார்கள். மேலும், மலேசிய முதலாளிகள் இப்பணியாளர்களிடமிருந்து அதிக வேலை வாங்கினார்கள். பணியாளர்களுக்கு மிகக் குறைவான கூலிதான் அளிக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் கூலியை உறுதிப்படுத்தும்போது மலேசியாவிலிருந்த வாழ்க்கை நிலையைப்பற்றி இப்பணியாளர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆகையால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

பெரும்பாலான இந்தியப் பணியாளர்கள் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிந்தார்கள். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசியல் பணிகளுக்கும், பாதை, புகைவண்டிப்பாதை, முதலியவற்றை அமைப்பதற்கும் இந்தியப் பணியாளர்களை அரசாங்கம் இந்தியாவிலிருந்து வரவழைத்தது. தொழில்முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் இந்தியப் பணியாளர்களைப் பாதித்ததால் இந்தியச் சுதந்திரத் தலைவர்கள் இவ்வொப்பந்தங்களை நீக்கவேண்டும் என்று வாதாடினார்கள்; இந்தியக் குடிமக்களுக்கு இவ்வொப்பந்தம்

அவமானம் தருவது என்று கருதினர்கள். ஆகையால், கி.பி. 1914 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் மலேசியாவில் இவ்வொப்பந் தங்களை ஒழித்தது.

இத்தொழில் முறைக் கட்டுப்பாட் டொப்பந்தத்தின் மூலமாக மலேசியாவிற்கு வந்த குடி மக்களில் பெரும்பாலோர் தென்னிந்தி யர்களே. ஏனென்றால் இந்திய அரசாங்கம் சென்னை மாகாணத் திற்கு மட்டும் இவ்வொப்பந்தங்களின் மூலமாகப் பணியாளர்களை எடுக்க அனுமதி அளித்திருந்தது. பெரும்பாலான இப் பணியாளர் கள் தஞ்சாவூர், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வர்கள். மலேசிய அரசாங்க அயல் நாட்டுப் பணியாளர்கள் சென்னையைத் தவிரப் பஞ்சாப், இராசபுதனம், மகாராட்டிரம், வங்காளம் ஆகிய மாகாணங்களிலிருந்தும் வந்தார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலே தொழில் முறைக் கட்டுப்பாட் டொப்பந்த முறைக்குப் பதிலாக வேறு ஒரு முறையும் கையாளப்பட்டது. இம் முறைக்குக் கண்காணி முறை (Kangany System) எனப் பெயர். கண்காணி என்பது தமிழ்ச் சொல். கண்காணி என்றால் மேற்பார்வையாளர் என்று பொருள். கண்காணி முறையின்கீழ் மலேசிய முதலாளிகள் இந்திய மேற் பார்வையாளர்களைத் (கண்காணிகள்) தேர்ந்தெடுத்து இந்தியாவில் உள்ள அவர்களின் கிராமத்திற்கும், மாவட்டத்திற்கும் பணியாளர் களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்தியாவிற்கு அனுப்பினர் கள். இக் கண்காணிகள் தங்கள் கிராமத்திலிருந்தும், மாவட்டத்தி லிருந்தும் மிக்க விழிப்போடு தொழிலுக்குத் தகுந்தவர்களையும், தங்களுக்குத் தெரிந்தவர்களையும் பணியாளர்களாகப் பொறுக்கி னார்கள். தொழில்முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தின் மூலமாகப் பிரதிநிதிகள் இவ்வளவு கவனமாகப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து விடுவார்கள். ஆனால், கண்காணி முறையில் இத் தவறு நீக்கப் பட்டது. மேலும், கண்காணி முறையின் மூலமாகக் குடும்பம் குடும்பமாக இந்தியர்கள், இந்தியாவிலிருந்து மலேயாவிற்குச் சென்றார்கள். இதற்கு முன் பொதுவாக யாரேனும் ஒருவர் இருவர் தாம் ஒரு குடும்பத்திலிருந்து மலேசியாவிற்குச் செல்வார்கள். இம்மாதிரிக் கண்காணி முறை மூலம் எடுக்கப்பட்ட பணியாளர்கள் கப்பலில் பயணம் செய்வதற்குப் பணமும் அளிக்கப்பட்டது. ஆனால், இப் பயணப் பணம் கடனாகத்தான் அளிக்கப்பட்டது. மலேசியாவிற்குச் சென்ற இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்கள் இக் கடனைத் தீர்த்துவிட வேண்டும். ஆனால், சட்டப்படி இக் கடனை இந்தியப் பணியாளர்களிடமிருந்து மலேசிய முதலாளிகள் கேட்க

முடியாது. காரணம், கண்காணி முறைமூலம் இந்தியப் பணியாளர்கள் மலேசியாவிற்கு வந்தாலும், அவர்கள் எந்த வேலையில் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால், நடைமுறைப்படி அவர்கள் அவ்வாறு செய்ய முடியாது. ஏனென்றால், கண்காணி முறை மூலமாக வந்த பணியாளர்களை அம் முதலாளி தவிர, வேறு ஒரு முதலாளியும் பணிபுரிய அமர்த்த மாட்டார். மலேசிய முதலாளிகளுக்குள் அவ்வாறு ஓர் இரகசியக் கட்டுப்பாடு இருந்தது. கண்காணி முறை மூலமாக வந்த பணியாளர்கள் பொதுவாக அக் கண்காணியின் கீழேயே பணிபுரிந்தார்கள். இதனால் கண்காணிக்கும், கண்காணியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கும் நெருங்கிய பிணைப்பு உருவாகியது. தாங்கள் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு பணியாளர்களுக்காகவும் கண்காணிகளுக்கு முதலாளிகளால் விற்பனை முகவர் பங்கு வரி (Commission) அளிக்கப்பட்டது. கி.பி. 1910ஆம் ஆண்டில் தொழில்முறைக் கட்டுப்பாட்டொப்பந்தம் ஒழிந்தவுடன், கண்காணி முறையே நிலவி வந்தது. பொதுவாகக் கண்காணி முறைமூலம் வந்த தொழிலாளர்கள் காப்பி, இரப்பர்த் தோட்டங்களில் பணிபுரிந்தார்கள்.

மலேசிய வாழ்க்கை சொர்க்க வாழ்க்கை என்றும், உல்லாச வாழ்க்கை என்றும் கண்காணிகள் இந்திய மக்களிடம் ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தி, மலேசியாவுக்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால், உண்மையில் பணியாளர்கள் மலேசியப் பண்ணைகளிலே கடினமாக நாள்தோறும் உழைக்கவேண்டும்; கிடைக்கும் ஊதியப் பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்கவும் முடியாது. கண்காணி முறையை ஒழிக்க வேண்டும் என இந்தியச் சுதந்திரத் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இறுதியில் கி.பி. 1938ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் கண்காணி முறையை ஒழித்தது. ஆனால், பல இந்தியப் பணியாளர்கள் தங்கள் செல்வத்தைச் செலவழித்துக்கொண்டு தொடர்ந்து மலேசியாவிற்கு வேலை தேடிச் சென்றார்கள். இவர்களை மலேசியப் பண்ணை முதலாளிகள் வரவேற்றார்கள். இவ்வாறு சென்றவர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு 20,000 அல்லது 30,000 ஆகும்.

கி.பி. 1924ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியால் நியாயமான கூலியும் சம்பளமும் இந்தியத் தொழிலாளர்களுக்கு அளிக்கவேண்டும் என்ற ஒப்பந்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கி.பி. 1929-33ஆம் ஆண்டுகளில் உலகப் பொருளாதாரநிலை வீழ்ச்சியுற்றதால் இவ்வொப்பந்தத்தை மலேசியப் பண்ணை முதலாளிகள் புறக்கணித்து இந்தியப் பணியாளர்களுக்குக் குறைந்த கூலி கொடுக்கத் தொடங்கினார்கள்.

ஆனால், உலகப் பொருளாதார நிலை கி.பி. 1933ஆம் ஆண்டுக்குப் பிறகு, வளர்ச்சியடைந்த பிறகு இந்திய அரசாங்கம் மலேசிய முதலாளிகள் கி.பி. 1924ஆம் ஆண்டின் ஒப்பந்தப்படி கூலி அளிக்க வேண்டும் என்று கூறியது. இக் கோரிக்கை செயல் மூலமாகவும் நிறைவேற்றப்பட்டது.

மேலும் பண்ணைகளில் உள்ள தொழிலாளர் சங்கம் தொழிலாளிகளுக்காகப் பாடுபட்டதால் பணியாளர்களின் கூலி கி.பி. 1944ஆம் ஆண்டிலிருந்து மெல்ல உயரத் தொடங்கியது. பணியாளர்களுடைய வாழ்க்கை நிலையும் முன்னேற்றம் அடைந்தது. கி.பி. 1964ஆம் ஆண்டில்தான் பண்ணையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எனவும், ஓராண்டில் 19நாள்கள் விடுமுறை நாள்கள் எனவும், இவ் விடுமுறை நாள்களுக்கு ஊதியம் அளிக்கப்படும் எனவும், நோய்வந்தால் ஊதியத்துடன் விடுமுறை கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதனால் பண்ணையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் சமூக வாழ்க்கை வளர்ச்சியடைந்தது.

முதன்முதலாகப் படித்துப் பட்டம்பெற்று மலேயாவிற்குச் சென்ற இந்தியர்கள் மலையாளிகளே. இவர்கள் திருவாங்கூர், கொச்சின் ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்கள். கி.பி. 1920ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் மலேயாவுக்குச் செல்லத் தொடங்கினர்கள். இவர்கள் தனியார் கழகங்களில் பணிபுரிந்தார்கள். ஐரோப்பியக் கம்பெனிகளில் இவர்கள் கணக்கர்களாகவும், படியெடுப்பாளர்களாகவும், எழுத்தர்களாகவும் பணிபுரிந்தார்கள். ஒரு மலையாளிக்கு வேலை கிடைத்தவுடன் அவர் தமக்குத் தெரிந்தவர்களையும், தமக்குச் சொந்தமானவர்களையும் மலேயாவில் பணிபுரிவதற்காக அழைத்துச் செல்வது இயல்பாய்ப் போயிற்று.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படித்த தமிழ் மக்களும் மலேயாவுக்கு வேலை தேடிச் செல்லத் தொடங்கினர். இவர்களுக்கு எழுத்தர் பணியும் கணக்கர் தொழிலும் கிடைத்தன. இவர்கள் அரசு, தனியார் நிறுவனங்களில் வேலைசெய்தார்கள். இவர்களைத் தவிர தமிழ்நாட்டிலிருந்து மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், செய்தித்தாள் எழுத்தாளர்களும், ஆசிரியர்களும், மலேயாவிற்கு வேலை தேடிச்சென்றார்கள். இவர்கள் மலாக்காக் கடற்கால் குடியேற்றங்களிலும், செலங்கரிலும், பேரக்கிலும், நெகரி செம்பிலனிலும் குடியேறி வாழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் படித்த படிப்புக்குத் தகுந்தவாறு மலேயாவில் வேலை கிடைக்கவில்லை.

தமிழர்களைத் தவிர, சீக்கியர்களும், பஞ்சாபிகளும், வட நாட்டவர்களும், மலேயாவுக்கு வேலைதேடிவந்தார்கள். இவர்கள் காவல் துறைப் படையிலும், அரசாங்கப் பாதுகாப்புப் படையிலும் பணி புரிந்தார்கள். மற்றும் சிலர் புகைபோக்கி நிருவாக அலுவலகத்தில் தொழில் நுட்பத் துறையைச் சார்ந்த ஊழியர்களாகப் பணி புரிந்தனர். பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணத்திலும் (United province) பணிபுரிந்த ஆங்கிலேய உயர்பணியாளர்கள் இவர்களை முதன் முதலாக மலேயாவுக்கு அழைத்து வந்தார்கள்.

இருபதாம் நூற்றுண்டில் சிங்கப்பூரும் பினுங்கும் சிறந்த வாணிகத்தலங்களாக மாறின. ஆகையால், வடநாட்டவர்களான பார்சி (parsi), சிந்தி (Sindhi), மார்வாடி, பணியா (Bania) வணிகர்கள் இவ்விடங்களில் வர்த்தகம் செய்ய வந்தார்கள். சிங்கப்பூர் இந்திய வணிகர்களின் இடை மையத்தலமாய் மாறியது. இந்திய மலேய வாணிபப் போக்குவரத்தில் இவர்கள் மொத்த வாணிகம் செய்பவர்களாகவும், சில்லறை வாணிகம் செய்பவர்களாகவும் இருந்தார்கள். மேலும் தென்னுட்டு முஸ்லிம்களும் இங்குச் சில்லறை வாணிகர்களாகப் பணிபுரிந்தார்கள்.

இந்தியாவிலிருந்து மலேயாவுக்கு வந்த வணிகர்களுக்குள் முதன்மையானவர்கள் தமிழ் நாட்டுச் செட்டியார்கள். இவர்களில் சிலர் பொதுவருமானத்துறை ஆட்சியாளர்களாகவும், வேறுசிலர் பொருளியல் ஆட்சி வல்லுநர்களாகவும், மற்றும் சிலர் வணிகர்களாகவும் பணிபுரிந்தார்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடையிலே மலேயாக் கடற்கால் குடியேற்றங்களில் இவர்கள் வசிக்கத்தொடங்கினுர்கள். மலேயாவிற்கு வந்த செட்டியார்களுள் முதன்மையானவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களே ஆவார்கள். இவர்கள் செல்வந்தர்கள்; வட்டித்தொழிலர்களாகப் பணிபுரிந்தார்கள். இவர்கள் தென்னிந்தியாவில் உள்ள இராமநாதபுரம் பகுதியில் உள்ள சில கிராமங்களிலிருந்து வந்தார்கள். இந்தியாவிலிருந்து வந்த வணிகர்களில் இவர்களே மிக ஊக்கவெழுச்சியுடைய வணிகர்கள்; மிக எளிதில் இடம்விட்டு இடம் பெயரக்கூடியவர்கள்; வாணிபம் தொடர்பாக உலகத்தில் எப்பகுதிக்கு வேண்டுமானுலும் செல்லக்கூடியவர்கள்; ஆனுல், தங்கள் வாணிபத்தொழில் முடிந்தவுடன் தாய்நாட்டிற்கும், தங்கள் கிராமத்திற்கும் திரும்பி வந்துவிடுவார்கள். பொதுவாக, செட்டியார்களின் புதல்வர்கள், திருமணம் ஆனபிறகும் தங்கள் பெற்றோர்களுடன் வாழ்வார்கள். ஆனுலும், தங்கள் குடும்பத்தைப் பிள்ளைகளே பாதுகாத்துப் பராமரிக்கவேண்டும். இவர்களுக்கு இளம் வயதில் பணம் கொடுத்து அயல் நாட்டில் உள்ள தங்கள்

உறவினர்களிடம் அனுப்புவார்கள். இவர்களிடம் கொடுத்தனுப்பும் பணம் மூன்று ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருக்கும். இம் மூன்று ஆண்டுகள் அவர்களுக்கு ஊதியமும், மிகுபயனில் ஒரு பகுதியும் கொடுக்கப்படும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களை வரவழைத்துக் கொண்டு, வேறு ஓர் உறவினரை அனுப்புவது நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வழக்கம். பொதுவாகச் செட்டியார்கள் நியாயமான, நம்பிக்கைக்கு உகந்த வணிகர்கள் என்ற புகழடைந்தார்கள்; ஆனால், பேரம் பேசி வாணிகம் செய்வதில் திறமையுடையவர்கள்; மலேயாவில் பண நெருக்கடி இருந்ததாலும், மலேயா வளர்ச்சி அடைந்ததாலும் இவர்கள் மலேயாவில் தழைத்தோங்கினார்கள். சுல்தான்களுக்கும், உயர்குடிமக்களுக்கும், மலேய் உழவர்களுக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வட்டிக்குப் பணம் கடன் அளித்தார்கள். சிலசமயம் கடனீட்டுப் பத்திரமின்றியும் செட்டியார்கள் பணம்கொடுத்தார்கள். பொன், நிலம் முதலியவைகளைக் கடனீட்டுப் பத்திரமாக ஏற்றுக் கொண்டார்கள். கடனீட்டுப் பத்திரத்துடன் வழங்கும் பணத்தின் வட்டி கடனீட்டுப் பத்திரமில்லாமல் கொடுக்கும் பணத்தின் வட்டியைவிடக் குறைவு. கி.பி. 1930-க்குள் இவர்கள் மலேயாவில் உள்ள பட்டினங்களிலும், மாவட்டங்களிலும் நிலையாக வாழத் தொடங்கினார்கள். நிலங்களை, சிறப்பாக இரப்பர்த் தோட்டங்களைப் பெருமளவில் வாங்கினார்கள். கடனுக்காக அடைமானம் வைத்திருந்த பல நிலங்களும் மெல்லச் செட்டியார்களின் கைக்கு வந்தன. கி.பி. 1930ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார நிலை வீழ்ச்சி யுற்றபோது துன்பத்திற்குள்ளான மலேய் விவசாயிகளும், சிறு திற நிலமுடையவர்களும் (Small-holders) தங்கள் நிலங்களை விற்றார்கள். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நிலங்களை மிகக் குறைந்த விலையில் செட்டியார்கள் வாங்கினார்கள்.

பொதுவாக, செட்டியார்கள் தங்கள் மனைவிமார்களைத் தங்களுடன் மலேயாவிற்கு அழைத்து வருவதில்லை. இவர்கள் பிரம்மசாரிக் குடியிருப்பு வட்டாரத்தில் (Chummeries) தங்கள் வீட்டு இந்தியச் சமையல்காரர்களுடன் தங்கி வாழ்ந்தார்கள். ஒரு செட்டியார் இந்தியாவிற்குத் திரும்பிப் போனவுடன், அவருக்குப் பதிலாக மலேயாவிற்கு வருகின்றவர் அதே வீட்டில் வந்து தங்குவார். பொதுவாக, மற்ற இந்தியர்களுடன் செட்டியார்கள் கலந்து வாழ்வதில்லை.

இந்தியர்களுக்குள் செட்டியார்களே பெரும் அளவில் நிலங்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டிருந்தார்கள், கி.பி. 1920ஆம்

ஆண்டிலிருந்து செட்டியார்கள் இரப்பர்த் தோட்டங்களுக்கு மூலதனம் போடத் தொடங்கினார்கள். அடைமானம் வைத்துள்ள நிலங்கள் பல செட்டியார்கள் வசம் வந்தன.

கூட்டு மலேயா நாடுகளில் இந்தியர்களின் நில உடைமைகளின் புள்ளி விவரங்கள் (ஏக்கர்களில்)

ஆண்டு	பேரக் பகுதி		செலங்கர்		நெக்கிரிசெம்பிலன்		பாகாங்	
	சொந்தமாக வைத்திருந்த நிலங்கள்	அடைமானம் மூலமாக	சொந்தம்	அடைமானம்	சொந்தம்	அடைமானம்	சொந்தம்	அடைமானம்
1919	18,506	23,64[illegible]	தெரியாது	11,872	7,835	23,724	தெரியாது	10,033
1928	48,680	30,816	27,081	12,523	17,164	11,243	8,766	20,456
1938	69,632	28,872	40,100	10,271	28,000	10,483	15,111	16,344

கி.பி. 1938ஆம் ஆண்டில் இந்தியர்கள் சொந்தமாக வைத்துக் கொண்டிருந்த மொத்த இரப்பர்த் தோட்டங்கள் 87,995 ஏக்கர் ஆகும். இது மலேயாவிலிருந்த மொத்த இரப்பர்த் தோட்டங்களில் நான்கு விழுக்காடாகும். இந்த இரப்பர்த் தோட்டங்களை இந்தியர்களுள் செட்டியார்களே அதிகமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தியர்கள் வசமிருந்த ஒவ்வொரு பண்ணையும் குறைந்தது 100 ஏக்கர்களிலிருந்து 1,000 ஏக்கர்கள் வரை பரவியிருந்தது.

மலேயாவில் முதன்முதலாக இந்திய வங்கிகளைத் தொடங்கியவர்கள் செட்டியார்களே. கி.பி. 1935ஆம் ஆண்டில் செட்டியார்கள் இரண்டு வங்கிகளை வைத்திருந்தார்கள். ஆனால், கி.பி. 1937 ஆம் ஆண்டில்தான் இந்தியர்களால் ஏற்படுத்திய முக்கிய வங்கியான 'இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்' (Indian Overseas Bank) கோலாலம்பூரில் தோன்றியது.

கி.பி. 1931 ஆம் ஆண்டில் அரசாங்க வேலைகளிலும், தனியார் கம்பெனிகளிலும் வேலை செய்த இந்தியர்கள் 5·6 விழுக்காடும், கி.பி. 1947ஆம் ஆண்டில் 10·1 விழுக்காடும் இருந்தார்கள். மற்ற இந்தியர்கள் எல்லோரும் வாணியம் செய்தார்கள். பண்ணைகளி

லும் தோட்டங்களிலும் பணிபுரிந்த தொழிலாளிகள் எல்லோரும் தமிழர்களே. ஆனால், அரசாங்கப் பணியிலும், கம்பெனி வேலையிலும், வாணிபத்திலும் வட இந்தியர்களும், மலேயாளிகளும், தமிழர்களும், முஸ்லிம்களும் இருந்தார்கள். இரண்டாம் உலகப் போருக்குமுன் பெரும்பான்மையான இந்தியர்கள் பண்ணைகளிலும் தோட்டங்களிலும் பணிபுரிந்தார்கள். கி.பி. 1931ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி இவர்கள் 60 விழுக்காடாவர்; ஆனால், கி.பி. 1947 ஆம் ஆண்டில் இவர்கள் 53 விழுக்காடு இருந்தார்கள். இரண்டாம் உலகப் போருக்குமுன் மலேயாவிலிருந்த தொழிலாளிகளில் இந்தியத் தொழிலாளிகள் 75 விழுக்காடு இருந்தார்கள். ஆனால், கி.பி. 1947ஆம் ஆண்டில் இவர்கள் 50 விழுக்காடே இருந்தார்கள். கி.பி. 1940ஆம் ஆண்டில் மலேயாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் 14 விழுக்காடும், கி.பி. 1947ஆம் ஆண்டில் 10 விழுக்காடும் இருந்தார்கள்.

மலேயாவில் பெருஞ்சாலையமைப்பதற்கும், புகைவண்டித்துறை தொலைவுப் போக்குவரத்து முறை (Telecommunication System) முதலியவை பற்றிய வேலைகளில் இந்தியர்களே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டார்கள். பிற்காலத்தில் இவ் வேலைகளில் மலேய் மக்கள் சேரவேண்டும் என்று ஊக்கமளித்ததால் இவ் வேலைகளைச் செய்து வந்த இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்தது.

இந்தியர்களும், சீனர்களும் மலேயாவுக்கு வருவதைக் கி.பி. 1940ஆம் ஆண்டிலிருந்து மலேய் நாட்டுத் தலைவர்கள் எதிர்த்தார்கள். இதனால் மலேய் மக்களின் வேலை வாய்ப்புக் குறைந்தது என இவர்கள் கருதினார்கள். இந்திய அரசாங்கச் சட்டத்தின் காரணத்தால் கி.பி. 1938ஆம் ஆண்டுக்குப் பிறகு மலேயாவுக்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆகையால், பல மலேய் மக்கள் மலேய்ப் பண்ணைகளிலும், தோட்டங்களிலும் வேலைக்குச் செல்ல முடிந்தது. கி.பி 1949ஆம் ஆண்டில் மலேய்த் தலைவர்கள் எடுத்த முயற்சியால் கி.பி. 1953ஆம் ஆண்டில் இரண்டு சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. இச் சட்டங்கள் மலேயாவிற்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தின. கூட்டரசு அமைப்பு முறையைச் சார்ந்த மலேய் நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் (Federal Citizens), மலேய் சுல்தான்கள் ஆட்சியின்கீழ் வாழும் குடிகள், மலேயாவிலே பிறந்த அல்லது குடியுரிமையுடைய (naturalize) அல்லது மலேயாவிலே வாழும் குடிமக்கள், துணைக் காப்பரசின் ஆளுநர் அளித்த உறுதிச் சீட்டை வைத்திருக்கும் அயல் நாட்டினர், இவர்களுடைய மனைவியார்கள், 18 வயதுக்குக் கீழிருக்கும் குழந்தைகள் ஆகிய இவர்கள்தாம் மலேயாவுக்குள்

வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. தனியார் தொழிற் கூட்டு நிலையத்தால் வேலைக்குச் சேருபவர்கள் மாத ஊதியமாகக் குறைந்தது 500 மலேயன் டாலர்கள் பெறவேண்டும். அவ்வாறு உறுதிப் பத்திரம் இருந்தால்தான் அவர்கள் மலேயாவுக்கு வரு வதற்கு அனுமதி அளிக்கப்படுவர். கி.பி. 1959ஆம் ஆண்டில் இம் மாதச் சம்பள நிபந்தனை 1,200 டாலர்களாக இருக்கவேண்டும் என உயர்த்தப்பட்டது. ஆகையால், கீழ்ப்படிகளிலுள்ள வேலை களுக்காக மலேயாவுக்குச் செல்லும் இந்தியர்களுக்குத் தடை விதிக் கப்பட்டது. இதனால் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் மலேயாவில் கடைகள் வைத்திருக்கிற இந்தியர்கள். இதுவரை யிலும் இவர்கள் இந்தியப் பணியாளர்களைக் குறைந்த ஊதியத்தில் பணிக்கு அமர்த்திக் கொண்டிருந்தார்கள்.

இன்று மலேசியா—சிங்கப்பூரில் வாழும் இந்தியர்களில் 95 விழுக்காட்டினர் மலேயாத் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியில் வாழ்கிறார்கள். பெருமளவில் இந்தியர்கள் குடியேறியிருக்கும் (25 விழுக்காடு) இடம் செலங்கர். இந்தியர்களின் எண்ணிக்கை பேரக்கில் 21 விழுக்காடும், சிங்கப்பூரில் 15 விழுக்காடும், பினாங், ஜோஹூர், கேதா ஆகிய இடங்களில் 8 விழுக்காடும், நெகரி செம்பிலனில் 6 விழுக்காடும், மலாக்காவில் 3 விழுக்காடும், பாகாங்கில் 3 விழுக்காடும் ஆகும். கி.பி. 1947ஆம் ஆண்டிலே 39 விழுக்காடு இந்தியர்கள் மாநகரிலும் வாழ்ந்தார்கள்; கி.பி. 1957ஆம் ஆண்டிலே 47 விழுக்காடாய் மாறிற்று. பினாங், சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய மாநகரங்களிலே பெருமளவில் இந்தியர்கள் வாழ்கிறார்கள். தவிர ஈப்போ (ipoh), கிளாங் (Klang) ஆகிய மாகாணங்களிலும் இந்தியர்கள் மிகுதியாய் வாழ்கிறார்கள். பெரும்பான்மையான வடஇந்திய வணிகர்கள் சிங்கப்பூரில் வாழ்கிறார்கள்; அதேபோல் பெரும்பாலான தென்னிந்திய முஸ்லிம் வணிகர்கள் பினாங்கிலும், செட்டியார்கள் கோலாலம்பூரிலும் வாழ்கிறார்கள்.

இன்று இந்தியர்களுக்குள் அதிக அளவில் இருக்கும் இந்தியர் தமிழர்களே. கி.பி. 1957ஆம் ஆண்டில் தமிழர்களே 80 விழுக்காடு இருந்தார்கள். தமிழர்களுக்கு அடுத்தபடியாகப் பெருமளவில் இருக்கும் இந்தியர்கள் மலையாளிகள்; இன்று அவர்களின் மொத்த விழுக்காடு 7 ஆகும். தெலுங்கர்களின் விழுக்காடு 4; மலேயாவிலே வாழும் இந்தியர்களின் மொத்த எண்ணிக்கையில் மலையாளி, தெலுங்கர், தமிழர் ஆகியவர்கள் 90 விழுக்காடு; வடஇந்தியர்கள் 9 விழுக்காடு; வடஇந்தியர்களில் பெரும்பான்மையோர் சீக்கியர் களும் பஞ்சாபி இந்துக்களுமே ஆவார்கள். 1957ஆம் ஆண்டின்

புள்ளிவிவரப்படி மலேயாவில் வாழும் இந்தியர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மலேயாவில் பிறந்தவர்கள். மலேயாவின் மொத்த மக்கள் தொகையில் 11 விழுக்காட்டினர் இந்தியர்கள்.

கி.பி. 1931ஆம் ஆண்டிலே சிங்கப்பூரில் வாழ்ந்த இந்தியர்கள் 9·1 விழுக்காடு; கி.பி. 1947ஆம் ஆண்டிலே இவர்களின் எண்ணிக்கை 7·3 விழுக்காடாய்க் குறைந்தது; கி.பி. 1957ஆம் ஆண்டிலே இது 8 விழுக்காடு ஆயிற்று. சிங்கப்பூரில் வாழும் இந்தியர்களில் 6 விழுக்காடு தமிழர்கள்; 16 விழுக்காடு மலையாளிகள். பொதுவாக இவர்கள் கப்பல் துறைமுகத்திலும், போக்குவரத்துத் துறைகளிலும் பணிபுரிகிறார்கள். சிங்கப்பூரில் வாழும் இந்தியர்களில் 25 விழுக்காடு மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள்.

மலேயாவில் உள்ள பண்ணைகளில் பணிபுரிந்த மொத்தத் தொழிலாளிகளில் கி.பி. 1963ஆம் ஆண்டில் இந்தியர்கள் 49 விழுக்காடும், சீனர்கள் 27·6 விழுக்காடும், மலேய் மக்கள் 23 விழுக்காடும் இருந்தார்கள்.

கி.பி. 1959ஆம் ஆண்டில் மலேயா நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7·4 விழுக்காடு இந்தியர்கள் மலேய நாட்டின் குடிகள். மலேயாவில் உள்ள மொத்த வாக்காளர்களில் இந்திய வாக்காளர்கள் 8 விழுக்காடு. கி.பி. 1964ஆம் ஆண்டுத் தேர்தலிலே மூன்றுபேர் மலேயன் இந்தியர் காங்கிரஸ் (Malayan-Indian Congress) அமைப்பின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கி.பி. 1964ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அமைச்சர் அவையில் இரண்டு அமைச்சர்கள் மலேயர் இந்தியர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இக் கட்சி கி.பி. 1946ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியர்களால் அமைக்கப்பட்டது. கி.பி. 1955ஆம் ஆண்டில் தேர்தலுக்குப்பின் அமைக்கப்பட்ட அமைச்சர் அவையில் இக்கட்சியின் தலைவர் வி.டி. சம்பந்தத்திற்கு அமைச்சர் பதவி கிடைத்தது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த இந்தியர்கள் இக்கட்சிக்கு மிகுந்த ஆதரவு அளிப்பதில்லை. இந்திய அறிவாளிகளின் குழாம் இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவு கொடுக்கிறது. சோஷியலிஸ முன்னணி (Socialist Front), தொழிலாளர் கட்சி (Labour Party), மக்கள் முன்னேற்றக்கழகம் (The Peoples Progressive party) போன்ற மற்றக் கட்சிகளில்கூட இன்று பல இந்திய அரசியல் தலைவர்கள் பணிபுரிவதைக் காணலாம். ஆகையால், இந்தியர்கள் தொடங்கிய கட்சிகளிலே இந்தியர்கள் சேர்ந்து

பணிபுரிகிறார்கள் எனக் கூறமுடியாது. மலேயாவைத் தங்கள் தாயகமாகக் கருதி எல்லா அரசியல் கட்சிகளிலும் இந்தியர்கள் உற்சாகத்தோடு பங்குகொள்கிறார்கள்.

மலேய இந்தியச் சமூக அமைப்பு

மலேயாவில் குடியேறிய இந்தியப் பணியாளர்களில் 80 விழுக்காடு இந்துக்கள்; இவர்கள் தங்கள் பண்பாட்டை மறக்கவில்லை; தங்களுடைய சாதிப் பழக்கவழக்கங்களையும் மாற்றவில்லை; தீண்டாமையையும் ஒழிக்கவில்லை. மலேயாவில் உள்ள இந்தியர்களில் அரிசனச் சாதியைச் சேர்ந்தவர்கள் மூன்றில் ஒருபங்கினர். மற்றச் சாதியினர் அவர்களோடு நெருங்கிப்பழக முயலவில்லை. அரிசன மக்கள் வசித்துவந்த வீடுகள் மற்றச் சாதியினர்களின் வீடுகளுக்குத் தொலைவில் இருந்தன. அரிசன மக்களின் குடிதண்ணீர் வசதிகள்கூடத் தனியாகத்தான் இருந்தன. பண்ணைகளிலும் சிறுபட்டணங்களிலும் அரிசன மக்களுக்கென்று தனிக் கோவில்கள் இருந்தன. இக் கோவில்களுக்கு மற்றச் சாதியினர் செல்லமாட்டார்கள். மற்றச் சாதியினரின் கோவில்களுக்குள் அரிசன மக்கள் நுழையக்கூடாது. சிங்கப்பூரில்கூட இறந்தவர்களைத் தூக்கிச்செல்வது, ஈமச்சடங்கின்போது பறை அடிப்பது போன்ற பணிகளை அரிசன மக்கள்தாம் செய்யவேண்டும். இவ்வாறு சாதிப்பிரிவு அமைப்பு இருந்ததால் சில சமயங்களில் சாதிச்சண்டைகள் ஏற்பட்டன.

ஆகையால், ஒவ்வொரு சாதியும் தனக்கென்று ஒரு மன்றத்தை அமைத்தது. முதன் முதலாக இவ்வாறு மன்றத்தைத் தொடங்கியவர்கள் ஆதிதிராவிடர்கள். சிங்கப்பூர், ஈப்போ, பினாங், மலாக்கா, கிளாங் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. வேளாளர்களும், அகமுடையார்களும், யாதவர்களும், கள்ளர்களும் தங்கள் சாதி மன்றத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். சாதிக்குள்தான் கொள்வினையும் கொடுப்பு வினையும் நடந்தன. அதிக விருப்பத்துடன் அக்கா மகளையும், மாமன் மகளையும் திருமணம் செய்துகொண்டார்கள். ஆனால், எல்லாச் சாதியினரும் இத்தகைய முறையில் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு பண்ணையிலும் இந்துக் கடவுள் கோவில் ஒன்று இருந்தது. கிராமக் கடவுள்களையே பண்ணையில் வாழ்ந்த இந்துக்கள் வணங்கிப் பூசைசெய்தார்கள். ஆகையால், காளி கோவில்களும், மாரியம்மன் கோவில்களும், ஐயனார் கோவில்களும் பண்ணைகளில் தோன்றலாயின. சிவன், கணபதி, சுப்பிரமணியர்,

விஷ்ணு ஆகியவர்களின் கோவில்களும் ஏற்படுத்தப்பட்டன. சில கோவில்களில்தாம் அந்தணப் பூசாரிகள் இருந்தார்கள். அந்தணப் பூசாரிகள் இல்லாத கோவில்களில் உயர்ந்த, பிராமணரல்லாத சாதியைச் சேர்ந்தவர்களைப் பூசாரிகளாக நியமித்தார்கள். பண்ணையில் உள்ள எழுத்தர்களும், கண்காணிகளும் கோவில் நிருவாகத்தைக் கவனித்தார்கள். இக் கோவில்களை நடத்துவதற்காகப் பணியாளர்கள் தங்களால் இயன்றவளவு பண உதவி அளித்தார்கள். ஆகையால், கோவில்களில் திருவிழாக்களும் நடந்தன. பண்ணையில் உள்ள கள்ளுக்கடை மூலம் வரும் மிகுபயனில் ஒரு பகுதி கோவில் செலவுக்காக ஒதுக்கப்பட்டது. சிறப்பான எல்லா இந்துப் பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன.

இந்தியர்கள் குடியேறிய பட்டணங்களிலும் மாவட்டங்களிலும் கோவில்கள் கட்டப்பட்டன. பட்டணங்களில் படித்த இந்தியர்கள் கோவில்களை அமைத்தார்கள். பல சிவன் கோவில்களைச் செட்டியார்கள் கட்டினர்கள். பண்ணைகளில் உள்ள கோவில்களில் வேத ஆகம முறையில் கடவுள் வழிபாடு நடக்கவில்லை. ஆனால் சிவன், விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியர் முதலியவர்களின் கோவில்களில் வேத ஆகம முறையில் கடவுள் பூசிக்கப்பட்டார். ஆகையால், இக்கோவில்களில் பூசாரிகளாகப் பணி புரிவதற்காக அந்தணர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். மலேயாவில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களும் இந்துக் கோவில்களைக் கட்டினர்கள்.

கோவில்களைப் பஞ்சாயத்துச்சபை நிருவகித்தது. ஆசியாவிலிருந்து வந்த இந்துக்களும் கண்காணிகளும், பண்ணையில் உள்ள பஞ்சாயத்து உறுப்பினர்களானர்கள். ஆனால், நிருவாகச் சபையில் தொழிலாளர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. பட்டணத்தில் உள்ள கோவில்களைச் செட்டியார்கள் அல்லது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கட்டியிருந்ததால் அவர்கள் மட்டுமே அக்கோவில்களின் நிருவாகசபை உறுப்பினர்களாக இருந்தார்கள். எல்லோரும் நிதி உதவியளித்து அமைக்கப்பட்ட கோவிலின் நிருவாகக் குழுவினர் அக் கோவிலிற்கு வந்து வழிபாடு செய்பவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சிங்கப்பூரில் உள்ள மாரியம்மன் கோவில், சிவன் கோவில், பெருமாள் கோவில், காளியம்மன் கோவில் முதலியவற்றின் நிருவாகத்தை இந்து நன்கொடை அமைப்பினிடமும், முகம்மதியர் நன்கொடை அமைப்பினிடமும் அரசாங்கம் கொடுத்தது. இக் கோவில்களில் நடக்கும் அன்றாட நடவடிக்கைகளைப் பஞ்சாயத்துச் சபை கவனித்தது.

மலேயாவில் மிகப் புகழ்வாய்ந்த பணக்கார இந்துக்கோவில் கோலாலம்பூரில் உள்ள மாரியம்மன் கோவில் ஆகும். செல்வமிக்க இந்துக் குடும்பம் ஒன்று இக் கோவிலைக் கட்டியது. பல ஆண்டுகள் இக் கோவிலின் நிருவாகப் பொறுப்பு அக் குடும்பத்திடமேயிருந்தது. கி.பி. 1950ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியர்கள் அதிகமில்லாத இடங்களில்கூட இந்துக் கோவில்கள் தோன்றத் தொடங்கின. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு பல கோவில்களில் வழிபாட்டுமுறைகளைத் தமிழிலே செய்தார்கள். மலேயாவில் வாழும் பல இந்துக்கள் வழிபடும் முறை சைவ–ஆகம நெறியினைப் பின்பற்றியதாகும்.

மலேயாவிலும் சிங்கப்பூரிலும் தென்னிந்தியர்கள் பெருவாரியாக இருப்பதால் திராவிடப் பண்பாடுகளை இங்கு நாம் அதிகவளவில் காணலாம். பெரும்பான்மையான இந்துக்கள் சிவனை வழிபடுகிறார்கள். பெண் கடவுள்களைப் பல உருவங்களில் வழிபட இங்குள்ள மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். பல வட இந்தியர்களும், பல தெலுங்கர்களும் விஷ்ணுவை வணங்குகிறார்கள். ஆனாலும், வட இந்தியர்கள் தனியாகவும், தெலுங்கர்கள் தனியாகவும் விஷ்ணு கோவில்கள் கட்டியிருக்கிறார்கள்; அவர்கள் கட்டிய கோவில்களில் அவர்களுடைய மொழியிலே கடவுளுக்குப் பூசை முதலியன நடைபெறுகின்றன.

சிவனைத் தவிர, மிகவும் புகழ் வாய்ந்த கடவுள்கள் முருகனும் மாரியம்மனும் ஆவார்கள். செட்டியார்களின் குலதெய்வம் முருகன் அல்லது சுப்பிரமணியர்; செட்டியார்கள் கட்டின எல்லாக் கோவில்களும் சுப்பிரமணியர் கோவில்களே ஆகும். கி.பி. 1935ஆம் ஆண்டில் பினங்கில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அரிசன மக்களும் வரலாம் என்ற சட்டம் வந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு எல்லாக் கோவில்களிலும் அரிசன மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

இன்று சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் 200 இந்துக் கோவில்கள் உள்ளன. இக் கோவில்களில் நாள்தோறும் பூசை முதலியன நடக்கின்றன. இந்துக்கள் கொண்டாடும் எல்லாப் பண்டிகைகளும் இக் கோவில்களில் கொண்டாடப்படுகின்றன. சிங்கப்பூர், பினங், கோலாலம்பூர் ஆகிய இடங்களில் உள்ள கோவில்களில் தைப்பூசப் பண்டிகை (ஜனவரி—பிப்ரவரி) மூன்று நாள்கள் கொண்டாடப்படுகிறது. தைப்பூசப் பண்டிகை நாள்களுக்குச் சிங்கப்பூர் அரசாங்கம் விடுமுறையளிக்கிறது. கோலாலம்பூரில்

இப் பண்டிகையின்போது தேர்வலம் வருகிறது. தீபாவளிப் பண்டிகையின் போதும் சிங்கப்பூர், மலேயா ஆகிய நாடுகளில் அரசாங்கம் விடுமுறையளிக்கிறது. பண்ணையில் வாழும் தமிழர்கள் தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிருர்கள்.

சில கோவில்களில் சில பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. உதாரணமாக, சித்திரைப் பருவம் [தண்டாயுதபாணிக் கோவில், தெலோக் அன்சன் (Telok Anson)]; விநாயக சதுர்த்தி [செல்வ விநாயகர் கோவில், செரம்பன் (Seremban)]; நவராத்திரி (சிங்கப்பூர், கோலாலம்பூர்); கார்த்திகைத்தீபம் [தண்டாயுதபாணிக் கோவில், மூவார் (Muar)]; பங்குனி உத்திரம் (தண்டாயுதபாணிக் கோவில், கோலாலம்பூர், மற்றும் பல பட்டணங்களிலும்); மாரியம்மன் திருவிழா (பண்ணைகளில் உள்ள எல்லாக் கோவில்களிலும்); மாசிமகம் (சன்னசீமலை ஆண்டவர் கோவில், மலாக்கா). இந்துப் புத்தாண்டு, தைப்பூசம், சித்திரைப் பருவம் பண்டிகைகளின்போது பல இந்துக்கள் காவடி தூக்கிக்கொண்டு கடவுள் பின்ஞல் ஊர்வலம் வருகிருர்கள். மற்றும் சில பண்டிகைகளின்போதும் இந்துக்கள் காவடி தூக்குகிருர்கள். அவ்வாறு காவடி தூக்கும்போது இரும்பு முட்களையும், ஈட்டிகளையும், கொக்கிகளையும், தங்கள் சதைக்குள் குத்திக்கொள்கிருர்கள். பண்டிகையின்போது எருமை, ஆடு, விடைச்சேவல் போன்றவைகளைப் பண்ணைகளில் உள்ள கோவில்களில் மக்கள் வெட்டிப் பலியிடுகிருர்கள். ஆனுல், பிராமணர்கள் வழிபடும் கோவில்களில் இம்மாதிரியாகப் பிராணிகளைக் கடவுள்முன் பலியிடுவதில்லை. தற்சமயம் கோவில்கள் முன் யாரும் பிராணிகளை வெட்டிப் பலியிடுவதில்லை. எப்பொழுதாவது தெருவிலே இருக்கும் கோவில் முன் சிலர் பிராணிகளை வெட்டிப் பலியிடுகிருர்கள். சித்திரைப் பருவப் பண்டிகையின்போதும், மாரியம்மன் விழாக்களின் போதும் சிலர் நெருப்பின் மேல் நடக்கிருர்கள். பண்ணையில் உள்ள கோவில்களிலும், பட்டணங்களில் உள்ள சில கோவில்களிலும் நெருப்பின் மேல் நடக்கும் சடங்கு எப்பொழுதும் உண்டு.

சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும், மற்றும் சில இடங்களிலும், குருத்துவார என அழைக்கப்படும் சீக்கியர் கோவில்கள் (Gurudwara) இருக்கின்றன. இக் கோவில்களில் பூசை செய்வதற்காகப் பஞ்சாபிலிருந்து சீக்கியக் குருக்கள் வரவழைக்கப்பட்டார்கள். சீக்கியர்களின் முக்கியப் பண்டிகைகளான குருநானக் பிறந்த நாள், குருநானக் இறந்த நாள், குரு கோவிந்சிங் பிறந்த நாள், வைசாகி (Vaisakhi), சீக்கியர்களின் புத்தாண்டு போன்ற பண்டிகைகளை

இக்கோவில்களில் கொண்டாடுகிறார்கள். சீக்கியர் கோவில்களில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இப் பள்ளிகளில் பஞ்சாபி மொழி குருமொகி எழுத்துப் படிவங்கள் மூலம் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து சென்ற முஸ்லிம்கள் கட்டிய மசூதிகள் எல்லாப் பட்டணங்களிலும் இருக்கின்றன. தமிழர்களின் மாதாக் கோவில்களும், மலேயாவிலும் சிங்கப்பூரிலும் கட்டப்பட்டிருக்கின்றன.

தென் கிழக்காசியத் தலைநிலப் பரப்புப் பகுதிகள்
19 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு வரை
சீனா
டொக்கிங்
ஹைனான்
டொக்கிங் வளைகுடா
அமரபுரா
அவா
பாகன்
பர்மா
லுவாங் பிரபாங் (1904)
லாவோஸ்
வியன்ஷியன் 1893
சியங்மை
சியாம்
சுகோதை
அயுதியா
பாங்காக்
(1909)
பட்டம்பாங்
கம்போடியா
நாம்பென்
கொச்சின் சீனா
சைகான்
ஹியூ
டூரேன்
தாவோய்
சியாம் வளைகுடா
பெர்லிஸ்
கேதா
பினாங்கு தீவு
பேராக்
மலேயா
பாகாங்
மலாக்கா
ஜோஹூர்
சிங்கப்பூர்
அச்சே
மேடான்
A பிரான்சிடம் சியாம் விட்டுக்கொடுத்த பகுதிகள் 1893-1909
B பிரிட்டிஷ் மலேயாவிடம் சரணடைந்த அடிமை நாடுகள் 1874-1909
C பிரிட்டிஷ் இந்தியாவிடம் பர்மா இழந்த பகுதிகள் 1826
D பிரிட்டிஷ் இந்தியாவால் கைப்பற்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பகுதிகள் 1852-1853.


நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (இந்தோனேசியாவும் மலேயாவும்)
நிழற்கோட்டு வரைப் பகுதிகள் 1816 ஆம் ஆண்டு மீண்டும் கைப்பற்றப்பட்டன.
காலக் குறிப்பு ஐரோப்பிய ஆட்சியின் தொடக்கத்தைக் குறிப்பிடுகின்றன
வ
1898 ஆம் ஆண்டு வரை ஸ்பானியர்கள் ஆட்சி
மிண்டானோ
சியாம் ஆதிக்கத்தின் கீழிருந்த பகுதிகள்
வடக்கு போர்னியோ
1891
ஆங்கிலேய போர்னியோ
புருனே
1850
1850
வெல்லெஸ்லி மாகாணம்
பினாங்கு தீவு
1841
சரவாக்
1900
ஆங்கிலேய மலேயா
(1874 ஆம் ஆண்டுக்குப் பிறகு)
அச்சே
(1878-1899)
மலாக்கா
சிங்கப்பூர்
1824
1832
போர்னியோ (காலிமந்தான்)
செலிபிஸ் தீவு
1907
தெர்னதே
அல்மஹேரா
செராம்
அம்பாய்னா
1837
1870
சுமத்திரா
1831
பாதாங்கு
1834
பங்கா தீவுகள்
பஞ்ஜார் மாசின்
மக்காஸர்
1824
1825
பென்குலன்
பட்டாவியா (ஜகார்த்தா)
சுரபயா
ஜாவா
1829
பாலித் தீவுகள்
1856
1894
சும்பா
பிளோரிஸ்
போர்ச்சுகீசிய திமோர் தீவு
0
200
500
மைல்கள்